139

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக் கல்வி

www.mkudde.org



எம்.ஏ.
வரலாறு

இரண்டாமாண்டு

தாள் – 5

தமிழக வரலாறு (1956 வரை)

இரண்டாம் பாகம்

1135 139

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

முதுகலை – வரலாறு
இரண்டாமாண்டு

வ ர லா று

பகுதி – I (a)

தமிழக வரலாறு
(1956 வரை)

இரண்டாம் பாகம்
பாடங்கள் : 16 - 30

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021.

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி இயக்ககம்

printed at SUN PRINTER, MDU.-16. ✆ 4353473 Yr. 2008-2009 Copies 2000

பாடம் – 16 நாயக்கர் காலப் பண்பாடு

மொழியும் இலக்கியமும் – சமயமும் தத்துவமும் – கிறித்தவச் சமயப் போதகர் சாதனைகள் – கலையும் கட்டடக் கலையும்

எட்வர்ட் பி. டெய்லர் அவர்களின் கருத்துப்படி "பண்பாடு, அல்லது நாகரிகம், மனித விஞ்ஞான அடிப்படையில் (ethnographic) நோக்குங்கால், அறிவுடைமை, நம்பிக்கை, கலை, நேர்மை, சட்டம், வழக்காறு, மற்ற திறமைமிக்க நடவடிக்கைகள் ஆகியவற்றை, சமுதாயத்தின் ஒரு அங்கமான மனிதன் பெற்றிருப்பதேயாகும்". இந்திய தத்துவக் கருத்துப்படி, 'பண்பாடு' என்பது தூய்மை, நல்ல பழக்க வழக்கங்கள், கல்வி முதலியவற்றைப் பெற்றிருக்கும் தனி மனிதனின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகும்; 'ஒரு பண்பாடு மக்களுக்கென நிருணயிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட, வரையறுக்கப் பட்ட வாழ்க்கை முறையினை எடுத்துக்காட்டுவதேயாகும். இதில் மக்களது மொத்தமான வாழ்க்கை முறையினையும், அவர்தம் சிந்தனை, உணர்வு, நடவடிக்கை ஆகியவையும் அடங்கும். மேற்கத்திய, கிழக்கத்திய கோட்பாடுகள்யாவுமே ஒரேமாதிரியான, ஒரே நோக்கம் கொண்ட விளக்கத்தினையே 'பண்பாடு' என்ற சொல்லுக்குத் தருகின்றன. இப்பண்பாடு, காட்டுமிராண்டித்தனத்திலிருந்து நாகரிக காலம் வரையான மனித வாழ்க்கையின் முன்னேற்றத்தை அளக்கின்ற ஒரு அளவுகோல் போன்றதாகும்.

ஆரியக் கருத்துக்கள் புகுதற்கு முன்பும், வேதகாலப் பண்பாடு பரப்பப்படுவதற்கு முன்பும், தமிழ்ப்பண்பாடு கலப்பற்ற திராவிடப் பண்பாடாகவே இருந்தது. தமிழகத்தில் ஆரியப்பண்பாடு வித்திடப்பட்டு தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்றது. முகமதியர் படையெடுப்பு ஏற்பட்டதும் முகமதியர்கள் மதுரையைக் கைக்கொண்டதும் தமிழகத்தில் இக்கட்டான நிலையை உருவாக்கியது. முகமதியர்கள் தமிழகத்தில் புகும்போது இஸ்லாமியப் பண்பாடுகளையும் தங்களுடன் கொண்டுவந்தனர். காலவெள்ளத்தால், ஏற்கனவே கூட்டுப் பண்பாடாயிருந்த (திராவிட, ஆரியப்பண்பாடு கலந்த) தமிழகப் பண்பாட்டில், இஸ்லாமியப் பண்பாடும் கலந்தது. இஸ்லாமியப் பண்பாடு கலப்பது உகந்ததல்ல என்றாலும் அது தவிர்க்க முடியாததாயிற்று.

விஜயநகரப் பேரரசின் தோற்றம், இஸ்லாமியப் பண்பாட்டுக்குச் சாவுமணி அடித்ததோடல்லாது பழைய வேதகாலப் பண்பாடு புத்துயர் பெறவும், இந்து வழிபாட்டுமுறை உயிர்ப்பிக்கப்படவும், இந்துப்பேரரசு, இந்து தர்மம் ஆகியவை காக்கப்படவும் வழிவகுக்கும் என ஓசைமணியடித்தது, தமிழகத்தில் இந்த இந்து புத்துயிர்ப்பு, மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கர் அரசுகள் தோன்றியதிலிருந்து வளரத் தொடங்கிற்று. புதிய வாழ்க்கைமுறையினைச் சிறிதுசிறிதாக பழைய இந்து பண்பாட்டினுள் வளரவிட்ட தருணத்தில் தமிழ்ப்பண்பாட்டிலிருந்து இஸ்லாமியப் பண்பாட்டைத் தகர்த்தெறிய, மக்கள் முயன்றனர். இவ்வாறு செய்ததில், ஒரு குறிப்பிட்ட நிலைவரை, அவர்கள் வெற்றியும் பெற்றனர். இருப்பினும், தொடக்க காலத்தில், நாயக்கர் பண்பாடு தூய்மையான தமிழ்ப் பண்பாடாக இருக்கவில்லை. அப்பண்பாடு தனக்கே உரிய சிறப்பு நடைமுறையினைக் கொண்டிருந்ததெனினும் தமிழ் மக்கள் அதனை

முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே நாயக்கர் காலத்துத் தமிழ் மக்களின் பண்பாடு, தெலுங்குப் பண்பாட்டு ஆதிக்கத்தை அதிகமாகக் கொண்டிருந்த ஒரு கூட்டுப் பண்பாடாகவே அமைந்திருந்தது எனலாம். ஆனால் அதன் அடிப்படையும், சுற்றுச் சூழலும் ஏற்கனவே தமிழகத்தில் முன்னமே வைக்கப்பட்டிருந்தன.

நாயக்கர்காலத்தில், பெருமளவு மதுரையும், நடுத்தரமான அளவு தஞ்சையும், குறைந்த அளவு செஞ்சியும் தமிழ்ப் பண்பாடு பரப்பப்படுவதற்குக் கருவிகளாயமைந்தன. மதுரை காஞ்சிபுரம் மற்றும் பல முக்கிய நகரங்களில் தமிழகத்தின் கூட்டுப் பண்பாட்டு முறைபற்றி வெளிநாட்டு அறிஞர்கள் சிறப்பாக எழுதியுள்ளனர். அவர்கள் தங்களால் எழுதப்பட்ட, தமிழ் மக்களின் நம்பிக்கைகள், நடவடிக்கைகள், வழிமுறைகள், நன்னடத்தை, வழக்காறுகள் பழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களை விட்டுச் சென்றுள்ளனர் வெளிநாட்டுச் சமய இலக்கியங்கள், அவை சமய நோக்கோடு எழுதப்பட்டிருப்பினும், மத்திய காலத்தின் பின் பாதியில் நடைமுறையிலிருந்த தமிழகப் பண்பாட்டினைப்பற்றிய சிறப்பு அம்சங்களை விளக்கிக்கூறுவனவாக அமைந்துள்ளன. நாமும் ஏராளமான, தமிழ், தெலுங்கு, சமஸ்கிருத இலக்கியங்களை வைத்துக்கொண்டுள்ளோம்; இவ்விலக்கியங்கள், மக்களின் வாழ்க்கை முறையினையும் அவர்தம் அரசர்களின் சாதனைகள், வெற்றிகள், தோல்விகள் ஆகியவற்றையும் நமக்கு எடுத்தியம்புகின்றன. இந்த உள்நாட்டு ஆவணங்களையும் வெளிநாட்டார் எழுதிய ஆவணங்களையும் ஒப்பிட்டு நோக்கி அறிஞர் பெருமக்கள், தமிழ் மக்களது பல்வேறுபட்ட வாழ்க்கை மற்றும் பண்பாட்டு முறைகளைக் கண்டறிகின்றனர்.

ஒரு நாட்டின் பண்பாடு என்பது அது பல கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் சிறப்பிலிருந்தே தெளிவாகிறது. அதாவது — மக்களின் வாழ்க்கை, மொழி, இலக்கியம், சமயம், தத்துவம், கலை, கட்டடக்கலை ஆகியவற்றை ஒவ்வொரு நாட்டின் பண்பாடும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது மறுக்க முடியாததாகும். வளர்ச்சி என்பது, புதிய, கட்டுக்கோப்பான கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது வெற்றியாகவும், அழிவுச் சக்திகள் நடைமுறைக் கருத்துக்களில் ஆதிக்கம் செலுத்தும் போது தோல்வியாகவும் அமைகின்றது. பெருமளவில், நாயக்கர் அரசுகள் பல்வேறுபட்ட புதிய, கட்டுக் கோப்பான பண்பாட்டுக் கூறுகளை, சமயம், மொழி, இலக்கியம், கலை, கட்டடக்கலை ஆகியவற்றில் புகுத்தின. இந்த நாயக்கர்கள் காலத்தில் — தான் தமிழ்மக்களுடன் தெலுங்கு மக்கள் கலந்தனர். புதிய குடியேற்றங்கள் தமிழகத்தில் ஏற்பட்டன. அவ்வாறு ஏற்பட்ட தெலுங்கு குடியேற்றங்கள் தமிழகத்தின் வட பகுதியிலேயே அதிகமிருந்தன. புதிய பழக்க வழங்கங்களும், வழக்காறுகளும், மூட நம்பிக்கைகளும் தமிழகத்தில் அரங்கேறின. தமிழகக் கோயில்களில் தெலுங்கர் வழிபாட்டு முறை கொண்டுவரப்பட்டது. கோயில் நிர்வாகத்தில் ஏராளமான புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். புதிய கோபுரங்கள் எழும்பியது, மடங்கள் கட்டியது, வடிவமைப்பு, கோயில்கள் இவையனைத்தும் பழைய சோழர், பாண்டியர், பல்லவர் காலத்தை நினைவூட்டுவனவாக இருந்தாலும், சில வடிவமைப்புகள், நாயக்கர்கள் பழைய முறையினை விட்டு சில குறிப்பிட்ட முறையினைப் பின்பற்று கின்றனர் என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.

மொழி, இலக்கியம்

விஜயநகரப் பேரரசின் தொடர்ச்சியான நாயக்கர் காலம் பூத்துக்குலுங்கும் தெலுங்கு மொழி இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. இதனால், நாயக்கர்கள் சமஸ்கிருத கன்னட, தமிழ்மொழி இலக்கியங்களை வெறுத்தனர் எனப் பொருளல்ல; T.V. மகாலிங்கம், "பெரும்பான்மையான நூல்கள் சமய நோக்குடையவை, சைவ, வைணவ அல்லது சமண சமயத் தத்துவங்களை விளக்குபவை; குறிப்பிட்ட வழிபாட்டு இடங்களைப் புகழும் பாடல்களைக் கொண்டவை" என நாயக்கர் கால இலக்கியங்கள் பற்றிக் கூறுகின்றார். திருமலைநாதன் என்னும் கவிஞர் தன் வாழ்நாளில் பெரும்பகுதியைச் சிதம்பரத்திலேயே கழித்தார். இவர் எழுதிய நூல்கள், **சிதம்பர புராணம், மதுரை சொக்கநாதர் உலா** ஆகியவை. **சிதம்பரப் பாட்டியல்** என்ற நூலை இயற்றிய பரஞ்சோதியார், **பாகவத புராணம்** என்ற நூலையாத்த செவ்வைச்சொடுவார், **தத்துவப் பிரகாசம்** என்ற நூலை எழுதிய தத்துவப் பிரகாச சுவாமிகள், **கைவல்ய நவநீதம்** என்ற நூலை எழுதிய தாண்டவ ராயசுவாமிகள் போன்றோர் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க அறிஞர்களாவர். ஹரிதாசரின் **இரு சமயவிளக்கம்**, ஞானப்பிரகாச தேசிகரின் **காஞ்சிக் கலம்பகம்**, மண்டலபுருடரின் **நிகண்டு சூடாமணி, திருப்புகழ்** ஆகியவை பதினாறாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க சில தமிழ் நூல்களாகும்.

காஞ்சிபுரமும், மதுரையும், முறையே சமஸ்கிருத, தமிழ் மொழிக் கல்வியின் மையங்களாகத் தொடர்ந்திருந்தன. நாயக்க அரசர்கள், பொதுவாக கவிஞர்கள், அறிஞர்கள், தத்துவஞானிகள் (சமயத்துறை சார்ந்த), வேதாந்திகள். சித்தாந்திகள் ஆகியோர்களைப் போற்றி ஆதரித்தனர். தவிர, அயல்நாட்டு அறிஞர்கள், சமயப் போதகர்கள் கூட ஓரளவு, நாயக்கர்களால் ஆதரிக்கப்பட்டனர். மதுரை, தஞ்சை, செஞ்சி அரண்மனைகள் அரசவைக் கவிஞர்கள் எழுத்தர்கள் வரலாற்றுக் குறிப்பாளர்கள் போன்றோரால் அலங்கரிக்கப்பட்டன. அவர்கள், பொதுவாக, சமஸ்கிருத மொழியிலும் இலக்கியத்திலும், தர்மத்திலும் தேர்ந்த அறிஞர்களாக இருப்பர். பெரும்பாலும் அவர்கள் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. ஏராளமான சொத்துக்கள், நன்கொடைகள், பரிசுகள் பிராமண சமஸ்கிருத அறிஞர்களின் பெயரில் பதியப்பட்டன. நாயக்க அரசர்கள் வானசாஸ்திரத்திலும், ஜாதகத்திலும் நம்பிக்கை கொண்டிருந்ததால் அறிஞர் பலரை இத்துறையில் ஊக்குவித்தனர்.

மதுரை நாயக்கர் காலக் கல்வி வளர்ச்சி

முச்சங்கங்களின் உறைவிடமான மதுரை, நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் கல்வி வளர்ச்சியின் மையமாக விளங்கியது. ராபர்ட்—டி—நொபிலி தனது 1610ஆம் ஆண்டுக் கடிதம் ஒன்றில், ஒரு கல்வி நிலையத்தில் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறுபட்ட பேராசிரியர்களிடம் கல்வி கற்கச் சென்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். மதுரையில் ஆசிரியர்கள் வேதாந்தத்தைக் கற்றுக் கொடுப்பதில் தீவிரமாக யிருந்தனர். ஆசிரியரின் விரிவுரை நான்கு வகையாக இருந்தது — விவாதம், அறிவு, சான்று, நம்பிக்கை. மேலும், ராபர்ட்—டி—நொபிலி, கல்வி அமைப்பு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதலாவது சான்று, கலை பற்றியது, இரண்டாவது அறிவு பற்றியது. மூன்றாவது அதிகாரம் (authority) பற்றியது என்கின்றார். பெரும்பான்மையான

மாணவர்கள் பிராமண குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. ஏனெனில் அவர்களே உயர்கல்வி கற்கின்ற உரிமையினைப் பெற்றிருந்தனர். நாயக்கர் காலக் கல்வி முறையில் மூலப்பொருள் (original) எதுவுமில்லை என்பது அறிஞர்தம் கருத்தாகும். அவர்தம் கல்வி முறை பெரும்பாலும் வீடுகளின் செல்வாக்கிலும், உள்ளூர் நிறுவனங்களின் செல்வாக்கிலும் அடங்கியிருந்தது. உயர்கல்வி மட்டுமே அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப் பட்டு நடத்தப்பட்டது. சமஸ்கிருதத்திற்கு அடுத்தபடியாக தமிழ், தெலுங்கு மொழிகளும் ஊக்குவிக்கப்பட்டன. திருமலை நாயக்கர், விஜயரங்க சொக்கநாதர் போன்றோர் தெலுங்கு இலக்கியத்தை ஆதரித்தனர். நாயக்கர்கள் சமய மடங்களுக்கும், கோயில்களுக்கும் நன்கொடைகளும், சொத்துக்களும் நல்கினர். இந்து மடங்களும், கோயில்களும் கல்வி மையங்களாகச் செயல்பட்டன.

பெரும்பான்மையான நாயக்க மன்னர்கள் அறிஞர்களைப் போற்றுபவர்களாக மட்டுமல்லாது தாங்களே கல்வியிற் சிறந்த அறிஞர்களாகவுமிருந்தனர். தஞ்சையின் இரகுநாத நாயக்கர், இலக்கியம், இசை ஆகிய துறைகளில் ஆற்றல் மிக்கவராக இருந்தார். இவர் சுமார் நூறு நூல்கள் வரை எழுதியிருக்கின்றார். இக்காலத்து சமஸ்திருத அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் விஜயிந்திர தீர்த்தர், சுதீந்திர தீர்த்தர் ஆகியோராவர். சில நாயக்க அரசர்கள் தெலுங்கு கவிதைகள் இயற்றுவதில் வல்லவராயிருந்தனர். மதுரை, தஞ்சை நாயக்கர்களின் ஆதரவால் தெற்கு தெலுங்கு கவிதை அமைப்பு ஒன்று வளர்க்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் தான் பிரபந்தம் அதிகமான தூய்மையை ஏற்றது. தேசி என்னும் கட்டுரை முறை சிறப்பான வரவேற்பினைப் பெற்றது. இம்மாதிரியான சில கவிதைகளின் உட்பொருள் மனைவி, கணவன், காதலன் என்ற மூன்று உருவங்களைச் சுற்றியே இருக்கும். அவை நாடக அமைப்பு போன்றும் வசனம் பேசுவது போன்றும், காட்சிகள் போன்றும், இன்னும் பல அமைப்புகள் போன்றும் அமைந்திருக்கும். யக்ஷகானம், ஜெக்கின்ஸ் போன்ற கவிதைகள் மேற்குறிப்பிட்ட மாதிரியான தெலுங்குக் கவிதைகளேயாகும்.

மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் ஏராளமான அறிஞர்கள் தங்களது எழுத்து வலிமையால் தமிழ் இலக்கியத்திற்கு மெருகூட்டினர். மடைதிருவேங்கடநாதர் என்பவர் திருமலை நாயக்கர் ஆட்சியில் ஒரு அதிகாரியாக பணி புரிந்தார். கயத்தாரில் வாழ்ந்து வந்த இவர் சிறந்த தமிழறிஞர் ஆவார். பிரபோத சந்திரோதயா என்ற கவிதையின் ஆசிரியர் இவரேயாவார். இக்கவிதையே **மெய்ஞ்ஞான விளக்கம்** என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. தமிழ்க்கவிஞரான குமரகுருபரர் திருமலை நாயக்கரின் சமகாலத்தவரேயாவார். **கந்தர் கலிவெண்பா கயிலைக் கலம்பகம், மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லி மாலை** போன்ற நூல்களை யாத்தவரும் இவரே. வள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் குமரகுருபரரின் சீடராக இருந்தார். இவர் **ஞானபரன விளக்கம்** என்ற நூலை எழுதினார். இராமப்பையன் என்னும் படைத் தளபதியின் போர் முறையினைப்பற்றி விளக்கும் **இராமப்பையன் அம்மானை** ஒரு வரலாற்றுச்சிறப்புமிக்க நாட்டுப் பாடலாகும். தமிழிசைக் கவிஞரும், தத்துவபோதகருமான தாயுமானவசுவாமிகள் திருமலைநாயக்கரின் சமகாலத்தவரே. இவர் சைவசித்தாந்த தத்துவ விளக்கங்களைப் பரப்பினார். கவிஞர் என்ற வகையில் இவர்தம் கவிதையில் இனிமையையும், எளிமையையும் கடைப்பிடித்தார்.

திருநெல்வேலிப் பாண்டிய அரசர்களில் ஒருவரான அதிவீரராமபாண்டியன் சமஸ்கிருதம் தமிழ் ஆகியவற்றில் தேர்ந்த அறிஞராவார். **நைஸதம், காசிக் கண்டம், கூர்ம புராணம், லிங்க புராணம், வெற்றி வேற்கை** அல்லது **நறுந்தொகை** ஆகியவை அதிவீரராம பாண்டியரால் எழுதப்பட்டவை. அதிவீரராம பாண்டியரின் உறவினரான வரதுங்கையம பாண்டியர் கரிவலம் வந்த நல்லூர்க் கடவுள் பற்றி மூன்று அந்தாதிகளை எழுதியுள்ளார். தவிர, இவர் **பிரமோத்லிரகண்டம்** என்ற நூலையும், அதனைத் தமிழில் மொழி பெயர்த்த **கொக்கோஹோம்** என்ற நூலையும் இவரே எழுதியுள்ளார். திருக்குருகை என்ற ஊரில் வாழ்ந்த பெருமாள் கவிராயர் சிறந்த கவிஞராவார். இவர் **மாறன் அலங்காரம், திருக்குருகை மணியம்,** ஆழ்வார் திருநகரி மீதான **ஸ்தல புராணம்** ஆகியவற்றை இயற்றியுள்ளார். வீரப்பநாயக்கரின் அமைச்சர் ஒருவரால் ஆதரிக்கப்பட்ட அனதாரி என்னும் கவிஞர் **சுந்தர புராணம்** என்ற சமஸ்கிருத நூலை மொழி பெயர்த்தவராவார். **ஆருணிய அந்தாதி, திருவாரூர்க்கோவை, அருணாச்சல புராணம்** ஆகியவை எல்லப்ப நாவலர் என்பவரால் எழுதப்பட்ட நூல்களாகும். தமிழ் இலக்கணம் பற்றிய இலக்கண விளக்கம் என்ற நூல் திருவாரூரைச் சேர்ந்த வைத்தியநாத தேசிகர் என்பவரால் எழுதப்பட்டது. இந்நூல் **குட்டித் தொல்காப்பியம்** எனவும் அழைக்கப்பட்டது. வேலூரின் லிங்கநாயக்கர் காலத்தில் வாழ்ந்த துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் நாயக்க மன்னர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காக வீர சைவத்தைத் தழுவினார். இவர் எழுதிய நூல்களுள் **அத்வைத வெண்பா** என்ற நூல் சைவ தத்துவத்தைப் பற்றி விளக்கும் சிறப்பான நூலாகும். பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் என்பவர் **அழகர் அந்தாதி** என்ற நூலை எழுதினார். சொக்கநாத நாயக்கரின் சமகாலத்தவரான உமறுப்புலவர் **சீறாப்புராணம்** என்ற நூலை எழுதினார். ராபர்ட்—டி—நோபிலி, ஜோசப் பெஸ்கி (வீரமா முனிவர்) போன்றோர் இக்கால தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தங்களால் இயன்ற சேவையைச் செய்துள்ளனர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

மதுரை நாயக்கர் ஆட்சியில் கலை, கட்டடக்கலை வளர்ச்சி

மதுரை நாயக்கர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் எல்லாக் கோயில்களையும் முழுமையாகக் கட்டாவிட்டாலும், மதுரை, ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய கோயில்களின் பகுதிகளையாவது அவர்கள் கட்டிமுடித்தார்கள் என்பது அவர்தம் கட்டடக் கலையின் ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. நாயக்கர் காலத்தில் ஏராளமான கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன; பல கோயில்களில் கோபுரங்கள் எழுப்பப்பட்டன. ஸ்ரீரங்கம் கோயிலில் பிரகாரங்கள் கோபுரங்கள், மண்டபங்கள் ஆகியவை நாயக்கர் காலத்தில் ஏற்பட்டவையே. திருநெல்வேலியிலமைந்திருக்கும் கிருஷ்ணாபுரம் கோயிலும், தென்காசி காசிவிஸ்வநாதர் கோயிலும் மதுரை நாயக்கர் காலத்தில் ஏராளமான கொடைகளைப் பெற்றன எனச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. மதுரை நாயக்கர் காலத்தில் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் திருப்பணி செய்யப்பட்டது. மதுரை நாயக்கர்கள் இராமேஸ்வரத்தில் வீற்றிருக்கும் இராமநாத சுவாமிக்கு ஏராளமான கொடைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர் என்பது கண்கூடு.

காலம் மாற மாற மதுரைக் கோயிலின் அமைப்பு பல மாற்றங்களுக்குள்ளாகியது. இன்றைய மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் பதினேழாம் நூற்றாண்டிலிருந்தது போன்றே திராவிட சமயக்கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. திருப்பணி

மாலை என்ற நூல், கிருஷ்ணவீரப்பநாயக்கர் வெள்ளியம்பலம் கட்டினார் அல்லது திருத்தியமைத்தார் எனக் குறிப்பிடுகின்றது. வடக்குக்கோபுரம், சேர்வீஸ்ராமேர் என்ற கோயில் சமயலறை, ஆயிரங்கால் மண்டபம், மூர்த்தியம்மன் மண்டபம், இரண்டாம் பிரகாரத்தில் சுருமண்டபம், சித்திரம் தீட்டப்பட்ட தூண்களைக் கொண்ட வீரப்பமண்டபம் ஆகியவை இவரது திருப்பணிகளில் அடங்கும். மீனாட்சி அம்மன் கோயிலின் ஒரு மண்டபத்தின் தூண்களைப் பொன்னால் அலங்கரித்தார். புதுமண்டபம் திருமலை நாயக்கரால் எழுப்பப்பட்டது எனக் கூறப்படுகிறது. கலை நுணுக்கமான உருவங்கள் செதுக்கப்பட்ட நான்கு சுற்றுக்கள் புதுமண்டபத்திற்கு துணையாக அமைக்கப்பட்டுள்ளன. மதுரைக் கலையம்சத்தை நினைவூட்டும் நான்கு விதமான தூண்கள், வசந்தமண்டபம், நாயக்க அரசர்களின் முழு உருவச் சிலைகள் ஆகியவை கலையழகுக்கு மெருகூட்டுவனவாக அமைந்துள்ளன. இத்தூண்கள் பொதுவாக யாளிகளையும் அல்லது ஓடும் குதிரைமீது அமர்ந்திருக்கும் வீரர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன. புது மண்டபத்திற்கு முன்னால் அமைந்துள்ள கோபுரம் திருமலை நாயக்கரால் தொடங்கப்பட்டது. இக்கோபுரம் முற்றுப்பெறாத நிலையில் இருப்பதால் இதற்கு மொட்டைக் கோபுரம் என்ற பெயர் வழக்கிலிருக்கின்றது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தமிழகத்தின் கட்டடக்கலை அமைப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது. ஏராளமான புகுமுக மண்டபங்கள் (porches), தூண்கள் தாங்கிய வளைவுச்சுவர்கள் (cloisters) உயரமான மேடைபோன்ற அமைப்புகள் (gallery), அழகான மென்மையான சில வடிவங்கள், பிரமிக்கத்தக்க கோபுரங்கள், நான்கு பக்கங்களிலும் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச் சுவர்கள் போன்றவை நாயக்கர்காலக் கட்டடக்கலையை இன்றும் நினைவூட்டுகின்றன. இக்கோயில், தன்னுள் இரண்டு கோயில்களைக் கொண்டுள்ளது. இறைவனுக்கும், அவர்தம் இல்லத்தரசிக்குமாக இரு மூலஸ்தானங்களையும் இக்கோயில் பெற்று விளங்குவது மாநகரின் மாபெரும் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது. இக்கோயிலில் அமைக்கப்பட்டிருக்கும் பிரசித்தி பெற்ற ஆயிரங்கால் மண்டபம், விஸ்வநாத நாயக்கர் காலத்தில் மதுரை நாயக்கர் அரசின் அமைச்சராயிருந்த தளவாய் அரியநாதமுதலியரால் கட்டப்பட்டது எனக் கூறப்படு கின்றது. மண்டபத்தின் தூண்கள் அவற்றில் செதுக்கப்பட்டிருக்கும் அழகுமிகு சிலைகளாலும், தீட்டப்பட்ட கல் சிற்பங்களாலும் சிறப்புப் பெறுகின்றன.

ஸ்ரீரங்கக் கோயிலில் ஏராளமான சிற்பங்கள் நாயக்கர் காலத்தினை நினைவுபடுத்து கின்றன. இதைப் போன்ற சிற்பங்கள் மதுரையில் புதுமண்டபத்திலும், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயப் பிரகாரங்களிலும் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. கஸ்தூரி ரங்கப்பர், முத்துக்கிருஷ்ணப்பர், முத்து வீரப்பர் ஆகியோரின் உருவச்சிலைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

நாயக்கர் காலக் கலை, கட்டடக் கலை ஆகியவை முகமதிய கலை நுட்பங்களைத் தன்னுள் கொண்டுள்ளன அல்லது முகமதியர் கலை நாயக்கர் கலை நுட்பத்தில் செல்வாக்குப் பெற்றது என்பதனை மறுக்க முடியாது. இந்து — இஸ்லாமிய கலப்பு கலை, கட்டடக்கலை ஆகியவற்றிற்குச் சிறப்பான எடுத்துக்காட்டாக அமைந்திருப்பது, மதுரையில், திருமலை நாயக்கர் அரண்மனையாகும். பார்ப்போரை அயரவைக்கும்

இப்பெரும் அரண்மனை, சுண்ணாம்பினால் கட்டப்பட்டது. சுண்ணம் பயன்படுத்திக் கட்டிடம் எழுப்பும் முறை அக்கால இந்தியாவுக்குப் புதுமையானது. இது 160 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட வெளிமுற்றத்தைக் கொண்டுள்ளது. சுற்றுச் சுவர்களில் நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. நாற்பதடி உயரமுள்ள கற்றூண்கள் வளைவுகளைத் தாங்கி நிற்கின்றன. பெருங்கலையழகு கொண்ட இலைவடிவுடைய கற்பாதைகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன. அறுபதடி உயரம் கொண்ட கூரையையும் தூண் முகப்புகளையும் இத்தூண்கள் கொண்டுள்ளன.

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் புகழ் பெற்ற கிருஷ்ணாபுரம் கோயில் திராவிடக் கலையமைப்புக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இக்கோயிலின் மரவேலைப்பாடும். கல்செதுக்குமுறையும் அழகுற பயன்படுத்தப்பட்டுள்ளன. ராஜ கோபுரங்கள் கல்யாண மண்டபங்கள் போன்றவை கோயில்களில் இணைக்கப்பட்டது நாயக்கர்களின் சேவையேயாகும். நாயக்கர்கள் அழிவுறாத இச்சின்னங்களுக்கு ஏராளமான பணத்தைச் செலவிட்டனர்.

ஸ்ரீரங்கத்தில், ஸ்ரீரங்கநாதர் கோயிலில், கருட மண்டபத்தில் அமைந்திருக்கும் வர்ணம் தீட்டப்பட்ட ஓவியங்கள், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் ஆயிரங்கால் மண்டபம், புதுமண்டபம் அமைந்துள்ள பத்து நாயக்க மன்னர்களின் முழு உருவச்சிலைகள், திருப்பரங்குன்றம் முருகன் திருக்கோயிலில் அமைந்துள்ள இராணி மங்கம்மாள் உருவச்சிலைகள் போன்றவை நாயக்கர் கலையம்சத்தின் சிறப்புக் கூறுகளாகும். ஏராளமான திருக்கோயிலில் அமைந்துள்ள திருமலைநாயக்கர், மற்றும் அவரது மனைவியாரின் உருவச்சிலைகள் மத்தியகால தமிழகத்தின் சிற்பக்கலை நுணுக்கத்தைத் தெரிவிக்கின்றன. மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமேஸ்வரம், ஸ்ரீவில்லிபுத்தூர், சுசீந்திரம் திருக்கோயில்கள் நாயக்கர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டன. இவற்றில் சில திருக்கோயில்களில் புதியன சேர்க்கப்பட்டன; சிலவற்றில் சில பகுதிகள் நீக்கப்பட்டன. தவிர நாயக்க மன்னர்கள் சில கோட்டைகளையும், அரண்மனைகளையும் திருத்தியமைத்தனர், அழகு செய்தனர், புதிதாகவும் எழுப்பினர். நாட்டின் பல பகுதிகளில் புதிதாக கோட்டைகளும், அரண்களும் ஏற்படுத்தப்பட்டன. திருச்சிராப்பள்ளிக் கோட்டையைக் காப்பதில் நாயக்க மன்னர்கள் அதிக கவனம் செலுத்தினர். காரணம், திருச்சிகோட்டை வடக்கிலிருந்தும், கிழக்கு, மேற்கு பகுதிகளிலிருந்தும் அடிக்கடி அன்னியரின் தாக்குதலுக்கு உட்படக்கூடும் என அவர்கள் அஞ்சினர். தங்களது வருமானத்தில் பெரும்பகுதியை தமது நாட்டைக் காக்கவும், தடுப்புச் சுவர்கள் எழுப்புவதற்கும், மரவேலிகள் அமைக்கவும், அகழிகள் வெட்டவும், கிணறுகள், கால்வாய்கள் வெட்டவும் செலவிட்டனர்.

திருக்கோயில்களின் வளர்ச்சிக்கு எந்த அளவுக்கு பாடுபட்டனரோ அதே அளவு ஆர்வத்தை நாட்டியம், இசை, ஓவியம் தீட்டுதல் ஆகிய கலைகளின் வளர்ச்சியிலும் காட்டினர். அழகுக் கலைகளில் புத்துயிர்ப்பு ஏற்பட்டது; கர்னாடக சங்கீதத்தில் புதிய மெருகு ஏற்பட்டது. பரதநாட்டியம் வரவேற்பு பெற்றது. அழகுக்கலைகளில் அவர்கள் காட்டிய ஆர்வம், அவர்கள் தேவதாசி முறையை ஊக்குவித்ததிலிருந்தும் (தேவதாசிகள் கோயில் பணிப் பெண்கள் அல்லது கோயில் நாட்டியப் பெண்கள்), மேளக்காரன்கள்

நட்டுவன்கள் ஏராளமாக நியமிக்கப்பட்டதிலிருந்தும் தெரியவருகிறது. நாட்டியக்காரரும், இசைக்கலைஞரும் முறையே கரணங்கள், சுவரங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். நாட்டியமும் இசையும் இடம் பெறாத திருவிழாக்கள், கோயில், அரண்மனை விழாக்கள் போன்றவை அரை குறை விழாக்களாகக் கருதப்பட்டன. சுருங்கக்கூறின் நாயக்க மன்னர்கள், கலை, கட்டடக்கலை, சமயம், அறநிலையம் போன்ற எல்லாவிதக் கலைகளையும் ஆதரித்தனர் என்பது தெளிவு.

நாயக்கர் காலச் சமயம், தத்துவம்

தமிழக மக்களில் பெரும்பான்மையோர் இந்து வழிபாட்டு முறையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கர்கள் சிவன் அல்லது விஷ்ணு, அல்லது மற்ற சிறுபான்மை தெய்வங்களைப் போற்றியும், வழிபட்டும் வந்தனர். மக்கள் தெய்வத்தின் மீதும், சமயத்தின் மீதும், மற்ற புனிதமான பொருட்களின் மீதும் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். ஏதேனும் ஒரு நல்ல அல்லது தீய செயல்களைச் செய்யத் துவங்குமுன் கடவுளிடம் முறையிட்டபின்பே அதனைத் தொடுவர். இவ்வாறு செய்வதன் மூலம் ஆண்டவனின் சக்தியையும், வாழ்த்துக்களையும் தாம் பெறமுடியும் என்பது அவர்தம் குறிக்கோளாக இருந்தது. சாதாரணமாக நடைபெறக்கூடாத, இயற்கைக்கு மாறான குழப்பங்கள், தவறுகள், தண்டனைகள் நடைபெறுமாயின் அவை ஆண்டவனால் கொடுக்கப்பட்டபலன் என்றோ அல்லது தண்டனை என்றோ அவர்கள் கருதினர்.

எனவே அம்மக்கள், சமயச் சடங்குகள், திருவிழாக்கள், பூசைவழிபாடுகள் ஆகிய வற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழகத்தில் நாயக்கர் அரசுகளின் முக்கிய நகரங்கள் பெரும்பாலும் விழாக்கோலம் பூண்டிருக்கும். இன்றளவும் மதுரை மாநகர் பழைய விழாக்களை நாள்தோறும் தவறாமல் நடத்திவருகின்றது என்பது கண்கூடு.

இப்படிப்பட்ட இந்து சமய விழாக்கள் நடந்துகொண்டிருக்கும் இக்காலத்தில், இயேசு சபையினர் கிறித்தவ சமயத்தையும் தத்துவத்தையும் போதித்ததோடு மக்களை மதமாற்றம் செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டனர். மதுரை நாயக்கர் அரசர்களில் புகழ் பெற்றவரான திருமலைநாயக்கர் கிறித்தவ சமயத்தில் சேர்ந்தார் என்றும் கிறித்தவ சமய போதகர்களின் சீடராக இருந்தார் எனவும் கதை கூறப்படுகிறது. ஆனால் இதில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. கிறித்தவ போதகர்களின் சமய மாற்றம் செய்யும் தொழில் எந்த எதிர்ப்பும் இன்றி வளர்ந்தது. எனினும் தஞ்சையிலும், இராமநாதபுரத்திலும் அவர்களுக்குச் சில இன்னல்கள் தரப்பட்டன என்பதனை மறுக்கமுடியாது. ஒரு காலத்தில் அவர்கள் தங்களது சமய விவகாரங்களில் மட்டுமே கவனம் செலுத்தினர்; மதுரையில் அவர்களது நிலை பாதுகாப்பாகவே இருந்தது. அவர்களது அரசியல் விவகாரங்களில் தலையிட்டு, சில ஆட்சியாளரைப் பகைத்துக் கொண்ட பொழுதுதான் கைது செய்தல், கொலை செய்தல் உரிமைகள் பறிக்கப்படுதல் கொடை நிலங்கள் பிடுங்கப்படுதல் ஆகியவை நிகழ்ந்தன.

தமிழக நாயக்கர் அரசுகள் எல்லாமே வேதாந்த, சித்தாந்த தத்துவக் கருத்துகளை ஊக்குவித்தனர்; கல்வி வளர்ச்சிக்காகவும், மக்களது அறிவினைப் பெருக்கவும் தத்துவக் கருத்துக்களைப் போதிக்கவும் மடங்களை நிறுவவும் உதவி செய்தனர்; அம்மடங்களுக்கு

மானியங்களும் வழங்கினர். நாயக்கர் மன்னர்கள் அறிஞர்கள் பலரை சமய தத்துவ போதனைக்கும் விவாதத்திற்கும் ஊக்குவித்தனர். சமயதத்துவ மாநாடுகள் நடத்தப்பட்டன, இதில் மன்னர் அதிக பங்கு பெற்றார். தந்திரிக பள்ளிகளும், அதன் தத்துவங்களும் மக்களின் சமய வாழ்வில் அதிகம் இடம் பெற்றிருந்தன. நாத்திக முறை வழக்கிலிருந்ததா? இல்லையா? என்பது பற்றி எதுவும் தெளிவாகக் கூறப்படவில்லை. கோயில்களும் மடங்களும், கல்வி வளர்ச்சி மையங்களாகவும், பொழுதுபோக்கு இடங்களாகவும், மருத்துவ இல்லங்களாகவும் செயல்பட்டு வந்தன. கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொறாமையின் காரணமாகவும் வெறுப்பின் காரணமாகவும் ஏற்பட்ட பல பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்பட்டன. தேவையான நேரங்களில் அரசர், கோயில்களையும், மடங்களையும் நிர்வகிக்கவும், மேற்பார்வையிடவும் அதிகாரிகளை நியமித்தனர்.

வீரசைவர்கள் அல்லது லிங்க ஆராதனை செய்பவர்கள் தங்கள், சமயத் தத்துவங்களை உலகிற்கு உணர்த்துமாறு ஊக்குவிக்கப்பட்டனர். இந்தச் சிவ பக்தர்கள் தங்கள் கழுத்தில் சிவலிங்க இலட்சினையிட்ட அணிகலன்களை அணிந்தனர். அனுமானை வணங்கும் முறை எல்லா வைணவக் கோயில்களிலும் சிறப்பிடம் பெற்றது. அனுமானின் உருவச்சிலைகள் தமிழகக் கோயில்களில் இடம் பெற்றன.

தமிழக மக்கள் இந்து சமயத்தின் தத்துவங்களைப் போற்றி வந்தனர். எனவே அவர்கள் மந்திரங்கள் தந்திரங்கள், சகுனங்கள் ஆகியவற்றில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். சமுதாயத்தில், ஜாதகம் எழுதுவோர், கைரேகை பார்ப்போர் ஆகியோர் மதிக்கப்பட்டனர். பெண்கள் தெய்வ வழிபாட்டுக்குரிய எல்லாவித "விரத" முறைகளையும் கையாண்டனர்; நல்வாழ்விற்காக இறைவனை இடைவிடாது வணங்கி வந்தனர்; தேவையானவர்க்கு தானங்கள் செய்தனர். சமயப் போதகர் இனத்திற்கும், அவர்தம் உடைமைக்கும் நாயக்க மன்னர்கள் பாதுகாப்பு நல்கினர். இனக்கலப்புமுறை என்பது அதர்மமாகும் என அறிவித்தனர். இவ்வாறாக இனக்கலப்புமுறை ஏற்றுக்கொள்ளப் படாதது கீழின மக்களை மேலும் மேலும் கீழே தள்ளியது. எனவே இந்தத் தாழ்த்தப்பட்ட கீழின மக்கள், இனவேறுபாடு காட்டப்படாமலிருந்த கிறித்தவ சமயத்தில் சேர முற்பட்டனர்.

நாயக்கர் ஆட்சிக்காலத்தில் பொதுவாக சமயப் பொறை இருந்து வந்தது. எனினும் ஆங்காங்கே சில சமயப்பூசல்களும், கொலைகளும் நடந்தன என்பது மறுக்கமுடியாத தாகும். மக்கள் தீவிர இந்து சமயத்தவராக இருந்தனர். எனினும் அரசர்கள் சைவ அல்லது வைணவ சமயத்தில் அதிக ஆர்வம், கொண்டிருந்தனர். எனினும் என்றுமே அவர்கள் இந்து சமயத்தை தேசிய சமயமாக வைத்துக் கொண்டதில்லை. சைவசமயத்தவர் (வீரசைவர்கள் உட்பட) வைணவ சமயத்தவர், சமணர், புத்தசமயத்தவர், இஸ்லாமியர், கிறித்தவர் ஆகியோர் ஒற்றுமையுடனும் அமைதியாகவும் வாழ்ந்து வந்தனர். சமணர்கள் புத்த சமயத்தவர்கள், இஸ்லாமியர், கிறித்தவர் ஆகியோர் பள்ளிகள், பள்ளிவாசல்கள், திருச்சபைகள் கட்டவும், அவர்தம் வழிபாட்டு முறையைத் தொடரவும் அனுமதிக்கப் பட்டனர்.

கிறித்தவ சமயப் போதகர்கள் சிலர் கொல்லப்பட்டது, திட்டமிடப்பட்ட நீதிக்குப் புறம்பான செயல் என்றோ அல்லது அவர்தம் சமயப்பிரச்சாரத்தை எதிர்த்து அவர் களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை என்றோ கூற முடியாது. செவப்ப நாயக்கரின்

ஆட்சிக்காலத்தில் துறவிகளைப் பேணிக் காப்பதற்காக ஒரு கிராமம் மானியமாக வழங்கப்பட்டது. 1726இல் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சமயப்போதகர் ஒருவர், திருச்சி மலைக்கோட்டையின் தெற்கு வாயிலில் அமைந்திருக்கும் துர்க்கா கோயிலில் வழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்டார். 1574இல் மதுரை கோரிப்பாளையத்தின் முகமதியர்கள் சமயக்காரணங்களுக்காக நாயக்கர் மன்னரிடமிருந்து மானியங்கள் பெற்றனர். 1733இல் மீனாட்சி அரசியார், ஒரு மசூதிக்கு நிலம் மானியமாக வழங்கினார். காமாட்சி நாயக்கர் என்பவர், பள்ளிவாசல் ஒன்றை நிர்வகிக்க, முகமதியர்களுக்கு நிலங்களை மானியமாக வழங்கினார். இந்நிகழ்ச்சிகள், முகமதியர்களுக்கு இந்துக்களின் தர்மத்தையும், பிராமணர் அல்லாத சமயப்போதகர்கள் இருந்தமையையும், பொது அறநிலைய அமைப்பு முறை இருந்தது என்பதனையும், அறநிலையத் துறையில் வேறுபாடுகள் காட்டப்படவில்லை என்பதனையும் (இன, சமய வேறுபாடுகள் காட்டப்படவில்லை) எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன என ந. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். ஆனால் எந்த வகையிலும், எந்த ஒரு நிகழ்ச்சியோ அல்லது செயலோ மேற்கூறிய ஆசிரியரின் கருத்துக்கு உகந்தவாறு அமையவில்லை என்பது கண்கூடு.

தஞ்சையின் செவப்ப நாயக்கர், பிமண்டா அடிகளார் என்ற கிறித்தவ சமயப் போதகரை, தரங்கம்பாடியில் ஒரு இல்லத்தையும், ஒரு திருச்சபையையும் கட்டுவதற்காக அழைத்தார். இதற்கான நிலம் ஐந்நூறு டக்கெட் பணம் கொடுத்து வாங்கப்பட்டது. 1610இல் மதுரையின் வீரப்ப நாயக்கர், மதுரையில் திருச்சபை ஒன்று அமைக்கவும், பிராடஸ்டண்டுப் பேரவை ஒன்றை ஏற்படுத்தவும் அனுமதி வழங்கினார். தரங்கம்பாடி, போர்ட்டோ நோவா, தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் பிராடஸ்டண்டு சமயப்போதகர்கள் தமது அச்சுக்கூடங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடனும், சமயத்தைப் பரப்பும் ஆர்வத்துடனும், குறைந்தவிலைக்கு நூல்களை அச்சிட்டு வெளியிட்டனர். சாந்தோமிலும், நாகபட்டினத்திலும் போர்த்துக்கீசிய சமயப் போதகர்கள் தங்களது திருச்சபையினை அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். சமணர்கள், திண்டிவனம் போன்ற பகுதிகளில் அடிக்கடி துன்புறுத்திக் கொலை செய்யப்பட்டாலும், காஞ்சி, மதுரை போன்ற நகரங்களில் தங்களது சமணப் பள்ளிகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். எனவே பொதுவாக நாயக்கர் காலம் சமயப் பொறை மிகுந்த, பரந்த நோக்கு கொண்ட காலமாக இருந்தது என்பது தெளிவு.

ஆங்காங்கே சமயப்பூசல்கள் ஏற்பட்டன. தஞ்சையில் சைவசமயத்தவருக்கும், வைணவ சமயத்தவருக்குமிடையே பூசல்கள் ஏற்பட்டன; மதுரையில், வேதாந்த தேசிகரின் (14ஆம் நூற்றாண்டு) சீடர்களுக்கும் மணவாள மாமுனியின் (14ஆம் நூற்றாண்டு) சீடர்களுக்குமிடையே போட்டி ஏற்பட்டது; செஞ்சியில் இந்துக்களுக்கும், சமணர்களுக்கு மிடையே பூசல்கள் ஏற்பட்டன. கி.பி. 1597இல் சிதம்பரத்தில் சைவ, வைணவ சமயத்தாரிடையே ஏற்பட்ட சமயப்பூசல் பற்றி பிமண்டா அடிகளார் குறிப்பிடுகின்றார். சிதம்பரம் நடராஜர் கோயிலில் பெருமாள் சுவாமியின் உருவத்தை வைப்பதற்கு சைவ சமயத்தவர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இக்கோயிலைத் திருப்பணி செய்யப் பணித்த செஞ்சியின் கிருஷ்ணப்பநாயக்கர், சைவர்களின் எதிர்ப்புக்கு செவிசாய்க்கவில்லை. ஆனால் மதுரையில், இந்த இரு இந்துமதப் பிரிவினரையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில், திருமலை நாயக்கர், வெற்றி பெற்றார். வடக்கத்திய, தெற்கத்திய வைணவர்களுக்கிடை

யேயான வேற்றுமைகள் நீக்கப்பட்டன. அவர்களுக்கிடையே இருந்த பிரச்சினைகளும், வேற்றுமைகளும் பாரபட்சமின்றி நாயக்க மன்னர்களால் தீர்த்து வைக்கப்பட்டன. திண்டிவனத்தில் சமணர்கள் பலர் கொலை செய்யப்பட்டனர்; அவர்தம் சமணப் பள்ளிகள் தரைமட்டமாக்கப்பட்டன. முதன் முதலாக நாயக்கர் ஆட்சிக்காலத்தில்தான் மதுரையில் மதுரைவீரன், சக்தி கடவுளரை வணங்கும் முறை ஏற்பட்டது. தஞ்சையில் கிறித்தவ போதகர்கள் அவமானப்படுத்தப்பட்டனர்; பலர் கொல்லப்பட்டனர். ஆனால் மதுரையில் அவர்கள் அதிக உரிமைகள் பெற்று விளங்கினர்.

செஞ்சி நாயக்கர்களின்கீழ் கலை, கட்டடக் கலை

செஞ்சி நாயக்கர்கள் தலைநகரை மேலும் கோட்டைகளால் ஸ்திரப்படுத்தினர்; பல முக்கிய நகரங்களில் கோட்டைகள் எழுப்பினார்கள். இன்றும் அழியாத நிலையிலிருக்கும் செஞ்சிக் கோட்டையின் கோயில்களும், மண்டபங்களும் நாயக்கர் ஆட்சிக் காலத்தவையே. ராஜகிரி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள வெங்கடரமணசுவாமி கோயில் முத்தியாலு நாயக்கர் என்பவரால் கட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது. முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் கல்யாணமஹால் கட்டினார்; பல பேட்டைகளையும், சுற்றுச் சுவர்களையும் செஞ்சி நகரத்தில் ஏற்படுத்தினார். அவரது வழித்தோன்றலான அச்சுத ராமபத்திர நாயக்கர் திருவண்ணாமலை, திண்டிவனம் கோயில்களைக் கட்டினார். திருக்கோயிலூரில் உள்ள திருவிக்கிரம பெருமாள் கோயில் பல வழிகளில் நாயக்கர் காலக் கலையை ஒத்திருக்கின்றது. இக்கோயிலில், அம்மன் கோயிலுக்கு முன்பு அமைந்துள்ள கல்யாணமண்டபத்தின் தூண்களில் சில நாயக்க மன்னர்களின் உருவச்சிலைகள் காணக்கிடைக்கின்றன. ஸ்ரீமூஷ்னத்தின் வைணவக் கோயில் ஆறுகால் மண்டபம் ஒன்றைக் கொண்டுள்ளது. இதன் தூண்களில் தஞ்சையின் அச்சுதப்ப நாயக்கர், அவர்தம் மூன்று சகோதரர்கள், மற்றும் பல நாயக்க மன்னர்களின் உருவச் சிற்பங்கள் காணக் கிடைக்கின்றன.

தென் ஆற்காடு மாவட்டத்தில், பஞ்சமஹால்களில் ஒன்றான, வெங்கடம்மாள் பேட்டை (கடலூருக்கு அருகில்), வெங்கடபதி நாயக்கரின் சகோதரியின் நினைவாக அமைக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. இன்றைய போர்டோ நோவாவுக்கு மேற்கே அமைந்துள்ள கிருஷ்ணபட்டினம் (இப்போது இது அகரம் என அழைக்கப்படுகிறது) 1599இல் இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரால் ஏற்படுத்தப்பட்டதாகும். இரண்டாம் கிருஷ்ணப்பர் அந்நகரில் இயேசு சபையினரின் திருச்சபை ஒன்றை அமைக்க அனுமதி வழங்கினார்.

செஞ்சிக்கு அருகாமையிலுள்ள (ஐந்து மைல் தொலைவில் உள்ள) வராஹநதிக்குக் குறுக்கே அணை ஒன்றை, துபாக்கி கிருஷ்ணப்பர் கட்டினார் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த அணையிலிருந்து தான் சிறுகடம்பூர் குளத்திற்கு நீர் கொண்டு வரப்பட்டு நிரப்பப்பட்டது எனவும் குறிப்பிடப்படுகிறது. துபாக்கி கிருஷ்ணப்பர் இடங்கை இனத்தவரை ஜெயங்கொண்டான் கிராமத்திலும், அதற்கருகாமையிலிருந்த ராஜகிரி, கிருஷ்ணகிரி பகுதிகளிலும் குடியேறப் பணித்தார். ராஜகிரிக்கு வடக்கே வலங்கை

இனத்தவரின் குடியேற்றங்களை ஏற்படுத்தினார். செஞ்சிக்கு அருகில், குடைவரை கோயில் ஒன்றினை, நல்லன் சக்கரவர்த்தி சத்ரயாகம் சேஷாத்திரி அய்யங்காருக்குக் கிருஷ்ணப்ப நாயக்கர் வழங்கினார்.

அச்சுத ராமபத்ர நாயக்கர், திருவண்ணாமலை திருக்கோயிலின் சுற்றுச்சுவர்களையும், இராஜ கோபுரத்தையும் எழுப்பினார். இதற்கு இருபது ஆண்டுகள் கழித்து திண்டிவனத்தில் விஷ்ணு கோயிலையும், வட ஆற்காடு மாவட்டத்தில் நெடுங்குன்றம், சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் கோயிலையும், கோபுரத்தையும் கட்டினார். இவை தவிர மேலும் பல அக்ரஹாரங்களையும், கோபுரங்களையும் உண்டாக்கியதால் புகழப்படுகின்றார். வராஹநதியின் கரையில் முத்தியாலு நாயக்கர், சக்கரப் பெருமாள் கோயிலைக் கட்டினார் எனக் கூறப்படுகிறது.

கி.பி. 1474இல், திருவண்ணாமலை கோயிலில் பெருங் கோபுரத்தை வெங்கடப்ப நாயக்கர் கட்டினார் எனக் கூறப்படுகிறது. இவர் திண்டிவனத்தில் சிவன் கோயில் ஒன்றையும், கோட்டை ஒன்றையும் எழுப்பினார்; சித்தமூர் என்ற இடத்தில் சமணர் கோயில் ஒன்று எழுப்ப அனுமதி வழங்கினார். இவரது மனைவியார் மங்கம்மாள், செஞ்சிக்கு அருகிலும், விருத்தாச்சலத்திற்கு அருகிலும் இரு குளங்களை வெட்டினார். இதே காலத்தில் விருத்தாச்சலம் கோயில் பெருஞ்சுவரும், கோபுரமும் கட்டிமுடிக்கப் பட்டன. செஞ்சி நாயக்கர்களின் கட்டடக் கலைப்பணி, மதுரை, தஞ்சை நாயக்கர் அரசுகளின் பணிபோன்று புகழத்தக்கதல்ல எனினும், ஓரளவு சிறப்புடைத்தே என சி.எஸ். ஸ்ரீனிவாசாச்சாரி குறிப்பிடுகின்றார்.

தஞ்சை நாயக்கர்களின் கலை, கட்டடக் கலை வளர்ச்சி

மதுரை, செஞ்சி நாயக்க மன்னர்களைப் போன்று தஞ்சை நாயக்கர்களும் கோயில்கள், மண்டபங்கள், கோபுரங்கள், சத்திரங்கள், அக்ரஹாரங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதில் வல்லுநர்களாக இருந்தனர். சமணர் கலை கட்டடக்கலை முறையை ஆதரித்தனர். செவப்பநாயக்கர், தஞ்சையில் மூவலூர் கோயிலுக்கு நிலதானம் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. தஞ்சையில் சிவகங்கைக் குளத்தை பழுதுபார்த்து, அதற்குத் திருப்பணியையும் செவப்பர் செய்தார். சிவகங்கைக் கோட்டையைத் தஞ்சையில் எழுப்பினார். பல கோபுரங்களையும், மண்டபங்களையும், அண்ணாமலை, விருத்தாச்சலம் கோயில் பிரகாரங்களையும் கட்டினார். நாகப்பட்டினத்தில் திருச்சபை அமைக்கக் கிறித்தவர்களுக்கு அச்சுதப்ப நாயக்கர் அனுமதி வழங்கினார். இவரது ஆதரவாலேயே தரங்கம்பாடியில் ஒரு திருச்சபை கட்டும் பணி தொடரப்பட்டது. இவர் ஸ்ரீரங்கநாதருக்கு வைர அரியணை அளித்ததாகவும், இராமேஸ்வரம் கோயிலுக்குக் கொடைகள் வழங்கியதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் ஆலயக் கட்டிடம் இவரது ஆலோசனைப்படியே கட்டிமுடிக்கப்பட்டது. கும்பகோணத்தில் புகழ்பெற்ற மகாமகம்குளம் கோவிந்த தீட்சிதர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது. அச்சுதப்பர், ஸ்ரீதேசத்தில் உள்ள ஒரு கோயிலுக்கு கிராமம் தானம் செய்தார்; மாயூரம், கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய பகுதிகளில் காவிரியின் கரைகளைச் சீரமைத்தார். விஜயராகவ நாயக்கர் இந்து சமயத்தில் தீவிர பற்றுக் கொண்டவராக இருந்தார்; இராமேஸ்வரத்திற்குப் புனிதப் பயணம் செய்தார்.

தஞ்சை நாயக்கர் கால மொழி, இலக்கியம்

தஞ்சை நாயக்கர்கள் தெலுங்கு மொழி, இலக்கியத்தின் காவலர்களாவர். ஆனால் அவர்கள் தமிழ் மொழி, இலக்கியத்தையும் அறிஞர்கள், கவிஞர்களையும் ஆதரிக்கத் தவறவில்லை. விஜயராகவ நாயக்கரால் எழுதப்பட்ட **ரகுநாத பியூதயம்**, அவரது தகப்பனாரின் செயல்திறத்தை விளக்கும் தெலுங்கு இலக்கியமாகும். ராஜசூடாமணி தீட்சிதரால் எழுதப்பட்ட **ஆனந்தராகவ நாடகம்** எனும் நூல் தஞ்சை நாயக்க மன்னர்களின் வம்சாவளிப்பட்டியலை அறிய உதவுகிறது. இரகுநாத நாயக்கர் **பாரிஜாத அபஹரணம்** என்ற நூலை யாத்தார். இவர், **சங்கீத சுதா** என்ற நூலை எழுதிய கோவிந்த தீட்சிதரையும் **பாரிஜாத அபஹரணம்** என்ற நூலை எழுதிய குமாரதட்டாச்சாரியா என்பவரையும் ஆதரித்துப் போற்றினார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாகித்திய **ரத்னகாரம்** என்ற நூலை யக்னநாராயணதீட்சிதர் எழுதினார். தெலுங்கு, சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் வல்லுனரான கோவிந்த தீட்சிதர் திருவையாறு மகாத்மீயம் என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். வேலூரின் லிங்கமநாயக்கரின் சமகாலத்தவரான துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் ஏராளமான தமிழ் நூல்களை இயற்றினார். இவர் வட்டுவ ஆகமங்களைச் சார்ந்த சைவ தத்துவத்தையும், வீரசைவத்தின் பெருமையையும் தத்துவத்தையும் பரப்பினார். இவரது சீடரான நானக்கூத்தர் விருத்தாச்சல புராணத்தை எழுதினார். தஞ்சை மாவட்டத்தில் சூரியனார் கோயில் மடத்தினைச் சேர்ந்த நமசிவாச்சாரியர் சிவஞான போதத்திற்கு உரை எழுதியுள்ளார். தஞ்சை மாவட்டத்தில் உள்ள தர்மபுர ஆதீனம் வேதாந்த சித்தாந்த நூல்களை ஊக்குவித்தது.

தமிழகத்தில் கிறித்தவ சமயப் போதகர்கள்

இயேசு கிருஸ்துவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவரான புனித தாமஸ் முதன்முதலாக மலபார் கடற்கரை வந்தடைந்தார்; ஏராளமான மக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றினார்; அங்கு முதன் முதலாக கிறித்தவ திருச்சபை (சிரியன் திருச்சபை)யைக் கட்டினார்; அதன்பின் தமிழகத்திற்குச்சென்று, மைலாப்பூரில் தங்கிச் சமயப்பிரச்சாரம் செய்தார்; அங்கு இன்றைய பரங்கிமலையில் கொல்லப்பட்டார் என்றெல்லாம் கூறப்படுகிறது. ஆனால் வின்ஸென்ட் சுமித் இது வரலாற்றிற்குப் புறம்பானது என மறுக்கின்றார். பின்னாளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிக் குறிப்பிலிருந்து மேற்கூறிய செய்திகளில் உண்மையிருக்கக்கூடும் எனத் தெரியவருகிறது. இவர் இந்தியாவிற்கு வந்தார் என்பது ஏற்றுக் கொள்ளப்படுமேயானால் அவர் கனிஷ்கர் அல்லது கோண்டோபரஸ் காலத்தில் இந்தியாவிற்கு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டில் இயேசுசபையின் ஆணைமூலம் கிறித்தவ சமயம் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. இயேசு சபையின் ஸ்தாபகரான இக்னேசியஸ் லயோலாவின் சீடரான பிரான்ஸிஸ் சேவியர், இந்தியா, ஜப்பான் நாடுகளுக்குப் பயணம் செய்து இரண்டு இலட்சம் மக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றினார். அவர் தூரக்கிழக்கு நாடுகளில் தமது பயணத்தைத் தொடர்ந்தபோது மரணமடைந்தார். கொல்லம் நகர் அரபிக்கடலால் கொள்ளப்பட்டபொழுது, கிறித்துவ சமயப்போதகர்கள் மீண்டும் அந்நகரை அமைத்து அங்குக் குடியேறினர் எனச் செய்திகள் குறிப்பிடுகின்றன. கொல்லத்தில் ஏற்படுத்தப்பட்ட புதிய குடியேற்றத்தின் ஆரம்பகாலம் கொல்லம் சகாப்தத் (கி.பி. 825)தின் தொடக்கத்திலிருந்து கணக்கிடப்படுகிறது.

இயேசு சபையினர் மலபார், திருவிதாங்கூர், சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளில் அவர்தம் பணியைச் செய்து கொண்டிருந்தனர். எனினும், அவர்களது பணி தமிழகத்தில் மதுரைநாயக்கரான வீரப்ப நாயக்கர் (1572-1595) ஆட்சியில் கி.பி. 1592ஆம் ஆண்டுதான் அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஆண்டில்தான் இயேசு சபையினரின் மதுரைமடாலயம் (Madura-Mission) முதன் முதலில் துவக்கப்பட்டது. இதன் தலைவராக போர்ச்சுக்கல்லைச் சேர்ந்த பெர்ணாண்டஸ் எனும் சமயப் போதகர் இருந்தார். இவர்கள் மிகச்சாதுரியமாக வீரப்பநாயக்கரையும், அவரது வாரிசையும் அணுகி மதுரையில், 1610இல், திருச்சபை ஒன்று கட்டவும், திரளான மக்களுக்குப் போதனை செய்யவும் அனுமதி பெற்றனர். அவர்கள் தங்களது சமயப் பிரச்சாரத்தைப் பதினான்கு ஆண்டுகள் தொடர்ந்து செய்தனர். உயர் இன இந்துக்களைக் கிறித்தவசமயத்திற்கு மாற்றுவதற்கு இயேசு சபையினர் செய்த முயற்சி எதிர்ப்பிலும், தோல்வியிலும் முடிந்தது. பெர்ணாண்டஸின் தலைமையிலான போர்த்துக்கீசிய சமயப் போதகர்கள் தமிழக மக்களால் "பரங்கியர்" என அழைக்கப்பட்டனர். பெர்ணாண்டஸ் புதிய முறைகளைக் கையாளத் தவறினர் எனக் கூறப்படுகிறது. இதனால், மக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றும் முயற்சி தோல்வியுற்றது. பெர்ணாண்டஸின் இந்தத் தோல்வி, அவரது பின்னால் வந்தவர்களுக்கு வெற்றியாக முடிந்தது. இவ்வாறு நாயக்க மன்னர்கள் கிறித்தவ சமயப்போதகர்களுக்கு ஆதரவு தெரிவித்த செய்தி உலகெங்கும் பரவியது; தமிழக ஆட்சியாளர்களின் பரந்த மனப்போக்கும், சமயப்பொறையும் உலகெங்கும் பரவியது.

இயேசு சபையின் மற்றொரு தலைவரான ராபர்ட்—டி—நொபிலி இத்தாலியிலிருந்து கி.பி. 1606இல் மதுரை வந்தார். ஏற்கனவே பல கிறித்தவ சமயப் போதகர்கள் தங்கள் முயற்சியில் தோல்வியுற்றதை அறிந்த இவர் இந்துக்களை அணுகுவதிலும், அவர்களை மதமாற்றம் செய்வதிலும் புதிய முறைகளைக் கையாண்டார், மாட்டிறைச்சி உண்ணுதலை விடுத்தார்; இந்து சந்நியாசி போன்று உடை அணிந்தார்; திருநீறு பூசினார், பூணூல் அணிந்தார்; மொத்தத்தில் ஒரு இந்து பிராமணர் போல் தோற்றமளித்தார். பெர்ணாண்டஸ், இவரை, "ரோமன் பிராமணன்" என அழைத்தபோது, இவர் அதனை, மனமுவந்து ஏற்றுக்கொண்டார். இவ்வாறு கிறித்தவ சமயத்தின் சில கோட்பாடுகளைத் தானே மாற்றிக்கொண்டு இந்துக்களை மதமாற்றம் செய்வதில் அதிகக் கவனம் செலுத்தினார். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளைப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டார். இந்து நூல்களைக் கற்று அவற்றிலிருந்த குறைகளை நீக்கினார். இவரது தைரியமான பேச்சும், இவரது திறமையான விவாதமும் உயர் இன இந்துக்களைக்கூட சமய மாற்றம் செய்தது. இவ்வாறு தம் முயற்சியில் வெற்றி பெற்ற இவர், முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரின் ஆதரவையும், நன்மதிப்பையும் பெற்றார்.

ஆனால் இந்தச் சமயப்பொறை முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் குறையத் தொடங்கிற்று. முத்துவீரப்பர் பெரும்பான்மையான மக்கள் கிறித்தவ சமயத்திற்கு மாற்றப்படுவதைத் தடை செய்ய முயன்றார். ஆனால், அவர் முழுவதுமாக கிறித்தவ சமயம் பரப்பப்படாமல் நிறுத்தவில்லை. அதே நேரத்தில் பெர்ணாண்டஸுக்கும், ராபர்ட் டிநொபிலிக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. பெர்ணாண்டஸ், ராபர்ட் டிநொபிலியின் கொள்கைகளைக் கண்டித்ததோடு மட்டுமன்றி மேலதிகாரிகளிடம் கண்ணனூரிலும் மலபாரிலும், ரோம் நகரிலும் முறையிட்டார். இதன் காரணமாக

நொபிலி தனது பணியைத் தொடர்ந்து நடத்தாது தாய்நாடு திரும்புமாறு ஆணையிடப் பட்டார். தாய்நாடு திரும்பிய அவர், பத்து ஆண்டுகள் கழித்து தீவிரக் கொள்கை களுடனும், ஆர்வத்துடனும் மதுரை வந்தடைந்தார். கி.பி. 1622இல் இவரது எண்ணப் படியே பணிகளைத் தொடரும்படி இவருக்கு ரோம நகர போப்பாண்டவரின் ஆணை கொடுக்கப்பட்டது. இவ்வாறு கிறித்தவ சமயப் போதகர்களிடையே தொடர்ந்து நடந்த கருத்துப் போராட்டங்கள் தமிழகத்தில், அவர்களது வளர்ச்சியைக் குறைத்தன.

மதுரையில் எதிர்ப்புகள் கிளம்பவே நொபிலி தமது இரண்டாவது மையமாகத் திருச்சியை மாற்றிக்கொண்டார். பின்னால், சமயப் பிரச்சாரத்திற்குத் திருச்சியை உகந்த இடமல்ல என்று அறிந்தவுடன் கி.பி. 1623இல் சேந்தமங்கலத்துக்குச் சென்றார். அப்பொழுது சேந்தமங்கலத்தின் மதுரை ஆட்சியாளராக இராமச்சந்திர நாயக்கர் இருந்தார். சில ஆண்டுகள் சேந்தமங்கலத்தில் தனது பணியைத் தொடர்ந்த நொபிலி பின் சேலத்திற்குச் சென்றார். அன்றைய சேலத்தின் மதுரை ஆளுநர் தளபதி நாயக்கர் நொபிலியை மரியாதையுடன் நடத்தினார்; நாயக்கரின் சகோதரர் நொபிலியின் சீடரானார்.

மதுரையில், விகோ அடிகளார் நோய்வாய்ப்பட்டபோது, நொபிலியை மதுரைக்கு வருமாறு அவரது மேலதிகாரிகள் ஆணையிட்டனர். சேலத்தில் தனது பணியைத் தொடர்ந்து செய்யுமாறு மார்ட்டின்ஸ் அடிகளாரை அமர்த்திவிட்டு கி.பி. 1627இல் நொபிலி மதுரை திரும்பினார். கி.பி. 1627 முதல் 1637 வரையிலான ஆண்டுகளில் சமயக் கொலைகள் திருச்சியில் ஏராளமாக நடந்தன. நொபிலிமட்டும் தப்பிவிடவில்லை. அவர் கி.பி. 1627இல் திருச்சி நாயக்கரால் கைது செய்யப்பட்டார். இச்செயல் பெரும் பாலும் மைசூர் திருவிதாங்கூர், தளவாய் சேதுபதி ஆகியோருடன் திருமலை நாயக்கர் போர் செய்து கொண்டிருந்ததால் நடந்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. நொபிலி, 1638இல் கொச்சியிலிருந்து திரும்பும் போது மதுரையில் இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டார். திருமலை நாயக்கர், சேதுபதிகளுக்கெதிரான தனது போரின் போது, போர்த்துக்கீசியருடன் இராணுவ உடன்பாடு செய்து கொண்டார். இந்த உடன் பாட்டுக்கு ஈடாக போர்த்துக்கீசியர்கள் தங்களது சமயத்தைப் பரப்ப அனுமதிக்கப் பட்டனர்.

கி.பி. 1644இல் மீண்டும் சமயக்கொலைகள் மதுரை நாயக்கர் அரசில் தொடர்ந்தன. கிறித்தவ சமயப் போதகர்களின் பணி சிதறடிக்கப்பட்டது. அதே நேரத்தில் மதுரை நாயக்கரை நொபிலி சந்தித்து, கைப்பற்றப்பட்ட இயேசு சபையின் சொத்துக்களைத் திரும்பப் பெற்றார்; சமயப் பொறை மீண்டும் கடைப்பிடிக்கப்பட்டது.

சமயப் போதனையில், தளராது ஈடுபட்டபொழுது நோய்வாய்ப்பட்டார். ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். பின் சென்னை மைலாப்பூர் திரும்பினார். ராபர்ட்—டி—நொபிலி சுமார் 36 ஆண்டுகள் (கி.பி. 1610 முதல் 1646 வரை) ஏராளமான இந்துக்களை மதமாற்றம் செய்து தனது எழுபத்து ஒன்பதாம் வயதில் கி.பி. 1660இல் சென்னை மைலாப்பூரில் காலமானார்.

இவரது சமகால இயேசு சபையின் உறுப்பினரான பெர்ணாண்டஸ் அடிகளார் இவரைக் கடுமையாகக் கண்டனம் செய்தார். நொபிலி உயர் இன இந்துக்களை மட்டுமே சமயமாற்றம் செய்வதில் ஈடுபட்டார்; கிறித்தவர்களின் உதவியையும், அவர்தம் பாதுகாப்பையும் நாடிய ஏழை, கீழ்இனத் தமிழ் மக்களைப்பற்றி அவர் அக்கறை காட்டவில்லை என ஏளனம் செய்தார். நொபிலியின் சமயம் பாகனிஸக் கொள்கையும் கிறித்தவசமயமும் கலந்த ஒன்று என பெர்ணாண்டஸ் அடிகளார் குறை கூறினார். ஆனால் நொபிலியோ தனது கொள்கையைத் தொடர்ந்து செயலாற்றலானார். இந்தியர்களைக் காப்பதற்குத் தானே இந்தியனாகச் செயல்படத் தயாராயிருப்பதாகக் கூறினார். நெருக்கடியான நேரத்திலும், அவர் மதுரை நாயக்கர் அல்லது அவரது திருச்சி ஆளுநர் அல்லது எருமைக்கட்டி பாளையக்காரரைச் சந்தித்து அவருக்கெதிரான செயல்களை நீக்கினார். நொபிலி பிரச்சினைகளையும் எதிர்ப்புக்களையும் மிகச் சாதுரியமான முறையில் அணுகி அதற்கு வேண்டிய வழிமுறைகளையும் தேடினார். மதுரையில் நொபிலி அடைந்த துன்பத்தைப் போன்று, பிரிட்டோ அடிகளாரைத் தவிர, வேறு எந்த சமயப் போதகருமே இன்னல்களை அனுபவித்தது இல்லை. எனினும் அவரது செயல்களும், கொள்கைகளும் செயற்கையானவை; கவர்ச்சியற்றவையாயிருந்தன; ஆனால் இரக்கமானவையாகவும் இருந்தன. சத்தியநாதய்யர், 'இவரது பரிசோதனைகள் மதுரையில் தோல்வியடைந்தன. எனவே அவர் தன் கவனத்தை வடக்கே செலுத்த முற்பட்டார்' எனக் குறிப்பிடுகின்றார். இவர்தம் சமகாலத்தவர்கள் இவரது கொள்கைகளை எந்த அளவிற்கு விமரிசனம் செய்தாலும், இவரது சமயப்பணி, இந்தியாவில் கிறித்தவ சமய வரலாற்றில் சிறப்புமிக்க அத்தியாயமாக அமைந்திருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

தனது பணியைத் தொடர முடியாத நிலையிலிருந்த போது, நொபிலி புதிய நூல்களை எழுதுவதிலும் ஆங்கில நூல்களைப் பிராந்திய மொழியில் மொழி பெயர்ப்பதிலும் ஈடுபட்டார். அதே போல் பிராந்திய மொழி நூல்களை அயல்நாட்டு மொழிகளில் பெயர்த்து எழுதினார். நொபிலி மைலாப்பூர் சென்ற பிறகு அவரது பணியை, மதுரையில் மார்ட்டின்ஸ் தொடர்ந்து செய்தார். கி.பி. 1653ஆம் ஆண்டில் டிகாஸ்டோ என்பவர் எழுதிய கடிதம் சந்தெலூர் (Candelour) என்ற இடத்தில் கட்டப்பட்ட திருச்சபை பற்றிக் குறிப்பிடுகிறது. தற்காலிகமாக கடற்கரைப் பகுதிகளில் அமைதி ஏற்படுத்தப்பட்டது. கி.பி. 1653இல் மதுரை நாயக்கர் அரசில் மீண்டும் சமயக் கொலைகள் தொடர்ந்தன; ஏராளமான கிறித்தவர்கள் கொல்லப்பட்டனர். ஆல்வரஸ் அடிகளார் திருச்சியில் நாயக்க மன்னரைச் சந்தித்து இம்மாதிரியான சமயக் கொலைகளைத் தடுக்குமாறு வேண்டினார். திருமலை நாயக்கர், கிறித்தவத் துறவிகளின் எதிரிகளைத் தண்டிக்க ஆணையிட்டார். அதிர்ச்சியுற்ற இந்துக்கள் கொலை செய்வதை நிறுத்தினர். ஆனால் ஆல்வரஸ் அடிகளார் கைது செய்யப்பட்டு பின் நாயக்க மன்னரின் தலையீட்டால் விடுதலை செய்யப்பட்டார். இந்த நெருக்கடியான நேரத்தில் டிகாஸ்டோ, தானே மதுரை நாயக்கரைச் சந்தித்து, சலுகைகள் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்; அதன்படி ஆணைகளும் பெற்றார். அதன்பின் திருமலை நாயக்கர் கிறித்தவர்கள் மீது இரக்கம் கொண்டார். அத்தோடு மனசாட்சிப்படியான சமய சுதந்திரக் கொள்கையையும் ஏற்றுக்கொண்டார். திருமலை நாயக்கரே கிறித்தவ சமயத்தில் சேர்ந்தார் எனவும் கதை கூறப்படுகிறது. ஆனால் இதில் எந்த அளவு உண்மை உள்ளது என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். சுமார் முப்பத்தி ஓர்

ஆண்டுகள் மதுரை கிறித்தவ மடாலயத்தில் பணிபுரிந்த மார்ட்டின்ஸ் அடிகளார் கி.பி. 1656இல் இறந்தார். ராபர்ட்—டி—நொபிலி செடியை நட்டார் மார்ட்டின்ஸ் அதற்கு நீர் ஊற்றி வளர்த்தார் எனக் கூறப்படுகிறது.

பல தொல்லைகளையும், இன்னல்களையும் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குக் கிறித்தவ சமயத்துறவிகள் தள்ளப்பட்டனர். ஒருபக்கம் பஞ்சம், பட்டினி மறுபக்கம் முகமதியர்கள், கள்ளர்கள் செய்த கொள்ளையடிப்புத் தொழில் போன்றவை கிறித்தவ சமயத்துறவிகளை தங்கள் பணியைத் திருச்சிக்கும், சத்தியமங்கலத்திற்கும் மாற்றும்படிச் செய்தன. ஆண்ட்ரிஃபிரேரா திருச்சியில் தன் பணியைத் தொடர்ந்தார். ஆல்வரஸ் அடிகளார் கங்குவார்பட்டிக்குச் சென்று அங்குத் தம் பணியினைத் தொடர்ந்தார்; கங்குவார்பட்டியில் திருச்சபை ஒன்றினைக் கட்டினார்; நாயக்க மன்னருடனும், பிராமணருடனும் சமய ஆலோசனையை நடத்தினார்; ஊர் மக்களுக்கும், சமயப் போதகர்களுக்குமிடையே இருந்து வந்த பிரச்சினைகளைத் தீர்த்தார். கி.பி. 1665இல் திருச்சியின் அடையப்ப நாயக்கர் கிறித்தவ சமயத்தை ஆதரித்தார். கி.பி. 1666ஆம் ஆண்டு எழுதப்பட்ட கடிதம் ஒன்று மறவர் தலைவர் ஒருவர் சமய மாற்றம் செய்யப்பட்டதாகக் கூறுகிறது. மதுரை நாயக்கர் அரசில் நிலவி வந்த அரசியல் நிலைமை சமயப்பிரச்சார வளர்ச்சிக்கு வழிசெய்தது, இதற்கு மாறாக, தஞ்சையிலும் மறவர் நாட்டிலும் ஏராளமான இரத்தம் சிந்தப்பட்டது; சமயக் கொலைகள் செய்யப்பட்டன. சுமார் பதினேழு ஆண்டுகள் வரை கிறித்தவ சமயத்துறவிகள் தங்கள் பிரச்சாரத்தை மறவர் நாட்டில் தொடரவில்லை.

மதுரை கிறித்தவ மடாலயத்தின் மற்றொரு துறவி ஜான் டி பிரிட்டோ எனும் போர்த்துக்கீசிய பெருமகனாவார். இவர் கி.பி. 1662இல் இயேசு சங்கத்தில் சேர்ந்தார்; கி.பி. 1673இல் சமயப் பிரசாரத்திற்காக கோவா வந்தடைந்தார். சில ஆண்டுகள் அங்குப் பிரச்சாரம் செய்து விட்டு 1680இல் ஃபிரேரா அடிகளாரின் துணையுடன் மதுரை வந்தடைந்தார். கிறித்தவ சமயத்திற்கு அவர் செய்த அப்பழுக்கற்ற தொண்டின் காரணமாக பிரிட்டோ மதுரை கிறித்தவ மடாலயத்தின் தலைவரானார். இவர் மறவர் நாட்டையே தமது பிரச்சாரமையமாக எடுத்துக் கொண்டு, தீரமுடன் செயல்படத் தொடங்கினார். முதன் முதலில் வடுகபட்டிக்குச் சென்று லிங்கரெட்டி எனும் அக்கிராமத் தலைவரைச் சந்தித்தார். லிங்கரெட்டி, பிரிட்டோவின் சமயப்பணியைத் தொடரும்படி அனுமதி வழங்கினார். ஆனால் திடீரென்று, தனது ஆசிரியரின் ஆலோசனையைக் கேட்டு லிங்கரெட்டி, தனது உறுதிமொழியை உடைத்தெறிந்ததோடல்லாது, தனது பகுதியில் இருந்த கிறித்தவர்களின் எண்ணிக்கையைக் குறித்துத் தரும்படி ஆணையிட்டார். பின்னால், இதனால் வரும் இன்னல்களை உணர்ந்த லிங்கரெட்டி கிறித்தவர்களை அமைதியாக வாழ அனுமதித்தார்.

இதற்கு மாறாக, ஒருநாள் பிரிட்டோவும் அவரது சமயப் பரப்பாளரும் மறவர் நாட்டில், மங்களம் என்ற கிராமத்தைக் கடந்து சென்றபோது இராமநாதபுரம் சமஸ்தான தலைமை அமைச்சரின் ஆணைப்படி கைது செய்யப்பட்டனர்; சிவலிங்கத்தை வணங்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆனால் அவ்வாறு வணங்க அவர்கள் மறுத்த

போது அவர்கள் மறவர் நாட்டிலிருந்து வெளியேறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். எந்தவித வெற்றியுமில்லாது பிரிட்டோ மறவர் நாட்டை விட்டு வெளியேறி 1688இல் போர்ச்சுக்கல்லுக்குச் சென்றார்.

திருச்சியில், நோய் காரணமாகவும், அரசியல் பிரச்சினைகள் காரணமாகவும் கிறித்தவர்கள் தொல்லைப்பட்டனர். அதனால் அவர்கள் தங்களைக் காத்துக் கொள்வ தற்காக அங்கிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. அங்கு அமைதி ஏற்படுத்தப்பட்ட பின்பு மீண்டும் அவர்கள் திருச்சிக்கு வந்தனர். அவர்கள் திரும்பிய போது, அவர்தம் சொத்துக்கள் பறிக்கப்பட்டதையும் திருச்சபைகளின் இடங்களில் கோயில்கள் கட்டப்பட்டதையும் அறிந்தனர். இதனை நாயக்க மன்னரிடம் கூட்டாகச் சென்று முறையிட்டனர். நீதிவழங்குமாறுகேட்டனர். பரந்த எண்ணம் கொண்ட மன்னர் கிறித்தவர்களின் சொத்துக்களைத் திருப்பிக் கொடுக்குமாறு ஆணையிட்டார். இவ்வாறு மன்னர்களின் நல்லெண்ணமும், தமிழ்மண்ணின் நீதியும் உலகெங்கும் பரவலாயிற்று.

போர்ச்சுக்கல்லிலிருந்து திரும்பி வந்த பிரிட்டோ மறுபடியும் தனது சமயப்பணியின் மையமாக மறவர்நாட்டையே தேர்ந்தெடுத்தார். எதிர்ப்புகள் பெருகியும், பிரிட்டோ, ஏராளமான இந்துக்களை மதமாற்றமடையச் செய்தார். கிறித்தவ சமயக் கொள்கைகளின் மீது பற்றுக்கொண்ட தடியத்தேவர் என்பவரும் மதம் மாறினார். இதனால் கோபமடைந்த சேதுபதி மன்னர் மறவர் பகுதியில் கட்டப்பட்ட எல்லாத் திருச்சபைகளையும் இடித்துத் தள்ளவும், பிரிட்டோவைக் கைது செய்யவும் ஆணையிட்டார். கி.பி. 1693இல் பிரிட்டோ சிறைப்படுத்தப்பட்டார். அதன்பின் ஓரியூருக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஓரியூரின் அமைச்சரான முருகப்பிள்ளை ஆலோசனைப்படி அங்குக் கொல்லப்பட்டார். அவரது இறந்த உடல் பல கூறுகளாக்கப்பட்டுத் தூக்கி எறியப்பட்டது. பெர்ணாண்டோ அடிகளார் கொடுமையாகத் தாக்கப்பட்டுப் பற்களை இழக்க வேண்டியதாயிற்று; அவர் பின் வந்தவர்களும் தாக்கப்பட்டனர்.

தஞ்சையிலும் கிறித்தவர்கள் இதேபோல் தொல்லைப்படுத்தப்பட்டனர். தஞ்சையின் ஆட்சியாளர், மதுரையின் அரசி மங்கம்மாளுக்கும், உடையார்பாளையம் தலைவருக்கும் எழுதிய கடிதத்தில் ஆங்காங்கு உள்ள கிறித்தவர்களை வெளியேற்றுமாறு கேட்குக் கொண்டார். கி.பி. 1691இல் இராமநாதபுரம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த மெல்லோ அடிகளாரை விடுதலை செய்ய அரசி மங்கம்மாள் உதவினார். இந்த நெருக்கடியான நேரத்தில், தன்னைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்த போதும், புச்சார்டு அடிகளார் கிறித்தவ சமயத்தவரைக் காக்கப் பாடுபட்டார். இவ்வித இன்னல்களுக் கிடையேயும் மதுரையில் கிறித்தவ சமயப்பணி மிக அமைதியாகத் தொடர்ந்தது.

நாகப்பட்டினம், சாந்தோம், தரங்கம்பாடி, பாண்டிச்சேரி, தஞ்சை நாயக்கர் அரசின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் கிறித்தவ சமயமடங்கள் (இயேசுசபையும் பிராடஸ்டண்டும்) அமைக்கப்பட்டிருந்தாலும், இயேசு சபையினர் ஏராளமான மக்களை மதமாற்றம் செய்ததாகக் குறிப்பிடவில்லை. தரங்கம்பாடியில் அமைக்கப்பட்ட பிராடஸ்டண்டு சபை (ஜெர்மன், டேனிஸ்) மிகத் திறமையாகச் செயல்பட்டது. இயேசு சபையைச் சேர்ந்த பிமண்டா அடிகளார், ஜார்ரி அடிகளார், கோடின்கூ அடிகளார்

ஆகியோர் தஞ்சை செஞ்சி நகரங்களையும், முக்கிய சைவ சமயச் சிறப்புமிக்க நகரங்களான சிதம்பரம், கும்பகோணம் பகுதிகளையும் பார்வையிட்டனர். இவர்களுக்குத் தரங்கம்பாடி சாந்தோம், மைலாப்பூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் திருச்சபை அமைக்கவும், குடியிருப்பு இல்லங்கள் அமைக்கவும் அனுமதி வழங்கப்பட்டபோதும் அவர்கள் டச்சுக்காரர்கள் போர்த்துக்கீசியர்கள் டேனியர்கள் ஆகியோருக்கிடையே தஞ்சையில் நடந்த அரசியல் சிக்கல்களால் ஒடுக்கப்பட்டனர். டென்மார்க் மன்னர் நான்காம் பிரடெரிக்கின் ஆணைகளின்படி பிராடஸ்டண்டு மடம் ஆரம்பிக்கப்பட்டது. தரங்கம்பாடியில் (ரகுநாதநாயக்கர் கி.பி. 1620இல் டேனியர்களை தரங்கம்பாடியில் குடியேற்றம் ஏற்படுத்த அனுமதித்திருப்பினும்) ஜெர்மானிய சமயப் போதகர்கள் தங்கள் சமயப் பிரசாரத்தைக் கி.பி. 1706இல் தொடங்கினர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜீகன்பால்க் என்பவராவர். இவர் தமிழ்மொழியை நன்கு கற்று, மேற்கத்திய கொள்கைகளை மக்களுக்குப் புரியும்படி அச்சுப்பதிப்புகளை ஏற்படுத்தினார். ஜெர்மனியைச் சேர்ந்தவரும் திருச்சி கிறித்தவ சமய மடத்தை ஏற்படுத்தியவருமான பிரடெரிக் ஸ்வாட்ஸ், தரங்கம்பாடியில் சுமார் பதினோரு ஆண்டுகள் சமயப் பணிபுரிந்தார். இரண்டாம் சர்போஜியின் ஆதரவையும் பெற்றார்.

கிறித்தவ சமயப் போதகர்களின் சாதனைகள் பற்றிய மதிப்பீடு

ஏராளமான இன்னல்கள், தொல்லைகள், சமயக்கொலைகள், கைது செய்யப்படல், கேவலமான அரசியல் நிலைகள் ஆகியவற்றிற்கிடையே கிறித்துவ சமயப் போதகர்கள் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான உயர் இன இந்துக்களைக் கிறித்த சமயத்திற்கு மாற்றினர். கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த பரதவர்கள் அனைவரும் கிறித்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர். அவர்கள் போர்ச்சுக்கல் அரசருக்கு ஆதரவு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். சேந்தமங்கலம், சேலம், திருச்சி, நாகப்பட்டினம் தூத்துக்குடி பகுதி களில் ஓரளவு மக்கள் சமயமாற்றம் செய்யப்பட்டனர். தரங்கம்பாடியில் பிராடஸ்டண்டு சமயபோதகர்கள், ஏராளமான மக்களைத் தமது சமயத்தில் சேர்த்தனர். சமய மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு இலவசமாக இறையியல், வரலாறு போன்றவை கற்பிக்கப் பட்டன; இலவசமாக உணவு, உடை, இருப்பிடங்கள், பாதுகாப்பு முதலியன கொடுக்கப் பட்டன.

இயேசு சபையினரும், பிராடஸ்டண்டு சமயத்தவரும் கடிதங்கள் மூலமாக தமிழகத்தின் சமுதாய, பொருளாதார, அரசியல், சமயநிலைகளைப்பற்றி எடுத்தியம்பி யுள்ளனர். அவர்களது கருத்துக்கள் நோக்கங்கள் ஒருமுகமானதாக சிக்கலானதாக, முரண்பாடானவைகளாகச் சில சமயங்களில் இருப்பினும் தமிழக வரலாற்றைச் சிறப்புற அமைப்பதற்குப் பெரிதும் உதவுகின்றன என்பது தெளிவு. ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர்கள் கிறித்தவர்களுக்கு ஆதரவு தெரிவித்து, அவர்களது பணியைத் தொடர விட்டபோது அவர்களை மிகைப்படுத்திப் புகழ்ந்தும், சிலமன்னர்கள் கிறித்தவர்களுக்கு இன்னல்கள் கொடுத்தபோது அவர்களைத் தாழ்த்தியும், கண்டித்தும் தங்களது கடிதங்களில் எழுதினர். லோக்மான் என்பவர் (Travels of Jesuits) தனது நூலில், அரசரது குழு பிராமண உறுப்பினர்களைக் கொண்டிருந்தது; அவர்கள் கிறித்தவர்களைத் தண்டிக்கும்படி அரசரைத் தூண்டினர் எனக் குறிப்பிடுகின்றார்.

சமயப்போதகர்கள் கல்வி வளர்ச்சிக்கும் வித்திட்டனர். தமிழகத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலினர் அச்சு இயந்திரத்தை தமிழகத்தில் முதன் முதலாக புன்னக் காயல் என்ற இடத்தில் அமைத்த பெருமை போர்த்துக்கீசிய சமயப் போதகர்களையே சேரும். பின்னால் ஜெர்மனியைச் சேர்ந்த ஜுகன்பாலக் தரங்கம்பாடியில் அச்சு இயந்திரத்தை ஏற்படுத்தி ஏராளமான புத்தகங்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள் ஆகியவற்றை வெளிநாட்டுமொழி, மாநில மொழிகளில் குறைந்த செலவில் அச்சிட்டு வெளியிட்டார். இம்முறை மாநில மொழிகளின் செல்வாக்கைப் பெருக்கியது. ஏழைகளுக்கும் பணம் படைத்தோருக்கும் வேறுபாடு காட்டாது கல்வி கற்பிக்க வழி செய்தது. சமயத்துறவிகள் மாநில மொழிகளைக் கற்று விவிலியநூல் போன்ற சமய நூல்களை அம்மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். இதனால், இலக்கிய அறிவு பெருகியது. சலுகைகள் பெறாத தாழ்த்தப்பட்ட இனத்தவரிடையே புகுத்தப்பட்ட இக்கல்வி சமுதாயத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியது. மக்கள் பலர் தங்கள் மூடப்பழக்க வழக்கங்களைக் கைவிட்டனர். சமுதாய மாற்றங்கள் கூட்டு அல்லது கலப்பு நாகரிக முறையை ஏற்படுத்தின மேற்கத்திய நாகரிகமுறை தமிழகப் பண்பாட்டில் கலந்தது. பல திருச்சபைகளையும், பள்ளிகளையும் கட்டிய காரணத்தினால் சமயப்பிரச்சாரங்கள், பண்பாடு விரிவாக்கமாகவும் அமைந்தன. அவர்கள் கலை, கட்டிடக்கலை ஆகியவற்றில் புதிய ஐரோப்பிய பாணியைப் புகுத்தினர். தொடக்ககாலத்தில் கட்டப்பட்ட, மதுரை தரங்கம்பாடி, நாகப்பட்டினம் சாந்தோம், திருச்சபைகள் தூய்மையான ஐரோப்பிய கட்டடக்கலையை நினைவூட்டுகின்றன.

தமிழகத்தில் ஆழப்பதிந்திருந்த மூடப்பழக்கங்களையும் கிறித்தவ சமயப் போதகர்கள் கடுமையாகத் தாக்கினர்; கண்டனம் செய்தனர். கோயில்களில் தேவதாசிகளை வைத்திருந்த முறையைக் கண்டித்துப் பிரச்சாரம் செய்தனர். விகோ, மதுரை கோயிலில் சேவை செய்து வந்த நாட்டியப் பெண்கள் இறைவனால் கேவலமாகப் படைக்கப்பட்ட உயிர்களைப் போன்றவர்கள் எனக் கண்டித்து எழுதியுள்ளார். இதே ஆசிரியர், கி.பி. 1620இல், இந்துக்கள் புனிதத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள், ஆனால் அதனைச் செயல்படுத்தத் தவறினர் எனக் கூறியுள்ளார். புனிதத்தன்மை, இந்தியர்களால், செயல்படுத்தப்பட்டதைவிட அதிகமாக மதிக்கப்பட்டது என்பது அவர்தம் கருத்தாகும். அரசர்கள் அந்தப்புரங்களை வைத்துக்கொள்வதையும் கண்டனம் செய்து வந்தனர். பொதுவாக ஒரு மன்னர் இறந்துவிட்டால் ஏராளமான பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்து வந்தது. இதனைக் கிறித்தவ சமயப் போதகர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

தமிழகத்தில் பல மனைவியரை மணக்கும் பழக்கமும், பல கணவரை மணக்கும் வழக்கமும் இருந்து வந்தது என்பது பற்றிக் கிறித்தவர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். 1620இல், விகோ, பலதாரமணத்தைக்கைவிட்டு ஒரு தாரத்தையே வைத்துக் கொள்ள வேண்டும் என்று மரபு கூறுகிறது. ஆனால் அதனைக் கண்டிப்பாக எவரும் செயல்படுத்தவில்லை. ஏராளமான நகரங்களில் விபச்சாரம் நடைபெற்றது எனக் குறிப்பிடுகின்றார். மற்றொரு கடிதம், சோழ மண்டலக் கடற்கரையில் வாழ்ந்த மக்களில் பலர் தமது மனைவியர் மூலம் ஒரு சில குழந்தைகளையும் தங்களது ஆசைநாயகிகள் மூலம் சில சமயங்களில் பதினாறு அல்லது பதினெட்டுக் குழந்தைகளையும் பெற்றனர் எனக் குறிப்பிடுகிறது. விவிலிய நூற்கருத்துக்கள், தமிழகத்தில், சமுதாயச் சீரமைப்புக்கு உதவின.

பல கடவுளரை வணங்கும் முறை கண்டிக்கப்பட்டது. ஐரோப்பியர்கள் ஒரே கடவுளை வணங்குவதில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்ததால், தமிழ் மக்களையும் ஒரே கடவுளை வணங்கத் தூண்டினர். தேவையற்ற இந்த சமயத்தலையீடு அவர்களுக்கு இன்னல்கள் விளைவித்தன. இவ்வாறு இந்து சமயத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று அவர்கள் செய்த செயல்களினால், அவர்கள் கைது, கொலை போன்ற கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

கிறித்தவ சமயப் போதகர்கள் தமிழகத்தில் இருந்து வந்த சாதிமுறையைக் கண்டனம் செய்தனர். இந்து சமுதாயத்திலிருந்த வர்ணாஸ்ரமத்தை விளக்கும் "சாதி" (caste) என்ற வார்த்தையை முதன்முதலாக உபயோகித்தவர்கள் போர்த்துக்கீசியர்களே யாவர். சமயப்போதகர்களின் எழுத்துக்களிலிருந்து, நாயக்க மன்னர்கள் சாதி முறையைத் தீவிரமாகக் கடைபிடித்து வந்தனர் என்பது தெரிய வருகிறது. நாயக்கர்கள், பிராமணர்களை அதிக அளவில் மதித்த அதே வேளையில் தாழ்த்தப்பட்ட இன மக்களைப் பற்றிச் சிந்திக்கத் தவறினர். தங்களால் இயன்ற அளவு இனவேறுபாடுகளைக் களைய கிறித்தவ சமயத் துறவிகள் முயன்றனர்.

இந்த சமயத் துறவிகள் நாளடைவில் அரசியலுக்கு அப்பாற்பட்ட தங்களது சமயச் சுதந்திரத்தைப் பெற்றனர். அவர்தம் சமயம் உலகத்தின் பல பகுதிகளிலும் அங்கீகாரம் பெற்றது. தங்களது உயிரையும், உடைமைகளையும் பணயம் வைத்துத் தங்களது சமயத்தைப் பரப்பியதோடு மட்டுமின்றி பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் பாடுபட்டனர். ராபர்ட் டி நொபிலி, மார்டின்ஸ், ஆல்வரஸ், பெர்ணாண்டஸ், ஜான் டிபிரிட்டோ போன்ற இயேசு சபையின் போதகர்களும், ஆசிரியர்களும் விவிலிய நூலின் பேரில், தொடக்க காலத்தில் தம்வாழ்வைத் தியாகம் செய்தனர்.

பயிற்சி வினாக்கள்

1) தமிழகப் பண்பாட்டு வளர்ச்சிக்கு நாயக்க மன்னர்கள் செய்த தொண்டினை விவரிக்க.

2) கலை, கட்டடக்கலை வளர்ச்சிக்கு மதுரை நாயக்கர்கள் ஆற்றிய பணிகளை விளக்குக.

3) தமிழகத்தில் கிறித்தவ சமயத்தைப் பரப்ப, இயேசு சபையினர், எடுத்துக்கொண்ட பல்வேறுபட்ட முயற்சிகளை விளக்குக. தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு அவர்கள் புரிந்த சாதனைகளை விளக்குக.

பாடம் – 17 தமிழகத்தில் பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் – மொகலாயர்கள்

தமிழகத்தில் பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள்

பாமினி சுல்தான்களின் முதல் தமிழகப் படையெடுப்பு ஏறக்குறைய கி.பி. 1481ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இப்படையெடுப்பை நடத்தியவர் பாமினிப் பேரரசின் புகழ் பெற்ற முகம்மது கவான் (Muhammed Gawan). இப்படையெடுப்பு காஞ்சி வரை முன்னேறி வந்தது. அப்போது காஞ்சி நரசிம்மரால் (Narasimha) ஆளப்பட்டு வந்தது. அவர் பாமினி சுல்தானுக்கு பணம், நகை, யானைகள் என்ற வகையில் பெரும் பரிசுகளை அனுப்பி வைத்தார். காஞ்சி பாமினிகளின் கைக்குச் சென்றது. பாமினிப் படைகள் சென்ற தென்னகத்தின் எல்லையாக காஞ்சி விளங்கிற்று. ஆனால் இழந்த பகுதிகளைப் பேரரசர் கிருட்ணதேவராயர் கைப்பற்றிக் கொண்டார். கிருட்ணதேவராயர் ஆட்சியின்போது விஜயநகரப் பேரரசு குமரிக் கடல்வரை பரவியிருந்தது. அது போன்று அச்சுதராயரின் ஆளுகையின்போது தமிழகம் முழுவதும் அவருக்கு அடங்கிக் கிடந்தது. ஆனால் சதாசிவராயரின் காலத்தில் பெரும் தலைக்கோட்டைப் போர் (Battle of Talikota 1565) நிகழ்ந்தது. சுல்தான்கள் விஜயநகருக்குள் புகுந்து அதனை அழிக்கத் தொடங்கினர். அரவீடு வமிசத்தார் தம் தலைநகரை முதலில் பேணுகொண்டாவுக்கும், பின் சந்திரகிரிக்கும், இறுதியில் வேலூருக்கும் மாற்றினர். பேராசிரியர் அ. கிருட்ணசாமி கூற்றுப்படி "தமிழ்நாடு விஜயநகரப் பேரரசு ஆயிற்று". சந்திரகிரியும் வேலூரும் விஜயநகரங்களாயின. விஜயநகரப் பேரரசர் தற்போது சந்திரகிரி, வேலூர்ப் பேரரசர் ஆனார். வேலூர் பிற்காலத்தில் 'ராய வேலூர்' என்று அழைக்கப்பட்டது. படிப்படியாக விஜயநகரத்தார் தமிழகத்தையும் இழந்தனர்.

விஜய நகரப் பேரரசர்களின் வீழ்ச்சி சுல்தான்களின் எழுச்சிக்கு வித்திட்டது. விஜயநகரிலிருந்து பேரரசர்களை பேணுகொண்டாவுக்கும், பின் சந்திரகிரிக்கும், இறுதியில் வேலூருக்கும் விரட்டியவர்களே இவர்கள்தான். விஜயநகரத்தை அழிக்க முற்பட்ட சுல்தான்கள் தமிழகத்திலும் படையெடுத்து வந்தனர். தமிழகத்தின் மாகாணத் தலை நகரங்களாயிருந்த மதுரையும், தஞ்சையும், செஞ்சியும், வேலூரும் தாக்கப்பட்டன. எனவே விஜய நகரத்தாருக்கு சந்திரகிரியும், வேலூரும் முறையே மூன்றாம், நான்காம் பாதுகாப்பு எல்லைகளாயின.

திருமலை பேணுகொண்டாவின் பேரரசராயிருந்த போது, தென்னகப் பகுதிகளை முப்பெரும் பகுதிகளாகப் பிரித்தார். தமிழ்ப் பகுதிக்கு வேங்கடர் ஆளுநராக நியமிக்கப் பட்டார். இவ்விதம் சுல்தான்களின் தென்னக வளர்ச்சியைத் தடைசெய்தார். தாம் இழந்த பகுதிகளை பெறுதல் வேண்டி, தமிழக ஆளுநராயிருந்து பின் முதலாம் வேங்கடர் என்று முடிசூட்டிக் கொண்ட பேரரசர் வேங்கடர், கோல்கொண்டாவைத் தாக்கினார். இது தம் திட்டத்துக்கு மாறான விளைவைத் தந்தது. கோல்கொண்டா சுல்தான்

பேணுகொண்டாவை கி.பி. 1590ஆம் ஆண்டு முற்றுகையிட்டான். இந்நிலையில் வேங்கடர் தம் சிற்றரசர்களின் உதவியை நாடினார். சிலர் ஒரு தற்காலிக உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு சுல்தானை வேண்டினர். போதிய அளவு படைபலம் வந்ததும் பேரரசர் கோல்கொண்டாவைத் தாக்கினார். தற்காலிகமாக கோல்கொண்டாவின் சுல்தான் தமிழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான்.

கி.பி. 1616 முதல் 1639 வரை பேரரசில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தைப் பயன்படுத்தி, பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் தம் செல்வாக்கைத் தமிழகத்திலும் பரப்ப முயன்றனர். இளவரசனாகிய சீரங்கன் கி.பி. 1638லும், 1641லும் பேரரசைத் தாக்குமாறு பிஜப்பூர் சுல்தானை வேண்டினான். பிஜப்பூர் தளபதி ராண்டுலாக்கான் (Randullakhan) பெங்களூரை (ரெண்கள் ஊர்)த் தாக்கினான். இங்கு சீரங்கனும் கானுடன் சேர்ந்து கொண்டான். வேங்கடர் பெரும் இழப்பின்பேரில் உடன்படிக்கை செய்து கொண்டார். சுல்தான் கையில் அகப்படாமல் பேரரசரைக் காப்பாற்ற 1639இல் மதுரை நாயக்கர் இராமப்பையன் தலைமையில் படை அனுப்பினார். இராமப்பய்யனின் படை துவரிமான், சோழவந்தான், வடமதுரை, திண்டுக்கல், தேக்கமலை, மணப்பாறை, திருச்சிராப்பள்ளி, சீரங்கம், சமயபுரக்கண்ணனூர், ஊட்டத்தூர், வாலிகொண்டபுரம், ஆரணி பகுதிகளைத்தாண்டி, வேலூரை அடைந்தது. சுல்தான்களை விரட்டியடித்தபின், இப்படை வெற்றியுடன் நாடு திரும்பியதாக அறிகிறோம். பேரரசின் இறுதிச் சாவும், தமிழக ஆக்கிரமிப்பும் கோல்கொண்டாப் படையெடுப்பின் விளைவுகள் என்று கருதப்படுகிறது.

கி.பி. 1641ஆம் ஆண்டிலும் ராண்டுலாக்கான் தமிழகத்தை தாக்கினான். இத்தளபதியைத் தமிழகத்திலிருந்து விரட்டியடிக்க தஞ்சை நாயக்கன் இரகுநாதன் பேரரசருக்குப் பேருதவி புரிந்தான். வேலூர், சுல்தான்கள் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றப்பட்டது.

கருநாடகப் பகுதிகளைக் கைப்பற்றும் முடிவுடன், கோல்கொண்டாப்படை கருநாடகக் கடற்கரை வழி வந்தது. நெல்லூரின் பகுதி மன்னரான வேலுகொட்டி திம்மரும் (Velugoti Timma), சென்னை, பூவிரிந்தமல்லி, (Poona male)ப்பகுதி அரசரான தமரில வேங்கடரும் (Damrela Venkata) அப்படையை வழி மறிக்க முயன்று தோல்வியுற்றனர். தம்மால் வெற்றி கொள்ள இயலாது என்பதுணர்ந்த பேரரசர் மூன்றாம் வேங்கடர் 1641இல் சித்தூரிலுள்ள நாராயணவரக் காடுகளுக்குச் சென்று ஒளிந்து கொண்டார்.

பேரரசர் மூன்றாம் வேங்கடர் இறந்துவிட்டார் என்ற செய்தி இளவரசர் சீரங்கருக்கு எட்டியதும், அவர் ராண்டுலாக்கானின் கூட்டிலிருந்து விலகி, கி.பி. 1642இல் அரியணையைக் கைப்பற்றினார். இவர்தான் மூன்றாம் சீரங்கர் ஆவார். இவருடைய வாழ்நாள் முழுவதும் ஓயாத போரில் ஓடியது. இவரிடம் பல பேராசைகள் குடிகொண்டிருந்தன. ஆனால் அவற்றை செயல்படுத்தும் திறமை இருக்கவில்லை. சுல்தான்களிடையே காணப்பட்ட பிணக்கைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள இவர் திட்டமிட்டார்.

அவர்களைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டில் தம் செல்வாக்கைப் பெருக்கவிழைந்தார். கி.பி. 1644இல் கோல்கொண்டா சுல்தான் பேரரசு மீது படையெடுத்தான். சீரங்கர் பிஜப்பூர் சுல்தானை தம் பக்கம் வைத்துக்கொண்டு கோல்கொண்டாப் படைகளை உதயகிரியில் தடுத்து நிறுத்தினார். இவ்வுதவிக்காக பிஜப்பூர் சுல்தானுக்கு நிறைய பொருளும், பணமும் சீரங்கரால் தரப்பட்டது. இச்செயல்களால் பாதகப்பட்ட மதுரை நாயக்கன் திருமலையும், செஞ்சி நாயக்கனும் இணைந்து பேரரசு மீது படையெடுத்தனர். சீரங்கருக்குப் போதாக்குறையாக கோல்கொண்டாப் படைகள் தங்கள் முற்றுகையைத் தமிழகத்தில் தொடங்கினர், படையெடுத்து வந்த சுல்தானியப் படைகள் தடையின்றி பழவேற்காடு வரை முன்னேறின; அங்கு அவர்கள் டச்சுக்காரர்களால் தாக்கப்பட்டனர். பிணக்கத்தைத் தீர்த்துக் கொண்ட சீரங்கரும் செஞ்சி நாயக்கனும் இணைந்து முன்னேறிவந்த படையினரை விரட்டியடித்தனர். இவ்வேளையில் கோல்கொண்டா, பிஜப்பூர் சுல்தான்கள் தங்கள் வேறுபாடுகளை மறந்து, இணைந்து கொண்டனர். இணைந்த சுல்தானியப் படைகள் மீண்டும் தமிழகத்தை முற்றுகையிட்டன. வழியில் கிடைத்தனவற்றை சுருட்டிக் கொண்டன. படையை நடத்தி வந்த கோல்கொண்டா தளபதிக்கு கையூட்டுக் கொடுத்து சீரங்கர் கோல்கொண்டா சுல்தானுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். தளபதி தாம் பெற்ற கையூட்டில் ஒரு பகுதியை பிஜப்பூர் சுல்தானுக்குத் தந்து, படைகள் மேற்கொண்டு தாக்கா வண்ணம் தடுத்துக் கொண்டான்.

பேரரசர் சீரங்கர் தமிழ்நாட்டு நாயக்கர்கள் எப்போதும் தமக்கு கீழ்படிந்து நடக்க வேண்டுமென்று விழைந்தார். அடங்கி நடக்காத நாடுகள் அழிக்கப்படுவன என்று பயமுறுத்தினார். மதுரை நாயக்கரோ ஒழுங்காய் திறை செலுத்துவதை நிறுத்தினார். இதனைக் காரணமாகக் காட்டி பேரரசர் கி.பி. 1645இல் மதுரை மீது படையெடுத்தார். பேரரசின் படையெடுப்பு பற்றி அறிந்த திருமலை இரகசியமாக செஞ்சி, தஞ்சை நாயக்கருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். மேலும் கோல்கொண்டா சுல்தான் வேலூரைத் தாக்குமாறு தூண்டப்பட்டான். 1645ஆம் ஆண்டைய ஒரு கடிதம் மூன்றாம் சீரங்கன், செஞ்சி, மதுரைப் படைகளின் கூட்டிணைந்த படையினை வென்றதாகக் கூறுகிறது. ஒரு வேளை இத்தோல்விதான் மதுரை, செஞ்சி நாயக்கர்களை பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களின் உதவியை நாடக் கட்டாயப்படுத்தியிருக்கும் என்று பேராசிரியர் அ. கிருட்ணசாமி கருதுகிறார். "கோல்கொண்டா சுல்தானுக்கு திருமலை விடுத்த வேண்டுகோள், விஜய நகருக்கு எதிராக முஸ்லீம்களின் பேராசையைத் தூண்டிவிட்ட தீப்பொறிகள்" என்று அவர் கூறுகிறார். புரோயன்ஸாப் பாதிரியாரின் ஒரு கடிதம், திருமலை கோல்கொண்டா சுல்தானை மட்டுமே உதவிக்காக அழைத்ததாக அறிவிக்கின்றது. ஆனால் பேராசிரியர் வெங்கடரமணய்யா ஆலந்தியர் ஆதாரப்படி, திருமலை பிஜப்பூர் சுல்தானையும் உதவிக்கு அழைத்தார் என்று கூறுகிறார்.

தமிழகத்தைக் கூறுபோட தகுந்த காலத்தை எதிர்பார்த்திருந்த சுல்தான்களுக்கு திருமலையின் வேண்டுகோள் வரப்பிரசாதமாக அமைந்தது. திருமலைக்கு உதவி செய்வதாக அவர்கள் உடனே கூறியனுப்பினர். மிர்ஜும்லா (Mir Jumla) தலைமையிலான

கோல்கொண்டாப் படைகள் கீழிருந்து பேரரசைத் தாக்கின. முஸ்தாபாகான் (Mustafakhan) தலைமையிலான பிஜப்பூர் படை மேலிருந்தும் பேரரசைத் தாக்கியது. இருபடைகளும் வேலூரில் ஒன்று சேர்ந்தன. சீரங்கர் இருதலைக் கொள்ளி எறும்பாயினார். மதுரையைத் தாக்கும் திட்டத்தைக் கைவிட்டு சீரங்கர், வேலூரைக் காக்க ஓடினார்.

கோல்கொண்டாத் தளபதி மிர் ஜும்லா, சீரங்கப் பேரரசின் வடகிழக்கு எல்லைப் பகுதியிலுள்ள உதயகிரியை முற்றுகையிட்டான். கி.பி. 1646ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10ஆம் நாள் எழுதப்பட்ட ஓர் ஆங்கிலக் கடிதம் "நாட்டில் போர்களும், குழப்பமும் மலிந்து காணப்படுகின்றன. பீஜப்பூர்ப் படைகள் ஒரு பக்கமும் கோல்கொண்டாப் படைகள் பிறிதொரு பக்கமுமாகப் படையெடுத்து வந்துள்ளன. கோல்கொண்டாப் படையின் தளபதி மிர்ஜும்லா; அவர் ஏற்கனவே இந்நாட்டு மன்னரின் மூன்று கோட்டைகளைக் கைப்பற்றியிருந்தார்" என்று கூறுகின்றது. இப்பேரரசரின் வல்லமை வாய்ந்த உதயகிரிக் கோட்டை முகம்மதியர் வசமாயிற்று.

இவ்வேளையில் பிஜப்பூர் தளபதி முஸ்தாபாகான் (Mustafakhan) சித்தூர் மாவட்டத்திலுள்ள புக்கப்பட்டணம் வரை முன்னேறிச் சென்றான். இந்த ஆபத்தான வேளையில், சீரங்கர் தம் மதம், கோயில்கள், பிராமணர்கள் ஆகியவற்றைக் காப்பாற்றுதல் வேண்டி நாயக்கர்களின் உதவியைக் கோரினார். ஆனால் எவரும் அவருக்கு உதவி அளிக்க முன்வரவில்லை. சீரங்கரை ஒழித்துக்கட்டும் நோக்குடன், நாயக்கர்கள் வேலூரில் 60,000 வீரர்களை சேர்த்துக் கொண்டனர். கானுடன் பேச்சு வார்த்தை நடத்த சீரங்கர் தம் தூதுவராக வெங்கண்ண சோமயாஜி (Venkanna Somayaji) என்பவரை அனுப்பினார். கானும் உடன்படிக்கைக்கு இசைந்து கொண்டான். இத்தற்காலிகமான உடன்பாட்டை சாதகமாக்கிய சீரங்கர் தம் படைகளை நாயக்கரை எதிர்த்து அனுப்பினார். நாயக்கர்கள் இப்படையைத் திண்டிவனத்தில் சுலபமாக வெற்றி கொண்டனர். சீரங்கர் உதவிநாடி முஸ்தாபாகானின் முகாமிற்குச் சென்றார். பெருமளவு கொள்ளைச் செல்வமோ, கையூட்டுப் பணமோ கைக்கு வரும் என்ற நோக்குடன் முஸ்தாபாகான் தென்னகம் நோக்கி வந்தான். அவன் செஞ்சியிலுள்ள விரிஞ்சிபுரம், குடியாத்தம் பகுதிகளைக் கைப்பற்றினான். முஸ்தாபாகான் சீரங்கரையும் தோற்கடித்து, பெருமளவு நட்டஈட்டுத் தொகையைப் பெற்றிருந்தான்.

நாயக்கரைத் தம்பக்கமிழுக்க சீரங்கர் மேலும் ஒருமுறை முயற்சி செய்தார். அவர்கள் நடத்திய அனைத்து களியாட்டங்களிலும், விழாக்களிலும் சீரங்கர் பங்கு கொண்டார். எனினும் அவரால் அம்முயற்சியில் வெற்றி கொள்ள இயலவில்லை. இக்கால இடைவெளியைப் பயன்படுத்திய மிர்ஜும்லா ஆலந்தியரிடமிருந்து பழவேற்காட்டையும், பறங்கி மலையையும் கைப்பற்றினான். அவன் வேலூரிலிருந்து இரண்டு நாட்கள் பயணத் தூரத்தில் முகாமிட்டிருந்தான். கி.பி. 1647இல் மிர்ஜும்லா ஆங்கிலேயரின் சென்னைக் கொடைப் பத்திரத்தை புதுப்பித்துக் கொடுத்தான். மிர்ஜும்லா பூவிருந்தமல்லி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் செஞ்சியின் எல்லைப் பகுதிகளை 1648இல் கைப்பற்றி

காஞ்சியில் முகாமிட்டிருந்தான். அனைத்து முயற்சிகளிலும் தோல்வியுற்ற சீரங்கர், நாட்டைக் காக்கும் பொறுப்பைக் கைவிட்டு 1647இல் வேலூரையும் பின் மைசூர் மன்னன் அவையில் அடைக்கலம் நாடினார். நாயக்கர்களால் தள்ளப்பட்டு, நாட்டு மக்களால் கைவிடப்பட்டு தம் உறவினர்களால் காட்டிக் கொடுக்கப்பட்ட 'இந்தியாவின் பெரும் செல்வந்தருள் ஒருவராகிய சீரங்கர்' ஒரு காலத்தில் தமக்கு அடிபணிந்து ஆண்ட மைசூர் மன்னனிடம் கைகட்டி நிற்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டார் என்று பேராசிரியர் சத்தியநாதையர் கூறுகின்றார். ஆனால் சீரங்கர் பெட்னூருக்கு ஓடி 1646இல் இக்கேரி நாயக்கர் செவப்பாவின் உதவியை நாடினார் என்று ஹயவதனராவ் கூறுகிறார். வேலூரை திருப்பிக் கைப்பற்ற சீரங்கனுக்கு இக்கேரி நாயக்கர் உதவினார் என்றும், அவ்வுதவிக்காக சீரங்கர் இக்கேரி மன்னருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து மதித்தார் என்றும் கூறுவார். ஆனால் புரோயென்ஸாப் பாதிரியாரின் ஒரு கடிதமும், புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து கிடைத்த பிறிதொரு கடிதமும் இப்போது சீரங்கர் மைசூரின் தலைநகருக்கு ஓடினார் என்று அறிவிக்கின்றன.

கோல்கொண்டாவைக் கைப்பற்றிய கோல்கொண்டாப் படைகள் செஞ்சி, தஞ்சைப் பகுதிகளை நோக்கிப் பாய்ந்தன. மிர்ஜும்லாவின் வருகையைக் கேள்விப்பட்டு அச்சமுற்ற தஞ்சை மன்னன் விஜயராகவன் எவ்விதக்கட்டுப்பாடுமின்றி மிர்ஜும்லாவுக்கு அடிபணிந்தான். இச்சமயம் இரண்டாம் முறையாக கோல்கொண்டாவுக்கு எதிராக பிஜப்பூர் சுல்தானைத் தூண்டிவிட்டான் திருமலை. பிஜப்பூர் சுல்தான் 17,000 குதிரைப் படைகளை அளித்தான். திருமலை 30,000 வீரரைச் சேர்த்துக் கொண்டான். பிஜப்பூர், மதுரையின் இணைந்த படைகள் செஞ்சியைக் காப்பாற்ற விரைந்தன. ஆனால் கோல்கொண்டாப் படைகள் பிஜப்பூர் படைகளுடன் உடன்பாடு செய்து கொண்டபின் செஞ்சியைவிட்டு வெளியேறின. பிஜப்பூர்ப் படைகள் திருமலையின் அணியிலிருந்து விலகி, அக்கோட்டையைத் தாக்கின. 1648இல் செஞ்சி புஜப்பூரியர் வசமாயிற்று. வெற்றிப்படைகள் தஞ்சை, மதுரை நோக்கி விரைந்தன. விஜயராகவன் காடுகளில் ஒளிந்து கொண்டான்; திருமலை பணம் கொடுத்து அமைதி உடன்படிக்கை செய்து கொண்டான். பேராசிரியர் சீனிவாசாச்சாரி திருமலையின் இச்செயலைக் கடுமையாகக் கண்டித்தார். ஆனால் பேராசிரியர் சத்தியநாதையர் இச்செயல் மாற்றிடக் கூடியதல்ல என்று திருமலையை ஆதரித்தார். தேசிய உணர்வோ பணிவுத் தன்மையோ சற்றும் அற்ற திருமலையின் சுயநலச் செயல் முதலில் விஜயநகரப் பேரரசையும் பின்னர் மதுரையையும் அழித்தது (1736) என்று பேராசிரியர் அ. கிருட்ணசாமி கூறுகின்றார். ஆனால் ஒரு நாட்டுப் புறப்பாடல் திருமலை பிஜப்பூரியரை கள்ளர்களின் உதவிகொண்டு எதிர்த்து, மதுரையிலிருந்து விரட்டினார் என்று கூறுகின்றது.

பிஜப்பூர்ப் படைகள் செஞ்சிக்குத் திரும்பியபின், சீரங்கர் இழந்த தம் வேலூர்ப் பேரரசை மீட்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கினார். அதற்காக அவன் செஞ்சி, இக்கேரி, திருப்பதி, மதுரை, மைசூர், தஞ்சை நாடுகளின் உதவியைக் கோரினார். இச்சமயம் இரு சுல்தான்களும் இழப்பீட்டுப் பங்கீட்டில் ஒருவருக்கொருவர் பகைத்துக் கொண்டனர். பிஜப்பூருக்கு எதிராகக் கலகம் செய்யுமாறு இரகசியமாக மைசூரை மிர்ஜுமலா

தூண்டினான்; சீரங்கரை வேலூருக்கு வரும்படித் தூண்டினான், தாம் இழந்த நாடுகளை மீட்குமாறு சீரங்கரைப் பணித்தான். 1652இல் சீரங்கர், வேலூருக்குள் நுழைந்தார்; பிஜப்பூரியரிடமிருந்து தம் நாடுகளைக் கைப்பற்றி தமிழ்நாட்டில் மீண்டும் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டான்.

சீரங்கரின் வளர்ந்து வரும் செல்வாக்கைக் குறைக்க நினைத்த திருமலை மீண்டும் வேலூரையும் மைசூரையும் தாக்குமாறு பிஜப்பூர் சுல்தானை வேண்டினான். திருமலையின் இச்செயலை புரோயென்ஸாப் பாதிரியார் தேசியமற்ற சந்தர்ப்பவாதச் செயல் என்று கண்டித்தார். பேரரசருக்கு உதவி செய்வதற்குப் பதில், அதற்கு எதிராக பிஜப்பூருக்கு உதவினான். சீரங்கருக்கு திறை செலுத்தியும், சீரங்கரால் தமக்குப் பலன் ஏதும் இல்லை என்பதை திருமலை ஒருவேளை உணர்ந்திருப்பான். தம் நாட்டை மைசூரின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு திருமலைக்குரியது. ஆகவே இயலாத பேரரசருக்கு உதவும் மைசூருக்கு எதிராகவும், பயனற்ற பேரரசருக்கு எதிராகவும் அந்நியரை மூட்டிவிட்டதில் தவறில்லை என்று கொள்ளலாம். ஒருவேளை இது தம் நாட்டைப் பேரரசரிடமிருந்தும், பிஜப்பூரியரிடமிருந்தும் காத்தற் பொருட்டு தீட்டப்பட்டதாயிருக்கலாம். பிஜப்பூர்ப் படைகள் மைசூரைத் தாக்கின. வேலூர் 1653இல் முற்றுகைக்குள்ளாயிற்று. சீரங்கன் பிஜப்பூர் தளபதி கான் முகம்மதோடு உடன்படிக்கை செய்துகொண்டு, சந்திரகிரி, அதைச்சுற்றிய பகுதிகளையும் பெற்றுக் கொண்டான்.

இவ்வேளையில் ஏறக்குறைய 300 மைல் நீளமும் 50 மைல் அகலமும் கொண்ட சீரங்கரின் பேரரசிலிருந்து கவரப்பட்ட நிலப்பகுதியைத் தனி நாடாக்கும் முயற்சியில் மிர்ஜும்லா ஈடுபட்டிருந்தான். கோல்கொண்டா சுல்தான் அப்துல்லா குதப் ஷா (Abdullāh Kutb Shah) மிர்ஜும்லாவின் திட்டத்திற்கு மறுப்பு தெரிவித்து, அவனை அழிப்பதாகத் திட்டமிட்டான். சுல்தானின் தீவிர நடவடிக்கைகளைக் கண்டு பீதியுற்ற தளபதி மிர்ஜும்லா மொகலாயப்பேரரசர் ஷாஜகானின் (Shah Jahan) உதவியை நாடினான். கி.பி. 1656இல் தக்காணத்தின் மொகலாய ஆளுநராயிருந்த ஔரங்கசீபின் முகாமில் மிர்ஜும்லா சேர்ந்தான். ஔரங்கசீப் ஐதராபாத்திலிருந்ததால் தென்னகம் நோக்கித் தம் கவனத்தைச் செலுத்த முடிந்தது. பெருங்கோபமுற்ற கோல்கொண்டா சுல்தான் மிர்ஜும்லாவின் கீழிருந்த சில பகுதிகளையாவது திருப்பிக்கொள்ளுமாறு சீரங்கரை ஏவினான். சுல்தான் தாமாகவே திருப்பதி, காஞ்சி, பழவேற்காடு பகுதிகளைக் கைப்பற்றினான். சீரங்கரை மிர்ஜும்லாவின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்வதாகவும், அவனைச் சுதந்திர அரசர் ஆக்குவதாகவும் பொய் உறுதிமொழிகள் கொடுத்து, சுல்தான் தம் செல்வாக்கை கருநாடகத்தில் பெருக்கிக் கொண்டான். பிஜப்பூர் தளபதி கான் முகம்மது சீரங்கருக்குக் கொடுத்த சந்திரகிரிக்கோட்டையையும் கோல்கொண்டா சுல்தான் 1653இல் கைப்பற்றினான்.

சீரங்கர், பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட இருதலைக்கொள்ளி எறும்பானார். மதுரை நாயக்கரின் பகைமையையும் அவர் சம்பாதித்தார். நாயக்கரும் அவனை ஒழித்துக்கட்ட திட்டமிட்டிருந்தனர். வாழும் வழிகள்

அனைத்தும் இழந்த பேரரசர் மறுவாழ்வு கிடைக்காதா என்று ஏங்கினார். தம் தூதுவராக ராமராவ் (Rama Rao) என்பவரை உதவி தேடி ஔரங்கசீப்பின் அவைக்கு 1653இல் அனுப்பினார். உண்மையான தெய்வ நம்பிக்கையுள்ள ஷியா சுல்தான்களுக்கு எதிராகவும், சிலைகளை வழிபடும் எதிர் சமயத்தானாகிய சீரங்கருக்குச் சாதகமாகவும் ஔரங்கசீப் உதவி அளிக்க முன்வரவில்லை. பேரரசர் ஔரங்கசீபுக்கு சீரங்கர் 2½ கோடி ரூபாயும், 200 யானைகளும், தன்னிடமுள்ள எல்லா நகைகளையும், ஆண்டுதோறும் திறையும் செலுத்துவதாகவும் வாக்கிறுத்தார். மொகலாயரின் கீழ் ஒரு ஜாகீர்தாராக ஆகவும் சீரங்கர் தயாராயிருந்தார். இவ்வளவும் செய்யத் தயாராயிருந்த சீரங்கரைப்பற்றி பேரரசன் ஏதும் கவலைப்படவில்லை, "சிற்றரசர்களால் பந்தாடப்பட்ட" சீரங்கனின் "துன்பத்திற்கு அளவே இல்லா"மலிருந்து முறையே கோல்கொண்டா, பிஜப்பூர் சுல்தான்களால் முறையே வேலூர் சந்திரகிரிப் பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட சீரங்கர் பேரரசு இழந்து, நாடிழந்து, உறைவிடமும் இழந்து தவித்தார். தமக்கென்றிருந்த ஒரே கோட்டையாகிய சந்திரகிரியையும் (கான் முகம்மது திருப்பிக் கொடுத்த) கோல்கொண்டா சுல்தான் கைப்பற்றிக் கொண்டான். தமிழ்நாட்டை 1658இல் விடுத்து சீரங்கர் உம்மத்தூருக்கு வெளியேறினார். அங்கிருந்து மேற்கு மைசூரிலுள்ள வேலூருக்குச் சென்று 1659 முதல் 1670 வரை அப்பகுதியை ஆண்டார். கி.பி. 1672இல் சீரங்கர் இறந்துவிட்டார். தமிழகத்தில் விஜயநகரப் பேரரசும் அழிந்து விட்டது.

திருச்சி, தஞ்சைப் பகுதிகளைக் கைப்பற்றத் திட்டமிட்ட பிஜப்பூர் சுல்தான் அடில் ஷா (Adil Shah) 1659இல் அப்பகுதிகளை முற்றுகையிடுமாறு ஒரு படையை முல்லா முகம்மது (Mulla Muhammad), சகோஸி (Sakosi) தலைமையில் அனுப்பினான். அப்படை திருச்சிக் கோட்டையைத் தாக்கியது. அக்கோட்டையைக் கைப்பற்ற இயலாது போகவே, அவர்கள் தஞ்சையைத் தாக்கினர். தஞ்சை மன்னன் எதிரிப்படைகளுக்குத் தலை வணங்கினான். அப்படைகள் மன்னார்குடி, வல்லம் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டன. அத்துடன் கொலை, களவு, கொள்ளைகளையும் செய்தன. பஞ்சத்தாலும் நோயாலும் திருச்சி, தஞ்சை மக்கள் பெரிதும் அவதியுற்றனர். இத்தருணத்தில் முல்லா முகம்மது திருச்சிக்கோட்டையைத் தாக்கினான்; நகரத்தைக் கொள்ளையிட்டான். கொள்ளைச் செல்வத்துடன் அப்படைகள் தப்புவதற்குள் கள்ளர் படைகள் அவர்கள் மீது பாய்ந்து, அவர்களை வழிமறித்து, அவர்கள் சேகரித்து வைத்திருந்த செல்வத்தின் பெரும்பகுதியைக் கவர்ந்து சென்றன. முத்து வீரப்பர் கையூட்டு மூலம் முல்லாவை மதுரையிலிருந்து அப்புறப்படுத்தினார். அவருடைய வாரிசாகிய சொக்கநாதர் லிங்கமர்—சாகோஸின் ஒரு கலகத்தை அடக்கினார்; இழந்த நாட்டை மீட்டுக் கொண்டார்.

கி.பி. 1666இல், பீஜப்பூர் தளபதியாகிய வானமியானும் (Vanamian), ஷாஜியும் (Shahji) செஞ்சியைத் தாக்கி கைப்பற்றினர். அத்துடன் கோடிக்கரை (Porto novo)யையும் தேவனாம்பட்டணத்தையும் (Tegnapatna) கைப்பற்றினர். வீழ்ச்சியடைந்த மன்னரிடமிருந்து பெருமளவு திறையையும், கையூட்டையும், கொள்ளைச் செல்வத்தையும் தேடிக்கொண்டனர். தஞ்சைப்படையின் உதவியுடன் அவர்கள் திருச்சியைத் தாக்கினர். அக்கோட்டைக்குள் நுழைவது கடினம் என்பதுணர்ந்த தளபதிகள் நாட்டைக் கெடுக்க

முனைந்தனர்; கொலை, கொள்ளை புரிந்தனர். நாட்டு மக்கள் பலரைக் கைது செய்தனர். பலர் முகம்மதியர் வசம் சிக்காது தற்கொலை செய்து கொண்டனர். தஞ்சை மதுரை நாயக்கர்கள் லஞ்சம் கொடுத்து இவர்களை வெளியேற்றினர். பிஜப்பூரிகளின் இவ்வெற்றிகள் நிலையற்றமையாக மாறிவிட்டன. ஏனெனில் அந்நாட்டை மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப் முற்றுகையிட்டார். 1688ஆம் ஆண்டிலெல்லாம் தக்காணம் முழுவதும் மொகலாயர் வசமாயிற்று. தக்காணச் சுல்தான்கள் இந்திய வரலாற்றிலிருந்து மறைந்தொழிந்தனர்.

தமிழகத்தில் மொகலாயர்கள் : ஷாஜி பான்ஸ்லேயின் மகனாகிய சிவாஜி (Shivaji) தமிழகத்தில் சுல்தான்களின் செல்வாக்குக்கு அறைகூவல் விடுத்தார். சிவாஜி தமிழகத்தின் மீது படையெடுத்துவந்து, 1677இல் செஞ்சியைக் கைப்பற்றி, சாந்தாஜியை (Santaji) ஆளுநராக நியமித்தார். ஷாஜியின் பிறிதொருமகனாகிய எகோஜி (Ekoji) அல்லது வெங்காஜி (Venkaji) தஞ்சையைத் தாக்கி, 1675இல் அதன் அரியணையை அடைந்தார். இந்த எகோஜி சிவாஜிக்கு ஒன்றுவிட்ட சகோதரன்.

கி.பி. 1680இல் சிவாஜி இறந்தார். தமிழகத்தில் மராத்தியர் செல்வாக்கும் சரியத் தொடங்கிற்று. இதனைப் பயன்படுத்திக் கொண்டவர் மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப். 1685க்கும் 1688க்கும் இடைப்பட்ட காலத்தில் தக்காண சுல்தானியங்கள் அனைத்தையும் அவர் தம் பேரரசுடன் சேர்த்துக் கொண்டார். தக்காணத்தில் தம்மை எதிர்க்கும் சக்தி இல்லை என்ற நிலையை உருவாக்கியபின் பேரரசர் தமிழகத்தைத் தாக்கத் திட்டமிட்டார்.

1688இல் கோல்கொண்டா வீழ்ந்த உடன், மொகலாயப் படைகள் தமிழகத்தை நோக்கிப் பாய்ந்தன. பூவிருந்தமல்லியும், வந்தவாசியும் அவர்கள் கைக்குள்ளாயின. தொடர்ந்து முன்னேறிய படைகள் பாலாற்றங்கரைப் பகுதிக்குச் சென்று சேர்ந்தன. நிலைமையைச் சமாளிக்க இயலாது என்பதுணர்ந்த மராத்தியத் தளபதிகளாகிய கேசாப் பிங்கலும் (Keshav Pingle), ஹர்ஜியும் (Harji) வட கர்நாடகப் பகுதியைக் கொள்ளையடித்து நாசங்கள் பல புரிந்தனர். படையெடுத்து வந்தவரும் ஆட்சி புரிந்து வந்தவர்களும் நாட்டைக் கொள்ளையடிக்கவே, நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. வெற்றி பெற்ற படைகள் பாதுஷாவின் ஒரு காலணியை பல்லக்கில் வைத்து ஊர்வலமாகச் சென்றனர். காலணிக்குத் தலைவணங்க மறுத்த மன்னர்களின் நாடுகள் தாக்கப்படுதல் வழக்கம். மதுரையில் மூன்றாம் முத்து வீரப்பர் காலணிக்குத் தான் தலைவணங்கத் தயாராக இல்லை என்று மறுத்தார். மேலும் காலில் அணிந்து நடக்க இரண்டு காலணிகள் வேண்டுமே, இங்கோ ஒன்றுதானே இருக்கிறது; பிறிதொன்றையும் கொண்டு வாருங்கள் என்று ஏளனமாகக் கூறினார். ஊர்வலம் வந்தவர்கள் உடனே மதுரையை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கப்பட்டனர். மறுக்கவே அவர்கள் மதுரைப் படையால் தாக்கப்பட்டனர்; பலர் கொலையுண்டனர். மேலும் பலர் தலைதப்பினால் போதுமென்று ஓட்டம் பிடித்தனர்.

1689இல் பேரரசர் ஔரங்கசீப் மராட்டிய மன்னரான சிவாஜியின் மூத்தமகன் சாம்பாஜியையும் (Shambhaji) அவனது அமைச்சரான கவிகலேஷையும் (Kavi Kalesh) கைது செய்து, கொலை செய்தார். மராட்டிய நாட்டிற்கு சிவாஜியின் இரண்டாவது மகன் ராஜாராம் (Rajaram) மன்னரானான். இவனோ மொகலாயரால் விரட்டப்பட்டு, சதாராவை (Satara) அடைந்தான். சதாராவிலும் அவன் மனநிறைவுடன் வாழ இயலவில்லை. அங்கிருந்தும் அவன் செஞ்சிக்கு விரட்டப்பட்டான். செஞ்சியின் ஆளுநராயிருந்த ஹர்ஜிராஜா (Harji raja) 1689இல் இறந்திருந்தான். ஆகவே ராஜாராம் செஞ்சியை அடையும்போது செஞ்சிக்கு மன்னரில்லாத நிலை. ராஜாராம் உடனே தம்மையை மன்னர் என்று அறிவித்து, செஞ்சியைத் தம் தலைநகராக்கிக் கொண்டான். ஈண்டு மராத்திய ஆட்சியையும் நிறுவினான். நாட்டில் செல்வ விரயம் ஏற்பட்டது. இச்செலவுகளை ராஜாராம் கொள்ளைச் செல்வம், கையூட்டுப் பணம், கட்டாயக் கடன் தொகைகள் மூலம் சரிக்கட்டிக்கொண்டான்.

1690இல் ஔரங்கசீப் தம் தளபதியாகிய ஜூல்பிகர்கானை செஞ்சிக் கோட்டையைத் தாக்குமாறு அனுப்பினான். திறமையற்ற ராஜாராம் எதிர்த்து போரிடத் துணிச்சல் சற்றும் இல்லாததால், செஞ்சியைவிட்டு, தஞ்சைக்கு ஓடினான். ஜூல்பிகர்கான் தஞ்சையையும், திருச்சியையும் தாக்கினான். கொள்ளைச் செல்வங்களும், திறைப்பணமும் ஏராளம் பெற்ற பின்னர் ஜூல்பிகர்கான் தம் படைகளைக் கலைத்து விட்டான். புதிதாக தானாஜி ஜாதவ் (Dhanaji Jadav), சாந்தாஜி கோர்படே (Santaji Ghorpade) தலைமையில் வந்த மராட்டியப் படைகளும், தஞ்சைப் புதுப்படைகளும் தஞ்சையை சிறப்புறக் காத்து நின்ற தால், ஜூல்பிகர்கானால் சுலபமாக வெற்றிகள் ஏதும் பெற இயலவில்லை. ஜூல்பிகர்கான் புதுப்படைகள், உணவுப்பொருட்கள், இதர பொருட்கள் வேண்டி பேரரசருக்கு செய்தி அனுப்பினான். ஆனால் பேரரசர் இவனுடைய வேண்டுதலுக்கு செவிமடுத்தார். பேரரசர் காலம் தாழ்த்தும் தந்திரத்தைக் கடைபிடிக்கவே எரிச்சலுற்ற ஜூல்பிகர்கான் ராஜாராமிடம் ஒரு பெரும் தொகையைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு, செஞ்சியை நோக்கிப் புறப்பட ராஜாராமை வேண்டினான். ராஜாராமும் ஜூல்பிகர் ஆதரவில் செஞ்சியை வந்தடைந்தான். பேரரசருக்கு ஜூல்பிகர்கானின் தந்திரம் எட்டியது; ஜூல்பிகர்மீது நம்பிக்கையிழந்த பேரரசர் ஜூல்பிகரின் தந்தையும் வஸீருமாகிய (Wazir) ஆஸாத் கானையும் (Azad Khan) இளவரசர் காம் பாக்ஷையும் (Kam Baksh) செஞ்சிக்கு அனுப்பி வைத்தார். செஞ்சியை எப்படியாவது கைப்பற்றுமாறு இவர்களுக்கு 1691இல் ஆணையுமிட்டார். ஜூல்பிகரோ அக்கோட்டையை தாமே கைப்பற்றுதல் பொருட்டு வேறொரு தந்திரத்தைக் கைக்கொண்டான். போதிய உணவு இன்மையினாலும், தொடர்ந்த போர்களினாலும், வஸீருக்கும் இளவரசருக்குமிடையே ஏற்பட்ட பூசல்களினாலும் மொகலாயப் படைகள் அவதியுற்றன, சீரழிந்தன. இவர்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த ராஜாராம் முயன்று தோற்றார். சாதகமான சூழ்நிலை ஏதும் தோன்றாத நிலையில் ராஜாராம் செஞ்சியை விட்டு வெளியேறி வேலூரை அடைந்தான். உடனே ஜூல்பிகர்கான் தஞ்சை, மதுரை நாடுகளைத் தாக்கி, பெரும் செல்வத்தைக் கவர்ந்தபின், செஞ்சியை அடைந்தான்.

இந்நிலையில் மராட்டியப் படைத் தலைவர்களாகிய சந்தாஜிக்கும் தானாஜிக்கு மிடையே மனக்கசப்புக்கள் வளர்ந்தன. இவர்களிடமிருந்து எவ்வுதவியும் பெற இயலாது என்பதுணர்ந்த ராஜாராமும் ஓடிவிட்டார். ஜுல்பிகருக்கு இந்நிலை சாதகமாய் அமைந்தது. அவன் உடனே வந்தவாசியை மொகலாயப்படைத் தளமாக மாற்றி, அங்கிருந்து செஞ்சியைத் தாக்கத் துணிந்தான். முறைப்படித் தாக்கி, 1697இல் செஞ்சியை மொக்லாயப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. 1698இல் அப்பெரும் கோட்டை மொத்தமாக மொகலாயர் கைக்கு மாறிவிட்டது. அண்டைப் பகுதிகளும் அவர்களுக்குரிய தாயிற்று. ராஜாராமும் அவர் படைகளும் வேலூரிலிருந்து செங்கம் (Chengam), திருப்பத்தூர், கோலார் வழி பூனாவை அடைந்தன.

மொகலாயரின் இவ்வெற்றி திட்டமிட்டு பெறப்பட்டதாயினும், உயிர்ச்சேதம், பணபொருள் விரயம், அமைதியின்மை ஏற்படாமலில்லை. இவ்வெற்றியும், அதற்குப் பின் பெற்ற இடங்களை இணைத்து மொகலாயர் ஆதிக்கத்தை நிறுவியமையும் ஜுல்பிகரின் செல்வாக்கைப் பன்மடங்கு பெருக்கின. தக்காணத்தில் தம் செல்வாக்கை நிலையானதாக ஆக்கிக் கொள்ளுமுன், 1701இல் ஜுல்பிகர் டில்லிக்கு அழைக்கப்பட்டார். டில்லியில் அவருக்கு உயர் பதவி அளிக்கப்பட்டது. ஆனால் அவருடைய நீண்ட ஆசை நிறைவேறவில்லை. செஞ்சிக் கோட்டை வீழ்ந்த உடனே அதற்குப் புதுப் பெயர் சூட்டப்பட்டது. 'நஸ்ரத் கோடா' (Nasarat Godah) என்ற விஜயநகராக அதுமாறிற்று. அதனை ஆளும் பொறுப்பு தாவூத்கானிடம் (Daudkhan) விடப்பட்டது. இக்கோட்டை முற்றுகையிடப்படும் போது இரண்டாம் நிலைத் தளபதியாக இயங்கியவரே தாவூத்கான்.

தமிழ்நாட்டில் மொகலாயர் ஆட்சிமுறையை மறுபரிசீலனை செய்து, தாவூத்கான் திருத்தியமைத்தான், செஞ்சிக்கோட்டைப் பழுதுபார்த்து அதன் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டான். இதர எல்லைப் பகுதிகளையும், முகாம்களையும், படைத்தளங் களையும் வல்லமையுடையதாக ஆக்கிக் கொண்டான். பாலாற்றங்கரையிலுள்ள ஆர்காட்டில் (Arcot) தம் தலைநகரை அமைத்துக் கொண்டான். 1707இல் மராத்திய ரிடமிருந்து வேலூரைக் கைப்பற்றினான். மதுரை — தஞ்சையம்பதிகளைக் கப்பம் கட்டும் நாடுகளாக்கினான். பிற்காலத்துச் சிறப்படைந்த நவாபுக்களின் நிலையான ஆட்சிக்கு அடித்தளம் அமைத்தவன் இவனே. கருநாடகத்தில் தொடர்ந்து மொகலாய நாவாபுகளின் ஆட்சியும் ஏற்பட்டது.

தாவூத்கான் டில்லிக்குச் செல்ல வேண்டியிருந்ததால், இப்புதுப் பகுதிக்கு நவாபாக சாதத்துல்லாகானை (Sadatullah-khan) நியமித்தார் பேரரசர் ஔரங்கசீப். அவர் 1707இல் இறந்தார். ஆளுநர்களுக்கு இவருடைய மறைவு வரப்பிரசாதமாய் இருந்தது. பல்லாண்டு களாகச் சுதந்திரத்தை அறிவித்து தனி மன்னராக ஆக வேண்டுமென்று காலம் பார்த்திருந்த சாதத்துல்லாகானுக்கும் இது கிடைத்தற்கரிய காலம். சாதத்துல்லாகான் காலம் தாழ்த்தாது தம்மை இந்தப் பகுதியின் சுதந்திர நவாப் என்று அறிவித்தார். நவயதர்களாகிய (Naveyats) புதிதாக வந்தவர்களின் (new-comers) ஆட்சியைத் தமிழகத்தில் இவரே நிறுவினார்.

இக்கால கட்டத்தில் செஞ்சியின் ராஜா தேசிங்கு (Raja Desingh) இவர்களுக்கு கப்பம் கட்ட மறுத்தான். கட்ட வேண்டிய தொகையோ 70 லட்சம் பணம் (ரூபாய்) என்று கணக்கிடப்பட்டது. செஞ்சியைத் தாக்குமாறு பேரரசர் பரூக்சியார் (Farruksiyar) சாதத்துல்லா கானுக்கு ஆணையிட்டார். தேசிங்குராஜன் கதை என்ற நாட்டுப்பாடல் இவ்வீரனுடைய தீரச் செயல்களைச் செப்புகின்றன. 1713இல் இவ்வீரன் போர்க்களத்தில் கொல்லப்பட்டான். மொகலாயரை எதிர்த்து வீரமரணம் அடைந்த இவர் பலராலும் போற்றப்படும் பெருவீரன்.

மதுரையில் மொகலாயர் மேலாண்மை 1736ஆம் ஆண்டையொட்டியே ஏற்பட்டது. மதுரை நாட்டைப் பயமுறுத்தி பலமுறை ஜுல்பிகர்கான் கையூட்டுகள் வாங்கியிருந்தான். கப்பம் கட்டுமாறு ஆணையிட்டிருந்தான். 1697இல் அரசி மங்கம்மாள் மொகலாயப் படைக்களுக்குப் பொற்கிழி பரிசாகக் கொடுத்து, மதுரையை மீட்டாள். இப்படையின் உதவியுடன், தாம் இழந்த சில பகுதிகளைத் தஞ்சை மராட்டியரிடமிருந்து மீட்டுக் கொண்டாள். 1702இல் தாவூத்கானின் படை வலிமையுடன் அவள் உடையார்பாளயம் தலைவன் கீழிருந்த சில மதுரைப் பகுதிகளை மீட்டுக் கொண்டாள். பேரரசர் ஔரங்கசீபுக்கு விலைமதிப்பற்ற பொருள்களைப் பரிசாக அனுப்பி வைத்தாள். 20,000 ரூபாய் விலைமதிப்புடைய வெள்ளி நாணயங்களை தாவூத் கானுக்கும், 10,000 ரூபாய் மதிப்புடைய நாணயங்களை வஸிருக்கும் அனுப்பி வைத்தாள். தற்காலிகமாகத் தம் மதுரை நாயக்கத்தை அரசி இவ்விதம் காத்துக் கொண்டாள். மதுரை திருச்சியின் செல்வத்தால் கவரப்பட்ட சந்தா சாகிபு திருச்சியைக் கைப்பற்ற திட்டமிட்டான். அர்சி மீனாட்சியின் காப்பாளனாக நடித்து, திருச்சி கோட்டைக்குள் நுழைந்து, அரசியை சிறையிட்டு, 1736இல் அக்கோட்டையை கைப்பற்றிக் கொண்டான். திருச்சியின் வீழ்ச்சியுடன், மொகலாயரின் தமிழகப் படையெடுப்பும் முடிவடைந்தது.

பயிற்சி வினாக்கள்

1) "தக்காண சுல்தான்களின் (பிஜப்பூர், கோல்கொண்டா) தமிழகப் படையெடுப்பு மூன்றாம் சீரங்கரின் வாழ்வுடன் ஒருங்கிணைந்து விடுகிறது". இக்கூற்றை ஆய்க.

2) "மொகலாயரின் தமிழகப் படையெடுப்பு தக்காண சுல்தானியங்கள் மீதான ஆக்கிரமிப்பின் தொடர்ச்சியும், மராத்தியர் மீதான படையெடுப்பின் தொடர்ச்சியும் ஆகும்". இக்கூற்றை ஆய்க.

பாடம் – 18 இராமநாதபுரம் சேதுபதிகள்

பாளையக்காரர்களைப் போன்று சாதாரணத் தலைவர்களாக வாழ்ந்து வந்த சேதுபதிகள், நவீன காலத்தில், தங்களுக்கென புதிய நாட்டையே, சுதந்திரமாக இராமநாதபுரத்தைச்சுற்றி ஏற்படுத்திக்கொண்டனர். மறவர்கள், கள்ளர்கள் அகமுடியர்கள் (சேர்வை), ஆகியோர் பொதுவாக 'தேவர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இந்தப்பெயர், மகாவிஷ்ணுவின் திருஅவதாரமான இராமபிரானால், இவர்களுக்கு கொடுக்கப்பட்டது எனக் கூறுவாரும் உளர். (அதாவது இலங்கை மன்னனான இராவணனைக் கொல்வதற்கு இந்த இனத்தவர், இராமபிரானுக்கு உதவியதாகவும், அதற்குக் கைம்மாறாக இப்பெயர் வழங்கப்பட்டது எனவும் கூறுவர்.) இவர்கள் தங்களது குணவியல்புகளாலும், தைரியத்தாலும், கல்நெஞ்சம் படைத்திருந்தமையாலும், வலிமையான உடலமைப்புக் கொண்டிருந்ததாலும், எல்லாவிதமான போர் முறைகளிலும் வலிமை பெற்றவர்களாக இருந்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. தொடக்கத்தில் இராமநாதபுரத்தில் குடியேறிய இவர்கள், பின் சிறிதுசிறிதாக மதுரை, திருநெல்வேலி பகுதிகளிலும் குடியேறினர். தற்கால ஆவணங்கள் சில, இந்த தேவர்கள், வழிப்பறி செய்து வந்தனர்; இராமேஸ்வரம் செல்லும் பயணிகளை அச்சுறுத்தினர் எனவும் கூறுகின்றன. எனவே அவர்கள் நாயக்கர் மன்னர்களின் தலையீட்டால் திருத்தப்பட்டு, அவர்களின் வீரத்திற்கு அங்கீகாரமாக இராமநாதபுரம் பகுதிக்கு தலைமைப் பதவியைப் பெற்றனர். இந்த இனத்திலிருந்து தோன்றியவர்கள்தான் சேதுபதி மன்னர்கள். துவக்க காலத்தில் கி.பி. 1605வரை பானர்கள் அல்லது பரமக்குடி தலைவர்கள் போன்று சாதாரண இனத் தலைவர்களாகவே இருந்தனர்.

கி.பி. 1605இல் மதுரையின் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர், உடையான் சேதுபதியிடம், இராமேஸ்வரம் செல்லும் பயணிகளைக் காக்கும்படிக் கேட்டுக் கொண்டார். மறவர் நாட்டின் அல்லது இராமநாதபுரத்தின் முதல் சேதுபதி மன்னரான உடையான் சேதுபதி, சேது சமுத்திரத்தின் காவலனாக இருந்தார். சேதுபதி என்பது சேதுவின் தலைவன் என்ற பொருள்படும். மறவர் நாடு, வடக்கே வெள்ளாற்றங்கரையில் அமைந்துள்ள அறந்தாங்கியிலிருந்து தெற்கே சாயல்குடி வரை பரவியிருந்தது. சேதுபதிகள், கடற்கரைப் பகுதிகள் முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். இந்த சேதுபதிகள் மதுரை நாயக்கருக்குத் திறை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மதுரை நாயக்கர் அரசின் அரசியல் நுணுக்கத்தின் சாதனை இவ்வாறான பொறுப்பற்றிருந்த இனத்தவரை பொறுப்புடையவர்களாக்கியதாகும். தொடக்கக் காலத்தில் மதுரை நாயக்கர்களுக்குப் பணிந்திருந்த சேதுபதிகள், தங்களது நிலையை உயர்த்திக்கொண்டு, மதுரை நாயக்கரை எதிர்க்க முற்பட்டனர். மதுரை நாயக்கர் அரசு சிறிது தளர்ச்சியடைவதைக் கண்டவுடனேயே சேதுபதிகள் திறை செலுத்துவதை நிறுத்திக் கொண்டனர். நாயக்கர் அரசர்கள் இவர்களைத் தண்டிக்காது விடவே, சிழவன் சேதுபதியின்கீழ் சுதந்திர அரசை ஏற்படுத்தினர். சோழமண்டலக் கடற்கரைப் பகுதியில் ஐரோப்பியருடன் அரசியல் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். போர்த்துக்கீசியர்,

டச்சுக்காரர்கள் ஆகியோர் சேதுபதிகளிடம் உறவு கொண்டிருந்தனர். இவர்கள் தங்களது நிர்வாகமுறையை, இங்கு புகுத்தியதோடல்லாமல், தங்களுக்கு உதவி செய்த தலைவர் களுக்குப் பட்டங்களும் சிலபகுதிகளும் வழங்கினர். இவ்வாறு தோன்றியவைதான் சிவகங்கை, புதுக்கோட்டை சீமைப்பகுதிகள். சேதுபதிகள், இராமநாதபுரத்தில் அரண்மனை வைத்திருந்தனர்; அறிஞர்களையும், இசைவல்லுநர்களையும், நடனமாதர் களையும் போற்றினர்; இராமேஸ்வரம், திருவனந்தபுரம், மதுரை போன்ற கோயில்களுக்கு மானியங்கள் வழங்கினர்; அந்தப்புரத்தையும் வைத்திருந்தனர்; மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு, போர்களிலும் ஈடுபட்டனர். வாரிசுரிமையை அவர்கள் நிர்ணயிக்காததால் உள்நாட்டுப் போரும் தவிர்க்க முடியாததாயிற்று. ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின்பு சேதுபதிகள் சாதாரண சிற்றரசர் போன்று ஒடுக்கப்பட்டனர்; அவர்களது பகுதிகளும் அச்சுறுத்தப்பட்டிருந்தன.

உடையான் சேதுபதி (1605–1622) கூத்தன் சேதுபதி (1622–1636)

சடையக்கத்தேவர் அல்லது உடையான் சேதுபதி, மறவர்நாட்டில் வருவாய் வசூலித்தார். புனிதபயணிகளை பயத்திலிருந்தும், அச்சுறுத்தலிலிருந்தும் காத்தார்; அடங்காத, தலைவணங்காத மக்களை அடிபணியச் செய்தார், மதுரை நாயக்கருக்குத்திறை செலுத்தினார். வன்னியர்களையும், பாளையக்காரர்களையும் சமாதானப்படுத்தி, நாட்டில் சட்டம், ஒழுங்கினை நிலைநாட்டினார். இவர், இராமேஸ்வரம் கோயிலுக்கு ஏராளமான மானியங்களை வழங்கியுள்ளார். தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டுள்ளார். இராமநாதபுரத்திற்கு மேற்கே புகலூரிலிருந்து ஆட்சி செய்த இவர், பின்நாளில் சுதந்திர மறவர் அரசு ஏற்பட அடிப்படைக்கல் நாட்டினார். உடையான் சேதுபதிக்குப்பின், அவரது நான்கு மைந்தர்களில் மூத்தவரான கூத்தன் சேதுபதி 1622இல் அரியணை யேற்றார். இவரது பதினான்கு ஆண்டுகால ஆட்சியில் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு மானியங்கள் வழங்கினார் என்பதுதவிர சிறப்பு அம்சங்கள் எதுவுமில்லை.

இரண்டாம் சடையக்கத்தேவர் (1636–1645)

தனக்கு வாரிசில்லாத காரணத்தால், கூத்தன் சேதுபதி இரண்டாம் சடையக்கத் தேவரை தம் சுவிகார புத்திரனாகத் தேர்ந்தெடுத்தார். கூத்தன் சேதுபதி 1636இல் இறந்தபின், சடையக்கத்தேவர் அரியணையேறினார். மூன்று ஆண்டுகள் அமைதியான ஆட்சி செய்த இவரை "தம்பி" எனும் இவரது இளைய சகோதரர் எதிர்த்தார். மதுரை நாயக்கரை தனக்கு உதவும்படிச் செய்த தம்பி, அண்டைப் பகுதிகளையும் தனக்கு உதவும்படி உடன்பாடு செய்துகொண்டார். இவ்வாறு செய்த முயற்சியால் ஆட்சியைப் பிடிக்க எண்ணினார். மதுரையின் திருமலைநாயக்கர் தம்பிதான் மறவர் நாட்டின் உண்மையான வாரிசு எனவும், சடையக்கர் அரசைக் கைப்பற்றிக்கொண்டவர் என்றும் கருதினார். எனவே, திருமலை நாயக்கர், உடனே திறைபாக்கியை செலுத்த வேண்டும் என ஆணையிட்டார். செய்தி கொண்டு வந்த மதுரை தூதர் கேவலமாக நடத்தப்பட்டார். எனவே, இதனால் ஆத்திரமடைந்த திருமலை, தனது தளபதியான இராமப்பையன் என்பவரை சேதுபதியை அடக்குவதற்காக அனுப்பினார் (1639). ஏராளமான பாளையக்காரர்களின் உதவியுடன் இராமப்பையன் படையெடுத்துச்சென்று சேதுபதியை

இராமேஸ்வரத்திற்கு விரட்டினார். சேதுபதி, டச்சுக்காரர்களின் உதவியை நாடினார். மதுரை நாயக்கர் டச்சுக்காரர்களுக்கெதிராக போர்த்துக்கீசியரை ஏவினார். எனவே சேதுபதி தோல்வியுற்றார்; இவரது மருமகன் வன்னி என்பவன் கொலை செய்யப் பட்டான்; தம்பி அரியணையிலமர்த்தப்பட்டான். மதுரை நாயக்கர் அரசும், மறவர் படையும் தனித்தனியாக நின்று போரிட இயலவில்லை என்ற காரணத்தால் இரு அரசுகளுமே வெளிநாட்டவர்களின் உதவியை நாடின என எஸ். கதிர்வேல் கூறுகிறார். வளர்ந்துகொண்டுவரும் சேதுபதிகளை ஒடுக்க நினைத்த திருமலைநாயக்கர், சேதுபதி அரசுக்குள்ளேயே சில சவால்களை ஏற்கவேண்டியதாயிற்று. புதிதாக அரியணையேறிய தம்பியால் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கமுடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட, இரண்டாம் சடையக்கரின் உறவினர்களான இரகுநாததேவர், நாராயண (தனக்க) தேவர் ஆகியோர் புரட்சிக்குரல் எழுப்பினர். இவர்கள், சடையக்கரை சிறையிலிருந்து விடுவித்து, புகலூரின் அரியணையிலமர்த்தும்படி, நாயக்கரைக் கட்டாயப்படுத்தினர். மீண்டும் அரசுப்பொறுப்பேற்ற சடையக்கர் ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்து கி.பி. 1645இல் உயிர்நீத்தார். 'தளவாய் சேதுபதி' என்ற பெயர் பெற்ற இவர் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு மானியங்கள் பல வழங்கினார்.

மீண்டும் மறவர்நாட்டில் அரசியல் சிக்கல்கள் தோன்றின. எனவே, திருமலை, மறவர்நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்று போட்டியாளர்களுக்கும் கொடுத்தார் — இரகுநாதர், தனக்கதேவர், தம்பி. இவ்வாறு பிரச்சினையை வளரவிடாமல் நாயக்கர் தடுத்தார். விரைவிலேயே தம்பியும் தனக்கதேவரும் இறந்துவிடவே, இரகுநாததேவர், மூன்று பகுதிகளையும் ஒருங்கிணைத்து புகலூரின் அரியணையை அலங்கரிக்கலானார்.

இரகுநாத சேதுபதி (1645–1674)

இரண்டாம் சடையக்கத் தேவரை பின்விளைவைப் பற்றிச் சிந்திக்காத புரட்சியாளர் என்றும், கிழவன் சேதுபதியை ஒரு சிறந்த வீரர் என்றும், கிறித்தவர்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றவர் என்றும் ந. சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். மேற்கூறிய இரு மன்னர்களையும் சிறப்பான இடத்தில் வைக்கக்கூடாது என்று கருதிய அவர் இரகுநாத சேதுபதியை, சேதுபதிகளிலேயே சிறந்த ஆட்சியாளர் என்று போற்றுகின்றார். இரகுநாதசேதுபதி அவரது வெற்றிகரமான போர்களுக்காகப் புகழப்படவில்லை. ஆனால், அவர் திருமலை மன்னருக்குப் பணிந்திருந்தமையாலும், கலைக்கும், இலக்கியத்துக்கும் செய்த தொண்டினாலும், அவரது தனிப்பட்ட பண்புகளாலுமே சிறந்தவர் எனப் புகழப்படுகிறார் என்பது ந. சுப்பிரமணியன் கூறும் கருத்தாகும். உண்மையில் இரகுநாத சேதுபதி சிறந்த வீரரே. ஆனால், சுதந்திர மறவர் நாட்டுக்கு அடிகோலிய கிழவன் சேதுபதி போன்று இவர் சிறந்த வீரர் என்பதற்கில்லை.

தொடக்கத்தில், இவர் தம்பியின் உதவியோடு தஞ்சைப் படைகளைத் தோற்கடித்தார்; மன்னார்கோயில், தேவகோட்டை, அறந்தாங்கி, திருவாரூர் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். கி.பி. 1656இல் மைசூரின் உடையார் வமிசம் தமிழகத்தின் பகுதிகளைக் கைப்பற்ற முயன்றது. இரகுநாதர் உடனே படைநடத்திச் சென்று நாயக்கர் அரசுக்கு

உதவினார். இதனால் திருமலை நாயக்கர், சேதுபதியிடமிருந்து வசூலிக்கும் திறையை நீக்கினார். "திருமலை சேதுபதி" என்ற சிறப்புப் பெயரையும் இரகுநாதருக்குக் கொடுத்தார். காலத்தால் செய்த உதவிக்கு ஈடாக, திருப்புவனம், திருச்சுழி, பள்ளிமடம் பகுதிகள், சேதுபதிக்குக் கொடுக்கப்பட்டன.

காலம் முழுவதும், இரகுநாதர், தனது மேலாண்மை நாயக்கர் அரசுக்குப் பணிந்து செயல்பட்டார்; துன்பங்கள் ஏற்படும் போதெல்லாம் அவ்வரசுக்கு உதவினார். குதுப்கான் தலைமையிலான முகமதியர்கள் மதுரையைப் பலமுறை தாக்கியபோது அவர்களை அடக்குவதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார். இந்த மாபெரும் பணிக்காக, சேதுபதி மன்னரே, தன்பெயரில் நவராத்திரி திருவிழாவை நடத்த அனுமதி வழங்கினார். திருமலை சேதுபதி எட்டையபுரத்துப் பாளையக்காரர் புரட்சி செய்த போதும் அவரை அடக்கினார். மன்னார்கோயில் பகுதிகள் பல இவருக்குக் கொடுக்கப்பட்டதோடு, கடற்கரைப் பகுதிகளைக் காக்கும் பொறுப்பும், முத்துக்குளித்தலில் ஏராளமான வரி திரட்டும் உரிமையும் கொடுக்கப்பட்டன.

மைசூரின் கந்திரவநரசராய உடையாருக்கும், திருமலை நாயக்கருக்குமிடையே நடந்த மூக்கறுப்புப் போரில் (War of the Noses), இரகுநாத சேதுபதி, எதிரிகளை சத்தியமங்கலத் திலிருந்து விரட்ட உதவினார். மறவர் படை, எதிரிகளை விரட்டியடித்து, நஞ்சன்கூடு பகுதியில் மைசூர் அரசர் உட்பட்ட பலரது மூக்குகளை அறுத்தெறிந்தது. இத்தருணத்தில் தான் திருமலை சேதுபதி என்ற பெயர் இவருக்குக் கொடுக்கப்பட்டது.

திருமலைநாயக்கரின் பேரனான சொக்கநாதநாயக்கர் தஞ்சைக்கு எதிரான போர்களில் ஈடுபட்டிருந்தபோது, அன்றைய நாயக்க அரசின் தலைநகரான திருச்சியை, பிஜப்பூர் படைத்தளபதி வானமியான் முற்றுகையிட்டார். இந்நிலையைச் சமாளிக்க, சொக்கநாதர், திருமலை சேதுபதியின் உதவியை நாடினார். ஆனால் திருமலை சேதுபதியோ, உதவமறுத்ததோடு, சொக்கநாதருக்கு திறை செலுத்தவும் மறுத்தார். சேதுபதியுடன் போர் தொடுப்பது தவிர்க்க முடியாதது எனக் கருதிய சொக்கநாதர், தானேபடை ஒன்றை நடத்திச் சென்றார். திருப்பத்தூர், மானாமதுரை, காளையார்கோயில் பகுதிகளைக் கைப்பற்றிவிட்டுச் சமய விழாவில் கலந்து கொள்வதற்காகத் திருச்சி திரும்பினார். எனவே சேதுபதியை அடக்கும் பொறுப்பைத் தமது தளபதிகளிடம் ஒப்படைத்தார். ஆனால் மறவர்தலைவர் இரண்டுபங்கு வீரத்துடன் போரிட்டு மதுரைப்படைகளைத் தோற்கடித்தார். வேறுவழியில்லாமல், மதுரைப்படை நாடு திரும்பியது.

இரகுநாத சேதுபதியின் பிறகால நடவடிக்கைகள் புரட்சிகரமாகவும், சுதந்திரமடைய வேண்டும் என்ற நோக்கமாகவும் இருந்தாலும் இவரை ஒரு சுதந்திர அரசர் எனச் சொல்வதற்கில்லை (இவர் என்றும் மதுரையிலிருந்து பிரிந்து சுதந்திரமாக இயங்கவில்லை). சேதுபதி மன்னரின் இந்தச் செயல்கள் மேற்கூறிய ந. சுப்பிரமணியன் அவர்களின் கருத்துக்கு மாறாக உள்ளன. எனவே சொக்கநாதருக்கு எதிராக இரகுநாதரின் செயல்களும் பின் விளைவைப் பற்றிச் சிந்திக்காத புரட்சிச் செயல்களே எனலாம்.

இரகுநாதர் இலக்கிய மேதைகளை ஆதரித்தார்; பல கோயில்களில் திருப்பணி செய்தார்; புதியவனவற்றைக் கட்டினார். தமிழ், தெலுங்குமொழிகள் அரசாங்க நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டன. அழகிய சிற்றம்பலக் கவிராயர், அமிர்தக்க விராயர் போன்றோர் இவரால் ஆதரிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்களாவர். இவர், ஹிரன்யகர்ப்பயாகங்கள் செய்து, ஹிரன்யகர்ப்பயாஜி என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றார். இராமேஸ்வரம் திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்தைக் கட்டியவர் இவரே எனக் கூறப்படுகிறது. தமிழகத்தின் சிறந்த சமயத் துறவியான தாயுமானவர் இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்தார்.

இரண்டாம் இரகுநாத சேதுபதி (1674–1710)

திருமலை சேதுபதி இரண்டு மைந்தர்களைப் பெற்றிருந்தார் — ராஜா சூரியத்தேவர் அல்லது கட்டத்தேவர், அதனத்தேவர். திருமலை சேதுபதி கி.பி. 1674இல் இறந்துவிடவே இவரது மூத்தமகன் கட்டத்தேவர் பதவியேற்றார். கட்டத்தேவர் மதுரை அரசரை மதிக்கத் தவறியதோடு மட்டுமன்றி, தஞ்சையில் நடந்த உள்நாட்டுப்போரில், சொக்கநாதருக்கு எதிராக செங்கமலதாஸை ஆதரித்தார். இதனைத் தொடர்ந்து நடந்தபோரில் கட்டத் தேவர்தானே மதுரைக்கு எதிராகப் படை நடத்திச்சென்றார். ஆனால் போர் சொக்க நாதருக்கு வெற்றியாக முடிந்தது. சேதுபதி கைது செய்யப்பட்டார். சிறையிலேயே சில நாட்களில் அவர் இறந்துவிட்ட காரணத்தால் மறவர்நாட்டில் வாரிசுப்போர் ஒன்று ஏற்பட வேண்டியநிலை உருவாகியது. மூன்று மாதகாலம் ஆட்சி செய்துவிட்டு, திடீரென்று அதனத்தேவர், இறந்துவிட்டதால் இவ்வாரிசுப் பிரச்சினை மேலும் வலுத்தது.

அரசுரிமைப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இரகுநாததேவர் (படைத்தளபதி), சிறுவல்லி பாளையத்தின் தலைவர் தடியத்தேவர் ஆகியோராவர். இரகுநாத தேவர் கட்டத்தேவரின் ஐந்தாவது மனைவியான, கொண்டையன் கோட்டை மறவர் பெண் ஒருத்திக்குப் பிறந்த மகனாவார் (முறைகேடான வழியில் தோன்றிய மகன் எனக் கூறப்படுகிறது). இவரை அரசராக்க அரசவை உறுப்பினர்கள் விரும்பவில்லை. இதேபோன்று, திருமலை சேதுபதியின் தாய்வழி உறவினரான தடியத்தேவரும் அரசைக் கைக்கொள்ள முயன்றார். ஆனால் நாட்டு மக்கள் இரகுநாத தேவரை விரும்பியதால், அவர் கிழவன் சேதுபதி என்ற பெயருடன் அரியணையேறினார். இரகுநாதர் என்ற திருமலை சேதுபதி, இரகுநாதர் என்ற கிழவன் சேதுபதி என்னும் இரு இரகுநாத சேதுபதிகள் ஆட்சி செய்து வந்ததால் இருவரையும் வேறுபடுத்திக் காட்டும் வகையில் கிழவன் சேதுபதியை இரண்டாம் இரகுநாத சேதுபதி எனக் கொள்ளலாம். 'கிழவன்' என்ற சொல் முதியவர் என்று பொதுவாகப் பொருள் கொள்ளப்படும் என்றாலும், வரலாற்று அடிப்படையில் இங்கு இச்சொல் "உண்மையான ஆட்சியாளர்" (legitimate) என்றே பொருள் கொள்ளப்பட வேண்டும். கிழவன் சேதுபதி என்பது உண்மையான உரிமையோடு எந்தச் சேதுபதி பதவியில் அமர்கின்றாரோ அந்தச் சேதுபதியையே குறிக்கும் என்றும் ந. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். இரகுநாத சேதுபதிக்கு எதிராகத் தடியத்தேவர், தனது ஆதரவாளர்களுடன் சேர்ந்து கொண்டு, புரட்சி செய்ததால் அவரைச் சமாதானப்படுத்துவதற்காக, சேதுபதி, தமது ஒன்றுவிட்ட சகோதரியை தடியத்தேவருக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

தனது நிலையை வலுப்படுத்துவதற்காக, இவர், மறவர் பகுதியில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்த தமது ஆதரவாளர்கள் இருவரை அடக்கும் பணியில் முதலில் ஈடுபட்டார். புதுக்கோட்டைப் பகுதியின் தலைவராயிருந்த பல்லவராயன் என்பவர் தஞ்சை மன்னரிடம் பற்றுறுதி கொண்டிருந்தார். இதனைவெறுத்த சேதுபதி, அவனை, வெளியேற்றிவிட்டு இரகுநாதர் (தொண்டைமான்) என்பவரைப் புதுக்கோட்டைத் தலைவராக நியமித்தார். கள்ளர் வமிசத்தைச் சேர்ந்த, (இரகுநாதரின் சகோதரி) கதளி (காதாயி) என்ற பெண்ணை ஆசைநாயகியாக சேதுபதி மன்னர் வைத்துக்கொண்டிருந்த தால்தான், இரகுநாதர் என்ற அவளது சகோதரரை புதுக்கோட்டையின் தலைவ ராக்கினார் எனக்கூறப்படுகிறது. இரகுநாதர், தொண்டைமான் என்ற பட்டத்துடன் புதுக்கோட்டையின் தலைவவராகப் பொறுப்பேற்றார். இவரே புதுக்கோட்டை கள்ளர் நாட்டைத் தோற்றுவித்தவராவார். சிறுவள்ளி பாளையத்திற்கருகே நல்கோட்டைப் பாளையம் என்ற பாளையக்கார அரசையும் உருவாக்கினார். கிழவன் சேதுபதியின் நெருங்கிய உறவினரான பெரிய உடையத்தேவர் பாளையக்காரராக ஆக்கப்பட்டார்.

இரகுநாத சேதுபதி, இராமநாதபுரத்திலிருந்த மண் சுவர்களை இடித்துப் புதிய கற்களாலான கோட்டையைக் கட்டி முடித்தார்; அதன் பின் புகலூரிலிருந்து தலைநகரை இராமநாதபுரத்திற்கு மாற்றினார். முதல் சுற்றுச்சுவர் 27 அடி உயரமும் 5 அடி அகலமும் கொண்டிருந்தது. இதனைச் சுற்றி அகழி வெட்டப்பட்டது. இராணுவ அமைப்பை வலுப்படுத்தின. சுமார் 80 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையான வீரர்களை இராணுவத்தில் சேர்த்தார் இவ்வாறு தனது நிலையை வலுப்படுத்தி, இராமநாதபுரத்தின் நிகரற்ற தலைவரானார். இதனால் பேராசை மிகுந்து, சாதுரியமான முறையில் தனது மேலாண்மை நாயக்கர் அரசின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இயங்க முயன்றார்.

ஆனால் இந்த சுய எண்ணத்தைக் காப்பதற்கு முன் மதுரைக்குச் சென்ற இரகுநாதர், ரஸ்தம் கான் என்ற முகமதிய தலைவனிடமிருந்து மதுரையைக் காப்பாற்றினார். பல எதிரிகளின் தாக்குதலால் அயர்ந்து போன சொக்கநாதருக்கு அரசவையிலும் எதிர்ப்புக்கள் கிளம்பின. அரசவை எதிரிகள் சொக்கநாதரை, பதவியிலிருந்து வெளியேற்றிச் சிறைப்படுத்தினர். இதனைத் தன்க்குச் சாதகமாக்கிக் கொள்ள விரும்பிய ரஸ்தம்கான் தானே அரசைக் கைப்பற்றிக் கொண்டார்; அரசரைச் சிறையிலிருந்து விடுவித்தார்; ஆனால் ஆட்சிப் பொறுப்பைத் தானே வைத்துக் கொண்டார். கிழவன் சேதுபதி. கன்னிவாடியின் கோவிந்தப்பையன் சின்ன கத்திரி நாயக்கர் என்பவரின் உதவியோடு, ரஸ்தம்கானைத் தோற்கடித்துக்கொன்று, சொக்கநாதரை மீண்டும் பதவியிலமர்த்தினார். இந்தச் சேவையைப் பாராட்டிய சொக்கநாதர் கிழவன் சேதுபதிக்கு பர ராஜ கேசரி என்ற சிறப்புப் பெயரைக் கொடுத்து தனது படைத் தளபதியான குமரப்பிள்ளையின் சேவையையும் அவருக்கு மாற்றினார். ஆனால் சில நாட்களில் சேதுபதி, நாயக்கர் மீதான தனது கொள்கையை மாற்றிக் கொண்டார்.

மைசூர்படை மதுரை நாயக்கர் அரசுக்கெதிராக போர் தொடுத்தபோது, இரகுநாத சேதுபதி, மதுரைக்கு உதவாமல், நேரடியாக மைசூருடன் சேர்ந்து கொண்டு நாயக்கர் அரசை அழிக்க முற்பட்டார். தஞ்சை அரசின் உதவியோடு மதுரையின் பகுதிகள்

சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்; பின் 1683இல் தஞ்சை பகுதிகள் சிலவற்றையும் தன்நாட்டுடன் சேர்த்துக் கொண்டார்.

சேதுபதியின் இந்தத் தவறானப்போக்கை அறிந்த தளபதி குமரப்பிள்ளை இராமநாதபுரத்தில் சேதுபதிக்கு எதிராகக் கலகம் செய்யத்தொடங்கினார். உடனே சேதுபதி இராமநாதபுரம் நோக்கிச் சென்று தளபதி குமரப்பிள்ளையின் கலகத்தை ஒடுக்கினார். இவ்வாறு உள்நாட்டுச் சிக்கல்களிலிருந்து சேதுபதி தமது நாட்டைக் காத்தார்.

இந்நிகழ்ச்சி மீண்டும் மதுரைக்கும் இராமநாதபுரத்திற்குமிடையே பகையை வளர்த்ததோடல்லாது மறைமுகமாக தஞ்சை, மைசூர் அரசுகளின், வெற்றிக்கும் உதவியது எனலாம். கி.பி. 1682இல் சொக்கநாதருக்குப்பின் மூன்றாம் ரங்ககிருஷ்ண முத்துவீரப்பர் அரியணையேற்ற பொழுது, மதுரை அரசின் பகுதிகள் பல மைசூரிடம் சிக்கியிருந்தன; சில பகுதிகள் தஞ்சையிடமும், மறவரிடமும் சிக்கியிருந்தன. மூன்றாம் முத்துவீரப்பரின் பணியிலிருந்து விலகிய வெங்கட கிருஷ்ணப்பருடன் சேதுபதி உடன்பாடு செய்து கொண்டார். கி.பி. 1686இல் தஞ்சை மராத்தியரின் உதவியை நாடினார். தஞ்சையின் உதவிக்கு ஈடாக பாம்பார் முதல் புதுக்கோட்டைவரையான மறவர் பகுதியின் வருவாயைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு வசூலிக்கும் உரிமையை, தஞ்சைக்குக் கொடுக்க முன்வந்தார். ஆனால் குமரப்பிள்ளை இப்போது தலையிட்ட காரணத்தால் இந்த முயற்சி உடனே ஈடேறவில்லை. இத்திட்டத்தைத் தடுக்க குமரப்பிள்ளையால் எடுக்கப்பட்ட முயற்சிகள் இறுதியில் தோல்வியுற்றன. எனவே சேதுபதியையும் வெங்கடகிருஷ்ணப்பரையும் கைதுசெய்து மதுரைநாயக்கரிடம் ஒப்படைக்க அவர் முயன்றார். கோபமுற்ற சேதுபதியோ கொடூரமான முறையில் குமரப்பிள்ளையைக் கொன்றார். சேதுபுரம் என்ற இடத்தில் நடந்த போரில் மதுரை நாயக்கரைத் தோற்கடித்தார். இதற்காக உதவிய தஞ்சைக்கு, பட்டுக்கோட்டைக்கருகே சில பகுதிகளைக் கொடுத்தார்.

வெகுவிரைவில், இராமநாதபுரத்திற்கும் தஞ்சைக்குமிடையேயான உறவுகள் துண்டிக்கப்பட்டன. எனவே இருநாடுகளுக்குமிடையே போர் நடந்தது; போரில் சேதுபதி வெற்றிபெற்றார். அறந்தாங்கி, திருமயம், பிரான்மலை, அம்பரி அம்பியன் நதிக்குத் தெற்கே உள்ள பகுதிகள் (புதுக்கோட்டை தவிர) ஆகியவை சேதுபதியால் கைப்பற்றப்பட்டன.

வெற்றிகள் பல பெற்ற சேதுபதி, தனது நிலையை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கு முன்பு, சமயப்பிரச்சினை ஒன்றில் ஈடுபடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கி.பி. 1690ஆம் ஆண்டு வாக்கில் இயேசு சபையின் உறுப்பினர்கள் ஏராளமான மக்களை மதமாற்றம் செய்திருந்தனர். கிறித்தவர்கள், தாழ்த்தப்பட்ட இந்துமக்களை, அதாவது, பரவர், பரையர்கள் ஆகியோரை, மதமாற்றம் செய்ததோடல்லாது மறவர்களையும் தங்கள் சமயத்திற்கு மாற்ற முயற்சித்தனர். கிழவன் சேதுபதியின் அதிகாரத்தையும் செயல்களையும் வெறுத்த மறவர் பலர் தாங்களே கிறித்தவசமயத்தில் சேர்ந்தனர். மதுரை கிறித்தவ சமய மடாலயத்தின் உறுப்பினரான ஜான் டி பிரிட்டோ அடிகளார், கிழவன் சேதுபதியின் நெருங்கிய உறவினர் பெண் ஒருத்தியையும், படைத் தளபதியாயிருந்த பூவரத்தேவர் என்பவரையும் கிறித்தவ சமயத்திற்கு மாற்றுவதில் வெற்றி கண்டார். இந்து சமயத்தின்

காவலர்கள் என்று கருதப்பட்ட பிராமணர்கள், இராமநாதபுரம் பகுதியில் கிறித்தவ சமயம் வளரவிடாமல் தடுக்குமாறு சேதுபதியைத் தூண்டினர். இந்து சமயத்தின் மற்ற இனத்தவரும் பிராமணருடன் சேர்ந்துகொண்டு, மன்னரை, கிறித்தவருக்கெதிரான நடவடிக்கைகளை எடுக்குமாறு தூண்டினர். சேதுபதி மன்னர் மறவர் இனத்தில், கிறித்தவமறவர், இந்துமறவர் என்ற பிரிவினை ஏற்பட்டுவிடாமல் தடுப்பதற்காகவே கிறித்தவர்களைத் தண்டித்தார் என எஸ். கதிர்வேல் குறிப்பிடுகின்றார். இதனை உறுதிப்படுத்த, அவர் கிறித்தவசமயத்திற்கு மாறிய சேதுபதியின் மைத்துனர், சேதுபதியோடு கலகம் செய்ததை எடுத்துக் காட்டுகிறார். இக்கலகக்காரர் சேதுபதியைத் தோற்கடிக்க தஞ்சாவூர் அரசின் உதவியை நாடினார்; இச்சதித்திட்டம் நிறைவேறுவதற்கு முன்பே, சேதுபதிமன்னர், கலகக்காரரைத் தண்டித்து விட்டார். இக்கலகம் ஜான் டி பிரிட்டோ அடிகளாரின் தூண்டுதலாலும், கண்காணிப்பாலும் நடத்தப்பட்டது எனச் சேதுபதி சந்தேகித்தார். எனவே பிரிட்டோவைக் கைதுசெய்து, அவரை இராமநாதபுரத் திலிருந்து வெளியேறுமாறு கட்டாயப்படுத்தினார். இதுவரை கிறித்தவ சமயத்திற்கு மாறியவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். கிறித்தவ சமயப் போதகர்களும் தண்டிக்கப்பட்டனர்.

மறவர் நாட்டை ஒன்றுபடுத்த வேண்டும் என்று சேதுபதி எடுத்த முயற்சிகள் கி.பி. 1692இல் பிரிட்டோ திரும்பவும் சமயப்பிரச்சாரத்திற்கு வந்தபோது தடைப்பட்டன. பிரிட்டோ தாழ்த்தப்பட்ட, ஏழை, கல்வியறிவற்ற பாமர மக்களுக்காக உழைக்க வேண்டும் என உறுதி கொண்டார். கி.பி. 1692இல் சமயமாற்றங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமல்லாது மறவர், அகமுடியர் போன்ற உயர் இன மக்களும், அரசின் உறவினர்களும்கூட சமயமாற்றத்திற்குள்ளானார்கள் என பிரிட்டோ எழுதினார். சேதுபதி சமயம் மாறிய மக்கள் பலரைத் தண்டனைக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் பிரிட்டோ சுமார் 8000 மறவர்களை கிறித்தவ சமயத்திற்கு மாற்றினார். தடியத்தேவர் பிரிட்டோவின் சீடராக கிறித்தவ சமயத்தில் நுழைந்ததோடல்லாது தன் ஒரு மனைவி தவிர மற்ற மனைவியரை ஒதுக்கிவிட்டார். இராமநாதபுர அரசுக்கு உறவினரான சிறு வள்ளி பாளையக்காரரும் கிறித்தவ சமயத்தில் சேர்ந்தார்.

மனம் நொந்த, வெளியேற்றப்பட்ட, தடியத் தேவரின் மனைவிகளில் ஒருத்தி, தன்கணவனின் மனத்தை மாற்றும்படிச் சேதுபதியைக் கேட்டுக்கொண்டாள். அவள் கேட்டுக்கொண்டதாலும், பிராமணர்களின் தூண்டுதலாலும், சேதுபதி பிரிட்டோவைத் தண்டிக்க எண்ணினார். தனது அரசை வலுவுள்ளதாக ஆக்கியதற்குப் பின் பிரிட்டோ வுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கும் சூழல் அவருக்கிருந்தது. திருச்சபை களைத் தீயிட்டுக் கொளுத்தும்படி ஆணையிட்டார். தடியத் தேவரின் செல்வாக்கு உயர்வதையும், போர்ச்சுக்கல் அரசருக்குப் பரவர் இனத்தவர் ஆதரவு தெரிவித்ததையும் உணர்ந்தார். 1693இல் இவரது ஆணைப்படி, பிரிட்டோ கைது செய்யப்பட்டார்; சங்கிலியால் கட்டப்பட்டு இராமநாதபுரம் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டார். வழியில் பல கிறித்தவ சமயப் பிரச்சாரகர்கள் கொலை செய்யப்பட்டனர். இந்து இனமக்களின் தூண்டுதலாலும், பிராமணர்களின் உந்துதல்களாலும் தனது ஆதரவாளர்

களின் வேண்டுதல்களாலும் கட்டுண்ட சேதுபதி, பிரிட்டோவைக் கொலை செய்ய ஆணையிட்டார். தடியத்தேவர், மறவர் படைத்தளபதி ஆகியோரின் வேண்டுதல்கள், ராணி மங்கம்மாளின், சமய விவகாரங்களில் பொறுமையாக நடக்க வேண்டும் என்ற ஆணை, ஆகிய யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காயின. சேதுபதி, பிராமணர்கள், யாகங்கள் செய்து பிரிட்டோவைக் கொல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கினார். பிராமணர்களின் யாகங்கள் பிரிட்டோவை அழிக்காது போகவே, ஓரியூரின் ஆளுநரின் ஆணைப்படி 1693ஆம் ஆண்டு பிப்ரவரியில் பிரிட்டோவின் தலை துண்டிக்கப்பட்டது.

சேதுபதி, தடியத்தேவரை சமாதானப்படுத்தி தமது ஆலோசகர்களில் ஒருவராக நியமித்தார்; அவருக்கு ஏராளமான சலுகைகளையும் நிலங்களையும் வழங்கினார். மறவர் படைத்தலைவரை நீக்கிவிட்டு, இவரது உறவினர் அப்பதவியிலமர்த்தப்பட்டார். மீண்டும் மதுரையிலிருந்து பிரிந்து சுதந்திரமாக இயங்க முயன்றார். மதுரையில் பகர ஆட்சியாளராக ராணி மங்கம்மாள் இருந்தபொழுது, முகலாயப் படைத்தளபதி சூல்பிகர்கான் மைசூரியர்கள் ஆகியோரின் படையெடுப்பு ஏற்பட்டது. மங்கம்மாள், எதிரிப்படைத் தளபதிகளுக்கு இலஞ்சம் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார். சேதுபதி மன்னர், மதுரைக்கு எதிராக செயல்பட்டதால், எதிரிகளுக்கெதிராக மங்கம்மாவால் போர் செய்ய முடியவில்லை. இதனைப் பயன்படுத்தி சுதந்திர மறவர் அரசை உருவாக்கவே சேதுபதி முயன்றார். மங்கம்மாள் திருவாங்கூருக்கு எதிராகப் படை நடத்திச் சென்றிருந்தபொழுது, சேதுபதி, மதுரையைக் கைப்பற்றிச் சிலநாட்கள் வைத்திருந்தார். மறவரின் இவ்வெற்றி நீண்டநாள் நீடிக்கவில்லை. மதுரையின் தளவாய் நரசப்பையர் மறவர்களைத் தோற்கடித்து நாட்டை விட்டு விரட்டினார். இவ்வாறு மறவர்கள் விரட்டியடிக்கப் பட்டாலும், மதுரை நாயக்கர் அரசு மறவர் நாட்டின் மீதான தனது ஆதிக்கத்தை இழந்தது.

தஞ்சை அரசரின் தவறான உறுதிமொழிகளாலும், உடன்பாட்டை செயல்படுத்தத் தவறியதாலும், சேதுபதி மன்னர் தஞ்சைமீது போர் தொடுத்தார். அறந்தாங்கி, திருமயம்கோட்டை, பிரான்மலை, ஆம்பியன் ஆற்றுக்குத்தெற்கே உள்ள பகுதிகள் கைப்பற்றப்பட்டன. இந்தச்சூழ்நிலையைப் பயன்படுத்திய ராணிமங்கம்மாள் தஞ்சாவூரைத் தாக்க முடிவு செய்தார். ஆனால், ஏற்கனவே பல பிரச்சினைகளில் ஈடுபட்டிருந்ததால், தயக்கத்தோடு, தனது திட்டத்தைக் கைவிட்டார். கி.பி. 1700இல் முகலாயர்களையும், மைசூரியர்களையும் நண்பர்களாக்கிக்கொண்டு, தஞ்சைக்கு எதிராக நரசப்பையரை அனுப்பி வைத்தார். இருநாட்டுப்படைகளும் சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டன; கடைசியாக இருவருக்குமிடையே ஒரு உடன்பாடு செய்யப் பட்டது. நரசப்பையர் சாதுரியமான முறையில், மதுரையின் எதிரிகளின், சேதுபதி போன்றோருக்கு எதிராக, தஞ்சையுடன் நட்பு உடன்பாடு செய்து கொண்டார். நரசப்பையரின் தலைமையில் மதுரை, தஞ்சைப்படைகள் இராமநாதபுரத்தைத் தாக்கின, போரில் நரசப்பையன் இறந்துவிடவே, சேதுபதி எதிரிகளின் படைகளைச் சுலபமாக விரட்டியடித்தார். இதன்பின் கி.பி. 1702இலிருந்து, மதுரையின் மேலாண்மையை விட்டு, சுதந்திர அரசராக விளங்கத் துவங்கினார்.

சுமார் ஏழாண்டுகள்வரை சேதுபதி எந்தவித உள்நாட்டு, வெளிநாட்டு அச்சுறுத்தலின்றியும், குழப்பமின்றியும் ஆட்சி செய்தார். ஆனால் 1709ஆம் ஆண்டு பெரும் வரட்சியும் கொடுமையான பஞ்சமும் தாண்டவமாடின. மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்; இதனைத் தொடர்ந்து தஞ்சை அரசர் போர்தொடுத்து, தான் சேதுபதியிடம் இழந்த இடங்களைத் திரும்பப் பெற்றார். ஆனால் இவ்வெற்றி பல நாட்கள்கூட நீடிக்கவில்லை. சேதுபதி மீண்டும் தஞ்சையைத் தோற்கடித்தார். 1709ஆம் ஆண்டுமுதல் மறவர் நாட்டின் முதல் சுதந்திர அரசராகக் கிழவன் சேதுபதி திகழ்ந்தார்.

தனது மேலாண்மை அரசுக்குப் பணிதல், அறிஞர்களைப் பேணுதல், கலை, கட்டடக்கலையை ஊக்குவித்தல் போன்றவைதான் ஒரு நாட்டின் அரசனுக்குத் தேவை என்றால், சந்தேகத்திற்கு இடமின்றி, திருமலை சேதுபதிதான் சிறந்த மன்னன் எனலாம். அரசியல், சுதந்திரம், தலைமையேற்று நடக்கும் சக்தி, நிர்வாகத் திறன், கொடுமையான கொள்கைகள், சிந்திக்கும் ஆற்றல், பேராசை இவற்றையெல்லாம் பெற்றிருக்கின்றவர்தான் சிறந்த அரசராக முடியும் என்றால் கிழவன் சேதுபதிதான் சிறந்தவர் எனலாம். திருவாடானை கோயிலுக்கு நிலம் மானியமாக வழங்கியதிலிருந்தும், மடங்கள் நன்றாக நடத்தப்பட உதவியதிலிருந்தும், காளையார் கோவிலுக்கு அருகில் உள்ள கோயிலுக்கு கிராம தானம் வழங்கியதிலிருந்தும், கிறித்தவ சமயத்திற்கு மாறியவர்களைத் தண்டித்ததிலிருந்தும், கிழவன் சேதுபதி மதத்தின் மீது கொண்டிருந்த பற்று வெளிப்படுகிறது. இவரது முப்பத்தாறு ஆண்டுகளின் ஆட்சி பல முக்கிய நிகழ்ச்சிகளைக் கொண்டதாகும். ஜான் டி பிரிட்டோவுக்கு இவர் செய்த கொடுமை தவிர வேறு குற்றங்கள் இவர்மீது சுமத்தும்படி இல்லை. வைகை ஆற்றின் குறுக்கே அணைகட்டினார் எனவும், முகவை ஊரணியை உண்டாக்கினார் எனவும் இவரைப்பற்றி கூறப்படுகிறது. சோழ மண்டலக் கடற்கரையில் டச்சுக்காரர்களுடன் சுமுகமான உறவு கொண்டிருந்தார். அதே சமயத்தில் தமிழகத்தில் போர்த்துக்கீசியரின் கொள்கைகளை எதிர்த்தார். கிழக்குக் கடற்கரைப் பகுதியில், குறைந்த அளவு வரி செலுத்தி, மீன்பிடிக்கும் உரிமையை டச்சுக்காரர்களுக்குக் கொடுத்தார். பெரிய அந்தப்புரத்தை வைத்திருந்தார். இங்கு எல்லாவிதமான தவறுகளும் நடந்தன எனக் கூறப்படுகிறது. கி.பி. 1710இல் இவர் இறந்தபோது இவரது நாற்பத்தேழு மனைவியரும், ஆசைநாயகிகளும் உடன்கட்டை ஏறினர். இவரது 36 ஆண்டு கால ஆட்சியில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் எதிர்ப்புகள் வந்த போதும், அத்தனையும் கிழவன் சேதுபதி வெற்றிகண்டார் என எஸ். கதிர்வேல் குறிப்பிடுகின்றார்.

விஜயரகுநாத சேதுபதி (1710–1720)

கிழவன் சேதுபதி வாரிசின்றி இறந்துவிட்ட காரணத்தால், மறவர்நாட்டில், வாரிசுப் போட்டி ஒன்று ஏற்பட்டது. இப்போட்டி, மறவர் நாட்டின் சுதந்திரத்தையும், தனிமையையும் அச்சுறுத்தியது. கிழவன் சேதுபதியின் முறையற்ற மகன் பவானி சங்கர தேவருக்கும், கிழவன் சேதுபதியின் சகோதரரின் மகன் விஜயரகுநாத தேவருக்குமிடையே வாரிசுப்போர் ஏற்பட்டது. மறவர் வழக்கப்படி பவானியை விட்டுவிட்டு விஜயரகுநாதரை ஆதரித்தனர். கி.பி. 1710இல் விஜயரகுநாதர் அரியணையேறினார். இதனால்

பொறாமையுற்ற பவானி சங்கரர், கிறித்தவர்கள்மீது இரக்கமற்றவராக மன்னர் இருப்பதாகக் கூறி அவர்களுடன் நட்புக் கொண்டார். விஜயரகுநாதரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு உதவுமாறு புதுக்கோட்டைத் தொண்டைமான் அரசரைக் கேட்டுக்கொண்டார். ஆனால் அவரது முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. எதிரிகளைச் சமாளிக்க, சேதுபதி, தனது நாட்டை இருபத்திரெண்டு இராணுவப் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒரு தலைவனின் கீழ் அமைத்தார். இப்பகுதிகள் திறை செலுத்துவதற்குப் பதிலாக நெருக்கடி காலங்களில் இராணுவ உதவி செய்தனர். விஜயரகுநாத சேதுபதி கோட்டைகளைப் பலப்படுத்தினார். அறந்தாங்கி கோட்டையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து அங்குத் தங்கினார். பிரெஞ்சுக்காரர்களின் உதவியோடு கமுதியில் கோட்டை ஒன்று கட்டினார். டச்சுக்காரர்களின் உதவியோடு பீரங்கிப் படைப்பிரிவு ஒன்றைத் துவக்கினார். இராமர், இலட்சுமணர் என்ற இரு படைத்தலைவர்களிடம் அன்பு செலுத்தி அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். இவ்வளவு ஏற்பாட்டிற்கிடையேயும் பவானி புதுக்கோட்டைக்கருகே சில பகுதிகளைக் கைப்பற்றினார். விஜயரகுநாதர் நிலங்களை அளந்து சீர்திருத்தி அமைத்தார். நீர்ப்பாசன குளங்கள் வெட்டப்பட்டன; கால்வாய்கள் அமைக்கப்பட்டன. இரகுநாத சமுத்திரம் என்ற ஏரி வெட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது. இந்த ஏரி தஞ்சைக்கு அருகே வெட்டப்பட்டிருக்கக்கூடும் எனத் தெரிகிறது. நீர்ப்பாசன வரி வசூலிக்கப்பட்டது. கிராம ஆட்சிமுறை திருத்தியமைக்கப் பட்டது. மதுரையிலிருந்து வெள்ளாளர் சமுதாயத்திலிருந்து வரிவசூலிக்கும் கணக்கர்கள் நியமிக்கப்பட்டனர். மறவர் நாட்டின் எட்டு வருவாய்த் துறைப் பிரிவுகளில் ஒன்றான நல்கோட்டைப் பகுதிதான் பிற்காலத்தில் சிவகங்கை அரசு தோன்ற வழிவகுத்தது.

விஜயரகுநாதர் தமது அரசின் பொருளாதாரத்தைப் பல கட்டிடங்கள் கட்டுவதற்கும், கோட்டைகள் கட்டுவதற்கும், இராமேஸ்வரம் திருக்கோயிலின் திருப்பணிக்கும் செலவிட்டார். மதுரை, திருவனந்தபுரம் கோயில்களுக்கும் மானியங்கள் வழங்கியுள்ளார். இவரது ஆதிக்கம் வடக்கே திருவாரூரிலிருந்து தெற்கே திருநெல்வேலி வரை பரவியிருந்தது. இவர், நாட்டில் அமைதியையும், செல்வத்தையும் பெருக்கினார். இச்சூழ்நிலையில் கி.பி. 1720இல், பவானி சங்கரத்தேவர், தஞ்சை, புதுக்கோட்டை அரசுகளின் உதவியோடு மறவர் நாட்டைத் தாக்கினார். ஆனால் முடிவில் தோல்வி கண்டார். இதனைத் தொடர்ந்து நாட்டில் நோய்கள் பரவின. நோயால் தாக்குண்ட சேதுபதி 1720இல் மரணமடைந்தார்.

தண்டத்தேவர் (1720)

விஜயரகுநாதர் வாரிசு இன்றி இறந்துவிட்டதால், மீண்டும் மறவர் நாட்டில் அரசுரிமைப் போர் ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. இம்முறை பவானி சங்கரரும், தண்டத்தேவரும் போட்டியிட்டனர். விஜயரகுநாதரின் திடீர் மரணத்தின் காரணமாக பவானி, அறந்தாங்கிக் கோட்டையைக் கைப்பற்றி அடுத்த சேதுபதி தானே எனப் பிரகடனப்படுத்தினார். தண்டத்தேவர் அறந்தாங்கியை நோக்கிப் படை நடத்திச் சென்றபோது தோற்கடிக்கப்பட்டார். தோற்கடிக்கப்பட்ட தண்டத்தேவர் புதுக்கோட்டை தொண்டைமானுடனும், தஞ்சாவூருடனும் உடன்பாடு கொள்ள முயன்றார். பவானி

சங்கரனின் அணியிலிருந்த தொண்டைமானுக்கு சில பகுதிகளைக் கொடுக்க உறுதி செய்ததின் பேரில் தொண்டைமானைத் தண்டத்தேவர் தன்பக்கம் இழுத்துக்கொண்டார். மதுரையும் இவருக்கு ஆதரவு தெரிவித்தது. இதன்படி, புதுக்கோட்டை, மதுரை, தண்டத்தேவர், ஆகியோரின் கூட்டுப்படைகள் அறந்தாங்கியை நோக்கிச் சென்றன. அங்கிருந்து வெளியேறிய பவானி சங்கரன் தஞ்சை அரசின் உதவியை நாடி, அவர்தம் உதவியைப் பெற்றார். ஆனந்தராவ் என்பவரின் தலைமையில் படை ஒன்று அனுப்பப்பட்டது. அப்படை தண்டத்தேவரின் தலையைத் துண்டித்தது; எனவே பவானி சங்கரன் சேதுபதியாகப் பதவியேற்றார்.

பவானி சங்கரத்தேவர் (1720–1729)

பாளையக்காரர்கள் பலர் பவானி சங்கரனின் பதவியேற்பை விரும்பவில்லை. புதிய சேதுபதி திறமையற்றவர். இரக்கமற்றவர் என நல்கோட்டையின் பாளையக்காரர் சசிவர்ணத்தேவர் கண்டனம் செய்தார். சசிவர்ணத்தேவரும், மற்ற பாளையக்காரர்களும், இறந்துபோன சேதுபதியின் தாய் மாமனான கட்டயத்தேவருடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டனர். தஞ்சை அரசரையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டனர். ஆனந்தராவ் என்பவரின் தலைமையில் படை ஒன்று அனுப்பப்பட்டு 1729இல் இராமநாதபுரம் தாக்கப்பட்டது. உறையூர் போரில் பவானி தோற்கடிக்கப்பட்டு தஞ்சைக்கு சிறைபிடித்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் இறந்தார். தஞ்சை அரசு, பாம்பாருக்கு வடக்கே உள்ள பகுதிகள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டது. மீதமுள்ள மறவர்நாடு ஐந்தாகப் பிரிக்கப்பட்டு, மூன்று பகுதி கட்டயத்தேவருக்கும், இரண்டுபகுதி சசிவர்ணத்தேவருக்கும் கொடுக்கப்பட்டது. கட்டயத்தேவர், குமார முத்துவிஜயரகுநாத சேதுபதி என்ற பெயருடன் இராமநாதபுரத்தின் அரசரானார். சசிவர்ணத்தேவர் 1730இல் சிவகங்கை சுதந்திர அரசைத் தோற்றுவித்தார். ரங்காச்சாரியார், பவானி சங்கரனின் சோகமான முடிவுக்குப் பின் இணைந்திருந்த இராமநாதபுர அரசின் வரலாறு முடிந்தது எனக் கூறுகின்றார். நெல்சன், பிரிவினைக்குப்பின், சேதுபதி அரசர் அரசியலில் செல்வாக்குப் பெற்றவராக விளங்கினார் எனக் குறிப்பிடுகின்றார். எனவே மறவர் நாட்டின் பிரிவினைக்குப் பின்னும் சேதுபதிகள் செல்வாக்குப் பெற்று விளங்கினர் என்பது தெளிவாகிறது.

குமார முத்துவிஜயரகுநாத சேதுபதி (1729–1735)

பெரியமறவன் எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட கட்டயத்தேவர், சுதந்திர இராமநாத புரத்தின் சேதுபதியாக 1729இல் அரியணையேறினார். தஞ்சையின் செர்போஜ¨ பாம்பர் பகுதிகளைக் கைப்பற்றியிருப்பினும், அதனால் திருப்தியடையாத அவரது வழித் தோன்றலான துக்காஜி இராமநாதபுரத்தைக் கைப்பற்ற இருமுறை முயன்று தோல்வி யுற்றார். திருமயத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த தஞ்சைத் தளபதி ஆனந்தராவ் விரட்டியடிக்கப்பட்டார். தஞ்சை, முகலாயரின் உதவியை நாடியது. கட்டயத்தேவர் கட்டிடங்கள் கட்டினார், கோயில்களுக்கு மானியங்கள் வழங்கினார்; அறிஞரைப் பேணினார். இராமலிங்கம்பிள்ளை, வைரவன்பிள்ளை என்ற இரு பணியாளரின் உதவிகொண்டு நிருவாகத்தைத் திறம்பட நடத்தினார். இவருக்குப்பின் இவரது மகன் சிவக்குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி கி.பி. 1735இல் பதவியேற்றார். மதுரை,

தஞ்சை, திருச்சியில் இன்னல்கள் கொடுக்கப்பட்டிருந்தபோது புதிய சேதுபதி, தன் தளபதி வெள்ளையன் சேர்வைக்காரன் என்பவரின் உதவியால் மறவர்நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். இவர், ராணி மீனாட்சி, சந்தாசாகிப் ஆகியோரின் சமகாலத்தவராவார். சமயத்துறையில் அக்கரைகொண்டு பல சத்திரங்களைக் கட்டினார், சமய நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கினார். இவருக்குப்பின் 1746இல், கட்டயத்தேவரின் உறவினரான ரங்கத்தேவர் சேதுபதியாக பதவி வகித்தார். வெள்ளையன் சேர்வைக்காரன் தெற்கே உள்ள பாளையக்காரர்களை அடக்க அனுப்பப்பட்டார். எட்டையாபுரம் பாளையக்காரர் மட்டும், சேதுபதியால் குரு என மதிக்கப்பட்டதால், தாக்குதலிலிருந்து தப்பினார். இத்தளபதி, சேதுபதியையே கைது செய்த காரணத்தால் மக்கள் அவரை எதிர்த்தனர். 1748இல் விஜயரகுநாத தேவர் என்ற செல்லத்தேவர் சேதுபதியாக்கப் பட்டார்.

விஜயநகுநாத சேதுபதி (1748–'61)

இவர் கிழவன் சேதுபதியின் பரம்பரையில் வந்தவராவார். மதுரையில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டபொழுது, செல்லத்தேவர், பங்காரு திருமலையின் மகனான விஜய குமாரனுக்கு ஆதரவு காட்டினார். ராஜாபிரதாப்சிங் அறந்தாங்கியைக் கைப்பற்றி மானோஜியின் தலைமையில் படை அனுப்பினார். துவக்கத்தில் வெற்றி பெற்ற அவர்கள், முடிவில் விரட்டியடிக்கப்பட்டனர். ஆற்காட்டு நவாப் அன்வர் உத்தீன், சேதுபதிக்கு எதிராக புதுக்கோட்டை தொண்டைமானுக்கு உதவுவதாக உறுதிகூறினார். ஆனால் சென்னையில் ஆங்கில கிழக்கிந்திய வாணிபக் கம்பெனியின் அதிகாரிகள் ஊடுருவ தொண்டைமான் சேதுபதியுடன் உடன்பாடு செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். கர்னாடகப்போரில், சேதுபதி, சந்தாசாகிப்புக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆதரவு காட்டினார். பின்னால் ஆங்கிலேயர்களின் வலுவைக் கண்டு சேதுபதி தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். கி.பி. 1735இல் தொண்டைமான், தஞ்சை அரசர், ஆகியோர் இராமநாதபுரத்தைக் காக்க முயன்றனர். இந்நிலையில் தஞ்சையின் வளர்ச்சியைக் கண்டு அச்சமுற்ற நவாப் முகமது அலி ஆங்கிலேயர்கள் தஞ்சைக்கு எதிராக இராமநாதபுரத்துக்கு உதவும்படித் தூண்டினர். இவ்வாறு நட்பு மாறியதால் கீழக்கரையிலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் டச்சு வாணிகர்களை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் சேதுபதிக்கு ஏற்பட்டது. சேதுபதி இராமேஸ்வரத்தில் பாலசுப்ரமணியசுவாமி கோயில் ஒன்றைக் கட்டினார்.

முத்துராமலிங்க சேதுபதி (1761–'72 & 1781–'94)

முத்து திருவாயி நாச்சியார் தனது மகன் முத்துராமலிங்க சேதுபதியின் பகர ஆட்சி யாளராகச் செயல்பட்டார். முத்துராமலிங்கம் இரண்டு மாதமே ஆன குழந்தையாவார். விஜயரகுநாதர் அரசைக் கைப்பற்றிக்கொள்ள முயன்றார். எனவே உள்நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. இதனூடே ஆற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை அரசுகள் அச்சுறுத்தின. மதுரையையும், தஞ்சையையும் தோற்கடித்த பின்பு முகமதுஅலி இராமநாதபுரத்தைத் திறைசெலுத்தும்படி ஆணையிட்டார். கான்சாகிப் முகமதுஅலியை மதிக்க மறுக்கவே, நவாப், மறவர் உதவியை நாடினார். இராமநாதபுரம், சிவகங்கையின் உதவியோடு

கான்சாகிப்பை முறியடிக்க ஆங்கிலேயர்கள் முயன்றனர். இந்தநிலையில் தஞ்சை அரசு அறந்தாங்கியைக் கைப்பற்றியது. இராமநாதபுரத்தில் சிக்கல்களை நீக்கி வெற்றிபெற்ற தளவாய் தாமோதரப் பிள்ளை டச்சுக்காரர்களுடன் உறவு கொள்ள விரும்பினார். ஆங்கிலேயருடனும் நட்புகொள்ள விரும்பி முறையிட்டார். ஆனால் ஆங்கிலேயர்கள் தஞ்சை அரசரை ஆதரித்த நிலையிலிருந்தனர். துல்ஜாஜி, மாப்பிள்ளைத் தேவர் என்பவரை இராமநாதபுர அரியணையில் அமர்த்தினார்; குழந்தை அரசரையும், அவர்தம் தாயாரையும், கொடுமையான உடன்பாட்டுக்கு ஒத்துவரும்படி கட்டாயப்படுத்தினார். அதன்பின், தஞ்சை அரசு ஆண்டுக்கு மூன்று இலட்சம் ரூபாய் வருமானம் தரக்கூடிய அளவு பகுதிகளைத் தன்னிடமே வைத்துக்கொண்டது. இப்போது முகமது அலி இராமநாதபுரத்திற்கு உதவ முன்வந்து, தஞ்சை கைப்பற்றிய பகுதிகள் அனைத்தையும் திருப்பிக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தினார். மாறாக, அவர், ஆங்கிலப்படைஒன்றை உதவியாகப் பெற்று இராமநாதபுரத்தைக் தாக்க முயன்றார். புதுக்கோட்டை தொண்டை மானும் ஆங்கில உதவியுடன் மறவர் நாட்டில் தலையிட்டார். ஆங்கிலப் படை குழந்தை அரசரையும் அவரது தாயையும் கைது செய்து திருச்சி சிறைச்சாலையில் அடைத்தது. கி.பி. 1772இல் இராமநாதபுரம் நவாப்பின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. எட்டு ஆண்டுகள் தொடர்ந்து 1780 வரை இப்பகுதி அவரது ஆதிக்கத்தின்கீழ் இருந்தது.

சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர், பெரும் போருக்கிடையே தோற்றார். அரசியார், வேலுநாச்சியார், மற்றும் பலர் திண்டுக்கல்லுக்குச் சென்று தஞ்சம் புகுந்தனர். சிவகங்கை அரசு போர் இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டியதாயிற்று. போர் இழப்பீட்டுத் தொகையின் ஒரு பகுதியைச் செலுத்தியபின்பு வேலுநாச்சியார் சிவகங்கை அரசை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அவரது இருபணியாட்கள் வெள்ளை மருதுவும், சின்னமருதுவும் தளவாயாகவும் அமைச்சராகவும், முறையே நியமிக்கப்பட்டனர்.

சிவகங்கை அமைச்சராயிருந்த தாண்டவராயப்பிள்ளை, இராமநாதபுர அமைச்சர் தாமோதரபிள்ளை ஆகியோரின் காலம் ஓய்ந்தது. கான்சாகிப்பின் வீழ்ச்சிக்கு அவர்களே பொறுப்பாவார்கள். நவாப்பின் முன்னேற்றத்திற்கு அவர்கள் தடைக்கற்களைப் போட்ட போதும், முழுமையாகத் தடை செய்ய முடியவில்லை. இவர்களுக்குப் பின் சிவகங்கையில் தமிழகத்தில் ஆங்கிலேயர்களை முதன்முதலில் எதிர்த்துப் போரிட்ட மருது சகோதரர் களின் காலம் தொடங்கியது.

இதற்கிடையில், நவாப் முகமது அலி, இராமநாதபுரத்துக் குழந்தை அரசரும், அவரது தாயாரும் விடுதலை செய்யப்பட உத்தரவிட்டார். இதற்கு ஈடாக அவர்கள் நவாபுக்கு ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய் திறையாக செலுத்த வேண்டும் எனவும் கட்டாயப் படுத்தப்பட்டது. சிவகங்கையின் வெள்ளாச்சிக்கும், இராமநாதபுர அரசருக்குமிடையே திருமண விவகாரம் நடந்துகொண்டிருந்த சூழ்நிலையில், ஆங்கிலேயர்கள் இராமநாத புரத்தைக் கைப்பற்ற முயன்றனர். பாவ்னி (Pawny) என்ற ஆங்கிலேய ஆட்சியாளர் இராமநாதபுர சேதுபதியைத் தன்னைச் சந்திக்குமாறு ஆணையிட்டபோது, பின்னவர் அதனை ஏற்க மறுத்தார். 1792இல் கர்னாடிக் உடன்பாட்டுப்படி நவாப், இராமநாத புரத்தைக் கம்பெனியிடம் ஒப்படைத்தார். மார்டின்ஸ் என்பவர் மறவர் நாட்டை

ஆளுமாறு அனுப்பப்பட்டார். மங்களேஸ்வரி நாச்சியார் என்பவரின் உரிமைகூட தற்காலிகமாக மறுக்கப்பட்டது. 1795இல் ஆங்கில அரசு மேஜர் ஸ்டீவன்சன் என்பவரை இராநாதபுரத்திற்கு அனுப்பியது. சேதுபதி மன்னர், நிருவாக முறைகேடு என்ற பெயரில் வெளியேற்றப்பட்டு திருச்சிக்கும் பின் சென்னைக்கும் அனுப்பப்பட்டார். அங்கே 1801இல் மரணமடைந்தார். இராமநாதபுரத்துச் சேதுபதிகள் ஜமீன்தாரின் நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1803இல் மங்களேஸ்வரி நாச்சியார் இராமநாதபுரத்தின் ஜமீன்தா ரானார். இராமநாதபுரத்துச் ஜமீனின் கடைசி ஜமீன்தாரான சண்முக ராஜேஸ்வர நாகநாத சேதுபதி ஜமீனை நிர்வகித்தார். ஆங்கில அதிகாரிகளின் கட்டுப்பாடு அதிகமாயிருந்தது. இவர் 1949இல் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். தென்னிந்தியப் புரட்சியின் தலைவனான மருது பாண்டியன் தூக்கிலிடப்பட்ட பின்பு சிவகங்கை அரசும் ஒரு ஜமீனாக ஆக்கப்பட்டது. 1801இல் ராபர்ட்கிளைவின் மகன் எட்வர்ட்கிளைவின், ஆணையின்படி சிவகங்கை அரசும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

பயிற்சி வினாக்கள்

1) சேதுபதி அரசு ஏற்படுத்துவதற்குக் காரணமாயிருந்த சூழ்நிலைகளை விவரி.

2) இராமநாதபுரம் அரசு வீழ்ந்த வரலாற்றை விவரி.

பாடம் – 19 தமிழகத்தில் ஐரோப்பியர்

தமிழ்நாட்டில் போர்த்துக்கீசியர்

போர்த்துக்கீசியராகிய வாஸ்கோடகாமா (Vasco-de-Gama) இந்தியாவுக்கு 1498இல் கடல்வழி கண்டுபிடித்தார். இக்கடல் பயணி கள்ளிக் கோட்டையிலிருந்து எட்டு கல் வடக்கிலுள்ள ஓர் ஊரில் வந்திறங்கினார். இந்நிகழ்ச்சிக்குப்பின் ஐரோப்பிய வாணிபக் கப்பல்கள் தொடர்ந்து இந்தியத் துறைமுகங்களுக்கு வரலாயின. இந்தியத் துறைமுகங் களுக்கு வந்து சேர்ந்த போர்த்துக்கீசிய வர்த்தகக் கப்பல்களின் பெருமிதமான தோற்றத் தினை கோவாவின் சேசு சபைப் பாதிரியாராகிய தாமஸ் ஸ்டீவன்சின் (Thomas Stevens) கடிதங்கள் எடுத்துக் கூறுகின்றன. இப்பெருமிதமான தோற்றத்திற்குக் காரணம் இந்தியாவில் விளைந்த உண்ணுதற்கு உகந்த நறுமணப் பொருட்களே. மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டிய மேற்குப் பகுதிகளில் மிளகு, வால்மிளகு, சந்தனம், அகில், கிராம்பு, சுக்கு (இஞ்சி), மஞ்சள், ஏலம் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் விளைந்தன. இதனால் மேற்குக் கடற்கரையோரப் பகுதிகள் பழங்காலந்தொட்டே சிறந்த வெளிநாட்டு வர்த்தகத் தளவாடங்களாக விளங்கின.

வாஸ்கோடகாமா வந்திறங்கிய கள்ளிக் கோட்டைப் பகுதி ஓர் இந்து நாடு; இதனை ஓர் இந்து அரசர் ஆண்டு வந்தார்; அவர் ஜாமரின் (Zamorin) என்ற சிறப்புப் பெயரைத் தாங்கி நின்றார். தென்னகத்தில் கொச்சி, கண்ணனூர், திருவிதாங்கூர், மதுரை, விஜயநகர் ஆகிய இந்து முடி நாடுகள் இயங்கி வந்தன. ஜாமரின் புதிதாக வந்த கடற்பயணியை அன்புடன் வரவேற்றார்; ஆனால் அப்பயணியால் மன்னரின் உள்ளத்தைக் கவர இயலவில்லை. மக்களின் நல்லெண்ணத்தையும் அவர் சம்பாதிக்கத் தவறி விட்டார். இருப்பினும், அவருடைய பயணம் பெருவெற்றியைத் தந்தது. ஏனெனில் இரு கப்பல்கள் நிறையப் பொருட்களை ஏற்றித் தம் தாயகம் வந்தடைந்தமையேயாகும்.

கி.பி. 1500ஆம் ஆண்டு பெட்ரோ அல்வாரஸ் காப்ரால் (Pedro Alvarez Cabral) 1,200 அங்கத்தினரைக் கொண்ட பதின்மூன்று கப்பல்களுடன் இந்தியா வந்திறங்கினார். அவர் அணுக வேண்டிய முறையில் மன்னரை அணுகாத காரணத்தால், கொச்சிக்கு ஓட வேண்டியதாயிற்று. அங்கிருந்து அவர் போர்ச்சுக்கலை அடைந்தார். ஐந்து கப்பல்கள் நிறைய இந்தியப் பொருட்களுடன் அவர் தாயகம் திரும்பினார். இப்பொருட்கள் அவருக்குப் பெருத்த வருவாயைத் தந்தன. கி.பி. 1501இல் மேலும் நான்கு போர்த்துக்கீசிய வர்த்தகக் கப்பல்கள் கொச்சி கடற்கரைக்கு அப்பால் வந்தன. பொருட்கள் நிறைக்கப்பட்டு அவையும் தாயகம் திரும்பின. கி.பி. 1502இல் இரண்டாம் முறையாக வாஸ்கோட— காமா இருபது கப்பல் படையுடன் கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார். தற்போது அவர் அணுக வேண்டிய முறையில் கொச்சி, கள்ளிக்கோட்டை அரசர்களை அணுகினார். அந்நாடுகளுடன் வர்த்தக நிறுவனம் ஒன்றை நிறுவ அவர் அனுமதிக்கப் பட்டார்; கண்ணனூரில் காப்புத் தளம் ஒன்று நிறுவவும் அனுமதிக்கப்பட்டார். அவர் மூன்றாம் முறையும் இந்தியா வந்ததாகக் கூறப்படுகிறது. அவருடைய திட்டத்தைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைத்தில. மேலும் அவருடைய இறுதி நாட்கள் பற்றிய செய்திகளும் நமக்குக் கிடைத்தில.

கி.பி. 1505இல் போர்த்துக்கீசிய அரசு பிரான்ஸிஸ்கோடி அல்மீடா (Franciscodi Almeida)வை இந்தியாவின் அரசப்பிரதிநிதியாக நியமித்தது. போர்ச்சுகலின் 'கடலாதிக்கக் கோட்பாடு' (blue water policy) இவருடன் தொடர்புடையதாகும். கொச்சி, கண்ணனூர், அஞ்சத் தீவம் ஆகிய பகுதிகளில் அவர்கள் கோட்டை கொத்தளங்களையும் எழுப்பினர்.

கி.பி. 1510இல், அல்புகர்கு (Albuquerque) கோவாவை பிஜப்பூரின் யூசப் அடில் கானிடமிருந்து கைப்பற்றினார். அதனை அவர் போர்ச்சுக்கீசியரின் வர்த்தகத் தலைமைத் தளவாடமாக்கினார். கீழ்நாட்டு வர்த்தகத்தின் இரு திறவுகோல்களாகிய மலாக்கா (Malacca)வும் ஆர்முஸும் (Ormuz) அவர் கைக்கு வந்தன. குஜராத்தின் மன்னரான சுல்தான் பகதூருக்கும் (Sultan Bhadur) ஹுமாயூனுக்குமிடையே ஏற்பட்ட போட்டியைச் சாதகமாக்கி, கோவாவின் மூன்றாம் அரசப் பிரதிநிதியாக நினோடா குன்கா (Ninoda Cunha) 1534இல் பசீனையும், 1537இல் டையூவையும், 1559இல் டாமனையும் கைப்பற்றிக் கொண்டார்.

விஜயநகரப் பேரரசுக்கும் போர்ச்சுக்கீசியருக்குமிடையே வர்த்தக உறவு வளம் பெறத் தொடங்கிற்று. விஜயநகரப் பேரரசுக்கு வேண்டிய குதிரைகளை இவர்களே இறக்குமதி செய்தனர். விஜயநகர அவைக்குப் பல போர்ச்சுக்கீசிய பயணிகளும், வர்த்தகர்களும் வருகை தந்தனர். கிருஷ்ணதேவராயரின் ஆட்சியின்போது தென்னிந்தியா மொத்தமாக அவர் ஆட்சியின் கீழிருந்தது. மதுரை, தஞ்சை, திருச்சி அப்பேரரசுப் பகுதிகளாயின. இந்திய வர்த்தகத்திலிருந்து அரேபியர்களை வெளியேற்றிவிட்டு, இந்திய வர்த்தகத்தில் குதிரைகளை இறக்குமதி செய்ய முழுப்பொறுப்பேற்றனர். விஜய நகரப் பேரரசு சரியத் தொடங்கியதும், போர்ச்சுக்கீசிய இந்திய வர்த்தகமும் சரியத் தொடங்கிற்று. காலப்போக்கில் போர்ச்சுக்கீசியரின் இடத்தை ஆலந்தியரும், ஆங்கிலேயரும் பெற்று விட்டனர். விஜயநகரப் பேரரசின் எழுச்சி, வீழ்ச்சியுடன் கோவாவும் எழுந்து வீழ்ந்தது.

மேற்குக் கடற்கரையோரங்களில் வெற்றி பெற்ற போர்ச்சுக்கீசிய சமயப் பாதிரியார்கள், தங்கள் கவனத்தை கொங்கணக் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து கோரமண்டலக் கடற்கரைக்கு மாற்றினர். அங்கு அவர்கள் மீனவர்களாகிய பரதவர்களுடன் தொடர்பு கொண்டனர். தூத்துக்குடிப் பகுதியில் அவர்கள் பலரையும் சமய மாற்றம் செய்தனர். பரதவர்களைப் போர்ச்சுக்கீசிய மன்னருக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்தனர். ஆகவே அவர்கள் போர்ச்சுகலின் குடிகளாயினர். பரதவர்களிடையே பணியாற்றி வந்த சேசு சங்கத்தார், 1592இல் மதுரை சமயப் பிரசாரச் சங்கத்தை (Madura Mission) நிறுவினர். போர்ச்சுக்கீசியர் கொடூரமானவர்கள்; ஐயத்திற்குரியோர்; இணைந்து செல்லாதவர். ஆகவே அவர்களை இந்தியர் பரங்கிகள் (parangis) என்று அழைத்தனர். இவ்வாறிருந்தும் மதுரையின் வீரப்ப நாயக்கர் அவர்களுக்குச் சமயப் பிரச்சார உரிமை வழங்கினார். அவர்கள் அறிவிலிகள், கல்வியறிவோ, தத்துவ நோக்கோ இல்லாதோர் என்று கருதப்பட்டார்கள்.

கி.பி. 1606இல் இராபர்ட்டி நொபிலி மதுரை சமயப் பிரச்சாரச் சபைக்கு வந்தார். இவர் இத்தாலியர் இவருடைய வருகையுடன் இச்சபையின் செயல் முறையில் மாற்றமும், துரிதமும் ஏற்பட்டது. தொல்லைகள் பல கடந்து, அவர்கள் இந்தியர் பலரையும் சமய

மாற்றம் செய்தனர். மதுரை நாயக்கரின் ஆட்சியுட்பட்ட சத்தியமங்கலத்தை 1648இல் வந்தடைந்த பால்தாசர் டா காஸ்டா (Balthasar da Costa) கிறித்தவ சமயப் பரப்புரை செய்ய அனுமதிக்கப்பட்டார். சத்தியமங்கலம் காலப்போக்கில் கிறித்தவ சமய வட்டமாயிற்று. மார்டின்ஸ் (Martinz) அங்கு சிறப்புப் பணிகள் பல புரிந்துள்ளார். அல்வாரஸ் (Alvarez) திருச்சிப் பகுதியை தம் சமயப் பணியின் மையமாக்கிக் கொண்டார். சமய மாற்றம் செய்த மக்களுக்குதவ அவர் அப்பகுதியின் ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றார். மேலும் ஆளுநரிடமும் உதவி கோரினார். தஞ்சை, இராமநாதபுரக் குருமார்கள் அந்நாட்டு மன்னர்களாலும் தலைவர்களாலும் கொடுமைப்படுத்தப்பட்டனர். கி.பி. 1652இல் தஞ்சையின் சமயப் போதகர் சிறையிலடைப்பட்டார். சமயம் மாறியோரைக் கொன்று குவிக்கவும் மன்னர் ஆணையிட்டார். இராமநாதபுரத்தில் ஜான் டி பிரிட்டோ (John de Britto) என்ற பாதிரியார் சிவனை வழிபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். செய்ய மறுக்கவே, அவர் கைது செய்யபட்டு, சிறையிடப்பட்டு, ஓரியூருக்கு நாடு கடத்தப்பட்டு, ஓரியூர்தேவனால் கொலை செய்யப்பட்டார். இதனைச் செய்ய இராமநாதபுரச் சேதுபதி அவனைக் கட்டாயப்படுத்தினான்.

சமயப்பணி புரிந்தோரிடையே போட்டி பூசல்கள் அவ்வப்போது ஏற்பட்டபோதும், தாம் கொண்ட பணியில் சற்றும் தளராது அவர்கள் பணியாற்றினர். இராபர்ட்—டி நொபிலி சமய மாற்றத்திற்காகப் பல புதுமுறைகளை, ஏன் விந்தையான வழிமுறைகளையும் பின்பற்றினார். இந்தியரைப் போன்று உடையணிந்து, திருநீறணிந்து, பூணூலிட்டு, உண்டு வாழ்ந்தவர் ராபர்ட்—டி நொபிலி. 'இந்திய பிராமணன்' என்று தம்மைச் சற்றும் தயங்காமல் அழைத்தவர். கி.பி. 1656 முதல் 1659ஆம் ஆண்டுவரை ஏறக்குறைய 8846 பேர் சமயமாற்றம் செய்யப்பட்டனர். திருச்சிப் பகுதியில் 2347 பேரும், தஞ்சைப்பகுதியில் 2268 பேரும், சத்தியமங்கலப்பகுதியில் 1639 பேரும், கள்ளர் நாடாகிய காந்தளூரில் 1192 பேரும், பாகூரில் 1400 பேரும் சமயம் மாறினர் என்று அறிகிறோம்.

தமிழகத்தில் ஆலந்தியர்

ஆலந்தியரின் முதல் கீழ்நாட்டு வர்த்தகப் பெருக்கம் கி.பி. 1595-97ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. இதனைச் செவ்வனே செய்து முடித்தோர் ஆம்ஸ்டர்டாம் வர்த்தகர்களே. இம்முயற்சியின் தலைமையை ஏற்று நடத்தியவர் கார்னீலியஸ் கூட்மான் (Cornelius Houtman) ஆவார். கி.பி. 1602இல் இதுகாறும் இயங்கி வந்த பல வர்த்தக அமைப்புகளை அரசு ஒருங்கிணைத்து இணைந்த கம்பெனி ஒன்று உருவாகிற்று. அதே அரசு இக்கம்பெனிக்குக் கீழ்நாட்டு வர்த்தக முழு உரிமையையும் வழங்கிற்று; இருபத்தோராண்டுக் காலப் பட்டயத்தையும் அதற்கு வழங்கியது; கீழ்நாட்டு வர்த்தகத்தைப் பொறுத்தளவில் அக்கம்பெனிக்கு வேண்டிய சட்ட, நிர்வாக, நீதி அதிகாரங்களையும் வழங்கியது. காலப்போக்கில், இக்கம்பெனி 'போரிட்டு நாடுபிடிக்கும்' ஓர் இயக்கமாக உருவெடுத்தது. இக்கம்பெனியார் அவர்களின் பெரும் கவனத்தையும் மலேயன் தீவுக் கூட்டங்களில் செலுத்தினர். ஆலந்தியருக்கும் ஆங்கிலேயருக்கும் மலேயன் தீவுக் கூட்டங்களில் போட்டி வலுப்பெற்றது; இரு நாட்டாரும் அவரவர் ஆற்றலை சோதிக்க முற்படவே, 1623இல் அம்பொய்னாப் (Amboyna) படுகொலை நிகழ்ந்தது. இப்படுகொலை நிகழவில்லை என்று கூறுவதற்கும் சான்றுகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

கி.பி. 1605இல் ஆலந்தியர் மசூலிப்பட்டணத்தில் தம் வர்த்தக மையங்களை அமைத்துக் கொண்டனர். 1610இல் பழவேற்காட்டிலும், 1620இல் தரங்கம்பாடியிலும் வர்த்தக நிலையங்களை அமைத்தனர். 1612இல் ஆலந்தியரின் பழவேற்காட்டிலுள்ள நிலையங்களை பரங்கிமலைப் போர்ச்சுக்கீசியர் தகர்த்தனர். 1613இல் ஆலந்தியர் கெல்ட்ரியா (Geldria) என்ற படைப்பாதுகாப்பிடத்தை அமைத்தனர். 1617இல் சூரத்திலும், பின்னர் ஆக்ராவிலும், சின்சுராவிலும் வர்த்தக நிலையங்களையமைத்தனர். 1638-58ஆம் ஆண்டுகளில் இலங்கையைப் போர்ச்சுக்கீசியரிடமிருந்து கைப்பற்றினர். 1658இல் தூத்துக்குடியையும், 1659இல் நாகப்பட்டினத்தையும், 1661இல் கொல்லத்தையும், 1662இல் கொடுங்கோளூரையும், 1663இல் கொச்சி, கண்ணனூரையும் கைப்பற்றிக் கொண்டனர். வெங்குர்லா என்னும் வெள்ளைக்கல் பகுதியை 1637இல் பத்திரப்படுத்திக் கொண்டனர். கொச்சியில் இயங்கிய ஆலந்திய அரசுக்கு மலபார்கடற்கரைப் பகுதியைக் கைப்பற்றும் உரிமையை தாய்நாடு வழங்கியது. ஆலந்தியரின் கீழ்நாட்டு வர்த்தகத்தளவாடமாகிய நாகப்பட்டினம் புலிக்கோட்டை விடவும் பன்மடங்கு கோட்டை கொத்தளங்களால் பாதுகாக்கப்பட்டது.

வர்த்தக, கடற்படை, தொழில், பொருளாதார, அறிவுத்துறைகளைப் பொறுத்தளவில் ஆலந்தியர் மற்ற நாட்டாரை விஞ்சிநின்றனர். அவர்களுக்கு ஒரு தேசிய நோக்கிருந்தது; அந்நோக்கு மிக ஆழமானது; நேர்த்தியானது. எதிரிகள், குறிப்பாக ஆங்கிலேயக் கடற்படையை அவர்கள் சற்றும் மதித்திலர்; தொடக்கத்தில் ஆலந்தியரும் ஆங்கிலேயரும் தம் முயற்சிகளில் இணைந்து செயலாற்றினர். ஆனால் காலப்போக்கில், இரு நாட்டாரும் பகைத்து, பிரிந்து சென்றனர். இரு நாட்டாருக்குமிடையே ஏற்பட்ட போட்டி, பூசல்கள், சண்டை, சச்சரவுகள், போர்கள் ஆலந்தியரை வலுவிலக்கச் செய்தன; பொருளாதாரச் சிதைவேற்பட்டன; வர்த்தகப்பெருக்கத்தைப் பாதித்தன; ஆலந்தியரின் செல்வாக்குக் குன்றியது; அவர்கள் கடல்கடந்த வாணிபத்தில் நிலைத்து நிற்க இயலவில்லை.

தமிழகத்தில் டேனியர்

டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனி 1616இல் நிறுவப்பட்டது. 1620இல் தம் கீழ் நாட்டு வர்த்தக தளவாடத்தைக் கீழக்கடற்கரையிலுள்ள தரங்கம்பாடியில் அமைத்தனர். தஞ்சையின் நாயக்க மன்னரான ரகுநாதரை முறையுடன் அணுகி, அப்பகுதிக்கான உரிமையைப் பெற்றுக் கொண்டனர். பின்னர் அதனை டேன்ஸ்பர்க் (Dansburg) என்றழைத்தனர். அவர்கள் கீழ் நாடுகளுக்கு வரக்காரணங்கள் சமயமும் வர்த்தகமுமாம். டேனிய லூதரன் திருச்சபையை ஏற்படுத்திய அவர்களால், எதிரிகளை வீழ்த்தவோ, செல்வம் சேர்க்கவோ இயலவில்லை. 1845இல் உள், வெளிக் காரணங்களால் கல்கத்தாவுக் கடுத்து செரம்பூரிலுள்ள டேனியக் குடியேற்றத்தையும், தமிழகத்திலுள்ள தரங்கம்பாடிக் குடியேற்றத்தையும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு விற்றுவிட்டனர். தரங்கம் பாடியின் டேனியலூதரன் சபை கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டது; கிறித்தவ சமயப் பெருக்கத்துக்கும் உழைத்தது. சமயப் பணியாற்ற வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் பர்த்தலோமியா சீகன்பால்க் என்பவர். இவர் தான் முதன் முதலில் தமிழில் நூற்களை அச்சிட்டு வெளியிட்டார். அதற்கு உதவிய அச்சுப் பொறியை பொறையாறில்

அமைத்துத்தந்தார். மேலும் நூற்கள் குறைந்த விலையில் அச்சிடப்பட்டன. அச்சிடப்பட்ட நூற்கள் தன்மையில் உயர்ந்து காணப்பட்டன. தமிழ்நாடோ தமிழ் இனமோ மறக்க முடியாத பெரும் சேவையைச் செய்தவர்கள் டேனியர்களே.

தமிழகத்தில் பிரெஞ்சுக்காரர்

வர்த்தகத்திற்காக இந்தியாவுக்குள் புகுந்த நான்கு ஐரோப்பிய நாடுகளில் இறுதியானது பிரான்சே. இந்தியாவில் பரந்த பேரரசு படைக்க முதன் முதல் திட்டம் தீட்டியவர்களும் அவர்களே. பிரான்சின் எழுச்சியின் போது போர்ச்சுக்கீசியச் செல்வாக்கு சரிந்துவிட்டது; ஆலந்தியர் சரியத் தொடங்கினர்.

'நன்னம்பிக்கை முனை' வழி இந்தியாவுக்கு கடல் வழி கண்டுபிடிக்க பிரெஞ்சுப் புலவராகிய ஜான் பார்மென்டியர் (John Parmentier) முயன்றார். அவர் தம் சகோதரன் ரவுல் (Rivul) என்பவருடன் 1529இல் மடகாஸ்கர், மலுக்காய்த் தீவுகளை அடைந்தார்; சுமத்ராவில் மரணமடைந்தார். இந்திய வர்த்தகம் மேற்கொள்ள, நான்காம் ஹென்றி மன்னர் இருவர்த்தகக் கம்பெனிகளுக்கு பட்டயம் வழங்கினார். ஆனால் அது பணப்பற்றாக்குறையினாலும், ஆதரவின்மையினாலும் தோல்வியுற்றது. 1642இல் ரிச்சலியூ (Richelieu) 'கீழ் நாட்டுச் சங்க'த்தை (Society of the Orient) நிறுவினார். இச்சங்கம் மடகாஸ்கரை குடியேற்ற நாடாக்க முயன்றது. 1664இல் சிறந்த பிரெஞ்சுப் பொருளாதார மேதையாகிய கால்பர்ட் (Colbert) நிறுவிய கம்பெனி இந்திய மண்ணில் வியாபாரம் மேற்கொள்ளத் தொடங்கிற்று. இக்கம்பெனியின் தொடக்ககால முயற்சிகளும் மடகாஸ்கரில் குடியேற்றங்கள் அமைப்பதில் பாழ்பட்டுப் போயின. 1688இல், பிரெஞ்சு ஊழியராயிருந்த ஆலந்தியராகிய காரோன் (Caron) முதன்முதலாக பிரெஞ்சு வர்த்தகத் தளவாடத்தை சூரத்தில் ஏற்படுத்தினார். 1674இல் பிரான்சிஸ் மார்டின் (Francis Martin) பாண்டிச்சேரியைத் தளவாடமாக்கினார். இதுவே பிற்கால பிரெஞ்சு—இந்தியாவின் தலைமைப்பீடமாக மாறிற்று. இது சென்னையிலிருந்து தெற்காக 85 கல் தொலைவிலுள்ளது. இது அவர்களுக்கு சுதேசி மன்னர் ஒருவரால் தரப்பட்டது. 1672இல் இக்கம்பெனி பரங்கிமலையைக் (St. Thomas Mount) கைப்பற்றியது. 1673இல் இலங்கையிலுள்ள திரிகோணமலை (Trincomali)யிலிருந்து டி—ல—கே (Dela kave) என்ற தளபதி விரட்டியடிக்கப்பட்டார். 1674இல் பரங்கிமலையை ஆலந்தியர் இவர்களிட மிருந்து கைப்பற்றினர். 1693இல் ஆலந்தியர் பெரும் போர் நடத்தி பாண்டிச்சேரியையும் கைப்பற்றினர். அடுத்து வந்த ஆறு ஆண்டுகள் அதனை அவர்களே வைத்திருந்தனர்; கோட்டை மதில்களை எழுப்பினர்; வர்த்தகப் பெருக்கு வழிகளையும் பின்பற்றினர். 1697இல் கையெழுத்தான ரிஸ்விக் (Ryswick) உடன்படிக்கை இவர்களுக்கிடையிலான வேறுபாட்டைத் தீர்த்தது. 1699இல் பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரருக்கு தரப்பட்டது. 40,000 குடிமக்களைக் கொண்ட ஒரு குடியேற்றமாக அது மார்டின் என்பாரின் கீழ் இயங்கி வந்தது. ஆனால் இதரப் பகுதிகளில் பிரெஞ்சு செல்வாக்கு சரியத் தொடங்கிற்று. சூரத், பாண்டும் (Bantum), மசூலிப்பட்டணம் (Masulipatnam) போன்ற வர்த்தகத் தளவாடங்கள் புறக்கணிக்கப்பட்டன.

ஸ்காட்டியராகிய ஜான் லா (John Law of lauriston) என்பவர் பிரெஞ்சுப் பொருளாளராக வந்தபோது இக்கம்பெனிகள் புது வலுப்பெற்று இயங்கத் தொடங்கின. அவர் அனைத்து கீழ்நாட்டு வர்த்தகக் கம்பெனிகளையும் இணைத்து 'இந்தியக் கம்பெனி' என்று மாற்றினார். இக்கம்பெனிக்கு நாணய உரிமை வழங்கப்பட்டது. புகையிலை விற்பனையில் ஏகபோக உரிமை வழங்கப்பட்டது. பொதுக்கடன் கட்டுப்பாடு உரிமையும் தரப்பட்டது. 1720இல் பொருளாதார நலிவு ஏற்பட்டபோது, இக்கம்பெனி மீண்டும் மாற்றியமைக்கப்பட்டு, இந்தியாவின் நிலையான கம்பெனியாக (Perpetual Company of the Indies) மாற்றப்பட்டது. 1725இல் இக்கம்பெனி மலபாரிலுள்ள மாகே (Mahe)யைக் கைப்பற்றியது. 1739இல் கீழக்கடற்கரையிலுள்ள காரைக்காலையும் கைப்பற்றியது. கீழக் கடற்கரையில் அவர்களுடைய செல்வாக்கு உயர்ந்து காணப்படினும், பாண்டிச்சேரி என்ற படைபாதுகாப்புள்ள தலைமைப் பீடத்தை வைத்திருந்தாலும், அவர்களுடைய செல்வாக்கு இந்தியத் துணைக் கண்டத்தினுள் செல்லவில்லை. கி.பி. 1731 முதல் 1738 வரை இக்கம்பெனி அதன் வாழ்வில் பொருளாதாரச் செழிப்புற்ற காலம் எனலாம். ஆஸ்திரிய வாரிசுரிமைப் போருடன் பிரெஞ்சுச் செல்வாக்கும் சரியத் தொடங்கிற்று.

தமிழகத்தில் ஆங்கிலேயர்

பதினேழாம் நூற்றாண்டில் ஸ்டூவர்டுகளின் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டவையே சென்னை பம்பாய் கல்கத்தா என்ற மூன்று ஆங்கில மாநிலங்கள். பல கடற் பயணங்கள், தனிநபர் முயற்சிகள், போர்ச்சுக்கீசியருடன் சண்டைகள், சூரத்திலுள்ள மொகலாய ஆளுநர் மீது தொடுத்த போர்கள் ஆகியவற்றின் விளைவால் உருவானதே ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி. சூரத்தில் வர்த்தகத் தளவாடம் அமைக்க இயலவில்லை. ஆனால் சோழ மண்டலக் கடற்கரை வர்த்தகம் பயனுள்ளது. இவ்விடங்களில் துணிகளுக்கு வண்ணம் தீட்டும் தொழில் உயர்நிலையை அடைந்திருந்தது. இவை ஐரோப்பாவிலும் இதர இடங்களிலும் அதிகம் தேவைப்பட்டன.

உலகைச் சுற்றிவந்த பிரான்சிஸ் டிரேக் (Francis Drake) 1579இல் கீழ்நாடுகளாகிய வாசனைப் பொருள் தீவுகளை (Spice Islands) அடைந்தார். எந்த ஆண்டு டிரேக் டெர்னேட்டை அடைந்தாரோ, அதே ஆண்டு ஆங்கிலேயர் இந்தியாவையும் வந்தடைந்தனர்.

இந்தியாவுக்கு வரும் வழியில் அவர்கள் பலவித இன்னல்களைத் தாண்ட வேண்டியிருந்தது. ஓர்முஸில் (Ormuz) நிஸ்பெரியும், பிட்ஸும், லீட்ஸும், ஸிடோரியும் கைது செய்யப்பட்டு, இந்தியாவுக்கு கைதிகளாகக் கொண்டுவரப்பட்டனர். இந்தியாவில் அவர்கள் ஸ்டீவென்ஸ் (Stevens) என்பவருடைய நட்பைப் பெற்றனர். லீட்ஸ் சமயப்போதகரானார்; மற்ற மூவரும் ஓர் ஆலந்திய வர்த்தகரின் உதவியுடன் தப்பிச் சென்றனர். மொகலாய அவையில் பணியாளாக ஸ்டோரி பதவி பெற்றார். நியூபெரி லாகூருக்குச் சென்று, பாரசீகம் வழி தம் நாடு திரும்பினார். பிட்ஸ் வட இந்தியாவில் சுற்றித் திரிந்து, பின் பர்மாவுக்கும், இலங்கைக்கும் சென்றார். 1591இல் இங்கிலாந்துக்குச் சென்று சேர்ந்தார். 1559ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ஆம் நாள், இலண்டன் மாநகரத்து எண்பது வர்த்தகர்கள் பிட்ஸின் முன்னிலையில், பௌண்டர்ஸ் ஹாலில்

(Founder's Hall) கூடி, கிழக்கிந்தியக் கம்பெனியும், அதன் நிகழ்ச்சிகளைப் பற்றிய அவைக் குறிப்புகளையும் தீட்டினர். தொடர்ந்த காலங்களில் தவறான வழிகளில், ஒற்றுமையற்றுக்கிடந்த ஆனால் அமைதியை விரும்பும் மக்களைக் கொண்ட நாட்டைக் கைப்பற்றினர்; அதன் ஆளுநர்களாகவும் மாறிவிட்டனர். "அனைத்து ஐரோப்பிய நாடுகளில் தற்காப்புக்காயினும் நாங்களே விரும்பாது, இறுதியில் போரிட விழைவோர்—யுலிசஸ் கூட அனுபவித்திராத பல தொல்லைகளை எங்கள் வர்த்தகர் ஆனந்தத்துடன் அனுபவித்தனர்" என்று பெருமையுடன் தாம்சனும், காரட்டும் கூறுவர். கி.பி. 1601இல் கம்பெனிக்காக கடற்பயணம் மேற்கொள்ள தளபதி லங்காஸ்டர் அனுமதிக்கப்பட்டார். இவர் சுமத்திரா வந்தடைந்தார். அவர் மணப்புல் (clover), இலவங்கப்பட்டை (cinnamon), அரக்கு (lac), மிளகு (pepper) ஆகியவற்றுடன் 1603இல் தம் நாடடைந்தார். 1601 முதல் 1618 வரை ஒன்பது பயணங்கள் கீழ்நாட்டுத் தீவுகளுக்கு மட்டும் மேற்கொள்ளப்பட்டன. 1614இல் இக்கம்பெனி ஒரு கூட்டுறவு வர்த்தகக் குழுவாயிற்று. 1657இல் நிலையான வர்த்தகக் குழுவாயிற்று. 1609இல் அவர்களுடைய பட்டயம் புதுப்பிக்கப்பட்டது. கீழ்நாட்டு வர்த்தகம் அவர்களுடைய நிரந்தர ஏகபோக உரிமையாயிற்று. 1608இல் பேரரசர் ஜஹாங்கீர் அவர்கள் சூரத்தில் உறைய அனுமதி வழங்கினார். 1615இல் கம்பெனியின் முதல் தூதராக சர்தாமஸ் ரோ மொகலாய அவைக்கு அனுப்பப்பட்டார். இவர் வளைகுடாப்பகுதிகளில் வியாபாரம் செய்யுமாறு மொகலாயப் பேரரசரைத் தூண்டினார். காலப்போக்கில், ஆங்கிலேயருக்கும் போர்ச்சுக்கீசியருக்கு மிடையே சண்டை வலுப்பெற்றது; அதன் விளைவால் ஆயுதப் பிரயோகமும் ஏற்பட்டது.

கி.பி. 1611இல் தளபதி ஹிப்பனும் (Hippon) பீட்டர் ஃப்ளோரிஸீம் (Floris) பழவேற்காட்டையடைந்தனர். ஃப்ளோரிஸ் ஆலந்தியப் பணியிலிருந்த போதே இந்திய வர்த்தகத்தின் நுணுக்கங்களைக் கற்றிருந்தார். ஆங்கிலேயராகிய ஹிப்பன் துறைமுக வர்த்தகத்தை மேற்கொள்ளலானார். சோழமண்டல சாயத்துணிகளுக்குப் பதில், கிழக்குத் தீவுகளிலிருந்து வாசனைப் பொருட்களைப் பெற்று, ஒருவித பண்டமாற்று வர்த்தகத்தை மேற்கொள்ளலானார். ஆலந்தியர் பழவேற்காட்டில் ஒரு கோட்டையை எழுப்பினர். அங்கு பல பிரச்சனைகள் அவர்களுக்குக் காத்திருந்தன. ஆலந்தியருக்கு மீண்டும் வர்த்தக அனுமதிப்பட்டயம் வழங்க அந்நாட்டு மன்னர் விரும்பவில்லை. துணிவை வரவழைத்துக்கொண்டு ஹிப்பன் அக்கடற்கரையோரமாக மீண்டும் பயணம் மேற்கொண்டு பெட்டபோளி (Pettapoli) என்ற இடத்தையடைந்தார். இப்பகுதி கிருஷ்ணையாற்றின் தென்பிரிவு கடலுடன் கலக்குமிடத்திலுள்ளது. 1611இல் அவர் அவ்விடத்தையடைந்து வங்கப்பகுதியில் வர்த்தகத் தளவாடம் அமைக்க வழிவகுத்தார்.

1614இல் அக்கம்பெனியின் பிறிதொரு தளவாய் பழவேற்காட்டுப் பகுதியைக் கைப்பற்ற நினைத்தார். அக்கம்பனியாரை ஆலந்தின் அப்பகுதி ரெக்டரும் (Rector) தளபதியும் நன்கு வரவேற்றனர். ஆனால் வாணிபம் மேற்கொள்ள அனுமதிக்கவில்லை 1619இல் கையெழுத்தான ஆங்கில—ஆலந்திய உடன்பாடு இறுதியில் ஆங்கிலேயருக்கு வாணிபம் செய்ய அனுமதி வழங்கிற்று. ஆனால் அப்பகுதியைப் பாதுகாக்கும் செலவில் பாதியை ஏற்க வேண்டியதாயிற்று. அதன்படி, 1620இல் ஓர் ஆங்கிலேய வர்த்தகக் குழு அவ்விடம் அடைந்து வியாபாரம் மேற்கொண்டது. இந்த வியாபாரம் ஓராண்டு மட்டுமே நடந்தது. ஆங்கிலேய ஆலந்தியப் போட்டி இறுதியில் அம்போய்னாப் (Ampoyna)

படுகொலையில் முடிந்தது. ஆகவே ஆங்கிலேயரால் பழவேற்காட்டில் தாக்குப் பிடிக்க முடியவில்லை. 1623இல் அவர்கள் பழவேற்காட்டை விட்டு, வடக்கு முகமாய்ச் சென்றனர். ஆனால் அவர்கள் மேற்கொண்ட முயற்சி படுதோல்வியில் முடிந்ததால், சோழமண்டலக் கடற்கரையில் அவர்களுடைய செல்வாக்கு வளரவில்லை.

கோல்கொண்டா சுல்தானின் ஆணையின் பேரில் பெட்டபோளியில் அரண்கள் அமைக்கப்பட்டன; வர்த்தகத்தளம் அமைக்கப்பட்டது; ஆனால் அது 1621இல் நிறுத்தப்பட்டது. மீண்டும் 1633இல் அங்கு அவர்கள் குடிபுகத் தொடங்கினர். ஆனால் 1687இல் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் பேரில் அவ்விடத்தை மீண்டும் விட்டகல வேண்டியதாயிற்று. "பழவேற்காட்டில் ஆலந்தியர் எங்களுக்கு எப்படியோ அது போன்று பெட்டபோளியில் நோய்கள் எங்களைப் பாதித்தன" என்று W.W. அண்டர் கூறுகிறார்.

சிறிது நாட்கள் கடந்து ஹிப்பன் வடக்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டு மசூலிப்பட்டணத்தையடைந்தார். புவியியல் அடிப்படையில் பல சேதங்கள் ஏற்படினும், இப்பகுதி சென்னையொட்டிய கடல் பகுதிகளுக்குச் சிறந்ததோரிடமாக அமைந்தது. இங்கு ஆங்கில, ஆலந்திய பிரெஞ்சுப் போட்டிகள் ஏற்பட்டன. 1611இல் ஹிப்பனும் ஃப்ளோரிஸீம் மசூலிப்பட்டணத்தில் தளவாடமிட்டனர். 'குளோர்' என்ற கப்பல் நிறைய பொருட்களை ஏற்றி, கிழக்கு நோக்கிச் சென்று, பாண்டுமில் பண்டமாற்று செய்து, கறிப்பொருட்கள் பெற்றனர்; மேலும் சையாமில் விளைந்த உயர் வகைப் பொருட்களையும் பெற்றனர். அந்நாள் முதல் மசூலிப்பட்டினத்துக்கும், சுமத்திரா, ஜாவாப் பகுதிகளுக்கும், பின் வங்கப் பகுதிக்கும் நெருக்கமான வர்த்தகமேற்பட்டது. கோல்கொண்டா வைரம், பவளம், துணிவகைகள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் சந்தையாக மசூலிப்பட்டினம் மாறிற்று. அண்டர் கூற்றுப்படி "மேல் நாட்டுக்கும் கீழ்நாட்டுக்குமிடைப்பட்ட ஒரு கிடைத்தற்குரிய நடுச்சந்தையாக மசூலிப்பட்டினத்தை ஆங்கிலேயர் கண்டனர். மலபார் கடற்கரைப் பகுதியிலுள்ள போர்ச்சுக்கீசிய இந்திய—ஐரோப்பிய வாணிக இடங்களைவிட இது சிறப்பு வர்த்தகமையமன்று. வட இந்தியாவிலும் பாரசீக வளைகுடாவிலும் உள்ள போர்ச்சுக்கீசியருக்கு ஆங்கிலேயரின் சூரத்பகுதி எப்படி ஒரு மேற்குத் தடுப்பாய் அமைந்ததோ, அதுபோன்று தென்னிந்தியாவிலுள்ள போர்ச்சுக்கீசியருக்குத் தடுப்பரணாய் ஆங்கிலேயரின் மசூலிப்பட்டினம் விளங்கியது." ஆங்கிலக் கம்பெனிக்கும் ஆலந்தியருக்கும், போர்ச்சுக்கீசியருக்குமிடையே ஏற்பட்ட போர்களினால் 1628இல் அவர்கள் தங்கள் வர்த்தகத் தளவாடத்திலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. அனைத்தையும் அங்கேயே விட்டுவிட்டு, இரகசியமாக அவர்கள் ஆர்மகோனுக்குச் சென்றனர்.

ஆர்மகோன் பழவேற்காட்டுக்கு ஏறத்தாழ நாற்பது கல் வடக்கில் உள்ளது. இங்கு வியாபாரத்திற்குரிய சூழ்நிலைகளில்லை. ஆலந்தியர், இந்நாட்டார் ஆகியோரிடமிருந்து தம்மைக் காப்பாற்ற, அவர்கள் படை கொண்ட சக்தியாக மாறினர். இந்தியாவில் ஆங்கிலேயரின் படையரண் கொண்ட முதல் இடமாக இது மிளிர்ந்தது. 1630இல் ஆர்மகோனையும் சென்னைக்காகத் துறக்க வேண்டியதாயிற்று.

ஆலந்தியரின் கொடுஞ் செயல்களிலிருந்து தம்மைக் காப்பாற்ற ஆங்கிலேயர் சென்னைப் பகுதியில் தம் கவனத்தைச் செலுத்தினர். சென்னை பழவேற்காட்டிலிருந்து ஏறக்குறைய முப்பது கல் தெற்காக அமைந்துள்ளது. 'ஏற்கனவே எழுப்பப்பட்ட வர்த்தகத்

தளவாடங்களைத் தவிர, இந்தியாவில் எங்களுக்குக் கிடைத்த முதல் நிலப்பகுதியை சென்னைப்பட்டயம் தந்தது' என்று W.W. அண்டர் கூறுகின்றார். பல தடைகளுக்கும் நீண்ட சோதனைகளுக்கும் இடையே கிடைத்த பகுதியே சென்னை. இதனை 1639இல் சந்திரகிரியின் இந்து மன்னராகிய ரங்கராஜா பட்டயம் செய்து கொடுத்தான். விஜயநகராண்ட மன்னர் வழிவந்த ரங்கராஜா முந்திய நூற்றாண்டில் தென்னகத்துக்கு விரட்டப்பட்டார். அவர் சென்னையிலிருந்து வடமேற்காக ஏறத்தாழ எழுபது கல் தொலைவில் அமைந்த சந்திரகிரிக்கோட்டையைத் தம் தலைநகராக்கிக் கொண்டார். அவருக்குப் பல நாயக்கர்கள் அடங்கி நடந்து வந்தனர். சென்னை கடற்பகுதி, செங்கல்பட்டு நாயக்கரின் நாட்டுப் பகுதியாகும். இப்பகுதியை பிரான்ஸிஸ் டேக்குப் (Francis Day) பட்டயம் செய்து தருமாறு சந்திரகிரி மன்னன் செங்கல்பட்டு நாயக்கரைப் பணித்தான். கிழக்கிந்தியக் கம்பெனியின் நடுவராகிய பிரான்ஸிஸ் டேக்கு சந்திரகிரி மன்னன் வழங்கிய இப்பகுதியே பிற்காலத்து புனித ஜார்ஜ் கோட்டை (Fort St. George) ஆயிற்று. அம்மன்னனின் கடைசிச் செயலும் அதுவாகவேயிருந்தது. இப்பகுதியை ஆங்கிலேயருக்கு வழங்கும் போது அவ்வரசன் ஒரு வேண்டுகோளையும் அவர்களுக்கு விடுத்தான். அப்பகுதியை 'ரங்கராஜப் பட்டணம்' என்று அழைக்குமாறு வேண்டிக் கொண்டார். தொடர்ந்த காலங்களில் சந்திரகிரி மன்னனை செங்கல்பட்டு நாயக்கன் முறியடித்தான். செங்கல்பட்டு நாயக்கன் அப்பகுதிக்குத் தம் தந்தை சின்னப்பனின் (Chennappa) பெயரையிட்டு, சின்னப்பட்டணம் என்று அழைக்குமாறு பணித்தான். இச்சின்னப்பட்டணமே சென்னைப் பட்டணமாகி, சென்னைப் பட்டணமாயிற்று. 1616க்குப்பின் ஆங்கிலேயர் அதனை மதராஸ் என்று அழைக்கலாயினர். "இறுதி விஜயநகர மன்னனால் வழங்கப்பட்ட இவ்விறுதிச் சலுகைமூலம் ஆங்கிலப் பேரரசின் கால்கோள்கள் பாதிக்கப்படும் என்று தெய்வத்தால் முன் முடிவு செய்யப்பட்டதே" என்று பொருள்படும்படி தளபதி எச்.ஏ. நியூவெல் கூறுகின்றார்.

இப்பட்டணத்தின் ஆங்கிலப் பெயர், சந்திர வழியில் வந்த புராண காலத்து வடமொழி மன்னனின் பெயரே என்றும், இது தெலுங்கு மொழியில் 'மந்தாரஸ்' (Mandaraz) என்று திரித்து வழங்கப்பட்டது என்றும், அது முழுமையாக மந்தராஸ் பட்டணம் என்றே இருந்திருக்கும் என்றும், ஆர்மகோனுக்கு துர்காரஸ் பட்டணம் என்று வழங்கப்பட்டது போல் இதுவும் ஏற்பட்டது என்றும் W.W. அண்டர் கருதுகிறார். முகம்மதிய அறிஞர் மதராஸ் என்ற பெயர் மத்ராஸா என்ற சொல் வழி பிறந்ததே என்பர். அதாவது சென்னையில் மத்ராஸா என்ற கல்விக்கூடம் இருந்ததாக அது குறிக்கும். ஆனால் வரலாற்றாராய்ச்சி இதனை ஒப்புக்கொள்வதில்லை. "தமிழகத்தின் தலைநகராகிய மதராஸ் பட்டணம், தமிழகத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் தனித் தலைப்பட்டணம், இதனை சந்திரகிரி மன்னனுக்கு அடங்கி ஆண்டு வந்த செங்கல்பட்டு மன்னனிடமிருந்து ஆங்கிலேயர் பெற்று, அதனைக் கோட்டை கொத்தளங்களுடன் வர்த்தகத் தளவாடமாக்கினர். மதராஸ் என்ற சொல் ஒரு வேளை மதுரு (Madura) (தமிழில் மதில்) என்ற தெலுங்குச் சொல்லின் வழி பிறந்ததாகலாம். மதுரு (மதில்) என்ற சொல் கோட்டையுடன் கூடிய இடத்தைக் குறிக்கும். இது சதுரங்கம் என்ற சாத்ராஸ் சொல் போன்று தோன்றியதே இது நால்வகைப் படைப் பகுதிகளைக் குறிக்கும். சதுரங்கம் (வடமொழியில் சதுரங்க) என்ற சொல்லிலிருந்து வந்த சதுரியின் ஆங்கிலத் திரிபே சாத்ராஸ் ஆகும்" என்று கால்ட்வெல் கூறுவார். மேலும் இது மதராஸ் குப்பத்திலிருந்து

வந்ததாகவும் கருதப்படுகிறது. மதராஸ்குப்பம் மத்தராஸ் அல்லது மத்தராஜு என்ற தெலுங்குத் தலைவன் பெயரைத் தாங்கி நிற்கிறது என்றும், அதன்படி மதராஸ்பட்டணம் என்று அழைக்கப்பட்டது என்றும் அறிஞர் கருதுவர்.

மதராஸ் தென்னகத்து அமைந்தது; மொகலாயப் பேரரசுக்குத் தெற்கில் உள்ளது. இது பறங்கிமலைக்குச் சற்று வடக்கிலுள்ள நீர்ப்பகுதி. இப்பகுதி ஆறுகல் கடற்கரைப் பகுதியையும், ஒருகல் நிலப்பகுதியையும் கொண்டது.

ஆங்கிலேயர் இப்பகுதிக்கு ஆண்டு தோறும் ஆயிரத்து இருநூறு பகோடாக்கள் அதாவது அறுநூறு பவுண் ஸ்டெர்லிங் வாடகையாகத் தருவதாக ஒப்புக் கொண்டனர். மத்தியில் கோட்டையுடன் கூடிய பாதுகாப்பரண்களை அவர்கள் எழுப்பினர். இத்தீவில் ஐரோப்பியர் மட்டுமே வாழ அனுமதிக்கப்பட்டனர். ஆகவே அது 'வெள்ளை நகரம்' (White Town) என்று அழைக்கப்படலாயிற்று. கறுப்பர்களாகிய நூல் நூற்போர் வாழ்ந்த பகுதி கறுப்புநகரமாயிற்று (Black Town). இவ்விரு நகரங்களும் இணைந்ததே அன்றைய சென்னைப்பட்டணம். இவ்வெள்ளை நகரமே 1677க்குப்பின் புனித ஜார்ஜ் கோட்டையாயிற்று.

1645இல் கோல்கொண்டா மன்னன் சென்னைப் பட்டணத்தின் பட்டயத்தைப் புதுப்பித்துத் தந்தான். ஆனால் இப்பட்டணத்தின் சிறப்பை 1647இல் ஏற்பட்ட பஞ்சம் பாதித்தது. இது ஜாவாவின் பாண்டும் பகுதி வர்த்தகத்தின் நடுவாகவே அமைந்தது. 1653இல் இது ஒரு தனி மாநிலமாயிற்று. 1654இல் இப்பகுதியில் வாழ்ந்த ஆங்கில அதிகாரிகளின் எண்ணிக்கையைத் தாயகம் குறைத்து, இருவர்த்தகரையும் அவர்களைக் காக்க பத்து வீரரையும் நியமித்தது. 1657இல் கிராம்வெல் வழங்கிய பட்டயம் சென்னையைச் சிறந்ததோர் வர்த்தக மையமாக்க உரிமை வழங்கிற்று. 1658இல் வங்கப்பகுதி வர்த்தகமும், கிழக்குக் கடற்கரை வர்த்தகமும் புனித ஜார்ஜ் கோட்டைக்குட்பட்டவையே என்று அவர் ஆணையிட்டார். இது முதல் இப்பகுதி கோட்டை கொத்தளங்கள், காப்பரண்கள் கொண்ட வர்த்தக மையமாக மிளிரத் தொடங்கிற்று.

கி.பி. 1667 முதல் 1670 வரை திறமை வாய்ந்த சர் வில்லியம் லாங்கர்ன் (William Langhorn) இப்பகுதியின் ஆளுநராயிருந்தார். அப்போது பரங்கி மலைக்கு வந்த பிரெஞ்சுப் படை அப்பகுதியைத் திடீரென்று கைப்பற்றியது. 1662இல் பரங்கிமலை கோல்கொண்டாத் தளபதியால் கைப்பற்றப்பட்டது. அங்கிருந்து அவர் பல போர்த்துக்கீசியரை வெளியேற்றினார். அப்படி வெளியேற்றப்பட்டோர் பலர் புனித ஜார்ஜ்கோட்டையில் அடைக்கலம் புகுந்தனர். அவர்கள் பின்னர் அக்கோட்டையின் பாதுகாப்பையே தகர்த்தெறியத் தொடங்கினர். பிரெஞ்சுக்காரர் பரங்கிமலையைக் கைப்பற்றிய வேளையில், கோல்கொண்டாத் தளபதி பாபா சாகிப் (Baba Sahib) அதனைக் கைப்பற்ற முயன்றார். ஆனால் சோழ மண்டலக் கடற்கரையைச் சுற்றி வந்த ஆலந்தியக் கப்பற்படை பரங்கிமலையைத் தாக்கியது; ஆனால் தோல்வியைத் தழுவியது. இவ்வேளையில் ஆங்கிலேயரின் தனித்து நிற்கும் கொள்கை பாபாவுக்கு வெறுப்பூட்டியது. ஓராண்டுக்குள் திருவல்லிக்கேணியில் பிரெஞ்சுக்காரர் படைத்தளமிட்டனர்.

சென்னையின் முகமதியப் பகுதியை அவர்கள் அரண்களமைத்துப் பாதுகாக்கத் தொடங்கினர். பிரெஞ்சு, ஆலந்தியத் தாக்குதல்களை முறியடிக்க, ஆங்கிலேயர் தங்கள் பகுதியை வலிமையுடையதாக்கினர். ஆலந்திய முஸ்லிம் தாக்குதல்களுக்குப் பயந்து, அங்கு வாழ்ந்த நான்கு ஜாவா பிரெஞ்சுக்காரர் வெளியேற்றப்பட்டனர். ஆங்கில பிரெஞ்சு உடன்பாட்டால் சென்னையின் ஆளுநர் இதனைச் செய்ய பல்லாண்டுகள் மறுத்தார். இறுதியில் புனித ஜார்ஜ் கோட்டையை முகமதியர் முற்றுகையிட்டனர். பரங்கிமலைக்குப் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் காலம்வரை பிரெஞ்சுக்காரரும் வெளியேறுவதா யில்லை. இறுதியில் அவர்கள் பிஜப்பூருக்குப் பாதுகாப்புடன் அனுப்பிவைக்கப்பட்டனர். இச்செயலை பிரெஞ்சுக்காரர் கண்டித்தனர்.

பரங்கிமலை ஈராண்டுகள் பிரெஞ்சுக்காரர் வசமிருந்தது. 1674இல் அதனை ஆலந்தியருக்கு வழங்கினர். ஆலந்துக்கும், இங்கிலாந்துக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. இவ்வுடன்பாடு ஆங்கிலச் சென்னையைக் காப்பாற்றியது. இவ்வுடன்பாடு ஏற்படாமல் இருந்திருந்தால் ஆலந்தியர் பரங்கிமலையையும், புனித ஜார்ஜ் கோட்டையையும் கைப்பற்றியிருப்பர். சென்னையும் வீழ்ந்திருக்கும். ஆலந்தியர் செல்வாக்கு தென்னகத்தில் நிலைத்திருக்கும். ஸ்டிரின்ஷாம் மாஸ்டர் (Streynsham Master) ஆளுநராயிருந்த போது சென்னையை மராத்திய சிவாஜி தாக்கினார். 1680இல் சிவாஜியும், 1707இல் ஔரங்கசீப்பும் இறந்தபின் சென்னை பல தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொண்டது.

பயிற்சி வினா

ஐரோப்பியரின் தமிழக வருகைபற்றி விளக்குக.

பாடம் – 20 தமிழகத்தில் மராத்தியர்கள்

பாமினி அரசின் அதிகாரங்கள் தெற்கு நோக்கி வளர்ச்சியடைந்த போது ஏராளமான மராத்தியக் குடும்பத்தவர்கள் பாமினி அரசாங்கத்தில் ஏவல் புரிய முன் வந்தனர். பாமினி சுல்தான்களின் ஆதிக்கம் வீழ்ந்தபோது, மராத்தியர்கள், சிற்றரசுகளின் கீழ் பணிபுரிய வேண்டியதாயிற்று. அவர்கள் பணிபுரிந்த முக்கிய அரசுகள் பிஜப்பூரும் அஹ்மதுநகருமாகும். தென்னிந்தியாவில் முகலாயப் பேரரசு விரிவுற்றதன் காரணத்தால் ஐந்து பாமினி அரசுகள் சிறிது சிறிதாக அழியத் துவங்கின. அஹமது நகரின் அழிவின் போது பிஜப்பூரியர்கள் முகலாயருடன் சேர்ந்து கொண்டனர். 1636இல் அஹமது நகர் அரசு முழுவதும் நலிந்தபோது மராத்தியத்தலைவர் பலரும் பிஜப்பூர் அரசுப்பணியில் நுழைந்தனர். அவ்வாறு நுழைந்தவர்களில் முக்கியமானவர் சாஜி பான்ஸ்லே ஆவார். முகலாயரின் அடுத்த பார்வை பிஜப்பூரியரிடமே இருந்தது. 'பிஜப்பூரியர்கள், தாங்கள் இதுவரை அபகரித்திருந்த மற்றவர்களது பகுதிகளை இழக்கும் காலம் மட்டுமல்லாது தங்களது அரசின் எல்லையையும் சிறிது சிறிதாக விட்டுவிட வேண்டிய காலமும் நெருங்கிக்கொண்டே வந்தது". இந்த இழப்பீட்டை ஈடு செய்வதற்காக பிஜப்பூரியர்கள் தெற்கு நோக்கித் திரும்பினர். அதன் காரணமாக, தெற்கு நோக்கிப் படையெடுப்புக்கள் நடத்தத் தொடங்கி, சாஜி பான்ஸ்லேயின் திறமையையும் பயன்படுத்தினர்.

சாஜி பான்ஸ்லே

துவக்கத்தில், பிஜப்பூர் அரசின் ஒரு பகுதியான பூனா மாவட்டத்தில் ஒரு சிறு சாகீரையே சாஜி பான்ஸ்லே பெற்றிருந்தார். கர்னாடகப் பகுதியில் படை நடத்திச் செல்லும் போது, சாஜி, தனது மனைவி ஜீஜாபாயையும், தனது இளம் குமாரரான சிவாஜியையும் தாதாபாய் கொண்டதேவ் என்பவரது பாதுகாப்பில் விட்டுச் சென்றார். தென்னகப் படையெடுப்பில் பிஜப்பூர் இராணுவத்தில் இரண்டாவது தலைவராக சாஜி செயல்பட்டார். தென்னிந்திய அரசர்களை, ஔரங்கசீப்பின் பிடியிலிருந்து விடுபட்டு பிஜப்பூரின் அடில்ஷாவின் ஆளுகையின் கீழ் வரும்படி சாஜி தூண்டினார். 1648ஆம் ஆண்டு செஞ்சி முற்றுகையிடப்பட்டபோது, சாஜி திருமலை நாயக்கருக்கு எதிராகக் கொடுமையான கொள்கைகளைக் கொண்டிருந்த முஸ்தபாகானுடன் பகைமை கொண்டார்; எனவே கலகம் செய்து சிறையிடப்பட்டார். அடுத்த ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். தஞ்சையின் விஜயராகவநாயக்கர், ஸ்ரீரங்கபட்டினத்தின் கன்டிராய், மதுரையின் திருமலை நாயக்கர் ஆகியோர் சாஜி பான்ஸ்லேயால் தோற்கடிக்கப்பட்டோராவர். முகமது அடில்ஷா சாஜிக்கு புதிய பகுதியான பெங்களூரைக் கொடுத்து பெருமைப்படுத்தினார். பெங்களூர் சாஜியின் நிரந்தர இருப்பிடமாகியது. சாஜி, பூனா, சதாரா பகுதிகளின் நிர்வாக அதிகாரத்தைத் தனது மகன் சிவாஜியிடம் ஒப்படைத்து, அவருக்கு "மொகாஸ்ஸா" என்ற பெயரையும் வழங்கினார். அவரது மற்றொரு மகனான வெங்காஜி என்ற எகோஜியை பெங்களூரில் தனது வாரிசாக ஆக்கினார்.

இதற்கிடையில், சிவாஜி, தனக்கு இருக்கும் பூர்வீக ஜாகீருக்கு அப்பால் உள்ள பகுதிகளையும் சேர்த்து "சுயராஜ்யம்" ஏற்படுத்த எண்ணி, தமது ஜாகீரைத் தனி அதிகாரம் பெற்றவர் போன்று நிர்வகிக்கத் துவங்கினார். சுல்தான் அடில்ஷா, சிவாஜியின்

புரட்சிகரமான போக்கைப்பற்றி பங்களூரிலிருந்த அவரது தந்தைக்குத் தெரிவித்தார். சாஜியோ தனது மகனுக்கும் சுல்தானுக்குமிடையே இருந்த வேற்றுமையைப் போக்க எண்ணினார். சிவாஜியை எச்சரிக்கவும் செய்தார். ஆனால் சிவாஜியோ தனது தந்தையின் ஆலோசனைக்குச் செவி சாய்க்கவில்லை. இதனைத் தொடர்ந்து சினமுற்ற சுல்தான் அடில்ஷா சாஜியைக் கைதுசெய்ய தமது படைத்தலைவர்கள் சிலரை அனுப்பினார். சாஜி 1648இல் கைதுசெய்யப்பட்டு பிஜப்பூருக்கு அனுப்பப்பட்டார். தவிர, சாஜியின் பெங்களூர், பூனா ஜாகீர்களையும் கைப்பற்றும்படி சுல்தான் ஆணையிட்டார். ஆனால் இந்தச்செயல், சாஜியின் மகன்களுடன் செய்யும் தீரமான போர்களின் பின்பே நிறைவேற வேண்டியிருந்தது. அடில்ஷாவின் படைகள் புரந்தர் பகுதியை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் விரைவில் விரட்டப்பட்டன. மேலும், இச்செயலை, சிவாஜி—ஷாஜஹானின் தக்காண ஆளுநரும் மைந்தருமான இளவரசர் மூரத்பக்ஸ்ஸிடம் முறையிட்டார். மூரத்தும் சிவாஜிக்கு ஆதரவாகப் பதிலிறுத்ததோடு மட்டுமின்றி ஷாஜஹானின் ஒப்புதலையும் பெற்றார். இந்நிலையில் 1649இல் சாஜி விடுதலை செய்யப்பட்டு பிஜப்பூரில் பணிபுரிய அழைத்துச் செல்லப்பட்டார். இவரது பெங்களூர் திருப்பித்தரப்பட்டு, பழைய பெருமையும் மீண்டும் நிலைநாட்டப்பட்டது. இப்போது இவர் "மகாராஜா" என அழைக்கப்படலானார்.

தனது பழைய நிலைக்கு மீண்டும் வந்த சாஜி அண்டை நாடுகளைக் கைப்பற்றும் கொள்கைப் போக்கினைக் கடைபிடிக்க முயன்றார். 1652இல் மீர்ஜும்லாவைத் தோற்கடித்து பேணுகொண்டாவைக் கைப்பற்றினார். 1658இல் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்ற முயன்று தோற்றார். அடுத்த ஆண்டு தஞ்சையைத் தாக்கினார். மீண்டும் கலகம் செய்து, 1660இல் இரண்டாவது தடவையாக திருச்சிராப்பள்ளிக்கு எதிராகத் தோற்றார். 1661இல் கடலூர், போர்டோ நோவோ பகுதிகளைக் கைப்பற்றினார். மதுரையின் சொக்கநாத நாயக்கர், சாஜியை செஞ்சியிலிருந்து விரட்டியடித்தார். சிவாஜியை பூனாவிலும், வெங்காஜியை பெங்களூரிலும் விட்டுவிட்டு, சாஜி, 1664இல் இறந்தார். அவரவர் விவகாரங்களில் சிவாஜியும், வெங்காஜியும் தமது தந்தையைப் போன்றே செயல்பட்டனர். சிவாஜி, மராத்தியப்பேரரசை உருவாக்கிய நேரத்தில், வெங்காஜி, தஞ்சை அரசைக் கைப்பற்றி மராத்தியர்களின் செல்வாக்கை தென்கோடிவரை விரிவுபடுத்தினார். கி.பி. 1820இல், ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆட்சிக் காலத்தில் மராத்திய அரசும், கி.பி. 1856இல் டல்ஹௌசியின் காலத்தில் தஞ்சை மராத்திய அரசும் ஒழிக்கப்பட்டு அப்பகுதிகள் ஆங்கிலேயப் பேரரசின் கீழ் இணைக்கப்பட்டன.

வெங்காஜி அரசைக் கைப்பற்றல்

தனது இளமைக் காலத்தின் பெரும்பகுதியை கர்னாடகத்தில் செலவிட்ட வெங்காஜி தமிழ்நாட்டு அரசியல் நிலை பற்றித் தெளிவாக அறிந்திருந்தார். சிவாஜியைப் போன்றே தானும் தக்காண சுல்தான்களின் பிடியிலிருந்து விலகி சுதந்திர அரசமைக்க விரும்பினார். தஞ்சையில் ஏற்பட்ட கேவலமான அரசியல் குழப்பம் ஒன்று, தஞ்சை நாயக்கர் அரசை கைக்கொள்வதற்கு வெங்காஜிக்கு உதவியது. தஞ்சையில், மதுரை சொக்கநாத நாயக்கரால் அனுப்பப்பட்ட அழகிரி நாயக்கன் ஆட்சியால் மக்கள் அவதியுற்றனர். வெங்கண்ணா என்பவர், பிஜப்பூர் சுல்தானியிடம் தஞ்சையைக் கைப்பற்றுமாறு பணித்தார். சுல்தானும்

வெங்காஜியை தஞ்சையைக் கைப்பற்ற அனுப்பி வைத்தார். வெங்காஜி தஞ்சையை முற்றுகையிட்டிருந்தபோது அழகிரி மதுரையின் உதவியை நாடினார். ஒருமுறை தவறு செய்து விட்டதாகக் கருதிய சொக்கநாதர் இவ்வுதவி செய்ய மறுத்து விட்டார். எனவே அழகிரி அய்யம்பேட்டைப் போரில் தோற்கடிக்கப்பட்டு மைசூருக்கு ஓடினார்.

வெங்கண்ணாவின் விருப்பப்படி பழைய தஞ்சைநாயக்கர் பரம்பரையில் உதித்த செங்கமலதாஸை அரசராக்கினார். செங்கமலதாஸ், விஜய ராகவ நாயக்கரின் பேரனும், மன்னாருதாஸின் மகனுமாவார். இவர், மன்னார்குடி — கும்பகோணம், பாபநாசம் பகுதிகளின் வருமானத்தை வெங்காஜியிடம் செலுத்த வேண்டும் எனவும் வெங்கண்ணாவை ராயஸமாக நியமிக்க வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் புதிய ஆட்சியாளர் நாகப்பட்டினத்தின் வணிகர் ஒருவரையே தனது ராயஸமாக நியமித்தார். இதனால் ஏமாற்றமடைந்த வெங்கண்ணா, மறுபடியும் தஞ்சையைக் கைப்பற்றும்படி வெங்காஜியை வேண்டினார். ஏற்கனவே தனக்குத் தரவேண்டிய வருமான பாக்கியிருந்ததனாலும், வெங்கண்ணாவின் வேண்டுதலாலும் உந்தப்பட்ட வெங்காஜி படையெடுப்பு நடத்த முடிவு செய்து, தஞ்சை நோக்கி முன்னேறினார். இதனைக் கண்டு அஞ்சிய செங்கமலதாஸ், அரியலூர் சென்று தஞ்சம் புகுந்தார். எனவே கி.பி. 1676இல் வெங்காஜி தஞ்சையைக் கைப்பற்றி மராத்திய அரசை ஏற்படுத்திக்கொண்டார்.

சிவாஜியின் தென்னகப் படையெடுப்பு (1677–78)

சிவாஜியின் தென்னகப் படையெடுப்பிற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. வடக்கே அவரது முன்னேற்றத்திற்கு முகலாயர்கள் தடையாக இருந்த காரணத்தால் தெற்கு நோக்கி படையெடுப்புக்கள் நடத்தியிருக்கக்கூடும் என்பர் ஒரு சாரார். முகலாயர்களை சமாளிக்கும் வகையில் தெற்கே பெத்னூரிலிருந்து தஞ்சை வரை தனக்கென ஒரு பேரரசு வேண்டும் எனக் கருதியிருக்கக்கூடும். J.N. சர்க்கார், சிவாஜி, செல்வம் பெருக்கெடுத்த புதிய பகுதியிலிருந்து ஏராளமான பொன்னும் பொருளும் கொண்டு வரவே படையெடுத்துச் சென்றார் எனக் கூறுகின்றார். A.L. ஸ்ரீவஸ்தவா அவர்கள், சிவாஜி ஓர் படையெடுப்பாளரே எனினும், தென்னிந்தியாவிலிருந்த அரசியல் சீர்கேடுகள், அவரது சுயராஜ்யத்தை தெற்கே விரிவுபடுத்துவதற்கு வழி செய்தன என்று குறிப்பிடுகின்றார். தமிழகம் ஏற்கனவே பல சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோல்கொண்டா, பிஜப்பூர் சுல்தான்கள் கூடத் தங்களது செல்வாக்கைத் தமிழகத்தில் நிலைநாட்டியிருந்தனர். கோல்கொண்டா சுல்தான், கடப்பா, வடஆற்காடு, சிக்காகோல் முதல் சதுரங்கப்பட்டினம் வரையான பகுதிகளையும், பிஜப்பூர் சுல்தான் கர்நூல் மாவட்டம், மைசூர் மேட்டுநிலம், வேலூர் பகுதிகளையும் பெற்றிருந்தனர். சிவாஜி, செல்வச் செழிப்பு மிக்க தமிழகத்தின் முக்கிய நகரங்களான செஞ்சி, தஞ்சை, வேலூரைக் கைப்பற்றிக்கொள்ள விரும்பினார்.

பொதுவாக சிவாஜியின் தென்னகப் படையெடுப்பு அவரது தந்தையின் கர்நாடக ஜாகீரைப் பெறுவதற்கு தனது சட்டபடியான உரிமையை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்டது எனினும், உண்மையில் தனது சகோதரன் வெங்காஜியைத் தனது ஆதிக்கத்தின் கீழ்

வைத்திருக்கவே எடுத்த படையெடுப்பு என நட்கர்னி குறிப்பிடுகின்றார். வெங்காஜி, தனது தந்தையின் ஜாகீரை ஒழுங்காக, அறிவுப்பூர்வமாக ஆட்சி செய்திருந்தால், தனது சகோதரன் சிவாஜிக்கு அடங்கியவராக இருந்திருந்தால் சிவாஜியின் தென்னகப்படை யெடுப்பு நடந்திருக்காது. ஆனால், வெங்காஜி தனது தீய நண்பர்களின் ஆலோசனை களைக் கேட்டு நடந்ததால் சாஜியின் பெருமை அழிவதற்கும், ஜாகீரின் அழிவுக்கும் வழிவகுத்தார். இதே சூழ்நிலையில் வெளிப்படையாக சிவாஜியையும் இழிவுபடுத்தினார் எனவும் நட்கர்னி குறிப்பிடுகின்றார். வெங்காஜியின் செயல்களால் ஆத்திரமடைந்த அமைச்சர் ரகுநாதநாராயண் ஹனுமந்தே, சிவாஜியை சதாராவில் சந்தித்து, படை யெடுப்பை நடத்துமாறு வேண்டினார். அதனால் கோபமுற்ற சிவாஜி தமது சகோதரன் மீது படையெடுக்க முடிவு செய்தார் எனக் கருதப்படுகிறது. சிவாஜியும், வெங்காஜியும் கி.பி. 1676இல் ஒருவரை ஒருவர் கண்டு பொறாமையுற்றனர். இருவருமே தங்கள் சுதந்திர அரசினை நிலைநாட்ட முயன்றனர். வெங்காஜி, விரைவிலேயே, சிவாஜியையும், கோல்கொண்டாவையும் தனக்கு எதிராகத் தூண்டிவிட்ட தன் அமைச்சரை வெளியேற்றினார். எனவே சிவாஜியின் தென்னகப் படையெடுப்பிற்கான உண்மையான காரணம் கொள்ளையடித்தலாகாது, பேரரசின் விரிவாக்கமேயாகும். முகலாயரிடமிருந்து தன்னைக் காப்பது இதற்கு உடனடிக்காரணமாயிருந்திருக்கக்கூடும். அவர், கட்டாயக் கடன்கள் மூலமாகவும், நன்கொடைகள் மூலமாகவும் இராணுவத்திற்கு நிதி திரட்டினார். 1676இல் இஸ்லாமிய சமயத்திற்கு மாறிய நேதாஜிபால்கர் என்பவரைத் தமது ஆதரவுக்கு அழைத்துக் கொண்டு, அவரை மீண்டும் இந்து சமயத்திற்கு மாற்றினார். 1677 ஜனவரியில் ஹைதராபாத்தில் இந்து பிரதம அமைச்சர் மதன்னாவிடம் ஆலோசனை பெற்று, பின், சுல்தானைக் காணச் சென்றார். சுல்தானுக்கும் சிவாஜிக்குமிடையே கூட்டு உடன்பாடு ஒன்று கையெழுத்தானது. இவ்வுடன்பாடு சிவாஜிக்கு சாதகமாகவே இருந்தது.

மார்ச் மாதக் கடைசியில், சிவாஜி, ஹைதராபாத்தை விட்டு 5000 வீரர்களுடன் புறப்பட்டு செஞ்சியை முற்றுகையிட்டார். பிஜப்பூர் படைத்தலைவர்கள் ரஃபிகானும், நஸீர் முகமதுகானும் செஞ்சிக்கோட்டையை சிவாஜியிடம் ஒப்படைத்தனர். இதற்குக் கைமாறாக சிவாஜியிடமிருந்து 50,000 ரூபாய் ஆண்டு வருமானம் தரக்கூடிய ஜாகீரைப் பெற்றனர். செஞ்சியின் நிர்வாகத்தைச் சீரமைத்த சிவாஜி, பிஜப்பூர் படைத்தலைவர்களில் ஒருவரான அப்துல்லாவின் பொறுப்பிலிருந்த வேலூரைத் தாக்கினார். முதலடியிலேயே வேலூரைக் கைப்பற்றமுடியாது தோல்வியுற்ற அவர், அப்பொறுப்பை தனது அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு கடலூரை ஆண்ட செர்கான் லோடிக்கு எதிராகப் படை நடத்திச் சென்றார். பாண்டிச்சேரியிலிருந்த பிரஞ்சுக்காரர்களும் இவருக்கு ஆதரவு காட்டினர். கடுமையான போருக்குப்பின், செர்கான் லோடி, 1677 ஜூலை 15ஆம் நாள் சிவாஜியைச் சந்தித்து அவரிடம் பணிந்து 20000 ஹன் (hun) நாணயங்களை போர் இழப்பீட்டுத் தொகையாக செலுத்தினார்; தமது ஆட்சிப் பகுதிகள் முழுவதையும் கொடுத்ததோடு மட்டுமின்றி மீதிப்பணத்தைத் தரமுடியாமையால் தனது மகன் இப்ராஹிம்லோடியைப் பணயமாக வைத்துவிட்டுச் சென்றார். இதற்கிடையில் வேலூர் பணிந்தது; மதுரை நாயக்கர்கள் திறை செலுத்த ஒப்புக் கொண்டனர்; கடலூர், வேலூர், செஞ்சி நகரங்களைச் சுற்றியுள்ள கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. இவ்வாறு துங்கபத்திரா முதல் காவிரி வரையான பகுதிகளனைத்தும் சிவாஜியின் கீழ் வந்தன.

வெற்றிகள் பல பெற்ற தருணத்தில், தனது ஒன்றுவிட்ட சகோதரரை பகிரங்கமாக எதிர்க்க வேண்டுமென சிவாஜியை அவரது ஆலோசகர்கள் தூண்டினர். 1678 ஜூலையில் செஞ்சியில் இரு சகோதரர்களும் ஒரு வார காலம் தங்கியிருந்தனர். சிவாஜியின் எண்ணத்தினைக் கண்ணுற்ற வெங்காஜி தஞ்சைக்கு ஓடி விட முயன்றார். முன்னாளய வெங்காஜியின் அமைச்சர் ஹனுமந்தேயின் விருப்பப்படி, சிவாஜி வெங்காஜியிடம் உடைமையில் பாதியை கேட்டார். ஆனால் வெங்காஜியோ தான் பிஜப்பூர் சுல்தானின் பணியாளர் எனவும் அவரது உத்தரவின் பேரிலேயே தர முடியும் எனவும் கூறினார். எனவே இருவருக்குமிடையே போர் நடக்க வேண்டிய நிலை உருவானது. வெங்காஜி பிஜப்பூர் சுல்தானிடமிருந்தும், மதுரை, மைசூர் அரசர்களிடமிருந்தும் உதவி நாடினார். ஆனால் பிஜப்பூர் சுல்தானோ, உதவி செய்வதாக உறுதி கூறிடவில்லை. அதனால் வெங்காஜி தானே நேரடி நடவடிக்கையிலிறங்கினார். காவிரிக்கு வடக்கே ஆரணி, கோலார், ஹாஸ்கோட், பெங்களூர், பாலாப்பூர், சிரா ஆகிய பகுதிகள் சிவாஜியிடம் சிக்கின. ஆளுநர் ஒருவரை நிர்வாகம் நடத்துவதற்கு அங்கு அமர்த்திவிட்டு பெரும் செல்வத்துடன் சிவாஜி ரெய்காருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

சிவாஜி மகாராட்டிரத்திற்குச் சென்றதும், வெங்காஜி சிவாஜியின் ஆளுநரைத் தாக்கினார். ஆனால் தோற்கடிக்கப்பட்டதோடு மட்டுமின்றி பின்னால் இன்னல்களை அனுபவிக்க நேரும் எனவும் எச்சரிக்கப்பட்டார். விரைவில் ரகுநாத பண்ட் ஹனுமந்தேயின் உதவியால் இரு சகோதரர்களுக்குமிடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி வெங்காஜியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகள் அவருக்கே திருப்பித் தரப்படவேண்டுமெனவும், அதற்குப் பதிலாக, வெங்காஜி பிஜப்பூரின் கீழிருந்து விலகி சிவாஜிக்குப் பணிந்து சிற்றரசராக செயல்பட வேண்டுமெனவும் கையெழுத்தானது. இதே நிலையில் மராத்தியர்களுக்கு முகலாயர் தாக்குதலின் பயம் ஏற்பட்டதால், சிவாஜி, தஞ்சை வரையான தனது பகுதிகளில் அரணமைத்தார். திடீரென்று 1680இல் சிவாஜி இறந்து விடவே, வெங்காஜி தமிழகத்தில் மராத்தியப் பகுதிகளின் தன்னிகரற்ற தலைவரானார்.

தஞ்சை மராத்தியர்கள்

வெங்காஜி (அ) எகோஜி

பெங்களூரில் மரணப்படுக்கையிலிருந்தபோது, சாஜி தனது கர்நாடக ஜாகீரையும் தஞ்சையையும் தனது அன்புக்குரிய, தனது ஈமச்சடங்குகளைச் செய்கின்ற மகன் வெங்காஜிக்குக் கொடுத்தார் எனக் கருதப்படுகிறது. கி.பி. 1630இல் சாஜிபான்ஸ்லேக்கும் துக்காபாயிக்கும் மகனாகப் பிறந்த சாஜி தனது தந்தையின் கண்காணிப்பிலேயே வளர்ந்தார். பின் பிஜப்பூரின் சுல்தான் அலி அடில் ஷாவின் கீழ் பணிபுரிந்தார். தஞ்சையின் உள்நாட்டு அரசியலிலிருந்த சீர்கேடுகளைக்கண்டு, அதனை பயன்படுத்திக் கொண்ட வெங்காஜி தஞ்சையின் ஆட்சியாளரை விரட்டி விட்டு அரியணையை அபகரித்துக்கொண்டார். 1676-77இல் சிவாஜி செஞ்சியைக் கைப்பற்றியது சரி என்று வரலாறு ஏற்றுக்கொண்டால், வாலாஜா தலைவர் முகமது அலி ஆற்காடு நவாப் பகுதியை ஏற்றுக்கொண்டால், கட்டாயம் வெங்காஜியின் தஞ்சை அபகரிப்பு சரியே என ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இவர் அலி அடில்ஷாவுக்கு எதிராகக் கலகம் செய்தவ

ரெனினும், தஞ்சையை அபகரித்தவர் என எண்ணினாலும் தஞ்சை மராத்திய அரசை உருவாக்கியவர் என்ற பெருமையைப் பெற்று வரலாற்றில் இடம் பெற்று விட்டார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பல அரசியல் குழப்பங்களுக்கிடையே வெங்காஜியின் ஆட்சி செயல்படத் துவங்கியது. துவக்கத்தில் போர்களால் ஏற்பட்ட இன்னல்களையும், மக்களின் துன்பங்களையும் களைய விரும்பினார். பின்னாளில் பேராசைமிகவே, நாட்டின் நலனைப் பற்றி அவர் சிறிதளவும் கவலைப்பட்டவராய்த் தெரியவில்லை. தேவையற்ற விவகாரங்களில் தலையிட்டதால் நேரத்தையும், நாட்டின் செல்வத்தையும், சக்தியையும் இழக்கச் செய்தார். மக்களிடமிருந்து அதிகமான வரி வசூல் செய்யப்பட்டது; உற்பத்தியில் ஐந்தில் நான்கு பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது. ஆலோசனை கூறியவர்கள் அவமானப்படுத்தப்பட்டனர்.

தனது ஒன்று விட்ட சகோதரரின் கொடுங்கோன்மை ஆட்சியைக் கேள்விப்பட்ட சிவாஜி அவருக்கு எதிராக 1676-77இல், படை ஒன்றை அனுப்பினார். இப்படை யெடுப்புக்குக் காரணம் மக்களின் நலன் கருதியே என்று கூறுவது ஏற்புடைத்தன்று. சகோதரர் இருவரும் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் வைத்திருந்த பொறாமை யுணர்ச்சியும், பேராசையுமே காரணமாயிருக்கக்கூடும். தனது தந்தை இறந்த போது சிவாஜி பெங்களூருக்கு வெகு தூரத்தில் இருந்தார். தமக்கு வேண்டிய பங்கு சரியாகக் கொடுக்கப்படவில்லை என்பதும், வெங்காஜியின் ஆட்சிப்பகுதியில் பாதியை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதுமே அவரது எண்ணமாயிருந்தது. எனவே வெங்காஜியை கைது செய்ய முயன்றார். இதனைக் கேள்வியுற்ற வெங்காஜி தஞ்சைக்கு ஓடினார். இதன்பின் கர்நாடகப்பகுதியை தனது மற்றொரு சகோதரரான சாந்தாஜியிடம் ஒப்படைத்துவிட்டுத் தம் நாடு திரும்பினார்.

சிவாஜி மகாராஷ்டிரத்திற்குத் திரும்பியதும், வெங்காஜி சாந்தாஜியை மிரட்டினார். செஞ்சியைத் தாக்கினார். இதனைக் கண்டு பயந்த சாந்தாஜி சிவாஜிக்கு செய்தி யனுப்பினார். சிவாஜி, தனது சகோதரர் வெங்காஜியை எச்சரித்தார். சிவாஜிக்கும் வெங்காஜிக்குமிடையே பத்தொன்பது சரத்துக்களைக் கொண்ட உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. வெங்காஜி, கட்டாயத்தின் பேரில் தான் இதனை ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் வெங்காஜி தஞ்சையில் இல்லாததைப் பயன்படுத்த எண்ணிய மதுரையின் சொக்கநாத நாயக்கர் தஞ்சையை நோக்கிப் படை நடத்தி, முடிவில் தோற்றார். 1680இல் சிவாஜி இறந்தவுடனேயே மைசூரின் படைத்தலைவரான குமாரய்யா திருச்சிராப்பள்ளியைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆக்கிரமிக்க முயன்றார். வெங்காஜியும் இராமநாதபுரத்து கிழவன் சேதுபதியும் மைசூர் தளபதியின் கொடுஞ் செயல்களைத் தடுக்க விரைந்தனர். இதனால் சொக்கநாதரின் ஆட்சிப்பகுதி காக்கப்பட்டது. ஆனால் சொக்கநாதர் இறந்தபின் மதுரைக்கும் தஞ்சைக்கும், மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கு மிடையேயான தொடர்புகள் மீண்டும் துண்டிக்கப்பட்டன. தஞ்சை, இராமநாதபுரம் அரசுகளின் கூட்டுப்படைகள் சேர்ந்து மதுரை அரசை ஒடுக்கி ஒரு இரண்டாம் தர அரசாக்கின.

கி.பி. 1684இல் வெங்காஜி தனது தஞ்சைப் பகுதியை தனது மூத்த மகன் சாஜியிடம் ஒப்படைத்து விட்டு இறந்தார். சிவாஜியுடன் ஒப்பிடும் அளவுக்கு வெங்காஜி சிறந்தவர் என்று சொல்வதற்கில்லையெனினும், வீரத்தில் சிவாஜிக்கு எந்த வகையிலும் குறைந்தவரல்ல. பீஜப்பூர் சுல்தானிடம் சாதாரணப் பணியாளராயிருந்து சிறிது சிறிதாக உயர்ந்து தென்கோடிப் பகுதிகளைக் கைப்பற்றும் திறமை பெற்றிருந்தார். மகாராஷ்டிரத்தில் சிவாஜிக்கு, அன்னியர்களை வெளியேற்றுவதற்கு, மராத்திய மக்கள் உதவினர். ஆனால் வெங்காஜிக்கு தெற்கே உதவுபவர்கள் யாருமில்லாது தனித்திருந்து தீரமுடன் செயல்பட்டார்.

சாஜி (1684–1712)

வெங்காஜியின் மூன்று மைந்தர்களில் மூத்தவரான சாஜி 1684இல் தஞ்சையின் அரசராக முடிசூட்டிக் கொண்டார். 1689இல் சாம்பாஜி முகலாயர்களால் கொல்லப்பட்ட பின்பு, சிவாஜியின் இரண்டாவது மகனான ராஜாராம் மகாராஷ்டிர மன்னரானார். ஔரங்கசீப், ராஜாராமைவிடாது பல இடங்களுக்கு துரத்தினார். ராஜாராம் முடிவில் சதாராவில் தனது அரசவையை ஏற்படுத்திக்கொண்டார். சதாராவையும் முகலாயர்கள் தாக்கியபோது ராஜாராம் செஞ்சிக்கு ஓடினார். ஔரங்கசீப்பின் ஆணைப்படி அவரது தளபதியான சூல்ஃபிகர்கான் செஞ்சியையும் முற்றுகையிட்டார். இப்போது சாஜி, ராஜாராமின் இக்கட்டான நிலையை உணர்ந்து அவருக்கு உதவியாக இருபதாயிரம் குதிரை வீரர்களை அனுப்பினார். சாஜியின் இந்த செயலைக் கண்ட சூல்பிகர்ஃகான் தஞ்சையைக் கொள்ளையிட்டார். இராணுவப் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் நான்கு இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என தஞ்சையை வலியுறுத்தினார். இதனைச் செலுத்த முடியாது எனக்கருதிய சாஜி, சூல்ஃபிகர்கானுடன் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி, சூல்ஃபிகர்கானுக்கு இருபது இலட்சம் ரூபாய் செலுத்துவ தாகவும், 1000 குதிரைகளையும், 1000 காலாட் படையினரையும் பராமரிப்பதாகவும் சாஜி ஒப்புக் கொண்டார். முன்னதாக 17 இலட்சம் ரூபாயை செலுத்திவிட்டு மீதியை நவாபின் படைகள் தனது ஆட்சிப் பகுதியை விட்டு வெளியேறிய பின்பு செலுத்தி விடுவதாக சாஜி ஒப்புக்கொண்டார்.

இராமநாதபுரத்தில் கிழவன் சேதுபதிக்கும் மதுரை நாயக்கருக்கும் இடையே நடந்த போரில் சாஜி சேதுபதிக்கு உதவியதால், மதுரைத் தளபதி தளவாய் நரசப்பையா தஞ்சை மீது போர் தொடுத்தார். தஞ்சையின் தளபதியான பாலாஜி தளவாய் நரசப்பையாவுக்கு ஏராளமாகக் கையூட்டுக் கொடுத்து போரைத் தவிர்த்தார். இதற்கு ஈடாக, கிழவன் சேதுபதி புதுக்கோட்டையையும் அதன் சுற்றுப்பகுதிகளையும் தஞ்சைக்குக் கொடுத்தார். மைசூரின் அரசரான சிக்க தேவராயர் காவிரி நீர்ப்போக்கைத் தடுத்து அணைகட்ட முயற்சித்தபோது மதுரை தஞ்சைக் கூட்டுப் படைகள் மைசூருக்கு அனுப்பப்பட்டன. ஆனால் அதற்கும் முன்பே திறமையற்ற கட்டிட அமைப்பினால் அணை தானே உடைந்து சிதறியது.

கிழவன் சேதுபதி சுதந்திரமாக இயங்க வேண்டுமென முயன்ற போது மதுரையின் செல்வாக்கு சீர்குலைந்திருந்தது. தளவாய் நரசப்பையா இழந்த பெருமையை மீட்கவும், இழந்த பகுதிகளைத் திரும்பப் பெறவும் விரும்பினார். ஆனால் விரைவில் நரசப்பையர்

இறந்து விடவே, மதுரை அரசு தஞ்சையின் உதவியை நாடியது. தஞ்சையின் சாஜியும் மதுரைக்கு உதவினார். இதனால் கோபமுற்ற சேதுபதி மதுரையை வெற்றி கண்ட பின்பு 1709இல் தஞ்சையைத் தாக்கினார். சேதுபதியின் தாக்குதலைச் சமாளிக்க இயலாத சாஜி அறந்தாங்கிப் பகுதியை சேதுபதியிடம் இழந்தார். சாஜியின் உதவி பெற்ற இராஜாராமும் முகலாயர்களின் வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை. தவிர, சாஜி, தனது ஆட்சிக் காலத்தில் ஏராளமான சத்திரங்களைக் கட்டினார்; மராத்திய மொழியை ஆதரித்தார்; தஞ்சைக் கோட்டையைச் சீர்படுத்தினார். தனக்குப் பின் வாரிசில்லாமலேயே 1712இல் இறந்தார்.

முதலாம் செர்ஃபோஜி I (1712–1723)

சாஜியின் சகோதரரும், வெங்காஜியின் இரண்டாவது மைந்தரும், புதுக்கோட்டைப் பகுதியின் ஆளுநருமான செர்ஃபோஜி 1712இல் தஞ்சையின் அரியணையை ஏற்றுக் கொண்டார். இவர், இராமநாதபுரத்தில் தண்டத்தேவருக்கும், பவானி சங்கரருக்கு மிடையே நடந்த அரசுரிமைப் போரில் தலையிட்டார். தண்டத்தேவர், மதுரை அரசிடமிருந்தும் புதுக்கோட்டையிலிருந்தும் உதவி வேண்டினார். ஆனால், பவானி சங்கரன் தஞ்சையின் இராணுவ உதவியையே நாடினார். தஞ்சைக்கு, பாம்பாருக்கு வடக்கே இருந்த இராமநாதபுரத்துப் பகுதிகளனைத்தையும் தருவதாக பவானி உறுதியளித்திருந்தார். இதனை நம்பிய செர்ஃபோஜி பெரும்படை ஒன்றை ஆனந்தராவ் என்பவரின் தலைமையில் அனுப்பி வைத்தார். இப்படை மதுரை, புதுக்கோட்டைப் படைகளைத் தோற்கடித்ததோடு மட்டுமின்றி தண்டத்தேவரின் குடும்பத்தையே அழித்தது. பவானி சங்கரர் 1720இல் சேதுபதியாகப் பதவியேற்றார்.

வெற்றிக்குப் பின், தான் கொடுத்திருந்த வாக்குறுதியை பவானி சங்கரன் நிறைவேற்றத் தவறினார். தனது ஆளுகைக்குட்பட்ட பாளையக்காரர்களையும் அடக்க முயன்றார். சிவகங்கையின் சசிவர்ணத்தேவரும் தஞ்சையின் உதவியை நாடினார். மீண்டும் தஞ்சைப்படை ஒன்று சேதுபதி அரசுக்கு எதிராக அனுப்பப்பட்டது. இம்முறை பவானி சங்கரன் தோற்கடிக்கப்பட்டு, சிறைபட்டு, பின் உயிர் நீத்தார். இராமநாதபுர அரசு தாழ்ந்த நிலைக்குள்ளானது. சசிவர்ணத்தேவர் சுதந்திரமாக இயங்கத் துவங்கினார். முகலாயரின் இரண்டாவது படைத்தளபதியும், இரண்டாவது ஆற்காடு நவாபுமான தாவுதுகான் தஞ்சையிடமிருந்து திறைவசூலித்து வந்தார். காவிரிக்கரையில் முகலாயப்படை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சட்டப்படியான வாரிசு யாருமின்றியே செர்ஃபோஜியும் 1728இல் இறந்தார்.

துகோஜி (1728–1736)

அரசுரிமைப்போர் ஒன்று ஏற்பட்ட பின்பு 1728இல் துகோஜி அரசராகப் பதவியிலமர்ந்தார். இவர் வெங்காஜியின் கடைசி மகனும் சாஜியின் சகோதரனுமாவார். இவர் தகுதிவாய்ந்தவராகவோ, அமைதியை விரும்புபவராகவோ இருக்கவில்லை. பிரச்சனைகளை அணுகுவதில் கொடூரத்தன்மையும், கிளர்ச்சி எண்ணமும் இவரிடம் குடி கொண்டிருந்தன. எதிலும் பேராசை கொண்டவராகக் காட்சியளித்தார். தெற்கே முகலாயப் பேரரசு வளர்ச்சியுறுவதைக் கண்டு கொண்ட பின்னும் கவனமற்று இருந்தார்.

சுதந்திரம் பறிபோய்க்கொண்டிருந்தது. 1732இல் சப்தர் அலியும், சந்தா சாகிப்பும் தஞ்சை மீது படை நடத்திச்சென்று சுற்றுப்புற கிராமங்களை அழித்தனர்; கொள்ளையிட்டனர்; மக்கள் பலரைக் கொன்று குவித்தனர். இம்மாதிரியான அழிவு வேலைகளால் பயமுறுத்தலுக்குட்பட்டபோது துகோஜி ஏராளமான பணத்தைக் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார். இராணுவத்தைவிட, பொருளாதார நிறைவே நாட்டை அழிவிலிருந்து காக்க உதவியது.

இந்த நிலையிலும் துகோஜி இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை அரசுகளுக்கு எதிராகப் படை நடத்திச் சென்றார். ஆனால் தோல்வியையே தழுவினார். மதுரை நாயக்கர் அரசு அழிந்து கொண்டிருப்பதைக் கண்டு பெருமிதம் கொண்டார். கட்டத்தேவர் இராமநாதபுரத்தின் சேதுபதியாக இருந்த போது அவருக்கு எதிராகப் படை நடத்தினார். இப்போது சிவகங்கை அரசின் உதவியையும் பெற்றார். இப்படையெடுப்பில் வெற்றி பெற்றார். தனது மகனை இராமநாதபுர அரியணையில் அமர்த்திவிட எண்ணினார். அவர் நினைத்தது போன்றே வெற்றியும் பெற்றார். ஆனால் பண்டாரம் என்ற தளபதியின் செயலால் இவரது எண்ணம் ஈடேறவில்லை. பண்டாரம் பின்னால் தண்டனைக்குள்ளானார். தஞ்சைப்படை முற்றுகையை விட்டுப் பின்வாங்கியது. ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டது.

சிறிது காலத்திற்குப்பின் ஆனந்தராவ் என்பவரின் தலைமையில் தஞ்சை மதுரை கூட்டுப்படைகள் தொண்டைமானின் பகுதியைச் சூறையாட அனுப்பப்பட்டன. ஆனந்தராவும் திருமயம் தவிர மற்ற பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் தொடர்ந்து வரும் வெற்றியைத் தடுக்க சேதுபதிகளின் படை ஊடுருவியது. எனவே வேறு வழியின்றி ஆனந்தராவ் தஞ்சைக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. இராமநாதபுரம், புதுக்கோட்டை அரசுகள், இப்பிரச்சனையில் தலையிடும்படி, ஆற்காடு நவாப்பை வேண்டின. இவ்வழைப்பை ஏற்று சப்தர் அலியும் சந்தாசாகிபும் தஞ்சை மீது படையெடுத்து நகரை முற்றுகையிட்டனர். அடுத்து நடந்த போரில் ஆனந்தராவ் அழிவுக்குள்ளானார். துகோஜி பொன்னும் பொருளும் கொடுத்து அமைதி ஏற்படுத்தினார்.

உள்நாட்டுப்போர் : 1736இல் துகோஜி இறந்த பின் நாடு மேலும் இன்னல்களுக்கும், ஐரோப்பியர் தலையீட்டுக்கும் உள்ளானது. இந்த இழிநிலைக்குக் காரணம் துகோஜியின் மைந்தர்களுக்கும் செர்போஜியின் மகனான காட்டு ராஜாவுக்குமிடையில் ஏற்பட்ட அரசுரிமைப் போரே ஆகும். துகோஜியின் சட்டத்திற்கு புறம்பான பிள்ளைகளான அண்ணாசாகிபும் நானாசாகிபும் தமது தந்தைக்கு முன்பே இறந்து விட்டனர். மற்ற மூன்று மக்களில் பாபா சாகிபும், சாயாஜியும் துகோஜியின் பட்டத்து அரசிக்கும், பிரதாப்சிங், அவரது இரண்டாவது மனைவிக்கும் பிறந்தவர்களாவர். இவரது இரண்டாவது மனைவி அன்னபூர்ணா துக்காஜியின் தீரச்செயல்களுக்காக அவரை மணந்து கொண்டவராவார். மூத்த மனைவியின் இரு பிள்ளைகள் உதவாக்கரைகளாயிருந்ததாலும், ஏராளமான பிரபுக்களின் ஆதரவு இருந்ததாலும் பிரதாப்சிங் அரச பதவிக்கு வருவதற்கு வாய்ப்பு இருந்தது.

துகோஜியின் மூத்தமகனான பாபா சாகிப் ஓர் ஆண்டு ஆட்சி செய்தார். இவர் காலத்தில் சந்தாசாகிப் தஞ்சையைத் தாக்கிக் கொள்ளையடித்தார். பாபா சாகிப் இறந்தபின், காட்டு ராஜா, தானே அரசுக்கு உரியவன் என உரிமை கொண்டாடினார். பாபா சாகிப்பின் மனைவியான சூஜனாபாயை ஆட்சி பீடத்திலிருந்து இறக்கிவிட்டு, தானே அரசினை அபகரித்துக் கொண்டார். இதனால் அச்சமுற்ற சாயாஜி தஞ்சையிலிருந்து சிதம்பரத்திற்கு ஓடி பிரஞ்சு ஆளுநராயிருந்த M. டூமாஸிடம் உதவி வேண்டினார். தனக்குச் செய்யும் உதவிக்கு ஈடாக காரைக்கால் பகுதியை பிரஞ்சுக்காரர்கள் எடுத்துக் கொள்ளலாம் என பிரகடனம் செய்தார். இந்த வாக்குறுதியை நம்பி டூமாஸ் பெரும் கடற்படை ஒன்றை காரைக்காலுக்கு அனுப்பி வைத்தார். இந்நிலையில் சாயாஜியும் சய்யது எனும் கோட்டைக் காவலனும் தங்களது காழ்ப்புணர்ச்சியைத் தெரிவித்து காட்டுராஜாவுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர். எனவே 1738இல் காட்டுராஜா வெளியேற்றப்பட்டு சாயாஜி பதவியிலமர்த்தப்பட்டார். பிரஞ்சுக்காரர்களும் தங்களது படைகளை காரைக்காலிலிருந்து பின் அழைத்துக் கொண்டனர். அதே நேரத்தில், நாடுபிடிக்கும் ஆசையும் பணப்பேராசையும் கொண்டிருந்த சந்தாசாகிப் காரைக்காலைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார். இந்த செயலைப் பயன்படுத்திக் கொண்ட பிரதாப் சிங் (சாயாஜியின் ஒன்று விட்ட சகோதரர்) அரசைத் தனக்காகக் கைப்பற்றிக் கொண்டு காரைக்காலை பிரஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்து விட்டார்.

பிரதாப்சிங் (1739–1763)

இவரது ஆட்சிக்காலம் தஞ்சை அரசின் நேரடி அழிவுக்கு வித்திட்டது. கர்னாடகப் போர்களில் தலையிட்டதே இவ்வரசின் விரைவான அழிவுக்குக் காரணம் எனக் கருதப்படுகிறது. இவர் ஆங்கிலேயரிடம் செல்வாக்குப் பெற்றவராகவோ அல்லது பிரான்சின் தலையீட்டுக்கு எதிரியாகவோ இருக்கவில்லை. ஆனால் இவர் தமது எதிரிகளால் எல்லாப்பக்கங்களிலும் சூழப்பட்டு விட்டார். கர்னாடக நவாப், மராத்தியர், மைசூரியர்கள், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர்கள், புதுக்கோட்டையின் தொண்டைமான்கள் ஆகியோர் இவர் தம் எதிரிகளாவர். பிரதாப்சிங்கும் தமது அண்டை நாட்டு மக்களிடம் கொடுமையான கொள்கைகளைக் கொண்டிருந்தார். நவாபுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பணம் செலுத்தப்படாததால் நவாபின் எதிர்ப்பைப் பெற்றார். திருச்சிராப்பள்ளியிலிருந்த சந்தாசாகிப்பும் தமது அண்டை நாட்டுப்பகுதிகளைக் கைப்பற்ற முயன்றார்; தஞ்சையையும் எச்சரித்தார். எனவே பிரதாப்சிங் மராத்தியரின் உதவியை நாடினார். 1739-40இல் ரகூஜிபான்ஸ்லே கர்நாடகப்பகுதியில் நடத்திய படையெடுப்பு தற்காலிகமாக பிரதாப்சிங்கை அழிவிலிருந்து காத்தது. 1742இல் மீண்டும் தஞ்சை நிஜாம் உல்முல்க்கால் பயமுறுத்தப்பட்டது. கலக்கமற்ற பிரதாப்சிங் ஏழு இலட்சம் ரூபாய் செலுத்துவதாக உறுதிப்பத்திரம் ஒன்றை எழுதிக்கொடுத்து, தற்காலிகமாக கணிசமான தொகையையும் செலுத்தினார். இதனால் அமைதி காக்கப்பட்டது.

கர்னாடகப் போரின் முதற்கட்டத்தில் சந்தாசாகிப்பின் தலைமையில் அனுப்பப்பட்ட எதிரிகளின் படை தஞ்சையைக் கொள்ளையிட்டது. பிரதாப்சிங், முகமது அலியிடமிருந்தும், ஆங்கிலேயரிடமிருந்தும் இரகசியமாக உதவி வேண்டினார். முகமது

அலி, சந்தாசாகிப்புக்கு எதிரான ஒரு அணிதிரட்டி 1752இல் சந்தா சாகிப்பினைக் கொலை செய்தார். மேஜர் லாரன்ஸின் ஆலோசனையின்படி, தஞ்சைப் படைத் தளபதியான மானோஜி, திருச்சிராப்பள்ளியில் தோஸ்த் அலியின் வாரிசினைச் சந்தாசாகிப் கொன்றார். நவயத்துக்களின் அழிவுக்கு முன்பு அவர்கள் தஞ்சையின் பாதுகாப்பிற்கு இன்னல்கள் கொடுத்தனர். இந்த இன்னல் காலங்களில், பிரதாப்சிங், பெரும் பணம் கொடுத்து அமைதியை விலைக்கு வாங்கினார். அல்லது சில கிராமங்களையும், காரைக்காலின் வருவாயையும் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்தார். ஒரு முறை பிரெஞ்சுக்காரர்களுக்கு 81 கிராமங்களை விட்டுக் கொடுத்தார். மற்றொரு முறை அவர்களுக்கு ஏராளமான செல்வத்தை அள்ளிக் கொடுத்தார். 1758இல், பிரெஞ்சுக் காரர்கள், லால்லியின் தலைமையில் தஞ்சை மீது படையெடுத்தனர். ஆனால் அவர்கள் வெற்றி அடையும் தருவாயில் ஆங்கிலேயர்கள் தஞ்சையின் உதவிக்கு வந்தனர். இராமநாதபுரத்து சேதுபதி அரசைக் கைப்பற்ற பிரதாப்சிங் முயன்றபோது ஆங்கிலேயர்கள் தடுத்து விட்டனர். ஏனெனில் திருநெல்வேலியின் பாளையக்காரர்களை ஒடுக்குவதற்கு ஆங்கிலேயர்களுக்கு சேதுபதியின் உதவி தேவைப்பட்டது. 1755இல் புதுக்கோட்டையின் பகுதிகளான திருமயம், கீராநல்லி ஆகியவற்றைக் கைப்பற்ற, பிரதாப்சிங் படையெடுப்பு நடத்தியபோதும் ஆங்கிலேயர்கள் தலையிட்டு படையெடுப்பு ஏற்படாமல் தடுத்தனர். ஆனால், 1756இல் கீராநெல்லி பிரதாப்சிங்கால் கைப்பற்றப்பட்டது. இதற்கான தாக்குதல்களும் எதிர்த்தாக்குதல்களும் 1760 வரை நடந்தன. நவாப்போ அல்லது ஆங்கிலேயர்களோ, 1763இல் அவர் இறக்கும் வரை அவரைத் தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க முடியவில்லை.

துல்ஜாஜி (1763–1787)

துல்ஜாஜியின் அரியணையேற்பு தஞ்சையின் அழிவினை மேலும் துரிதப்படுத்தியது. ஏழாண்டுப் போரின் முடிவில் ஏற்பட்ட இவரது ஆட்சிக் காலத்தில் மைசூர் அரசில் ஹைதர்அலி தோன்றலானார். முகமது அலிக்கும் ஆங்கிலேயர்களுக்கும் பரம எதிரியா யிருந்த ஹைதர்அலி தஞ்சையின் பகுதிகளை ஆக்கிரமிக்க முயன்றார். கரூரைக் கைப்பற்று வதற்கு ஆங்கிலேயருக்கு உதவிய துல்ஜாஜி அதற்கு நஷ்ட ஈடாகத் தனக்கு நாற்பது இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என ஹைதர்அலி துல்ஜாஜிக்கு ஆணையிட்டார். அவ்வாறு செலுத்தத் தவறினால் தஞ்சை மக்களுக்கு இன்னல் விளைவிப்பதோடு அப்பகுதியை அழித்து விடுவதாகவும் எச்சரித்தார். இதனால் பயந்த துல்ஜாஜி நான்கு இலட்சம் ரூபாயையும் நான்கு குதிரைகளையும் சமர்ப்பித்தார். ஆனால் விரைவில் மைசூர்ப்படை துல்ஜாஜியின் நிலையை மோசமாக்கியது.

புதுக்கோட்டை அரசும், சேதுபதியின் அரசும் சேர்ந்து தஞ்சையிடம் தாம் இழந்த பகுதிகளை மீட்டன. 1771இல் துல்ஜாஜி இராமநாதபுரத்தின் மீது படையெடுத்தார். இராமநாதபுரமும் புதுக்கோட்டையும் நவாபின் உதவியை நாடின. நவாப் முகமது அலி துல்ஜாஜியை எச்சரித்தபோதும் அதனைப் பொருட்படுத்தாது, தஞ்சைப்படைகள், இராமநாதபுரத்தை முற்றுகையிட்டு நிலங்களை தரிசாக்கின. சேதுபதி மன்னரைக் கட்டாயப்படுத்தி எதேச்சாதிகார உடன்பாடு ஒன்றில் கையொப்பம் பெற்றனர். அதன்படி

ஒரு இலட்சம் ரூபாயும், முப்பது ஆயிரத்துக்கு மதிப்பான ஆபரணங்களும், இருபெரும் யானைகளும், இரண்டு பீரங்கிகளையும் செலுத்துவதாக சேதுபதி ஒப்புக்கொண்டார். பின், வெற்றி பெற்ற தஞ்சைப்படைகள் சிவகங்கை நோக்கி நகர்ந்தன. ஆனால் அங்கு அப்படைகள் எதிர்க்கப்பட்டன. அதே நேரத்தில் நவாப் தஞ்சை மீது போர்ப்பிரகடனம் செய்தார். எனவே தஞ்சைப்படைகள் தங்கள் ஆட்சிப் பகுதிகளைக் காப்பாற்ற விரைந்தன.

கர்நாடகத்தில் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் எதிராகக் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த ஹைதர் அலி முயன்றார். அதற்கான கூட்டாளிகளைத் தேடிக்கொண்டிருந்தார். ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் தஞ்சை மீது போர்ப் பிரகடனம் செய்வதாக பயமுறுத்தினர். வேறுவழியில்லாத துல்ஜாஜி மைசூரின் நண்பனாக இருக்க ஒப்புக்கொண்டார். இதனால் கோபமுற்ற நவாப் தஞ்சை அரசிடமிருந்து 25 இலட்சம் ரூபாய் செலுத்துமாறு நிர்ப்பந்தம் செய்தார். ஆனால் தஞ்சை அரசு இப்பணத்தைச் செலுத்த மறுத்தது. எனவே நவாப் முகமது அலி, 1771இல் தனது மகனான உம்தத் உல் உமராவின் தலைமையில் தஞ்சைக்கு எதிராகப் படை ஒன்றை அனுப்பினார். இப்படையெடுப்பின் காரணமாக தஞ்சை அரசர், போர் இழப்பீட்டுத் தொகையாக எண்பத்து இரண்டரை இலட்சம் ரூபாயை செலுத்துமாறும், இராமநாதபுரத்திலிருந்து கைப்பற்றிய பகுதிகளையும் திருப்பிக் கொடுக்குமாறும் கட்டாயப்படுத்தப்பட்டார். திருச்சிராப்பள்ளியில் சில பகுதிகளையும், ஆரணி, தேவனூர்ப்பகுதிகளையும் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. இந்தப் போர் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தும் வரை மாயவரம், கும்பகோணம் பகுதிகள் நவாபின் ஆதிக்கத்திலிருக்கவேண்டும் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தஞ்சையில் வசிக்கும் ஆங்கில வணிகர்களை மரியாதையுடன் நடத்த ஒப்புக் கொள்ளப்பட்டது. வல்லம் கோட்டையை அழிக்க வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இவ்வாறு இவ்வுடன்படிக்கை தஞ்சை மராத்தியர்களை தாழ்நிலைக்கு உள்ளாக்கியது.

தனது நிலையை உணர்ந்த துல்ஜாஜி பூனாவிலிருந்து மராட்டிய வீரர்களை பெரும்பான்மையாக இறக்குமதி செய்தார். இராமநாதபுரம், சிவகங்கை மன்னர்களுக்கு எதிராக மக்களுக்கு உதவும்படி அவர்களை வேண்டினார். கும்பகோணத்தை டச்சுக்காரர்களுக்கு வழங்கினார். இவ்வாறான மாற்றங்களைக்கண்டு அஞ்சிய நவாப் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். தஞ்சை மீது போர்ப்பிரகடனம் செய்தார். ஒவ்வொன்றாக பல பகுதிகளைக் கைப்பற்றிய அவரது படை 1773இல் தஞ்சையை அடைந்தது. மன்னர் துல்ஜாஜியும், தளபதி மானோஜியும் கைது செய்யப்பட்டனர். நவாப் தானே அரசைக் கைப்பற்றிக் கொண்டார். டச்சுக்காரர்களும் துல்ஜாஜியிடமிருந்து பெற்ற பகுதிகள் அனைத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் பட்டனர். நவாபின் செய்கையால் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். ஏராளமாக நிலவரி வசூல் செய்யப்பட்டது. கொள்ளையடித்தலின் மூலமாக பல நிலங்களைத் தரிசாக்கினர். குதிரைகள், யானைகள், பல்லக்குகள், குஜராத்திய பசுக்கள், எருமைகள், வெடிகுண்டுகள்,, வெங்கலப்பாத்திரங்கள், கூடாரங்கள், ஆபரணங்கள், துணிமணிகள், இறையருளின் தங்கவிக்கிரகங்கள் மற்றும் போர்த் தளவாடங்கள் போன்ற சுமார் நூற்று ஐந்து இலட்சத்து பத்தாயிரம் பகோடாக்கள் மதிப்புள்ள பொருட்கள் தஞ்சையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

மனமுடைந்த துல்ஜாஜி தனது அவலத்தை ஆங்கிலேயர்களிடம் முறையிட்டார். இப்பிரச்சினை நெறியாளர்கள் மன்றத்தில் விசாரணைக்கு வைக்கப்பட்டது. அவர்கள் வினச்சை திருப்பி அழைத்துக் கொண்டு, பிகாட்டை ஆளுநராக நியமித்தனர். மீண்டும் தஞ்சை அரசரை பதவியிலமர்த்தும்படி பிகாட்டுக்கு ஆலோசனையும் கூறினர். தஞ்சை அரசர் ஆங்கிலேயர்களின் நம்பிக்கைக்குரிய நண்பராக இருந்தவர். எனவே ஆங்கிலக் கம்பெனி துல்ஜாஜிக்கு அரசைக் கொடுத்துவிடும்படி நவாபைக் கட்டாயப்படுத்தியது. 1776இல் துல்ஜாஜி, "தஞ்சைநாடு ஆங்கிலக் கம்பெனிக்குச் சொந்தமானது. என்னால் முடிவதெல்லாம் எனது மரியாதையைக் காக்க வேண்டும் என அவர்களைக் கேட்டுக் கொள்வதே" எனக் கூறினார். கம்பெனிக்கு நாகூர் ஏற்பாட்டின்படி 277 கிராமங்களை வழங்கினார். இதில் கோவில்களுக்கும், மடங்களுக்கும், பிராமணர்களுக்கும் வழங்கிய தானங்கள் சேர்க்கப்படவில்லை. 1780இல் கர்நாடகத்தின் மீது ஹைதர் அலி படை நடத்தினார். ஆங்கிலேயரின் உதவியுடன், புதுக்கோட்டையின் தொண்டைமான், கீரா நெல்லி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதிகளைக் கைப்பற்றினார். திப்புசுல்தான் கிறித்தவர்களைக் கொன்று குவித்தார்.

அமர்சிங் (1787–1798)

துல்ஜாஜிக்குப்பின் அவரது தத்துப் பிள்ளையான செர்போஜி அரியணையேறினார். ஆனால் துல்ஜாஜியின் சகோதரரான அமர்சிங்குக்கு இந்நிகழ்ச்சி மகிழ்ச்சியைத் தரவில்லை. இருப்பினும் அமர்சிங் செர்போஜிக்குப் பகர ஆளுநராக இருந்தார். ஆங்கிலேயர்கள் அமர்சிங்கை திறை செலுத்துமாறு கட்டாயப்படுத்தினர். செர்போஜி தனது உள்நாட்டு விவகாரங்களிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் செல்வாக்குப் பெறவில்லை. இருப்பினும், அமர்சிங்கின் கொள்கையால் இவரது ஆட்சி குழப்பம் நிறைந்த ஆட்சியாக இருந்தது. தஞ்சையில் அமர்சிங் இல்லாதபோது தானே முழு அதிகாரம் பெற்ற அரசன் என செர்போஜி உரிமை கொண்டாடினார். ஆனால் 1793இல் செர்போஜியை வெளியேற்றிவிட்டு தானே மன்னரானார். இந்த அரசுரிமைப்போர் தஞ்சையில் இருந்த பெரியவர்களிடம் முறையிட்ட போது அவர்கள் சுவிகாரம் எடுப்பதை ஏற்காது அமர்சிங்குக்கே ஆதரவு காட்டினர். ஆங்கில தலைமை ஆளுநர் ஜான்ஷோர், இப்பிரச்சினையை பனராஸ் அறிஞர் குழு ஒன்றிடம் விவாதித்தபோது அக்குழு அமர்சிங்குக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தது. ஆனால், தலைமை ஆளுநர், அமர்சிங்குக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை.

இரண்டாம் செர்போஜி (1799–1833)

1798இல் வெல்லெஸ்லி தஞ்சையின் ஆட்சிப் பொறுப்பை கவனிக்க அனுப்பப்பட்ட போது அமர்சிங் வெளியேற்றப்பட்டு மீண்டும் செர்போஜி மன்னராக்கப்பட்டார். செர்போஜி 1792ஆம் ஆண்டின் உடன்பாட்டை ஏற்றுக்கொண்டார். இருதரப்பினருக்கு மிடையே பரஸ்பர உடன்பாடுகள் ஏற்பட்டன. அமர்சிங், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருவிடை மருதூருக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு ஓய்வூதியமாக ஆண்டொன்றுக்கு 25,000 பகோடாக்கள் தருவது என முடிவுசெய்யப்பட்டது. 1799ஆம் ஆண்டு ஏற்பட்ட

உடன்படிக்கைக்குப் பின் செர்போஜிக்கு ஆங்கிலேயர்கள் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் பகோடாக்களும், தஞ்சை நாட்டின் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கையும் கொடுத்து விட்டு நாட்டை தமது ஆட்சியில் சேர்த்துக் கொண்டனர். சுருக்கமாகக் கூறின், ஆங்கிலேயரிடம் ஓய்வூதியம் பெறுபவராகவும், ஆங்கில சிவில் அதிகாரிகளின் நிரந்தரக் கைதியாகவும் இருந்தார் எனலாம்.

இரண்டாம் சிவாஜி (1833–1855)

1833இல் செர்போஜி இறந்ததும் அவரைத் தொடர்ந்து இரண்டாம் சிவாஜி பெயரளவு மன்னரானார். ஆனால் இவர் தம் காலத்தை அபின் அருந்தும் மாளிகைகளிலும் தமது அந்தப்புரத்திலுமே செலவிட்டார். எனினும் "ராஜா" என்ற பெயரை வைத்துக் கொள்ள அனுமதிபெற்று வாழ்வதற்காக ஒரு தொகையும் பெற்றார். இவர் 1855இல் ஆண்வாரிசின்றி இறந்துவிடவே, 1856இல் அமல்படுத்தப்பட்ட டல்ஹௌசி பிரபுவின் அவகாசியிலிக் கொள்கையின்படி தஞ்சை அரசு ஆங்கிலேயரின் முழு ஆதிக்கம் பெற்ற பகுதியானது.

தஞ்சையில் மராத்திய ஆட்சிமுறை

தஞ்சையில் மராத்திய மன்னர்கள் ஏற்கனவே நடைமுறையிலிருந்து வந்த ஆட்சிமுறையை மாற்றி அமைக்கவுமில்லை. அதை முழுக்க முழுக்க சரியென ஏற்கவுமில்லை. தங்களது தாய் நாட்டுப் பழக்கங்களை சிறு மாற்றங்களுடன் நடைமுறையிலிருந்த ஆட்சி அமைப்பில் புகுத்தினர். தாங்கள் ஏற்படுத்திய இந்தச் சிறுசிறு மராத்திய நிர்வாகக் கூறுகளைக் கடைப்பிடிக்குமாறு நாயக்கமன்னர்களைக் கட்டாயப்படுத்தினர். தங்களது ஆட்சியைச் சீராக வைத்திருந்த மகாராஷ்டிரத்திலிருந்து திறமையான தளபதிகளையும், வீரர்களையும் சிவில், இராணுவப் பணியாளர்களையும், இறக்குமதி செய்தனர். அவர்களை நல்ல பதவியில் வைத்து, அதிகாரங்களையும் அள்ளிக் கொடுத்தனர். மகாராஷ்டி ரத்திலிருந்து மகாராஷ்டிரபிராமணர்களும், அறிஞர்களும் வந்தனர். கணபதியை வணங்கும் முறை இங்கு புகுத்தப்பட்டது. தமிழ், தெலுங்கு மொழிகளின் செல்வாக்கு குறைந்து மராத்திய மொழி அரசவை மொழியானது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் மராத்திய மன்னர்கள் தமிழ் மொழி இலக்கியத்தை ஆதரிக்க முன்வந்தனர். தஞ்சை மராத்தியரும், மகாராஷ்டிரரும் கட்டடக்கலை வல்லுனரையும், சிற்பக் கலைஞர்களையும் ஆதரிக்க முன் வந்தனர். ஆனால் இரண்டாம் செர்போஜியின் காலத்தில்தான் கலைஞர்கள் ஆதரிக்கப்பட்டனர். அறிஞர்களும் போற்றப்பட்டனர்; இசைக்கலைஞர்கள், நடனமாதர், மருத்துவர் போன்றோருக்கும் ஆதரவு கொடுக்கப் பட்டது.

பொதுவாக, தஞ்சையின் மராத்திய அரசர்கள் அனைவருமே எதேச்சதிகாரிகளாக இருந்தனர். நாட்டின் நலனில் மிகச்சிறிய அளவே அக்கறை காட்டினர். சில நேரங்களில் தருமங்களின் அடிப்படையில் தங்களது எதேச்சதிகாரத்தை ஓரளவு குறைத்துக் கொண்டனர். அரசுக்கு வாரிசு, பரம்பரை பரம்பரையாகவே தேர்வு செய்யப்பட்டது.

சில நேரங்களில் சுவீகாரம் எடுப்பதன் மூலம் சச்சரவுகள் ஏற்பட்டன. அரசர்களையும்விட படைத்தலைவரும், புரோகிதரும் அதிக அதிகாரங்களைப் பெற்று செல்வாக்குடன் விளங்கினர். போர்ப்பிரகடனம் செய்யவும், அமைதி உடன்படிக்கை ஏற்படுத்தவும், எதிரிகளைத் தண்டிக்கவும் உரிமை பெற்றனர். மந்திரி என்னும் தலைமை அமைச்சரின் கீழ் புரோகிதர், நீதிபதி, படைத்தளபதி போன்ற அமைச்சர்கள் இருந்தனர். தலைமை அமைச்சருக்கு சிவில், இராணுவ அதிகாரங்கள் சேர்ந்து கொடுக்கப்பட்டன. சமயப்பணியாளரும், புரோகிதர்களும் சமுதாயத்தில் அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அரசர்களும் சமயத்துறையில் அதிக நாட்டம் கொண்டிருந்தனர். அந்தப்புரங்களை அலங்கரிப்பதில் தம் பொருளாதாரத்தை விரயம் செய்தனர். ஆடம்பரங்களையே அதிகம் விரும்பினர்.

மக்களிடமிருந்து ஏராளமான வரிப்பணம் வசூலிக்கப்பட்டது. வருவாய் வசூலிப்பதில் ஒரே மாதிரியான, சட்டப்படியான கொள்கைகள் கொண்டிருக்கவில்லை. தொடர்ந்த போர்களும் பஞ்சமும் நாட்டைச் சீர்குலைத்தன. பஞ்ச நிவாரணத்திற்கு எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. நாடு இராணுவ ஸ்திரத்தன்மையை எதிர்நோக்கியே இயங்க வேண்டியதாயிற்று. இராணுவ வீரர்களுக்கு ஒழுங்கான முறையில் ஊதியம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு சில சமயங்களில் ஊதியம் சரியாக வழங்கப்படாதபோது கொள்ளையடித்து, வழிப்பறி செய்து வாழ்ந்தனர். இராணுவ, சிவில் அதிகாரிகள் ஊழல் மலிந்தவர்களாக இருந்தனர். மகாராஷ்டிரர்கள், நவாப், நிஜாம், ஆங்கிலேயர் ஆகியோரின் படையெடுப்புக்களைச் சந்திக்க வேண்டியதாயிற்று. மக்களும் தங்களை யார் காக்கின்றனரோ அவர்களையே நாடவேண்டியதாயிற்று. தஞ்சை அரசர்கள் சில சமயங்களில் பெரும் பணம் கொடுத்தே அமைதியை விலைக்கு வாங்கினர். போர் நஷ்ட ஈட்டுத் தொகையாக ஏராளமான செல்வத்தைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இதனால் மக்களே அதிக வரி செலுத்தி துன்பப்பட வேண்டியதாயிற்று.

அரசு ஐந்து சுபாக்களாகப் பிரிக்கப்பட்டது. தஞ்சை அரசில் 5753 கிராமங்கள் இருந்தன. தலையாரி என்னும் கிராமக் காவலாளரும், காவல்காரன் என்னும் கிராம போலீஸ் அதிகாரியும் ஊழல் மலிந்தவராக இருந்தனர். பஞ்சாயத்து எனும் கிராம பொதுச்சபை கிராம நிர்வாகத்தைக் கவனித்தது. கிராம நீதி முறை ஊழல்கள் நிறைந்ததாக இருந்தது. நான்கு விதமான நீதிமன்றங்கள் செயல்பட்டன. ஆனால் நீதித்துறையின் தலைமை அதிகாரி அரசரேயாவார். ஆங்கிலேயர்களின் தலையீட்டிற்குப் பின்பே நீதித்துறை சீரமைக்கப்பட்டது.

சமயப்பொறை பெரும்பான்மையாக கடைப்பிடிக்கப்படவில்லை. இந்து தர்மத்தினடிப்படையில் ஆட்சி செலுத்தப்பட்டது. கிருத்துவ பாதிரிமார்கள் துன்புறுத்தப்பட்டனர். ஆனாலும் கிறித்தவர்கள் நாகப்பட்டினம், தரங்கம்பாடி 'கும்பகோணம்' போர்டோநோவா பகுதிகளிலும், கடற்கரைப் பகுதிகளிலும் குடியேறினர். பல இந்துக்கள் கிருத்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர்.

தஞ்சை மராத்திய அரசர்கள் சமஸ்கிருத, மராட்டிய மொழியையும், அறிஞர் களையும் ஆதரித்தனர். செர்போஜி காலத்தில் சரஸ்வதி மஹால் நூல்நிலையம் முன்னேற்றம் செய்யப்பட்டது. அங்கு சமஸ்கிருதம், மராத்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் வேதகால மருத்துவ முறைபற்றியும் மற்ற முக்கிய செய்திகளைப் பற்றியும் சுவடிகள் காணக்கிடைக்கின்றன. 'கர்னாடக இசையும்' பரத நாட்டியமும் போற்றப்பட்டன. இரண்டாம் செர்போஜி தஞ்சைக் கோயிலுக்கு மானியம் வழங்கினார். இவரது ஆசைநாயகியான முக்கம்பாவின் நினைவால் ஓரத்தநாடு கிராமத்தில் சத்திரம் ஒன்று கட்டப்பட்டது.

பயிற்சி வினாக்கள்

1) தஞ்சை மராத்தியர்களின் வரலாற்றை விளக்கி வரைக.

2) தஞ்சை மராத்தியர்களுக்கும் ஆங்கிலக் கம்பெனிக்குமிடையே இருந்த தொடர்பினை விளக்குக.

3) கர்னாடகப் பகுதியின் மீது ஏற்பட்ட படையெடுப்பின் பல்வேறு கட்டங்களை விளக்குக.

பாடம் – 21 தமிழகத்தில் ஆற்காடு நவாபுகள் – கருநாடகப் போர்கள் – ஆட்சிமுறை

கி.பி. 1736 முதல் 1801 வரை தமிழக வரலாற்றில் அமைதி இல்லை. எங்கும் குழப்பநிலை. தமிழகத்தில் அரசியல் சூழ்ச்சிகள், சூதாட்டங்கள் மலிந்து காணப்பட்டன. அரசுக்கட்டில் ஏற்றங்கள், பதவியிழப்புகள், தனிமனிதப் பேராசையால் விளைந்த மரணங்கள் பலப்பல. எங்கும் திடீர்ப்போர்கள். திட்டமிட்ட, திட்டமிடாத, அறநெறி குன்றிய அறிவில்லாப் போர்கள், சண்டைகள், சச்சரவுகள், நீர்ப்போர்கள், செலவீனப் போர்கள், வரிக் கொடுமைகள், வரிப்பளுவால் அவதிப்பட்ட மக்கள். அரசுக் கட்டிலேற முனையும் கட்சிக்காரர்களிடையே பிணக்குகள், வேற்றுமைகள், சண்டைகள். கி.பி. 1529இல் விஸ்வநாத நாயக்கரால் தோற்றுவிக்கப்பட்ட மதுரையம்பதி (நாயக்கநாடு) 1736*இல் நவயதாராகிய சந்தாசாகிப்பிடம் சிக்கித் தவித்தது. இவரோ அப்போது கருநாடகத்தில் நவாபாக வீற்றிருந்த தோஸ்த் அலியின் (Dost Ali) மருமகன் ஆவார். முகலாயர் வழிவந்த நவயதர்கள் நினைத்த காரியத்தைத் திருச்சியில் சாதித்தனர். கி.பி. 1532இல் செவப்ப நாயக்கரால் தோற்றுவிக்கப்பட்ட தஞ்சையம்பதி (நாயக்க நாடு) கி.பி. 1659இல் மராட்டியராகிய ஆனால் பிஜப்பூர் தளபதியாயிருந்த சாஜி பான்ஸ்லேயின் (Shahji Bhonsle) கொள்ளையடிப்புகளுக்கும், தாக்குதல்களுக்கும் உள்ளாகி வருந்தியது. கி.பி. 1659க்கும் 1663க்கும் இடைப்பட்ட காலத்தில் சாஜி தஞ்சையைப் பலமுறை மிரட்டினார். செஞ்சியைத் தாக்கிக் கைப்பற்றினார்; தெக்கணப்பட்டணம் (Tekanapatnam), பரங்கிப்பேட்டை (Portonovo) பலமுறை தாக்கப்பட்டன. இவை அனைத்தும் பிஜப்பூர் சுல்தானுக்கு அடங்கிய கப்பம் கட்டும் நாடுகளாக்கப்பட்டன. சாஜியின் மரணத்தை யடுத்து, அவருடைய மகனும், சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரனாகிய ஏகோஜி அல்லது வெங்காஜி (Venkaji) தஞ்சையம்பதிக்குத் தலைவனானான். சாஜிக்குப்பின் பிஜப்பூர்த் தளபதியாக பெங்களூரில் வீற்றிருந்த எகோஜியின் உதவியைப்பெற்று, தஞ்சை நாயக்கரின் இறுதி வாரிசாகிய செங்கமலதாஸ் (Chengamaladas) தஞ்சை நாயக்கரானார். ஆனால் அவரோ, ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அம்சங்களைப் புறக்கணித்துவிட்டார். சீற்றங்கொண்டெழுந்த எகோஜி செங்கமலதாசை பதவி நீக்கம் செய்துவிட்டு, கி.பி. 1676இல் தஞ்சையின் அரசுக் கட்டிலைப் பறித்துக் கொண்டார். 1672இல் பிஜப்பூர் சுல்தான் அலி அடில்ஷா இறந்தபின், அதுகாறும் அவனுக்கடங்கியாண்ட எகோஜி தம் சுதந்திரத்தை வெளியிட்டுத் தன்னாட்சியைத் தொடங்கினான். கி.பி. 1856 வரை, அதாவது ஆங்கிலேய கவர்னர் ஜெனரலாகிய டல்கௌசிப் பிரபு அவகாசியிலிக் கொள்கை மூலம் அந்நாட்டைக் கவரும் வரை, மராத்தியராட்சி தஞ்சையில் நடைபெற்றது. இவ்வித அரசியல் குழப்பத்தினூடே பொருளாதார இழப்புகள், பஞ்சங்கள், தட்டுப்பாடுகள், பொருள் பற்றாக்குறைகள், விளைபொருள் அழிவுகள், வரிப்பளுவால் தொல்லைகள், படையெடுப்புகளால் தானிய அழிவுகள் நாட்டில் ஏற்படாமலில்லை. பதவியில் இருந்தோரின் உல்லாச சல்லாபங்கள் இவையனைத்தும் தமிழகத்தை அந்நியரின் ஆட்சிக்குத் தள்ளிவிட்டன.

---

* பேராசிரியர் டி.வி. மகாலிங்கத்தின் கருத்துப்படி மதுரை நாயக்க நாட்டின் முடிவு கி.பி. 1739இல் ஏற்பட்டது என்பதாம். அதற்கு அவர் தரும் ஆதாரங்களை அவர் இயற்றிய "Readings in South Indian History" என்ற நூலில் பார்க்க.

கி.பி. 1562இல் வையப்ப நாயக்கரால் உருவாக்கப்பட்ட செஞ்சிப் பகுதி 1648இல் பிஜப்பூரியர் வசமாயிற்று. வேலூருடன் அதனையும் சேர்த்து மராத்திய சிவாஜி 1677இல் கைப்பற்றினார். அவற்றை அவர்தம் தளபதியாகிய சாந்தாஜி (Santaji)யிடம் ஒப்படைத்தார். எகோஜி சாந்தாஜியின் பகுதியைத் தாக்கவே, சிவாஜி படைகொண்டு தஞ்சையைத் தாக்க வந்தார். அவர் கொள்ளிடக்கரையில் தம் ஒன்றுவிட்ட சகோதரனாகிய எகோஜியைச் சந்தித்தார். இருவருக்குமிடையே ஒருவித உடன்பாடு ஏற்பட்டது. சிவாஜி தம்நாடு திரும்பினார். 1680இல் சிவாஜி மரணமடைந்தார். மராத்திய நாட்டில் இருள் படரத் தொடங்கிற்று. சிவாஜியைத் தொடர்ந்த மராத்திய மன்னர்கள் வீரமும் தீரமும் குன்றியோர். அவர்கள் முகலாயப் பேரரசராகிய ஔரங்கசீப்பின் வலையில் சிக்குண்டு தவித்தனர். நல்வழியிலோ தீவழியிலோ அனைத்துப் பாமினி நாடுகளையும் ஔரங்கசீப் கைப்பற்றிக்கொண்டார். பாமினி நாடுகளின் ஒட்டு மொத்தமான வீழ்ச்சி கி.பி. 1685க்கும் 1688க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டது. வட தமிழகத்தில் வெற்றிக்கொடி நாட்டிய ஔரங்கசீப் 1693இல் மொகலாய நவாபியை ஆர்க்காட்டில் தோற்றுவித்தார். இந்நவாபியை கி.பி. 1801 வரை நவயதர்களோ, வாலாஜாக்களோ ஆண்டு வந்தனர். கி.பி. 1801இல் இறுதியாகப் பதவியிலிருந்த வாலாஜா நவாப்பை ஆங்கிலக் கம்பெனி ஓய்வூதியம் பெறும் நிலைக்கு மாற்றியது. கி.பி. 1707இல் ஔரங்கசீப் மரணமடையவே, மராட்டியர் பென்டார்க்கி என்ற நால்வர் கூட்டு (Pentarchy) மூலம் தம் செல்வாக்கைப் புதுப்பித்துக்கொண்டனர்.

தமிழகத்தில் நவயதர்களுக்கும் வாலாஜாக்களுக்குமிடையே தீராப் பிரச்சனைகள் இருந்தன. தமிழக மன்னர்களுக்கும் பாளையக்காரர்களுக்குமிடையே போட்டியும் பகைமையும் இருந்தன. இவ்வேற்றுமை நிலையைப் பயன்படுத்தி வளர்ந்தவரே ஐரோப்பியர். இவர்களுக்குமிடையே பலத்த வர்த்தக அரசியல் போட்டிகள், குறிப்பாக ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே காழ்ப்புணர்ச்சிகள். இவ்விரு ஐரோப்பிய நாட்டாரும் தமிழகத்தில் தத்தம் தோழர்களைக் கண்டு கொண்டனர். அவர்களுக்குப் படை, பொருளாதார இராஜதந்திர உதவியளித்தனர். இவர்களுக்கிடையே நிலவிவந்த போர்களை நிறுத்தும் நடவடிக்கைகள் பல புரிந்தனர். ஆனால் இறுதியில் தம் தோழமைச் சக்திகளை வெறும் பெயரளவுப் பொம்மைகளாக ஆக்கினர். இந்த ஆதிக்க வெறியும், எல்லைக் கொடைகளும், ஏகாதிபத்திய சண்டைகளுமே பொதுவாகக் கருநாடகப் போர்கள் என்று அறியப்படுகிறது. ஆர்க்காட்டு நவாப்பிற்காக யார் யார் சண்டையிட்டுக் கொண்டார்களோ அவர்கள் இறுதியில் ஒட்டு மொத்தமாக வெளியேற்றப்பட்டனர்; அவ்வமிசங்கள் தோன்றிய வழி தெரியாமல் மாய்ந்து போயின.

தொடக்ககாலக் கருநாடகப் போர்களின்போது வெற்றி பிரெஞ்சுக்காரர் பக்கம் என்று தோன்றிற்று. ஆனால் அவ்வெற்றியோ தற்காலிகமானது. இறுதியில் வெற்றிக்கொடி ஆங்கிலேயரே நாட்டினர். இம்மண்ணில், "இந்தியாவில் முழுமையான குழப்பநிலை தாண்டவமாடியபோது, மொகலாய எல்லைகளுக்குள்ளே மொகலாயப் பேராதிக்கம் அழிந்துகொண்டிருந்தபோது, பொது நல நிர்வாகப் பணிகளேதும் மேற்கொள்ளாமல் மராத்தியர்தம் பொருளாதார உரிமைகளை விரிவுபடுத்தியபோது, கம்பெனியின் குடியேற்றங்கள் அவ்வளவாக பாதிக்கப்படவில்லை" என்பதுதான் அவர்களின் வளர்ச்சிக்குக் காரணம்.

கருநாடக நவாபுகள், தஞ்சையின் மன்னன், இராமநாதபுரத்துச் சேதுபதி, புதுக் கோட்டையின் தொண்டைமான், பாளையக்காரர்கள், ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகள் அனைத்தும் பங்கு கொண்ட போர்களே கருநாடகப்போர்கள். இப்போர்களின் அடிப்படைக்காரணங்கள் அதிகார வெறி, எல்லைகளைக் கவரும் பேராசை, மேலாதிக்கம், வாழ்க்கைப் பிரச்சினை போன்றவைகளாகும். ஐதராபாத் நைஜாமில் இருதரப்புப் பங்காளிகளிடையே தோன்றி, நவயதர், வாலாஜாக்கள் என்ற ஆர்க்காட்டு நவாபுகளின் அரசுரிமைப் போரில் தவழ்ந்து, ஆங்கிலேய — பிரெஞ்சு பேராதிக்கப் போட்டியில் இது முடிவடைந்தது. இறுதியில் வெற்றியோ முந்திய கூட்டத்தார் எவருக்கும் வாய்க்காது, ஆங்கிலேயருக்கு மட்டுமே வாய்த்து விட்டது.

கருநாடகப் போர்களுக்கு முன் தென்னிந்திய அரசியல் நிலை

ஐதராபாத்: ஆஸாத்கானின் மகனாகிய ஜுல்பிகர்கான் தீட்டிய திட்டமே தென்ன கத்தில் ஒரு சுதந்திர மொகலாய நாடு ஆகும். 1694இல் அவரை ஔரங்கசீப் தக்காண சுபேதாராக நியமித்தார். 1708இல் பகதூர்ஷா அவரை அரசப்பிரதிநிதியாக்கினார். 1713இல் அவர் மரணமடையவே, அப்பதவி கிலிச்கானுக்குக் கிட்டியது. 1715இல் உசேன் அலி அவரை நீக்கம் செய்து அப்பதவி பெற்றார். உசேன் அலி கொல்லப்படவே, 1720இல் மீண்டும் கிலிச்கான் சுபேதார் ஆனார். இவரே அசப்ஜாகியக் குடும்பத்தைத் தோற்றுவித்தவர். இவர் நைஜாமுல்முல்க் (Nizam-ul-Mulk) என்று அழைக்கப்பட்டார். இவ்வமிசம் ஐதராபாத்தைத் தலைநகராகக் கொண்டு இயங்கத் தொடங்கிற்று.

ஆர்க்காட் நவாபு : 'கருநாடகம்' அல்லது 'ஆர்க்காட் சுபேதாரி' என்ற சொற்கள் திராவிட நாட்டுக்கு மொகலாயர் வழங்கிய பெயர்கள். இத்தென்னகத்தை ஒருகால் டில்லி சுல்தான்கள் 'மாபார்' (Mabar) என்று அழைத்தனர். இக்கருநாடகத்தில் குமரி முதல் நெல்லூர் வரையுள்ள நிலப்பரப்பு அடங்கியிருந்தது. நெல்லூர் எனும்போது கிருஷ்ணை, துங்கபத்திரை நதிகளுக்குத் தென்பகுதியைக் குறிக்கும், "வடக்கே நைஜாமின் ஐதராபாதையும், தென் மேற்கே மைசூரையும் திருவிதாங்கூரையும் எல்லைகளாகக் கொண்ட பதினெட்டாம் நூற்றாண்டின் கருநாடகம், வடக்கே குண்டூரிலிருந்து, தெற்கே குமரிவரையுள்ள கிழக்குக் கடற்கரையில் விரிந்து கிடந்தது" என்று பேராசிரியர் கு. ராசய்யன் கூறுகிறார். நிலவியல் வரலாற்றுக் கூறுகள் அடிப்படையில் அக்கருநாடகம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். வடகருநாடகமாகிய மொகலாயக் கருநாடகம்; நடுக் கருநாடகமாகிய மராத்தியக் கருநாடகம்; தென் கருநாடகமாகிய இந்து கருநாடகம். நைஜாம் நாட்டு வட சர்க்கார்ப்பகுதியிலிருந்து கருநாடகத்தை குண்டலகம்மா நதியும், வடபகுதியிலிருந்து நடுக்கருநாடகத்தைத் தென்பெண்ணையாறும், நடுக்கருநாடகத்தி லிருந்து தென்கருநாடகத்தை வெள்ளாறும் கொள்ளிடமும் பிரிக்கின்றன. மொகலாயர், மராத்தியர், இந்து நாயக்கர்கள் இப்பகுதிகளை முறையே பதினேழாம் நூற்றாண்டில் ஆண்டு வந்தமையில் வடபகுதி மொகலாய கருநாடகம் என்றும், நடுப்பகுதி மராத்திய கருநாடகம் என்றும் தென்பகுதி இந்து கருநாடகம் என்றும் அழைக்கப்பட்டன. இவற்றின் தலைநகரங்கள் முறையே ஆர்க்காடு, செஞ்சி, மதுரை ஆகும். 1693இல் ஜுல்பிகர்கான் தக்காணத்தைத் தாக்குமாறு பணிக்கப்பட்டார். மதுரையின் அரசி மங்கம்மாளும், தஞ்சையின் சாஜியும் பெரும் பணச்செலவில் தலைதப்பினார். 1694இல் தக்காணத்தில்

முதல் சுபேதாராகவும், செஞ்சியின் வீழ்ச்சிக்குப்பின் 1698இல் ஆர்க்காட்டு நவாபாகவும் நியமிக்கப்பட்ட ஜுல்பிகர் தக்காணப்பகுதியை ஏறக்குறைய பன்னிரு ஆண்டுகள் ஆண்டார். 1706இல் தாவூத்கான் அப்பதவிக்கு வந்தார். இவரிடம் அதிக அதிகாரம் இருக்கவே, இவர் அவரைவிட சற்று துரித ஆக்கிரமிப்பாளராக இயங்கினார். தென்னிந்தியாவில் தனித்த முடிநாடு தோற்றுவிக்கும் எண்ணம் அவருக்கிருந்ததாகத் தெரியவில்லை.

தாவுத்கானுக்குப்பின் சாதத்உல்லாகான் அப்பதவி பெற்றார். இவரிடம் அவ்வாசை குடிகொண்டிருந்தது. ஆகவே 1710இல் அவர் ஆர்க்காட்டில் நவயதர் ஆட்சியை நிறுவினார். முந்திய நவாபுகள் கப்பம் கொள்ளைச் செல்வம் சேர்ப்பதில் காலம் கடத்தினர். ஆனால் இவர் தனிநாடு தோற்றுவிக்கத் துணிந்து, தென் காவிரிக்கரையில் படையொன்று நிறுத்தி வைத்திருந்தார். 1732இல் அவருடைய மருமகனாகிய தோஸ்த் அலி ஆர்க்காட்டுக்கு அனுப்பப்பட்டார். இவர் தம் மைந்தனாகிய சப்தர் அலியையும், மருமகனாகிய சந்தா சாகிப்பையும் தென்னிந்தியாவைத் தாக்குமாறு பணித்தார். படையெடுத்து வந்தவர் சென்னையில் சற்றுக் காலம் கடத்தினர். அங்கிருந்து பாண்டிச்சேரி யடைந்து, தஞ்சையைத் தாக்கிக் கைப்பற்றினர்; கோட்டாற்றில் திருவிதாங் கூர்ப் படைகளை முறியடித்தனர்; இறுதியில் திருச்சி நோக்கி முன்னேறினர். தமிழக மன்னரிடையே ஒற்றுமையில்லாக் காரணத்தால், பகைவரை எதிர்க்கத் துணிந்திலர். அரசுரிமைக்காகத் தஞ்சைக்கும், இராமநாதபுரத்துக்குமிடையே நீண்ட போர் நடந்தது. மீனாட்சிக்கு எதிராக மதுரையில் பங்காரு திருமலையின் நிலையில் வளர்ச்சி ஏற்பட்டது.

இராமநாதபுரம் : பவானி சங்கரத் தேவருக்கும் தண்டத் தேவருக்குமிடையே ஏற்பட்ட அரசுரிமைப்போரில், எல்லை விரிவாக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்ட தஞ்சை இப்போட்டியில் தலையிட்டது. தஞ்சை பவானியின் உரிமைகளை முன் மொழிந்தது. இரு தரப்பிற்குமிடையே ஏற்பட்ட போரில் தண்டத்தேவர் கொல்லப்பட்டார்; சங்கரத்தேவர் அரியணையேறினார். தண்டத்தேவரின் மாமனாராகிய கட்டத்தேவர் பவானிக்கு எதிராக எழுந்தார்; துக்கோஜிக்கு அதிக நிலங்கள் தரப்படும் என்று தம் பக்கம் சேர்த்துக் கொண்டார். துக்கோஜியின் உதவியுடன் கட்டத்தேவர் 1728இல் அரியணை ஏறினார். ஆனால் எக்காரணம் பற்றியோ துக்கோஜி பவானிக்கு உதவ முன்வந்தார்; 1732இல் இராமநாதபுரத்தின்மீது படையெடுத்தார். சிவகங்கைச் சீமையின் சசிவர்ணர் உதவியைப் பெற்ற கட்டத்தேவர் துகோஜியை விரட்டியடித்துவிட்டு, அவர் கைப்பற்றியிருந்த எல்லைகளை மீட்டுக் கொண்டார்.

மதுரை : திருச்சியிலிருந்த மீனாட்சியின் அமைச்சர்களாகிய வேங்கட நாயக்கரும், பெருமாள் நாயக்கரும் இணைந்து நாரனப்ப ஐயரை பதவி நீக்கம் செய்தனர். நாரனப்பர் மீனாட்சிக்கு எதிராக, அரசுரிமைக்காகக் காத்திருந்த பாங்காரு திருமலையுடன் சேர்ந்து, சூழ்ச்சி செய்யலானார். இச்சூழ்ச்சி அம்பலப்படவே, இருவரும் தென்னகம் நோக்கி தப்பியோடினர். இவர்களால் மதுரையில் எதிர்ப்பரசும் ஏற்படுத்தப்பட்டது. திருச்சியைத் தாக்கவும் திட்டம் தீட்டினர். பயந்துபோன மீனாட்சியோ தஞ்சை மன்னனுடன் கூட்டுச்சேர்ந்தார். கெட்டகாலமாக திருச்சியை மேற்கிலிருந்து மைசூர் தாக்கியது; தெற்கிலிருந்து பாங்காரு தாக்கினார். மீனாட்சி பகைவரை வென்று உடன்பாடு செய்து கொண்டாள்.

திருச்சியைத் தாக்க நினைத்த சப்தர் அலி பங்காருவுடன் கூட்டுச் சேர்ந்தான். பாங்காருவைத் திருச்சி மன்னனாக அறிவித்துவிட்டு சந்தாசாகிப்பிடம் தலைமைப் பதவியைத் தந்துவிட்டு ஆர்க்காட்டுக்கு விரைந்தான். சப்தர் அலியால் தூண்டப்பட்ட பாங்காரு மீண்டும் திருச்சியைத் தாக்க முனைந்தான். அச்சம்கொண்ட இராணி சந்தாசாகிப்பின் உதவியை நாடினாள். ஏமாற்றம் செய்யும் சந்தாசாகிப்பு, தம் திட்டத்தை மறைத்து வைத்துக்கொண்டு, தம் கைகளைக் 'கொரான்' * மீது வைத்து, அவளுக்கு உதவுவதாக வாக்குறுதியளித்தான். பகைவரின் படைகளை விரட்டியடித்தான்; பாங்காருவையும், அய்யரையும் கைதுசெய்தான்; முன்னவரை ஆர்க்காட்டுக்கு அனுப்பினான். பின்னவரைக் கொலையும் செய்தான். மதுரைக்கு விரைந்து வந்து கள்ளரை அடக்கினான்; மறவரையும் பாளையக்காரரையும் வெற்றி கொண்டான்.

1734இல் திருமையத்தைத் துக்கோஜி தாக்கினான், புதுக்கோட்டையின் பெரும் பகுதிகளையும் கைப்பற்றினான். சந்தாசாகிப்பு தஞ்சையைத் தாக்கி, மொகாலயருக்கு எதிராகத் தஞ்சையையும், திருச்சியையும் சேர்வதைத் தடுத்தான். 1736இல் அவன் திருச்சி நோக்கி முன்னேறினான். வாக்குறுதியைக் கைவிட்டு இராணியைக் கைது செய்து சிறையிட்டான்; மைசூர் வசம் சிக்கியிருந்த நாயக்கப் பகுதிகளைக் கைப்பற்றினான். விஜயகுமாரனைப் பதவிக்கு உயர்த்திய நாயக்கர் மீண்டும்தம் முடிவான முயற்சியை மேற்கொண்டனர். இது கேட்ட சந்தாசாகிப்பு உடனே இராணியை அரியணையில் அமர்த்தினான். தம் மகனுடன் சேர்ந்து பாங்காரு அம்மய நாயக்கனூரில் தம் உரிமைகளுக்காகப் போரிட்டான். தோல்வியைத் தழுவிய அவர்கள் சிவகங்கைக்கு ஓடி மறைந்தனர். இராணி தற்கொலை செய்து கொண்டாள்; சாகிப்பு திருச்சி, மதுரையம்பதிகளைக் கைப்பற்றினான். "திருச்சிப் பகுதியின் விதி அப்போது முடிவாக்கப்பட்டது; அதாவது அது ஒரு "முஸ்லீம் நாடு" அன்று என்பதாம்.

திண்டுக்கல்லில் பூத சாகிப் (Budha Sahib) என்ற மகனையும், மதுரையில் சதக் சாகிப் (Sadak Sahib) என்ற மகனையும் சந்தாசாகிப்பு நியமித்தான். உடையார்ப் பாளையம், அரியலூர் பாளையக்காரரையடக்க அவன் படை கொண்டு சென்றான். புதுக்கோட்டையைத் தாக்கினான். மதுரையையடுத்த சாத்தூரில் தம் மைந்தர்கள் நெல்லைப் பாளையக்காரரை வெற்றி கொண்டனர். மதுரை மொகலாயர் வசமாயிற்று. அதனை நவயதர்கள் ஆளத் தொடங்கினர். "சந்தா சாகிப்பு அமைதியின் உருவாக வந்தார்; உடன்பாட்டை வலுவாக்க சத்தியம் செய்தார்; உடன்பாட்டை மீறி கோட்டையைக் கைப்பற்றினார்". அவருடைய செயல்முறை நெறிமுறைக்கு ஒவ்வாதது; அவருடைய அணுகு முறை கோழைத்தன்மைத்து; அவருடைய நோக்கங்கள் பேராசையின் அடிப்படையிலானவை.

தமிழகத்தில் மராத்தியர் : பங்காரு திருமலை, இராமநாதபுரச் சேதுபதிகள், சிவகங்கைச் சீமையின் மன்னர், புதுக்கோட்டையின் கள்ளர்கள், மைசூரின் உடையார்கள், தஞ்சையின் மராத்தியர் அனைவரும் மராத்தியரின் உதவியை நாடினர். சந்தாசாகிப்பின்

---

* ஏமாற்றும் திட்டம் கொண்ட சந்தாசாகிப்பு கொரானுக்குப் பதிலாக கொரான் என்ற உருவில் அமைந்த செங்கல்லில் கைவைத்து வாக்கிறுத்தான்.

ஆக்கிரமிப்புகளை ஒப்புக்கொள்ளாத ஐதராபாத்தின் நைஜாமாகிய அசப் ஜா (Asaf Jah) தமிழகத்தை மராத்தியர் தாக்குமாறு மறைமுக ஆதரவைத் தந்தார். குமரி வரையிலுள்ள பகுதிகளிலிருந்து மராத்தியர் சவுத் (Chouth), சர்தேஷ்முகி (Sardeshmukhi) என்ற வரிகளை வாங்க விழைந்தனர். நவயதர்களிடையே ஏற்பட்ட பூசல்கள் மராத்திய ஆக்கிரமிப்பை மேலும் வரவழைத்தன.

1739-40ஆம் ஆண்டுகளில் கடப்பாவைக் கடந்து வந்த ரகூஜிபான்ஸ்லேயும் (Raghuji Bhonsle), படே சிங்கும் (Fateh Singh) ஆர்க்காட்டைத் தாக்கினர். சப்தர் அலியும், சந்தா சாகிபும் ஆர்க்காட்டுக்கு விரைந்தனர். ஆனால் அவர்களுடைய முயற்சி வெற்றி பெறவில்லை. சந்தாசாகிப்பை அடக்குவதனால் மராத்தியருக்கு 4 லட்சம் பணம் தருவதாக சப்தர் அலி மறைமுகமாக வாக்களித்திருந்தார். ஆனால் மராத்தியரோ வெளியேற வேண்டுமாயின் ஒருகோடி பணம் வேண்டினர். திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றும் உரிமையையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர். சந்தாசாகிப்போ மீனாட்சியை வஞ்சித்தான். சப்தர்அலியோ சந்தாசாகிப்பை வஞ்சித்தான். மராத்தியர் கேட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு ஆர்க்காட்டிலிருந்து வெளியேறினர்; சப்தர் அலி ஆர்க்காட்டுக்கு நவாபாக முடிசூட்டிக்கொண்டார். 1741இல் மராத்தியர் மீண்டும் திருச்சியை முற்றுகையிட்டனர். அவர்களுக்கு 7 லட்சம் பணம் தருவதாகச் சந்தா சாகிப் கூறினார். அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையெனில் போர் செய்வதாகவும், அறிவித்தான். பணம் பெற்றுக் கொள்ள மராத்தியர் மறுக்கவே போர் தொடங்கிற்று. மணப்பாறையில் நடைபெற்ற போரில் சந்தா சாகிப் தம் மைந்தனாகிய பூத சாகிப்பை இழந்தான். மராத்தியர் வெற்றியும் பெற்றனர். சந்தா சாகிப் அவர்களுக்கு 12 லட்சம் பணம் தருவதாகக் கூறியும், மராத்தியர் உடன்படவில்லை. அவர்கள் சாகிப்பைக் கைது செய்து பேரார் சிறையிலும், பின்னர் சதாராச் சிறையிலும் வைத்தனர். திருச்சிக்குத் தலைவராக முராரி ராவ் (Murari Rao) ரகூஜியால் நியமிக்கப்பட்டார். முராரி ராவின் துணையதிகாரியாக மதுரையில் அபாஜிராவும் (Apaji Rao) நியமிக்கப்பட்டார். இவ்வாறு ரகூஜிபான்ஸ்லே கள்ளர்களையும், மறவரையும், தஞ்சை மராத்தியரையும், பாளையக்காரரையும் காப்பாற்றினார்.

தமிழகத்தில் நைஜாம் : தாம் முற்றுகையிட்டுப் பிடித்த இடங்களை மராத்தியர் ஒருங்கிணைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் தமிழகத்தில் நிலையான இறுதி வெற்றியும் பெற்றுவிடவில்லை. பேராசை கொண்ட முர்தாஸா அலி (Murtaza Ali) மைத்துனராகிய ஆர்க்காட் நவாப் சப்தர் அலியைக் கொன்றான். 1742இல் அவன் ஆர்க்காட்டையும் கைப்பற்றினான். ஆனால் படைவீரர் புரட்சி செய்து சப்தர் அலியின் மகனாகிய இரண்டாம் சாதத் உல்லாக் கானை (Sadat-Ullah Khan II) நவாப்பாக்கினர். 1743இல் நைஜாம் அசப்ஜா ஆர்க்காட் மீது படையெடுத்தார்; சாதத் உல்லாக்கானை நவாபாக ஏற்றுக்கொண்டார். காப்பளராக காஜா அப்துல்லாக்கானை (Khwaja Abdullah Khan) நியமித்தார்; வேலூர் நோக்கிப் புறப்பட்டார்; மராத்தியரை விரட்டியடித்தார்; திருச்சியம்பதியைத் தாக்கினார்; ஆங்கு நைஜாமின் பேரரசுக் கொடியை உயர்த்தினார். பின்னர் மதுரை நோக்கிப் படையெடுத்தார்; தஞ்சையைத் தாக்க விழைந்தார். ஐதராபாத்தில் நைஜாமின் துணையதிகாரியாக இருந்த அப்துல்ரஹீம் (Abdul Rahim) இறந்தார். ஆகவே நைஜாம் ஐதராபாத்துக்கு விரைந்தார். போகுமுன் திருச்சியின் நவாபாக காஜா அப்துல்லாவை நியமித்தார்.

1744ல் அப்துல்லா இறந்தார். ஆகவே நைஜாம் சாதத் உல்லாகானுக்குக் கண்காணிப்பாளராக அன்வாருதீனை நியமித்தார். ஆர்க்காட்டில் அன்வாருதீன், முர்தாஸா அலியின் முன்னிலையில் இளவ்லாகிய நவாப் கொல்லப்பட்டான். பின்னர் நைஜாம் அன்வாருதீனை ஆர்க்காட் நவாபாக உயர்த்தினார். அன்வாருதீன் வாலாஜா ஆட்சியைத் தமிழகத்தில் தொடங்கினான்.

முதலாம் கருநாடகப் போர் (1744–48)

தஞ்சையில் சயாஜிக்கும் ராஜா பிரதாப் சிங்குக்குமிடையே அரசுரிமைப் போர் ஏற்பட்டது. 1739இல் சப்தர் அலி சயாஜியைப் பதவி நீக்கம் செய்து விட்டு அவருடைய சகோதரன் பிரதாப் சிங்கைப் பதவியில் அமர்த்தினார். 1740இல் மராத்தியர் உதவியுடன் சயாஜி மீண்டும் அரியணை ஏறினார். 1742இல் மீண்டும் பிரதாப்சிங் அரியணையைக் கவர்ந்தார். உதவி நாடிய சயாஜிக்கு ஆங்கிலேயர் உதவ முன் வந்தனர். சயாஜிக்காகத் தஞ்சையை ஆங்கிலேயர் தாக்கினர்.

சதாராவில் அடைக்கப்பட்ட சந்தாசாகிப் ஆர்க்காட் நவாபியின் உரிமையை வெளியிட்டார். ஆகவே வாலாஜாக்களுக்கு நவயதராகிய சந்தாசாகிப் எதிரியானார். நகைகளை பிரெஞ்சுக்காரர்களுக்கு அடகுவைத்து, பெற்றுக்கொண்ட தொகையை ரகூஜி பான்ஸ்லேக்குக் கொடுத்து, சந்தாசாகிப் சிறை மீட்சிப் பெற்றார். பிரெஞ்சு ஆளுநராகிய டூப்ளே (Dupleix) சந்தாசாகிப்புக்குப் பண, படை உதவியளிக்கவும் முன் வந்தார்.

ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் ஆங்கிலேய—பிரெஞ்சு வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட கடல் கடந்த வர்த்தகக் குடியேற்றப் போட்டிகளின் விளைவே முதல் கருநாடகப்போர். 1740இல் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் வெளியானதும் ஏற்பட்ட வல்லரசுப் போட்டியே இக்கருநாடகப் போராய் வடிவெடுத்தது. ஆகவே கருநாடகப் போராவது ஐரோப்பாவில் ஏற்பட்ட அப்போரின் தொடர்ச்சியே எனலாம். அல்பிரட்லியல் கருத்துப்படி "ஐரோப்பாவில் அடுத்த ஐம்பது ஆண்டுகளில் நடைபெற்ற பன்னாட்டு நாடகத்தின் விளைவே இந்தியாவில் ஏற்பட்ட வல்லரசுப் போட்டி" என்று கூறலாம்.

டூப்ளேயின் தலைமையிலான பிரெஞ்சுக்காரர் இப்போரில் நடுநிலை வகிக்க முயன்றும், ஆங்கிலேயர் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. 1741இல் பார்னெட் (Barnett) தலைமையிலான ஆங்கில நாவாய் சில பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றவே, போர் மூண்டது. தமது நிலை பாதிக்கப்பட்டதுணர்ந்த டூப்ளே, மொரீஷியஸிலிருந்த லாபோர்டானிஸை உதவிக்கு வரும்படி அழைத்தார். 1746இல் போர்டானிஸ் சென்னையைத் தாக்கினார். இக்கட்டான நிலையிலிருந்து டூப்ளேயைக் காப்பாற்றினார். பிரெஞ்சுத் தாக்குதலைச் சமாளிக்க முடியாத ஆங்கிலத் தளபதி சென்னையைப் பிரெஞ்சுக்காரரிடம் விட்டுவிட்டு, கூக்ளிக்கு விரைந்தார். ஆங்கில ஆளுநர் நிக்கோலஸ் பிரெஞ்சுப் படைக்குச் சரணடைந்தார். முதல் கருநாடகப் போரின் முதல் கட்டம் இதுவே.

சென்னையைக் கைப்பற்றிய இரு பிரெஞ்சுக்காரருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. 40,000 ரூபாய் திறை செலுத்துவதாக ஆங்கிலேயர் கூறினர். இக்கூற்றுக்குச் செவி சாய்த்த, லா போர்டானிஸ் அதனை அவர்களுக்கே கொடுத்து விடவும், பணத்தைப்

பெற்றுக் கொள்ளவும் விழைந்தார். ஆனால் டூப்ளே இப்பணத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்தார். லா போர்டானிஸ் வெளியேறியதும், அவருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டை டூப்ளே மறுத்துவிட்டு, சென்னையை முற்றுகையிட்டு, பல ஆங்கிலேயரைக் கைது செய்து, பாண்டிச்சேரிக்குக் கொண்டு சென்றார். "இப்போரின் போக்கில் பிரெஞ்சுக்காரரின் சாதனைகளின் வரம்பாக சென்னைப் பட்டண வெற்றி அமைந்தது".

கருநாடகத்தின் புது நவாபாகிய அன்வாருதீன் கருநாடகத்தில் தமக்குரிய உரிமைகளை விளம்பினார். சென்னையை அப்படியே விட்டு விடுமாறு பிரெஞ்சுக்காரரை எச்சரித்தார். ஆனால் அவர்கள் மறுக்கவே, அவர் ஆங்கிலேயருக்கு உதவ முன் வந்தார். மாபுஸ்கான் (Maphuz Khan) தலைமையில் ஒரு படையையும் அனுப்பினார். "டூப்ளே தம் தந்திரங்கள் ஒவ்வொன்றாகப் பயன்படுத்தி நவாபிடம் தம் உரிமைகளைக் கைவிடுமாறு வேண்டினார்; இருவருக்குமிடையே போட்டிகள் வேண்டாமென்றும் கூறினார்".

230 ஐரோப்பியரையும் 700 இந்தியரையும் கொண்ட பிரெஞ்சுப்படை பாரடிஸ் (Paradis) தலைமையில் முன்னியங்கியது. அது போன்று 10,000 இந்தியப்படைகள் மாபுஸ்கான் தலைமையில் முன்னேறியது. இருதரப்புப்படைகளும் அடையாற்றில் மோதின. இப்படைகளைப் பாரடிஸ் படைகள் வெற்றி கொண்டன. இந்தியப் படைகள் வேண்டிய அளவு பயிற்சியளிக்கப்படவில்லை என்பது இது மூலம் அறியலாம். கைக்கெட்டிய பொருட்களைக் கவர்ந்தனர்; இடங்களைக் கொள்ளையடித்தனர். இப்போது டூப்ளே புனித தாவீத்கோட்டையைக் கைப்பற்றத் திட்டமிட்டார். 1748இல் பாண்டிச்சேரியைக் கைப்பற்றத் திட்டமிட்டுத் தோற்ற தளபதி போஸ்கவானைப் போன்று, புனித தாவீத் கோட்டையைக் கைப்பற்ற இயலாமல் டூப்ளே தோற்றுவிட்டார். டூப்ளே தொடர்ந்து வெற்றியும், ஆங்கிலேயர் தொடர்ந்து தோல்வியும் தழுவி வரும் வேளையில், 1748இல் அய்லா செப்பல் (Aix-la-chapelle) என்ற உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வொப்பந்தப்படி சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பிக் கொடுக்குமாறு முடிவாயிற்று. லூயிஸ்பர்க்கை ஆங்கிலேயர் பிரான்ஸுக்குக் கொடுக்குமாறும் ஒப்புக் கொள்ளப்பட்டது. டூப்ளே சாதித்தன அனைத்தும் வீணாயின; ஆங்கிலேயர் திருடிச் சென்றுவிட்டனர். 1749இல் சென்னை ஆங்கிலேயருக்குத் தரப்பட்டது. இப்போரின் விளைவாக இந்தியாவின் ஆற்றலின்மை வெளியாயிற்று; இந்தியாவில் ஐரோப்பியரின் வளர்ந்துவரும் செல்வாக்கு எதிர்ப்பற்றதாயிற்று.

இரண்டாம் கருநாடகப் போர் (1749–1754)

இப்போருக்கு முன் அரசியல் நிலை

ஐதராபாத்: 1748இல் ஐதராபாத் நைஜாம் அசப்ஜா இறந்தார். நைஜாமின் இரண்டாம் மகன் நாஸிர் ஜங் அரியணை தமக்குரியதென அறிக்கை வெளியிட்டார். அசப்ஜாவின் மகள் வயிற்றுப் பிறந்த, பீஜப்பூர் ஆளுநர் முஸபர் ஜங், ஐதராபாத் நாட்டுக்கு மன்னன் தாமே என்று அறிவித்தார். முஸபர் ஜங், தம் தாய்க்கு, அவருடைய தந்தையார் வழங்கிய உரிமைப்பத்திரம் இவ்வுரிமையை வழங்கியதாகக் கூறினார். ஐதராபாத்தில் அரசுரிமைப் போர், அமைதியின்மை நிலவியது.

ஆர்க்காட்: திருச்சியை முதன் முதலில் கைப்பற்றிய சந்தாசாகிப்புக்கே அது உரியது. வாலாஜா வமிசப் பிரதிநிதியும், திருச்சியின் ஆளுநருமாகிய முகம்மது அலிக்கு இப்பகுதியில் எவ்வுரிமையுமில்லை. அவ்வாறு ஏதேனும் உரிமை இருந்தால், அது மாபுஸ்கானுக்கேயுரியது. அவருக்குப் பின்னரே முகம்மது அலியின் உரிமை முழக்கம் முஸ்பர் ஜங் வழி உரிமை தமக்குரியதாகவே சந்தா சாகிப்பும், நாசிர் ஜங் வழி உரிமை தமக்குரியதாகவே முகம்மது அலியும் வாதிட்டனர். இருவருடைய உரிமைகளுக்கும் ஆதாரம் அசப்ஜா. இவரோ நீதியற்றமுறையில் ஐதராபாத்தை அபகரித்தவர். மொகலாயர் உரிமையை மறைமுகமாகத் தமதாக்கியவர். ஆகவே ஆங்கிலேயர் ஐதராபாத்திலும், ஆர்க்காட்டிலும் நெறியற்ற முறையில் அரசு எய்தியோருக்குதவ முன் வந்தனர்.

அன்வாருதீனுக்கும் டூப்ளேக்கும் இடையே பகைமை வலுப்பெற்றது. ஆகவே ஆர்க்காட்டில் ஏற்பட்ட அரசுரிமைப்போரில் தலையிட டூப்ளே திட்டமிட்டார். சந்தா சாகிப்பை விடுதலை செய்வதற்காக ரகூஜி பான்ஸ்லேக்கு 7½ லட்சம் ரூபாய் தருவதாக டூப்ளே வாக்கிறுத்தார். சத்தாராவிலிருந்து சந்தா சாகிப் துரிதமாக விடுதலையாக வேண்டும் என்றும் வேண்டினார். 1748இல் சந்தா சாகிப் விடுதலையானார். அவர் ஆர்க்காட்டுக்கு விரைந்தார். முஸபர் ஜங்குக்காக அவர் பெட்னூரைத் தாக்கிக் கைப்பற்றினார். இந்த நெருக்கடியான போரில் தம் மைந்தனையும் இழந்தார். சந்தா சாகிப் செய்த உதவியை ஏற்றுக் கொண்ட முஸபர்ஜங் அவரைக் கருநாடக—ஆர்க்காட், செஞ்சி, திருச்சி, தஞ்சை, மதுரை நவாபாக ஒப்புக் கொண்டார். சந்தாசாகிப்பும், முஸபர் ஜங்கும், டூப்ளேயும் இணைந்த கூட்டுப் படையும் உருவாயிற்று. இப்படைமூலம் முதலிருவரும் தத்தம் பதவிகளை எதிர்நோக்கினர். 14,000 குதிரைகளையும் 17,300 வீரர் (2,300 பிரெஞ்சு) களையும் கொண்ட கூட்டுப் படை ஆர்க்காட்டைத் தாக்கியது. முகம்மதுஅலி, மாபுஸ்கான் என்ற இரு புதல்வரின் உதவி பெற்ற அன்வாருதீன் திருச்சியிலிருந்து ஆர்க்காட்டுக்கு விரைந்தார். 1749இல் நடைபெற்ற ஆம்பூர் போரில் அன்வாருதீன் மரணமடைந்தார்; முகமது அலி தப்பித்துக் கொண்டார்; மாபுஸ்கான் கைதானார். சந்தா சாகிப் ஆர்க்காட்டைக் கைப்பற்றினார். முகமது அலி திருச்சியைத் தம்மிடம் வைத்திருந்தார். முகமது அலி இவ்வரசுரிமைப் போரில் தீவிரப் பங்கு பெற்றதால் போர்க்களங்கள் மாறின. தமிழகத்தின் வடபகுதியிலிருந்து, தென்பகுதிக்கு அரசுரிமைப் போர் திசை திரும்பியது. இந்த வாலாஜா—நவயதர்ப் போர் நாட்டின் அமைதியைக் குலைத்து, பன்னெடுங்கால இழப்புக்களை ஏற்படுத்தியது.

பிரான்சும் இங்கிலாந்தும் : அய்லா செப்பல் உடன்படிக்கை இவ்விரு நாட்டாருக்கு மிடையே நிலையான அமைதியையோ, நல்லுறவையோ ஏற்படுத்தவில்லை. தஞ்சை அரசுரிமைப் போரில் ஆங்கிலேயர் தலையிட்டதால் பிரெஞ்சுக்காரர் அவர்களுக்கு எதிராகச் சூழ்ச்சியில் இறங்கினர். தம்மைக் காத்துக் கொள்வதற்காக, ஆங்கிலேயர் முகம்மது அலிக்கும், நாஸிர் ஜங்குக்கும் உதவியளிக்க முன் வந்தனர்.

முகம்மது அலியின் நன்கொடையாகப் பாகரையும் பரங்கிமலையையும் பெற்றுக்கொண்ட சென்னை ஆளுநர் ஃப்ளாயர் (Floyer) அங்கிருந்த பிரெஞ்சுக்காரரை வெளியேற்றிவிட்டு, ஆங்கிலப் படையை அங்குவைத்தார். நேர்த்தியும், திறமையும், அறிவும்,

ஆற்றலும், தந்திரமும் கொண்ட சாந்தார்ஸ் (Saunders) ஆங்கிலேயரின் உரிமைகளை நிலைநாட்ட எத்தனித்தார். தாமஸ் சாந்தார்ஸ் ஃப்ளாயருக்குப்பின் சென்னை ஆளுந ரானவர். பேராசிரியர் இராசய்யன் கூற்றுப்படி, "சயாஜிக்கு எதிராகப் பிரதாப் சிங்குக்கு ஆங்கிலேயர் உதவ முடிவு செய்தபோது அன்வாருதீனுக்கு எதிராகச் சந்தாசாகிப்புக்கும், நாஸிர் ஜங்குக்கு எதிராக முஸபர் ஜங்குக்கும் உதவி செய்ய பிரெஞ்சுக்காரர் முடிவு செய்தனர்" என்பதாம். ஐதராபாத் நைஜாமிக்கும் ஆர்க்காட் நவாபுக்கும் அரசுரிமைப் போர்கள் 1750இல் ஏற்பட்டன. இச்சமயம் டூப்ளேதான் கர்நாடகத்தின் விதியை நிருணயிப்பவராகத் தோன்றினார். இது குறுகிய காலமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

1749இல் ஃப்ளாயர் ஆணைப்படி தளபதி ஜேம்ஸ்கோப் தஞ்சை மீது படையெடுத்தார். புயல் சூழ்ந்த காரணத்தால் அவர் அங்கிருந்து பறங்கிப்பேட்டைக்குப் (Portonovo) போகவேண்டியதாயிற்று. ஏப்ரல் திங்கள் 21ஆம் நாள் கோப் தஞ்சையைத் தாக்கினார். தேவகோட்டையை முற்றுகையிட்டார். மானோஜீயின் (Manoji) தலைமையில் மராத்தியர் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டனர்; கோப்பை புனித தாவீத் கோட்டைக்கு விரட்டினர். இப்போது மானோஜீ அமைதி உடன்பாட்டுக்காக முன் வந்தார். கோபமடைந்த புனித தாவீத் கோட்டையினர் பெரிய பெரிய உரிமைகளையும், வேண்டுகோள்களையும் விடுத்தனர். தேவகோட்டையை விட்டுத்தருவதற்கும், நட்ட ஈடு கொடுப்பதற்கும், சயாஜிக்கு வருடாந்திர சலுகை தருவதற்கும் வேண்டினர். உடன்பாட்டு அம்சங்கள் திருப்தியளிக்காத காரணத்தால், பிரதாப் சிங் அம்சங்களை மறுத்தார். இதனால் கோபங் கொண்ட ஃபளாயர் தேவகோட்டையைத் தகர்க்குமாறு தளபதி லாரன்ஸை அனுப்பினார். இப்படியாவது ஆங்கிலேயரின் இழந்த புகழை மீட்கலாம் என்று அவர்கள் கருதினர். இருமுறை தேவகோட்டை தாக்கப்படவே அது சரணடைந்தது. தஞ்சை மன்னன் தேவகோட்டையை ஆங்கிலேயருக்கு அளிக்கவே, அவர்கள் சயாஜிக்கு அளித்து வந்த உதவியையும் நிறுத்திக்கொண்டனர். "தஞ்சைமீது கம்பெனி நடத்திய படையெடுப்பு தென்னிந்தியாவில் ஐரோப்பியரின் முதல் உள்நாட்டுப் போட்டியைக் குறிக்கும்" என்று பேராசிரியர் கு. இராசய்யன் கூறுவார்.

ஆம்பூரைவிட்டு, கூட்டுப் படையினர் திருச்சியம்பதியைத் தாக்கத் திட்டமிட்டனர். கருநாடகத்தில் தம் உரிமைகளை வலுப்படுத்த முகம்மது அலி முனைந்து ஈடுபட்ட காரணத்தாலும், புனித தாவீத் கோட்டையில் ஆங்கிலச் செல்வாக்கை நிலை நாட்ட அவர்கள் முயன்ற காரணத்தாலும் கூட்டுப்படையினருக்கே வெற்றி நிச்சயம் என்று தோன்றிற்று. ஆனால் அவர்களோ செயலில் அப்படித் தோன்றவில்லை.

பாண்டிச்சேரியிலிருந்து திருச்சி வரும் வழியில் சந்தா சாகிப்பு உடையார்பாளையம், அரியலூர் பாளையக்காரரை முறியடித்து, அவர்களிடமிருந்து, போர்ச்செலவாக 70,000 பகோடாக்களைக் கவர்ந்து கொண்டார். அடுத்ததாக அவர் தஞ்சையைத் தாக்க விழைந்தார். திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றப் போதிய பண, படை பலத்தை பிரபாத்சிங்கிடமிருந்து கேட்டார். பிரதாப் நேரடியாக இப்பிரச்சனைக்குச் செவிசாய்க்க மறுக்கவே, அவர் உடனடியாக ஒரு கோடிப் பணம் கொடுக்குமாறு பணிக்கப்பட்டார். மேலும் காரைக்கால் அண்டையிலுள்ள சிலகுறிப்பிட்ட கிராமங்களைப் பிரெஞ்சுக்கார ருக்குத் தருமாறும் கட்டளையிடப்பட்டார். பிரதாப் சிங் இக்கட்டளைகளை மறுத்து,

4,000 குதிரைகளையும், 30,500 வீரரையும் (500 ஆங்கிலேயவீரர்) கொண்டு அவர்களை எதிர்க்கத் துணிந்தான். படையெடுத்து வந்தோர் தஞ்சைக் கோட்டையைத் தடுத்து வீடுகளுக்குத் தீ வைத்து, நாட்டைக் கொள்ளையிட்டு, நீர்ப்பாசன வழிகளைச் சேதம் செய்தனர். மூன்றுமாத எதிர்ப்புக்குப் பின் பிரதாப்சிங் 70 லட்சம் ரூபாய் தருவதாக வாக்களித்தான். அத்தொகையில் 50 லட்சத்துக்குப் பத்திரம் எழுதியும், மீதியைப் பணமாகக் கையிலும் கொடுத்தான். அப்துல் ரக்மான் நடத்தி வந்த பிரெஞ்சு நாட்டுப் படைக்குக் கொடையாக 6,60,000 ரூபாயும் தந்தான். காரைக்காலருகில் 250 கிராமங்களை, சயாஜி ஏற்கனவே அளித்த 80 கிராமங்கள் சேராமல், பிரெஞ்சுக்காரருக்கு அளித்தான்.

திருச்சியைத் தாக்க சந்தாசாகிப் படையெடுத்து வருவது கேட்டவுடன், பெரும் படையுடன் நாசிர்ஜங் ஆர்க்காட்டுக்கு விரைந்தார். நாஸிர்ஜங் முகம்மது அலியின் உரிமைகளைக் காத்து நின்றார். நைஜாம் படையெடுத்து வருவது அறிந்த கூட்டுப்படை, தஞ்சையை அவர்களுடைய நிலையான படைத்தளமாக்கக் கருதினர். ஆனால் மராத்தியர் இந்நோக்கத்தைச் சிதறடித்தனர். முற்றுகையைத் துறந்து, அவர்கள் அடைக்கலம்தேடி பாண்டிச்சேரிக்கு ஓடினர். மதுரையின் வாலாஜா ஆளுநராகிய அப்துல் ரகீமைப் பதவியிலிருந்து இறக்க, சந்தாசாகிப் ஆலம்கான் தலைமையில் படையனுப்பினார். மக்களிடம் விருப்பைச் சம்பாதிக்க ஆலம்கான் மதுரையில் விஜயகுமாரனை நியமித்தான். சந்தாசாகிப் ஆணைபெற்ற, முடிமியா (Mudemiah) விஜயகுமாரனை பதவி நீக்கம் செய்தான். 1751இல் விஜயகுமாரன் பதவி துறந்து, சிவகங்கைக்கு ஓடினான்.

1750இல் நாஸில் ஜங் 50,000 படைவீரருடன் தமிழகத்தில் படையெடுத்து வந்து, பாண்டிச்சேரி அருகில் தளவாடமிட்டிருந்தார். முகம்மது அலி, தளபதி லாரன்ஸ், தளபதி கோப், தென்னக இந்து நாட்டு மன்னர்கள் அனைவரும் நாஸிர் ஜங்குக்குப் படைகொடுத்து உதவினர். கூட்டுபடைகளும் நாஸிர் ஜங்கின் தளவாடத்திற்கு முன் தளவாடமிட்டிருந்தனர். பீரங்கிகள் வெடிக்கத் தொடங்கின. பயமடைந்த கூட்டுப் படையினர் பாண்டிச்சேரிக்கு ஓடி ஒளிந்தனர். கூட்டுப்படையால் கைவிடப்பட்ட மூஸபர் ஜங், நாஸிர் ஜங் படைக்குச் சரணடைந்தார். ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் நல்லுறவு எண்ணங்களில் நாட்டம் கொண்டனர். அத்துடன் நாஸிர் ஜங்கை எதிர்த்து சூழ்ச்சிகளும் எழத் தொடங்கின. உடன்பாட்டில் எவ்வெற்றியும் காணாத டூப்ளே முஸபர்ஜங்கை உடனடியாக விடுதலை செய்யுமாறு வேண்டினார். மேலும் ஆர்க்காட்டு நவாபுக்குச் சந்தா சாகிப்பை ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டினார். எவ்வகையிலும் திருப்தியடையாத நைஜாம், முகம்மது அலியை நவாபாக நியமித்தார். சர்தார்களின் முழு ஒத்துழைப்புடன் நாசிர் ஜங்கின் தளவாடம் இரவு தாக்குதலுக்குள்ளாகியது. ஏறத்தாழ 1,000 வீரர்களைக் கொன்றனர். டூப்ளேயின் ஆதரவில் நடந்த இக்கொடிய செலவைக் கண்டு பயப்பட்ட நாஸிர் ஜங் ஆர்க்காட்டுக்கு ஓடினார். நைஜாமின் பிறிதொரு கோட்டையாகிய செஞ்சியைப் புஸி தாக்கினார். நைஜாம் 1750இல், டிசம்பர்த் திங்கள் 5ஆம் நாள் கொல்லப்பட்டார். எதிர்ப்பற்ற நிலையில் சர்தார்கள் முஸபர் ஜங்கை நைஜாமாக்கினர். அவர் ஆர்க்காட்டு நவாபியின் நவாபாகச் சந்தாசாகிப்பை நியமித்தார். பாண்டிச்சேரி அருகில் பல கிராமங்களைப் பிரெஞ்சுக்காரருக்களித்தார். தமக்கு உதவியவர் அனைவருக்கும் பணம், பொருள், பட்டங்கள் வழங்கினார். புஸியும் முஸபர் ஜங்கும்

ஐதராபாத்துக்குச் சென்றனர். லாடும் சந்தாசாகிப்பும் ஆர்க்காட்டையடைந்தனர். இப்போது டூப்ளே நவாப் சந்தா சாகிப்பையும், தக்காண சுபேதாராகிய நைஜாமையும் தம் கண்காணிப்பில் வைத்திருந்தார். தமக்குக் கீழ் பாண்டிச்சேரியில் அப்போதிருந்த சந்தா சாகிப் களிப்பால் தெருக்களில் ஓடியாடினார்; பலர் முன் டூப்ளேயைக் கட்டித் தழுவினார்; பாராட்டுதல்கள் தொடர்ந்தன; தெய்வ வழிபாடும் நடைபெற்றது; திருச்சபை களில் மகிழ்ச்சிப் பாடல்கள் ஒலித்தன; பாண்டிச்சேரிக்கு முஸபர் ஜங் அழைக்கப் பட்டார்; டூப்ளேயுடன் அவரும் ஒரே பல்லக்கில் அமர்ந்து சென்றனர். அடுத்தநாள் தர்பாரில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்; குழல்களும், பேரிகைகளும் ஒலித்தன; எங்கு பார்த்தாலும் யானைகள், கொடிகள், ஆபரணங்கள், அரியணை அலங்காரங்கள், மூடுதிரைத் தோரணங்கள். டூப்ளே கௌரவ ஆடை அணிவிக்கப்பட்டார். பட்டங்கள் பல வழங்கப்பட்டார். ஒரு கோட்டையும் பல கிராமங்களும் வழங்கப்பட்டன. 1,00,000 மதிப்புடைய ஒரு ஜாகீர் (estate) வழங்கப் பட்டது. கிருஷ்ணா முதல் குமரி வரையுள்ள நிலப்பரப்பின் நவாபாக நியமிக்கப்பட்டார். ஆர்க்காட் நவாபாகிய சந்தா சாகிப் அவருக்குக் கீழாகவும் இருந்தார். நைஜாமின் நீண்ட, பயனுள்ள ஆட்சிக் காலத்தில் சேமித்த செல்வம் அனைத்தும் தகுதியுடையவருக்கு வாரி இறைக்கப்பட்டது. டூப்ளே 2,00,000 பவுண்டும், விலை மதிப்பற்ற ஆபரணங்களும் பெற்றுக் கொண்டதாகத் தெரிகிறது.

இந்தியாவில் டூப்ளேயின் அதிகாரமும் மதிப்பும் உச்சக் கட்டத்தை எட்டிய நிலையை இது சித்தரிக்கிறது. தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்த ஆங்கிலேயர், அடுத்த சிற்றாண்டுகளில் அவற்றை விடுத்து வெற்றி வாகை சூடத் தொடங்கினர். "ஆங்கி லேயரின் தவறான முடிவில் விளைந்ததே தென்னாட்டுப் படையெடுப்பு; மேலும் அது சாதகமற்ற நிலையையும் அத்துடன் அவர்களுக்கு உருவாக்கித் தந்தது" என்று இந்தியாவின் காம்பிரிட்ஜ் சுருக்க வரலாறு கூறுகின்றது. அழிவின் பயத்தால் ஆங்கிலேயர்கள் தற்போது முகம்மது அலிக்கு முழு ஆதரவு தர முன் வந்தனர்.

இரண்டாவது கருநாடகப்போரில் பாண்டிச்சேரி—ஆர்க்காட்டுப் போர்களுக்குப்பின் கூட்டுப்படை வசம் சிக்கிய பொருட்கள் பங்கீட்டில் முஸபர் ஜங்குக்கும் சர்தார்களுக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டது. அதிருப்தியடைந்த சர்தார்கள் முஸபர் ஜங்குக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து, 1751இல் ஜனவரித் திங்கள் ராயச் சோட்டியில் அவரைக் கொன்றனர். சந்தாசாகிப்பின் துணை கொண்டு புஸி, சலபத்ஜங்கை அடுத்த நைஜாமாக நியமித்தார். இத்துடன் ஐதராபாத்தில் பிரெஞ்சுச் செல்வாக்கும் வளரத் தொடங்கிற்று. நண்பர்களால் கைவிடப்பட்ட முகம்மது அலி திருச்சிராப்பள்ளியை வந்தடைந்தார். சலபத் ஜங் ஆர்க்காட்டு நவாபிக்கு சந்தா சாகிப்தான் நவாப் என்று அறிவித்தார். அத்துடன் அப்பகுதியை விட்டு, முகம்மது அலியை வெளியேறுமாறும் பணித்தார்.

முகம்மது அலிக்குச் சாதகமான சூழலைச் சந்தாசாகிப் உருவாக்கித் தந்தார். சந்தாசாகிப் இப்போது ஆர்க்காட்டுப் பாளையக்காரரை பகைத்துக் கொண்டார். திருச்சியில் தம் நிலைமையைச் சரிக்கட்டிய முகம்மது அலி ஆங்கிலேயரின் உதவியை நாடினார். பிரெஞ்சுக்காரரின் ஆதிக்க வளர்ச்சியைத் தடுக்கவும், அவர்களுக்கும் நவயதார்களுக்குமிடையே ஏற்பட்ட இணக்கமான உறவு வளர்ச்சியை முறிக்கவும்

திட்டமிட்ட சென்னைக் கவர்னர் சாந்தர்ஸ், முகம்மது அலிக்கு உதவ முன்வந்தார். முகமது அலி மேலும் தஞ்சை, இராமநாதபுரம், புதுக்கோட்டை அரசர்களின் உதவியையும், பாளையக்காரரின் ஆதரவையும் தேடிக்கொண்டார்.

மதுரையில் வளர்ந்துவரும் ஆலம்கானின் செல்வாக்கை நசுக்க முகம்மதுஅலி மதுரை நோக்கிப் படையெடுக்கத் திட்டமிட்டார். மதுரைக் கோட்டை நன்கு காக்கப்பட்டதால், அடக்க இயலாமல் தளபதி கோப் திருச்சிக்குத் திரும்பினார். ஆலம்கானைப் பணிய வைக்கத் திட்டமிட்ட சாந்தர்ஸ் ஒரு அப்பட்டமான பொய்யைச் சொன்னார். அதாவது சந்தாசாகிப் மதுரையைப் பிரெஞ்சுக்காரரிடம் ஒப்படைத்ததாகக் கூறினார். ஆலம்கானின் உழைப்பை அவமதித்து சந்தாசாகிப் இப்படிச் செய்தார் என்றும், ஆகவே ஆலம்கான் முகமது அலியின் கீழ் ஊதியம் செய்யும் வாய்ப்பு வந்துள்ளது என்றும் கூறினார். ஆனால், சற்றும் மனம் தளராத ஆலம்கான் இவற்றைப் புறக்கணித்தார். இம்முயற்சிகளில் தோல்வியைத் தழுவிய அலி தம்மைப் பாதுகாக்கப் பல நண்பரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்; திருச்சியை நன்கு பாதுகாக்கத் தொடங்கினார்.

பிரெஞ்சுக்காரரின் பக்க பலமும், நைஜாமின் உறுதுணையும், ஆர்க்காட்டு மதுரைப் பகுதிகளை தமக்குக் கீழாகவும் கொண்ட சந்தாசாகிப் முகமதுஅலிக்கு ஏற்ற எதிரியாகத் தோன்றினார். இணைந்த படைகள் திருச்சிப் பகுதியில் சில வெற்றிகளையும் பெற்றன. வாலாஜாப் படைகளை அபுல் பாப்சானும், ஜிங்கின்ஸும் வழி நடத்தினர். இவர்கள் வோல்கொண்டா (Wolgonda), வாலட்டூர் (Wallatore), என்ற இடங்களில் தோல்வி யடைந்தனர். நல்லுறவு வார்த்தைகள் ஈடேறாக்காரணத்தால், சாந்தர்ஸால் ஆலோசனை தரப்பட்ட முகம்மதுஅலி சந்தாசாகிப்பின் வேண்டுகோள்களுக்கு மறுப்புத் தெரிவித்தார். திருச்சி ஆங்கிலேயருக்குச் சொந்தம் என்று பத்திரம் எழுதிக்கொடுத்து விட்ட முகமதுஅலி, ஆங்கிலேயர் மூலம் சந்தாசாகிப்பை எதிர்க்கத் துணிந்தார். சாந்தர்ஸ், அப்பத்திரத்தின் அடிப்படையில், பிரெஞ்சுக்காரரைத் திருச்சியிலிருந்து வெளியேறுமாறு எச்சரித்தார். திருச்சியிலிருந்து எப்படியாவது முகம்மது அலியை வெளியேற்றத் திட்டமிட்ட சந்தா சாகிப், இப்பயமுறுத்தலைப் புறக்கணித்தார். சாந்தர்ஸ் இருவருக்குமிடையே சுமுகமான உடன்பாட்டை ஏற்படுத்த முயன்றார். அதன்படி திருச்சியை முகம்மதுஅலியும், ஆர்க்காட்டை சந்தாசாகிப்பும் வைத்துக் கொள்ளலாம். இந்த உடன்பாட்டின் அம்சங்களை இருதரத்தாரும் ஒப்புக் கொள்ளவில்லை. சந்தாசாகிப்பின் மும்முரமான பல முயற்சிகள், பிரெஞ்சுக்காரரின் நிலையற்ற நம்பத்தகாச் செயல்களால் தோல்வியுற்றன. பிரெஞ்சுக்காரரை உதறிவிட்டு சந்தாசாகிப்பு தஞ்சை, மைசூர் மராட்டியருடன் உடன்பாடு செய்துகொள்ள முயன்றார். தஞ்சையுடன் மேற்கொண்ட முயற்சி தோல்வியுறவே கோபமுற்ற சந்தாசாகிப் தஞ்சையைத் தாக்கினார். திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம் பகுதிகளைக் கைப்பற்றினார். மைசூர், திருச்சி முற்றுகைக்கு 2,000 குதிரைகளையும், 5,000 வீரரையும் தருவதாகக் கூறியது. பதிலாக, 3 லட்ச ரூபாய் வருட வருமானம் வரத்தக்க பகுதியை மைசூருக்குத் தருவதாக சந்தாசாகிப் கூறினார். டூப்ளேயின் தலையீட்டால் இம்முயற்சியும் தோல்வியுற்றது. டூப்ளே உடன்பாட்டின் அம்சங்களை ஒப்புக் கொள்ளாத காரணத்தால், மைசூரியர் சந்தாசாகிப்பின் எதிர்க் கட்சியில் சேர்ந்தனர்.

முகமது அலி கிடைத்த காலத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார். மைசூருடன் உடன்படிக்கை செய்து கொண்டார். போரில் வெற்றி பெறின், திருச்சியையும் அதன் சுற்றுப்பகுதிகளையும் மைசூருக்குத் தருவதாக வாக்களித்தார். மைசூரியர் வாலாஜாக்களுக்குக் கருநாடகப் பகுதியைக் கைப்பற்றுவதில் ஒத்துழைக்க முன் வந்தனர். அனுபவமிக்க மராத்திய தளபதியாகிய முராரிராவ் இப்போது மைசூர் ஊழியத்தில் இருந்தார். அவர் வாலாஜாக்களுக்காக மைசூர் படையை நடத்திச் செல்ல அனுமதித்தார். வரும்போரில் தோல்வியைத் தழுவ நேரின், மைசூர் மன்னர் அர்த்தன கல்லியை வாஜாக்களுக்குத் தருவதாகவும் முடிவாயிற்று.

"பெரும் பரப்பளவு கொண்ட நாட்டைப் பெறவேண்டும் என்ற பேராசையால் உந்தப்பட்ட முகமது அலி, சந்தா சாகிப்புடன் ஓர் இணக்கமான சூழ்நிலை ஏற்படாத காரணத்தால், இந்த ஆபத்தான முடிவுக்கு வந்தார். வெற்றிபெறின், நிலப்பரப்பு ஒப்பந்தத்தின் விதிப்படி அவருக்கு வரும். தவறின் மைசூரின் ஒரு மாவட்டத்தை இழப்பதுடன், வெற்றி பெற்றோர் முடிவு செய்யும் கீழ்த்தரமான அம்சங்களைக் கொண்ட உடன்பாட்டை ஒப்புக் கொள்ள வேண்டும்" என்று பேராசிரியர் கு. இராசய்யன் கூறுவார்.

மைசூர்ப்படை வரும் என்பதில் அலிக்கு எள்ளளவும் ஐயமில்லை. பகைவர் நாட்டின் தலைப் பகுதிகளைத் தாக்குமாறு சாந்தர்ஸை வேண்டினார். அவ்வேளையில் ஆர்க்காடு பாதுகாப்பிழந்த நிலையில் இருந்த காரணத்தால், இந்த ஆலோசனை நடைமுறைக்கு ஏற்றதாகத் தோன்றிற்று. கி.பி. 1751ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22ஆம் நாள், புனித தாவீத் கோட்டையிலிருந்து 500 வீரர்களுடன் புறப்பட்டு ஆர்க்காட்டைத் தாக்குமாறு சாந்தர்ஸ் கிளைவுக்கு ஆணையிட்டார். எவ்விதத் தடங்கலுமின்றி இச்சிறிய படையுடன் கிளைவ் ஆர்க்காட்டைக் கைப்பற்றினார். "ஆர்க்காட் நவாப்பின் வீழ்ச்சி சந்தாசாகிப்புக்குப் பேரிழப்பு" ஆகும்.

உடனே திருச்சியிலிருந்து 2,000 குதிரை வீரர்களுடன் தம் மைந்தரான ரேஸா சாகிப்பை ஆர்க்காட்டைக் கைப்பற்றுமாறு சாகிப் அனுப்பினார். கிளைவ் அக்கோட்டையை ஐம்பத்து மூன்று நாட்கள், முற்றுகையிட்டோரை எதிர்த்துப் பாதுகாத்தார். முற்றுகைப்படை இயலாது பின்வாங்கிக் கொண்டது. கிளைவின் வெற்றிக்கு முகம்மது அலி காரணமல்ல. அவர் கூறியபடி படை கொடுத்துதவவில்லை. 1751ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள் எதிர்பார்த்த மைசூர் படையும் வந்தது. இம்மைசூர்ப் படைகளை நஞ்சராசாவும், வீரண்ணனும் நடத்தி வந்தனர். இப்படையில் 5,000 குதிரைகளும், 1,000 கல்லெறிக் காவலர்களும் 10,000 வீரர்களும் இருந்தனர். இத்துடன் மைசூரின் அமைச்சர் முகம்மது அலியின் திடீர்ச்செலவுகளுக்காக 80,000 ரூபாயும் அனுப்பினார். தஞ்சை, புதுக்கோட்டை மன்னர்கள் முறையே 3,000 குதிரைகளையும், 2,000 வீரரையும், 400 குதிரைகளையும் 3,000 ஒழுங்கற்ற படையையும் அனுப்பி வைத்தனர்.

ஆனால், இராமநாதபுரச் சேதுபதி 4,000 ஒழுங்கற்ற வீரர்களைச் சாகிப்பின் தளவாடத்திற்கு அனுப்பினார். இருதரப்புப் படைகளும் மோதின. கிளைவ் ஆரணி, காவேரிப்பாக்கத்தில் இரு வெற்றிகளைத் தேடினார். மராத்தியரும் ஆங்கிலேயரும்

இணைந்த படை திருச்சியைக் கைப்பற்றியது. டூப்ளேயின் அனைத்து முயற்சிகளும் வீணாயின. சந்தாசாகிப்பின் திட்டங்களும் தரைமட்டமாயின. சமயபுரத்தில் நவயதர் படைகள் நசுக்கப்பட்டன. காரைக்கால் பிரெஞ்சுத் தொடர்பு தடை செய்யப்பட்டது. திருச்சிக்கருகில் நடைபெற்ற போரில் ஆலம்கான் மரணமடைந்தார். தப்பித்துக் கொள்ள வழியின்றி, சந்தாசாகிப் தஞ்சைப்படைத் தளபதியிடம் சரணடைந்தார். அவர் சென்னை ஆளுநர் கருத்துப்படியும், தளபதி லாரன்ஸின் தூண்டுதலின் பேரிலும் 1752ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17ஆம் நாள் சாகிப்பின் தலையைத் துண்டித்தார். சந்தாசாகிப்பின் நீண்ட நாள் கனவு நனவாகவில்லை. டூப்ளேயின் பேராசையும் தகர்ந்து விட்டது. டூப்ளேயின் செயற்பாட்டின் மீது அவநம்பிக்கை கொண்ட பிரெஞ்சுத் தாய்க அரசு அவரைத் திருப்பி அழைத்தது. டூப்ளே அலங்கரித்த இடத்திற்கு கொதேகு (Godeheu) அனுப்பப்பட்டார்.

அமைதி உடன்பாட்டுப் பேச்சுக்கள் நடந்தேறின. அவற்றின் விளைவே 1755ஆம் ஆண்டின் பாண்டிச்சேரி உடன்படிக்கை. உள்நாட்டுப் பிரச்சனைகளில் தலையிடுவ தில்லை என்று இரு அந்நிய நாட்டாரும் ஒப்புக் கொண்டனர். இரு நாட்டாரும் தத்தம் பகுதிகளை முறையே வைத்துக் கொண்டனர். வடசர்க்கார்கள் மீது அதிகாரப் பெருக்கம் ஆங்கிலேயருக்குக் கிட்டியது.

அரியணையை அவகாசமின்றி அபகரித்தோருக்கும், அந்நிய நாடுகளிலிருந்து வணிகம் செய்ய வந்தோருக்குமிடையே நிகழ்ந்த போர்களினால் நாட்டுக்குப் பெருத்த நட்டம். நாட்டில் போர்களினால் அமைதியில்லை. குருதி வெள்ளம் பாய்ந்தோடிற்று. ஒரு தலைமுறையின் சிறந்த போர் வீரர்கள் போர்க் களங்களில் வீழ்ந்தனர். இவற்றின் விளைவு மக்களுக்குப் பாதிப்பு, துன்பம், துயரம்; அவர்களின் சொத்துக்கள் நாசமாயின. இப்போர்களின் செலவினங்களை அவர்கள் தாங்க வேண்டிய கட்டாய நிலை.

மூன்றாவது கருநாடகப் போர் (1755–1763)

இப்போருக்கு முன் அரசியல் நிலை : இந்திய மண்ணில் ஏழாண்டுப் போரின் தொடர்ச்சியாக ஏற்பட்டதே இப்போர். ஏழாண்டுப்போரின் (1756-'63) போது ஆஸ்திரியச் சான்ஸ்லர் கௌனிட்ஸ் கொண்டு வந்த திட்டமே 'இராஜதந்திரப் புரட்சி' என அறியப்படுகிறது. அவர் மரிய தெரசாவின் மகள் மேரி அந்துவானேயைப் பிரான்ஸின் மன்னராக வரவேண்டிய பதினாறாம் லூயிக்கு மணம் முடித்து வைத்தார். இதுகாறும் பகைமை பூண்டிருந்த இப்பெருநாடுகள் இது முதல் உறவின் நாயகர்களாயின. ஐரோப்பாவில் இதற்கு முன் நிகழ்ந்த சண்டையில் (1740-48) பிரான்சும், பிரஷ்யாவும் ஒரு பக்கம் நின்று போராடின. இங்கிலாந்தும், ஆஸ்திரியாவும் எதிர்ப்பக்கமிருந்து போர் புரிந்தன. இந்தப் புரட்சி முன்னர் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சிகளைச் சரிக்கட்டியது. இப்போர் மும்முனைப்போராக (ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா) நடைபெற்றது. இதன் இறுதி விளைவு இங்கிலாந்து, பிரஷ்யா அணிக்குச் சாதகமாயும், எதிரணிக்குப் பாதகமாயு மிருந்தது. இதன் விளைவால் இந்தியாவில் பிரெஞ்சுச் செல்வாக்கு மங்கி, ஆங்கிலச் செல்வாக்கு தலை தூக்கி நின்றது.

முகம்மது அலியும் நஞ்சராஜாவும்: பகைவரை வென்று எதிர்ப்பற்ற மாவீரனாகத் தோன்றினார் முகம்மது அலி. ஆர்க்காட்டின் ஒரே நவாப் அலியே. வெற்றி பெறவும் அவருடைய நிலை மாறிவிட்டது. மைசூரின் நஞ்சராசாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்தார். திருச்சியை மைசூருக்குத் தர மறுத்தார். ஸ்ரீரங்கத்தைத் தருவதாக முன் மொழிந்தார். 1752இல், அக்டோபர்த் திங்கள் மராத்தியருடனும் மைசூரியருடனும் இணைந்து திருவரங்கத்தைக் கைப்பற்றினார். திருச்சியையும் ஒப்படைக்குமாறு வேண்டினார். ஆனால் முகம்மது அலியின் துணையாளுநர் இவ்வேண்டுகோளுக்கு மறுப்பு விடுத்தார். முகம்மது அலி "தலைநகரற்ற நாடு தலையற்ற உடம்புக்கு ஒப்பு" என்று கூறி தட்டிக்கழித்தார். மேலும் இந்நாடு அவருக்குரியதன்று என்றும், அது மொகலாயருக்குரியது என்றும், அவர், அவர்களின் ஆணையில் உழைப்பவர் என்றும் கூறினார். நஞ்சராஜா 1753இல் சென்னை ஆளுநரிடம் ஒரு கோடிப் பணமோ, அல்லது திருச்சியையோ, தருமாறு வேண்டினார். ஆனால் ஆளுநர் சாந்தர்ஸ் இவ்வேண்டுதலுக்குச் சட்டப்படியான நியாயம் இல்லை என்று மறுத்தார். திருச்சியைக் கைப்பற்றும் நோக்கில் நஞ்சராசா முராரிராவைத் தம் பக்கம் சேர்த்துக்கொண்டார். தொடக்கத்தில் துக்கோஜியின் முறைதவறிய மகனாகிய தஞ்சை மன்னன் பிரதாப்சிங் நடுநிலை வகித்தார். ஆனால் ஆங்கிலேயரின் வற்புறுத்தலின் பேரில் அக்கட்சியைச் சேர்ந்தார். புதுக்கோட்டைத் தொண்டைமான் நவாபின் கட்சியே தன்கட்சியாகக் கொண்டார். சேதுபதியும், சிவகங்கை மன்னனும் நஞ்சராஜாவின் பக்கம் நின்றனர். நஞ்சராஜாவிடமிருந்து ஈட்டுத்தொகை பெற்ற டூப்ளே, ஆர்க்காட் நவாபாக சந்தாசாகிப்பின் மகன் ரேசாசாகிப்பை நியமித்தார். மேலும் நஞ்சராசாவுக்குத் துணையாக படையையும் அனுப்பினார். "கூட்டுப் படையினரின் நோக்கங்கள் வேறுபட்டவை; நஞ்சராசா திருச்சியைக் கைப்பற்றவும் ரேசாசாகிப் ஆர்க்காட்டையடையவும், டூப்ளே கருநாடகத்தில் ஆங்கிலேயருக்குப் பதில் பிரெஞ்சுக்காரரை மாற்றியமைக்கவும் விருப்பங்கொண்டனர்" என்பது கவனிக்கத்தக்கது என்று பேராசிரியர் கு. இராசய்யன் கூறுகிறார்.

1752ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் கூட்டுப் படையினர் தாக்குதல்களைத் தொடங்கினர். 1753ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் நவாப், தளபதி லாரன்ஸ், பிரதாப்சிங், தொண்டைமான் ஆகியோரின் இணைந்த படைகள், தஞ்சையிலிருந்து வந்த பெருத்த அளவு ஆயுதம் மற்றும் இதர பொருட்களுடன் திருச்சியில் புகுந்து, கோட்டையைக் கைப்பற்றினர். நஞ்சராசாவை மராத்தியரும், பிரெஞ்சுக்காரரும் கைவிட்டனர்; ஆங்கிலேயர் சினமுற்றனர். நைஜாம் சலபத் ஜங்கால் எதிர்ப்புப் படையெடுப்பு நிகழும் என்று அச்சுறுத்தப்பட்டார். ஆகவே 1755ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8ஆம் நாள் படையெடுப்பு முற்றுகையைக் கைவிட்டுத் தலைதப்பியோடினார். திருவரங்கத்தைப் பிரெஞ்சுக்களிடம் ஒப்படைத்தார். அவருக்குக் கருநாடகப் போரின் விளைவால் பெருத்த அளவில் பொருள் இழந்தார், எண்ணற்றப் போர் வீரர் மாண்டனர்; ஆயுதங்கள் அழிந்து போயின; கொண்ட நோக்கில் தோல்வியும் ஏற்பட்டது.

பிரெஞ்சுக்காரர்: கிளைவின் மாபெரும் வெற்றி டூப்ளேயின் கனவுகளைச் சுக்குச்சுக்காக நொறுக்கிற்று. சந்தாசாகிப்பின் படுகொலை முகம்மது அலியை ஆர்க்காட்டின் அசைக்க முடியாத நவாபாக்கியது. டிகெர்ஜனை லாரன்ஸ் பாகர் (Bahour) படுதோல்வியடையச் செய்தார். திருச்சியருகில் போர்கள் ஓய்ந்தபாடில்லை. ஆங்காங்கு பிரெஞ்சுக்காரர்கள்

சில வெற்றிகளைப் பெற்றனர். இருப்பினும் அவர்களின் எதிரிகள் முழுச் செல்வாக்கை அப்பகுதியிலடைந்தனர். அமைதிப்பேச்சுக்கள் ஏற்படுவதுபோலத் தோன்றின. வளர்ந்து வந்த பணவிரயம், போர்களினால் வந்த பளுக்கள், பிரெஞ்சுப் படையினரிடையே எழுந்த அவநம்பிக்கை அனைத்தும் மாநாடு கூட்டி பிரச்சனைகளுக்கு முடிவுகாணத் தூண்டின. சென்னைக்கும் பாண்டிச்சேரிக்கும் இடைப்பட்ட சாத்ராஸில் ஒரு மாநாடு கூட்டப் பட்டது. டூப்ளே தம் கோரிக்கைகள் மீது கொண்ட பிடிவாதத்தின் விளைவால் அக்கூட்டம் தோல்வியைத் தழுவியது. ஆங்கிலேயரும் 'நாங்கள் அமைதிக்காக இறக்கவில்லை' என்று கூறி முறிந்து சென்றனர்.

இந்தியாவில் பிரச்சனைகளுக்குச் சுமுகமான முடிவு ஏற்படுத்த பிரெஞ்சு அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் பாழாயின. இதனால் அதிருப்தியடைந்த மக்கள் டூப்ளேயை நாட்டுக்கழைக்கக் கோரினர். டூப்ளே நாடு திரும்பினார். கொதேகு பிரெஞ்சு கம்பெனியின் இயக்குநர் பதவியிலிருந்து ஆளுநராக பதவியுயர்வு பெற்றார்.

தம் தேசிய பெருமைக்காகவும், நோக்குக்காகவும், வளர்ச்சிக்காகவும் தம் பொருள், ஆவி அனைத்தையும் துறந்த சில மகோன்னதமான உழைப்பாளர், திறமைசாலி, அறிவாளிகளுக்குச் சில சமயம் வரலாற்று நியதி, துரோகம் செய்து விடுகிறது. வரலாற்று நியதி, தூங்கியபாரபட்சமான துரோகமான கொடிய முறையில் தண்டிக்கப்பட்ட பெருமனிதர்கள் பலரில் டூப்ளேயும் ஒருவர். தம் நாட்டவராலும், சமகாலத்தவராலும் பெருமளவு தவறான முறையில் அவர் புரிந்து கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைத் துரோகி என்று தூற்றினர். பாராளுமன்றத்தில் பெருங்கூச்சலை உண்டாக்கக் காரணமா யிருந்த குற்றங்களுக்கு உரியவராகிய வாரன் ஹேஸ்டிங்ஸ் தண்டிக்கப்படாமல் விட்டு வைக்கப்பட்டார் என்றால் ஏன் டூப்ளேயும் அவ்வாறு செய்யப்படவில்லை? ஏனெனில் இதற்குரிய நாடுகள் வேறுபட்டவை; நீதி நியாய நோக்கங்கள் வேறுபட்டவை; சட்ட முறைகள் வேறுபட்டவை; மனநிலை வேறுபட்டவை; காலம் வேறுபட்டவை. ஆங்கிலப் பேரரசை இந்தியாவில் ஏற்படுத்தவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தைக் கொண்ட ஆங்கிலேயருக்கு ஹேஸ்டிங்ஸின் முறை தவறிய செயல்கள் வரப்பிரசாதமாய் அமைந்தன. அவர் இந்தியப் பின்னணியில் அப்படி இயங்காமல் இருந்திருந்தால் இந்தியாவில் ஆங்கிலப்பேரரசு எங்கே? ஆகவே அங்கும் நீதியை தேசப்பற்று கௌவி விடுகிறது.

கொதேகு இந்தியா வந்தவுடன் போர் நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டார். மூன்று மாத கால படைக் கலப்பை நிறுத்தினார். தற்காலிக உடன்பாட்டையும் ஏற்படுத்தினார். ஆங்கிலப்படை வாட்ஸன் தலைமையில் கடலில் மிதக்கத் தொடங்கிற்று; மராத்தியரின் படையுதவியை ஆங்கிலேயர் கையில் சுமந்த வண்ணமிருந்தனர். ஆகவே கொதேகு தாம் கொண்ட நோக்கத்தில் சற்று தளர்ச்சி கொள்ள வேண்டியதாயிற்று; ஆகவே பல கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தார். தற்காலிக உடன்பாடு அங்கீகரிக்கப் படவேயில்லை. தாயகத்தின் முடிவு வெளிவருவதற்குள் ஏழாண்டுப் போர் மூண்டது.

டூப்ளே தாயகம் திரும்பியதிலிருந்து, இரு கட்சிக்காரருக்குமிடையே கருநாடகத்தில் நான்காண்டுக்கால அமைதி நிலவியது. கல்கத்தாவில் நிலையான ஆங்கிலப் படையில்லா நிலையில் சிராஜ் உத் தௌலா கல்கத்தாவைக் கைப்பற்றினார். இழந்த புகழை

மீட்டுதற்பொருட்டும், நிலைமையைச் சமாளிப்பதற்காகவும் கிளைவ் தென்னகத்திலிருந்து வடகிழக்கு நோக்கி விரைந்தார். கொதேகுவை முதலில் லெரிட்டும் (Levrit), அவரை அடுத்து கவுண்ட் டி லாலி (Count de Lally) 1758லும் மாற்றியமைத்தனர். லாலி திறமையும், முயற்சியும், அறிவும், துணிச்சலும், பெருமையும் மிக்கவர். வந்தவுடனே அவர் சென்னையைத் தாக்கத் துணிந்தார். அவர் குண்டுமாரி பொழிந்து புனித தாவித் கோட்டையைக் கைப்பற்றினார். ஆங்கிலேயரின் இவ்வீழ்ச்சியை 'இகழ்ச்சிக்குரியது' என்று தூற்றினார். இம்முற்றுகையால் பொருள், பணம், படை விரயமாயிற்று. இதனால் ஏற்பட்ட பணநெருக்கடியைச் சமாளிக்க தஞ்சைமீது பாய்ந்து, 56 லட்சம் ரூபாய்க்குரிய பத்திர ஒப்பந்தம் செய்து அதனைப் பெற்றுக் கொண்டார்.

வரும் வழியில் நாகூரைச் சூறையிட்டார். திருவாரூர்க் கோயிலில் பணிபுரிந்த ஆறு அர்ச்சகர்களைக் கொன்றார். ஆங்கிலத் தளபதி ஜார்ஜ் போக்காக் தலைமையில் இயங்கிய நாவாயை அழிக்க டி ஆச்சே (D'Ache) எடுத்துக் கொண்ட முயற்சி பாழடையவே அவர் பிரெஞ்சுத் தீவுகளிலிருந்து போர்போனுக்கு விரைந்தார். சென்னையைக் கைப்பற்ற அவர் மேற்கொண்ட முயற்சியைச் சென்னையாளுநர் பிகோட் (Pigot) தகர்த்தார். "நோக்கத்திலும் செயற்றிறத்திலும் சற்றும் நீதியற்றது" என்று புஸி உரைத்த இந்தப் படையெடுப்பும் படுதோல்வியுற்றது; இது இழந்துவரும் பிரெஞ்சுப் பெயருக்குப் பெரும் சேதம் விளைவித்தது என்று அறிஞர் ராபர்ட்ஸ் கூறுகிறார்.

ஐதராபாத் அரசியலில் செயல்பட்டுக் கொண்டிருந்த புஸியை லாலி உடனே அழைத்தார். ஐதராபாத்தின் தனி நாயகனாகிய புஸி விருப்பின்றி தமிழகம் நோக்கி வந்தார். அவருடைய வரவும், செயலும் கருநாடகத்தில் பிரெஞ்சுக்கிருந்த கொஞ்ச நஞ்சச் செல்வாக்கையும் தகர்த்தது; இந்தியாவில் பிரெஞ்சுக்களின் உரிமையும் பறிபோயிற்று.

ஆலோசனைச் சபையின் கருத்துக்கு மாறாக கிளைவ் 1758இல் போர்ட் (Forde) தலைமையில் ஒரு பகுதிப் படையை ஐதராபாத்துக்கு அனுப்பினார். ஐதராபாத்தில் இருந்த பிரெஞ்சுக்காரர் புஸியைப் போன்ற திறமையில்லாதவராய் இருந்ததால், அவர்களைக் காண்டூர் என்ற இடத்தில் போர்ட் முறியடிக்க முடிந்தது. இந்த வெற்றியைப் போர்ட் 1758 டிசம்பரில் பெற்றார். 1759இல் ஏப்ரல் மாதம் மசூலிப்பட்டிணத்தைத் தாக்கினார். ஐதராபாத்தில் ஒட்டு மொத்தமாகப் பிரெஞ்சு செல்வாக்குத் தளர்ந்து, ஆங்கிலேயர் செல்வாக்கு பெருகிற்று. பிரெஞ்சுக்கு முன்கொடுத்திருந்த பகுதிகளை இப்போது நைஜாம் ஆங்கிலேயருக்கு வழங்கினார். லாலிக்கும் புஸிக்கும் மனக்கசப்பு ஏற்படவே, சென்னை முற்றுகையை முடித்துக் கொள்ள வேண்டியதாயிற்று.

இதுகாறும் தாக்கியே பழக்கப்பட்ட லாலி தற்காப்பிலீடுபட்டார். பிரெஞ்சுப் படையிடையே தொடர்ந்த குழப்பம், கலகம், தொடர்ந்த பண நெருக்கடி; படைவீரருக்கும், தலைவருக்குமிடையே தொடர்ந்த மனக்கசப்பு; இவையனைத்தும் லாலியின் தோல்விக்குக் காரணங்களாயின. 1759 செப்டம்பரில் டிஆச்சே கிழக்குக் கடற்கரையடைந்தார். மூன்றாம் முறையாக போக்காக்குடன் போராடித் தோற்றார். மீண்டும் தீவுகளுக்குப் புறப்பட்டார். ஈராண்டு முயற்சிக்குப்பின் பாண்டிச்சேரியை அதன் விதிக்கு விட்டார். 1760இல் ஜனவரியில் நடந்த வந்தவாசிப் போரில் அயர்கூட் அவரை முழுத்தோல்வியைத்

தழுவுமாறு தள்ளினார். புலி பாண்டிச்சேரிக்கு விரட்டப்பட்டு, அங்கு 1760இல் ஜனவரித் திங்களில் சரணடைந்தார். அவர் ஆங்கிலக் கைதியானார். இத்துடன் பிரெஞ்சுக்களின் இந்திய விதி நிர்ணயிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கடந்து, விசாரணைக்குப்பின் லாலி கொல்லப்பட்டார். இப்போர் மார்ட்டின், டூமாஸ், டூப்ளே இட்ட கற்களைப் பெயர்த்தன. பிரெஞ்சுக் கட்டிடம் சரிந்தது.

1763இல் பாரிஸ் உடன்படிக்கை கையெழுத்தாகியது. பாண்டிச்சேரி பிரெஞ்சுக்குத் தரப்பட்டது. அழிக்கப்பட்ட நிலையில், குறைந்த படையுடன் பாண்டிச்சேரிக்குப் பிரெஞ்சுக்காரர் உரிமையாளராயினர். நவாப் முகம்மது அலி கருநாடக நவாபானார். சலபத் ஜங் ஐதராபாத் சுபேதார் ஆனார்; ஆனால் பிரெஞ்சுச் செல்வாக்கற்ற நிலையில் 1761இல் சலபத் ஜங்கை, நிஜாம் அலி துரத்திவிட்டு, உடன்படிக்கையில் கையெழுத்திட்டு ஆறுமாதம் கடந்து அவரைக்கொன்று, நைஜாம் ஆனார். வட சர்க்கார்கள் ஆங்கிலேயர் வசமாயின. பிரெஞ்சு வர்த்தகம் அழிவுற்றது; செல்வாக்கு நொறுங்கிற்று; படைபலம் குறைந்தது; இந்தியாவில் பேரரசு நிறுவ நினைத்த பிரெஞ்சு வணிகர் என்றும் வணிகராயினர்.

கருநாடகப் போரால் பெருத்த சேதம்; மனக் குழப்பம்; உயிர்ச் சேதம், பஞ்சம், பசி, வறட்சி ஏற்பட்டது. "தென்னாற்காடு இப்போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டதால், சிற்றாண்டுகள் மிகக் குறைந்த வருவாயைத் தந்தது" என்றார் ராபர்ட்ஸ்.

கருநாடக ஒப்பந்தங்கள்

கருநாடக ஒப்பந்தங்கள் மூன்று. அவை 1787, 1792, 1801ஆம் ஆண்டுகளில் கையெழுத்தாயின. இவை தமிழ் நாட்டின் விதியை ஆங்கிலேயருக்குச் சாதகமாக மாற்றின. அதிகாரம் நவாபிடமிருந்து கம்பெனிக்கு மாற இவை பேருதவியாயிருந்தன. 1787இல் கருநாடக ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன் 1785இல் ஒரு தற்காலிக உடன்பாடு செய்து கொண்டனர். இது 13 அம்சங்களைக் கொண்டிருந்தது.

இதன்படி நவாப் 16 லட்சம் பகோடாக்கள் (3 ரூபாய் மதிப்பு) ஆண்டுதோறும் கம்பெனிக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவாயிற்று. நவாபின் அமல்தார்களிடமிருந்து வரிப்பணத்தை வாங்கும் பொறுப்பை அவ்வொப்பந்தம் கம்பெனிக்குத் தந்தது. நவாப் இத்தொகையை மூன்று தவணைகளில் கொடுக்குமாறு பணிக்கப்பட்டார். செப்டம்பர்த் திங்கள் 30ஆம் தேதிக்குள் 3 லட்சம் பகோடாவையும், ஜனவரித் திங்கள் 31ஆம் தேதிக்குள் 6 லட்சம் பகோடாவையும் கொடுக்க வேண்டுமென்று குறிக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் வருவாய்த் துறை நிர்வாகத்தை அலியிடம் விட்டுவிட இசைந்தது. இவ்வொப்பந்தம் வெறும் தற்காலிக ஒப்பந்தமானாலும், அது ஆங்கிலேயரின் படை, பொருளாதார நோக்கங்களை தெள்ளத் தெளிய விளக்கிற்று.

1787ஆம் ஆண்டு ஒப்பந்தம் : முகம்மது அலியும், சென்னை ஆளுநர் சர் ஆர்ச் பால்ட் கேம்பெல்லும் 1787ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24ஆம் நாள் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இவ்வொப்பந்தம் 19 பகுதிகளைக்

கொண்டிருந்தது. இவ்வொப்பந்தம் கருநாடகம், தஞ்சாவூர், வட ஆங்கில சர்க்கார்களையும் பொறுத்ததாகும். இவ்வொப்பந்தப்படி இவர்களில் ஒருவரின் நண்பர்களும், பகைவர்களும், மற்றவரின் நண்பரும், பகைவருமே. நவாப் 9 லட்சம் ஸ்டார் பகோடா (3½ ரூபாய்க்கு மதிப்பு) வருடா வருடம் இரண்டு தவணைகளில் கொடுக்கவேண்டுமென்று கையெழுத்தாயிற்று. நிர்வாகம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பகுதிகளிலிருந்து வருவாயைப் பெற்றுக் கொள்ள கம்பெனி ஊழியர்கள் நியமிக்கப்பட குறிக்கப்பட்டது. வர வேண்டிய பாக்கித் தொகை ஒழுங்காய் வந்து சேரும் வரை, அவற்றைப் பெறும் முயற்சிகளில் அதிகாரிகள் தீவிரமாக இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. நிர்வாகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதிகளில் நவாபின் நாணயத்தை கம்பெனி நிர்வாகம் காப்பாற்றும் என்றும் ஒப்பந்தம் கூறிற்று. வாடகைப் பணம் (நிலவருவாய்) பெறுவதற்கு வேண்டிய அதிகாரங்களைத் தவிர இதர அதிகாரங்களில் கம்பெனி தலையிடுவதில்லை என்றும் உறுதியுளித்தது.

பகைமையினால் மூளும் எச்சூழலையும் தவிர்ப்பதாய் ஒப்பந்தத்தின் 8 முதல் 13 முடிய உள்ள அம்சங்கள் உறுதியளித்தன. வருவாயில் 4/5 பகுதியை கடற்கரைப் பாதுகாப்புக்கு ஒதுக்குவதாய் கம்பெனியும் நவாபும் ஒப்புக் கொண்டனர். மேற்கூறிய 4/5 பகுதியையோ அல்லது ஏதாவது ஒரு பகுதியையோ நவாப் மேற்குறிப்பிட்ட காரியத்துக்குப் பயன்படுத்தியது. வேறு வழிகளில் செலவழிப்பதனால், அக்காரியத்திற் கென்று ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து வரும் வருவாயை நேரே சேகரிக்கும் வழிகளில் கம்பெனி தலையிடும். போர்க்காலக் கடன்களை நவாப் எப்போது கட்டி முடிக்கிறாரோ, அப்போதே கம்பெனி நிர்வாகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதிகளிலிருந்தும் வருவாய் சேர்ப்பு அதிகாரிகளை நீக்கிக் கொள்ளும்.

கருநாடகத்தைப் பொறுத்தமட்டில் எழும் போர் உடன்பாடு பற்றி கம்பெனி எடுத்துக் கொள்ளும் எந்த நடவடிக்கையையும் நவாபுக்கு அறிவிக்க வேண்டும். அதே வேளையில் நவாப் மற்ற நாடுகளுடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்ள முடியாத அளவு கட்டுப்படுத்தியது. ஒப்பந்தத்தின் 16ஆம் அம்சம் இவ்வொப்பந்தப்படி கருநாடக, தஞ்சை உரிமைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை என்றும் கூறிற்று.

இவ்வொப்பந்தம் 1785ஆம் ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டது. கூட்டுப்படை அமைப்பு என்ற மாற்று வேடத்தில் கருநாடகப் பகுதியை ஒரு பாதுகாப்பு நாடாக அது மாற்றியது. நவாப் படை வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஒப்பந்தம் கூறவில்லை. ஆனால் தலைவிரித்தாடிய பொருளாதாரச் சீர்கேடு படை வைத்துக்கொள்ள உகந்த சூழலைத் தரவில்லை. 1787இல் கம்பெனி தஞ்சையுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டது.

1792ஆம் ஆண்டு ஒப்பந்தம்: 1787ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் குறைபாடுகளைத் தீர்க்குமாறு கம்பெனி நவாபுடன் 1792இல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. இவ்வொப்பந்தம் 10 அம்சங்களைக் கொண்டிருந்தது. 1787இல் நவாபுடன் ஒப்புக் கொள்ளப்பட்டபடி நடவடிக்கைகளை செயற்படுத்த போதிய அளவு வருவாய் வராத காரணத்தால் இவ்வொப்பந்தம் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. மேலும், ஆங்கிலக்

கம்பெனியின் படைமுறைக்கு நவாப் செலுத்த வேண்டிய உதவிகளை (நன்கொடை) ஒழுங்காக வாங்கப் போதிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

கம்பெனியின் முழுப்பொறுப்பில் அது ஒரு படையை வைத்துக் கொள்வதாக முடிவு செய்தது. அதற்கு ஒரு சிறு தொகையைக் கொடையாக அளிப்பதாக நவாபும் ஒப்புக் கொண்டார். கருநாடகப் பகுதியின் அனைத்துக் கோட்டைகளையும் பாதுகாக்கும் அதிகாரத்தைக் கம்பெனி பெற்றுக்கொண்டது. படைப் பராமரிப்புக்கென்று நவாப் வருடாவருடம் 9 லட்சம் ஸ்டார் பகோடா கொடுக்க வேண்டுமென்றும், கடனைத் தீர்த்துக்கொள்ள மற்றுமொரு தொகையைத் தரவேண்டுமென்றும் குறிக்கப்பட்டது.

நவாப் பெயரில் கம்பெனி பாளையக்காரர் மீது அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்றும் கூறப்பட்டது. கடன் வைக்கப்பட்ட நிலப்பகுதிகளைத் தனி நபர்களுக்கு விட்டு, வருவாய் வாங்கும் உரிமை நவாபுக்கு இல்லை. நவாப் அவர்களிடமிருந்து கடன் தொகை பெற்றிருந்தார். அதற்காக நவாப் இப்படி செய்யத் திட்டமிட்டிருந்தார். ஆனால் கம்பெனி இதனை நிராகரித்துவிட்டது. நிர்வாகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருநெல்வேலி, மதுரை, திருச்சி, நெல்லூர், வடஆர்க்காடு, புனல்நாடு, ஓங்கோல் போன்ற பகுதிகளில் இந்த வரி, ஒப்படைப்பு இயங்கி வந்தால், இது செல்லுபடியாகாது என்றும் கூறப்பட்டது.

மக்களின் நன்மைக்காகவும், தற்காப்புக்காகவும் நவாப் படைகேட்டால் கம்பெனி கொடுப்பதாயும் முடிவாயிற்று. இதற்கு ஆகும் செலவை நவாபே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்புது ஒப்பந்தம் தவணை முறையை ஒழுங்குபடுத்திற்று. பஞ்சம், நோய் ஆகியவற்றின்போது எவ்விதச் சலுகையும் தரப் போதிய அளவு குறிப்பிடப்படவில்லை. 1787ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி கம்பெனி ஆண்டுதோறும் படைபற்றிய நடவடிக்கை முறைகளை நவாபிடம் காட்ட வேண்டுமென்றிருந்தது. ஆனால் இவ்வொப்பந்தம் கம்பெனிக்கு ஏகபோக படையுரிமையை வழங்கியது. வெளி விவகாரத்தில் நவாபுக்குப் பிடிப்பற்றுப்போயிற்று. பாளையக்காரரிடமிருந்து நிலவரி (கப்பம்) வாங்கும் அதிகாரமும் பறிக்கப்பட்டது. தஞ்சைமீது நவாபின் மேலாண்மை பற்றி ஏதும் கூறப்படவில்லை. இருப்பினும் அது 1787ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அங்கீகரித்தது. 1793இல் தஞ்சையுடன் செய்துகொள்ளப்பட்ட பிறிதொரு ஒப்பந்தம் கம்பெனியின் செல்வாக்கைத் தஞ்சையில் பன்மடங்காக்கிற்று.

1801ஆம் ஆண்டு ஒப்பந்தம் : 1801ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் தேதி கையெழுத்தான ஒப்பந்தம் கம்பெனிக்கு கருநாடக நிர்வாக உரிமையை ஒப்படைத்தது. இதில் 12 அம்சங்கள் இருந்தன. கம்பெனியின் பாதுகாப்பில் பெயரளவுக்கு நவாபாக அஸிம்—உல்—தௌலா (Azim-ul-Doula) ஒப்புக் கொள்ளப்பட்டார். நாட்டைப் பொறுத்த சொத்து குற்ற அதிகாரங்கள் கம்பெனி கைக்கு மாறின. கம்பெனியின் இசைவின்றி எந்த உள், வெளி நாடுகளுடனும் நவாப் ஒப்பந்தம், உறவு வைத்துக் கொள்ள இயலவில்லை. நவாபின் தலையீடு இன்றி, கம்பெனி நிலவரி வாங்கும் அதிகாரிகளை நியமிக்கலாம். மேலும், சொத்து குற்ற நிர்வாகிகளையும் அவ்வாறு நியமிக்கலாம் என்று கூறப்பட்டது.

இவ்வொப்பந்தப்படி கம்பெனி 1/5 பகுதி வருவாயை நவாபுக்குக் கொடுக்க வேண்டும். உம்தத்—உல்—உம்ராவின் குடும்பச் செலவு பாதுகாப்புக்கு வேண்டிய நடவடிக்கைகளை ஒன்பதாம் அம்சம் சுட்டியது. கம்பெனி உத்தரவின்றி நவாப் படைக்கலம் தாங்கிய போர்வீரரை நியமிக்கலாகாது. இவ்வொப்பந்தத்தின் இறுதி அம்சம், நவாபின் மாவட்ட சொத்து, குற்ற படையதிகாரிகள் தங்களுக்குக் கீழிருந்த பகுதிகளையும், பத்திரங்களையும், கணக்குகளையும் அதிகார ஆவணங்களையும், குறிப்பிட்ட கம்பெனி அதிகாரிகளிடம் மாற்றி ஒப்படைக்குமாறு குறிப்பிட்டது.

இவ்வொப்பந்தம் மேலாண்மை பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. மொத்த நிர்வாகமும் கம்பெனி கைவசமாயிற்று. நாட்டுக்கு இவ்வுடன்பாடுகள் நன்மைகள் செய்தன என்று கருதப்படுகிறது. கருநாடகத்தின் வருவாய் வருடாவருடம் குறைந்து சென்றது; 1800-1801இல் மொத்தம் 19 லட்சம் ஸ்டார் பகோடாவாக இருந்தது; ஆனால் பின்வந்த சீர்திருத்திய நிர்வாகத்தால் அது சரிக்கட்டப்பட்டது

மாபுஸ்கான் (Maphuz Khan)

ஆர்க்காட் நவாப் அன்வாருதீனின் மூத்தமகனே மாபுஸ்கான். தம் மகனாக இருந்த போதிலும் அரசுரிமையை அடைவதற்குத் தகுந்த ஆற்றல் அவரிடம் இருக்கவில்லை. ஆனால் அன்வாருதீனின் முறைதவறிப் பிறந்த மகன் முகம்மது அலியாகிய தம் தம்பிக்குத் தலை வணங்கி வாழ்ந்தான். வாலாஜா நவயத் சண்டையிலும், வாலாஜா—மைசூர்ச் சண்டையிலும் மாபுஸ்கான் பெரும் பணியாற்றினார். இருப்பினும் அவன் முகமது அலிக்கு அடிபணிந்தே வாழ்ந்தார்.

சந்தா சாகிபை வெற்றி கொண்டபின் முகமது அலி தம் கவனத்தை மதுரைமீது செலுத்தினார். மதுரை மீண்டும் கைப்பற்றப்பட்டபின், அங்கு ஆளுநராக மாபுஸ்கானை அவர் நியமித்தார். திருநெல்வேலி மதுரைப் பகுதிகளின் வரியாக மாபுஸ்கான் ஆண்டு தோறும் 15 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று பணிக்கப்பட்டான். மாபுஸ்கான் அதிகம் வரி வாங்கி, குறிக்கப்பட்ட அளவே கொடுத்து வந்தான்.

தம் பதவிக் காலத்தின் போது தமக்கு எதிராகப் பல சூழ்ச்சிகளும், எதிர்ப்புகளும் எழுந்தன. பதான் தலைவர்கள், கள்ளர்கள், மறவர், கட்டப் பொம்மு, புலித்தேவன், திருவிதாங்கூர் மன்னன் ஆகியோர் இவனுக்கு அடங்கி நடக்க மறுத்தனர். இவர்கள் ஒரு பொதுக் காரணத்தின் பேரில் வாலாஜாக்களை எதிர்த்தனர். இவர்களை அடக்கப் போதிய திறமை இவரிடமில்லை. எழும் சூழ்நிலையைச் சரிக்கட்டப் போதிய ஆற்றலும் இவரிடமில்லை. இவருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளும் அவருக்கு உதவவில்லை.

தம் நிலையையுணர்ந்த மாபுஸ்கான் கொடைகளும் திறைகளும் கொடுத்து, கீழ்ப் பாளையக்காரரை மேல்பாளையக்காரரிடமிருந்து பிரிக்கத் திட்டமிட்டார். இம்முயற்சியில் அவருக்குப் பாஞ்சாலங்குறிச்சி, எட்டயபுரப் பாளையங்களின் உதவி கிட்டியது. 1756இல் திருவிதாங்கூர் படைகளை களக்காட்டிலிருந்து விரட்டினார். இருபத்தொரு போர்க்களங்களில் எதிர்த்தோரை வென்றார். ஆனால் அனைத்து பாளையக்காரரையும் வெற்றி கொள்ளவில்லை.

நிலையைச் சமாளிக்க நவாப் கம்பெனியின் படையுதவியை நாடினார். சென்னை ஆளுநர் பிகாட், உடனே யூசுப்கான் தலைமையில் படையனுப்பினார். கான்சாகிப் என்ற யூசுப்கான் 1756ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் நாள் மதுரையடைந்தார்; அங்கிருந்து நெல்லைக்கு விரைந்தார். அவர் மாபுஸ்கானைக் கண்டார்; ஆனால் மாபுஸ்கான் செய்வதறியாது திகைத்தார். யூசுப்கான் எதிரிகளை வீழ்த்தினார். எதிரிகளே சிர்க்கார்ப் பகுதிகளை விட்டு வெளியேறி கப்பம் கட்ட ஒப்புக்கொண்டனர்.

சில நாட்களில் இருவருக்குமிடையே பகைமை மூண்டது. மாபுஸ்கானை மற்றவர் மதிக்கவில்லை. நெல்லையிலிருந்து யூசுப்கானை திருப்பியழைக்க நவாப் வேண்டினார். ஆனால், பிகாட் மறுத்தார். மேலும் யூசுப்கானையோ, நெல்லையின் பெருஞ்செல்வந்தர் தாதரப்ப முதலியையோ ஏற்றுக் கொள்ளுமாறும் பணித்தார். இவ்வேளையில் வரிவசூலகருக்கும், படைத்தளபதிக்குமிடையே பெருத்த போட்டி ஏற்பட்டது. இதனால் மாபுஸ்கான் தம் படைபலத்தைப் பெருக்கிக் கொண்டார்.

1756ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் மாபுஸ்கான் மதுரை ஆளுநர் என்று தம்மை அறிவித்து, நெல்லை, இடை மண்டலங்களில் தமக்குக் கீழதிகாரிகளை நியமித்தார். இதனைக் கண்ணுற்ற கம்பெனி, தம் அதிகாரிகளையனுப்பி, உடன்பாடு ஏற்படுத்த விழைந்தது. அவர்கள் மாபுஸ்கானை ஆர்க்காட்டுக்குப் போகக் கூறினர். பொருத்தமான பிறிதொரு பகுதியைத் தருவதாகக் கூறினர். மறுக்கவே பிரச்சினை வளர்ந்தது. நவாப் மூலம் இதனைத் தீர்க்க மாபுஸ்கான் வேண்டினார். ஆனால் நவாப் மாபுஸ்கானை திருப்பியழைத்தார்.

கோபமுற்ற மாபுஸ்கான் தம் சுதந்திரப் பிரகடன முயற்சியிலீடுபட்டார். மறவர், கள்ளர், பாளையக்காரர் உதவியைப் பெற்றார். விரட்டப்பட்ட நாயக்கருக்கு நாட்டைத் தருவதாக வாக்கிறுத்தார். புரட்சிப் படைகளுடன் சேர்ந்த கான் நெல்லையில் பெரும் பகுதிகளைக் கைப்பற்றினார். கான்சாகிப் அவர்கள் மீது பாய்ந்து, 300 பேரைக் கொன்று, வெற்றி கொண்டார். 1757இல், பிப்ரவரித் திங்கள் ஜான் கைலார்ட் தலைமையில் இப்பிரச்சனையைத் தீர்க்க பிகாட் படையனுப்பினார். நெல்லையில் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்ய கைலார்ட் முயன்றார். ஆனால் தங்கச்சி, ஊத்தமலையிலிருந்த எதிரிகளை அப்புறப்படுத்த எம்முயற்சியும் அவர் மேற் கொள்ளவில்லை. ஏழாண்டுப் போர் மூளவே, பிரெஞ்சுக்காரர் எதிர்ப்படையினருக்கு உதவ முன் வந்தனர். 1757ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் பிரெஞ்சுத் தளபதி டி ஆடிரேல் திருச்சிக்கு விரைந்தார்.

கைலார்ட், கான் சாகிப் படைகள் திருநெல்வேலி, மதுரை கடந்து திருச்சிக்குச் சென்றன. மாற்றார்ப் படையினரைத் தாக்கி, அதனைப் பாண்டிச்சேரிக்கு விரட்டினர். கைலார்ட் இல்லா வேளையில் மாபுஸ்கான் நெல்லையைக் கைப்பற்ற முயன்று தோற்றார். கானுடன் உடன்படிக்கை செய்ய ராமநாயக் சென்னைக் கவுன்சிலால் அனுப்பப்பட்டார். ராமநாயக்கை புரட்சிப்படைகள் தாக்கத் துணிந்தபோது, சர்தார்களின் உதவியுடன் தப்பித்தனர். சில நாட்களில் மாபுஸ்கான் நெல்லையைக் கைப்பற்றினார். இச்சமயம் கம்பெனி பாஞ்சாலங்குறிச்சி, எட்டயபுரம், சிவகிரி, சாத்தூர் மற்றும் மறவர்களின் உதவியைப் பெற்றது. மதுரையை பார்கத்துல்லா காத்து நின்றார்; மாபுஸ்கானின் உதவியையும் அவர் நாடினார்.

இதற்கு சற்றும் செவிசாய்க்காத கான் நெல்லையைத் தமதாக்கவே முயன்றார். மதுரையைக் காக்க ஹைதர்அலியும் படையனுப்பத் தவறினார். எனவே பார்கத்துல்லா கைலார்டுடன் ஓர் உடன்படிக்கை செய்து, இடத்தை விட்டகன்றார். 1757இல் அக்டோபர்த் திங்கள் கைலார்ட் மதுரையை கான் சாகிப்பிடம் ஒப்படைத்தார். வெற்றிக்குப் பின் அவர் சென்னைக்குப் புறப்பட்டார்.

உடனே ஹைதர்அலி மதுரையைத் தாக்கினார். சாகிப் அப்படையை வென்று, திண்டுக்கல்லிலிருந்து விரட்டினார். 1758இல் கவுண்ட் டிலாலி கம்பெனிக்கு எதிராகப் படையெடுத்தார். ஆனால் தோல்வியைத் தழுவிப் பாண்டிச்சேரிக்கு ஓடினார்.

கான்சாகிப் தம் நிலையைச் சமாளித்து, இந்துக்களிடம் நல்லெண்ணம் பெற கோயில் பூசைகளை அனுமதித்தார். மாபுஸ்கான் மதுரையை விட்டு வெளியேறுமாறு, கம்பெனி உத்தரவிட வேண்டினான். மாபுஸ்கான் வெளியேறினால், அடங்காப் பாளையங்கள் அடங்கும் என்று நினைத்தார். கம்பெனியின் தூண்டுதலால் மாபுஸ்கான் திருப்பி அழைக்கப்பட்டார். ஆனால் மாபுஸ்கான் மற்ற (கான்சாகிப்பின்) வரின் வெளியேற் றத்தைக் கோரினார். மேலும் 2 லட்சம் வருமானம் வரத்தக்க ஒரு மாவட்டத்தைத் தருமாறும் கேட்டார். நவாப் இதனை ஏற்கவில்லை 1758இல் கான்சாகிப் கம்பெனிக்கு உதவ சென்னை சென்றார். 1759இல் திரும்பி வந்தபோது, மீண்டும் நத்தம் முதல், திருவிதாங்கூர் வரையுள்ள பகுதிகள் மாபுஸ்கான் பாளையக்காரரிடம் இருப்பது கண்டார். மாபுஸ்கான் தம்மை 'மதுரை நவாப்' என்று அறிவித்தார்; பாளையக் கூட்டுப் படையைக் கூட்டினார். மறவர், புதுக்கோட்டை மன்னன் உதவி பெற்ற கான்சாகிப் கள்ளர்களை வென்றடக்கினான். மேல், கீழ் பாளையக்காரரை நசுக்க அடுத்து அவர் முயற்சி செய்தார். மாபுஸ்கான் கையிலிருந்த களகொண்டானை கான்சாகிபு வென்றான். திருவிதாங்கூர் உதவியுடன் மேல் பாளையக்காரரை எதிர்க்கப் படையெடுத்துச் சென்று தோற்றான்.

1759இல் இப்போர்கள் நடக்கவே, மாபுஸ்கான் பிகாட்டிடம் உடன்படிக்கை கோரினார். கான்சாகிபிடம் தாம் மதுரையை விட்டு வெளியேறுவதாயும் அறிவித்தார். தமக்கு ஒரு மாவட்டத்தை ஒதுக்கித் தருமாறும் வேண்டினான்.

இறுதியில் நவாபுக்கும், மாபுஸ்கானுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. மார்ச் திங்கள் மாபுஸ்கான் புலித்தேவர் படையுடன் சேர்ந்தார். ஏப்ரலில் திருச்சிக்குச் சென்றார். அங்கிருந்து சென்னையடைந்து, மற்றவர்களிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொண்டார். பயனற்ற போரில் காலத்தைச் செலவிட்ட மாபுஸ்கான் எதையும் பெறவில்லை. இதனைப் பயன்படுத்தி வளர்ந்தவன் ஹைதர் அலி மட்டுமே. தொடர்ந்த சிற்றாண்டுகள் மாபுஸ்கான் உதவிச் சம்பளம் பெற்று வாழ்ந்தான். நவாபிடம் பணம் பெற்று, மெக்காவுக்குப் புனிதப் பயணம் மேற்கொண்டான். வழியில் மீண்டும் ஹைதருடன் சேர்ந்து, சூழ்ச்சிகளில் ஈடுபட்டான். மீண்டும் மதுரைக்கு வந்து, புரட்சியைத் தொடர முற்பட்டான். 1767இல் கைது செய்யப்பட்டு, மதுரைச் சிறையிலிடப்பட்டான். பிற்காலங்களில் ஓய்வூதியம் பெற்று, சென்னையில் வாழத் தொடங்கினான்.

கான் சாகிப் (Khan Sahib)

பிறப்பில் இந்துவாயும், திருமணம்மூலம் கிறித்தவனாயும், தொழில் மூலம் முகம்மதியனாயும் தமிழக வரலாற்றில் வந்து சென்ற கான் சாகிப் (யூசுப் கான்) முதன் முதல் தஞ்சைப் படையூழியனாகப் பணியாற்றினான். மாபுஸ்கானுக்கு உதவ அவன் நெல்லைக்கு அனுப்பப்பட்டான் என்று மேலே கண்டோம். கப்பம் கட்ட மறுத்தோரை வென்று கப்பம் பெற்றான். இம்முயற்சியில் நெல்லையின் பெருஞ்செல்வந்தன் தாதரப்ப முதலி உதவினான். மாபுஸ்கானுடன் மோதல் ஏற்பட்டு, இறுதியில் மதுரையின் ஆளுநரானான். கான்சாகிப்பின் காலம் மூன்றாண்டுகள் என்று வரையறுக்கப்பட்டது. கான் சாகிப்பால் கம்பெனி செல்வாக்கு தென் தமிழகத்தில் பெருகிற்று.

மாபுஸ்கான் முகம்மது அலியின் அதிகாரி. அவருக்கும் கம்பெனிக்கும் அதிகத் தொடர்பில்லை. தாதரப்ப முதலி இடைப்பட்ட தரகரைப் போன்று கான் சாகிப் கம்பெனியின் ஒரே அதிகாரி. கான் சாகிப் பதவிக்கு வந்தவுடனே தம் நாட்டில் அமைதியை நிலைநாட்டத் திட்டமிட்டார். இவ்வேளையில் பாளையக்காரர் கம்பெனிக்கு எதிராக எழுந்தனர். புலித்தேவரும் ஆலந்தியரும் நெல்லைக் கொந்தளிப்பில் தலையாய் இயங்கினார். கலகக்காரர் ஹைதர் அலி, பிரெஞ்சு உதவியையும் எதிர்பார்த்தனர். இதனால் மீண்டும் எதிர் கூட்டுகள் தோன்றின. கட்டப்பொம்மு கீழ்க் கூட்டையும், புலித்தேவன் மேல் கூட்டுப் படையையும் தோற்றுவித்தனர்.

1760இல் கட்டப்பொம்மு ஓட்டப்பிடாரத்தைக் கைப்பற்றினான். தூத்துக் குடியிலிருந்து ஆலந்தியர் ஆழ்வார் திருநகரியையும், மணப்பாடையும் தாக்கினர். ராமநாதபுரம், சிவகங்கையுதவியுடன் ஆலந்தியரை கான்சாகிப் வென்று விரட்டினான். கலகக்காரரை ஓட்டப்பிடாரத்திலும் அடக்கினான். ஹைதர் அலி திருச்சியைக் கொள்ளை யிட்டு, நத்தத்துக்கு முன்னேறி, மதுரையுடன் நவாபின் தொடர்பைத் துண்டித்தான். 1760இல் ஹைதர் படை வைத்திருந்த சோழகுண்டா, வத்தலகுண்டுப் பகுதிகளைக் கைப்பற்றினான். திண்டுக்கல் அண்டைப் பகுதிகளையும் வெற்றி கொண்டான்.

மேல் பாளையங்கள் மீதும், புலித்தேவனை வெல்லவும் அடுத்தபடியாகப் படையனுப்பினான். நெல்கட்டஞ் செவ்வல் தலைவன் 1761இல் சரணடைந்தான். அவன் ராமநாதபுர நாடுகளுக்கு ஓடி ஒளியுமாறு அனுமதிக்கப்பட்டான். கானின் வெற்றியை மதித்துப் பொன்னும், பொருளும், வாளும் நவாப் அனுப்பினார்.

அடங்காதோரை வென்றபின், நாட்டுச் சீர்திருத்தத்தில் கான் தம் கவனத்தைச் செலுத்தினான். குழப்பநிலையில் நாட்டை விட்டோடிய குடிகளை மீண்டும் குடிபுகச் செய்தான். பணம் கடன் கொடுத்து வேளாண்மையைச் செழிக்கச் செய்தான். கல்லிட்டுக் குழிகளை நிரப்பி நீர்ப்பாசனத்தைச் சீர் செய்தார். மண் தன்மையை மாற்றி, விலை நிலங்களாகப் பாழ் நிலங்களை மாற்றினான். வணிகருக்கு இளைப்பாற தங்கும் விடுதிகளைக் கட்டினார். பயணப் பாதுகாப்புத் தந்தார். வர்த்தகப் பெருக்கத்தைச் சீர் செய்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைக் கொண்டு ஆயுதங்களை உற்பத்தி செய்தார். கோயில்களுக்கு நன்கொடைகளையும், பரிசளிப்புகளையும் ஆதரித்துப் பெற்றார். நிர்வாகக் கொடுமையின்றி, நாட்டில் அதிகப் பணத்தையும், வளத்தையும் கொண்டுவந்தார். நீதிக்குத் தலை வணங்கினார். ஒருதலை நீதி அவரிடம் இல்லை. தவறிழைத்தோர் தண்டிக்கப் பட்டனர்; ஒழுங்காக வரி பெற்று, ஆங்கிலக் கருவூலத்தில், செலுத்தவேண்டியதை ஒழுங்காகக் கட்டினார். சில சமயங்களில் கொள்கையும், செயலும் முரண்பட்டன.

மீண்டும் மதுரை தாக்குதல்களுக்குள்ளாயிற்று. கானுக்கு எதிராக திருவிதாங்கூர், சிவகிரி, வடகரை, பாஞ்சாலங்குறிச்சித் தலைவர்கள் படை கூட்டு நிறுவினர். மறவர் உதவியுடன் அவர்களைத் துரத்தினான். போர் முடிந்தவுடன் மதுரையையடைந்து, காப்புத்தந்தான். திருவிதாங்கூர்ப் போருக்கு நவாபிடமோ, கம்பெனியிடமோ உத்தரவு பெறாததால், அவர்கள் சற்று திடுக்கிட்டனர். இதிலிருந்து வேறுபாடு தொடங்கிற்று.

கம்பெனியோ, நவாபோ சாகிப்பின் படைமீது கட்டுப்பாடு வைத்துக்கொள்ள வில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை அவன் நழுவவிடவுமில்லை. படைபலத்தைப் பெருக்கினான். மக்கள் நல் விருப்பைப் பெற்றான். ஆனால் அலியோ கானுக்கு எதிராகத் திட்டம் தீட்டினான். பிகாட்டுக்கு வரைந்த கடிதத்தில் நவாப் அவனுடைய இசைவின்றி நத்தத்தில் கோட்டை கட்டியதாகவும், மறவரை உதவ அழைத்ததாயும், தஞ்சை, டேனிய, ஆலந்திய, பிரெஞ்சு உதவியை நாடியதாயும் குறைகூறி, கலகத்திற்குத் தயாராயிருப்ப தாகவும் அறிவித்தான். இவற்றை சாகிப்போ கம்பெனியின் உத்தரவின் பேரில் செய்து முடித்தான்.

கானோ வரியைத் தம் எண்ணத்துக்கு மாறாக, நவாபுக்குத் தருமாறு பணிக்கப் பட்டான். இதனை அவன் ஒப்புக்கொள்ளவில்லை. மறுக்கவே அவன் 1762இல் சென்னைக்குச் செல்லுமாறு ஆணையிடப்பட்டான். இச்சமயம் திருவிதாங்கூர்ப் படைகள் நெல்லையைத் தாக்கின. இவர்களை விரட்டியடித்துவிட்டு, கம்பெனியாணையை ஏற்று நடப்பதாக சாகிப் எழுதினார். ஆனால், சாகிபின் செயல்களை பிகாட் ஒப்புக்கொள்ள வில்லை. கோபங் கொண்ட பிகாட் மதுரைக்குப் படை ஏவினான். கான் உடனே திருவிதாங்கூருடனும், பிரெஞ்சுக்காரருடனும் 1763இல் உடன்படிக்கை செய்து கொண்டான்.

மதுரைக் கோட்டையையும், எல்லைப்புறங்களையும் காக்கும் முயற்சியில் சாகிப் ஈடுபட்டார். இந்துக்கள், ராமநாதபுரம், சிவகங்கை மன்னர்கள், ஹைதர்அலி, பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் உதவியைப் பெறவும் முயன்றார். திருச்சியை கானும், ஆர்க்காட்டை ஐதரும் ஒரே வேளையில் தாக்குவதாக முடிவாயிற்று. மதுரைக் கோட்டை மீது பிரெஞ்சுக் கொடி பறந்தது.

காலத்தின் விளையாட்டால் ஹைதர்படை கானுக்கு உதவ அனுப்பப்படவில்லை. 1763ஆம் ஆண்டு உடன்படிக்கைக்குப் பின் பிரெஞ்சுக்காரரும் இவற்றைப் பற்றி அதிக கவனம் எடுத்துக் கொள்ளவில்லை. 1763இல் கானும் ஒரு பெரும் தவறு புரிந்தான். அதாவது சிவகெங்கைச் சீமையைக் கொள்ளையிட்டான். ராமநாதபுரம், சிவகங்கையுதவி யையும் இதனால் இழந்தான். விளைவு தன்னந்தனியாகப் போராட வேண்டிய நிலை.

புதுக்கோட்டை, சிவகங்கை வழி படையனுப்ப கம்பெனி திட்டமிட்டது. படைகளுக்கு வழிவிட மறவர்களும் ஒப்புக் கொண்டனர். வடகிழக்கிலிருந்து கம்பெனியின் தரைப்படை 1763இல் மான்சன் தலைமையில் மதுரைக்குள் நுழைந்தது. நவாபின் படை நத்தத்தையடைந்து, கானுக்கும் மைசூருக்குமிடையே உறவைத் துண்டித்தது. பிரெஞ்சுக் காரர் இவ்வேளையில் மதுரை அவர்களுக்குரியது என்று அறிவித்தனர். ஆங்கிலேயர் இதற்குச் செவி சாய்க்கவில்லை. தொடர்ந்த முதற்கட்டப் போரில் நவாபும், கம்பெனியும் வெற்றியேதும் பெறவில்லை. 1764இல் ஏப்ரல் திங்கள் பிரஸ்டன் தலைமையிலான கம்பெனிப் படை நெல்லைக்குள் புகுந்தது. கலகப்படை ஸ்ரீவில்லிபுத்தூரை விட்டு வெளியேறியது.

இச்சமயத்தில் பாளையக்காரரும் கானைக் கைவிட்டு நவாபிடம் சேர்ந்தனர். கம்பெனிப் படை நெமிலியைக் கைப்பற்றி, பாளையங்கோட்டையருகில் தளவாடமிட்டனர். 1764இல் பம்பாயிலிருந்து வந்த ஒரு படையுடன் நவாப் மதுரையடைந்தார். அனைத்து வழிகளையும் இழந்த கான் மதுரையில் ஆளுநராக இருக்குமாறு அனுமதிக்க வேண்டினார். ஆனால் பிரஸ்டன் நிபந்தனையின்றி சரணடையக் கோரினான். கானின் முயற்சி தோல்வியடையவே, போர் மும்முரமாய்த் தொடங்கிற்று.

நவாப், கம்பெனிப் படைகள் கலகப்படைகள் மீது திடீர்த் தாக்குதல்கள் செய்தும் பலனில்லை. கம்பெனி 160 பேரை இழந்தது. ஹைதர் திருச்சியைத் தாக்கினார். ஆனால் மதுரைக்கு உதவ முன் வரவில்லை. தாக்குதல் தோல்வியடையவே, நவாப் கம்பெனிப் படைகள் கோட்டையைச் சுற்றி வளைத்தன. இருவரும் கானிடம் நிபந்தனையின்றிச் சரணடைய வேண்டினர். ஆனால் கானும், குடும்பமும் அமைதியுடன் தற்காப்பு செய்து கொள்ள மறுத்தனர்.

மரணம்வரை போரிட கான் உறுதி பூண்டார். ஆனால் தம் படையினர் உயிர்ப் பாதுகாப்பு கோரினர். எனவே பிரெஞ்சுத் தளபதி மார்செந்து கோட்டையை விட்டுத்தர முன்வந்தார். அப்படியாயின் பாதுகாப்பும், ஒருமாத ஊதியமும் வேண்டினான். நவாப் உயிர் பாதுகாப்பு தர ஒப்புக்கொண்டான்; ஆனால் பணம் தர மறுத்தான். அக்டோபர்த் திங்கள் வேறு வழியின்றிச் சரணடைந்தனர். கானும் குடும்பமும் சிறையிடப்பட்டனர். 1764ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள் 16ஆம் நாள் நவாப்கானின் தலையைத் துண்டித்தான். கானின் தோழர்கள் கோட்டையை விட்டு விரட்டப்பட்டனர்.

நவாபுகளின் ஆட்சிமுறை

"18ஆம் நூற்றாண்டின் கர்னாடகத்தின் ஆட்சிமுறையானது, பழைய இந்து அரசர்களின் ஆட்சிமுறைக்கும் வடஇந்திய முஸ்லீம்களின் ஆட்சி முறைக்கும் இடைப்பட்ட ஆட்சி முறையாகத் திகழ்ந்தது." நவாபுகள், வருவாய்த் துறையில் பல புதிய ஆட்சிமுறைச் செயல்களைப் புகுத்தினர். அதே நேரத்தில் நீதித்துறையின் சீரமைப்பிலோ, தல அரசின் வளர்ச்சியிலோ குறிப்பிடத்தக்க எந்த மாற்றத்தையும் அவர்கள் செய்யத் தவறினர். பொதுவாக அவர்களுக்கு ஆட்சித்துறையில் திறமை இருந்தது என்று சொல்லி விடலாகாது.

மத்திய அரசு

கர்னாடக ஆட்சிப்பகுதியின் முழு அதிகாரத்தையும் ஒருமுகமாக நவாபே பெற்றிருந்தார். ஆற்காடு, நவாபுகளின் தலைநகராயிருந்தது; ஆனால், திருச்சிராப்பள்ளி அன்வர்உத்தீன் (வாலாஜா வம்சத் தலைவன்) காலத்தில், இரண்டாவது தலைநகராக ஆக்கப்பட்டது. பின்னாளில், முகமதுஅலி, சேப்பாக்கத்தில் அரண்மனை ஒன்றை அமைத்து அங்கு தங்கினார். தஞ்சாவூர், திருவிதாங்கூர், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, வேலூர் ஆகிய பகுதிகளின் ஆட்சியாளர்களும், நெல்காட்டன் செவ்வல், சிவகிரி, பாஞ்சாலங்குறிச்சி, எட்டயபுரம், உடையார்பாளையம், அரியலூர், துறையூர், காலகஸ்தி, வெங்கடகிரி பாளையக்காரர்களும் நவாபுகளின் கீழ் அடங்கியவர்களாக இருந்து வந்தனர்.

கர்னாடக ஆட்சிப்பகுதி முகலாயப் பேரரசின் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. முகலாயப் பேரரசரின் ஆளுநர் என்ற முறையில், கர்னாடக நவாப், தீபகற்ப இந்தியாவின் கிழக்குக் கடற்கரையின் துணை ஆட்சியாளராகப் பணியாற்றினார். நவாப், எதிரிகளுக் கெதிராகப் போரிட்டார். திறை திரட்டினார். நீதி நிர்வாகத்தைச் செயல்படுத்தினார். இவருக்குத் துணையாயிருந்த நிர்வாகத் துறைத் தலைவர்கள் — திவான் (வருவாய்த்துறை), பக்ஸி (இராணுவ அதிகாரி), கொத்வால் (காவல்துறை) ஆவர். முகலாயப் பேரரசின் ஆளுநராக நவாப் இருந்தாலும், சில நேரங்களில் பேரரசின் ஆணையை மறந்து தானே தமது அதிகாரிகளை நியமித்துக் கொண்டார். முகமது அலியும் அவருக்குப்பின் வந்தவர்களும் வெளிநாட்டாருடன் தொடர்பு கொள்வதற்காக ஐரோப்பியர்களைத் தங்களது ஆட்சித்துறை அதிகாரிகளாக நியமித்தனர்.

கர்னாடக ஆட்சிப்பகுதி இரு சபாக்களாகப் பிரிக்கப்பட்டது. திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் திருச்சிராப்பள்ளி சுபாவில் அடங்கும். ஆற்காடு, செங்கல்பட்டு, நெல்லூர் மாவட்டங்கள் ஆற்காடு சுபாவில் அடங்கும். பிற்கால நவாப்புகள், மாவட்டங்களை, பர்கானாக்கள் அல்லது தாலுகாக்கள் அல்லது நாடுகள் அல்லது பாளையங்கள் எனப் பிரித்தனர். வருவாய்த்துறை நிர்வாகத்தை திறம்பட நடத்தும் பொருட்டு கானுங்கோ (தலைமைக் கணக்காளர்), முஸ்தபி (வரவு செலவுகளைச் சரிபார்ப்பவர்), சாதர், பெய்ஸ்க்கர், காஸி (தலைமை நீதிபதி), கொத்வால் போன்ற பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

ஃபவுஜ்தார் (Foujdar) என்பவரே படைகளின் தளபதியாகவும், மாவட்டங்களில் குற்றவியல் நீதித்துறையை நிர்வகிப்பவராகவும் செயல்பட்டார். வருவாய்த்துறை அதிகாரி அமல்தார் என அழைக்கப்பட்டார். இவர் நாட்டு மக்களின் சிவில் வழக்குகளை விசாரிக்கும் பணியையும் செய்வார். இந்த அதிகாரங்களனைத்தையும் முகம்மது அலியால் ஒரே நபரிடம் ஒப்படைக்கப்பட்டபோது நிர்வாகக் கேந்திரம் சீரழிந்தது. ஒவ்வொரு ஆட்சிப் பகுதியும், தனக்கென படைத்தளபதி, வருவாய்த்துறை அதிகாரி, தலைமைக் கணக்கர் நிதித்துறைச் செயலர், அரசவைச் செயலர் ஆகிய அதிகாரிகளைப் பெற்றிருந்தது. சுதேச அரசர்கள், நவாபின் அரசவைக்குத் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பினர். கிராம விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பு கிராம அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்பட்டது.

பாளையங்களில், அம்பலகாரர் அல்லது நிதித்துறை அதிகாரிகள், செரோகார்கள் அல்லது இராணுவ அதிகாரிகள் நிர்வாகம் நடத்திவந்தனர். பணியாளர்கள் நிலமாகவோ, பணமாகவோ தங்களது ஊதியங்களைப் பெற்றனர்.

நவாபுகளின் ஆட்சிமுறையில் எண்ணிறந்த குறைகள் இருந்தன என்பது மறுக்கமுடியாததாகும். அரசுப் பணியாளர்கள் திறமையின் அடிப்படையில் அல்லாது செல்வாக்குப் பெற்றவர்களின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்பட்டனர். நல்ல வழியிலோ அல்லது ஊழல் வழியிலோ, ஆட்சியாளரின் நன்மதிப்பைப் பெற்றிருக்கும் வரை பணியாளர்கள் பதவியில் நீடித்தனர். கு. இராசய்யன் இம்முறை திறமையையோ, பணிவையோ காட்டவில்லை. மாறாக, ஊழலையும், பணிந்து செயல்படாமையையும் பெருக்கியது என இயம்புகின்றார்.

இராணுவ ஆட்சிமுறை

உள்நாட்டில் ஏற்பட்ட புரட்சிகள், வெளிநாட்டுப் போர்கள் ஆகியவற்றால் கர்னாடகப் பகுதியின் இராணுவத்திறன் குறைந்து கொண்டேயிருந்தது. தவிர, நவாப், சிற்றரசர்கள் மீது இராணுவ ஆதிக்கத்தைச் செலுத்தும் அளவுக்குத் திறன் பெற்றிருக்க வில்லை. உள்நாட்டுத் தலைவர்கள் செல்வாக்கும், வாய்ப்பு வசதிகளும் பெற்றிருந்த காரணத்தால் தாங்களே தங்களது இராணுவத்தை நிர்வகிக்க விரும்பினர். மராத்தியர் படையெடுப்பின் காரணமாகவும், ஹைதராபாத் நிஜாமின் நடவடிக்கைகளின் காரணமாகவும், நவாப், தனது தலையாய அதிகாரத்தை நிலைநாட்டும் வாய்ப்பை இழந்தார்.

நவாப், அவரது கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட ஆட்சியாளர்கள் ஆகியோரின் படையமைப்பு, குதிரைப்படை, தரைப்படை, அடுக்கு மாட்டு வண்டிகள், யானைப்படை, பீரங்கிப்படை என பிரிக்கப்பட்டிருந்தது. இராணுவம் நிலையானது (regular), தாற்காலிகமானது (irregular) என வகைப்படுத்தப்பட்டது. முதல் வகை நவாபின் நேரடி மேற்பார்வையிலிருந்த படையாகும்; பின்னது அவசரகாலங்களில், நவாபின் கீழ்ப்படிந்துள்ள ஆட்சியாளர்களால், நவாபிற்கு அனுப்பப்படும் படையாகும். இராணுவ வீரர்களை நடத்திச் செல்பவர் பௌஜ்தார் ஆவார்.

நவாபின் படையினர் எண்ணிக்கையில் அதிகமாயிருப்பினும் போர்க்களங்களில் திறமையற்றவராகவே இருந்தனர். இப்படையினர் சரியாக, தவறாது ஊதியம் பெறும் போதும், ஆங்கிலேயர்களால் பயிற்சி கொடுக்கப்பட்ட போதும் ஐரோப்பிய இராணுவ வீரர்களைப் போன்றே திறமை பெற்றவர்களாக விளங்கினர். படைகள் இடம் விட்டு இடம் நகரும் போது வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களைக் கொண்டுள்ள அங்காடி ஒன்றும் உடன் சென்றது. ஒவ்வொரு படைவீரனும் தனது குடும்பத்தினரையும் தன்னுடன் அழைத்துச் சென்றான். இதனால் பல இன்னல்கள் ஏற்பட்டன; இடம் விட்டு இடம் சென்று தங்குவதும் கடினமாயிருந்தது. படைவீரர்கள், இரவில் மட்டுமே அதிக உணவும் கஞ்சாவும் பயன்படுத்தினர்.

எப்பொழுதெல்லாம் படைவீரர்களுக்குச் சரியான ஊதியம் வழங்கப்பட வில்லையோ அப்போதெல்லாம் அவ்வீரர்கள் தங்களது படைத் தலைவரைக் கைது செய்து சிறையில் வைத்தனர். கேவலப்படுத்தினர். சில நேரங்களில் படை வீரர்கள் தங்களது படைத்தலைவரைத் தவிக்க விட்டு விட்டு மாற்றான் அணியில் சேர்ந்தனர். எனவே காலம் செல்லச் செல்ல தமது படையை நம்புதல் தவறு என்பதை உணரலானார்.

போர் முறையில் வெற்றியடைவதற்கு பணம், காளைமாடுகள், ஒற்றர்கள் ஆகியவை இன்றியமையாததாகும். கொடியவர்கள், குற்றவாளிகள், வழிப்பறியினர் ஆகியோரைக் கண்டுகொள்வதற்கு ஒற்றர்முறை மிகவும் பயன்பட்டது. பொதுவாக பிராமணர்களே ஒற்றர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் சிறிய காகிதங்களையும், பனை ஓலைகளையும் பயன்படுத்திச் செய்திகளைத் தெரிவித்தனர். ஆட்சிமுறைக்கு ஆதரவாக பயன்படும் வகையில் அமைக்கப்பட்ட படை, சில நேரங்களில் சட்டதிட்டங்களுக்கு எதிராகவும், சில நேரங்களில் சிவில் விவகாரங்களைக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் செயல்பட்டது. இராணுவ அமைப்பில் ஆங்கிலேயர் தலையிட்டுச் சில மாற்றங்களைச் செய்யும் வரை, அது சீர்கெட்ட நிலையிலேயே இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

வருவாய்த்துறை நிர்வாகம்

கர்னாடக நவாபுகள் கொடுமையான, குழப்பம் மிகுந்த வருவாய்த்துறை நிர்வாகக் கொள்கைகளைக் கொண்டிருந்தனர். மாநிலங்களில் அமல்தார் என்பவரே தலைமை வருவாய்த்துறை அதிகாரியாவார். வரிவசூல் செய்வதற்குக் கடுமையான முறைகள் பின்பற்றப்பட்டன; அதிகாரிகள் தங்களது கடமையின் நலனையும் முக்கியத்துவத்தையும் மறந்தனர். ஆங்கிலேயர்கள் முகமது அலியிடம் கடன்களைச் செலுத்தக் கட்டாயப் படுத்திய போது, பின்னவர் தமது வருவாய் வசூல் செய்யும் முறையை தனி மனிதர்களுக்கு வழங்கினார். இத்தனி மனிதர்கள் அதிகாரிகளைவிடக் கொடுமையாக நடந்து கொண்டனர். வரிவசூல் செய்வதிலும் ஒரே மாதிரியான வரிவசூல் முறைகள் பின்பற்றப் படவில்லை. இத்தனியார் குத்தகைதாரர்கள், மனிதாபிமானம் இன்றித் தங்கள் விருப்பம் போல் வரிப்பணத்தைக் கூட்டினர்.

1790ஆம் ஆண்டு கர்னாடகம், தஞ்சைப் பகுதிகளின் வருவாயை ஆங்கிலேயர் களிடம் ஒப்படைக்கும்படி நவாப் கட்டாயப்படுத்தப்பட்டார். ஆங்கில வருவாய்த்துறைக் குழு ஒன்று வரிவசூலுக்காக ஏற்படுத்தப்பட்டது. இக்குழு மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமித்தது. குத்தகைக்காரர்களும் நியமிக்கப்பட்டனர். ஆங்கிலேயர்கள் நீர்ப்பாசன வசதிக்கோ அல்லது மக்களது நலனுக்கோ எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ள வில்லை. அதே நேரத்தில் கான்சாகிப் போன்ற ஆங்கில அதிகாரிகள் மக்கள் நல்வாழ்வுக் காக உழைக்க முற்பட்டனர்; மக்கள் காக்கப்பட்டனர்; நீர் வழிகள் பழுதுபார்க்கப்பட்டன; குறைகள் களையப்பட்டன. கான்சாகிப்பைப் போன்றே, இராமநாதபுரம் சேதுபதிகளின் திவானாயிருந்த முத்து இருளப்பபிள்ளையும் மக்களுக்காக உழைத்தவராவார்.

பொதுவருவாய் வசூல், நிலவருவாய், திறை, தீர்வை வரி, ஒருமுகவரி, மீன்பிடித்தல் வரி, பொதுவரி ஆகியவற்றிலிருந்து ஏராளமாக வசூலிக்கப்பட்டது. பொது வருவாயில் பத்தில் ஒன்பது பங்கு நிலத்திலிருந்து திரட்டப்பட்டது. அடுத்து முக்கிய வரியாகக்

கருதப்பட்டது தீர்வை வரியாகும். அரசாங்கம் சாராய விற்பனை வரி திரட்டிற்று; செங்கல் போன்ற கட்டிடங்களுக்குப் பயன்படும் பொருட்கள், முத்துக்குளித்தல் ஆகியவை மீது ஒருமுகவரியை வசூலித்தது. தவிர, அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்ட உப்பளங்கள், நீதிபதிகளால் விதிக்கப்பட்ட அபராதத் தொகைகள், வட்டிக்கடைக்காரர்களிடம் திரட்டப்பட்ட பணம், கோயில்களிலிருந்து திரட்டப்படும் கட்டாய நன்கொடைகள், திருமண விழா நடத்துவோரிடம் வசூலிக்கும் அன்பளிப்புகள், தானியங்களின் வருமானத்திலிருந்து பெறும் பணம் ஆகியவற்றால் அரசாங்கத்தின் கருவூலம் நிரப்பி வைக்கப்பட்டது. இவ்வாறான நவாபுகளின் அரசாங்கம் மக்களது பொருளாதார நிலையை முன்னேற்ற எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

வருவாய்த்துறைப் பணியாளர்கள் மாவட்டங்களில் தாங்களே வரி திரட்டினர். அல்லது வரிதிரட்டி அரசுக்குச் செலுத்துவதாக ஒப்புக்கொண்ட மற்றவர்களிடமும் ஒப்படைத்தனர். உயர் இனத்தவர்கள், குறிப்பாக பிராமணர்கள், குறைந்த அளவு வரியைச்செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆனால் நடுத்தரவாதிகளும், தாழ்த்தப்பட்டோரும் ஏராளமான வரியைச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். சமய நிறுவனங்களும், அறநிலையங்களும், பிராமணர்களும் தங்களது வரியைப் பணமாகவோ அல்லது தானியமாகவோ செலுத்தும் சலுகை பெற்றனர்.

மாவட்ட வருவாய் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ வசூலிக்கப்பட்டது. வரிவசூல் செய்பவர் அல்லது குத்தகைக்காரர் வரிவசூல் செய்து ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை அரசாங்கத்திற்குச் செலுத்துவார்; அடுத்து, இப்பணத்தைப் பெற்ற அமல்தார் இதனைக் கருவூலத்தில் சேர்ப்பார். மக்கள் தங்கள் நிலத்தில் விளைவிக்கப்பட்ட தானியங்களை விற்கும் உரிமை பெற்றிருந்தனர். இத்தானியங்களுக்கு ஒரே சீரான விலை நிர்ணயம் செய்யப்பட்டது. விலை நிர்ணயப்பட்டியலை அரசுப் பணியாளர்கள் வைத்திருந்தனர். வாணிக மையங்களில் பொருட்கள் எந்த விலையில் விற்கப்படுகின்றன என்பதனைக் கண்காணிக்க ஒற்றர்கள் நியமிக்கப்பட்டனர்.

பல்வேறுபட்ட உரிமை ஒப்பந்தங்கள் நடைமுறையிலிருந்தன. அவைகளில் சில, கூட்டு உரிமை ஒப்பந்தங்களாகவும், சில தனிப்பட்ட உரிமை ஒப்பந்தங்களாகவும் இருந்தன. கூட்டு உரிமை ஒப்பந்தத்தின் கீழ் குடியானவர்கள் பொது மதிப்பீட்டின்படி நிலங்களைப் பெற்றிருந்தனர். தனிப்பட்ட உரிமை ஒப்பந்தத்தில் வரி செலுத்துவதில் தனிநபர் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டது. குத்தகைதாரர்கள் வரிகளைத்திரட்டிக் கருவூலத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தினர். பாளையக்காரர்களே குத்தகைக்காரர்களாகவும் இருந்தனர். பரம்பரை பரம்பரையாகத் தாங்கள் பெற்ற நிலத்தின் எப்பகுதியையும் மாற்றும் (alienate) உரிமையை பாளையக்கர்ரர்கள் பெற்றிருந்தபோது குத்தகைக்காரர்கள் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நிலத்தைப் பெற்றனர். பெஷாங்கிரி என்ற கூட்டுரிமை ஒப்பந்த முறைப்படி மக்கள் தாங்கள் பெற்றிருக்கும் நிலத்திற்கு வரிசெலுத்து வதில் கூட்டுப் பொறுப்புடையவர்களாவர். அதிக்கிரயின் என்ற தனி உரிமை ஒப்பந்தப்படி குடியானவர் ஒவ்வொருவரும் தனித்தனியாக அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் பொறுப்புடையவராவார். சில சமயங்களில் கூட்டுரிமை ஒப்பந்தமும் ஒன்றோடொன்று பிணைந்திருந்தன.

நீதித்துறை ஆட்சிமுறை

ஆட்சியாளர்கள் நீதித்துறையினைச் சீர்படுத்துவதில் எந்தவித முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. பொதுவாக பொது நிர்வாக ஊழியர்களே வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறினர். குறிப்பாக, இந்துக்களுக்கு, அந்தந்த ஆட்சிப் பகுதிகளின் தலைவர்களும், அமல்தார்களும் தங்களது ஆட்சிப் பகுதிகளிலேயே நீதிமன்றங்களை வைத்திருந்தனர். முகமதியர்களுக்கு, ஒவ்வொரு முக்கிய நகரத்திலும், காஸி என்னும் அதிகாரி நீதிமன்றங்களை வைத்து வழக்குகளை விசாரித்தார். பாளையங்களில் பாளையக்காரரே நீதிவழங்கினார்; கள்ளர் நாட்டில் கிராமத் தலைவர்களும், கிராம மூத்தோர் குழுவும் நீதி வழங்கினர். நவாபின் நிலப் பகுதியில், பௌஜ்தார் தமது பணியாட்களின் உதவியோடு குற்றவியல் வழக்குகளை விசாரித்தார்.

தஞ்சாவூரில், ராஜா பிரதாப்சிங், ஒரே ஒரு நீதிபதியைக் கொண்ட நீதிமன்றத்தை ஏற்படுத்தினார். இவருக்குப்பின், அமர்சிங், கிறித்தவ பாதிரியார்களின் ஆலோசனைப்படி, நீதிமன்றத்தை மாற்றியமைத்து ஒரு தலைமை நீதிபதியையும் நான்கு நீதிபதிகளையும் நியமித்தார். ஆனால் இதில் ஊழல்கள் பெருகியிருந்தன. செர்போஜி மன்னர், குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்காக கில்லேதார்களை (Killedars) நியமித்தார். இக் கில்லேதார்களால் விசாரணை செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட சில வழக்குகளில் ராஜாவே தலையிட்டு தண்டனையை மாற்றியமைக்கவும் செய்தார்.

சிறைப்படுத்தப்படுவது பொதுவான காரியமாக நடைமுறையிலிருந்தது. குற்றவியல் வழக்குகள் விசாரிக்கப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன; சில சமயங்களில் தண்டம் திரட்டப்பட்டது. சில சமயங்களில் மரண தண்டனை வழங்கப்பட்டது. தங்களது உயிர்காக்கப்படுவதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கைதிகள், சர்க்காரிடமிருந்து பெற்றிருக்கவில்லை. ஆனால் அவர்கள் தங்களது கிராம நிர்வாகிகளின் அறநிலையத்தின் தயவில் விடப்பட்டனர். நீதி நிர்வாக முறையில் ஏராளமான சீர்கேடுகளும், அதிகார துஷ்பிரயோகமும் பெருகி ஊழலை வளர்த்தன என்பதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. உயர்ந்த இனத்தவர்கள் சலுகைகள் பெற்றுச் சட்டத்தால் காக்கப்பட்டனர். எதேச்சாதிகாரத்தின் கொடுமைகளிலிருந்து ஏழைக் குடியானவர்கள் காக்கப்படவில்லை.

கிராம ஆட்சி முறை

ஆற்காடு நவாப் நிலப்பகுதியிலும், மற்ற பாளையங்கள், மறவர் பகுதிகள் ஆகியவற்றிலும் கிராமம், குடி, குறிச்சி, பட்டி, குளம், சமுத்திரம், மங்களம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டது. இக்கிராமமே நாட்டின் ஆட்சிப்பிரிவில் சிறிய நிர்வாகக் கேந்திரமாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் கிராம அதிகாரி அல்லது நாட்டாண்மைக்காரர் இருந்தார். இவருக்கு நிர்வாகத்தில் உதவி செய்வதற்குக் கிராமசபை அல்லது பஞ்சாயத்து சபை இருந்தது. இதற்குக் கீழ் பல துணைக்குழுக்கள் இருந்து வந்தன. நாட்டாண்மைக்காரரே கிராமங்களின் தலைமை நிர்வாக அதிகாரியாவார்.

சர்க்காருக்கும் கிராமத்திற்குமிடையே நடுநாயகமாக விளங்கிய நாட்டாண்மைக்காரர் தனக்குக் கீழ் இருப்பவர்களுக்கு வரிவசூல் அல்லது பொதுப்பணி அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தார். இந்த கிராம அதிகாரி அல்லது நாட்டாண்மைக்காரர் படேல் (Patel) அல்லது முக்கடம் (Muccadam) என்ற பெயரில் அழைக்கப்பட்டார். பொதுவாக இவர் கிராமசபையால் நியமிக்கப்படுவார். இதன்பின் இவரது பரம்பரை வழியில் இப்பதவி கொடுக்கப்பட்டது. இவர் உடல் நலமின்றி இருந்த பொழுதும், அல்லது குழந்தைகள் இன்றி இறந்தபொழுதும் இவரது பதவி மற்றவர்களுக்கு மாற்றப்பட்டது.

இவரது முக்கிய பொறுப்பு, இவருக்கு ஒப்படைக்கப்பட்ட எல்லைக்குள் வருவாய் திரட்டல், சிறுவழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தல் போன்றவையேயாகும். ஆனால், நாட்டாண்மைக்காரர் சாதி, இனம் பற்றிய அல்லது சமய விவகாரம் பற்றிய எந்த வழக்குகளையும் விசாரிக்கும் உரிமை பெற்றிருக்கவில்லை. இனம், சமயம் பற்றிய விவகாரங்கள் அந்தந்த இனத்தலைவர்களிடமும், சமயத் தலைவர்களிடமுமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. நாட்டாண்மைக்காரருக்கு நிர்வாகத்தில் உதவியாக கர்ணம் பட்வாரி அல்லது கணக்கன் என்னும் கணக்கர் இருந்தார். இந்த கர்ணம் பயிர்செய்யுப் முறையைப் பற்றிய குறிப்புக்களை எழுதினார்; வருவாய் விவகாரங்களைக் குறித்தார் கிராமத்தாரால் ஏற்றுமதி—இறக்குமதி செய்யப்பட்டவற்றைக் குறித்தார்; அவ்வப்பொழுது நவாபால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வறைமுறைகளைச் செயல்படுத்தி வந்தார். சிறு வழக்குகளில் இவரே நீதிபதியாகவும், சில சமயங்களில் கிராம நாட்டாண்மைக்காரருக்கு நீதித்துறையில் உதவி செய்பவராகவும் இருந்தார்.

இதுதவிர, ஒவ்வொரு கிராமமும் பல பணியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட துணை அமைப்புக்களையும் பெற்றிருந்தது. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனிப்பட்ட பணிகளில் நியமிக்கப்பட்டனர். காவல்காரர்கள் என்பவர்கள் கிராம தலையாரியாகப் பணிபுரிந்தனர். சோதிட, கணித, சாஸ்திர வல்லுனர்கள், கிராம செரீப்கள், கோவில் பூசாரிகள், மருத்துவ வல்லுனர்கள், நடன ஆசிரியர்கள், நடனப் பெண்கள், மத்தளம் அடிப்பவர்கள், பேரிகை முழங்குபவர்கள், செருப்பு தைப்போர், சிகை அலங்காரம் செய்வோர், விவசாயத் தொழிலாளர்கள், தோட்டிகள் போன்றோரும் கிராம ஆட்சியில் முக்கிய இடம் பெற்றனர். நாட்டாண்மைக்காரரின் பணியாளர்கள் என்ற முறையில் இவர்கள், அவரது ஆணைகளைச் செயல்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். அவர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஒரே சீரான ஊதிய முறை செயல்படுத்தப்படவில்லை. கிராம ஊழியர்கள் தானியம் அல்லது பணத்தைத் தங்களது ஊதியமாகப் பெற்றனர்.

கிராமத் தோட்டிகளில் மூன்று வகையினர் இருந்தனர். முதல் பிரிவினர் தானியங்களையும் நிலங்களையும் அளந்தனர். இரண்டாவது பிரிவினர் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரைப் பங்கீடு செய்யும் பணியைச் செய்தனர். மூன்றாவது பிரிவினர் நீர் நிலைகளையும் நீரோடைகளையும் பராமரித்தனர். காவல்காரர்கள் அல்லது தலையாரிகள் போலீஸ் பணிகளைச் செய்தனர். இவர்கள் இரவில் காவல் புரிந்து மக்கள்

வருவது போவது பற்றிக் குறித்து வைத்து, அந்நியர்தம் நடவடிக்கைகளைக் கவனித்து, சந்தேகப்படும் எவரைப் பற்றியும் நாட்டாண்மையிடம் அறிவித்தனர். குற்றம் செய்தவர்கள், குறிப்பாகக் கொள்ளை, கொலை குற்றம் செய்தவர்கள் தண்டனை பெறுவதற்காகக் காவல்காரரால் நாட்டாண்மையிடம் அழைத்துச் செல்லப்பட்டனர். திருட்டுத் தொழில் நடந்ததென்றால் காவல்காரரே திருடனைப் பிடிக்க வேண்டும். அவ்வாறு அவர்களால் பிடிக்கத்தவறி, திருடன் அக்கிராம எல்லையைத் தாண்டி விட்டதாக உறுதியாகத் தெரிந்தால் உடனே இச்செய்தி அடுத்த கிராமத்துக் காவல் காரரிடம் அறிவிக்கப்பட்டு திருடனைப்பிடிக்க எல்லாவித முயற்சியும் எடுத்துக் கொள்ளப் படும். இறுதியாக எந்தக் கிராமத்தில் திருடனின் அடிச்சுவடு தெளிவாக அதாவது கடைசியாக, கண்டுபிடிக்கப்பட்டதோ அந்தக் கிராமமே திருடு போன பொருளுக்குப் பொறுப்பேற்க வேண்டும் அல்லது எந்தக் கிராமத்தில் கொள்ளை அல்லது திருடு நடந்ததோ அந்தக் கிராமமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். காவல்காரர், திருடர்களிடமிருந்து பொருட்களைக் கைப்பற்றி, அதன் உடமையாளர்களிடம் ஒப்படைக்கவேண்டும். இதனைச் செய்யத் தவறும் போது அவரே தனது தகுதிக்கேற்ப இழப்பைச் சரிக்கட்ட வேண்டும்; நீதி இழப்பை கிராம மக்களிடமிருந்து வசூலித்துச் சரிக்கட்டும் முறை செயல்பட்டு வந்தது. இக்காவல்காரர் முறை பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அழிவுறத் தொடங்கியது. இன்று இம்முறை சில கிராமப்புறங்களில் மட்டும் செயல்பட்டு வருகிறது; ஆனால் பழைய கட்டுப்பாடுகளுடன் அல்ல.

ஒவ்வொரு கிராமத்திலும் வழக்குகளைத் தீர்ப்பதற்காக, "பஞ்சாயத்து சபை", நாட்டாண்மைக்காரரால் கூட்டப்பட்டது. பொதுவாக கிராமத்தில் வசித்த ஒவ்வொரு இனத்தின் தலைவரும் இச்சபையில் இடம் பெற்றனர். கிராமத்தின் பொதுப் பங்கு நிலம் பற்றிய பிரச்சினை இருந்ததால் அனைத்து நிலச்சொந்தக்காரரும் இச்சபையில் இடம் பெற்றனர். சில நேரங்களில் நாட்டாண்மைக்காரரே பஞ்சாயத்தின் உறுப்பினர் களை நியமனம் செய்தார். இதனால் குறைபாடுகள் தவிர்க்க முடியாததாயின. தல வழக்குகளைப் பற்றி நன்றாக அறிந்து கிராமத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்த பஞ்சாயத்தானது சிறுசிறு வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தகுதி வாய்ந்த ஒன்றாகவே செயல்பட்டது. ஆயினும் இதில் இலஞ்சம், ஊழல் மலிந்திருந்தன; குறைபாடுகளும், செயல்படுத்தலில் தயக்கமும் ஏராளமாயிருந்தன. உள்நாட்டு அமைதி கெடும்போதும், அந்நியர் படையெடுப்பின்போதும், சமய ஆதிக்கங்கள் ஏற்படும்போதும், இனப் போராட்டங்கள் ஏற்பட்டபோதும் இக்கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களது செல்வாக்கை இழந்தன.

கிராம சபைகள், குழு முறை போன்றவை தொடக்க காலத்தில் சிறப்பாக விளங்கினாலும் காலப்போக்கில் செல்வாக்கிழந்தன. உள்நாட்டுச் சூழ்நிலைகளும் இக்கிராம சபைகளின் நற்செயல்பாடுகளுக்கு உதவுவதாக இல்லை. சாதிப்பிரிவிலிருந்தும், வாழ்ந்துவரும் இடப்பிரிவிலிருந்தும் ஏற்படுத்தப்பட்ட இனப்பாகுபாடுமுறை, நிலத்தின் மூலம் பெறப்பட்ட நிரந்தர வட்டியைக் குறைக்க முயற்சி செய்தது ஆகியவை அரசியல்,

பொருளாதார முன்னேற்றத்தைப் பாதித்தன. போர்களும், தொடர்ந்து வந்த பஞ்சங்களும், கொள்ளை நோயும் சில கிராமங்களை அழித்தன. இவ்வளவு இன்னல்களுக்குமிடையேயும் கிராம சமுதாயங்கள் தங்களது வரைமுறைகளோடு செயல்பட்டன. வருவாய்வரிவசூலில் மட்டுமல்லாது, நீதித்துறையிலும், உள்நாட்டு விவகாரங்களைச் சீர்படுத்துவதிலும், பிரச்சினைகளை அணுகுவதில் அறிவுப்பூர்வமாகவும் செயல்பட்டு வந்தன என்பது மறுக்கமுடியாத உண்மை எனலாம்.

சமுதாயம்

நவாப் ஆட்சிக்கால சமுதாயத்தில் தந்தையே குடும்பத்தின் தலைவராகச் செயல்பட்டார். பெண்கள் இரண்டாம் தரமாகவே இருந்தனர். பொதுவாக ஒரு ஆண் ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளும் வழக்கமிருந்தது. நடைமுறையில் பஞ்சமும், கடுமையான சீதோஷ்ண நிலையும் இருந்ததால் உடை அணிவதில் மக்கள் எளிமையாக இருந்தனர். சாதாரண மனிதன் தனது இடையில் ஒரு கச்சையும், தலையில் ஒரு தலைப்பாகையும் அணிந்திருந்தான். பெண்கள் எட்டு அடி நீளமான சேலை ஒன்றை மட்டுமே அணிந்திருந்தனர். உடையில் காட்டப்பட்ட எளிமை அணிகலன்கள் அணிவதில் காட்டப்படவில்லை. ஆண்களும் பெண்களும் உடலில் எண்ணை தேய்த்துக் கொள்ளும் வழக்கம் பெற்றிருந்தனர்.

எல்லா இனத்தவர்களிடையேயும் இளமை மணம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொதுவாகக் குடும்ப வாழ்வில்தான் மகிழ்ச்சி இருக்கிறது என அவர்கள் கருதினர். சமுதாயக் கட்டுப்பாடுகள் திருமண வாழ்க்கைக்கு மெருகூட்டுவதாக அமைந்தன. வயது முதிர்ந்த நிலையிலிருந்த பெற்றோர்கள் தங்களது மைந்தர்களையே நம்பி வாழ்ந்தனர். குழந்தையில்லாத பெற்றோர்கள் சுவீகாரம் எடுத்துக் கொண்டனர். ஆனால் பெண்களைச் சுவீகாரம் எடுக்கும் வழக்கம் அனுமதிக்கப்படவில்லை. துரதிஷ்டவசமாக, ஐரோப்பியர் குடியிருப்புக்கள் தமிழகத்தில் பெருகியபோது, ஆண்களும், பெண்களும் இளமைக் காலத்திலேயே பல தவறுகளுக்கு இலக்காக முற்பட்டனர்; இந்திய சமுதாயம் பாதிக்கப்பட்டது. ஒருவன் பலமனைவியரை மணப்பது, ஒரு பெண் பல கணவர்களை மணப்பது, பிறன்மனைநோக்குதல் ஆகியவை பெருகத் தொடங்கின. ஒரு மனிதன் பல மனைவியரையும், ஒரு பெண் பல கணவரையும் மணந்தனர். தேவதாசிகள் முறையும் கர்னாடகத்தில் செயல்படுத்தப்பட்டது. இத்தேவதாசிகள் அல்லது நடனப்பெண்டிர் தேவைப்பட்டோருக்கு தங்களை அர்ப்பணித்து, ஒரு இரவுக்கு இரண்டிலிருந்து நான்கு பணம்வரை வசூலித்தனர். பொதுவாக, பல இனத்தவர்களிடையே விவாகரத்து தடை செய்யப்பட்டது. ஆனால் கள்ளர், மறவர்கள், சமுதாயத்தின் மூத்த தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்று இம்முறையைச் செயல்படுத்தினர்.

பெண்களும், ஆண்களும் தங்களது வாழ்க்கைத் துணையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. கலப்பு மணம் ஆதரிக்கப்படவில்லை. பிராமணர்கள் ஐந்து வயது முதல் ஒன்பது வயது நிரம்பிய பெண்களைப் பதினாறு

வயது முதல் அறுபது வயது வரையான ஆண்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கும் பழக்கத்தினைக் கொண்டிருந்தனர். கள்ளர் சாதியினர், ஒரு ஆணுக்கு அவனது தாய் வழி மாமன் மகளையே திருமணம் செய்வர். தவறினால், அவனது தந்தைவழி அத்தையின் மகளையே திருமணம் செய்வர். பெரும்பாலான மற்ற இனத்தவர்கள் தங்களது பெண் வயதுக்கு வந்த பின்பே திருமணம் செய்து கொடுக்கும் செயல் முறையைப் பெற்றிருந்தனர்.

திருமணச் சடங்குமுறை இனத்திற்கு இனம் வேறுபட்டது. அதே நேரத்தில் பல்வேறுபட்ட இனத்தவரின் திருமணச் சடங்குகளில் ஒருசில ஒன்றுபட்டிருந்தன. தங்களது பொருளாதார நிலைக்கேற்ப, முடிந்தளவு படோடோபத்தோடு, திருமணச் சடங்குகளை நடத்துவதில் எல்லா இனத்தவரும் ஆர்வம் காட்டினர். குறிப்பிட்ட திருமணநாளில் இசைக் கருவிகள் இயக்கப்பட்டன; முழுமூச்சுடன் மேளதாளங்கள் முழங்கின. மணமகன் மங்களநாண் அல்லது தாலி கட்டிய பின்பு உணவும், ஊர்வலமும் தொடர்வது வழக்கமாயிருந்தன.

வயதான ஆண்கள் இளம் பெண்களைத் திருமணம் செய்துகொள்ளும் வழக்கம் நடைமுறையிலிருந்ததால் இளம் பெண்கள் பலர் விதவைகளாகும் அவலநிலை ஏற்பட்டது. கணவன் இறந்தபின் விதவைகளின் கழுத்திலிருந்து தாலி அவிழ்க்கப்படும்; அவர்களின் தலைமுடி வெட்டப்படும். பெரும்பாலான இனத்தவர்கள் விதவை மறுமணத்தை ஆதரிக்கவில்லை. குடும்ப விழாக்களில் விதவைகள் அமர்வது தடுக்கப்பட்டது. அதிகாலையில் விதவைகளின் முகத்தைப் பார்ப்பது கெட்ட சகுனமாகக் கருதப்பட்டது. ஒரு பகுதி கர்னாடக சமுதாயத்தின் விதவைகளை உடன்கட்டை ஏறுமாறு கட்டாயப் படுத்தினர்.

கல்விகற்ற அறிஞர்களும் பாமர மக்களும் சகுனம் பார்ப்பதில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். நல்ல, கெட்ட சகுனங்கள் பல எண்ணிக்கையில் வரிசைப்படுத்திப் பார்க்கப்பட்டன. கடிகாரமணி ஒலித்தால், கழுதை கத்தினால், குதிரை கனைத்தால், நாய் தனது காதுகளை அசைத்தால், மணி ஓசை கேட்டால், மனிதன் தான் எடுத்துக் கொண்ட காரியம் வெற்றியடையும் என நம்பினர். ஆந்தை, வீட்டின் கூரை மீது அமர்ந்து கத்தினால் அக்குடும்பத்தில் யாரேனும் ஒருவருடைய உயிருக்கு ஆபத்து எனக் கருதப்பட்டது. பசுக்கொலை செய்தலும், அதன் ஊனை உண்ணலும் சமுதாயக் கொடுமைகளாகக் கருதப்பட்டன. தாங்கள் இழைத்த பாவங்களைப் போக்குவதற்காக மக்கள் காவிரியாற்று நீரிலும், கடலிலும் சென்று குளித்தனர். இவ்வாறு புனித நீராடுவதால் தங்களது பாவங்கள் இறைவனால் மன்னிக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை இன்றும் நம் மக்களிடையே இருந்து வருகின்றது.

சமுதாயம் பல்வேறுபட்ட இனத்தவரைக் கொண்டிருந்தது; மக்கள் பல மதக்கொள்கைகளைப் பின்பற்றி வந்தனர். இந்துமதமே செல்வாக்குப் பெற்று விளங்கியது. முகமதிய, கிறித்தவ மதங்கள் இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தன. நவாபுகளின்

ஆட்சிக்காலத்தில் கிறித்துவ சமயத்துறவிகள் தங்களது கொள்கைகளைத் தீவிரமாகத் தமிழகத்தில் பரப்பி வந்தனர். அவர்கள் பரவர்கள், பரையர்கள், கள்ளர்கள், நாடார்கள், பிராமணர்கள் மற்றும் பல இனத்தவரைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றினர்.

இந்துக்கள், உலகில் ஒரே ஒரு சமயம்தான் இருக்கவேண்டும் என்பது தவறு என்று கூறுவதோடு மட்டுமின்றி அதனைக் கண்டிக்கவும் செய்தனர். எனவே அவர்கள் முகமதியர், கிறித்தவர்களை ஆதரித்தனர். முகமதியர்களும் கம்மாளர், தொட்டியர், பள்ளர் போன்ற இந்துக்களுடன் நட்புக்கொண்டிருந்தனர். கிறித்தவர்கள், இந்துக்கள் பலரைச் சமய மாற்றத்திற்குள்ளாக்கிய பின்னும் பழைய இந்துப் பண்பாட்டுக் கூறுகளைக் கடைப்பிடிக்க ஆதரவு காட்டினர். இவையனைத்தும், கர்னாடகப் பகுதியில், பதினெட்டாம் நூற்றாண்டில், சமயப்பொறை நடைமுறையிலிருந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. நவாபின் ஆட்சிமுறையால், தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகள் பறிக்கப்பட்டாலும், அவர்தம் சமுதாய உரிமைகள் பறிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

பயிற்சி வினாக்கள்

1) கர்நாடகப் போர்களின் காரணங்களையும், விளைவுகளையும் ஆய்க.

2) கர்நாடக நவாபுகளின் கீழ் தமிழகத்தில் நிர்வாகம் எவ்வாறு செயல்படுத்தப்பட்டது என்பதனை ஆய்க.

பாடம் – 22 தமிழகத்தில் மைசூரியர்கள் – ஹைதர் அலி, திப்புசுல்தான்

1761- ஆம் ஆண்டில் பாண்டிச்சேரியின் வீழ்ச்சி, இந்தியாவில் பிரெஞ்சு, ஆங்கில வரலாற்றிலும், தென்னகத்தில் தமிழக வரலாற்றிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு நலிவுற்றது; தமிழகத்தில் முகம்மது அலி எதிர்ப்பற்ற தலைவனானான். ஆங்கிலேய—பிரெஞ்சுக்காரர்களிடையே சில சிற்றரசுகளும் இயங்கி வந்தன. பிரெஞ்சுக்காரர் பாண்டிச்சேரியை இழந்த போதிலும், ஆங்கிலேயரை எதிர்க்கத் தயங்கவில்லை. ஆனால் அலியோ ஆங்கிலேயருக்கு அடிமையானான். எச்செயலுக்கும் ஆங்கிலேயரை நம்பியிருந்தான்; அவர்களின் சொற்படி இயங்கத் தொடங்கினான். நவாப் தம் பதவியையும், நாட்டையும் பாதுகாக்க வேண்டி, அந்நியரிடம் உதவி நாடியிருந்தபோது மேல் கருநாடகப் பகுதிகளை இணைத்து முடிநாடொன்று உருவாக்கப்பட்டது. இந்தச் சாதனையைப் புரிந்தவனே, திருச்சி முற்றுகையின்போது பங்கு பெற்றுப் போராடிய ஹைதர் அலி.

இன்றைக்கு ஏறக்குறைய இரு நூற்றாண்டுகட்கு முன் கம்பெனியார் இந்நாட்டின் தலைநகராகிய ஸ்ரீரங்கப்பட்டிணத்தைத் தாக்கினார். "கீழ் நாட்டு வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ள மாவீரர்களின் சாதனையில் இதுவும் ஒன்று; இப்பகுதியில் ஆங்கிலேயர் எதிர்த்த விரோத நாடுகளில் மிகப் பலம் பொருந்தியது இதுவே" என்று லெவின் B. போரிங் கூறுகிறார். இந்நாடு ஏறக்குறைய முப்பத்தெட்டு ஆண்டுகளே நிலைத்திருந்தாலும், இக்குறுகிய காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள் பல; இதனால் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி நிலை நாட்டப்பட்டது.

ஹைதர் அலியின் சாதனை தேவனகள்ளி முற்றுகையாகும். பின் சர்வாதிகாரி நஞ்சராஜா ஆர்க்காட்டை முற்றுகையிட அனுப்பிய படையில் பெரும் பங்கேற்றார். ஆர்க்காட்டிலேற்பட்ட குழப்பநிலையைச் சாதகமாக்கிப் பெருமளவு செல்வத்தை நைஜாமின் கருவூலத்திலிருந்து கவர்ந்து வந்தார். சந்தாசாகிப்பை எதிர்த்து நடந்த போரில் மைசூர் முகம்மது அலிக்கு உதவியது. போர் வெற்றியில் முடிந்தபோதும், அலி கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. அதனால் மைசூரியர் திருச்சியை முற்றுகையிட்டனர். இச்சமயம் ஐதர் அலி மைசூரின் குதிரைப் படையைத் தலைமை தாங்கி நடத்தினார். இப்படை பலருடைய பாராட்டுக்குரிய அளவில் மும்முரமாகப் போராடியது. எனினும் முற்றுகை தோல்வியில் முடிந்தது. இதனால் மைசூரில் ஏற்பட்ட குழப்பம் ஹைதர் அலிக்குத் தகுந்த சூழலை உருவாக்கித் தந்தது. 'திருச்சிப் படையெடுப்பால் உருவாக்கப்பட்டவனே ஹைதர் அலி' என்று என்.கே. சின்கா புகழ்ந்து கூறுமளவு, சிறந்த போர் வீரனாய் இயங்கினான்.

1755இல் ஹைதர் அலி திண்டுக்கல்லின் படையதிகாரியாய் நியமிக்கப்பட்டான். அங்கிருந்த வண்ணம் தமக்கு வேண்டிய படைபலத்தைப் பெருக்கிக்கொண்டான். மைசூர்ப் படையிலிருந்து வெளியேற்றப்பட்ட படை வீரரைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டான். பிரெஞ்சுத் தளபதிகள் மூலம் தம் படைகளுக்குப் பயிற்சியளித்தான்.

மைசூருக்குத் திறை செலுத்த மறுத்த பாளையக்காரரிடமிருந்து தொகையைப் பெற்றுக் கொண்டான். மதுரை ஜமீன்தார், திருநெல்வேலி பாளையக்காரர் வேண்டுதலின் பேரில் மதுரையைத் தாக்கினான். சோழவந்தானைக் கைப்பற்றினான். ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தை யூசுப்கான் தீர்த்தான். அலி தோற்கடிக்கப்பட்டு திண்டுக்கல்லுக்கு விரட்டப்பட்டான். இதற்குப்பின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு, தம் எழுச்சிக்குகந்த சூழலைத் தோற்றுவித்தான். இச்சமயத்தில் சலபத் ஜங் வெண்கள்ளூருருகில் உள்ள கோஸ் கோட்டைத் தாக்கினான். ஹைதர் பணம் கொடுத்து அப்படையை வெற்றி கொண்டான். பஸலத் ஜங் ஹைதரை சீராவின் நவாபாக்கி, அவனுக்கு ஹைதர்அலி கான்பகதூர் என்ற பட்டத்தையும் வழங்கினான். பல பாளையங்களை முறியடித்தான். 1763- இல் பெட்னூரைத் தாக்கினான். அதனை ஹைதர் நகர் என்று அழைத்தான். மராத்தியர் பானிப்பட் போரில் ஈடுபட்டிருந்த வேளையில் ஹைதர் பெட்னூர், சூண்டா, சீராப் பகுதிகளையும், அவற்றுடன் இணைந்த பகுதிகளையும் கைப்பற்றினான்.

ஆங்கிலேய–மைசூர் தொடர்பு 1760-67: ஹைதரின் முன்னோரால் திருச்சி கைப்பற்றப் படவில்லை. அதனைக் கைப்பற்ற ஹைதர் திட்டமிட்டார். முகம்மது அலியையும், கம்பெனியையும் தம் பகைவராகக் கருதினார். எனவே மூன்றாம் கருநாடப் போரின் போது கவுண்ட் லாலிக்கு உதவியாக 4,000 மைசூர்க் குதிரைகளை அனுப்புவதாகக் கூறியிருந்தார். அதன்படி வந்த படை பாண்டிச்சேரியையடைந்து, மேஜர் மூரைத் தோற்கடித்தது. ஆங்கிலேய—பிரெஞ்சுப் போரில் ஆங்கிலேயர் தோல்வியுறுவதாயின் திருச்சி, மதுரை, திருநெல்வேலிப் பகுதிகளைக் கைப்பற்ற திட்டமிட்டார். 1760- இல் மராத்தியர் கண்டேராவ் தலைமையில் மைசூர் மீது திடீர் தாக்குதல் செய்யவே, ஹைதர் வெண்கள்ளூருக்கு விரைந்தார். தஞ்சையிலிருந்த யூசுப் கான் மைசூரை எத்தனை முறை வேண்டுமாயினும் தாக்குவதற்கு அனுமதிக்கப்பட்டார். இச்சமயத்தில் தளபதி R. ஸ்மித், திருச்சியிலிருந்த ஒரு பிரிவுப்படையுடன் புறப்பட்டு, கரூரைக் கைப்பற்றினார். திருச்சியிலிருந்த ஸ்மித் வழி மைசூரியர் ஆங்கிலேயருடன் ஓர் உடன்பாடு வைத்துக்கொள்ள விழைந்தனர். ஆனால் 1761-இல் பிரெஞ்சுக்கார தளபதி அயர் கூட்டால் தோற்கடிக்கப்பட்டனர். இது அலிக்குப் பேரிடியாயமைந்தது. பாண்டிச்சேரியும் வீழ்ந்தது. மைசூர் மன்னரோ, நவாப் கம்பெனியுடன் சேர்ந்து ஹைதரை நசுக்கத்திட்ட மிட்டார். இதனையுணர்ந்த ஹைதர் பிரெஞ்சுக்காரர் உதவியை நாடவேண்டியிருந்தது. ஹைதருடன் சேரும் நோக்குடன் சில பிரெஞ்சுத்தளபதிகள் மங்களூரையடைந்தனர். சென்னைக் கம்பெனியார் ஹைதரைப் பகைத்த வேளையில், பாம்பே கம்பெனியார் அவனுக்குப் பீரங்கிக் குண்டுகளைக் கொடுத்தனர். மாதவ ராவ் மைசூரைத் தாக்கியபோது (1764-65) ஹைதருக்குப் போர்க் கருவிகளையும், வெடிகுண்டு மருந்துகளையும் கொடுத்துதவினர். இவற்றைச் செய்யக் காரணம், ஹைதர் மிளகு வாங்கும் மொத்த உரிமையை அவர்களுக்கு வழங்கியமையே.

ஹைதரும் முகம்மது அலியும்: இருவருக்குமிடையே பெருத்த பகைமை; ஹைதர் நவயதர்களை ஆதரித்தார்; முகம்மது அலியின் தந்திரங்களைக் குறை கூறினார். இருநாட்டு எல்லைப் பிரச்சினைகளும் இருவரையும் விரோதிகளாக்கின. 1682-1730-ஆம் ஆண்டளவில் திண்டுக்கல், கரூர், கொடுமுடி, உத்தமபாளையம், பழனி, விருபாட்சி, பள்ளப்பட்டி பாளையங்கள் திருச்சிக்கு அடங்கியே இருந்தன. மீனாட்சியின் மரணத்திற்குப் பின் அவை சந்தாசாகிப் வசமாயின. சந்தா சாகிப்பின் படுகொலைக்குப்பின் அவை

முகம்மது அலி வசமாயின. 1760- இல் ஹைதர் கரூருக்காக மல்பாடியை மாற்ற நினைத்தார். ஆனால் திட்டம் ஈடேறவில்லை. ஹைதர் கைப்பற்றிய கடப்பாப் பகுதிமீது நைஜாம் உரிமை பாராட்டினார். அலியோ ஆங்கிலேயரின் கட்சிக்காரராகையால் ஹைதர் பிரெஞ்சுகளுடன் சேர்ந்து இருவருக்குமெதிராக (கம்பெனி, முகம்மது அலி) சூழ்ச்சிகள் செய்தார். இச்சமயம் அலியோ கம்பெனியாரை வேலூர் அருகில் ஒரு படையினை நிறுத்தி வைக்க அனுமதித்தார். ஹைதர் இதனைத் தமக்கு விரோதமான செயலாகக் கருதினார். ஆகவே கம்பெனி, நவாப் ஆகிய இருவரின் பகைவரையே ஹைதர் ஆதரித்தார்.

ஹைதர்–கம்பெனி நேரடிப் போட்டி: மலபார்ப் படையெடுப்பில் ஹைதர் கம்பெனி யாரின் கூட்டாரில் சில நாடுகளைத் தாக்கியதாக 1766- இல் பம்பாய் அரசு அனுப்பிய செய்தி ஜார்ஜ் கோட்டை ஆளுநருக்கு எட்டியது. பம்பாய் அரசுக்குச் சென்னையரசு மறுப்புக்கடிதம் வரைந்தது. ஆனால் ஹைதர் பற்றிய செய்திகளைச் சேகரிக்க போர்ச்சி யரை (Bourchier) அனுப்பியது. ஹைதரோ நைஜாமுடன் ஒப்பந்தப் பேச்சு நடத்திக் கொண்டிருந்தார். செய்திகளின்றி போர்ச்சியர் சென்னையடைந்தார். இவ்வேளையில் ஹைதருக்கும் நைசாமுக்கும் உறவு ஏற்படலாம் என்று கம்பெனி கருதியது. உடனே கம்பெனி நைஜாமுடன் மாறி மாறி உதவும் ஒப்பந்தம் செய்துகொள்வதாகத் தீர்மானித்தது. ஹைதர் போர்ச்சியருடன் பேச்சு வார்த்தை நடத்த இடம் ஏற்படாமை குறித்து கம்பெனிக்கு அறிவித்த போது, கம்பெனியோ தன் நோக்கத்தை வெளிப்படுத்தவில்லை. 1766-இல் பம்பாய் அரசு கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஹைதருக்குமிடையே ஏற்பட வேண்டிய உறவு முறிந்தது. (அத்துடன் தம் உரிமைகளையும் ஹைதர் வெளியிட்டார்). ஹைதருக்கும் சென்னை அரசுக்குமிடையே நல்லுறவு ஏற்படவில்லை. காரணம் சென்னை அரசு, ஹைதருக்கும் கம்பெனிக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தை நைஜாமுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துடன் ஒத்துப்போகாததால், நிராகரித்து விட்டது. மராட்டியத் தளபதி மாதவராவ் மைசூரைக் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கும் தருணத்தில், நைஜாம் தம் ஆங்கிலப் படைகளுடன் மைசூரை நோக்கி விரைந்தார். நைஜாமுடன் திடீர் உடன்பாடு செய்து கொள்ள மாபுஸ்கான் அனுப்பப்பட்டார். ஹைதர் அலியின் புகழ்ச்சிச் செயல்களிலும், சோனாபட் ராவ் (Sonapat Rao), ஷெர்ஜங் (SherJung) என்போரின் செல்வாக் கிலும் மூழ்கிப்போன நைஜாம் மைசூரை எதிர்ப்பதைக் கைவிட்டு, அதற்குதவுவதாக முன்வந்தார். நைஜாமின் இச்செயல் சென்னையரசைப் பயமுறுத்தியது.

முதல் ஆங்கிலோ–மைசூர்ப் போர் 1767-1769: 1767- இல் முன் செயல்களின் விளைவால் ஹைதருக்கும் முகம்மது அலிக்குமிடையே போர் ஏற்பட்டது. "மைசூரியர் போதிய அளவு படை பலத்தைப் பெருக்குமளவு நைஜாம் கம்பெனியாருக்குத் தக்க வண்ணம் பேசி கம்பெனியை வசப்படத்தினார். மைசூரின் 45,860 குதிரைகளும், 28,000 காலாட்களும், 109 பீரங்கிகளும் இணைந்த படை தாழ் நிலங்களில் புகுந்து, தளபதி ஜோசப் ஸிமித்தைத் தாக்கியது. ஸ்மித் எல்லைப் படைகளுக்குத் தலைமை தாங்கியிருந்தார். கம்பெனியின் பொருட்கள் வரும் வழியைத் தாக்கித் தடுத்து, ஹைதர் பயமுறுத்தினார். நைஜாமின் தூண்டுதலால் இரு படைகளும் இணைந்து ஸ்மித்தை சங்கம (Changama)க் கோட்டையருகில் தாக்கின. இங்கு மிகுந்த இழப்புடன் அவர்கள் விரட்டப்பட்டனர்.

ஹைதரும் நைஜாமும் போரினை ஆர்க்காட் நவாபின் எல்லைக்குக் கொண்டு சென்றனர். காவேரிப்பட்டினத்தை இருவரும் இணைந்த படைதாக்குவதாக ஸ்மித் கேள்விப்பட்டார். இவ்வேளையில் திருச்சியிலிருந்த தளபதி உட் (Colonel Wood) திருவண்ணாமலைக்குப் புறப்பட்டார். நடக்கவிருக்கும் போரில் வேண்டிய அளவு படைபொருள் உதவி செய்வதாக ஆர்க்காட்நவாப் வாக்கிறுத்தார். உட் படைக்குப் பொருளும், ஆயுதங்களும் தர வேண்டியும், இரு படைகளும் இணையுமாறும், ஸ்மித் உடனே திருவண்ணாமலை நோக்கிப் புறப்பட்டார். ஹைதரின் படையில் 210 ஐரோப்பியரும், 800 சிறந்த மொகலாயக் குதிரைகளும், 12,000 மற்றுக் குதிரைகளும், 5,000 எறிகுண்டு வீச்சாளரும், 8,000 ஐரோப்பியத் துப்பாக்கியாளரும், 1,000 கத்திகளுடன் கூடிய துப்பாக்கி வீரரும், 4,000 பழங்கால துப்பாக்கி வீரரும் இருந்தனர். இவற்றுடன் ஹைதர் திருவண்ணாமலையைத் தாக்கினார். இவற்றுள் அவருடைய 18,000 காலாட் படையினருள், 12,000 பேர் மிகச் சிறந்தோர். அத்துடன் 49 விதவிதமான பீரங்கிகளும் இருந்தன. நைஜாமிடம் 30,000 குதிரை வீரரும் 10,000 காலாட் படையினரும் 60 சிதறிய பீரங்கிகளும் இருந்தன. அதே வேளையில் கம்பெனியிடம் 600 ஐரோப்பியரும், 5 பட்டாலியன் படையினருமிருந்தனர். ஹைதரும், நைஜாமும் திருவண்ணாமலையிலிருந்து ஏறக்குறைய 6 மைல் தொலைவில் தளவாடமிட்டிருந்தனர். 1767- இல் நடைபெற்ற ஒரு பெரும் போரில் இருவரும் தோல்வியைத் தழுவினர். ஹைதரின் படைகள் நசுக்கப்பட்ட போதிலும், சிதறிக் கிடந்த படைகளைச் சேர்த்து, திருப்பத்தூரையும், வாணியம்பாடியையும் கைப்பற்றினர். பின் பாரமகாலின் சிறந்த ஆம்பூர்க் கோட்டையை முற்றுகையிட்டார். ஸ்மித் தலைமையில் வேலூரிலிருந்து வந்த படையுடன் தளபதி கால்வர்ட் (Calvert) ஹைதர் படையின் முன்னேற்றத்தைத் தடுத்தார். தாயகத்திலிருந்து புதிதாக அனுப்பப்பட்ட படை, சென்னையரசின் ஆணை மீது, ஹைதரை வாணியம் பாடியில் மோதத் தொடங்கியது. ஹைதரின் குதிரைப் படை ஒழுங்காய் செயல்பட்டிருந்தால் கம்பெனியின் படைகள் சிதறடிக்கப்பட்டிருக்கும். ஆனால் அப்போரின் விளைவு ஹைதருக்குத் தீமை விளைவிப்பதாக அமைந்தது. ஹைதர் உடனே சிங்காரப் பேட்டையைத் தாக்கி, பேரிழப்பு தமக்கு ஏற்படுத்திக் கொண்டார். அவருடைய குதிரையும் சுடப்பட்டது. திருப்பத்தூரைக் கைப்பற்றிய பின் கம்பெனிப் படை காவேரிப்பாக்கமடைந்தது. ஹைதர் சிங்காரப் பேட்டையில் தடை செய்யப்பட்டார்.

தளபதி பீச் (Colonel Peach) நைஜாமின் எல்லைகளைத் தாக்குவதற்கு ஆயத்த மாகவே, நைஜாம் ஹைதர் அலியிடமிருந்து விலகிக் கொள்வதாகக் கூறினார். 1768இல் சில ரகசிய உடன்பாடுகள் செய்து கொண்டு நைஜாம் தம் நாடு நோக்கிப் புறப்பட்டார். தம் பீரங்கிப்படை முன் செல்ல தம் மகன் திப்பு அதனைப் பின் தொடர கணவாய்களைக் கடந்து கடற்பிரதேசத்தில் தம் நாடுகளைக் காப்பாற்ற மேற்கு நோக்கிப் புறப்பட்டார்.

ஹைதர் கீழ்ப்பகுதிகளிலிருந்து வெளியேறவே, அவரால் கைப்பற்றப்பட்டிருந்த பகுதி களைக் கைப்பற்ற கம்பெனி தீர்மானித்தது. பாரமகால் முதல் திண்டுக்கல் வரையுள்ள எல்லைகள் அவர்கள் திட்டத்தின் கீழ் வந்தன. தளபதி உட் கோட்டைகள் பலவற்றைக் கைப்பற்றினார். மைசூரியரின் வல்லமைவாய்ந்த தளவாடமாகிய கிருஷ்ணகிரியைக் கைப்பற்றிய பின் மைசூர் பீடபூமிக்குப் புறப்பட்டு முல்பகல், கோலார், கோசூர் பகுதிகளைக் கைப்பற்றினார். தர்மபுரியைக் கைப்பற்றி உட் சேலம், ஆத்தூர் பகுதிகளைக்

கடந்தார். நாமக்கல், சத்தியமங்கலத்துடன், கோயம்புத்தூர் எவ்வித எதிர்ப்புமின்றி சரணடைந்தது. திண்டுக்கல்லின் வீழ்ச்சியுடன் மைசூரியப் படை தமிழகத்திலிருந்து மொத்தமாக வெளியேற்றப்பட்டது.

மலபார்ப் பகுதியிலிருந்து ஹைதர் வருவதற்குள் வெண்கள்ளூர் வழி மைசூரைத் தாக்கக் கம்பெனி திட்டமிட்டது. செயல்படுத்தத் தாமதப்படவே, ஹைதர் வெண்கள்ளூரை விரைவில் வந்தடைந்தார். முராரிராவ் தலைமையில் ஆங்கிலேயருக்குதவ அனுப்பப்பட்ட மராத்தியப் படையை ஹைதர் உடனே தாக்கினார். ஆனால் மராத்தியத் தளபதி ஹைதரின் குதிரைப் படையை வெற்றி கொண்டார். தோல்வியைத் தழுவிய ஹைதர் எச்சரிக்கையுடன் தம் குடும்பத்தை சாவனதுர்குக்கு அனுப்பி வைத்தார்.

கோஸ்கோட்டை விட்டுத் தளபதி உட், புடிக்கோட்டிலிருந்த தளபதி ஸ்மித் படையுடன் சேரப்புறப்பட்டார். அலி ரேஸாகானிடமிருந்த படையில் சில பகுதிகளைப் பெற்றுக்கொண்டு ஹைதர் கோலார் நோக்கிப் புறப்பட்டார். கோலாரில் ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்த கம்பெனிப் படை ஹைதரைத் தாக்கத் தயாராயிருந்தது. குரம் கொண்டா வரையிலும் துரத்தப்பட்ட ஹைதர், தளபதி ஸ்மித்தைத் தன் பக்கமிழுக்க முயற்சி செய்தார். பாரமகாலையும், பத்து லட்சம் பணத்தையும் கம்பெனிக்குத் தருவதாகக் கூறினான். ஆனால் அவர் முகம்மது அலிக்கு எவ்விதச் சலுகையும் காட்டுவதாக இல்லை. கம்பெனியின் பேராசை காரணமாக இவ்வுடன்பாட்டுப் பேச்சுக்கள் முறிந்தன.

தளபதி ஸ்மித் இல்லாத வேளையில் கம்பெனியினர் முல்பகலில் நிறுத்தியிருந்த படைப்பிரிவை வெளியேற்றினர். இதனைக் கண்ணுற்ற ஹைதர் உடனே குரம்கொண்டாவிலிருந்து புறப்பட்டு முல்பகலைக் கைப்பற்றினார். ஹைதர் அங்கு வருவது தெரியாத தளபதி உட் அதனைக் கைப்பற்றப் புறப்பட்டார். அங்கு நடைபெற்ற போரில் ஹைதர் திறமையுடன் போராடியும், வெற்றி பெறவில்லை.

தளபதி ஸமித் சென்னைக்கு வரும்படி ஆணையிடப்பட்டார். உடனே ஹைதர் கோசூரை முற்றுகையிட்டார். தளபதி உட் தலைமையிலான கம்பெனிப் படையை வெற்றி கொண்ட அவர், உட் படையிடமிருந்து கவர்ந்த படைக் கருவிகளையும், பீரங்கிகளையும் வெண்கள்ளூருக்கு இழுத்துச் சென்றார். அழிவிலிருந்துஉட்டைக் காப்பாற்ற வெங்கட கிரியில் இருந்த பிட்ஸ் ஜெரால்ட் புறப்பட்டு வந்தார். ஹைதரோ, பாஸல் உல்லாக்கானை ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு அனுப்பிப் புதுப்படை சேகரிக்கத் தொடங்கினார். அப்படையுடன் பாஸல் கான் கஜல்கட்டி கணவாய்க்கு வந்த எதிரிகளைத் தாக்க ஆணையிட்டார்.

இச்சமயத்தில் ஹைதர் கோவையைக் கைப்பற்றி, கரூரைத் தாக்கி ஈரோட்டுக்கு விரைந்தார். வழியில் தளபதி நிக்ஸனை முறியடித்தார். ஈரோடு ஹைதர் வசமாயிற்று. மேற்குத் தொடர்ச்சி மலைக்குத் தென்பாலுள்ள பல பகுதிகளை ஹைதர் கைப்பற்றிக் கொண்டார். அங்கிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்டார். இச்சமயத்தில் ஹைதர் நல்லுறவு வார்த்தைகளுக்கு இணங்கினார். ஆங்கிலேயருடன் தம் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்த விழைந்த ஹைதர் முகம்மது அலியைச் சற்றும்

மதிக்கவில்லை. அதே வேளையில் அலியின் செல்வாக்கு சென்னையில் அதிகமிருந்ததால் பேச்சு வார்த்தை முறிந்தது; பகைமை மீண்டும் மூண்டது. ஹைதர் காலதாமதமின்றி பறங்கி மலைக்கு விரைந்தார். அங்கு தாம் விரும்பியபடி ஆங்கிலேயருக்கு உடன்படிக்கைக்குரிய நிபந்த னைகளை விதித்தார். ஹைதருக்கும் டுபிரி (Dupre)க்குமி டையே நிகழ்ந்த பேச்சுவார்த்தை 1769-இல் ஒரு ஒப்பந்தமாக மிளிர்ந்தது. இரு தரப்பினரும் மாறி மாறிப் பிடித்த வீரர்களையும், தலங்களையும் விட்டுக் கொடுப்பதாய் முடிவாயிற்று.

1769- ஆம் ஆண்டு சென்னை ஒப்பந்தம் இருவருக்குமிடையே தற்காலிக அமைதியை ஏற்படுத்தியது. ஐதராபாத் நைஜாமின் சகோதரரான பஸலத் ஜங் அவருடைய மரணகாலம் வரை குண்டூர் சிர்க்கார் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்; மரணத்திற்குப்பின் அது கம்பெனியைச் சேரும். இதுகேட்டு கோபங்கொண்டேழுந்த பஸலத் ஜங், தம் படையில் பல பிரெஞ்சுக்களைச் சேர்த்துக் கொண்டார். கம்பெனியின் கைப்பொம்மையாகி சிர்க்காரைக் கம்பெனியிடம் ஒப்படைக்க பஸலத்ஜங், முடிவெடுத்த தால் சீற்றமுற்ற ஹைதர் அவன் நாட்டை 1779- இல் தாக்கினார். உடனே சிர்கார் முகம்மது அலிக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஹைதரின் ஆக்கிரமிப்பிலிருந்து அதனைக் காப்பாற்ற கம்பெனிப் படையொன்று அங்கு நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் ஹைதரும், நைஜாமும் கம்பெனியார் மீது சீற்றமுற்றனர்.

இரண்டாம் ஆங்கிலோ – மைசூர்ப் போர்: இச்சமயத்தில் அரசியலில் திடீர் திருப்பம் ஏற்பட்டது. மராத்தியரும் நைஜாமும் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டனர். அத்திட்டத்தில் ஹைதரையும் சேர்த்துக்கொள்ள, பூனாவிலிருந்து கணேஷ்ராவ் ஹைதர் அலைக்கு வந்தார். அவர்களுக்கிடையே நிகழ்ந்த முடிவுகளின்படிப் பார்ப்பின் ஹைதர் எந்த அளவுக்கு நடுநிலையாளர் என்பதும், ஆர்க்காட் நவாப் விடாப்பிடியாளர் என்பதும், கம்பெனி எத்துணை ஆற்றல் அற்றது என்பதும் விளங்கும். மராத்தியரும், நைஜாமும், ஹைதரும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் மாறி மாறி உதவும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஹைதர் துங்கபத்திரா நதிக்கு வடபாலுள்ள பகுதிகளுக்கு நாயகன் என்றும், அவர் வருடாவருடம் 11 வட்சம் ரூபாய் திறையாகச் செலுத்தவேண்டுமென்றும் முடிவாயிற்று. அதுபடி மராத்தியர் பேரார், மத்திய, வடஇந்தியாவைத் தாக்குவதாயும், நைஜாம் சர்க்கார்ப் பகுதிகளை அடக்குவதாயும், ஹைதர் சென்னையையும், தென்னகத்தையும் முற்றுகையிடுவதாயும் முடிவாயிற்று.

கம்பெனிக்கும் மராத்தியருக்குமிடையே ஏற்பட்ட வேறுபாட்டைச் சாதகமாகக் கொண்டு, ஹைதர் தென்னிந்தியா மீது பாய முடிவு கட்டினார். இச்சமயம் பிரெஞ்சு உதவியும் கைக்கு வரும் என்றும் நினைத்தார். இங்கிலாந்திலிருந்து ஒரு பேரரசுப்படை பாண்டிச்சேரியை வந்தடைந்ததை அறிந்திருந்தும், ஹைதர் அலி அதனுடன் போராடத் திட்டமிட்டார். கருநாடகமே ஹைதரின் முக்கியமான நோக்கமாயிருந்தது. 1780- இல் செங்கம் கணவாயைக் கடந்து, சென்னையரசுக்குட்பட்ட பகுதியைத் தாக்கினார். புலிகட் (பழவேற்காடு) ஏரியிலிருந்து பாண்டிச்சேரி வரையுள்ள பகுதிகளை நாசம் செய்வதே ஹைதரின் முக்கிய நோக்கம்.

சென்னைக்கு, அரசு குண்டூர்ப் பிரிவுப் படைத் தளபதியாகிய கார்ப்பரை (Colonel Harper) தென்னகத்துக்கு ஏவியது. பாண்டிச்சேரியிலிருந்த கர்னல் பிரெத்வெயிட் (Colonel Braithwaite) செங்கல்பட்டு வழி சென்னைக்கு வர ஆணையிட்டார். பாரம காலுக்குச் செல்லும் கணவாய் வழியை அடைக்க திருச்சியிலிருந்த படை ஏவப்பட்டது. முகம்மது அலி மீது நம்பிக்கை கொள்ளாத அரசு, உடையார் பாளையம், செஞ்சி, கர்நாட்டிகார் வந்தவாசியைக் கைப்பற்ற மற்றுமொரு படைப்பிரிவை அனுப்பியது. கடினப் போருக்குப் பின் கர்னல் பிளின்ட் (Flint) வந்தவாசியைக் கைப்பற்றினார்.

ஹைதர் அலியின் மகனாகிய காரிம் (Karim) தலைமையில் மைசூர்ப்படை பிரிவொன்று, பாண்டிச்சேரிக்குத் தெற்கிலுள்ள பறங்கிப்பேட்டையைக் கைப்பற்ற அனுப்பப்பட்டது. அவர் ஆர்க்காட்டை முற்றுகையிடப் புறப்பட்டார். பக்ஸார்ப் போரில் புகழ் நாட்டி ஹெக்டர் மன்ரோ (Hector Monroe) கர்நாடகத்துக்கு வந்து, ஹைதரின் வழியை மறித்தார். அவருடன் சேர வந்த படைப்பிரிவு புள்ளலூரில் தோற்வியுற்றது. அவர் சென்னைக்கு விரைந்து வங்கத்திலிருந்து உதவி நாடினார். ஹைதர் காஞ்சிபுரம் அடைந்து மன்ரோவின் வருகைக்காகக் காத்திருந்தார். சென்னையின் தற்காலிக ஆளுநராயிருந்த வைட்டிகில்லைப் (Whitehill) பதவி நீக்கம் செய்யுமளவு பேரதிகாரத்துடன் சர் அயர்கூட் கருநாடகம் அடைந்தார். படை நடைமுறைகளையும், பணப்பிரச்சினை களையும் அவரே தம் கையில் வைத்துக் கொண்டார். சென்னைப் படையின் உதவியுடன் கூட் ஹைதரைப் பலவிடங்களில் வெற்றி கொண்டார். ஆனால் ஹைதரைக் கருநாடகத் திலிருந்து மொத்தமாக விரட்ட முடியவில்லை. வந்தவாசிக் கோட்டையை எப்படி யாயினும் கைப்பற்ற வேண்டுமென்று, ஹைதர் தம் சிறந்த பீரங்கிப் படையுடன் புறப்பட்டார். ஹைதரின் நாட்டெல்லைகளைத் தாக்காத கூட் ஹைதரைப் பின் தொடர்ந்து வந்தார். மைசூரைத் தாக்கியிருந்தால் ஹைதர் முன் தோல்விகளிலிருந்து எழுச்சி பெற்றிருக்க இயலாது. ஹைதர் 1782 வரை கருநாடகத்திலேயே இயங்கி வந்தார்.

பின் கூட் செங்கல்பட்டு, வந்தவாசி, பறங்கிப் பேட்டையில் வெற்றி கொண்டார். இதற்குப் பின்னும் ஹைதர் அலி வேலூர் முற்றுகையைத் தொடங்கினார். கூட் வேலூர்ப் பாதுகாப்பை விடுத்து, ஷோலிங்கரில் ஹைதரைத் தோற்கடித்தார். நாகூரை ஒப்படைப்ப தாகக் கூறி, ஹைதர் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை நாகப்பட்டின ஆளுநருடன் செய்து கொண்டார். தஞ்சையிலிருந்த கர்னல் பிரெய்த்வைய்ட் ஹைதரின் திட்டத்தை முறியடித்தார். நாகப்பட்டினத்தைத் திடீர் தாக்குதல் மூலம் கைப்பற்றினார். 1782- இல் திப்பு பிரெத்வைட்டைத் தாக்கிக் கைது செய்தார். தொடர்ந்து நடைபெற்ற போரில் கம்பெனிப்படை சிதறடிக்கப்பட்டது.

ஆங்கிலேயரை எதிர்த்து நடக்கும் இப்போரில் தீவிர பங்கு கொள்ளாது நைஜாம் அலி ஒதுங்கியிருந்தார். மராத்தியரோ தோல்வியைத் தழுவும் நிலை. ஆகவே அவர்கள் அமைதி ஒப்பந்தத்திற்கு ஆளாயினர். 1782- இல் சால்பாய் (Salbai) ஒப்பந்தம் கையெழுத் தாயிற்று. மைசூரியர் நாட்டு நேசப்படையினரால் கைவிடப்பட்டும், பிரெஞ்சுக்காரரின் உதவியை இழந்தும், மேற்குப் பகுதிகளில் கலகம் ஏற்பட்டும், இவற்றைப் பொருட்படுத்தாது ஹைதர் போராடத் துணிந்தார். தென்னிந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்டியடிக்க அவரால் இயலாது போயினும், அவ்வரசின் கீழிருந்த முக்கிய கோட்டைகளைக்

கைப்பற்றினார். தொடர்ந்து போராடி, எதிரிகளை வெற்றி கொண்டார். இச்சமயத்தில் பிரெஞ்சுப்படை பறங்கிப்பேட்டைக்கு வந்ததாகச் செய்தி வந்தது. வரும் வழியில் ஆங்கிலேய வீரர்கள் இருமுறை பிரெஞ்சுச் செய்தியாளரை வழி மறித்தனர். பிரெஞ்சுப் படை கடலூரையும் பெர்மாக் கோயிலையும் கைப்பற்றியது. இதனையறிந்த ஹைதர் வந்தவாசி நோக்கிப் புறப்பட்டார். இச்சமயம் பகைவர் படை பாண்டிச்சேரியிலிருந்தது. நேரே மோத இயலாத நிலையில் கூட் ஆரணி நோக்கிப் புறப்பட்டார். ஆரணியைப் பலப்படுத்த திப்பு அனுப்பப்பட்டார். கூட் அவ்விடத்தில் வந்திறங்கும் தருணத்தில் திப்புவும் கவுண்ட் லாலியும் அவரைத் தாக்கினர். இதுவே கூட்டும், ஹைதரும் புரிந்த இறுதிப் போராகும். ஓராண்டுக்குள் இருவரும் இறந்தனர்.

1782- இல் ஹைதர் இறந்த பின் அவர் மகன் திப்புசுல்தான் போரை நடத்தினான். திப்புவுக்கும் பம்பாய் அரசுக்கும் மோதல் ஏற்பட்டது. தளபதி மாத்தேயூ போரில் கைது செய்யப்பட்டு திருவரங்கப்பட்டனத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். திப்பு மலபாரில் தீவிரமாக ஈடுபட்டிருந்த வேளையில் கர்னல் லேம்ப் (Coronal Lamp) கரூர் திண்டுக்கல்லையும், கர்னல் புல்லார்ட்டன் தர்மபுரத்தையும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பாலக்காட்டையும் 1783- இல் கைப்பற்றினார். 1784- இல் மங்களூர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. ஆனால் திப்பு அவற்றைப் பொருட்படுத்தவில்லை. 1786- இல் மராத்தியரும், நைஜாமும் திப்புவின் எல்லைகளைத் தாக்கினர். மராத்தியருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்.

மூன்றாம் மைசூர் போர்: சுதேசி நாடுகளுடன் காரன்வாலிஸ் பிரபு துணைப்படைத் திட்ட ஒப்பந்தம் செய்து கொள்வதை ஏற்காத திப்பு 1789- இல் திருவாங்கூரைத் தாக்கினான். 1790- இல் நைஜாமுடன் உறவு கொண்டார். இருப்பினும் நடைமுறையில் திப்பு எப்போதும் போர் புரிந்தே வந்தார்.

இதனை எற்க மறுத்த கம்பெனி 1789- இல் போர்ப் பிரகடனம் செய்தது. திப்புவுக்கு எதிராகக் கம்பெனி நைஜாமுடனும், மராத்தியருடனும் தற்காப்பு தாக்குதல் ஒப்பந்தம் செய்து கொண்டது. 1790- இல் தளபதி மீடோ (General Meadows) கோவையைக் கைப்ற்றினார். திண்டுக்கல்லும், பாலக்காடும் கைக்கு வந்தன. சத்தியமங்கலத்தில் கர்னல் ப்ளாயிட்டை திப்பு தாக்கினான். மைசூர் குதிரைப் படையின் தாக்குதலைச் சமாளிக்க இயலாத பிளாயிட் வெள்ளாடிக்கு தப்பியோடினார். திப்பு பவானி வழி நாடு திரும்பினார்; கம்பெனியார் கோவையடைந்தனர். உடனே தென்னகம் நோக்கிப் பாய்ந்து ஈரோடு, தாராபுரம் பகுதிகளைக் கைப்பற்றினான்; பாரமகால் ஆங்கிலேயரால் தாக்கப்பட்டது கேட்டு, அங்கு விரைந்தார். இவ்வேளையில் கர்னல் மாக்ஸ்வெல் கிருஷ்ணகிரியைத் தாக்கிவிட்டு, காவேரிப்பட்டினம் வந்தடைந்தார். மீடோஸ் தோப்பூர்க் கணவாயை அடைந்தார்; ஆனால் திப்பு அவ்வழியை மீட்டுக் கொண்டார். மைசூர்ப்படை திருச்சியைத் தாக்கியது; 1790- இல் கொடுங்கோளூரையும் 1791- இல் திருவண்ணாமலையையும் கைப்பற்றினான்.

காரன்வாலிஸ் இப்போது சென்னையையடைந்து, போர் நடவடிக்கைகளைத் தாமே நடத்தத் தொடங்கினார். 1791-இல் வேலூர், ஆம்பூர் வழி வெண்களூருக்கு படையெடுத்துச் சென்றார். வெண்களூரைக் காப்பாற்ற பெரு முயற்சி செய்தும் திப்புவால்

இயலவில்லை; தோற்கடிக்கப்பட்டு திப்பு தம் தலைநகரைக் காப்பாற்றத் துணிந்தார். காரன்வாலிஸ் தேவனகள்ளி தாண்டி திருவரங்கப்பட்டணத்தைத் தாக்கினார். இச்சமயத்தில் ஆங்கிலேயருக்குதவ நைஜாமின் படை வருவதையறிந்தார். நகர் பெரும் குண்டு தாக்குதலுக்குள்ளாயிற்று; பயந்த மக்கள் திருவரங்கத் தீவுக்குச் சென்றனர். அரிகோராவில் திப்பு தோற்றார்; காரன்வாலிஸ் பட்டணத் தாக்குதலைத் தொடர்ந்தார். ஆனால் திப்பு கோவையைத் தாக்கிக் கைப்பற்றினார். பட்டணம் தொடர்ந்து தாக்கப்பட்டதால், வேறுவழியின்றி திப்பு அமைதி உடன்பாட்டுக்கு இணங்கினார். 1792-இல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த திருவரங்கப்பட்டண ஒப்பந்தப்படி, திப்பு தம் நாட்டின் பாதியை கம்பெனி, நைஜாம், மராத்தியருக்குத் தரவேண்டியதாயிற்று; போர் நட்ட ஈடாக 3 கோடி ரூபாய் தர வேண்டும். அது தரும் வரை தம் இரு புதல்வரையும் அடமானம் வைக்க வேண்டியதாயிற்று; கம்பெனி மலபார், திண்டுக்கல், பாரமகால் பகுதிகளைப் பெற்றது. 1794- இல் பணத்தைக் கட்டி, தம் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டார்.

நான்காம் ஆங்கிலோ – மைசூர்ப் போர்

கம்பெனியின் 'தலையீடில்லாக்' கொள்கையைப் பயன்படுத்தி திப்பு தாமிழந்த பகுதிகளை மீட்டுக் கொண்டார். படைபலத்தைப் பெருக்கி, பேரரசுக் கருவூலத்தைக் கொள்ளையிட்டார்; மக்களிடமிருந்து அதிக அளவு வரியை வசூலித்தார்; இறந்துபோன மைசூர் மன்னரின் இளவலை ஏற்றுக் கொள்ள மறுத்தார்; தம் நாட்டைப் பாதுகாக்கப் படைகளை ஆங்காங்கு நிறுத்தினார்; அந்நியரின் உதவியை நாடினார்; தேசிய நாடுகளுடன் படையுறவு கொண்டார். பின்னர் ஆங்கிலேயருடன் போராடத் துணிந்தார். 1797- இல் மொரீஷியஸ் சர்தார்களுக்குக் கடிதம் வரைந்தார். கடிதம் மூலம் தாம் நடத்தப்போகும் போரில் உதவிகோரியிருந்தார். திருவரங்கப்பட்டணத்தில் பிரெஞ்சுச் சுதந்திரச் சின்னமாக மரம் நடப்பட்டது. பிரெஞ்சுக் கொடி பறக்கவிடப்பட்டது; 1798-இல் மொரீஷியஸ் வழி தம் தூதரைப் பிரான்சுக்கு அனுப்பினார். அங்கிருந்து படையுதவி பெற்றார். பாரசீகம், அரேபியாவுடன் கடித உறவு கொண்டார். மேலும் அவர்களின் படை, பொருள், கருவியுதவியும் பெற்றார். 1799- இல் ஜனவரித் திங்கள் கான்ஸ்டான்டிநோபிள் சுல்தான் வரைந்தகடிதத்தில் பிரெஞ்சுக்காரர்களுடனுள்ள உறவை முறித்துக் கொள்ள எச்சரித்திருந்தார். ஏனெனில் சலீமின் கருத்துப்படி பிரெஞ்சுக்காரர்கள் இஸ்லாத்திற்கு விரோதிகள் என்பதே. நெப்போலியனுடன் இடைவிடா கடிதத் தொடர்பை திப்பு கொண்டிருந்தான். நேப்போலியனை இந்தியா நோக்கிப் படையெடுக்கச் செய்ததில் திப்புவுக்கு அதிக பங்குண்டு. நைல் நதிக்கரை வரை வந்த நெப்போலியன் தோல்வியுற்று திரும்பினான். இந்தியாவிலிருந்து எப்படியாவது ஆங்கிலேயரை வெளியேற்ற ஒரு பெரும் ஆங்கிலேய எதிர்ப்புக் கூட்டணி ஏற்படுத்த முயன்றார். பேராதிக்கம் கொண்ட ஆங்கிலேயரால், அதிலும் குறிப்பாக வெல்லெஸ்லியால் இவற்றை ஒப்புக் கொள்ள இயலவில்லை. வெல்லெஸ்லி எப்படியாவது ஆங்கிலேய எதிர்ப்புக் கூட்டணித் தோற்றத்தைத் தடுக்கவே பாடுபட்டார். 1798- ஆம் ஆண்டு இறுதி நாள் வெல்லெஸ்லி சென்னை வந்தடைந்தார். இந்த ஆண்டு சற்று முன்னரே நைஜாமுடன் துணைப்படைத் திட்ட ஒப்பந்தம் செய்து கொண்டார். இதன் உள் நோக்கம் பிரெஞ்சுக்காரரை வெளியேற்றுவதேயாகும். கிளைவின் உதவியுடன் வெல்லெஸ்லி திப்பு மீது 1799- ஆம் ஆண்டு போர்ப் பிரகடனம் செய்தார்.

கம்பெனி மைசூரை மேற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் தாக்கியது. இறுதியில் திப்பு கொல்லப்பட்டார். மைசூர் பழைய மன்னர் வசம் ஒப்படைக்கப்பட்டது. தளபதி ஸ்டூவர்ட் தலைமையிலான பம்பாய்ப் படை திப்புவைக் கூர்கிலிருந்து விரட்டியது. சென்னைப்படை திப்புவை மலவள்ளியில் வெற்றி கொண்டது. ஹாரிஸ் காவிரியைக் கடந்து தலைநகர் நோக்கிப் புறப்பட்டார். தளபதி தாவீத் பர்ட் திருவரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டான். தொடர்ந்த குண்டு வீச்சால் திப்பு அதிர்ந்து போனார். போரினிடையே அவரை ஒரு வீரன் சுட்டான். திட்டமிட்டபடி மிகக் குறுகிய கால கட்டத்தில் மைசூர் சரணடைந்தது. திப்புவின் நாடு பிற்பாடு கம்பெனி, நைஜாம், நவாப் ஆகியோரால் பங்கு போடப்பட்டது. திப்புவின் சிப்பாய்கள் பலர் உயிரிழந்தனர்; பலர் சிறையடைக்கப்பட்டனர்; திப்புவின் குடும்பம் மொத்தமாகக் கைது செய்யப்பட்டது.

பயிற்சி வினாக்கள்

1) ஆங்கிலேயரின் அரசியல் தந்திரத்தின் அம்சங்களை விளக்குக.

2) ஆங்கிலோ—மைசூர்ப் போரின் விளைவு யாது?

3) தமிழக வரலாற்றில் மைசூரியர் பங்கு யாது?

பாடம் – 23 தமிழகத்தில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசுத் தந்திரம்

தஞ்சை, கொங்கு, ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி கைப்பற்றப்படல் – ஆளுநர் எல்கு ஏல் முதல் சென்னை ஆளுநர்கள்

அரசுத் தந்திரம் என்பது உலக நாடுகளுக்கிடையே ஏற்படும் வளர்ச்சியுறும் தனிப் பட்ட, இரகசியமான உடன்பாடுகள் மற்றும் இதர ஏற்பாடுகளைக் குறிக்கும் சொல்லாகும். அரசுத்தந்திரத்தைக் குறிக்கும் "டிப்ளமஸி (Diplomacy) என்ற ஆங்கிலச்சொல் பழங்கால கிரேக்கச் சொல்லான டிப்ளமா (Diploma) என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகும். இக்கிரேக்க வார்த்தைக்கு சலுகைகளைக் குறிக்கின்ற சில சட்ட திட்ட அம்சங்களின் தொகுப்பு என அம்மொழியில் பொருள்படும். இதனை பிரஞ்சு மொழியில் "டிப்ளமாடிக்யூ" (Diplomatique) என்ற சொல்லாலும், ஆங்கிலத்தில் "டிப்ளமாடிக்ஸ்" (Diplomatics) என்ற சொல்லாலும் குறிப்பர். இவையனைத்தும் ஒரே பொருளைக் குறிக்கின்ற பன்மொழிச் சொற்களாகும். 1796-ஆம் ஆண்டு முதன்முதலாக "பிரான்சு நாட்டின் இரட்டை அரசுத் தந்திரம்" என எட்மண்ட்பர்க் இலக்கியத்தில் குறிப்பிட்டார். இந்திய தத்துவப்படி, ஆங்கில அரசத் தந்திரம் என்பது, ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிபக் கம்பெனியின் அதிகாரிகளும் பணியாளர்களும் வாணிகக் கழகத்தை ஒரு ஆட்சியாளர் கழகமாக மாற்றுவதற்கு எடுத்துக்கொண்ட பல்வேறு முயற்சிகளையும், நடைமுறைப் படுத்திய பல கொள்கைகளையும் குறிப்பதாகும். குறிப்பாகச் சொன்னால், இந்தியப் பகுதிகள் மீது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு அவர்கள் பயன்படுத்திய ஆயுதமே அரசுத்தந்திரக் கொள்கையாகும். துவக்கத்தில் தமிழக வாணிப மையங்களனைத்தையும் தம் வசப்படுத்திய ஆங்கிலேயர்கள் சிறிது சிறிதாக அக்கால அரசியலில் செல்வாக்குப் பெறத் தொடங்கினர். அரசியலில் செல்வாக்குப் பெற்றபின் தேசிய, சுதேசி அரசுகளின் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டனர். இவ்வாதிக்க வளர்ச்சி ஆங்கிலப் பணியாளர்களின் வீரச் செயல்களாலும், இராணுவத் தன்னிறைவினாலும் சமயோசித புத்தியாலுமே பெறப்பட்டதாகும். தேசிய அரசுகளின் ரகசியத் தலைவர்கள், படைத் தளபதிகள், புரட்சி மனப்பான்மையிலுள்ள முக்கிய நபர்கள் ஆகியோரைத் தமது அரசத் தந்திரத்தால் ஆங்கிலேயர்கள் தம் பக்கம் சேர்த்து பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். தஞ்சையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு தங்களது ஆதிக்கத்தை விரிவு படுத்தினர். ஆங்கிலேயர்கள், சந்தாசாகிப்புக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமெதிராக வாலாஜா முகமது அலிக்கு ஆதரவு தெரிவித்ததோடு கடன் பட்ட நவாப் முகமது அலியின் நண்பராகவும், தலைவராகவுமிருந்தனர். கர்னாடகப் போர்கள் முடிந்ததும் நவாப்பின் பகுதிகளனைத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டனர். அமைதி உடன்பாடு ஏற்படுத்தப்பட்டு அரசரை உருவாக்கும் சிறப்புப் பெற்றனர். மைசூருடன் சில போர்களைத் தொடுத்து சேலம் கோவை மாவட்டங்களடங்கிய கொங்கு தேசம் என்ற பகுதியினைக் கைப்பற்றினர்.

கொங்கு நாட்டைக் கைப்பற்றல்

கொங்கு தேசம், கி.பி. 1529-1564 ஆகிய ஆண்டுகளில் மதுரையின் விஸ்வநாத நாயக்கரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. கொங்குதேசம் — பழனி, விருபாக்ஷி, ஆய்க்குடி, எடயன் கோட்டை, தாளி, உத்திருக்குழி (தென் கொங்கு), ரட்டயம்பாடி, புரவிப்பாளையம், ராமபட்டினம், மெய்வாடி, நேகமம், நாமக்கல், சேந்தமங்கலம் (கிழக்குக்கொங்கு) ஆகிய பாளையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சேந்தமங்கலத்தின் ராமச்சந்திரநாயக்கரும் தாரமங்கலத்தின் கெட்டிமுதலியும் குறிப்பிடத்தக்க சிறந்த பாளையக்காரர்களாவர். தொடக்க காலத்தில் தொடர்ந்து ஆட்சி செய்து வந்த ஐந்து மதுரை நாயக்கர்கள் காலத்தில் கொங்குநாடு மிக அமைதியாக இருந்தது என சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

திருமலை நாயக்கர் காலத்தில் மைசூரின் சாமராய உடையார் கொங்கு நாட்டின் மீது படையெடுப்புக்கள் நடத்தி நிலங்களைத் தரிசாக்கினார்.மதுரையின் தளவாய் இராமப்பய்யன் எதிரிகளை கி.பி. 1641- இல் மலைக்கணவாய் வரை விரட்டியடித்தார். கி.பி. 1656 - இல் குருதிரவநரசராயர் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து தானைக்கண்கோட்டை, ஹோகூர், பகுதிகளைக் கைப்பற்றி சத்தியமங்கலம் வரை சென்றார். மைசூரின் படைத் தளபதி ஹம்பய்யன் மதுரை நாயக்கரைப் பழிவாங்கும் நோக்கத்தில் ஏராளமான மக்களின் மூக்கினை வெட்டினார். எனவே மூக்குப் போர்கள் நடைபெற்றன. மதுரை, இராமநாதபுரம் கூட்டுப்படைகள் எதிரிகளின் படைகளை விரட்டியடித்ததோடு பழிக்குப்பழி அதே கொடுமைகளையும் மைசூரில் செய்தனர். திருமலை நாயக்கர் ஏராளமான புதிய அரண்களை அமைத்து மக்களைக் காத்தார்.

கி.பி. 1672- இல் மைசூரின் தொட்ட தேவராயர் மதுரை, செஞ்சி நாயக்கர்களையும் ஈரோட்டில் தஞ்சை மாராத்தியர்களையும் தோற்கடித்தார். ஈரோடும் தாராபுரமும் எதிரியின் கையில் சிக்கின. 1704- ஆம் ஆண்டுவாக்கில் சேலம், கோயம்புத்தூர் பகுதிகள் மைசூரின் ஆதிக்கத்திற்குச் சென்றன. வெற்றியடைந்த பகுதிகளில் மைசூரியர்கள் ஆட்சிமுறைகளைச் சீரமைத்தனர். கொங்குநாட்டில் கன்னட மொழி புகுத்தப்பட்டது. கம்மாளர் இனத்தவர்கள் ஏராளமாகக் குடியேறினர்.

கி.பி.1746- இல் சர்வாதிகாரி நஞ்சராஜா தாராபுரம் பாளையத்தைத் தாக்கினார். 1749- இல் தேவனஹல்லியை முற்றுகையிட்டார். கி.பி. 1751 இல் சந்தாசாகிப்புக்கு எதிராக முகமதுஅலிக்கு உதவி செய்ய பெரும்படை ஒன்று அனுப்பினர். மைசூரின் உதவிக்கு ஈடாக திருச்சி, ஸ்ரீரங்கம் பகுதிகளைத் தருவதாக முகமது அலி உறுதி கூறினார். நவயத்துகள் வாலாஜாக்கள் பிரச்சனையில் ஹைதர் அலி அக்கரை காட்டியதாலும் அதிகப் பங்கு எடுத்துக்கொண்டதாலும் கொங்கு தேசத்தின் புவியியலமைப்பை நன்கு உணர்ந்திருந்தார். மைசூரின் சரிவினைக் கண்ட அவர் அதனைப் பயன்படுத்திக் கொண்டு எதிரிகளைத் தோற்கடித்து, அவினாசியில் முற்றுகையிட்டுக் கொண்டிருந்த ஹரிசிங் கையும் தோற்கடித்தார். கோயம்புத்தூர் பகுதியில் நிலவரி வசூல் செய்து கொண்டார். திண்டுக்கல்வரை தமது அதிகாரத்தைச் செலுத்தலானார். கி.பி. 1760- இல் பிரெஞ்சுக் காரர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி, ஹைதர் அலி பாரமஹாலில் இறங்கினார். (சேலத்தில் இருந்த பன்னிரெண்டு பேட்டைகள்), அவைக்கல் கோட்டை

யையும் கைப்பற்றினார். சென்னை கம்பெனிக்குக் கடன்பட்டிருந்த முகமதுஅலிக்கு எதிராகவே என்றும் ஹைதர் செயல்பட்டார். ஹைதர் அலி, முகமது அலி ஆகியோரின் உரிமைகள் மோதிக்கொண்டபோது பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் முறையே போட்டி போட்டுக் கொண்டு அவர்களது உதவிக்குச் சென்றனர்.

நவாப் முகமது அலி ஆங்கிலேயர்களின் கைப்பாவையாக இருந்ததால் ஹைதர் அலி அவர் மகன் திப்பு சுல்தான் ஆகியோரிடமிருந்து நவாபின் அரசைக் காப்பதில் கவனம் செலுத்தினார். கி.பி. 1766- இல் ஆங்கிலக் கம்பெனியும், நிஜாமும் ஒரு உடன்பாடு செய்து கொண்டனர். இவ் உடன்பாட்டின்படி வடசர்க்கார் பகுதிகளை, நிஜாம் ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும். இதற்கு பிரதிபலனாக நிஜாமுக்கு நெருக்கடி காலங்களில் உதவ கம்பெனி முன்வந்தது.

ஆங்கிலக் கம்பெனி நிஜாம் நவாப், மராத்தியர்கள்ஆகியோர் விரைவில் மைசூரின் படையெடுப்பு ஏற்படக்கூடும் எனக் கருதினர். எனவே சென்னையிலிருந்து ஆங்கில அதிகாரிகள் மராத்தியர்களையும், பின் நிஜாமையும் மைசூர் மீது படையெடுக்குமாறு பணித்தனர். நிஜாமின் செயல்கள் மீது சந்தேகம் கொண்ட ஆங்கிலேயர் அவரைக் கண்காணித்தனர். சென்னையின் ஆளுநரான பாரமஹாலுக்கு மூவாயிரம் வீரர்களை அனுப்பினர். இப்படை வழியில் வாணியம்பாடி, திருப்பத்தூர், காவேரிப்பட்டினம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியது.

கி.பி. 1782இல் ஹைதர் அலி இறந்தபின் அவர் மகன் திப்புசுல்தான் ஆங்கிலேயர்களை எதிர்த்தார். ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டிலிருந்து நவாபிற்கு எதிராகப் பல படையெடுப்புக்களை நடத்தினார். ஆனால் மூன்றாவது ஆங்கில மைசூர்ப் போரின் முடிவு திப்பு சுல்தானின் எண்ணங்களைச் சிதைத்தது. எனவே 1793- இல் ஏற்பட்ட அவலமான உடன்பாட்டை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற் பட்டது. அதன்பின் ஆங்கிலேயரைத் தாக்குவதற்கான தருணம் பார்த்துக் கொண்டிருந்த திப்பு 1799- இல் ஸ்ரீரங்கபட்டினத்தில் நடந்த போரில் தோற்கடிக்கப்பட்டார். கொங்குதேசம் முழுவதும் ஆங்கிலேயர் வசமானது.

மதுரை, திருநெல்வேலி

கர்னாடகப் போர்களில் பெற்ற வெற்றி ஆங்கிலேயர்களின் அரசுத் தந்திர வெற்றிக்குப் படிக்கல்லாக அமைந்தது. ஹைதராபாத் நிஜாம் இறந்து விட்டதாலும், அன்வர் உத்தீன் எதிரிகளால் கொல்லப்பட்டதாலும் முகமது அலியும் மாபுஸ்கானும் ஆற்காட்டு நவாப் அரச விவகாரங்களில் தீவிரமாக ஈடுபடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். எனவே, மதுரையில் மயானன் என்பவனைத் தமது பிரதிநிதியாக நியமித்து விட்டு ஆற்காடு சென்றனர். அவர்கள் ஆற்காடு அடையு முன்பே, மயானன் அப்துல் அகமதுகான் என்பவனால் வெளியேற்றப்பட்டான். விரைவிலேயே ஆலம் அலிகான் மயானனின் மைத்துனன்அப்துல் அகமதுகானை விரட்டியடித்தார். ஆலம் அலிகான், சந்தாசாகிபின் ஆதரவாளராக இருந்து மதுரையையும் திருநெல்வேலியையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்; பாளையக்காரர்களை ஒடுக்கினார்; சுதந்திர அரசுகளாயிருந்த இராமநாதபுரம், புதுக்கோட்டை அரசுகளை பயமுறுத்தினார்.

ஆற்பாட்டு நவாப்பான அன்வர் உத்தீனின் மகனான முகமது அலி, மதுரையை மீட்பதற்கு உதவுமாறு ஆங்கிலேயரைக் கேட்டுக் கொண்டார். ஆங்கிலப்படை ஒன்று தளபதி ஜேம்ஸ் கோப் என்பவரின் தலைமையில் திருச்சிலிருந்து தெற்கு நோக்கி அனுப்பப்பட்டது. இப்படையெடுப்பில் முகமது அலியின் சகோதரர் அப்துல் வஹாப்கான் ஆங்கிலப்படைத் தலைவருக்குத் துணையாக அனுப்பப்பட்டார். திருநெல்வேலியில் அதிகாரியாகப் பணியமர்த்தப்பட்ட அப்துல் ரஹீம், மதுரையையும், திருநெல்வேலியையும் கைப்பற்று வதற்காக, ஆங்கிலத் தளபதிக்குத் துணை நின்றார். தளபதி கோப் எவ்வளவு வேகமாகத் தாக்குதல் நடத்தினாரோ அதுபோன்று அதே சக்தியுடன் ஆலம் அலிகான் எதிரியின் தாக்குதலை முறியடிக்கவும் செய்தார். முடிவில் ஆங்கிலத் தளபதியின் முயற்சி தோல்வியுறவே அவர் திருச்சி நோக்கி நகர்ந்தார். அப்துல் வகாப்கானின் படை வீரர்கள் தங்கள் தலைவனை ஏமாற்றி விட்டு எதிரியான ஆலம் அல்ஸ்கானுடன் சேர்ந்து கொண்டனர்.

சென்னை ஆளுநராயிருந்த சாண்டர்ஸ் படைவலிமையைப் பயன்படுத்துவதை விட்டு விட்டு அரசுத் தந்திரத்தால் மதுரையைக் கைப்பற்ற வேண்டும் எனத் திட்ட மிட்டார். எனவே 1751- ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22-ஆம் நாள் ஆலம் அலிகானுக்கு கடிதம் எழுதினார். அதில் "எங்கள் வீரர்களுக்கு எதிராக, மதுரையைக் காப்பதில் நீங்கள் காட்டிய வீரத்தையும், தைரியத்தையும் கேள்விப்பட்டேன். பகைமை பாராட்டாது அதை மெச்சுகின்றேன். திறமை எங்கிருப்பினும் பாராட்டப்பட வேண்டும். ஆனால், கோட்டையின் பொறுப்பினை ஏற்கும் உரிமை உமக்கும் உமது அரசாங்கத்தாலும் பிரெஞ்சுக்காரர்களாலும் மறுக்கப்பட்டது எனக் கேள்விப்பட்டேன். இது வீரத்திற்கு கொடுக்கப்பட்ட அவமரியாதை என நான் நினைக்கின்றேன். போர் வீரரான நீங்கள் உங்களது வாளின் உதவியால் நல்வாய்ப்பை ஏற்படுத்த முடியும். முகமது அலியின் உரிமைக்காக ஆதரவு நல்கி, அதற்காக உதவ நீங்கள் முன்வந்தால், முகமதுஅலியின் கீழ் ஒரு அரசு உங்களுக்குக் கொடுக்கப்படும் என நான் உறுதியளிக்கின்றேன். இவ்வாறு கிடைக்கும் அரசு உங்களுக்கு நற்பெயரையும் நல்ல பொருள் வளத்தையும், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் நல் ஆதரவையும் கொடுக்கும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ஆலம் அலிகான் இந்த ஆலோசனையை ஏற்க மறுத்து விட்டார். 1752-இல் திருச்சியில் நடந்த போரில் ஆலம் அலிகான் கொல்லப்பட்டார். அவர் திருச்சி போர்க்களத்திற்குச் செல்லும் போது மயானனை மதுரையின் பொறுப்பாளராக நிய மித்தார். மதுரையினைக் காக்கத் தவறிய மயானன், திண்டுக்கல் பகுதியிலிருந்த மைசூரின் படைத்தலைவரான குகூசாகிப் என்பவருக்கு அதனை விற்றார். இந்துக்கள் துன்புறுத்தப் பட்டனர். பலர் கொல்லப்பட்டனர். இதனைக் கண்ணுற்று கண் கலங்கிய சிவகங்கையின் தாண்டவராயபிள்ளையும், இராமநாதபுரத்தின் வெள்ளையய்யன் சேர்வைக்காரனும் மதுரைக் கோட்டையை ஒரு மாதகாலம் முற்றுகையிட்டனர். சிவகங்கை, இராமநாதபுர அரசுகளின் உடன்பாட்டுப்படி, குகூ சாகிப், மதுரையை சேதுபதியிடம் ஒப்படைத்தார். பின் திண்டுக்கல் திரும்பினார். மதுரையில் மீண்டும் இந்து சமய மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. பங்காரு திருமலையின் மகன் விஜய குமார முத்து திருமலை நாயக்கர் மதுரை மன்னராக்கப்பட்டார்.

இவரது ஆட்சி பதினாறு மாதங்களே நீடித்தது. முகமது அலியின் மூன்று இராணுவ அதிகாரிகள் (மியாவா, மொடமய்யா, நபிகான்) விஜய குமாரனை அரியணையிலிருந்து இறக்கி விட்டு மதுரை— திருநெல்வேலிப் பகுதியில் நவாப் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. மீண்டும் சேர்வைக்காரன் குகூசாகிப் ஆகியோர் பனையூர் அனுப்பானடியில் தங்கி ஆறுமாத காலத்திற்கு மதுரையை முற்றுகையிட்டனர். மயானன் சேர்வையையும் குகூசாகிப்பையும் தோற்கடித்தார். 1753- இல் இவர் மதுரையின் ஆளுநரானார். அதன்பின் தன் அதிகாரத்தை வளர்த்துக் கொண்டு முகமது அலிக்கு செலுத்த வேண்டிய திறைப்பணத்தை மறுத்தார். எனவே நவாப் இவர் மீது சந்தேகம் கொண்டார். இதனால், மீண்டும் ஒரு முறை, முகமது அலி, ஆங்கில இராணுவ உதவியை நாடினார். சென்னையின் ஆளுநர், கர்னல் ஹெரான் என்பரையும், பூசுப் கானையும் (பின்னாளில் கான் சாகிப் என்றும் பிறவி வீரன் என்றும்) மதுரைக்கு அனுப்பி மயானனைத் தோற்கடிக்கப் பணித்தார். 1755 இவர்கள் மதுரைக்கு சென்றபோது எதிரி கோயில்குடிக்கு ஓடினார். திரும்பூர் கோயிலில் மயானன் ஒளிந்து கொண்டிருந்தபோது படையெடுப்பாளர்கள் மதுரையைக் கைப்பற்றிக் கொண்டனர்.

அதன்பின் சேதுபதி மன்னரோடு உடன்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. வெற்றிகண்ட ஆங்கிலப்படை திருப்பூருக்குச் சென்று கோயிலைத் தகர்த்தது. கோயிலின் வாசல்களுக்கு தீ வைக்கப்பட்டது. வீரர்கள் கோயிலைக் கொள்ளையிட்டனர்; ஏராளமான தெய்வச் சிலைகள் எடுத்துவரப்பட்டன. பின்பு, ஹெரன் திருநெல்வேலி சென்று அதனை அடக்கினார். கட்ட பொம்மு நாயக்கரையும், மற்ற பாளையக்காரர் களையும் தாக்கினார்.

தனக்கு அடங்காத எதிரிகளையெல்லாம் ஒடுக்கிவிட்ட முகமது அலி தமது ஒன்றுவிட்ட சகோதரரான மாபுஸ்கானை மதுரையின் ஆளுநராக நியமித்தான். வரி வசூல் செய்பவர் என்ற நிலையில் மாபுஸ்கான் ஆண்டொன்றுக்கு பதினைந்து இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டார். மலைபோன்ற பல பிரச்சனைகளுக்கிடையே ஒரு துரும்புபோன்று மாபுஸ்கான் காணப்பட்டார். கால நிலைக்கு ஏற்றாற்போல் நடக்க இயலாது தோற்றார். மதுரையிலும், திருநெல்வேலியிலும் செல்வாக்கு மிக்க சிலரை மதிக்கத் தவறினார். திருநெல்வேலியில் பணம் படைத்த வங்கியின் உரிமையாளரான தாசரப்ப முதலியிடம் நற்பெயரைப் பெற இயலவில்லை. எனவே மாபுஸ்கானால் வரி வசூலித்து ஆங்கில நவாபு கருவூலங்களுக்கு செலுத்த முடியவில்லை. இவ்வாறு திறை செலுத்தப்படாமலிருந்ததால், நவாப் தனது சகோதரரைத் திரும்ப அழைக்க முடிவு செய்து, மதுரை—திருநெல்வேலி பகுதிகளின் பொறுப்பை யூசுப்கானிடம் ஒப்படைத்தார். யூசுப்கான் தனது திறமையைப் பயன்படுத்தி பாக்கியிருக்கும் திறைப் பணத்தை வசூலிப்பதில் வெற்றி கண்டார். யூசுப்கானின் அதிகாரமும், மரியாதையும் நாளுக்கு நாள் வேகமாக வளர்ந்தது. இவ்வளர்ச்சி மாபுஸ்கானின் நிலையைப் பாதித்தது. எனவே மாபுஸ்கான் தமது சகோதரனின் ஏற்பாடுகளைத் தடுப்பதற்காகப் புரட்சி செய்யத் திட்டமிட்டார். ஆங்கிலேயர்கள் உடனே முகமது அலிக்கும் யூசுப்கானுக்கும் உதவ முன் வந்தனர். மாபுஸ்கான் மதுரையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் கட்டாயத்திற்குள்ளானார்.

எல்கு ஏல் முதலான சென்னை ஆளுநர்கள்

தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்களின் முதல் (1639) ஆட்சிப்பகுதியாயிருந்த சென்னை, இந்தியாவில் ஆங்கிலக் கம்பெனியின் தலைநகராக கி.பி. 1681 வரை செயல்பட்டது. ஆங்கில ஆதிக்க வளர்ச்சி பற்றியும் இந்திய ஆளுநர்களின் சாதனைகள் பற்றியும் அறிவதற்காக ஏராளமான சான்றுகள் நமக்கிருப்பினும், சென்னை வரலாற்றை ஆராயும் மாணவர்க்கு, ஒவ்வொரு ஆளுநரின் சாதனைகள் பற்றியும், போர்— அமைதி காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், வரலாற்றை மாற்றியமைக்கக்கூடிய முடிவான ஏற்பாடுகளையும், அரசர்கள், மக்கள் ஆகியோரின் பாதிக்கப்பட்ட நிலைகளையும் பற்றி சரியாகத் தெரிந்து கொள்வது சிரமமான காரியமேயாகும். புனித ஜார்ஜ் கோட்டையில் அதனைக் கட்டிய டே, கோகன் ஆகியோர் பற்றிய. நினைவுச் சின்னம் எதுவும் இல்லை.

ஆங்கில மக்கள் எந்தவித ஐயமுமின்றி, கம்பெனியின் அயராத உழைப்புக்கும் சென்னை ஆளுநர்களின் அரசியல் நுண்ணறிவிற்கும், திறமையான நிர்வாகத்திற்கும், தந்திரமான உடன்பாடுகளுக்கும் கடமைப்பட்டவரேயாவர். சென்னை ஆளுநர்களே இந்தியாவில் ஆங்கிலப் பேராதிக்கத்தை ஏற்படுத்தினர் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை. புனித ஜார்ஜ் கோட்டையின் ஆளுநர்கள் தங்களது உன்னதமான பொறுப்பினை உணர்ந்தவர்கள். அவர்தம் பங்கு மிகச் சிறப்பான ஒன்று. அவர்கள் வணிகர்களாக, போர் வீரர்களாக, நிர்வாகத்தினராக எல்லாப்பணிகளிலுமிருந்து வளர்ந்து இருந்தபின் தமது வாணிகக் கம்பெனியை அதிகாரமுள்ள அரசியல் கேந்திரமாக்கினர். சென்னை ஆளுநர்களிடையே திறமையற்ற, தகுதியற்ற, கொடுமையான, போர்வீரன் போன்றவர்கள் நேர்மையற்றவர்கள் ஆகியோரும் இருந்தனர். ஸ்டெரென்ஷாம்மாஸ்டர், எல்கு ஏல், ஜேம்ஸ் மேக்ரீ, சார்லஸ் ஃபுலோயர், தாமஸ் சாண்டர்ஸ், பிகாட்பிரபு, மகார்ட்டினி பிரபு, சர் ஆர்ச் பால்டு காம்ப்பெல் எட்வர்ட், கிளைவ் பிரவு, வில்லியம் கேவண்டிவ் பெண்டிங்பிரபு, சர் தாமஸ் மன்ரோ, ஸ்டீபன் ரம்போல்டு, லூஸிங்டன், சர் ஹென்றி சார்ஜ் மார்ஹெட், நேப்பியர் பிரபு, மவுண்ட் ஸ்டுவர்ட், எல்பின்ஸ்டன் இரான்ட் டஃப், பெண்ட்லாண்டு பிரபு, வில்லிங்டன் பிரபு, சர். ஆர்ச்பால்டு எட்டுவர்டு நே போன்றார் திறமையான சாதுரிய மான, உழைப்புமிக்க நிர்வாக அதிகாரிகளாகவும், சீர்திருத்தவாதிகளாகவும், தளபதி களாகவுமிருந்தனர். வெப்பேரி, எழும்பூர், திருவல்லிக்கேணி, சாந்தோம், பெரம்பூர், மற்றும் சுற்றுப்புறங்களைக் கொடைகள் வழங்கியும் இராணுவ உதவியுடனும், அரசியல் தந்திரத்துடனும் தமது ஆதிக்கத்தில் சேர்ப்பதற்கு சென்னை ஆளுநர்கள் சுமார் நூறு ஆண்டுகள் உழைத்தனர். ஆளுநர்களின் சாதனைகள் பற்றியும், அவர்களது தோல்விகள் பற்றியும், வரலாற்றை உருவாக்குவதில் அவர்தம் பங்கு பற்றியும் நாம் ஈண்டு காண்போம்.

தாய் நாட்டில் திறமை படைத்த போஷகரின் ஆதரவு இல்லாமலேயே கம்பெனியின் புதிய ஏஜண்டான ஐவீயும் அவரது ஆதரவாளர் கீரீன் ஹில்லும் தென்னிந்தியாவில் சிறப்பாக வாணிபத்தைத் துவக்கினர். அடுத்த ஏஜெண்ட் ஆரன்பேக்கர் தனது நிலையை நாயக்கர்களின் இடையூறுகளிலிருந்தும் தனது நிர்வாகக் கேந்திரத்தை கோல்கொண்டா படையெடுப்பிலிருந்தும் காக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தார். தைரியம்மிக்க, சாதுரிய மான, எதையும் சிந்தித்து செயல்படக்கூடிய ஆளுநர்களின் உழைப்பால் ஆங்கிலேயர்

தமது ஆதிக்கத்தைத் தெற்கே வளர்த்துக் கொண்டனர். தமது மேலதிகாரிகளைத் திருப்திபடுத்துவதற்காகவும், ஆதிக்கம் செலுத்தவும் பணமும் புகழும் சேர்ப்பதற்காகவும் சில ஆளுநர்கள் கொடுங்கோலர்களாக செயல்பட்டனர் என்பது மறுக்க முடியாததாகும். சென்னையில் துவக்ககால ஆளுநர்களில் ஒருவரான பாக்ஸ்கிராப்ட், இவருக்கு அடுத்த நிலையிலிருந்த விண்ட்டர் என்பாரின் கைப்பாவையாயிருந்தார். பிகாட் பிரபு அவர் தம்குழு உறுப்பினர்களால் ஏமாற்றப்பட்டு சிக்கவைக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டு அங்கேயே இறந்தார் எனக் கருதப்படுகிறது. பாஃக்ஸ் கிராப்ட் 1668- இல் அவரது பழைய பதவியிலேயே அமர்த்தப்பட்டார். இவரே சென்னையின் முதல் ஆளுநராக்கப் பட்டார். அடுத்த செல்வாக்குள்ள ஆளுநரான ஸ்டெரென்ஷாம் மாஸ்டர், கம்பெனியின் கொள்கைமுறைகளைப் புகுத்தி, அவரவர் கடமைகளைச் செய்யவும் பணித்தார்; இந்தியாவில் தலைமை நீதிமன்றத்தை ஏற்படுத்தினார்; நகரசபை துப்புறவு செயலகம் ஒன்றையும் துவக்கினார். ஆணையாளர், மாவட்ட ஆட்சித்தலைவர், நீதிபதி அரசியல் நிபுணர், ஆளுநர் ஆகிய அனைத்தும் ஒருவரிடமே அடங்கிய நிலை உருவாக்கப்பட்டது. ஏல் பல்கலைக் கழகத்தின் போஷகரான எல்கு ஏல் முதன்முறையாக, கி.பி. 1687- இல், புனித ஜார்ஜ்கோட்டையில், தம் தாய்நாட்டின் கொடியை நாட்டினார். மாநகராட்சி முறை ஏற்படுத்தப்பட்ட .பொழுது இவரது மேற்பார்வையின் கீழ் நகரசபை உறுப்பினர் (Burgases) களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. சென்னையிலிருந்த நாணயச் சாலையில் இவரது ஆணைகளின் பேரில், முகலாயர் காலத்து நாணயம் போன்ற வெள்ளி நாணயங்கள் அச்சிடப்பட்டன.

வாணிபச் செல்வாக்கிற்கான போட்டி அரசியல் ஆதிக்கத்திற்கான போட்டியின் காரணமாகக் காப்பதற்கும், எதிர்ப்பதற்கும் உதவும் வகையில் சென்னை இராணுவம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. வணிகராகவும், செயல் வீரராகவுமிருந்த பிட் தானே சிறந்த ஆட்சியாளர் எனவும், அரசியல் நிபுணர் எனவும் நிரூபித்துக் காட்டினார். தந்திரமாக பிரெஞ்சு மதுவைக் கொடுத்து நவாப் தாவுகானை திருப்திப்படுத்தினார். சென்னை நாளடைவில் முக்கிய நகரமாகியது; ஆளுநர் நவாபுகளையும் செல்வந்தர்களையும் அங்கு பிரவேசப்படுத்தினார். முதல் கர்நாடகப்போரின் துவக்கத்தில் நிக்கோலஸ் மூர்ஸ் என்னும் ஆளுநர், ஆங்கிலேயர் ஆதிக்கத்தை வளர்த்தார். ஆனால் 1746- இல் பிரஞ்சுக்கப்பற்படை ஆங்கிலேயரை, சென்னைக் கோட்டையை விட்டு வெளியேற்றியது. செல்வமனைத்தும் கைக்கொள்ளப்பட்டன. பிரஞ்சுக்காரரை முறியடிக்கத் தவறியதால் சார்லஸ்ஃபிளேயர் 1750-இல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். சாண்டர்ஸ் ஆளுநராகப்பதவி வகித்த காலம் ஆங்கிலேயருக்கு நன்மைதரும் காலமாயிருந்தது. இவர் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் ஆதிக்கத்தை நிலை நாட்டினார். ஆற்காட்டு நவயத் வமிசத்தைச் சேர்ந்த சந்தா சாகிப் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாயிருந்தார். பிரஞ்சுக்காரர்களுக்கெதிரான கிளைவ் லாரன்ஸ் ஆகியோரின் குறிப்பிடத்தக்க இராணுவ வெற்றிகள் சென்னைப்பட்டினத்திற்கு பாதுகாவலாயும் வாணிக வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயும் அமைந்தன. கி.பி. 1775 ஆம் ஆண்டு கண்ராடி என்பவரால் சென்னை நகர எல்லை அளவெடுக்கப்பட்ட பின்பு புனித ஜார்ஜ் கோட்டை புதுப்பிக்கப்பட்டது; கோட்டையில் இராணுவ வீரர்கள் தங்கும் வசதி செய்யப்பட்டது.

பிகாட் பிரபு சென்னை ஆளுநராக பதவி ஏற்ற காலம் தென்னிந்தியாவில் ஆங்கிலக் குடியேற்ற வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஆகும். போர் வீரராகவும், அரசியல் வாதியாகவுமிருந்த பிகாட் விரைவாக முடிவு எடுப்பதில் திறமையானவர். ஆங்கிலேயரை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றவர். கிளைவ், லாரன்ஸ், கூட் ஆகியோரின் உதவியுடன் பிரஞ்சு நாட்டு லாலியின் தாக்குதலைத் தடுக்கவும் புதுச்சேரியைத் தாக்கவும் செய்தார். மூன்றாம் கர்நாடகப்போரில், தென்னிந்தியாவில், பிரஞ்சுக் காரர்களைத் தோற்கடித்தார். சிப்பாய் இராணுவம் ஒன்றை ஏறப்டுத்தி, அதன் போஷகராக இருந்தார். ஹைதர் அலிக்கு எதிராக பிகாட் பிரபுவால் துவக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை தாமஸ் ரம்போல்டும், மெக்கார்ட்னி பிரபுவும் தொடர்ந்து நடத்தினர். இரண்டாவது ஆங்கில மைசூர்போர் இரு தரப்பினருக்கும் குறிப்பிடத்தக்க வெற்றியில்லாமல் முடிந்தது. திப்பு சுல்தான் தொடர்ந்து ஆங்கிலேயரைத் தாக்கினார். இந்த ஆளுநர்கள் காலத்தில் ஆற்காடு நவாப் முகமது அலி ஆங்கிலேயருக்கு அடங்கிக்கடன்பட்டவரானார். மூன்றாவது கர்நாடகப்போர் ஆங்கிலேயருக்கு வெற்றிகரமானதாக அமைந்ததற்கு ஆர்ச்சி பால்டு கேம்ப்பெல் ஒரு முக்கிய காரணமாவார். இவரது காலத்தில் சென்னையில் ஆட்சி முறை சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆட்சிமுறைக் குழுக்களான வாணிகக் குழு வருவாய்க் கழகம் மருத்துவமனைக் குழு, ஆட்சித்துறை, சட்டத்துறை நீதிமன்றங்கள் போன்றவை நாட்டில் திறமையான ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டன. அங்காடிகள் கண்காணிக்கப்பட்டன. வரி வசூல் செய்யப்பட்டு நகரத்துப்புறவு செய்யப்பட்டது.

எட்வர்ட் கிளைவ் ஆளுநராக பதவி வகித்தபோது எல்லாப் போர்களும், புரட்சி களும் கலகங்களும் முடிவுக்கு வந்தன. பேரரசுக் கொள்கை படைத்தவரான எட்வர்ட் கிளைவ், ராபர்ட்கிளைவின் மகனாவார். 1799- இல் தோற்கடிக்கப்பட்ட திப்புசுல்தானின் குடும்பம், வேலூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டது. மைசூரில் பெரும்பாலான பகுதிகள் ஆங்கிலேயர் வசம் வந்தன. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மனின் புரட்சி, சிவகங்கை மருதுபாண்டியரின் சுதந்திரப் புரட்சி ஆகியவை அடக்கப்பட்டு தலைவர்கள் தண்டிக்கப்பட்டனர். இவ்வாறு எட்வர்ட் கிளைவ் தமிழகப் பளையக்காரர்களை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தார். நவாபின் நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட்டார். 1785- இல் கையெழுத்திட்ட தற்காலிக கர்நாடக உடன்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டு 1787- இல் கையெழுத்திட்ட இரண்டாவது கர்நாடக உடன்பாட்டில் உறுதி செய்யப்பட்டது. 1801- இல் கையெழுத்திடப்பட்ட உடன்பாட்டின் கருத்துப்படி நிர்வாக அதிகாரமனைத்தும் ஆங்கிலேயரிடம் ஒப்படைக் கப்பட்டது. 1801- இல் எட்வர்ட் கிளைவால் கொண்டுவரப்பட்ட புதிய சட்டப்பிரிவுப் படி தமிழகத்திலிருந்த பாளையங்கள் நசுக்கப்பட்டு சாதாரண ஜமீன்களின் நிலைக்குக் கொண்டுவரப்பட்டன.

தமிழகத்தில் முதன்முதலாக திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட இராணுவக்கலகம், வில்லியம் பெண்டிங் காலத்தில் ஏற்பட்டது. கி.பி. 1806 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இக்கலகம் 'வேலூர்க்கலகம்' என அழைக்கப்படுகிறது. இக்கலகம் கர்னல் கில்லெஸ்பியால் ஒடுக்கப்பட்டது; கலகத்தில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர்; ஆங்கிலேயருக்கு ஆதரவு காட்டியவர்கள் பணம் பெற்றனர். பெண்டிங், சட்டங்கள் நீதிமன்றங்களை

ஏற்படுத்துவதன் மூலமும் சில ஒழுங்குகளை ஏற்படுத்துவதன் மூலமும் ஆட்சிமுறைப் பிரச்சனைகளைத் தீர்க்க வழி செய்தார். 1800 க்குப் பின் ஆட்சிமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டபோது சட்டத்துறையிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. சென்னை மாநிலத்தில் முக்கிய நகரங்களிலும், மாவட்டத்தலைநகரங்களிலும், முக்கிய மையங் களிலும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1801- இல் சென்னை தலைமை நீதிமன்றமும் 1802- இல் மாவட்ட (ஜில்லா) நீதிமன்றங்களும் செயல்படத் துவங்கின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதிகாரிகளிடையே குறைகள் நிறைந்திருந்தன; குழு உறுப்பினர்களிடையே ஊழல்கள் மலிந்திருந்தன. கர்நாடகப்போர்களின் காலத்திலும் அதற்குப் பின்பும் நிர்வாக, சிவில், இராணுவ ஊழியர்கள் பலர் ஏராளமான பணத்தை வட்டிக்குக் கொடுத்து செல்வந்தராயினர். ஆங்கில மூலதனக்காரர்களுக்கு நவாப் முகமது அலி கூட கடன்காரரானார். ரட்யார்டு கிப்ளிங் பத்தொன்பதாம் நூற்றாண்டு சென்னை யைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அந்நகர் பழைய பெருமையை மட்டும் கொண்டு நலிந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். சென்னையில் வாழ்ந்த ஆங்கிலேயர்கள் தோட்டவசதியுடன் கூடிய வீடுகளில் வசித்தனர்; ஐரோப்பிய பாணியில் பலவீடுகளையும், கட்டிடங்களையும் கட்டினர். சாலைகள் மிக அகலமானதாக இருந்தன. புனிதஜார்ஜ் கோட்டை மிக அழகாகவும் இராணுவப் பாதுகாப்புக்கு ஏற்றதாகவும் அமைந்திருந்தது. இவ்வாறான முன்னேற்றத்தை நோக்கும்போது ரட்யார்டு கிப்ளிங்கின் கருத்து ஒருதலை பட்சமானது எனக்கருதத்தோன்றுகிறது. ஆனால் அன்றைய தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையினைப் பார்க்கும்போது அவரது கருத்து சரியானதே எனவும் எண்ணத்தோன்றுகிறது.

நிர்வாக வல்லுனரும், சீர்திருத்தவாதியும் இராணுவ நிபுணருமான சர் தாமஸ் மன்ரோவின் ஆட்சிக்காலம் மிகச் சிறப்பான காலமெனக் கருதப்பட்டது. சென்னை மக்களிடமிருந்த மனச் சோர்வைப் போக்கும் வகையில் ஆங்கில பள்ளிகளைத் துவக்கி னார். சென்னை மௌண்ட் சாலை இன்றைய அண்ணா சாலை அகலப்படுத்தப்பட்டது. புனித ஜார்ஜ் காதெட்ரல் கட்டப்பட்டது. ரயத்வாரி எனப்படும் புதிய நில அளவை முறை கொண்டு வரப்பட்டது. மன்ரோ விவசாயக் குடிமக்களுக்கும், அரசாங்கத்துக்கு மிடையேயிருந்த இடைவெளியை நீக்கினார். அண்ணா சாலையில் அமைந்திருக்கும் குதிரை மீது இவர் அமைந்திருக்கும் சிலை இவர் ஏழை விவசாயிகளிடம் வைத்திருந்த நட்பை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. லூஸிங்டனின் ஆட்சிக்காலத்தில் சமுதாய சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. நவாபுகள் அழிவுற்றபின் சேப்பாக்கம் அரண்மனை ஆங்கில அரசுடன் சேர்க்கப்பட்டது.

1813- ஆம் ஆண்டு சாசனச் சட்டம் கல்வி வளர்ச்சிக்கும் கம்பெனியின் பணி யாளர்கள் தங்களது பணியைத் தொடங்குவதற்கு முன்பு பயிற்சி அளிக்கப்படவும் வழிவகுத்தது. தமிழகத்தில் அறிவியல் வளர்ச்சி ஏற்படவும் இச்சாசனச் சட்டம் வழி வகுத்தது. 1833 - ஆம் ஆண்டு சாசனச் சட்டம் மக்களது, உணர்வுகளுக்கும், உரிமை களுக்கும் ஏற்றபடி இந்திய சட்ட திட்டங்களை அமைக்க உதவியது. இதன்பிறகு சென்னை ஆளுநரின் சட்டங்கள் நீக்கப்பட்டன.

1857- ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகம் ஏற்பட்டபோது வட இந்தியர்கள் தென்னிந்திய மக்களோடு தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கவில்லை. இக்கலகத்தின் செய்தி சென்னை மாநிலத்திற்கு காலம் கழித்தே எட்டியது. இக்கலகத்தை தென்னிந்தியாவில் எந்த செல்வாக்கு மிக்க அரசரும், பாளையக்காரரும் பிரதேசத் தலைவரும் ஆதரிக்கவில்லை. காரணம், அவர்கள் ஏற்கனவே ஒடுக்கப்பட்டுவிட்டனர். எனவே இச் சிப்பாய்ககலகம் தமிழகத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிட இயலவில்லை. சென்னை மாநில ஆளுநர்களும் அதிகாரிகளும் பெரும்பாலும் மனிதாபிமானம் மிக்கவர்களாகவே இருந்தனர். எனவே இவர்களை எதிர்த்துத் தமிழக மக்கள் கலகங்கள் செய்யவில்லை. தலைமையான அதிகார மையம் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டு, இந்தியத் தலைமை ஆளுநரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டபின் சென்னை ஆளுநர் செல்லாக்காசானார். கல்கத்தா, பம்பாய் மாநிலங்களைப்போன்று சென்னை மாநிலத்தில் இராணுவத்தை, குறிப்பாக கடற்படையைப் பயன்படுத்தும் அளவுக்கு பிரச்சினைகள் எழவில்லை.

நேப்பியர் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் சென்னையில் ஏராளமான அழகுமிகு மாளிகைகள் கட்டப்பட்டன. செனட் மாளிகை பைஸான்டைன் மாதிரியிலும், மாநிலக் கல்லூரி இத்தாலிய மாதிரியிலும் கட்டப்பட்டன. கட்டிய வல்லுநர்களும், கலை வல்லுநர்களும் சுதந்திரமாக தங்களின் பணியில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். கிராமப்புறங்களையும், நகர்ப்புறங்களையும் இணைக்கும் பாலமாக இரயில்வே முறை இருந்ததோடன்றி மேற்கத்திய பண்பாடும் சென்னையில் பரவவும் வாய்ப்பேற்பட்டது. 1859- இல் முதல் இருப்புப்பாதை போடப்பட்டது. 1876 - இல் கடும்பஞ்சம் ஏற்பட்டு நாடு சீர்கெட்டபோது நிவாரண ஏற்பாடாக பக்கிங்ஹாம் கால்வாய் வெட்டப்பட்டு நீர்வசதி செய்யப்பட்டது. சென்னை துறைமுகம் கடல் வாணிகத்திற்காகத் திறந்து விடப்பட்டது.

1850 இல் சென்னை மாநிலத்தில் சிறு காரணங்களுக்கான நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆங்கில பொதுச் சட்டம், சட்டமன்றச் சட்டங்கள் ஆகியவை வழக்கு விசாரணையின்போது பயன்படுத்தப்பட்டன. 1853ஆம் ஆண்டின் சிறப்புக்குழு இந்தியத் தண்டனைச் சட்டங்களின் (Indian penal code) தொகுப்பை உருவாக்கியது. இதன் செயல்பாடு 1861-62- இல் துவக்கப்பட்டது. கி.பி. 1845இல் நடமாடும் நீதி மன்றங்கள் ஒழிக்கப்பட்டு இந்நீதிமன்றங்களின் அதிகாரங்கள் மாவட்டப் பேராயர்களிடம் (District Moderator) ஒப்படைக்கப்பட்டன. 1861- ஆம் ஆண்டு இந்திய உயர்நிதி மன்றங்களின் சட்டப்படி சென்னை உயர்நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டு பழைய சாதர் அதலத் நீக்கப்பட்டது.

1835 இலிருந்து 1840 வரை முக்கிய கல்வி நிலையங்களான, சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை கிறித்துவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகியவை துவக்கப்பட்டன. 1857- இல் சென்னை பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது. மெரினா கடற்கரைப் பகுதி 1884 இல் கிராண்ட் டஃப் என்பவரால் அழகுபடுத்தப்

பட்டது. இவருக்கு அடுத்து 1886 முதல் 1890 வரை ஆளுநராயிருந்த கன்னிமரா பிரபு காலத்தில் 1887 இல் இந்திய தேசீயக் காங்கிரஸின் மாநாடு கூட்டப்பட்டது. மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் எந்தவித பாரபட்சமுமின்றி ஆளுநரின் தோட்டத்திற்கு அழைக்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர். கன்னிமரா நூல் நிலையமும் அரசுக் காட்சி சாலையும் இவரது நினைவால் ஏற்படுத்தப்பட்டவையேயாகும். மக்கள் பெருகியதன் காரணமாக நகராட்சி நிர்வாக முறை முக்கிய பங்கேற்றது.

இந்திய தேசியக் காங்கிரஸ் செல்வாக்குப் பெற்றபோதும், அரசியலமைப்புத் தேவைகளை வலியுறுத்தியபோதும் சென்னை மாநில ஆளுநர்கள் அரசியலமைப்புச் சலுகைகளைக் கொண்டுவர வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள். இச்சலுகைகள் 1909, 1919-ஆம் ஆண்டுச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டன. உலகப்போர் நடைபெற்ற போது மக்களது ஆதரவு அரசுக்குத் தேவையாயிற்று. ஆளுநர்களின் அதிகாரங்களும் சுதந்திரமும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்தன. பென்ட்லாண்டு பிரபு, வைகவுண்ட் கோஸ்சென், வில்லிங்டன் பிரபு, சர் ஆர்தர்ஹோப் ஆகியோர் காலத்தில் எவ்வாறு நிர்வாகம் செயல்பட்டது என்பதை சரியாகத் தெரிந்து கொள்வது வரலாற்றாளருக்குக் கடுமையான பிரச்சனையே ஆகும். இருப்பினும் நாட்டின் திருப்புச் சக்கரம் அவர்கள் கையிலிருந்துதான் செயல்படுத்தப்பட்டது என்பது மறுக்க முடியாதது ஆகும். அரசியல் மாற்றங்கள் எனும் புயல் ஏற்பட்டபோது அமைதி, சட்டம், ஒழுங்கும் நடைமுறைப் படுத்தப்பட்டன.

டேர், பின்னி, பார்ரி ஆகியோரால் சென்னையில் துவக்கப்பட்ட சிறு அங்காடிகள் இன்று பெரும் வாணிக நிலையங்களாக விளங்குகின்றன. இன்று இந்திய தேசியக்கொடி, மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டும் பொருட்டு கோட்டையில் பட்டொளி வீசிப் பறக்கின்றது. ஆரன் பேக்கரிலிருந்து எட்வர்ட் நை வரையிலான ஆளுநர்கள், சென்னை மாநிலத்தில், தங்களுக்கு மட்டுமன்றி, தமது நாட்டிற்கும் வரலாற்றுச் சிறப்பினை உருவாக்கினர். ஆட்சித்துறையிலும், நீதித் துறையிலும், சட்டத்துறையிலும், பொதுப்பணியிலும், கல்வித்துறையிலும் ஆங்கில நுணுக்கங்களைப் பயன்படுத்தியற்காக பழைய சென்னை மாநில மக்கள் சென்னை ஆளுநர்களுக்கு நன்றிக்கடன்பட்டவர்களேயாவர்.

பயிற்சி வினா

சென்னை மாநில வளர்ச்சிக்கு அதன் ஆளுநர்கள் செய்த சாதனைகளை விவரிக்க.

பாடம் – 24 பாளையக்கார முறை நிர்வாகம்

தமிழகத்தில் விஜயநகரத்தார் ஆட்சி புரியுங்கால் நாயங்கார முறையைக் கொணர்ந்தனர். தமிழகத்துச் சூழலைச் சமாளிக்க இயலாத நாயக்கர் பாளையப்பட்டு முறையைப் புதுப்பித்து, ஆதரித்தனர். பாளையப்பட்டுக்களின் தோற்றத்திற்கு முக்கிய காரணம் குறிப்பிட்ட எல்லையுட்பட்ட மக்களின் விடுதலை நோக்காகும். நாயக்கர், பண்டைக் காலம் முதல் மக்கள் அனுபவித்து வந்த விடுதலைக்குச் சற்று வரம்பு கட்டத் துணிந்ததால், மக்கள் அதனைத் தடுக்கத் தமக்குத் தலைவர்களாகச் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலம் தங்களைக் காத்துக் கொண்டனர். இவ்வுணர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாது போகவே, அத்தலைவர்களைப் பாளையக்காரர் என்று ஒப்புக் கொண்டனர். இப்பாளை யங்களைப் பளையக்காரர்கள் பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்தனர். இப்பாளையத் தைப் 'பொள்ளம்' அல்லது 'ஜமீன்தாரி முறை' என்று அழைத்தனர்.

இப்பாளைப்பட்டு முறையைப் புகுத்தியவன் மதுரை நாயக்கன் விஸ்வநாதன் என்று கருதப்படுகிறான். பேராசிரியர் சத்தியநாதய்யரின் இக்கருத்தினைப் பேராசிரியர் இராசய்யன் ஏற்றுக் கொள்வதில்லை. பின்னவர் கூற்றுப்படி இம்முறை முன்பிருந்தே தமிழகத்தில் இருந்தது என்பதாம். பாண்டியர்களுக்குக் கீழ் பாஞ்சாலங்குறிச்சியில் கெட்டிப் பொம்மு குடும்பத்தார் ஆண்டு வந்தனர். இவர்களோ தெலுங்கு நாட்டிலுள்ள பெல்லாரி மாவட்டத்திலிருந்து வந்தவர்கள். மேலும் இம்முறை மதுரை நாட்டில் மட்டுமே இருந்தது. தஞ்சை, செஞ்சி, வேலூர்ப் பகுதிகளில் இல்லாமை பேராசிரியர் இராசய்யன் கருத்தை அணி செய்வதாகும். பாளையக்காரர் வழி நாயக்கர் பண, படை, பொருள், ஆயுத உதவி பெற்றனர். நாயக்கருக்குக் கீழியங்கி வந்தமையால், நாயக்கரின் வேண்டு கோளுக்குப் பெரும்பாலும் இணங்கியே நடந்து கொண்டனர்.

மதுரை நாயக்கர் விஸ்வநாதர் ஏறக்குறைய 72 பாளையப்பட்டுகளை ஆதரித்தார். இவற்றில் சிலர் தெலுங்கு குடும்ப வழியினர்; சிலர் கன்னட குடும்ப வழியினர்; சிலர் தமிழ் வழியினர். இவர்களில் கன்னடப் பாளையக்காரர் பெரும்பாலும் சேலம், கோவை மாவட்டப் பகுதிகளிலும், தமிழ்க் குடியினர் மதுரை நாட்டின் நடுப்பகுதிகளிலும், தெலுங்கு வழியினர் இவற்றிற்கிடையிலும் இயங்கி வந்தனர். இப்பாளையப்பட்டுகளில் மிகவும் முக்கியமானவை: விருபாக்சி, கன்னிவாடி, அரியலூர், உடையார்பாளையம், நத்தம், மேலூர், நெல்காட்டெஞ்செவ்வல், சிவகிரி, சிறுவயல், இராமநாதபுரம், எட்டைய புரம், பாஞ்சாலங்குறிச்சி, நிலக்கோட்டை, தேவாரம், கம்பம், மணியாச்சி, ஏழாயிரம் பண்ணை என்பன.

நாயக்கர் நவாப் தொடர்பு

விஸ்வநாதரின் காலத்தில் நெல்லையம்பதியில் பஞ்சபாண்டியர் கலகம் புரிந்தனர். அதனை அடக்க அரியநாதமுதலி அனுப்பப்பட்டார். வெற்றி தவறிவிட்டதால், விஸ்வநாதரே சென்று, அவர்களையடக்கி, அவர்களையும் பாளையக்காரர் என்று ஒப்புக் கொண்டார். இப்பாளையக்காரரின் கயத்தாற்றுப் பகுதி புகழ் பெற்றது. பின்னர் விஸ்வநாதர் கம்பம் கூடலூர்ப் பாளையக்காரரை அடக்கினார். இவர்களையடக்க உதவிய ராமபத்ர நாயக்கர் வடகரைப் பாளையத்தைத் தோற்றுவித்தார்.

பாளையக்காரர் தம் வருவாயில் 1/3 பகுதியைத் திறையாக நாயக்கருக்குச் செலுத்தினர். நாடு போரால் அவதிப்படும் போது படை, பொருள், இதர உதவிகளை யளித்து வந்தனர். இப்பாளையப்பட்டு முறையை A.J. ஸ்டூவர்ட் சிறப்பித்துக் கூறினார். வேறுசில காரணங்களுக்காகக் கால்டுவெல் குறை கூறினார். இராமநாதபுரம், புதுக் கோட்டைப் பாளையங்கள் பிற்காலத்து எழுந்தவையே. 1702- இல் சேதுபதிகள் மதுரை நாயக்கர் மேலாண்மையை உதறி தனி நாடு கண்டனர். அதுகாறும் அடங்கியே நடந்தனர். 'திருமலை சேதுபதியே' இதற்கு எடுத்துக்காட்டு. அடங்காமைக்குக் கிழவன் சேதுபதி எடுத்துக்காட்டு. சேதுபதி கிழவனால் தோற்றுவிக்கப்பட்டதே புதுக்கோட்டைப் பாளையம்; சிவகங்கையும் அது போன்று இராமநாதபுரத்திலிருந்து பிரிந்து தோன்றியதே. நவாபுகள் சேதுபதிகளைத் தனி நாட்டார் என்று கருதியதேயில்லை. அவர்களை அடக்கியொடுக்கவே தம் காலத்தைச் செலவழித்தார் முகமது அலி. ஆங்கிலேயர் இவர்களை ஜமீன்தார் என்று கருதினர்.

மதுரை நாட்டிலேற்பட்ட அந்நியப் படையெடுப்பால் பாளையப்பட்டுகள் பலம் பெற்றன. மைசூரியர், நவயதர், மராத்தியர், வாலாஜாக்களின் படையெடுப்புகளால் இவர்களின் செல்வாக்குப் பெருகிற்று. சந்தாசாகிப்பை எதிர்த்துப் போரிட்டோரில் நத்தம், மேலூர், புதுக்கோட்டைப் பாளையங்கள் முக்கியமானவை. (அது போன்று கான்சாகிப்பை அடக்குவதில் சிவகங்கையும், புதுக்கோட்டையும், இராமநாதபுரமும் முக்கியமானவை). சந்தாசாகிப் மீனாட்சியைச் சிறை செய்து, அதிகாரத்தைப் பிடுங்கிய பின், அரியலூர், புதுக்கோட்டை, உடையார் பாளையங்களைத் தாக்கினான். இவர்களில் பலரைச் சிறை செய்து மதுரையிலடைத்தான். அவதியுற்ற பாளையங்களுக்குதவ மராத்தியர் படையெடுத்தனர். சந்தாசாகிப்பை மராத்தியர் சிறை செய்து 1740- இல் சதாராவுக்கு அனுப்பினர். இவ்வேளையில் நைஜாம் மதுரையைக் கைப்பற்றி, வாலாஜாக்களைப் பதலியிலமர்த்தினான். இதனாலும் பாளையக்காரர் பாதிக்கப்பட்டனர்.

1744- இல் மாபுஸ்கான் மதுரை, நெல்லைப் பகுதிகளின் கலெக்டராக வந்து, பாளையங்களிலிருந்து திறை வாங்கி நவாபுக்கு அனுப்பி வந்தார். மாபுஸ்கானால் நிலைமையைச் சரிக்கட்ட முடியாத நிலையில், முகம்மது அலி வந்தார். அலி நத்தம் கள்ளர்களை வென்று மதுரையை மீட்டார். திருநெல்வேலி பாளையக் கூட்டணியையும் கலைத்தார்; அவர்களின் கோட்டைகள் பல தகர்க்கப்பட்டன. தொடர்ந்து ஏற்பட்ட கருநாடகப் போரில் பாளையக்காரர் தாம் விரும்பிய பக்கம் சேர்ந்தனர். இதனைப் பயன்படுத்தித் தம் விடுதலையையும் வெளியிட்டனர்.

இவ்வாறு தலைமுறையாக அனுபவித்து வந்த சுதந்திரத்தை ஆங்கிலேயர் அவமதித்தனர். பாளையப்பட்டுகளை அழிக்கத் திட்டமிட்டனர். திறை செலுத்து முறையைக் கட்டாயமாக்கினர். தங்கள் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளக் கட்டளை யிட்டனர். விளைவு கலகம். கலகத்தின் விளைவு பாளையங்களின் அழிவு. மொத்த விளைவு கம்பெனியின் செல்வாக்கு விரிவாக்கம்.

பாளையப்பட்டு நிர்வாகம்

பாளையக்காரர் பரந்த நிலப்பரப்பின் தலைவர். நிர்வாகம், படை, காவல், வருவாய்த்துறைகளுக்குரியவர்கள். சமுதாய, பொருளாதார, பண்பாட்டுக் காவலர். ஒரு வகையில் இவர்கள் இயக்கம் இடைக்கால ஐரோப்பிய பிரபுக்களை ஒத்திருந்தது. அல்லது மாறுபட்டிருந்தது. மேலும் சில வகைகளில் இடைக்கால இந்திய ஜாகீர்தாரி, ஜமீன்தாரி முறைகளை ஒத்திருந்தது அல்லது மாறுபட்டிருந்தது. பாளையக்காரர், ஜாகீர்தார், ஜமீன்தார்களின் கடமைகளை ஆற்றி வந்தனர். படைப்பராமரிப்பு, குடிகளையும், சாதி களையும் காப்பாற்றுதல், உள்நாட்டுப் பிரச்சனைகளையடக்குதல், துரோகிகளை அடக்கு தல், ஒழுங்காய் திறை செலுத்துதல் (தவறினால் மக்களைத் துன்புறுத்தல்), நாட்டுக் காவல் இன்மையால் சொத்து இழப்பு ஏற்படின் நட்டம் வழங்குதல், நாட்டமைதியைக் காத்தல் என்பன குறிப்பிடத்தக்க கடமைகள்.

பாளையங்களுக்குப் பாளையம் எல்லைகளும் பரப்பளவும் வேறுபட்டன. சில மிகப் பெரியன; சில மிகச் சிறியன. பாளையக்காரர் நிலத்தைப் பண்படுத்தி வேளாண்மை செய்ய கூலியாட்களையும், ஏர்களையும் வைத்திருந்தனர். திடீர் உதவிகளுக்காகக் கிராமங்களில் படையையும் நிறுத்தியிருந்தனர். நிலத் தொழிலாளர் பள்ளர் என்று அழைக்கப்பட்டனர். உழைப்புக்கு ஊதியம் குறிப்பிட்ட அளவு உலர்ந்த தானியங்கள்; வேறு வருவாய் அவர்களுக்கில்லை. பாளையங்கள் பெரும்பாலும் மலை காடுகளுக்கண்மையில் இருந்தன; பாதுகாப்பு இயற்கையாய் அமைந்ததாயிற்று.

நிர்வாகம்

பாளையக்காரர் பெரும்பாலும் சர்வாதிகாரியே. பாளையத்தைப் பொறுத்த வரை ஆட்சித்துறை மற்றும் படையதிகாரங்களின் தலைவர். நாட்டு வரியை வசூலித்தனர்; நாட்டில் ஒழுங்கமைதியை நிலைநாட்டினர்: படையமைப்பைப் பத்திரப்படுத்தினர்; நீதி வழங்கினர். தளவாய் என்பவரே தலைமை அமைச்சர், படையமைச்சரென்னும் ஷெரோகாரும் (sherogar) நிர்வாகத்தில் உதவினர். சிறப்பு நாட்களில் பாளையக்காரர் தம்மை மயில் போல் அலங்கரித்து, தர்பார்கள் நடத்தினர். குதிரை மீது சவாரி, யானை மீது பயணம், ஒட்டகம் மீது உல்லாசம், பல்லக்கில் பவனி வருதல் இவர்களுக்கு வழக்கம்.

பெரும்பாலும் பாளையக்காரர் கிராம நிர்வாகத்தில் தலையிடவில்லை. ஆனால் இப்பாளைய முறையால் கிராமங்கள் தன்னாட்சியை இழந்தன என்று கருத இடமுண்டு. பாளையக்காரர் அண்டை கிராமங்களைத் தாக்கிப் பாளையத்துடன் சேர்த்துக் கொண்டதே அதற்குக் காரணம். பேராசிரியர் A. கிருட்ணசாமியின் இக்கருத்து பெரும் பாலும் உண்மையே. பாளையக்காரனே கிராம அதிகாரிகளைப் பெரும்பாலும் நிய மித்தான். கணக்கனும், கிராமத் தலைவனும் பாளையக்காரனுக்குத் தலைவணங்கியவரே. இவர்கள் பரம்பரையாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். கிராமத் தலைவன் மக்காடம் (Maccadam) படேல் (Patel) என்று அறியப்பட்டார். அவருடைய தொழில் வரி வசூலித்தல், நீதி வழங்குதல். வரி வசூலைப் பொறுத்து தலைவனுக்கு உதவுவதே கணக்கனின் கடமை. இவர் தன்னிடம் பத்திரப் புத்தகம் வைத்திருந்தார். கிராமத்தைப் பொறுத்து அனைத்தையும் அதில் குறித்திருந்தார். நீதி விசாரணை பெரும்பாலும் தல

பஞ்சாயத்தாலும், பாளையக்காரனாலுமே செய்யப்பட்டது. கிராமப் பஞ்சாயத்து குறைகளின் இருப்பிடம். கையூட்டு வாங்குதல், பொய்க்கணக்கு ஒப்பித்தல் அவர்களின் 'சிறப்புக் கடமைகள்'. பஞ்சாயத்து சரியான முறையில் நீதி வழங்காவிடில் மக்கள் தங்கள் தலைவனுக்கு விண்ணப்பம் செய்யலாம்.

நிதி

நில வருவாய், சொந்த சொத்து வருவாய், சுங்கம், காவல் கூலி, மேலும் இதர வருவாய்கள் பாளையக்காரருக்கு இருந்தன. பாளையக் காரனின் பங்கு 'பொதுச் செலவு' என்று அறியப்பட்டது. வரி நிர்ணயத்துக்காக நிலம் நால்வகையாகப் பிரிக்கப்பட்டது. அவை: (1) கிரிசூல் (Kirsul) என்ற கரும்பருத்தி நிலம்; இது கற்கூழங்களற்றவை, (2) செவல் (Sheval): செம்மண், சரளைக்கல், கற்கூழாங்கல், மணல் கலந்த மண், (3) பொட்டல் (Pottal): கரும், வெண்மண், கூழாங்கல் சேர்ந்த மண், (4) வேப்புல் (Veppul): பழுப்பு, களி, மணல் மண்வரை. இம்முறை நீர்ப்பாசன வசதி பெற்ற செழிப்பு நிலங்களைப் பொறுத்தது. தரிசு நிலங்களுக்கு வேறுமுறை பின்பற்றப்பட்டது.

பாளையங்களில் வாழ்வோர் தம் வரியைக் கிராமத் தலைவனிடம் ஒப்படைக்க வேண்டும். சர்க்கார் பகுதிகளின் வரியை முறையான அதிகாரிகளிடம் கொடுக்க வேண்டும். கம்பெனியாரின் குறிப்புகளின்படி சேதுபதிகளின் ஆட்சியின் போது இராம நாதபுரம் செழிப்புடன் தோன்றியது. 1765- இல் நவாப் நேரடி ஆட்சிப் பொறுப்பேற்கவே, அந்நிலை சரிந்தது. 1765- இல் நவாப் அரியலூரையும், உடையார்பாளையத்தையும் ஆக்கிரமித்த வேளையில், அப்பகுதிகளில் நிலவரி குறைவாயிருந்தது கண்ட நவாப் அதிகாரிகளாகிய அமல்தார்கள் அதனை நான்கு மடங்கு கூட்டினர். பாளையக்காரர் ஆட்சியில் வரிக்கொடுமை குறைவு என்று தோன்றுகிறது.

காவல் முறை

மத்திய அரசோ, கிராம சபைகளோ கட்டுப்படுத்தி வந்த காவல் பராமரிப்பு கிராமங்களில் இருந்து வந்தன. "முகலாயர் படையெடுப்பு வரை பாளையப்பட்டும் காவலும் இணையான இரு நிர்வாக முறைகளாக இயங்கி வந்தன" என்று பேராசிரியர் இராசய்யன் கூறுகிறார். காவல் முறை நால்வகை; (1) அரசு, (2) நாடு, (3) தேசம், (4) ஸ்தலம் காவல். இவர்கள் முறையே அரசுக் காவலர், நாட்டுக் காவலர், தேசக் காவலர், ஸ்தலக் காவலர் என்று அறியப்பட்டனர். அரசு ஆட்சியையும், நாடு மாவட்டத்தையும், தேசம் வட்டத்தையும், ஸ்தலம் குடிப்புறத்தையும் குறித்தன. திருட்டு நடந்தால் அதன் முழுப் பொறுப்பு காவலரைச் சேரும். சொத்தைக் காக்கத் தவறின் முழு நட்டத்தையும் ஏற்க வேண்டும். திருட்டிலிருந்து சொத்தைக் காப்பின் நன்மதிப்பு பரிசு வழங்கப்பட்டது. "கள்ளனைக் கொண்டு கள்ளனைப் பிடி" என்ற முறையைப் பின்பற்றினர். இதற்கு மறவரையும், கள்ளரையும் நியமித்தனர். சர்க்கார்ப் பகுதிகளின் காவலைப் புரிந்தோர் காவல்காரர்; பாளையத்தின் படைக்காவலர் பாளையக்காரர். இவற்றுக்கு நாட்டு மக்கள் பண உதவி தந்தனர்.

முகலாயர் படையெடுப்பின் போது இவ்விரு முறையை அழிக்க முடிவெடுத்தனர். காவல்காரர்கள் பதவி நீக்கம் ஏற்படவே, அவர்கள் தங்களின் நிலை குறித்து பாளையக் காரருக்கு விண்ணப்பித்தனர். இவர்களைப் பாளையக்காரர் காவலராக நியமித்தனர். இவர்களின் உதவியைப் பெற்ற குடிமக்கள் அவர்களுக்கு வழங்கிய உதவித்தொகை 'தேசக் காவல்' என்று அறியப்பட்டது.

படைப்பராமரிப்பு

பாளையக்காரரின் வருவாயில் பெரும்பங்கு படைப் பராமரிப்புக்கென்று செலவாயிற்று. காவல்காரருக்கோ, மேலதிகாரிகளாகிய நாயக்கருக்கோ, நவாபுக்கோ, கம்பெனிக்கோ படையுதவி செய்ய வேண்டும். அவர்கள் மூவகைப் படையை வைத்திருந்தனர். அவை (1) அமரம் படையினர். (Amaram peons), (2) கட்டபுடிப் படையினர். (Catabudi peons). (3) கூலிப் படையினர். (mercenary peons). முதல் இரு பிரிவினரும் ஊதியம் நிலமாகப் பெற்றபோது, மற்றவர் ஊதியத்தைப் பணமாகவோ, பொருளாகவோ பெற்றனர். அமரம் படையினர் பரம்பரையினர்; சர்தார் என்பவரின் கீழ் இயங்கினர். இவர்களின் வேலை பாளையக்காரரின் வேண்டுகோள்களை நடை முறைப் படுத்துதல்; குறிப்பிட்ட கிராமங்களில் திருட்டைத் தடை செய்தல். இரண்டாம் பிரிவினர் போர்க்களக் கருவிகளை வைத்திருந்தனர். ஈட்டி, கல்லெறிக்கவண் போன்ற கருவிகளைத் தம் செலவில் வைத்துக் கொள்ள வேண்டும். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலத்தில் திருட்டு நடவாமல் காத்துக் கொள்ள வேண்டும். நெருக்கடி நேரங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டோரே மூன்றாம் பிரிவினர். இவர்கள் தங்கள் தலைவன் சொற்படி நடந்தனர். இவ்விதம் பெரும்படையை பாளையக்காரர் வைத்திருந்தனர்.

பளையக்காரர் பல மாதிரியான போர்க்கருவிகளைப் பயன்படுத்தினர். வில், அம்பு, பீரங்கி, காலாட்படைத் துப்பாக்கிகள், கவண்கற்கள், கேடயம், வாள், ஈட்டி, பழமையான துப்பாக்கிகள் போன்றன அவர்கள் பயன்படுத்திய கருவிகள். பாளையக்காரரும் , காவல்காரரும் பயன்படுத்திய ஒருவகைக் கருவியே 'வளைதடி' என்ற ஒருவகை கம்பு (தடி). இதன் ஒரு பக்கம் பருமனாகவும் கனமாகவும், மறுபக்கம் கூர்மையாகவுமிருந்தது. பாளையக்காரர் கோட்டைகள் பல கட்டியெழுப்பினர். இவை பெரும்பாலும் மண் கோட்டைகள், சில கற்கோட்டைகள். பரந்த பருத்தி நிலப்பரப்பிலோ அல்லது பாறைகள் மீதோ இவை எழுப்பப்பட்டிருந்தன. கோட்டையைத் தடைகழிகளாலோ, காடுகளாலோ பத்திரப்படுத்தினர். எதிரியின் தளவாடங்களிலிருந்து இரகசிய உளவு மூலம் செய்தி சேகரிக்க 'கிர்காரஸ்' (hircarrah) என்ற பிராமண ஒற்றரை நியமித்திருந்தனர். சமயச் சிறப்புக்காக அவர்கள் மட்டும் நாட்டில் எங்கும் சுற்றி வர அனுமதிக்கப்பட்டனர். சிறு துண்டுக் காகிதத்திலோ, பனையோலையிலோ ஒற்றர் செய்தி சேகரித்தனர். பகைவன் என்று சந்தேகப்பட்டால் அவனுடைய கண்காணிப்பில் வைக்கப்பட்டனர். பாளையக் காரர் ஒரு போதும் நேரடிப் போரில் இறங்கியதில்லை. யாரேனும் தங்கள் நாட்டைத் தாக்கின் அவர்களை எதிர்த்துப் போரிட்டனர். படையெடுத்து வந்தோரின் காலாட் படையைத் தந்திரம் மூலம் தடுத்து நிறுத்தினர். எதிர்த்து வந்தோர் மீது புலிபோல் பாய்ந்து போரிட்டனர்.

ஊதிய முறை

பாளையக்காரர் வருவாய் சேர்த்தனர். திறை செலுத்தினர்; நாட்டு நன்மைக்காகப் பணம் செலவிட்டனர். மேலாண்மைக்காகக் கொடுக்கும் திறை 'பீஸ்கிஷ்' அல்லது 'கிஸ்தி' யாகும். கருவிப் படையினர் பணமாக ஊதியம் பெற்றதில்லை. இவர்களுக்கு நிலங்கள் குறைந்த வரியுடன் விடப்பட்டன. சிவில் படையினருக்கு ஊதியம் பணமாகவோ, பொருளாகவோ, நிலமாகவோ தரப்பட்டது. மொத்த வருவாயில் பாளையக்காரர் மூன்றில் ஒரு பங்கு தம் செலவுக்குமாகப் பயன்படுத்தினர். ஊழியர் ஒரு போதும் முழு ஊதியம் பெற்றதில்லை.

ஊதியத்திற்காக விடப்பட்ட நிலங்கள் அமரம் அல்லது கட்டபுடி குத்தகை நிலம்; இம்மாதிரியான நிலங்கள் எட்டு அல்லது பத்து படைவீரரிடம் விடப்பட்டது. அவர்கள் மிராசுதார் என்ற முறையில் வரியைப் பெற்று, குறிப்பிட்ட அளவு நிலவரியைக் கட்டி வந்தனர். கட்டப்புடி குத்தகையில் தரிசு நிலங்கள் காடுகள் தரப்பட்டன. இவற்றை அடிப்படைப் பிரிவினர் பராமரிக்க வேண்டும். படைவீரர் பாளையக்காரனிமிருந்து பணம் கடன் பெற்று, வேளாண்மை செய்தனர். மூன்று அல்லது நான்காண்டு வேளாண்மைக்குப்பின் கடனைத் திருப்பிக் கட்டினால் போதும். இவ்வகை நிலங்கள் பரம்பரை பரம்பரையாக வந்தன. தகுதியான வாரிசு இல்லையெனில் நிலம் திருப்பிப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

கட்டபொம்மு அல்லது கெட்டிபொம்முவின் எழுச்சி (1790 – 1799)

கெட்டிபொம்முவால் தோற்றுவிக்கப்பட்டதே பாஞ்சாலங்குறிச்சி பாளையம். இவர்கள் பெல்லாரி மாவட்டத்திலுள்ள சாலிகுளத்திலிருந்து 11- ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்தனர். கெட்டிபொம்மு என்பது ஒரு வேளை பரம்பரைப் பெயராகலாம். ஜக வீரபாண்டிய கெட்டிபொம்மு பாண்டியர் கீழ் தலைவனாய் இருந்தான். சிற்றர சனாய் வீரபாண்டிய புரத்திலிருந்து ஆட்சி புரிந்தான். இவனும், வழிவந்தோரும் பின் பாளையக்காரராயினர். பாளையக்காரர் பொதுவாக அண்டைநாட்டைக் கொள்ளை யிடும் கொள்ளைக்காரர் என்றே அறியப்பட்டனர். ஏனெனில் அவர்களைக் கம்பெனியார் கொள்ளையிட்டனர். நாட்டுப் பாடல்கள் கூட கெட்டிபொம்முவைக் கொள்ளைக் காரனென்றே கூறுகின்றன.

வீரபாண்டிய கெட்டிபொம்மு ஜகவீரபாண்டியனின் மகன்; 1761- இல் பிறந்தான்; முப்பதாம் வயதில் பாளையக்காரனானான். கம்பெனியாணையை மதித்து நடந்துவந்த கெட்டிபொம்மு, திறையும், கப்பமும், கிஸ்தியும், வரியும், வட்டியும் கட்டியவனே. படியாதவனாயினும், அமைதியானவனென்றே ஆங்கில நிர்வாகிகள் முதலில் கருதினர். 18 ஆம் நூற்றாண்டின் பின்பாதியின் பாளையக்காரரின் உடனடி மேலதிகாரி ஆர்க்காட் நவாப், இவர்கள் பாளையங்களிலிருந்து பல்லாண்டுகள் நிலவரியும் திறையும் பெற்று வந்தனர். 1792- ஆம் ஆண்டில் கையெழுத்தான கருநாடக ஒப்பந்தப்படி, இப்பகுதிகளின் வருவாயைப் பெறும் உரிமையைக் கம்பெனி பெற்றது. கம்பெனி கலெக்டர்களை நிய

மித்து இவ்வருவாயைப் பெற்று வந்தது. இக்கலெக்டர்கள் பாளையக்காரரை ஏளனம் செய்ததுடன், கொடிய முறையில் நடத்தினர். பல பாளையங்கள் கம்பெனிக்கு அடிபணிந்து இயங்கின. வரி வாங்கும் முறையில் இருதரப்பினருக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

1798- ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதமுதல் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வரும் திறை ஒழுங்காய் வரவில்லை. இராமநாதபுரம் கலெக்டர் காளின் ஜேக்ஸன் கெட்டி பொம்முவிடம் திறை செலுத்துமாறு கடிந்து கடிதம் வரைந்தார். கெட்டிபொம்மு கலெக்டரின் அவசரச் செயல்களுக்குத் தலை வணங்கவில்லை. கெட்டிபொம்முவின் எதிர்ப்பினைக் கூறும் கூற்றாவது: "வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, உனக்கேன் நாங்கள் தரவேண்டும் வரி, வட்டி, கிஸ்தி?" மேலூர், நத்தம் கள்ளர்களே முதன் முதலில் இக்கூற்றைக் கூறி கம்பெனியை எதிர்த்தனர்.

ஜேக்ஸன் கெட்டிபொம்முவைத் தண்டிக்கத் திட்டமிட்டு, அவன் நாடு மீது படை யெடுப்பு நிகழ்த்தினான். அது அவசியமற்ற, நியாயமற்ற செயல் என்று சென்னையரசு கண்டித்தது. அரசு கெட்டிபொம்மனைக் கலெக்டரைப் பார்க்குமாறு வேண்டியது.

கம்பெனிக்குக் கொடுக்க வேண்டிய திறைப் பாக்கியைப் பற்றிப் பேச, கலெக்டர் கெட்டிபொம்முவை அழைத்தார். கடிதத்தை அனுப்பிவிட்டு கலெக்டர் திருநெல்வெலி யைச் சுற்றி வந்தார். கெட்டிபொம்மு கலெக்டரைப் பார்க்க குற்றாலம் சென்றான். அங்கு கலெக்டரைப் பார்க்க இடம் தரவில்லை. இப்போது கெட்டிபொம்மு தர வேண்டிய பாக்கியுடன் வந்தான். கலெக்டரை அவன் சொக்கம்பட்டி, சிவகிரி, சேத்தூர், திருவில்லிபுத்தூர் என்ற இடங்கள் வழி பின் தொடர்ந்தான்; இருபத்துமூன்று நாட்கள் இப்படிக் கடந்தன. இறுதியில் இராமநாதபுரத்தில் சந்திக்குமாறு பணித்தார்.

1798- ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள் 19- ஆம் நாள் கெட்டிபொம்முவுக்கும், சிவசுப்ரமணிய பிள்ளைக்கும் சந்திப்பு உத்தரவு கிட்டியது. அங்கு இருவரும் கலெக்டர் முன் நாணயமற்ற முறையில் நடத்தப்பட்டனர். சந்திப்பின் இறுதியில் இருவரையும் கைது செய்ய கலெக்டர் திட்டமிட்டான். தம்பி ஊமைத்துரையின் உதவியுடன் கெட்டிபொம்மு கோட்டையிலிருந்து தப்பித்துக் கொண்டான், அமைச்சர் கைதானார். கோட்டைவாயிலின் காவலர் கிளார்க் வெட்டி வீழ்த்தப்பட்டார்; பலர் காயமுற்றனர். இச்செயலைக் கண்டித்து கெட்டிபொம்மு சென்னையரசுக்குக் கடிதம் எழுதி, நீதி வேண்டினான்.

கம்பெனி ஆட்சியுடன் தனது நாட்டையும் ஒப்படைக்கக் கேட்டு சென்னை ஆளுநர் எட்வர்ட் கிளைவு கெட்டிபொம்முக்கு கடிதம் எழுதினார். கலெக்டரை பதவி நீக்கமும், அமைச்சரை விடுதலையும் செய்தார். இம்முடிவுக்கு ஒப்புக்கொள்வதாயிருந்த கெட்டிபொம்மு, பின் நடந்த செயல்களைக் கண்டு, தன் முடிவை மாற்றிக் கொண்டான்.

இதற்குப் பின்னரே கெட்டிபொம்முவைத் தேசியவாதியாகப் பார்க்கிறோம். தம் சுய மதிப்புக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் அவமானமேற்பட்டதால், ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்தான். இதற்கு அண்டை நாடுகளின் அரசியல் நிலைமைகளும்

ஒருவகையில் சாதகமாயிருந்தன. அதுவே பாளையக்கார கூட்டமைப்புகள். இச்சமயம் சிவகங்கையின் மருது பாண்டியனும், திண்டுக்கல்லின் கோபால நாயக்கும், ஆனை மலையின் யாதுல் நாயக்கும் இணைந்து தென்னிந்திய கூட்டணியைத் தோற்றுவிக்கப் பாடுபட்டு வந்தனர். இக் கூட்டணித் தோற்றத்தின் முன்னோடி மருது பாண்டியனே, அதன் தலைவனுமானான். மக்கள் அனைவரும் இணைந்து ஆங்கிலேயரை வெளியேற்று வோம் என்று மருது பாண்டியன் வேண்டினான். தஞ்சை, ராமநாதபுரம் விடுதலை விரும்பி களும், கள்ளர்களும் மருது பாண்டியனைத் தலைவராகக் கொண்டனர். கீழ் நெல்லைப் பகுதியில் அதிக பங்கேற்றவரே கெட்டிபொம்மு. மருதுவும் கெட்டிபொம்முவும் கூட்டுப்பேச்சு நடத்தாவண்ணம் தடைசெய்யப்பட்டனர். இதற்கான .ஏற்பாடுகளை மேற்கொண்டவர் ராமநாதபுரத்துக் கலெக்டர் லூஷிங்டன். இருப்பினும் இருவரும் சந்தித்துச் சில திட்டங்களைத் தீட்டினர்.

நாகலாபுரம், மன்னார்கோட்டை, பாவாளி, கோலார்பட்டி, சென்னல்குடி பாளையக்காரர்கள் தாங்கள் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு கெட்டிபொம்முவுடன் சேர்ந்தனர். இக்கூட்டின் தலைவன் கெட்டிபொம்மு. இத்துடன் சேர்ந்து கெட்டி பொம்மு இதனை வலுப்பெறச் செய்யுமாறு சாப்டூர், ஏழாயிரம் பண்ணை, கடல்குடி, குளத்தூர் பாளையக்காரரையும் வேண்டினார். கள்ளர், மறவரையும் இக்கூட்டில் சேருமாறு வேண்டினார். சிவசுப்பிரமணிய பிள்ளையின் தம்பி பாண்டியன் பிள்ளையை மதுரைக்கு அனுப்பி, செய்தி சேகரித்தார். இது வழி கம்பெனியின் படை பலத்தையறிந்தார். ஐரோப்பியர் பற்றிய விவரம் சேகரிக்க ஒற்றரையும் நியமித்தார்.

1799- ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் சிவகிரிப்பாளையக்காரரின் மகன் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்து சிவகிரிப்பளையக்காரரையும் இக்கூட்டில் சேர்த்துக் கொள்ளுமாறு கெட்டிபொம்முவை வேண்டினான். சிவகிரி பாளையக்காரர் ஆங்கிலக் கம்பெனியின் நட்புறவைச் சேர்ந்தவர். பாளையக்காரரின் மகனுடைய செயல் கம்பெனி ஆணையை மறுப்பது போல் தோன்றியது. உடனே சென்னையரசு கலகக்காரரை அடக்குமாறு ஆணை பிறப்பித்தது. கெட்டிபொம்மு எவ்விதத் தீங்கும் இழைக்காதபோதும், கம்பெனி அவர்மீது பழிக்குப்பழிவாங்க முடிவு செய்தது.

பாஞ்சாலங்குறிச்சி வீழ்ச்சி

அந்நாளைய கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி சென்னையரசுக்கு ஆணையிட்டுப் படையெடுப்பு தொடங்கிற்று. தஞ்சைப்படை, திருச்சிப்படை, மதுரைப்படை, திருவிதாங்கூர் படை அனைத்தும் அந்தந்த திசைகளிலிருந்து திருநெல்வேலி நோக்கிப் புறப்பட்டன. அப்படையெடுப்புக்குத் தளபதி மேஜர் பானர்மான் (Major Bannerman) இராமலிங்கமுதலியார் மூலம் பாளையங்கோட்டையில் தம்மைச்சந்திக்குமாறு கெட்டிபொம்முவுக்குச் செய்தியனுப்பினான். இது நடக்காது போகவே, செப்டம்பர் திங்கள் 5- ஆம் நாள் பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கத் துணிந்தான்.

மண்ணால் செய்யப்பட்ட கெட்டிபொம்முவின் கோட்டையோ 500 அடி நீளமும் 300 அடி அகலமும் கொண்டது. முற்றுகைப்படை முதன் முதலில் கோட்டைக்கும் வெளியிலுமுள்ள செய்தித் தொடர்பைத் துண்டித்தது. கோட்டையைக் காப்பாற்ற கிராமங்களிலிருந்து பல வீரர்கள் ஓடி வந்தனர். ஆனால் அவர்கள் துரிதமாக தடுக்கப்பட்டனர். கெட்டிபொம்முவைக் கம்பெனிக்கு அடங்குமாறு வேண்டச் சென்ற இராமலிங்க முதலியார் அக்கோட்டையின் பாதுகாப்பு பற்றிய செய்திகளைச் சேகரித்து வந்தான். (கோட்டையின் பாதுகாப்பு பற்றிய செய்திகளைச் சேகரித்து வந்தான்.) கோட்டையின் மூல வாயிலுக்குக் கிழக்கே சில இடங்களில் கோட்டையில் பிளவு இருப்பதைப் பானர்மானுக்கு அறிவித்தான்; உள்ளரண்களுக்கான பாதுகாப்பு முயற்சி கள்அது வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. அக்கோட்டையோ ஏறக்குறைய 1200 முதல் 1500 வீரர்களால் மட்டுமே பாதுகாக்கப்பட்டுள்ளது என்பன அவன் அறிந்த இரகசியச் செய்திகள். கெட்டிபொம்மு போருக்கு இன்னும் தயாராகவில்லை என்பது உணர்ந்த பானர்மான், இதுவே தகுந்த வேளை என்று நினைத்து கோட்டையைத் தாக்கி னான். கம்பெனிப் படைகள் தென்வாயிலைத் தாக்கின. எட்டையபுர—திருவிதாங்கூர் படைகள் வட வாயிலையும் தாக்கின. கோட்டையை ஊமைத்துரை தீவிரமாகக் காத்து நின்றான்; அன்னியப் படைகளைச் சிதறடித்தான். மீண்டும் அப்படைகள் ஒன்றுகூடி கோட்டையைத்தாக்கின. மீண்டும் அவர்கள் விரட்டப்பட்டனர். கோட்டை மீது தோன்றிய அனைத்து வீரர்களையும் பகைவர் கொன்று வீழ்த்தினர். அரண், உடைவுப் பகுதிகள் மூலம் தாக்கப்படவே, வீரர்கள் பகைவருக்குத் தெரியாத இடங்களில் நின்று கொண்டு உடைவுப் பகுதி மூலம் வந்த பகைவரைக் குத்திக் கொன்றனர். தோல்வியைத் தழுவும் நிலையில், பகைவர் மேற்கொண்டு படைவேண்டுமென்று அரசிடம் கேட்டனர். செப்டம்பர்த்திங்கள் 6- ஆம் நாள் புதுப்படை வந்தது. கோலார்ப்பட்டியில் நடந்த போரில் சிவசுப்ரமணியப்பிள்ளை கைது செய்யப்பட்டார். கோட்டை தகர்க்கப்பட்டது. வீரர்கள் எவ்வளவோ முயன்றும் பகைவரின் குண்டு வீச்சுக்குக் கோட்டை அடிபணிந்தது. கெட்டிபொம்மு தப்பியோடி, புதுக்கோட்டை ராஜா விஜய ரகுநாத தொண்டைமான், கெட்டிபொம்முவுக்கு விருந்து வைத்துக் கைது செய்தான். கெட்டிபொம்மு இத்துரோகியால் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டான். ஊமைத்துரையும் பிறரும் சிவகெங்கைக்கும், திண்டுக்கல்லுக்கும் ஓடி ஒளிந்தனர். கெட்டிபொம்மு குற்றவாளி என்று குற்றம் சாட்டப்பட்டு கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார். 1799- ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் நடந்த இக்கொடிய செயல் இந்திய வரலாற்றின் ஒரு திருப்புமுனை. முந்தின மாதம் 13- ஆம் நாள் சிவசுப்ரமணியப்பிள்ளையும் நாகலாபுரத்து சௌந்திர பாண்டியனும் இவ்வாறே கொல்லப்பட்டனர். அவன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களும், அதற்குக் கெட்டிபொம்மு அளித்த மறுப்பும் தமிழகமெங்கும் முழங்குகின்றன. குற்றச்சாட்டுகள் 1) திறைப்பணபாக்கி நிறைய இருந்தமை, (2) படையுடன் கலெக்டரை சந்தித்தமை, (3) பானர்மான் சரணடையக் கோரியபோது உடன்படாமை, (4) மற்ற பாளையக்காரரைக் கலகத்திற்குத் தூண்டியமை, (5) போர்ப்பிரகடன நாளில் தளபதி பானர்மானைக் கண்டு பேசாமை.

மதிப்பீடு

தொடக்கத்தில் கம்பெனிக்கு எதிர்ப்பு என்பது என்னவென்று அறியாத கெட்டிபொம்மு, தம் சொந்த கௌரவம் தாக்கப்பட்டபோது, கம்பெனிக்கு எதிராகத் துணிந்தெழுந்து, கூட்டுக்கள் ஏற்படுத்தி, போரிட்டு வீரமரணமடைந்தார். கம்பெனியார் இவரை "கொள்ளைக் கூட்டத் தலைவன்" எனறு குறிப்பிட்டபோதும் அவர் அடங்கியே கிடந்தார். அண்டை நாடுகளைத் தாக்கி, அங்கு கம்பெனியின் அதிகாரிகள் நிறுத்தப்பட்ட போதும், அதுபற்றித் தொடக்கத்தில் அவர் கவலைப்படவில்லை. சுதந்திரப்போர் வீரரென்றால், கோட்டையை விட்டு வெளியேறியிருக்கக் கூடாதென்பர். இறுதிச் சொற்களில் தம்பி ஊமையனைப்பற்றியும், கோட்டையைப் பற்றியுமே கவலைப்பட் டுள்ளார் என்று கூறுவர். கெட்டிபொம்மு நேரடி சுதந்திரப் போரைத் தொடங்கா விடினும், அதற்கான சூழலை உருவாக்கினார்.

பயிற்சி வினா

பாளையக்காரர் முறை பற்றி கட்டுரை வரைக.

பாடம் – 25 தென்னிந்தியப் புரட்சி – வேலூர்க்கலகம்

இந்தியாவில் வாணிகம் செய்து பொருளீட்ட வந்த ஆங்கிலேயர்கள் நாளடைவில் படையெடுப்பாளராகவும் குடியேற்றவாதிகளாகவும் மாறினர். கி.பி. 1600 இல் கொடுக்கப் பட்ட எலிசபெத் அரசியாரின் சாசனத்தின் சரத்துக்களின்படி, இந்தியாவில் ஆங்கிலே யர்கள் தங்களது ஆதிக்கத்தைப் பெருக்க முயன்று கம்பெனி ஆட்சி ஒன்றினை ஏற்படுத்தினர். இந்தக் கம்பெனியின் நிர்வாக முறை இலண்டனிலிருந்த கட்டுப்பாட்டுக் குழுவினால் கண்காணிக்கப்பட்டு வந்தது. ஆங்கிலேயர் பல பாளையங்களையும் சிற்றரசு நாடுகளையும் சார்பு நாடுகளையும், மற்றும் பல கேந்திரங்களையும் திறமான எதிர்ப்பிற்கிடையே தங்களது ஆட்சிப் பகுதிகளாக்கிக் கொண்டனர். தங்களது இராணுவ வலிமையைப் பெருக்கிக் கொள்வதற்காக இந்தியப் பொருளாதாரத்தை விரயம் செய்தனர். அரசியல் சுதந்திரமற்ற எந்த ஒரு நாடும் மக்களின் ஒருமித்த நம்பிக்கையைப் பெற்று இயங்க முடிவதில்லை. நிர்வாகச் சீர்கேடுகளைக் களைய வேண்டியும், இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டியும் கம்பெனி முயன்றது. தொடக்க காலத்தில் ஆங்கிலேயர் எல்லாவிதமான முன்னேற்றக் கொள்கைகளையும் தடுத்தனர்; இந்தியாவின் வெளிஉறவு விவகாரங்களிலும் கண்காணிப்புச் செய்தனர். எனவே அவர்களது நோக்கங்களுக்கும், ஆட்சிக்கும் எதிராகப் பல்வேறு கலகங்கள் எழுந்தன. அவ்வாறு ஏற்பட்ட புரட்சிகளில் முக்கியமான ஒன்று தென்னிந்தியப் புரட்சியாகும். காங்கிரஸ் இயக்கத்திற்கு முன்பு ஏற்பட்ட விடுதலைப் போர்களுள் இத் தென்னிந்தியப் புரட்சியே சிறப்பானது எனக் கூறப்படுகின்றது. கம்பெனியின் அரசியல் ஆதிக்க நெறி, பொருளாதார விரயம், சமுதாயச் சீர்கேடுகளில் தலையிடாமை போன்றவையே தென்னிந்தியப் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்களாகும். கம்பெனிக்கு எதிராக ஏற்பட்ட பிராந்திய சபைகளும், தீபகற்பக் கூட்டமைப்பும் கி.பி. 1800-01- இல் புரட்சியை ஏற்படுத்தின. இப்புரட்சிக்குத் தலைமை தாங்கிய மருது பாண்டியன், கட்டபொம்மன், கோபால நாயக்கர், கேரளவர்மர் போன்ற தேசியப்பபற்று மிக்க தலைவர்கள் நாட்டு மக்களின் மனத்தில் ஒருமைப் பாட்டையும் தேசியப் பற்றினையும் புகுத்தினர்.

தென்னிந்தியப் புரட்சிக்கான காரணங்கள்

தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்கள் நுழைவதற்கு முன்பு பாளையக்காரர்முறை, சிற்றரசு நாடுகள் குறுநிலப் பகுதிகள், கிராமங்கள் ஆகிய முறைகள் செயலிலிருந்தன. இவ்வாறான நிர்வாகத்தின் ஆட்சிமுறை சிறப்பானதாக இருந்து வந்தது. அரசியல் வாழ்வில் பாளையக்காரர்கள் முக்கிய பங்கு பெற்றிருந்தனர். ஆங்கில அரசு பாளையக்காரர்களை "ஒழுங்கற்ற கொள்ளைக்காரர்கள்" எனவும் "விவரம் மிக்க தலைவர்கள்" எனவும் கருதியது. பாளையக்காரர்கள் அரசியல் அமைப்புச் சலுகைகள் அனைத்தையும் பெற்றி ருந்தனர். தங்களது ஆட்சிப் பகுதியையும், மக்களையும் அன்னியர் ஆதிக்ககத்திலிருந்து; காத்தனர். கிராம சமுதாய மக்கள் தங்களுக்கென கிராம சபைகளையும் ,நிர்வாக முறையையும் வைத்திருந்தனர். கிராமக் காவலர்கள் என்போர் நியமிக்கப்பட்டனர். அவர்களது கடமை, கிராமங்களில் அமைதியை நிலைநாட்டுவதாகும். நாயக்கர் ஆட்சிக் காலத்தில் கிராம சபைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றாலும் அவைகள் தன்னுரிமை பெற்று பொது நோக்குடன் செயல்பட்டன என்பதில் ஐயமில்லை.

தென்னிந்தியாவில் பிரிவினைக் கொள்கைகள் இருந்து வந்த சூழ்நிலையில் ஆங்கிலக் கம்பெனி அரசியல் விவகாரங்களில் தலையிட்டு செல்வாக்குப் பெற முயன்றனர். ஆங்கில ஆட்சியின் தலையீட்டை எதிர்த்த அரசுகளும் அவ்வரசுகளுக்கு ஆதரவாயிருந்தவர்களும் ஒடுக்கப்பட்டுச் சீரழிக்கப்பட்டனர். திண்டுக்கல், சேலம், கோயம்புத்தூர், வேணாடு, மலபார், கனரா, சூந்தா போன்ற பகுதிகள் உள்ளடங்கிய பெரும் நிலப்பரப்பை ஆங்கிலேயர் தம் ஆட்சிப்பகுதியில் இணைத்துக் கொண்டனர். மைசூரியர்களும் மராத்தியர்களும் கூடத் தோல்வியுற்றுத் துவண்டு போயினர்.

ஒடுக்கப்பட்டுவிட்ட சில சிற்றரசு நாடுகள், தங்களது பழைய அந்தஸ்தை நிலைநாட்ட முடியாது தவித்தன. எனவே அவை தங்களது ஆடம்பர வாழ்க்கைக்கு உதவி செய்யுமாறு ஆங்கிலக் கம்பெனியைக் கேட்டுக் கொண்டன. இவ்வாறான உதவி நாடியவர்கள் பொம்மைகள் போன்று நடத்தப்பட்டனர். கலகங்களைத் தூண்டிவிடும் உள்நாட்டுத் தலைவர்களுக்கு எதிராக ஆங்கில அரசுக்கு உதவும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாங்கூர், ஆற்காடு, மைசூர், பூனா, ஹைதராபாத் போன்ற சிற்றரசு நாடுகள் ஆங்கிலக் கம்பெனியின் இராணுவச் செலவுகளை ஏற்றுக் கொள்வதாக ஒத்துக் கொண்டன.

ஆற்காடு நவாப் முகமது அலி, துணையரசுகளை ஒடுக்குவதற்காக ஆங்கிலக் கம்பெனியின் உதவியை நாடினார். 1787 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் படி ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஏற்றுக்கொண்டார். தனது கோட்டைகளை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்ததோடு அவைகளை இடித்து விடவும் அவர்களுக்கு உரிமை வழங்கினார்; தென்னிந்தியாவில் ஆங்கில அரசு நடத்தும் எந்தப் போருக்கும் தனது வருவாயில் ஐந்தில் நான்கு பகுதியைத் தருவதாக ஒப்புக் கொண்டார். 1793- இல், முகமது அலி, பாளையக் காரர்களிடமிருந்து நேரடியாக திறைவசூலிக்கும் உரிமையை ஆங்கில அரசுக்குக் கொடுத்தார். இதுவே தென்னிந்தியப் புரட்சிக்கு முதல் காரணமாக அமைந்ததெனலாம்.

1776 இல், ஆங்கிலக் கம்பெனி, தஞ்சை அரசை துல்ஜாஜிக்குக் கொடுத்தது. இதற்கு ஈடாக நாகூரை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டது. 1787- இல் துல்ஜாஜி இறந்த பின்பு, அவரது மகன் செர்போஜி ஆட்சி பீடத்திலமர்ந்தார். ஆனால் ஆங்கிலேயர்கள், இவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவரது ஒன்று விட்ட சகோதரரான அமர்சிங்கைப் பதவியில் அமர்த்தினர். 1790- இல், கடைசியாக, ஆங்கிலேயர் தஞ்சை அரசின் வருவாய்த்துறை நிர்வாகத்தைத் தாமே எடுத்துக் கொண்டனர். 1790- இல் மராத்திய பேஷ்வா, கம்பெனியுடன் உடன்பாடு செய்து கொண்டு, மைசூரைத் தோற்கடித்தார்.

இம்மாதிரியான சட்டத்திற்குப் புறம்பான உடன்பாடுகளும், திட்டமிடலும் மக்களின் உரிமைகளுக்குப் பெரும் இன்னல்களை விளைவித்தன. ஊழலும் நிர்வாகச் சீர்கேடும் பன்மடங்கு பெருகின. நாட்டுப்பற்று மிகுந்த பாளையக்காரர்கள், குறுநிலத் தலைவர்கள் போன்றோர் ஆங்கிலேயரின் வருவாய்த்துறை, இராணுவத்துறைக் கொள்கைகளை எதிர்த்தனர். ஆனால் அவர்களின் எதிர்ப்பு தோல்வியுற்றது. சுதந்திர மனப்பான்மை அழிந்தது. பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டது. 1799- இல், தென்னிந்தியாவின் பெரும்பகுதிகளில் — ஆந்திரா, செங்கல்பட்டு, தஞ்சாவூர், திண்டுக்கல், இராமநாதபுரம்,

கோயம்புத்தூர், சேலம், ஸ்ரீரங்கப்பட்டினம், மலபார், கனரா ஆகிய பகுதிகளிலும் அதாவது கன்னியாகுமாரி முதல் கிருஷ்ணா நதி வரை தங்களது நேரடி ஆதிக்கத்தை ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தினர்.

பெரும்பான்மையான பாளையக்காரர்களையும், பாளையங்களையும் தங்களது ஆட்சியின்கீழ் கொண்டு வந்தனர். 1755- இல் ஆங்கிலேயர்கள் நத்தம் கள்ளர்களையும், மணப்பாரை கள்ளர்களையும் ஒடுக்கினர். கம்பெனியின் படை வீரர்கள் திருநெல்வேலி நோக்கி நகர்ந்த போது நட்டக்கோட்டையின் தலைவர் எதிர்த்தார். ஆனால் இது தோல்வியில் முடிந்தது. பாஞ்சாலங்குறிச்சி பாளையமும், நெல்காட்டன் செவ்வலின் தலைவரான புலித்தேவர் போன்றோரும் எதிரிகளை எதிர்த்துத் தீவிரமாகப் போரிட்டனர். ஆங்கிலேயரின் அடக்குமுறை அவர்களுக்குப் பெரும் எதிர்ப்பைத் தேடித்தந்தது. ஆங்கிலேயர், 1763 க்கும் 1757 க்கும் இடைப்பட்ட காலத்தில், கம்பெனி, திருநெல்வேலி பாளையக்காரரைத் தோற்கடித்தனர். அரியலூர் பாளையக்காரரையும், திருச்சிராப் பள்ளியில் உடையார்பாளையம் பாளையக்காரரையும் விரட்டினர்; மேலூரைக் கைப்பற்றிக் கொண்டனர். 1767- இல் சாத்தூர், சிவகிரி, வாசுதேவநல்லூர், சிங்கம்பட்டி ஆகிய பகுதிகளின் தலைவர்கள் கம்பெனியின் ஆளுகையின் கீழ்வந்தனர். கி.பி. 1790- இல் பாஞ்சாலங்குறிச்சியின் வீரபாண்டிய கட்டபொம்மன் தோற்கடிக்கப்பட்டு கம்பெனிக்குத் திறைசெலுத்த ஒத்துக் கொண்டார். 1796- இல் எர்ரவீடு, சங்கம்பட்டிமதூர் (திண்டுக்கல் பாளையப்பகுதி) ஆகிய பகுதிகள் கம்பெனியுடன் சேர்க்கப்பட்டன. அடுத்த ஆண்டு சென்னல்குடி பாளையம் கைக்கொள்ளப்பட்டது. 1799 இல் பெரும்பாலும் எல்லாப் பாளையங்களும் ஆங்கில ஆட்சியுடன் இணைக்கப்பட்டு, அவர்தம் கோட்டைகள் சீரழிக்கப்பட்டன.

நடைமுறையிலிருந்த வரிவசூல் முறையை நிராகரித்து, ஆங்கில அரசு தன் விருப்பப்படி, கிராமங்களிலிருந்து ஏராளமான வரிவசூல் செய்தது. பெரும்பான்மையான அறிஞர்கள் அன்னியர் ஆட்சியைக் கடிந்தனர். அவர்தம் தேசியக் கொள்கையும் தேசப்பற்றும் எந்நாட்டவர்க்கும் சலித்ததாக இல்லை. புரட்சியின் தலைவர்கள் ஆங்காங்கு இருந்த தங்களது இருப்பிடங்களிலிருந்து பனை ஓலையின் மூலமாகச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். சிவகங்கையின் மருதுபாண்டியன், ஆங்கில அரசுக்கு அடிபணிந்துவிட்ட தமிழகத்தின் தலைவர்களைக் கடுமையாகக் கண்டனம் செய்தார்.

கம்பெனியின் சிவில், இராணுவ அதிகாரிகள் இந்திய சிற்றரர்களுக்கும், குறுநிலத் தலைவர்களுக்கும் தாங்கள் சட்டத்திற்கு விரோதமாகத் திரட்டிய ஏராளமான செல்வத்தைக் கடனாகக் கொடுத்தனர். இதற்காக வசூலிக்கப்பட்ட வட்டிவீதத்தை நோக்கும் போது, கடன்வாங்கிய எவரும் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. ஆங்கில வணிகர்கள் இந்திய மக்களின் செல்வத்தை விரயமாக்கியதன் மூலம் அவர்தம் வாழ்வுக்கே தீங்கு விளைவித்தனர். கம்பெனி நிர்வாகம், இந்தியாவிலும், வெளிநாட்டிலும் இராணுவ விவகாரங்களுக்காக ஏராளமான பணத்தை விரயமாக்கியது. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்களுக்கும் அவர்தம் பகைவர்களுக்கும் ஏராளமான போர்கள் நடந்தன. இதற்கான செலவுகளுக்கு வரிப்பணம் தருமாறு இந்தியச் சிற்றரசு

களைக் கட்டாயப்படுத்தினர். எனவே தங்களது தாயகத்தில் இருந்து கொண்டு தங்களையே சுரண்டும் ஆங்கிலேயர்களைச் சிற்றரசர்களும், தலைவர்களும் எதிர்க்கத் தொடங்கினர்.

திண்டுக்கல், கூடலூர், கம்பம், பழனி, சேலம் ஆகிய பகுதிகளிலிருந்துதான் பெரும்பாலும் அதிக வரிவசூல் செய்யப்பட்டது. உதாரணமாக மைசூரில் ஆங்கிலேயர்கள் 1792- ஆம் ஆண்டு செயல்முறைப்படி 118 சதவீதம் வரிவசூல் செய்தனர். ஒரு கிராமத்தில் 9,000 பகோடாக்கள் (ஒரு பகோடா என்பது 3 ரூபாய்க்குச் சமம்) மட்டுமே வருமானமாக இருந்த போது ஆங்கிலக் கம்பெனி 41,500 பகோடாக்களை வரி செலுத்துமாறு கட்டாயப்படுத்தியது. எந்த ஒரு கிராமம் வரிசெலுத்தத் தவறியதோ அல்லது மறுத்ததோ அந்தப் பகுதி முழுவதையும் ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொள்வர்.

தங்களது அற்ப ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கொடூரமான திட்டங்களைப் பயன்படுத்தியதோடு இராணுவத்தையே முழுவதும் நம்பியிருந்தனர். கம்பெனி வரிவசூல் செய்யும் பணியைக் குத்தகைக்கு விட்டது. யார் அதிகப்பணம் குத்தகை தருகிறார்களோ அவர்களுக்கே விற்கப்பட்டது. இக்குத்தகைக்காரர்கள் மக்களிடமிருந்து பணத்தைப் பிழிந்து தங்களது வெளிநாட்டு அதிகாரிகளுக்கு ஏராளமான பணத்தைச் செலுத்தினர். வரிவசூல் செய்வதற்கு எந்தவிதமான கட்டுப்பாடு முறைகளும் செயற்படுத்தப்படவில்லை. நீர்ப்பாசன வசதி எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. எப்பதவியிலிருந்தும் ஒருவரை இறக்கவோ, அல்லது மற்றவரைப் பதவியிலமர்த்தவோ ஆங்கிலேயர்கள் பணமுடிப்பு பெறத்தவறவில்லை. பொதுவாகத் தென்னிந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் அரசு தனது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டி ஆங்காங்கே இராணுவத்தை நிறுத்தி வைத்திருந்தது. சிற்றரசுப் பகுதிகளில் நிர்வாகச் சீர்கேடுகளை ஏற்படுத்தியதோடு, கம்பெனி கையூட்டும் பெற்றது.

தமிழகம் தம் சிறப்பை வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே காத்து வருகின்றது. மிகப்பழங்காலத்திலிருந்தே மேற்கத்திய நாடுகளுடனும் சீனாவுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. அடிப்படை வேளாண்மைப் பொருட்களிலிருந்து தரமான பட்டுநூல் துணிகள் வரை, ஏராளமான, வேறுபட்ட, பொருட்களை உற்பத்தி செய்துவந்தது. உப்பு உற்பத்தியும் ஏராளமாயிருந்தது. வணிகர்கள் நறுமணப் பொருட்களைக் கொண்டு வியாபாரம் செய்து பெரும்பணம் ஈட்டினர். இதனைப் பயன் படுத்த எண்ணிய கம்பெனி உற்பத்தியாளர்கள் கம்பெனிக்கே தங்களது பொருட்களை விற்கவேண்டும் என்று கூறியதோடு அவர்களுக்குக் குறைந்த விலையையே கொடுத்தனர். ஏற்கனவே பஞ்சத்தாலும் நோயாலும் துன்பப்பட்டுக் கொண்டிருந்த மக்கள், அதிக வசூலாலும் கொள்ளை வாணிகத்தாலும் மேலும் அல்லலுற்றனர். அரசியல், பொருளாதாரச் சிக்கல்களுடன் சமுதாய, சமயக் கோட்பாடுகளும் தடைப்படுத்தப்பட்டன. மக்கள் தங்களது சமுதாய விழாக்களையும், உரிமைகளையும் செயல்படுத்த விடாது தடுக்கப் பட்டனர். எனவே மக்களும், பாளையக்காரர்கள் பலரும் ஒன்றாக இணைந்து ஆங்கிலப் பேரரசு ஆதிக்கக் கொள்கையை எதிர்க்க முற்பட்டனர். எனவே, இவ்வாறான துன்

புறுத்தல்களால், தென்னிந்தியப் புரட்சியின் தலைவன் மருதுபாண்டியன், ஆங்கிலேயரை முதலில் எதிர்த்த கட்டபொம்மன் இவர்களுக்குத் துணைநின்ற கோபால நாயக்கர். கேரளவர்மா போன்றோர் புரட்சித்தீயை மூட்டிக் கொழுந்து விட்டு எரியச் செய்தனர்.

மருது பாண்டியன்

புரட்சியின் தொடக்காலத் தலைவரும், பாளையக்காரர்கள் குழு (Poligar league) வின் தலைவருமான வீரபாண்டிய கட்டபொம்மன் தோற்கடிக்கப்பட்டு, புதுக்கோட்டை அரசால் ஆங்கிலேயரிடம் பிடித்துக் கொடுக்கப்பட்டு கயத்தாறு என்ற இடத்தில் 1799, அக்டோபர், 17 ஆம் நாள் தூக்கிலிடப்பட்டார். இந்நேரத்தில், அவரது தம்பி ஊமைத் துரையும் மற்றவர்களும் சிவகங்கைப் பகுதிக்கு ஓடினர். செயல் திறம் வாய்ந்த மருது பாண்டியன் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தான். அதன்பின்பு அவர்கள் தங்களது எதிரியான ஆங்கிலேயருக்குப் பல வழிகளிலும் இன்னல்கள் கொடுத்தவண்ணமிருந்தனர். 1800 ஆம் ஆண்டு மே திங்களில் இப்புரட்சியாளர்கள் சத்தியமங்கலம், தாராபுரம், தாலமல்லா, கோயம்புத்தூர் முதலான பகுதிகளில் புரட்சியைத் துவக்கினர். அங்கிருந்து கொண்டே புரட்சி நடவடிக்கைகளை மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்த நினைத்தபோது ஆங்கிலேயர் உடனே அவர்களை ஒடுக்கிவிட்டனர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிவகங்கைச் சீமையின் வரலாறு பெருமிதம் மிக்க ஒரு வரலாறாக இருந்தது. தமிழகத்தில் ஆங்கிலேயர்களைத் தீரமுடன் எதிர்த்த அப்பகுதியின் தலைமைப்பீடம் காளையார் கோவிலில் இருந்தது. அதன் அரசர் சசிவர்ணத்தேவர் (1730-50), காலத்தில் தாண்டவராயப்பிள்ளை என்னும் திறமைசான்ற அமைச்சரிருந்தார். இத்தாண்டவராயப்பிள்ளையே கான்சாகிப்பின் படையெடுப்பு தகர்த்தெறியப்படவும், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கெதிரான கூட்டமைப்பு ஒன்று ஏற்படவும் காரணமாவார்.

சிவகங்கையின் முற்றுகையே தென்னிந்தியப் புரட்சியின் கடைசி அத்தியாயமாகும். மருதுபாண்டியனின் புரட்சி நடவடிக்கைகள் கட்டபொம்மன் செய்த புரட்சியின் தொடர்ச்சியே எனலாம். தமிழ் மக்களின் இப்புரட்சிக்குத் தலைமையேற்று சிறந்த புரட்சித்தலைவன் என்ற பெரும் பேற்றைப் பெற்றார். இவரது உறுதிமிக்க கோட்டையான சிறுவயல் எதிரியின் கைக்குச் சென்றவுடன், இவர்தம் திட்டங்களும், எண்ணங்களும் தரைமட்டமாகி, இறுதியில் ஆங்கிலேயரின் ஒரே கருவியான தண்டனைக்கு உட்பட வேண்டியதாயிற்று.

மருது பாண்டியன், 1753- ஆம் ஆண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில், அருப்புக் கோட்டையிலிருந்து பதினெட்டு மைல் தொலைவில் உள்ள, முக்குளம் என்ற கிராமத்தில், மொக்கப்பழனியப்ப சேர்வை என்பவருக்கும் பொன்னாத்தாள் என்ற பெண்மணிக்கும் புதல்வனாய்ப் பிறந்தார். ஒழுங்காகத் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட, ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான, தமிழகப் புரட்சிக்கு உண்மையான தலைவர் இவரே எனக் கருதப்படுகிறது. இவர் சிறப்பாக சின்னமருது என அழைக்கப்பட்டார். இவரது மூத்த சகோதரர் பெரியமருது அல்லது வெள்ளமருது என்பவராவார். முத்துவடுகநாதத்தேவர்

(1750- 72) ஆட்சிக்காலத்தில் மருதுபாண்டியன் சிவகங்கை அரசுப்பணியில் சேர்ந்தார்., தனது திறமையின் மிகுதியால் அரசகுல ஆலோசகராக உயர்த்தப்பட்டார். 1772- இல் ஆற்காடு நவாப், சிவகங்கையைத் தோற்கடித்து தம் வசப்படுத்தினார். ஆனால் பின்னால் அப்பகுதி திரும்பப் பெறப்பட்டு வெள்ளமருது சிவகங்கைச் சீமையின் ஆட்சியாளராக்கப் பட்டார். சின்னமருது என்ற மருதுபாண்டியன் இவரது ஆலோசகராக்கப்பட்டார். இந்நிலையில் இரண்டாவது முறையாக நவாப் படையெடுத்த போது அவர் (நவாப்) தோற்கடிக்கப்பட்டார்.

1801, ஜனவரி 30- ஆம் நாள் மருதுபாண்டியன் தலைமையிலான புரட்சியாளர்கள் விருப்பாட்சியிலிருந்து ஆங்கிலேயப் படையைத் தாக்கித் தோற்கடித்தனர். ஜனவரியில் சுமார் 200 புரட்சியாளர்கள் திருச்செந்தூருக்குப் புனிதப்பயணம் செய்து, பின் பாளையங்கோட்டை சிறையிலிருந்த வீரர்களுக்கு உதவச் சென்றனர். அவர்களது முதல் முயற்சியில் தோல்வியுற்றனர். இரண்டாவது முறையாக முயன்றபோது அவர்கள் சிறைவாசிகளைக் காத்தனர். புரட்சியாளர்கள் தமது அடுத்த கட்ட வேலையாக பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை திரும்பச் செப்பனிட்டு செவத்தையா என்பவரை ஆட்சியாளராக நியமித்தனர். தஞ்சை, புதுக்கோட்டை அரசர்கள் புரட்சியாளர்களிடம் எவ்வகையிலும் இரக்கம் காட்டவில்லை. 1801, மார்ச் திங்கள் 3- ஆம் நாள், புரட்சியாளர் கள், ஊமைத்துரையின் தலைமையில், வாணிகச் சிறப்புமிக்க தூத்துக்குடிக்குச் சென்று கோட்டையை முற்றுகையிட்டனர். பின்பு திருநெல்வேலியைக் கைப்பற்ற முயன்று, அபிராமன் பகுதியிலிருந்த ஆங்கிலப் படையைத் தோற்கடித்தனர்.

மார்ச் திங்கள் 8- ஆம் நாள் கோனேரியை மேலப்பன் தாக்கினார்; கோட்டைச் சுவர்கள் தகர்த்தப்பட்டன. 27- ஆம் நாள் சென்னை மாநில அரசின் படைத் தலைவர் கயத்தாறுக்குப் படை ஒன்றை அனுப்பினார். பசுவந்தானை என்ற இடத்தில் ஆங்கிலேயப்படையும் புரட்சியாளர்களும் சந்தித்துப் போரிட்டனர். ஆனால், புரட்சி யாளர்கள் தோற்கடிக்கப்பட்டனர். மார்ச் 31- இல் ஆங்கிலப்படை, பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மீது குண்டுகளை வீசியது. சுதேசப்படையினர் எதிர்த்தாக்குதல் செய்தபோது ஆங்கிலேயர் பின்வாங்கினர். இதன்பின், ஆங்கிலேயப்படை பழனி, திண்டுக்கல் பகுதிகளை நோக்கி நகரத் தொடங்கியது. தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி திண்டுக் கல்லின் கோபால நாயக்கரை, 1801- ஆம் ஆண்டு மே திங்கள் நான்காம் நாள் தோற்கடித்து அவரைக் கைது செய்தது.

புரட்சிக்காரர்கள் தங்களது நடவடிக்கைகளை மதுரை, தஞ்சாவூர், இராமநாதபுரம், சிவகங்கைப் பகுதிகளை மையமாகக் கொண்டு செயல்படத் தொடங்கினர். தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆட்சியாளர்கள் தங்களது ஆதரவை ஆங்கிலேயருக்கு நல்கினர். ஆங்கிலேய அரசு கோவில்பட்டிக்கு அனுப்பிய படை ஒன்று, பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்று கோட்டையைத் தாக்கி அழித்தது. இதனால் 600 போர் வீரர்களும், 1050 தேசப்பற்று மிக்க புரட்சி வீரர்களும் தளத்திலேயே இறந்தனர். ஊமைத்துரையும் மற்றவர்களும் சிவகங்கைக்கு ஓடினர். எனவே, இப்போது, ஆங்கிலேயர் தமது முழுக் கவனத்தையும் சிவகங்கை மீது திருப்பினர்.

ஆங்கிலேயரின் இந்த நடவடிக்கைகளை உத்தேசித்து, மருதுபாண்டியன், இராணுவப் புரட்சிக்குத் தயாராயிருந்தார். 1801, மே இல் சிவகங்கையில் கம்பெனியின் படைக்கும் உள்நாட்டவருக்கும் மோதல் ஏற்பட்டது. நத்தம், திருப்பத்தூர் போர்களில் ஆங்கிலேயரைத் தோற்கடித்து, புரட்சிக்காரர்கள் மதுரையை நோக்கி விரைந்தனர். ஊமைத்துரையின் தலைமையிலான ஒரு பகுதிப்படை பாளைநாட்டை சுதந்திரப் பகுதியாக்கியது. திருச்சிராப்பள்ளியில் புரட்சியாளர்கள் ஆங்கிலத் தளபதியினரால் தோற்கடிக்கப் பட்டனர். சின்னமருதுவும், செவத்தய்யாவும் இணைந்து படை நடத்தி திரும்வேலூர், மேலூர், நத்தம் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு, ஆங்கிலப்படை முகாம்களையும், குண்டுகள், துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களையும் கொள்ளையிட்டனர். இராமநாத புரத்திற்கும் படை ஒன்று அனுப்பப்பட்டு , அப்படை வெற்றியும் பெற்றது. சேதுபதி அரசின் பெரும்பான்மையான பகுதிகள் விடுவிக்கப்பட்டன. கம்பெனியின் நிர்வாகிகள் இராமநாதபுரம் கோட்டையில் தஞ்சம் புகுந்தனர்.

பின், மாங்குடி என்ற இடத்தில் கம்பெனியின் படையும், தஞ்சாவூர் அரசின் படையும் சேர்ந்துபுரட்சியாளர்களைத் தாக்கின. தென்னிந்தியப் புரட்சி மேலும் பல பகுதிகளில் பரவத் தொடங்கியது. சியாலி, உடையார்பாளையம், அரியலூர் பகுதிகளிலிருந்து கம்பெனியின் அதிகாரிகள் விரட்டப்பட்டனர். கும்பகோணத்தில் ஆங்கிலேயர்கள் மிரட்டப்பட்டபோது மாவட்ட ஆட்சித்தலைவர் ஹார்ரிஸ் தன்னைக் காத்துக் கொள்ள ஓடினார். ஜூலை மாதத்தில் புரட்சியாளர்கள் எல்லாப் பகுதிகளிலும் வெற்றியடைந்து கொண்டு வந்தனர். இச்செய்தி அக்ணுவால் கம்பெனியின் சென்னை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் புரட்சிவாதிகள் அன்னியராதிக்கத் திலிருந்து தாங்கள் விடுவித்த பகுதிகளில் தங்களது நிர்வாகத்தையும் ஏற்படுத்தினர். வருவாய் ஆட்சித்துறையில் மொனேகார்கள் (மணியக்காரர்கள்) என்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கிராமங்களில் பொது ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர்.

அக்ணுவின் அறிக்கை (Agnew's Proclamation)

தென்னிந்திய தேசியத் தலைவர்கள் தங்களது புரட்சிகரமான நடவடிக்கைகளுக்கு மக்களது மனப்பூர்வமான ஆதரவை வேண்டினர். இதனால், மக்கள் வெள்ளம் அவர் பக்கம் சாய்ந்து ஆங்கில ஆட்சிக்கு உலை வைத்து விடுமோ என்று அஞ்சும் நிலை ஏற்பட்டது. எனவே மக்களின் எண்ணங்களைத் திசை திருப்பிவிட வேண்டும் என்று எண்ணிய ஆங்கிலப்படைத்தளபதி அக்ணு, 1801- ஆம் ஆண்டு ஜூன் திங்கள் பனிரெண்டாம் நாள் ஒரு அறிக்கை வெளியிட்டார். இதுவே அவர்தம் பெயரால் அக்ணுவின் அறிக்கை எனப்பட்டது. இவ்வறிக்கை, மருதுபாண்டியனின் புகழைக் கெடுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே வெளியிடப்பட்டது என்பர் அறிஞர். இதன் மூலம், அக்ணு, சின்ன மருதுவின் (மருதுபாண்டியனின்) மூத்த சகோதரரரான வெள்ளமருது அவரது சகோதரனுடன் பகைத்துக் கொண்டு ஆங்கிலலேயருடன் சேர்ந்து கொள்ளும்படித் தூண்டினார்.

அக்ணு அவ்வறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். அஃதாவது சிவகங்கையின் சின்னமருது, பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வெளியேறி வந்த வீரர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார். ஆங்கிலக் கமபெனி அவரைப் பலமுறை எச்சரித்திருந்தும்

அதனை அவர் பொருட்படுத்தவில்லை. விருபாட்சியின் புரட்சியாளர்களுக்குப் பாது காப்புக் கொடுத்தார். ஆனால் உண்மையில் ஆங்கிலேயர்களே சிவகங்கை மக்களின் காவலர்களாக இருந்து வந்தனர். சிவகங்கை அரியணையை சட்டரீதியாக சேர வேண்டியவருக்குச் சேர விடாமல் மருதுபாண்டியன் அபகரித்து விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

தளபதி அக்ணு ஒரு படையுடன் சிவகங்கைப் பகுதிக்கு அனுப்பப்பட்டார். எவரெவர் ஆங்கில ஆட்சிக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுக்கின்றார்களோ அவர்கள் அக்ணு படையுடன் சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்குச் சகலவிதமான பாதுகாப்பும் கொடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது. புரட்சியாளர்கள் ஒடுக்கப்பட்டதும், கம்பெனி, சிவகங்கை அரியணையில் சட்டரீதியான வாரிசை அமர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்று கூறப்பட்டது. இதன் மூலமாக அக்ணு சிவகங்கை அரசுக்கு வேறு எவரும் உரிமை கொண்டாடக் கூடாது என எச்சரித்தார். தவிர வெள்ளமருது தமது தம்பியான மருது பாண்டியனின் செய்கைகளை விரும்பவில்லை. அவர், மருது பாண்டியனை விட்டுப் பிரிந்து வந்தால் எல்லாவிதமான சலுகைகளும், பாதுகாப்பும் தரப்படும் எனவும் ஆசை வார்த்தைகள் கூறப்பட்டன கம்பெனிக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபட்டால் அதன் விளைவைச் சந்திக்க நேரிடும் எனப் பொதுமக்களையும் அக்ணு எச்சரித்தார். போர் ஒன்று ஏற்படுமாயின் பாஞ்சாலங்குறிச்சி, விருபாட்சி மக்களுக்கு ஏற்பட்ட நிலையே சிவகங்கை சமஸ்தான மக்களுக்கும் ஏற்படும் எனப் பயமுறுத்தப்பட்டது.

1801- ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் நாள் அக்ணுவின் அறிக்கைக்கு எதிராகப் புரட்சியாளர் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருப்பதாக கம்பெனி நிர்வாகத்திற்குச் செய்தி கிட்டியது. இவ்வறிக்கையானது மருது பாண்டியனின் பெயரால் வெளியிட்ப் பட்டது. இவ்வறிக்கையின் நகல் ஒன்று திருச்சிராப்பள்ளி கோட்டையில் நவாபின் மாளிகைக்குச் செல்லும் மிகப்பெரிய வாயிற்கதவில் ஒட்டப்பட்டிருந்தது. இதன் மூலமாக தென்னிந்திய மக்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டது, மற்றொரு பிரதி திருவரங்கம் அரங்கநாதர் கோயில் சுவரில் ஒட்டப்பட்டிருந்தது. இப்பிரதியின் மூலமாக இந்தியத் துணைக் கண்டத்தின் மக்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடப்பட்டது. திருச்சிராப் பள்ளி அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகையாலும், திருவரங்கம் பக்திச் சிறப்புபெற்ற திருத்தலமாதலாலும், இவ்விரு இடங்களில் அறிக்கைகளை ஒட்டுவதன் மூலம் மக்களைக் கவர்ந்திழுக்க முடிந்தது.

இவ்வறிக்கையில், "நவாப் முகமது அலி ஆங்கிலேயர்களால் ஏமாற்றப்பட்டார்; வெகுவிரைவில் அவர் ஒரு விதவையின் நிலைக்குத் தள்ளப்படுவார். கம்பெனி இந்திய மக்களின் விசுவாசத்தை மறந்து அவர்களை "நாய்கள்" போன்று நடத்தத் துணிந்தது. இந்தியாவில் பல இனத்தவர்கள் வாழ்ந்து வருவதால் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படவில்லை. இதனால் அவர்கள் அன்னியரான ஆங்கிலேயருக்குப் பணிந்து செயல்பட வேண்டியுள்ளது. எனவே அவர்தம் பரம்பரை மன்னரிடமிருந்து பிரிக்கப்பட்ட உயர்ந்த அதிகாரங்களையும் உரிமையையும் காப்பது அவர்கள் கடமையேயாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, அன்னிய அடக்குமுறையினரை விரட்டுவதற்கு, மக்களிடமிருக்கும் ஒரே ஆயுதம் புரட்சி செய்வதேயாகும்" எனக் கூறப்பட்டிருந்தது.

இவ்விரு அறிக்கைகளும் மருதுபாண்டியனின் கடமையுணர்வினையும் தத்துவக் கருத்தினையும், ஒற்றுமை மனப்பான்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வறிக்கையை ஒவ்வொருவரும் படிக்க வேண்டும்; படித்ததை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூற வேண்டும் என மருதுபாண்டியன் கேட்டுக் கொண்டார். தனது ஆலோசனையை ஏற்காதவர்களைக் கடுமையாகக் கண்டனம் செய்தார். "கங்கை நதிக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தை அடைவதாக" எனச் சாபமிட்டார். இந்து சமயம் அழிந்து கொண்டிருக்கிறது; எனவே அதனைக் காப்பது மக்களின் கடமையாகும் என்றார். தமிழகத்தில் ஆங்கில ஆதிக்கத்தை ஆதரிப்பவர்களை இழிந்தவர்கள் என்றும், ஆங்கிலேயர்களைத் துரோகிகள் என்றும் கடுமையாக விமரிசித்தார். இழிந்தவர்களுக்குப் பிறந்த மைந்தர்களைத் துரோகிகளுக்குப் பிறந்த பிள்ளைகள் எனக் கேவலமாக அறிவித்தார். எவரேனும் அறிக்கையைக் கிழித்தெறிய முயற்சித்தால் கொல்லப்படுவர் என எச்சரிக்கை செய்யப்பட்டது. அத்தகையோர் கீழ்க்கண்ட ஐந்து பாவங்களைச் செய்தவராவார்கள். (i) பிராமணனைக் கொலை செய்தல், (ii) தங்களின் தலைவனின் மனைவியோடு தொடர்பு கொள்ளல், (iii) மது அருந்துதல் (iv) தங்கத்தைத் திருடுதல் (v) இத்தகைய தவறுகள் செய்பவருக்கு உடந்தையாதல். இவ்வாறு, தமிழக மக்கள் அனைவரையும், காராம்பசுவின் மீது ஆணையிட்டு ஆங்கிலேயரைப் பழிதீர்க்க வரும்படி தூண்டிவிடப்பட்டது. மருது பாண்டியனின் இந்தக் கருத்துரைகள் தமிழகத்தின் பகுதிகளில் எதிரொலித்தன. ஏராளமான பகுதிகளின் தலைவர்கள் புரட்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்டனர். இதன் மூலமாக மருது பாண்டியனின் 20,000 படைவீரர்களை எல்லாவிதமான ஆயுதங்களுடன் தயார் செய்தார்.

புரட்சியின் முடிவு

1801, மே திங்கள் 29 ஆம் நாள் புரட்சியாளர்களின் தாக்குதல்களும், கம்பெனியின் எதிர்த் தாக்குதல்களும் தொடங்கின. கமுதி, திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மானாமதுரை, பார்த்திபனூர், பரமக்குடி, சாத்தமரம், இராமநாதபுரம் காளையார் கோயில் ஆகிய இடங்களில் போர்கள் நடந்தன. ஜூலைத் திங்கள் 27- ஆம் நாள் அக்னு, இன்னஸ் ஆகியோரின் தலைமையிலான கூட்டுப்படைகள் ஒக்கூரிலிருந்து சிறுவயல் நோக்கி நகர்ந்தன. சிறுவயல் நகரம் நாசமாக்கப்பட்டது. மக்கள் காளையார் கோவிலுக்கு ஓடினர். இப்போது, வெற்றி வாய்ப்பு ஆங்கிலேயர் பக்கம் வந்தது. ஆங்கிலேயர்கள் புரட்சியாளர்கள் சிலரை மருதுபாண்டியனுக்கு எதிராகச் செயல்படத்தூண்டினர். பழைய அரசவமிசத்தைச் சேர்ந்த ஒய்யாத்தேவரை சிவகங்கைச் சீமையின் ஆட்சியாளராக்கினர்.

செப்டம்பர் 30- ஆம் தேதி எல்லாத்திசைகளிலிருந்தும் ஆங்கிலப்படை காளையார் கோயிலைத் தாக்கியது. மருது பாண்டியரால் தீரமுடன் காத்துங்கூட காளையார்கோயில் எதிரியின் கையில் சிக்கியது. காளையார்கோயிலின் வீழ்ச்சி தேசிய ஒற்றுமையைக் குலைத்தது. அக்டோபர் திங்கள் 19- ஆம் நாள், சோழபுரத்தில் நடந்த தாக்குதலில் மருதுபாண்டியன் காயமடைந்தார். தேடிப்பிடித்து, கம்பெனிப்படையினர், ஊமைத்துரை முதலான 773 புரட்சியாளர்களைக் கைது செய்தனர். இப்புரட்சியின் தலைவர்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நாட்களில் தூக்கிலிடப்பட்டனர். தென்னிந்தியாவின் நாட்டுப்பற்றுமிக்க இவ்வீரர்கள், தங்களது தாயகத்தை அன்னியரிடமிருந்து மீட்பதற்காக

மேற்கொண்ட இம்முதல் முயற்சியில் தோல்வி கண்டனர்.வீரபாண்டிய கட்டபொம்மன், கோபாலநாயக்கர், தூண்டாஜிவாக், மருது பாண்டியர், கேரளவர்மா, ஊமைத்துரை கான்—இ—ஜஹான், மேலப்பன்,. செவத்தையா போன்ற மாவீரர்கள் தங்களது தாயகத்திற்காக உயிரை அர்ப்பணம் செய்தனர். இத்தோடு தென்னிந்தியப் புரட்சியின் சோகக்கதை முடிவுற்றது.

ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டுவதற்காக, பாரதமக்கள் செய்தபுனிதப் போர்களுள், தென்னிந்தியப்புரட்சி முதல் அடிப்படைக்கல்லாகும். இப்புரட்சி, திட்டமிடப்பட்டு, ஆயத்தம் செய்யப்பட்டு தொடங்கப்பட்டதேயாகும். ஆங்கில அரசுக்கு எதிராகப் பொதுமக்களால் இந்தியத்துணைக்கண்டத்தில் நடைபெற்ற தென்னிந்தியப் புரட்சி, செவ்வனே செயல்படுத்தப்பட்ட, பெரும் பரவலான, அழிவுகள் மலிந்த குறிப்பிட்ட, சிறப்பு வாய்ந்த முதல் சுதந்திரப் போர் என்பார் பேராசிரியர் கு. இராசய்யன்.

வேலூர்க் கலகம்

1806 ஆம் ஆண்டு, வேலூர்க் கோட்டையில் அடைக்கப்பட்டிருந்த சிப்பாய்கள் கம்பெனிக்கு எதிராகக் கலகம் செய்தனர். பேராசிரியர் S.N. சென் இயற்றிய ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழு என்ற நூல் இக்கலகத்திற்குரிய காரணங்களையும், விளைவுகளையும் ஆய்ந்து மதிப்பிட்டுள்ளது. அவர் கருத்துப்படி இக்கலகம் 1857- இல் நடைபெற்ற பெரும் புரட்சியின் 'முன்னோடி' ஆகும். மற்றும் சிலருடைய கருத்துப்படி இது இந்தியச் சுதந்திரப் போரின் முதல் ஒத்திகை என்பதாகும். வீரசவர்க்கர், 1857 இல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போரின் அடிப்படைக் காரணம் என்றார். 1957- ஆம் ஆண்டு, மே திங்கள் 23- ஆம் நாள் வெளியிட்ட விளக்கவுரையில், லிஸ்ட்னர் (Listener) என்ற ஆங்கில வாரஇதழ் வேலூர்க் கோட்டை, படைத்தளபதி கில்லஸ்ப்பீயின் புகைப்படங்களை வெளியிட்டிருந்தது. அக்கோட்டையின் மகத்தான தோற்றத்தை அது எப்படி இழக்க நேரிட்டது என்ற முன் வரலாற்றை மக்களுக்கு நினைவூட்டுவதாய் அது அமைந்தது.

திப்பு சுல்தான் 1799 இல் கொல்லப்படவே, அவர் குடும்பத்தாரும், சிப்பாய்களும் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டனர். அவர்களில் திப்புவின் பன்னிரு புத்திரர்களும், ஆறு பெண்களுமிருந்தனர். மேலும் பாளையப் பட்டுக்களின் வீரர்களும் உடனிருந்தனர். இவர்கள் அனைவரும் விடுதலையுணர்வால் உந்தப்பட்டவர்களே.

இவ்வேளையில் சென்னைத் தளபதிகளுக்கு அரசு பேரதிகாரங்கள் பல வழங்கி, கலகக்காரரை அடக்கத் திட்டமிட்டது. படையதிகாரிகள் தங்கள் சிப்பாய்கள் ஒழுங்காயும், தோற்றத்தில் எடுப்பாயும் கம்பீரத்துடனும் காட்சி தரவேண்டுமென்று விரும்பி, புதுமையான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சுதேசி சிப்பாய்கள் நீண்ட முறுக்கு மீசையுடனும், தாடியுடனும் கம்பீரத்துடன் தோன்றியது கம்பெனியதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. இவை அவர்களின் வீரருக்கான தோற்றத்தைக் கெடுத்து விட்டதாகக் கருதி அவற்றை மழித்துவிடுமாறு கட்டளையிடப்பட்டனர். மேலும் அவர்கள் அணிந்து வந்த பழமை முறைப்படியான தலைப்பாகைகளை மாற்றி, அக்னு தலைப்

பாகையை அணிய ஆணையிட்டனர். அக்ணு என்ற தளபதி இதனைக் கொண்டு வந்தமையின் இது அப்பெயர் பெற்றது. சேசு சிலுவை போன்ற உருக்கொண்ட ஓர் உலோகத் தகட்டையும் அணியப் பணிக்கப்பட்டனர்.

தங்கள் சமயத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் தாடியை முஸ்லீம்கள் மழித்துக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் புதுமையாகக் கொண்டு வந்த தோல் தொப்பிச்சின்னச் சூட்டு (Feather cockade) சிப்பாய்களால் வெறுக்கப்பட்டது. முஸ்லீம்கள் பன்றிக் கொழுப்பாலாகிய பொருளைப்பயன்படுத்த மாட்டார்கள். அவர்களுக்கு பசு புனிதமானது. அனைத்து சிப்பாய்களும் இதன் மர்மத்தை உணர்ந்து, மனம் குமுறினர். பலர் இத் தலைப்பாகையை அணிய மறுத்தனர். சிலுவை பொறிக்கப்பட்ட தகட்டையும் அணிய மறுத்தனர். ஆனால் அவர்கள் அவற்றை ஆணையிட்டபடி செய்யச் கட்டுப்படுத்தப்பட்டனர். மறுத்தோர் பலர் கொல்லப்பட்டனர்; பலர் சென்னைக்கு இழுத்துச்செல்லப் பட்டனர்; இன்னும் பலர் சாட்டையடி பெற்றனர். தாக்கப்பட்ட சிப்பாய்கள் வஞ்சம் தீர்க்கக் காலம் காத்திருந்தனர். இதற்காகத் தங்களக்குள்ளே இரகசிய கூட்டாலோசனைகளை நடத்தினர்; அதன் இரகசியச் சங்கங் களை நிறுவவும் முடிவு கொண்டனர்.

பலர் இக்குமுறலுக்கான காரணங்களைப் பலவாறு கூறுவர். சென்னையின் அன்றைய ஆளுநர் வில்லியம் பென்டிங் தோல் தொப்பிச் சின்னச் சூட்டுக்கும், சமயத் துக்கும் எத்தொடர்புமில்லை என்பார். G. கார்க்கோர்ட், கில்லஸ்பீ கென்னடியைக் கொண்ட குழு இதற்குரிய காரணத்தை அங்கு அடைக்கப்பட்ட சிப்பாய்களிலும் அவர்களின் இரகசியச் சங்கங்களிலும் கண்டது. அன்றைய தலைமைத் தளபதி கிரடாக் இயக்குனர் குழுவுக்கு1806 ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள் 22- ஆம் நாள் சமர்ப்பித்த அறிக்கையில், "சிப்பாய்களின் உடைமாற்றம் இக்கலகத்துக்கு அவர்கள் தரும் வெறும் கண்துடைப்பு; அவர்களுடைய உண்மை நோக்கம் முஸ்லீம் ஆட்சியை இந்தியாவில் மீண்டும் நிறுவுவதே என்றார். இருப்பினும் பிரிட்டிஷ் அரசு ஆளுநரையும், தளபதியையும் பதவி மாறறம் செய்தது. அனுப்பப்பட்ட அறிக்கைகளைப் பரிசீலனை செய்து அரசு தந்த முடிவு வேறுவிதமானது. அதன் கருத்துப்படி சிப்பாய்கள் உள்ளத்தைப் பாதிக்கும் உடைகளில் அரசு கொண்டு வந்த திடீர் சீர்திருத்தங்களே என்பதாம். மேலும், திப்புவின் பிள்ளைகளும், அவர்களை ஆதரித்தோரும், சிப்பாய்களிடையே ஏற்பட்ட மனக் கசப்பைச் சாதகமாக்கிக் கலகம் ஏற்படுத்தினர் என்பதுமாம். அவர்களின் இறுதி நோக்கு முஸ்லீம் அரசு நிறுவுவதே என்று அறிவித்தது. எனவேதான் பேராசிரியர் S.N. சென் "இந்த தோல் தொப்பிச் சின்னச் சூட்டு வேலூர் கலகத்திற்கு முன்னறிவிப்பாயும், கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கிக் குண்டு ஐம்பதாண்டுகட்குப்பின் நடந்த புரட்சிக்கு முன்னறிவிப்பாயும் அமைந்தன" என்று கூறுகிறார்.

எதிரிகளை மடக்க சிறைச் சிப்பாய்கள் வேலூர் மக்களுடன் தொடர்பு கொண்டனர். கலகம் வெடித்தவுடன் போர்க்கருவிகள் மைசூரிலிருந்து வேலூருக்கு வந்து குவிய வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சிப்பாய்கள் ஹைதராபாத் மக்களுடனும் இரகசிய உறவு கொண்டிருந்தனர். கம்பெனியின் உளவு அறிக்கையின்படி, ஹைதராபாத் மக்கள் கம்பெனி ஆட்சியை அகற்றச் சபதமேற்கொண்டதாகத் தெரிகிறது.

காத்திருந்தகாலம் சிப்பாய்களுக்குத் திப்புவின் பெண் மக்களில் ஒருத்தியின் திருமணத்தின்போது வந்தது. இத்திருமணம் 1806- ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9 ஆம் நாள் நடந்தது. திப்புவின் உறவினர் வேண்டியோரில் பலர் இத்திருமணத்தில் பங்கு கொண்டனர். அன்று இந்தியச் சிப்பாய்கள் ஒரு பிரிட்டிஷ் அதிகாரியைத் தாக்கினர். அம்மாதம் 10- ஆம் தேதி படை நாள் கொண்டாட அணிவகுப்பொன்று நடைபெற்றது. போர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் சிப்பாய்கள் படைவீரரை நிறுத்தி வைத்தனர். பயிற்சி முகாமில் பாதுகாப்புப் படையை நிறுத்தினர். தற்காப்புப் பணிகள் முடிந்த பின் கோட்டையை முற்றுகையிட்டனர். கம்பெனிப் படைகளும் கலகத்தைச் சிறந்த முறையில் அடக்க முயன்றனர். "நவாபே வெளியே வா, நவாபே வெளியேவா, பயப்பட வேண்டியதில்லை" என்று சிப்பாய்கள் கூச்சலிட்டனர்.

சுதேசிப்படைகள் கொடிமரத்தை நோக்கியோடினர். கொடி மரத்தில் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை மாற்றினர். திப்புவின் பழைய கொடியொன்று பறக்கவிடப்பட்டது. கம்பெனியாரின் படைக்கலங்கள், போர்க்கருவிகள் மருந்து வகைகள், கட்டி வைக்கப்பட்டிருந்த சரக்கறைகளைக் கைப்பற்றி, தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். கோட்டைக்குள்ளும் வெளியேயும் ஒரே குழப்பம். இச்சூழலில் கர்னல் கில்லஸ்பி ஆர்க்காட்டிலிருந்து வேலூருக்கு விரைந்தார். தன்னுடன் வந்த பீரங்கிப் படையைப் பயன்படுத்திக் கோட்டையைத் தாக்கினார். அரைமணி நேரம் அந்நகரம் முழுவதும் பீரங்கியின் முழக்கத்தால் அலறியது. வெடிகுண்டுகள் கோட்டையை மோதிச் சின்னா பின்னப்படுத்திவிட்டன. கோட்டை சரணடைந்தது. அந்த அரைமணி நேரத்திற்குள் ஏறக்குறைய 800 க்கு மேற்பட்ட சிப்பாய்கள் கொன்று வீழ்த்தப்பட்டனர். ஏராளமான சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் பலர் கொல்லப்பட்டனர்; பலர் தூக்கிலிடப்பட்டனர். மற்றவர்கள் மாதக் கணக்கில் சிறையில் சித்திரவதைப் பட்டனர். திப்புவின் மகன்களும், உறவினரும் மற்றவரும் அறுபது ஆண்டுகள் கல்கத்தாவின் கொடுங்காடுகளில் சிறைவைக்கப்பட்டனர். வேலூர்க் கலகம் இரத்த வெள்ளத்தில் முடிவடைந்தது. தென்னகத்திலிருந்து வந்து இக்கலகத்தில் பங்கு கொண்ட பல சிப்பாய்கள் தப்பிச் செல்லாவண்ணமும், தங்களுடைய ஊர்களுக்குத்திரும்பிச் செல்லாமலிருக்கவும், நேர்வழிகளும், குறுக்கு வழிகளும் மாவட்ட ஆட்சியாளர் ஆணை மீது தடுக்கப்பட்டன. தென்னிந்தியக் கலகத்தின் தூண்டுதலின் பேரில் ஏற்பட்ட சுதந்திரப் போரின் தோல்வியின் இறுதிக் கட்டத்தை லேலூர்க் "கலகம் காட்டுகிறது" என்று பேராசிரியர் இராசய்யன் கூறுகிறார்.

தோல்விக்கான காரணங்கள்

1806- ஆம் ஆண்டு வேலூர்க் கலகத் தோல்விக்குக் காரணங்கள் பல. அதிகாரப்பூர்வ, அதிகாரப்பூர்வமற்ற ஆவணங்கள் இப்புரட்சி முன்கூட்டியே நன்கு திட்டமிட்டு செய்யப்பட்டதாகவே அறிவிக்கின்றன. மைசூர் மன்னனாகத் திப்புவின் மகன்களில் ஒருவரை ஆக்க வேண்டுமென்றே இக்கலகம் ஏற்பட்டது; அதற்காகக் கடிதங்கள் அண்டை நாடுகளுக்கு எழுதப்பட்டு உதவியும் கோரப்பட்டுள்ளது; அப்படியிருந்தும் அது தோல்வியடைந்தது. ஏனெனில் அது குறிப்பிட்ட நாளில் ஏற்படாது, முன்கூட்டியே வெடித்துவிட்டது. முன்கூட்டி நிகழ்ச்சி நடந்துவிட்டதால் திட்டமிட்டிருந்தபடி செயலாற்ற

இயலாமல் சிப்பாய்த் தலைவர்களும் மற்றவரும் தடுமாறிப் போயினர். எதிர்பார்த்தபடி அவர்களுக்குப் பொருட்கள் வந்து சேரவில்லை. மருந்து, கருவி பற்றாக் குறையினால் கோட்டைக்குள்ளிலிருந்த வீரர்கள் கடுமையான தாகுதல்களுக்குள்ளாயினர்.

மேலும் இக்கலகத்துக்குப் போதிய தலைமை இல்லாமலிருந்தது; சரியான திட்ட மிட்ட செயல்முறையும் இல்லை; சிப்பாய்கள் தற்கால படைக்கலன்களையோ, போர் முறையையோ அறியாதிருந்தனர். அவர்களில் பலரும் இக்கலகத்தில் பங்கு கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். திப்புவின் பிள்ளைகளும் அவ்வளவு திறமைசாலிகளல்லர். அவர்களும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவில்லை. செயல்முறையில் விவேகமும், தந்திரமுமற்று இ'பங்கினர்.

1800-01- ஆம் ஆண்டுக் கலகத்தின் போது தமிழர்களில் சிலர், தமிழர்களுக்கு எதிராக உளவு பார்த்து, கம்பெனிக்கு அச்செய்திகளை அவ்வப்போது கொடுத்து வந்தனர். இங்கும் கோட்டைக்குள்ளிருந்த சிப்பாய்களில் சிலர், தங்களுடைய வருவாயையும் பதவி உயர்வையும் மனத்திற் கொண்டு பிறந்த மண்ணுக்கே இரண்டகம் செய்யத் துணிந்தனர்; அதன் விளைவுதான் ஆங்கிலேயர் ஆதிக்க வளர்ச்சி.

கர்னல் கில்லஸ்பீ 24,500 பொற்காசுகளைப் பரிசாகப் பெற்றார். சர்ஜியன்ட் பிராட்லி 2,800 பொற்காசுக் கிழி பரிசு பெற்றார். கம்பெனிக்குதவிய அனைவருக்கும் பரிசு தரப்பட்டது. கலகக்காரருக்கு உதவிய சிப்பாய்களில் பலர் தம் பதவியிழந்தனர். கம்பெனியார் நினைத்தபடி மிகத் துரிதமாக எல்லாவற்றையும் செய்து விட இயலவில்லை. வேலூரில் ஏற்பட்ட கலகப்புகை இந்தியாவின் விடுதலைக்காக ஏற்பட்ட ஒத்திகையாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் பெருமளவில் திட்டமிட்டு செய்யப்பட்ட கலகங்களேதும் ஏற்படவில்லையாயினும், ஆங்காங்கு ஆங்கிலக் கம்பெனிக்குக் கடுமையான எதிர்ப்புகள் இருந்துவந்தன. 1807- இல் காரைக்காலில் கலகம், தொடர்ந்து மாப்ளா கலகம், கீழக் கடற்கரைப் பகதிகளில் ஜீமீன்களின் கலகம், 1809- இல் வெள்ளைப்படைகள் கம்பெனியின் சில கடுமையான கண்டிப்புகளையும், படைகள் அனுபவித்து வந்த உரிமை மறுப்புகளையும் தங்களுக்கு வழங்கப்பட்டு வந்த படி, சலுகைக் குறைப்புகளையும் எதிர்த்துக் கலகம் செய்தனர். இக்கலகம் இரக்கமின்றி அடக்கப்பட்டது.

பயிற்சி வினாக்கள்

1) தென்னிந்தியப் புரட்சிபற்றி விவரிக்க.

2) வேலூர்க்கலகத்திற்கான காரணங்களையும், போக்கினையும், விளைவுகளையும் விளக்குக.

பாடம் – 26 நிலவரி ஆட்சிமுறை : நிரந்தர வருவாய் ஆட்சியமைப்பு – ரயத்துவாரி முறை – பஞ்சங்கள் – பஞ்ச நிவாரணங்கள்

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, 18 —ஆம் நூற்றாண்டில், வருவாய் ஆட்சித் துறையில் ஏராளமான அணுகுமுறைகளைக் கையாண்டது. நிரந்தரமான ஒரு முறையை ஏற்படுத்துவதற்கு முன்பு, அவர்கள், ஜாகீர்தாரி, அமல்தாரி, மஹல்வாரி (கிராமம்), மிராசுதாரி, ஜமீன்தாரி ஆகிய முறைகளைப் பயன்படுத்துதல் எவ்வாறு என்பது பற்றியும், அதன் குறை, நிறைகளைப் பற்றியும் ஆராய்ந்தனர். இம்முறைகளைச் செயற்படுத்தி ஆராய்ந்த போது பல குறைபாடுகள் மலிந்திருந்தன. அதன்காரணமாக ஆங்கில கம்பெனி தனது வருவாய் ஆட்சித்துறையில் தோல்வியடைந்தது. 1792 - ஆம் ஆண்டு, மூன்றாம் மைசூர்ப் போர் முடிந்ததும், காரன்வாலிஸ் பிரபு, கேப்டன்ரெட் என்பவரை அழைத்து புதிதாகச் சேர்க்கப்பட்ட பாராமஹால் (சேலம்) பகுதியில் வருவாய் ஆட்சி முறையை சீர்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். அவர், புதிய வருவாய் ஆட்சிமுறையானது வங்காளத்தின் ஜமீன்தாரி முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் எனக் கருதினார். நில உடைமையாளர்கள் தாங்களே நிலத்தில் வேலை செய்பவர்களாகவுமிருந்தனர். எவ்வாறு இந்த நிலவுடமையாளரிடமிருந்து வரி திரட்டுவது என்பதே ஆங்கிலேயருக்கு ஒரு பிரச்சினையாக இருந்தது. கேப்டன்ரெட் தாமஸ்மன்ரோ ஆகியோரின் கூட்டு முயற்சியும், மற்ற துணை அதிகாரிகளின் முயற்சிகளும் சேர்ந்து புதிய ரயத்வாரி முறையைக் கையாளச் செய்தன. புதிதாக உண்டாக்கப்பட்ட ரயத்வாரிமுறை, ஆங்கில அரசு, இதுவரை கடைப்பிடித்து வந்த மற்ற முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட, எதிரான அமைப்பு முறையாகும். இம்முறையானது, மன்ரோ, ரெட் ஆகியோரின் முயற்சியால் மட்டுமே அல்லாது, ஜமீன்தாரி முறையின் பயனற்ற தன்மையினாலும், செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. வருவாய் வரியானது சேலத்தில் கடுமையாக வசூலிக்கப்பட்டது. உற்பத்தியில் ஏறக்குறைய பாதித் தொகையை வரியாகச் செலுத்த வேண்டியதாயிற்று. 1807- இல், மன்ரோ வரித்தொகையை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்க முயன்று தோற்றார். பின்பு வருவாயில் மூன்றில் இரண்டு பங்கை வரியாகச் செலுத்துவது என்பது முடிவாக்கப்பட்டது. வருவாய் வரியைப் பணமாகவோ அல்லது பொருளாகவோ செலுத்துமாறு கூறப்பட்டது.

பல்வேறு வரலாற்றாளர்களின் கருத்தானது ரயத்வரி முறையை ரெட்டும், மன்ரோவும் கண்டு பிடித்தனர். ஆங்கில நிலமானிய முறைக்கு ஸ்பெல்மேன் காரண மாவார் என்று ஒப்பிட்டுக் கூறுதலாகும். ரயத்வாரி முறையின் தோற்றம் எப்படி இருப்பினும் இம்முறை முதலில் சென்னையிலும், பின் பம்பாய் மாநிலத்திலும் புகுத்தப்பட்டது; சாதாரண வருவாய் முறையாகவே பயன்படுத்தப்பட்டது. இது 1814 — ஆம் ஆண்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. மன்ரோ ஆளுநராகப் (1820 - 27) பதவி வகித்த காலத்தில் தீவிரமாக செயல்படுத்தப்பட்டது. சிறிது சிறிதாக இம்முறை நிரந்தர ஏற்பாடில்லாதிருந்த பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. சென்னை மாநிலத்தில் மீண்டும் இதனைச் செயல்படுத்திய தாமஸ்மன்ரோ வரிவசூலை உற்பத்தியில்

மூன்றில் ஒரு பங்காக்கினார். பஞ்ச காலங்களிலும், வெள்ளங்கள் வந்தபோதும், வறட்சி, புயல் காலங்களிலும், ரயத்வாரி முறை, மக்களுக்கு பெரும் சுமையாக இருந்தது. அந்த இக்கட்டான காலங்களிலும் அரசாங்கம் தவறாது வரி வசூல் செய்தது என ரமேஸ்டட் கூறுகின்றார்.

ரயத்வாரி முறையின் பொதுவான அம்சங்களாவன

(அ) விவசாயி அல்லது குத்தகைதாரர் ஜமீன்தாரின் எந்த உதவியுமின்றியே தமது நிலத்தை வைத்துள்ளார். எனவே அவர் கம்பெனி அரசுக்கே நேரடிப் பொறுப்பாவார். எனவே கம்பெனிக்கும் அவருக்கும் இடைத்தரகர் தேவையில்லை.

(ஆ) ஒரு விவசாயி தனது சொந்த நிலத்தை தன் விருப்பப்படி விற்கவோ, குத்தகைக்கு விடவோ, அடமானம் வைக்கவோ உரிமை பெற்றுள்ளார். வருவாய் வரியையும், நிலவரியையும் செலுத்தத் தவறும் வரை அவர்தம் உரிமை பறிக்கப்படமாட்டாது.

(இ) விவசாயி, தமது மொத்த நிலத்தில், பயிர் செய்யும் நிலத்தின் பரப்பைக் கூட்டவும், குறைக்கவும் உரிமை பெற்றுள்ளார்.

(ஈ) ஒரு நில உடமையாளர், தமது நிலத்தின் ஒரு பகுதியையோ அல்லது மொத்தத்தையோ எவருக்கேனும் குத்தகைக்கு விடலாம். நில உடமையாளருக்கும், குத்தகை தாரருக்குமிடையே எழுத்து மூலமான உடன்பாடுகள் வரையறுத்துக் கூறவில்லையாதலால், குத்தகைத்தாரர்கள் நிலத்தின் பராமரிப்பு பற்றி கவலையற்றிருந்தனர்.

(உ) ஒரு விவசாயி தமது வரிப்பணத்தைக் கட்டத் தவறினால் அரசாங்கமே அவரது நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிடலாம்.

(ஊ) வரியும், கட்டத்தவறிய தொகையும் உற்பத்தியாளரே செலுத்த வேண்டும். நிலவருவாய் "குத்தகை" என்ற பெயரால் அழைக்கப்பட்டதேயன்றி "வரி" என்று அழைக்கப்படவில்லை.

(எ) குத்தகைமுறை 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டது. இவ்விதம் கம்பெனியின் அரசாங்கமே விவசாயிகளின் முதலாளியாக (அதாவது நில உடைமையாளராக) மாறியது.

ரயத்வாரி முறையின்கீழ் நிலவரி திரட்டுவதற்கு முன்பு, நிலங்கள் அளக்கப்படும். தனிப்பட்டோரின் நில எல்லைகள் குறிக்கப்படும்; ஒவ்வொருவரின் நில உடைமையும் அளவும் நிர்ணயம் செய்யப்படும். 1855 - 56- இல் சென்னையில் நில அளவைக்கு உத்தரவிடப்பட்டது. சில காரணங்களால் செயல்முறை காலந்தாழ்த்தப்பட்டு 1858- இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1884- ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட, 1860- ஆம் ஆண்டுச் சட்டமானது, கிராமங்களின் எல்லைக்குறிப்புகள், வயல்களின் எல்லைகள், எல்லைத் தகராறுகளை முடித்து வைத்தல், நில அளவை, எல்லைக்

குறிகளைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்கு வழிவகுத்தது. ஆனால் பம்பாய் நில அளவை முறையானது சென்னை மாநில நில அளவை முறையிலிருந்து சில அடிப்படை விதிமுறைகளில் மாறுபட்டிருந்தது.

நில அளவை அதிகாரிகள் தங்களது பணியைச் செய்த பின்பு அந்த நிலமானது வருவாய் அமைப்பு அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு வருவாய் வரி நிர்ணயம் செய்யப்பட்டது. நிலத்தின் மண்ணின் தரம் பார்க்கப்பட்டது. பாசன நிலமா அல்லது தரிசு நிலமா எனவும், பாக்கியத்து (bhagyat) பாசனமா அல்லது தோட்ட நிலமா என்பது கணக்கிடப்பட்டது. அந்த நிலத்தின் சுற்றுப்புறங்கள் பற்றியும், கிராமங்கள், கோட்டைகள், அண்டைப் பகுதிகள் வீட்டுச் சுற்றங்கள், மரங்கள், நீர்த் தொட்டிகள், ஆறுகள், மலைகள், சாலைகள், கிணறுகள், தோப்புகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் போன்றவையும் அளந்தறியப்பட்டன. இந்த அமைப்பு முறையிலும் சென்னை மாநில முறை மற்ற மாநிலங்களிலிருந்த முறையிலிருந்து மாறுபட்டிருந்தது. இதற்கென தனியொரு துறை அமைக்கப்பட்டது. இந்த நில அமைப்பு முறைத்துறைக்கு ஐந்து அல்லது ஆறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ஒரு துணை நில அமைப்பு ஆணையாளர் அல்லது நில அமைப்பு அதிகாரி,. அவரது உதவியாளர், நான்கு நிலங்களைத் தரம் பார்க்கும் அதிகாரிகள் மற்றும் 30 மண்வளம் பிரிக்கும் அதிகாரிகள் பணிபுரிந்தனர். இவர்கள் அனைவரும் வருவாய்க்குழு (Board of Revenue) வின் உறுப்பினர் ஒருவரின் சீரிய தலைமையின் கீழ் பணிபுரிந்தனர். இவர் வருவாய் அமைப்பின் ஆணையாளர் என அழைக்கப்பட்டார்.

வரி திரட்டலுக்காக அமைக்கப்பட்ட நிலஅமைப்பு முறையானது வருவாய்த் துறையின் மிக முக்கிய அம்சமாகும். வருவாய்த்துறை அதிகாரிக்கு உதவியாகத் துணை அதிகாரிகளும் இருந்தனர். இத்துணையதிகாரிகள் சென்னை மாநிலத்தில் தாசில்தார் எனவும், பம்பாய் மாநிலத்தில் மம்லத்தார் எனவும் அழைக்கப்படலாயினர். கிராம அதிகாரிகள், கிராமத்தலைவர்கள், கணக்கர்கள் ஆகியோரால் பாதுகாக்கப்பட்டிருக்கும் கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள் மூலமாக ஒவ்வொரு நிலத்தவரும் செலுத்த வேண்டிய தொகை நிர்ணயிக்கப்பட்டது. இந்த முறையானது ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடப் பட்டது. ரயத்வாரி முறையின் கீழ் ஒரு விவசாயி தமது நிலத்தைக் குறைக்கவும் விரிவு படுத்தவும் உரிமை பெற்றிருந்தார். சென்னை மாநிலத்தில் 1885-ஆம் ஆண்டு புகுத்தப் பட்ட (ஜமாபந்தி) ஆண்டுத் தணிக்கை முறையானது அதன் முக்கிய அம்சங்களைக் கொண்டு, சில மாற்றங்களுடன் இன்றும் இயங்கி வருகின்றது.

இந்த, நில அளவை முறை, வருவாய் அமைப்பு முறை, ஆண்டுத் தணிக்கை ஆகியவை, இக்காலத்திலிருப்பது போன்றே, துவக்கத்திலும், வருவாய் ஆட்சிமுறையை அதிகவேலைச் சுமையுள்ளதாகவும், விரிவானதாகவும் வைத்திருந்தன. இம்முறையானது பயிர் செய்யத் துவங்கும் தருவாயில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கிராமத்தலைவர், பயிர் செய்வது பற்றிய விவசாயியின் விருப்பங்களை அறிந்து செயல்பட்டார். கிராம அதிகாரிகள் பல குறிப்புகளையும், ஆவணங்களையும் பாதுகாத்து வைத்திருக்கவேண்டியிருந்தது. அவர்கள், வருமானம், தொழில், பயிர் செய்தல், நில உற்பத்திப் பொருட்கள், ஒவ்வொரு நில உடமையாளரின் பெயர்கள், நிலத்தின்

உண்மையான தன்மை, அவ்வப்போது பயிரிடப்படும் பொருட்கள் ஆகியவற்றைப் பற்றிய பதிவுக் கணக்கேட்டை வைத்திருக்க வேண்டும்; நிலங்களைச் சுற்றிய எல்லைகள், கிராமங்கள், நில உற்பத்தியில் பழுதான பொருட்களின் அளவு, மரங்களின் எண்ணிக்கை, தரங்கள், கிணறுகளின் எண்ணிக்கை, கிணறுகளின் நிலைகள், குளங்கள், வேலை செய்யப்பயன்படும் இயந்திரங்களின் எண்ணிக்கைகள், ஏர்களின் எண்ணிக்கை, எருமைகளின் எண்ணிக்கை, மற்றும் விவசாயத்திற்குத் தேவைப்படும் பொருட்கள் பற்றிய கணக்குகளைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.

விளக்கமாகவும், விரிவாகவும் அமைத்திருந்த வருவாய் நிர்வாகமானது அன்றைய தனி மனிதனையும், சமுதாயத்தையும் குறிப்பிட்ட அளவு பாதித்தது. ரயத்வாரி முறையின் ஒவ்வொரு அம்சமும் சில நன்மைகளையும், சில தீமைகளையும் கொண்டிருந்தது. கி.பி. 1860,1884- ஆம் ஆண்டுகளின் சட்டப்படி, சென்னை அரசில் நில அளவைப்பற்றிய செலவினங்களை, எந்த நிலத்தின் எல்லைகள் அளந்தறியப்படுகின்றதோ அந்த நிலத்தின் சொந்தக்காரர்தான் செலுத்த வேண்டும். இன்றும் இம்முறை செயலில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். ரயத்வாரி முறைப்படி அதிகாரிகள் அதிக வரி வசூல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதில்லை. இம்முறையால் அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டது. எனவே சில நேரங்களில் அரசாங்க அதிகாரிகள் விவசாயிகளிடம் கெடுபிடியாக நடக்க முடியவில்லை. வருவாய்த்துறையின் சாதாரண நிர்வாக முறையில் ரயத்வாரி முறையானது அரசாங்கத்திற்கும், விவசாயிகளுக்கும், அடிக்கடி நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆனால் இத்தொடர்பால் விவசாய மக்கள் எப்போதும் மகிழ்ச்சியோடு இருந்தனர் என்பதற்கில்லை.

விவசாயிகளை அடக்குவதற்கும், ஒடுக்குவதற்கும், துன்புறுத்தவும், வருவாய்த்துறை தமது துணை அதிகாரிகளுக்கு ஏராளமான சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தது. "சென்னை மாநிலத்தில், கம்பெனியின் ஆட்சிக் காலத்தில், ஒரு மாவட்ட ஆட்சித்தலைவர் வரிசெலுத்தாத நபரைக் கைது செய்ய வேண்டுமானால் அல்லது வரி செலுத்தாதவரின் நிலத்தை விற்று பாக்கிப் பணத்தை திரட்ட வேண்டுமானால் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி எதுவும் செய்ய முடியாது. இம்மாதிரியான நடவடிக்கைகள் எடுப்பதற்கான இசைவை முன் கூட்டியே சிவில் நீதிமன்றத்திலிருந்து பெற வேண்டும். ஆனால் இந்தியாவின் மற்ற மாகாணங்களில் ஒரு மாவட்ட ஆட்சித்தலைவர், தன் விருப்பம் போலவே (தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி), வரிசெலுத்தத் தவறியவரைக் கைது செய்யவும், அல்லது அவரது நிலங்களை விற்று வசூல் செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தார். இதற்காக அவர் எந்த நீதிமன்னறத்தின் உதவியையும் நாட வேண்டியதில்லை" -எனக் கூறப்படுகிறது. ரயத்வாரி முறையில் வரிவசூல் செய்யும் பணி துணை அலுவலர்களிடமிருந்தது. இத்துணை அலுவலர்கள் தங்கள் வாழ்வுக்கும் வசதிக்கும் மாவட்ட ஆட்சித்தலைவரையே நம்பியிருக்க வேண்டியதாயிற்று. எந்தவித பாக்கியும், தாமதமுமின்றி வரி திரட்டுவதே அவர்களது தலையாய கடமையாகும். சட்டரீதியாக கட்டாயப்படுத்தியே வரி திரட்டி எப்படியும் கருவூலத்தை நிரப்பி ஆக வேண்டும் என்ற கட்டாயம் அவர்களுக்கு இல்லை என்றாலும், தமது மேலதிகாரிகளை நிறைவு படுத்த, அவர்கள் சிலசமயம், வன்முறையைப் பின்பற்றத் தவறவில்லை. ஆனால் 1824- ஆம் ஆண்டு மன்ரோ கருதியது போன்று, வரிசெலுத்தாதோர் நிலத்தை அபகரித்து விற்றல்,

கைது செய்தல் போன்றவை சென்னை மாநில வருவாய் முறையில் இல்லாமலில்லை. ரயத்வாரி முறையில் பொறுத்துக் கொள்ளக் கூடிய அல்லது மன்னிக்கக் கூடிய வழிமுறைகள் இருந்ததால், துணை வருவாய் அலுவலர்கள் விவசாயிகளை ஒதுக்குவதற்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் இருந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் ரயத்வாரி முறை நடைமுறைப் படுத்துவதில் ஏற்படும் சில தவறுகளைப் பற்றி அதிகார பூர்வமான அலுவலக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டது. இம்முறையில் ரகசியச் சதித்திட்டமும், தூண்டுதலும், லஞ்ச ஊழலும் பெருகியது. இந்திய அதிகாரிகள் மட்டுமின்றி ஐரோப்பிய ஆட்சித் தலைவர்களும் தங்களை ஊழல் மலிந்தவர்களாக மாற்றிக் கொண்டனர். 1829- இல் ரயத்வாரி முறை பற்றிய அதிகாரப்பூர்வ விமரிசனம் ஒன்று வெளியாயிற்று. அதன்படி, இம்முறையானது விவசாய மக்களிடத்தில் அநியாயமான தன்மையை ஏற்படுத்தி, அதிகாரிகளிடம் ஊழலைப் பெருக்கி, குறைவான மேற்பார்வையைக் கொண்டு மக்களுக்கு நியாயமான நன்மை பயப்பதாக இல்லை என்பதாகும். ரயத்வாரி முறை எவ்வாறு அதிகாரிகளிடம் ஊழலையும், இலஞ்சத்தையும் பெருக்கியது என்பதை தாமஸ்மன்ரோ தாமே உணர்ந்தார்.

ரயத்வாரி முறையில் எவ்வெவ் வகைகளில் ஊழலும், இலஞ்சமும் பெருகுகின்றன என்பதனை கோயம்புத்தூரைச் சேர்ந்த காசிசெட்டி என்பவரது வழக்கிலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது. இந்திய வருவாய்த் துறை வரலாற்றில் காசிசெட்டியின் ஊழல்கள்(frauds) இணையற்ற ஒன்றாகும் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறான ஊழல், இலஞ்ச நோய்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறான நோய்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்திய அலுவலர்க்கு கல்விபுகட்டல், வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு தருதல், அலுவலர்களுக்கு சுயநிதி முறையை ஏற்படுத்துதல் ஆகிய செயல்களால் ஊழலை ஒழிக்க முடியும் என 1815- இல் வருவாய்க் குழு பரிந்துரை செய்தது.

துவக்கத்திலேயே ரயத்வாரி முறையானது ஏராளமான வருவாய்ப் பணியினை நாடியது. இம்முறையைப் பற்றிய அதிகாரப்பூர்வமான தகவல் ஒன்று ஊழலற்ற, இலஞ்சம் பெறாத, திறமையும், தகுதியும் வாய்ந்த அதிகாரிகளை மட்டுமே விரும்பியதாகக் கூறியது. உண்மையில் அதிகாரிகள் திறமையும் தகுதியும் பெற்று நேர்மையுடன் இருந்ததாகத் தெரியவில்லை. ரயத்வாரி முறையின் சில செயல்முறைகளில் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான வழி ஏற்பட்டது. உதாரணமாக, சென்னை மாநிலத்தில், அரசாங்க நீர்ப்பாசன வசதி மூலம் நிலத்தில் பயிர் செய்வோரிடமிருந்து பைசல் ஜாஸ்தி என்ற வரி வசூலிக்கப்பட்டது. இவ்வரி செலுத்துவோர் தங்களது நிலத்திலிருந்து ஒரு போக விளைச்சல்தான் செய்யப்படுகின்றது என்று பதிவு செய்துவிட்டு இரண்டாவது போகமும் அரசுக்குத் தெரியாமல் பயிர் செய்வோரைக் கண்டுபிடிக்க வேண்டியது வருவாய் அதிகாரிகளின் கடமையாக இருந்தது. சென்னை மாநிலத்தில் பயிர் செயதலைக் கண்காணிக்கவும், எல்லைகளை வரையறுக்கவும், அரசு நிலங்களை தனியார் பயன்படுத்தல், நீர்ப்பாசன வசதி செய்தல், கிராம அதிகாரிகளின் நடத்தையைக் கண்காணித்தல், எல்லா வகையான விண்ணப்பங்களையும் பரிசீலித்தல், எஸ்டேட்ஸ்

நிலச்சட்டப்படி நிலங்கள் விற்கப்படல், நில அளவைக் கற்களைப் பாதுகாத்தல் போன்றவற்றைக் கண்காணிக்க சுமார் 1000 வருவாய் கண்காணிப்பாளர்கள் (Revenue Inspectors) தேவைப்பட்டனர். 1837-ஆம் ஆண்டு வரை வருவாய்த்துறையின் கீழ் இயங்கி வந்த சிறிய நீர்ப்பாசன முறை (Minor irrigation) யானது பொதுப்பணித்துறைக்கு மாற்றப்பட்டது. 1878ஆம் ஆண்டு மீண்டும் அம்முறை வருவாய்த்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது; ஏராளமான கண்காணிப் பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அடிக்கடி ஒவ்வொரு கிராமமாக சுற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நிலங்கள் பற்றிய ஆவணங்கள், அவற்றின் கண்காணிப்பு போன்றவை வருவாய் அதிகாரிகளின் பணியாகவே இருந்தது.

இப் பணியாளர்களின் எண்ணிக்கை, வாய்ப்புக்கள், பணியின் அளவு ஆகியவை கண்டிப்பான கட்டுப்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. தலைமை வருவாய் அதிகாரிகள், தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளின் மீது அடிக்கடி சோதனையிடுவதும், கட்டுப்பாடு செலுத்துவதும் ரயத்வாரி வருவாய் ஆட்சி முறையின் முக்கிய பண்புகளில் ஒன்றாகும். வருவாய்த்துறை மேலதிகாரி அல்லது ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டாலும், தோரனையாலுமே துவக்கத்தில் ஓரளவு கையூட்டையும், ஊழலையும், தவறுகளையும் குறைக்க முடிந்தது. 1855- இல் சென்னை மாநிலத்தில், கோயம்புத்தூரில் மட்டும் சுமார் 2,44,011 பேர், தங்களது வருவாய் வரியை நேரடியாக மாவட்ட ஆட்சித்தலைவரிடமே செலுத்தினார்கள் என்று கூறப்படுகிறது. ஆட்சித் தலைவர் இரவு பகல் பாராது ஓராண்டு பூராவும் வருவாய் செயல் முறைக்காகப் பணிபுரிந்திருந்தாலும் அவரால் ஒவ்வொரு வருக்கும் 2 நிமிடங்களுக்குமேல் ஒதுக்கப்பட்டிருக்க முடியாது. ஆட்சித் தலைவரோ அல்லது அவரது துணையதிகாரியோ அல்லது தாசில்தாரோ நிச்சயமாக அவர் தம் மாவட்டத்தின் எல்லா விவசாயிகளையும் சந்திக்க முடிவதில்லை. தவிர பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஆண்டு வருவாய் அமைப்பு முறையானது, கர்ணத்தின் (Karnams அதாவது கணக்கர்) பணியே ஆகும். கர்ணத்தின் பதிவு ஏடுகளும் முழுமையுமாக சரிபார்க்கப்படவுமில்லை.

ரயத்வாரி வருவாய் அமைப்பில், சென்னை மாநில செயல் முறையில் அவ்வப்போது, விவசாயிகளைக் கண்டு எந்தெந்த நிலங்கள் பயிர் செய்யப்படுகின்றன என்பதனை அறியவேண்டியது தாசில்தாரின் கடமையாகும். ஆனால் பம்பாய் மாநில செயல்முறையில் அவ்வாறில்லை. அங்கு எந்தெந்த நிலங்கள் பயிரிடப்படுகின்றன என்பதை அரசுக்குத் தெரிவித்தாலே போதுமானதாகும். இதனை உறுதிப்படுத்திக் கொள்ள ஆண்டுக்கு ஒரு முறை கிராம அதிகாரிகள் கண்காணிப்பு நடத்துவர்.

ரயத்வாரி முறையில் வருவாய்த்துறைப் பணியாளர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர் என்பது மட்டுமின்றி அவர்களில் பெரும்பான்மையோர் இந்தியர்களாக இருந்தனர். கி.பி.1809- ஆம் ஆண்டில் இந்தியர்கள் இத்துறையில் பணிபுரிந்ததன் பயனை நெறியாளர் அவை உணர்ந்தது. இதற்கு முன் வில்லியம் பெண்டிங்கின் காலத்தில் இந்திய சிவில் நிர்வாகத்தில் உள்நாட்டவரின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டியதின் அவசியம் உணரப்பட்டது. அதே போல் அனுபவம் மிக்க வருவாய்த்துறை அதிகாரிகளும், இத்தகைய முறையை வரவேற்றனர். தாமஸ்மன்ரோ காலத்தில் உயர்ந்த ஊதியத்தில், வருவாய்த்துறைப்பணியில் இந்தியர்கள் நியமிக்கப்படுவதற்கு நெறியாளர்கள் அவை

அங்கீகாரம் கொடுத்தது. இந்நிலை தாமஸ்மன்ரோவின் எண்ணப்படி சென்னையில் அமைக்கப்பட்ட இம்முறையானது பம்பாய் அதிகாரிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டது. 1832- இல் சென்னை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் ரயத்வாரி முறை பின்பற்றப்பட்டது. ஆனால் சில ஜமீன்களில் மட்டும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகளில் இந்திய அதிகாரிகள் அதிக அளவில் நியமனம் செய்யப்பட்டனர். அதாவது இதற்குமுன் இருந்ததை விட எண்ணிக் கையில் அதிகமிருந்தனர். வருவாய்க் குழுவும் தனக்கு உதவியாக ஏராளமான இந்தியப் பணியாளர்களை விரும்பியது. சென்னையில் வருவாய்க் குழுவிற்கு ஆலோசனை கூற அனுபவம் மிக்க இந்திய அதிகாரிகள் தேவை என உணரப்பட்டது. எனவே 1881- இல் வருவாய்க்குழு உறுப்பினராக இந்தியர் ஒருவரை நியமிக்க வேண்டும் என சென்னை மாநில முக்கிய அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்தியாவில் மாவட்ட ஆட்சிமுறையானது நிலவருவாய் மூலமாக ஏற்படுத்தப் பட்டது. இந்திய மாநிலங்கள் நிலவருவாய் முறையின் அடிப்படையில் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. 1826 - இல், மன்ரோ, மாவட்டப் பகுதிகளைப் பிரித்து பெல்லாரியில் இருந்தது போன்று மாவட்ட ஆட்சியாளர்களிடமும், மாவட்டங்களின் முக்கிய மையங்களை துணை மாவட்ட ஆட்சியாளர்களிடமும் ஒப்படைத்தார். 1873- இல் சென்னை மாநிலத்தில் ஒரு சராசரி மாவட்டத்தின் பரப்பளவு 6919 சதுர மைல்களாக இருந்தது; அதன் சராசரி மக்கள் தொகை 15,44,000 ஆகும். ஆனால், அதே ஆண்டுவாக்கில் வங்காள மாநிலத்தில் ஒரு மாவட்டத்தின் பரப்பளவு 2325 சதுர மைல்களாகவும், சராசரி மக்கட் தொகை 10,93,379 ஆகவும் இருந்தது. மாவட்ட அரசாங்கம் வருவாய் அதிகாரிகளின்கீழ் இயங்கியது. (மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமை வருவாய் அதிகாரியாவார்). சென்னை, பம்பாய், மற்றும் வேறு மாநிலங்களில் மாவட்ட ஆட்சியாளர் ஆட்சித்தலைவர் என்ற வகையில் மட்டுமல்லாது, வருவாய் விவகாரங்களில் மேஜிஸ்டிரேட் ஆகவும், நீதிபதியாகவும் செயல்பட்டார். பம்பாயில் ஒரு மாவட்டத் தலைவருக்கும், ஒரு ஆட்சிப் பிரிவின் ஆணையாளருக்கும் சேர்ந்து இருந்த மொத்த அதிகாரத்தைவிட சென்னை மாநிலத்தில் ஒரு மாவட்ட ஆட்சியாளரின் அதிகாரம் கூடுதலாக இருந்தது. 1888- இல், சென்னை மாநிலத்தில் மாவட்ட ஆட்சியாளர் தலைமை அலுவலகப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். அதற்கு பதிலாக அப்பொறுப்பிற்கு துணை மாவட்ட ஆட்சியாளர் நியமிக்கப்பட்டார். தாசில்தாருக்கு அடுத்த பதவியிலிருந்த வருவாய்க் கண்காணிப்பாளர்கள் கிராம வருவாய் ஆட்சிமுறையினை கண்காணிக்கும் பொறுப்பைப் பெற்றனர். அவர்கள், கிராம நிர்வாகத்திற்கும் வட்ட அலுவலகத்திற்கும் (Taluk office) ஒரு பாலம் போன்று செயல்பட்டனர்.

சென்னை மாநிலத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகம் கச்சேரி என்று அழைக்கப்பட்டது. அந்த கச்சேரி என்ற பெயரும் அலுவலக அமைப்பும் ஒரு வேளை மொகலாய ஆட்சி முறையின் பிரதிபலிப்பாக இருந்திருக்கலாம். ஜமீன்தார் பகுதியை விட ஒரு மாவட்ட ஆட்சியாளரின் கச்சேரி பயபக்திவாய்ந்ததாக அமைந்திருந்தது. சென்னையில் ஆட்சித்தலைவரின் கச்சேரியில், வங்காள மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத் திலிருந்தது போன்றே அதிகாரிகளின் எண்ணிக்கை இருந்தது. கச்சேரியில்

இரண்டாவது அலுவலகம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இம்முறை வங்காள மாநிலத்தில் செயல்பட்டு வந்தது. எனவே 1802- ,இல் சென்னையில் இந்திய மொழிகளில் வருவாய் ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டி இரு இந்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். 1860- ஆம் ஆண்டில், சென்னை மாநிலத்தில், சென்னை நகர் மற்றும் நீலகிரி தவிர மற்ற மாவட்டங்களில், ஒரே மாதிரியான ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. ரயத்வாரி முறையானது, கச்சேரியால் மாவட்ட தலைமை மையங்களில் மட்டுமல்லாது, மற்ற சிறு பகுதிகளிலும் செயல்படுத்தப்பட வழி வகை செய்யப்பட்டது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் செரிஸ்டதார் என்ற ஒரு பதவி இருந்தது. இவரது பணி, இந்திய வருவாய்க் கணக்குகளின் மேற்பார்வையாளரது செரிஸ்டாவைக் காத்துவைத்திருத்தல், வருவாய் நிர்வாகத்தின் சட்ட திட்டங்கள், ஆணைகள், போன்ற வற்றைப் பத்திரப்படுத்துதல், வருவாய் வசூல் கணக்கு வைத்திருத்தல் போன்றவையாகும். சென்னை மாநிலத்தில் ஒரு செரிஸ்டதாரின் நிலை மிகச் சிக்கலானதாக, குறைபடக் கூடிய, பிரச்சினைக்குரியதாக இருந்தது; ஏனெனில் செரிஸ்டதார் ஏராளமான அதிகாரங்களை வைத்துக் கொண்டிருந்தார்; ஆனால் எந்தவிதப் பொறுப்பும் அவருக்கு இல்லை. 1822ஆம் ஆண்டு XI- ஆம் பிரிவு சட்டப்படி அவருக்கு சில நீதித்துறை அதிகாரங்களும் வழங்கப்பட்டது; ஊதியப்படியும், நில இனாமும் பெறுவதற்கும் முயன்றனர். சென்னை மாவட்ட ஆட்சியாளரின் கச்சேரியில், செரிஸ்டதாரின் செல்வாக்கு 1858- க்குப் பின் குறைந்தது. துணை ஆட்சித்தலைவர்கள் ஏராளமாக நியமிக்கப்பட்டனர்; அவர்கள் ஆட்சித்தலைவரின் வேலைப்பளுவைக் குறைத்தனர். ஆட்சித்தலைவர் அலுவலகப் பணிப்பளுவும் குறைக்கப்பட்டது. 1858- இல் செரிஸ்டதார் பதவியை நீக்கி விட வேண்டும் என்று கூறப்பட்டபோது சென்னை மாநில அரசு சார்பில் எதிர்த்து வாதிடப்பட்டது. யார் நிலவரி அமைப்பைக் கண்காணிக்கின்றார் களோ அவர்களே ஒரு நாட்டின் முக்கிய மையமாக அல்லது அச்சாணியாக இருப்பர் (Mainspring); ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அம்மாவட்டத்தின் அச்சாணி என்றால், செரிஸ்டதார் அம்மாவட்டமாகிய கடிகாரத்தின் நுண்ணிய கருவிக்கு (hairspring) ஒப்பாவார் என சர் தாமஸ் மன்ரோ கூறினார்.

இந்திய மாவட்டங்கள் பெரிய அளவில் அமைந்திருந்ததால் அவை மேலும் பிரிக்கப் பட வேண்டியிருந்தன. சென்னை மாநிலத்தில், மாவட்டப் பிரிவுகள் தாலுகாக்கள் (இன்றைய வட்டம்) எனவும், வடஇந்தியப்பகுதிகளில் தாசில்கள் (Tashils) எனவும் அழைக்கப்படலாயின. 1861- ஆம் ஆண்டுக்கு முன்பு சென்னையில் 210 தாலுகாக்கள் இருந்தன; 1902- இல் 58 தாலுகாக்கள் இருந்தன. ரயத்வாரி நிர்வாக அமைப்பு முறையை திருப்திகரமாகச் செயல் படுத்துவதற்கு, அரசாங்கம், தாசில்தார்களையே அதிகமாக நம்பியிருக்க வேண்டியிருந்தது.

பலவகையான வருவாய் அமைப்பு முறையானது பலவகையான கிராம ஆட்சி முறைக்கு வழிவகுத்தது. அரசு தன்னைத்தானே செல்வாக்குடன் இயங்குவதற்காக கிராம வாழ்க்கையை பயன்படுத்திக்கொள்ள ரயத்வாரி முறை வழிவகுத்தது. கிராமத் தலைவர்களும், மற்றும் கிராம பரம்பரை அதிகாரிகளும் அரசாங்கத்தின் நேரடி

கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டனர். சென்னை மாநிலத்தில் ரயத்வாரி முறை கொண்டுவரப்பட்டபோதே ஒழுங்கான கிராம அமைப்புமுறை ஏற்படுத்தப்படுவதும் அவசியமாகியது.

அரசாங்கத்தில், அனுபவமற்ற, விபரம் தெரியாத அசட்டுத்தனமான உயர் அதிகாரிகள் ஏராளமாக இருந்தனர். எனவே, ஒவ்வொரு கிராமத்திலும் கிராம ஆட்சி முறை ஏற்படுத்தி செயல்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கிராம பட்டேல் அல்லது முன்சீப், கர்ணம் போன்றோர்களின் சேவையையே ரயத்வாரி முறை அதிகமாக எதிர் நோக்கியிருந்தது. நிலப்பதிவேடுகள், வரி செலுத்தப்பட்ட கணக்குகள், மிராஸ் (Miras), தானியங்களின் மாதாந்திர விலைப்பட்டியல், சரியான வருவாயைக் காட்டும் கணக்குகள், மற்ற கிராமப் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தன் பொறுப்பில் வைத்துக் காப்பது கர்ணத்தின் முக்கிய கடமையாக இருந்தது.

ரயத்வாரி முறையின் நன்மைகள்

(அ) நிலமானிய முறையைப் போன்றல்லாது ரயத்வாரி முறையானது அரசாங்கத் திற்கும் விவசாயி அல்லது நிலவுடைமையாளருக்கும் நேரடித் தொடர்பை ஏற்படுத்தியது. இம்முறைப்படி, பதிவு செய்யப்பட்ட நில உடைமையாளர் அந்நிலத்தின் சொந்தக் காரராக அங்கீகரிக்கப்பட்டார்; அவரே நேரடியாக அரசுக்கு வரி செலுத்தக் கடமைப் பட்டிருந்தார்.

(ஆ) நிலங்களை அதன் உடமையாளரிடமிருந்து குத்தகைக்குப் பெற்றவர் மீண்டும் மறு குத்தகைக்கு விடுவதற்கு உரிமை பெற்றிருந்தார். தொடர்ந்து, தவறாது, வரி செலுத்தும் வரை அவர் நிலத்திலிருந்து விடுவிக்கப்படுவதில்லை. நிலஉடமையாளர் நிலத்தை விற்கவோ, அல்லது அடமானம் வைக்கவோ உரிமை பெற்றிருந்தார்.

குறைகள்

(அ) நிலங்கள் குத்தகைதாரருக்கு மட்டுமல்லாது மறுகுத்தகைக்கும் விடப்பட்டன. இதனால் நிலமற்ற குத்தகைதாரர்களின் எண்ணிக்கையே நாட்டில் பெருகியது.

(ஆ) பெர்சிவல் ஸ்பியரின் கருத்துப்படி, ரயத்வாரி முறையானது கிராம மக்களை முன்னேற்றத்துக்குக் கொண்டு வரவில்லை. மாறாக அவர்களைக் கொடுமைக் குள்ளாக்கியது.

(இ) மிகக் குறுகிய காலத்திற்குள் நிலஉடைமையாளர்கள் ஜமீன்தார்களாயினர். ரயத்வாரி முறை செயல்படுத்தப்பட்ட பகுதிகளில் குத்தகையாளர் அல்லது வாடகை கொடுப்போரின் எண்ணிக்கையே பெருகிற்று. சில மாதத்தவணைக்குள் நிலத்தைப் பிடுங்கிக் கொள்ளும் உரிமை நிலப்பிரபுக்களுக்குக் கொடுக்கப்பட்டது. குத்தகையாளர்கள் நிலத்தைப் பண்படுத்தாது சோம்பித் திரிந்தனர். வருமானத்தில் கொண்டிருந்த அக்கறையைப் பாதுகாப்பில் காட்டத் தவறினர்.

(ஈ) குத்தகைப் பணம் வசூல் செய்யவேண்டிய பொறுப்பு சிவில் பணியாளர் களிடமிருந்தது. இச் சிவில் பணியாளர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே கொடுக்கப் பட்டது. எனவே இப்பணியாளர்களிடம் ஊழல், இலஞ்சம் மலிந்து காணப்பட்டது.

நிலத்தில் சென்று தொழில் செய்யாதவர்கள் பெரும் நிலக்கிழார்களாக இருந்ததும், நிலமற்ற தொழிலாளர்கள் ஏராளமாக இருந்ததும் பயனற்ற நிலையைக் காட்டியது.

"சுமார் முப்பது ஆண்டு காலமாக சென்னை மாநிலம், நிலப்பிரபுக்களின் எல்லாவகையான தவறுகளுக்கும் இருப்பிடமாக இருந்தது. இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலும் இவ்வாறு குத்தகைதாரர் அல்லது விவசாயத் தொழிலாளர் இழிநிலைக்கு உட்பட்டதாகக் கூறமுடியாது" என்பதாக ரமேஸ்தத் குறிப்பிடுகின்றார்.

ரயத்வாரி முறை, முந்தைய, மத்திய, பிந்திய என மூன்று காலக்கட்டங்களைக் கொண்டது. இந்த அமைப்பின்கீழ் விவசாயிகளின் சராசரி உடைமை (அண்மைக் காலக் கணக்குப்படி) 6 1/2 ஏக்கர் நிலமாகும் என ஆர். சத்தியநாதய்யர் கூறுகின்றார். இதற்கு பதில்கூறும் வகையில், மன்ரோ ஜமீன்தார் முறைக்கு எதிரான முறையீடுகளைச் சுட்டுகின்றார்.

பெல்லாரி மாவட்ட ஆட்சித்தலைவர், தனது 1845- ஆம் ஆண்டு அறிக்கையில், ராஜமுந்திரியில் எல்லா குத்தகைதாரரும் கடன்காரர்களாகிவிட்டனர் எனக் குறிப்பிடு கின்றார். பஞ்சம், புயல் ஏற்பட்ட காரணத்தால் விவசாயத் தொழிலாளர் அதிகம் துன்புற்றனர் என்பது அவரது அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது,

நெல்லூரில், நில உற்பத்தியாளரிடமிருந்து பொருட்கள் மிகக் குறைந்த விலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனால் விவசாயிகள் வறுமையால் வாடினர்.

வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாயிகளின் நிலை கவலைக்கிடமாகியது. கோயம்புத்தூரில் பத்து அறுவடையில் சுமார் ஒன்பது அறுவடை நட்டத்திற்குள்ளாகியது. மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் பகுதிகளில் பருத்தியின் ஏற்றுமதிக்கு ஏற்ப விவசாயிகளின் கூலி உயரவில்லை.

சுதந்திரத்திற்குப் பிந்திய நிலவருவாய் ஆட்சிமுறை

இந்திய சுதந்திரத்தின் போது, தமிழகம், ஜமீன்தாரிமுறை, ரயத்வாரி முறை ஆகியவற்றின் இன்னல்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. 1793- இல் வங்காளத்தில் காரன்வாலிஸ் பிரபுவால் ஜமீன்தாரிமுறை புகுத்தப்பட்டது. பின்னாளில் இம்முறை, சென்னை மாநிலத்தில், தனிப்பட்டோரின் செல்வாக்காகவும், ஆங்கில அரசுக்கு ஏவலாகவும் இம்முறை மாறியது. இங்கு வருவாய் வசூலிப்போர் நில உடைமையாளருக்குச் சமமாக உயர்த்தப்பட்டனர். ஜமீன்தாரிமுறை நிரந்தர, தற்காலிக அமைப்பு முறைகளி லிருந்தன. சென்னை மாநிலத்தின் வடபகுதியில் நிரந்தர அமைப்பு முறையானது ஒரு குறிப்பிட்ட நிலவருவாயுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்காலிக ஜமீன்தாரி அமைப்பு முறையில் நிலவருவாய் வசூல் 20 ஆண்டிலிருந்து 40 ஆண்டுகள் வரை என

நிர்ணயிக்கப்பட்டது. இது பல மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே, நிலவருவாயானது மாற்றியமைக்கும் தன்மையுடையதாய் இருந்தது. ஆங்கிலேயரின் கருத்துப்படி, ஜமீன்தாரர்கள் கிராம அல்லது நாட்டுப்புறப் பகுதியின் விழிப்புணர்ச்சி மிக்க மக்களின் பிரதிநிதியே ஜமீன்தார் என்பதாகும். குழப்ப சூழ்நிலைகள் இருந்தபோது நில உடைமையாளர்கள் குத்தகைதாரரிடமிருந்து ஏராளமாக குத்தகை வசூலிக்கத் தொடங்கினர். வேளாண்மையை ஏற்றம் செய்யவும் நிலத்திலில்லாத நிலக்கிழார் முறையை ஒழிக்கவுமே ஜமீன்தாரிமுறை ஏற்படுத்தப்பட்டது என பலர் கருதினர். நிலக்கிழார்கள் அவர்களுக்கே உரிய தவறுகளுக்கும், மதுவுக்கும், மாதுவுக்கும் அடிமைகளாய்த் திரிந்தனர். இவ்வாறு சென்னை மாநில வடக்குப்பகுதி நிலத்திற்கு வராத நிலக்கிழார், நிலஉடைமையற்ற உற்பத்தியாளர் என்ற இரு பிரிவினரைக் கொண்டிருந்தது. உண்மையான உற்பத்தியாளர்கள் நிலத்திற்கு வராத உடைமையாளர்களால் சுரண்டப்பட்டனர். மாநில அரசும் இம்மாதிரியான சுரண்டல்களைக் கண்டிக்க முன்வரவில்லை; இதனால் சமுதாயச் சீர்கேடுகள் தவிர்க்க முடியாதவையாயின.

ரயத்வாரி முறை, இந்தியப் பண்பாட்டின் முக்கிய கூறாகக் கருதப்பட்டு சென்னை மாநிலத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் 1792, 1814ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்முறை தீர்க்க முடியாத பலபிரச்சினைகளைக் கொண்டும், சமுதாயச் சீர்கேடுகளைக் கொண்டும் இயங்கியது. ஜமீன்தாரி முறையை ஏற்படுத்திய காரன்வாலிஸ், ரயத்வாரி முறையை ஏற்படுத்திய தாமஸ்மன்ரோ ஆகியோர், இம்முறைகள், 1940- இல் இயங்கிய நிலையைப் பார்த்திருந்தால் அவற்றை அந்நிலையிலேயே ஏற்றுக்கொண்டிருப்பர் என வெங்கடசுப்பையா குறிப்பிடுகின்றார். ஜமீன்தாரி முறையும், ரயத்வாரி முறையும் கலந்து ஒரு கலப்பு நிலவருவாய் முறை ஏற்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்பு, சென்னை மாநிலத்தில், நிலத்தில் பயிர் செய்வோருக்கும் அரசுக்குமிடையே இருந்த இடைத்தரகர் முறையை ஒழிக்கத் திட்டமிடப்பட்டது. குத்தகை செலுத்துவது, குத்தகைதாரருக்கு பாதுகாப்பு அளிப்பது, அவர்களது உடைமை ஏற்றுக் கொள்ளப்படுவது, நிலஉடைமை அளவு, கூட்டுறவுப்பண்ணைமுறை ஆகியவற்றின் மீது சட்டமியற்றப்பட்டது. ஆனால் இந்த சட்டங்கள் இடைத்தரகர்களை ஜமீன்தார்களுக்குச் சமமாக்கியது. எனவே இம்முறை குத்தகைவாங்குவோரையும் நிலத்திற்கு வராத நிலக்கிழார்களையும் தனித்தியங்கச் செய்தது. வேளாண்மைக் கொள்கையின் அடிப்படையிலேயே, மாநில அரசு, ஜமீன்தார் நீங்கலான மற்ற குத்தகைபெறுவோரைக் கட்டுப்படுத்த முன்வந்தது.

1948- ஆம் ஆண்டு சென்னை சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத்திற்குப் பின்பே உண்மையில், இடைத்தரகர்களை ஒழிக்கும்முறை துவங்கியது. ஆனால், சிறுகுத்தகைதாரர்களும் நில இனாம் பெற்றவர்களும் ஒழிக்கப்படவில்லை.1948, 1950ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மீண்டும் இடைத்தரகர் முறையை ஒழிக்கும் சட்டம் புதுபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மற்ற மாநிலங்களும் இம்முறையை செயல்படுத்த முற்பட்டன. ஏராளமான குத்தகை நபர்கள் தாங்கள் பயிர் செலுத்தும் நிலத்தின் உரிமையாளர்களாயினர்; குத்தகைதாரர்கள் பங்குதாரர்களாக்கப்பட்டனர். இடைத்தரகர்கள் இழப்பீடு பெற்றனர். இந்த இழப்பீடு பணமாகவோ, எழுத்துப் பத்திரமாகவோ கொடுக்கப்பட்டது.

தமிழகத்தில் நான்கு வகையான குத்தகைதாரர்கள் — பாதுகாக்கப்பட்ட, உடைமையாக்கப்பட்ட, சாதாரண, பங்குதாரர் என்று இருந்தனர். இவர்களில் முதல் இருவகையினரின் நிலை பாதுகாப்பானதாகவும், மற்ற இருவரின் நிலை சிக்கலானதாகவுமிருந்தது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் உற்பத்தியில் பாதி என்பதை மொத்த உற்பத்தியில் 1/4 அல்லது 1/5 பங்கு என நிலவருவாயில் மாற்றம் செய்தன. தமிழக அரசு மொத்த உற்பத்தியில் 33.3% இலிருந்து 40% வரை நிர்ணயம் செய்தது. குத்தகை வரியை அரசு பணமாகவே நிர்ணயித்தது. பின்னால் வந்த திட்டங்கள் குத்தகை வரியின் சதவீத முறையைக் குறைத்து பல புதிய திட்டங்களைக் கொண்டுவந்தன. பொதுவாக உற்பத்தியாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமலும், அரசுக்கு இழப்பு ஏற்படாமலும் அரசின் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பஞ்சங்கள் – பஞ்ச நிவாரணங்கள்

இந்தியா ஓர் ஏழ்மையான நாடு; பஞ்சங்கள் நிறைந்த நாடு; பட்டினியால் வாடும் மக்களைக் கொண்ட நாடு; இயற்கையின் சோதனைகளாலும் மனிதனின் கொடுமைகளாலும் அவதிப்படும் நாடு; பஞ்சம், வறட்சி, வெள்ளப்பெருக்கால் சேதங்கள்; தொத்து நோய்களால் பேரிழப்புகள்; மனிதனின் போர்கள், கொள்கைகள், அழிமதிகள் ஆகிய வற்றால் சேதங்கள்; போரின் போது யானைகள், குதிரைகள், வீரர்கள் நடமாட்டத்தால் அழிவுகள்; வரிக் கொடுமைகள்; தானிய அழிவுகள்; அதிகாரிகள் ஆணவச் செயல்கள்; ஊழல் பேர்வழிகளின் நாச வேலைகள்; மழை தவறின் ஏற்படும் வறட்சியால் வறுமை; மேல்மட்டச் சமுதாயத்தாரின் வெறித்தனங்கள்— இவை அனைத்தும் இந்தியத் துணைக் கண்டத்தை குறிக்கும் அடைமொழிகள். பஞ்சத்தால் அவதிப்பட்டோர் செல்வந்தர்களல்ல; செல்வந்தர்களும் உண்ண உணவு உற்பத்தி செய்த ஏழை உழவர்கள், தொழிலாளிகள், வேளாண்மைக்கும் போதிய ஆதரவற்ற நிலையில் உழுதொழில்கள் புறக்கணிக்கப் பட்டன; உற்பத்தியும் குறைந்தது. உழுதொழிலைச் செய்ய உழவன் பயன்படுத்திய காளைகளும் எருதுகளும் காக்கப்படவில்லை; பால்தரும் விலங்குகளுக்கும் போதிய உணவில்லை. போதிய உணவின்மையினாலும், கவனக் குறைவினாலும் மனிதனுடன் அவன் வளர்த்த வீட்டு விலங்குகளும் மாண்டு மறைந்தன.

பொதுவாக, வறட்சி, வெள்ளச்சேதம், பருவமழைப் பொய்ப்பு ஆகியவற்றால் ஏற்படுவது பஞ்சம். எலி போன்ற ஊர்வனவற்றால் உணவுப் பொருள் நாசம் ஏற்படுகின்றது. இயற்கையின் சோதனைகளுடன் மனிதனின் கொடுமைகளும் இணைந்தால் ஏற்படும் விளைவு இரங்கத் தக்கது. இந்நிலையில் அரசின் கொடிய வரி திரட்டும் முறைகளும் நாட்டுச் செல்வம் அந்நிய நாடுகளுக்கு வெளியேறுதலும் இணைந்து விட்டது என்றால் விளைவுபற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

18ஆம் நூற்றாண்டிறுதியில் சென்னை மாகாணம்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் கம்பெனியின் செல்வாக்கு பெருமளவு வளர்ந்ததுடன், நிர்வாகச் சீரமைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. சென்னை மாகாணம் உருவாயிற்று. இம்மாகாணத்தில் வட சர்க்கார்ப் பகுதிகளும், செங்கல்பட்டு மாவட்டமும், மலபார், சேலம், கோவை, கானரா, வைநாடு, திண்டுக்கல்லில் சில

எல்லைகளும், மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளும் அடங்கியிருந்தன. தஞ்சை கம்பெனியாரின் செல்வாக்குக்கு இரையாகிய போதும் அது 1856- இல் கம்பெனியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. புதுக்கோட்டையின் தொண்டைமான் நாடும், இராமநாத புரத்துச் சேதுபதி நாடும் கம்பெனிக்கு அடங்கிய ஜமீன்தாரிகளாயின. திருவிதாங்கூர்—கொச்சின் தனித்தியங்கிய நாடுகளாயிருந்தும், அவை துணைப்படைத்திட்டத்தில் சேர்ந்திருந்தன.

தென்னகத்தின் அதிகாரங்களும், அதிகாரிகளும் மாறி மாறி வந்தனர். அவர்களால் நடத்தப்பட்ட அரசியல் சூழ்ச்சிகளால் நாட்டில் நிலையான குழப்பங்கள் இருந்துவந்தன. இதனால் அவ்வப்போது போர்களும் நிகழ்ந்தன. இவை அனைத்தும் நாட்டமைதியைப் பாதித்தன. அரசியல் குழப்பம், பதவிக்கும் உயிருக்கும் ஆபத்து; மக்களிடையே தொடர்ந்த பீதி; அதனால் தொடர்ந்த அழிவுகள். விளை நிலங்களைச் சற்றும் பொருட்படுத்தாது திடீர் திடீரென்று இடம்விட்டு இடம்மாறும் போர்வீரர்களால் நாசம். அவர்கள் தமக்கு வேண்டியவற்றைக் கொள்ளையடித்துச் செல்வர். இதனால் அவதிப்பட்டோர் கிராமங் களிலே வாழ்ந்துவந்த உழவர்களே. போர்க்கால அழிவுகளுடன் நிர்வாகச் சீர்கேடுகளும், நாசச் செயல்களும் இணைந்து விட்டால் ஏற்படும் தீங்கைக் கூறவேண்டியதில்லை. நிர்வாகத்தில் லஞ்ச ஊழல்கள் மலிந்து காணப்பட்டன. அத்துடன் அதிகார வெறியும் மக்களைப் பாதித்தன. ஒவ்வொரு படை நிர்வாக அதிகாரியும் தத்தம் பணப் பெருக்கத்தை வலுப்படுத்தினர். அச்சுறுத்தி கையூட்டு பெற்றனர்.

வரிக் கொடுமையினால் வேளாளரும், கைவினைஞரும், வணிகரும் அவதியுற்றனர். கொடிய வரிகளோ பல தரப்பட்டவை, நூற்பவர்கள் மீது தறி வரியும், கை வினைஞர் மீது தொழில் வரியும் விதிக்கப்பட்டன. மீனவர், குயவர், வண்ணார், கலைஞர் மீது கட்டாய வரிகள் விதிக்கப்பட்டன. உள் ஆலைகள் மீது சரக்கு இடம் பெயர்ப்புவரி (transit duties) விதிக்கப்பட்டது. வரி விதிப்புக் கொள்கைகளில் எவ்விதி நாணயமான வரை முறைகளும் கடைப்பிடிக்கப்படவில்லை. வர்த்தக வரிகளும் சுங்க வரிகளும் வர்த்தகப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டன. மேலும் அவை சுங்கச் சாவடிகளில் சோதனையிடப்பட்டன. "மொத்த நிர்வாக முறையும் சீர்கெட்ட நிலையில் நீதியற்றதாயும் கொடியதாயும் காணப்பட்டது" என்று சாரதா ராஜு கருதுகின்றார். வருவாய்க் குழுவின் அங்கத்தினராகிய எல். தக்கரேயின் கருத்துப்படி, அபராத வரிகள், நிலப்பண்ணை மானியங்கள், கட்டாய வரிகள், மற்றும் நன்கொடைகள் என்பவற்றை விதித்து நாட்டை வறட்சியுடையதாக்கினர்.

உழவர், வணிகர், வினைஞர், தொழிலாளர் வரிகொடுக்கத்தவறின் தரக்குறைவாக ந' -த்தப்பட்டனர். இதனைப் பயன்படுத்தி அதிகாரிகள் செய்யக்கூடாதன அனைத்தும் செய்தனர். அறுவடைக் காலங்களில் விளை பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன; பெரும்பான்மை விளை நிலங்கள் அழிக்கப்பட்டன. கூலிப் படையினரின் உதவியுடன் தலத்தலைவர்கள் உழவர்களைக் கொடுமைப்படுத்தி, விளைபொருட்களைக் கொள்ளையடித்தனர்; மறுத்தோர் கொலையும் செய்யப்பட்டனர். இச்சூழல்களில் உழவர் நிலங்கள் பாழடைந்து போயின.

கம்பெனியார் நிர்வாகமேற்ற பின்னும் ஜமீன்தார்கள் பாளையக்காரர், கொள்ளைக் காரரின் கெடுபிடிச் செயல்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. சில கருநாடகப் பகுதிகளை உள்ளிட்ட வடசர்க்கார்கள் மிகவும் "மோசமான நிலையில்" காணப்பட்டன. இதனால் மக்கள் தொகையும் பாதிக்கப்பட்டு குறையத் தொடங்கிற்று. ஏனெனில் மக்கள் தங்கள் வாழுமிடங்களை விட்டு வெளியேறினர். நிர்வாகச் சீர்கேட்டினால், போர்க்காலக் கெடுதிகளைவிட, நெல்லூர்ப் பகுதி பாதிக்கப்பட்டது. உள், வெளி வர்த்தகம் பாதிப்புக் குள்ளாயிற்று; பொருட்களின் இடமாற்றம் பெரும் செலவுக்குரியதாயிற்று; செய்தித் தொடர் முறைகள் செலவுடன் பயனற்றதாயும் மாறிற்று. சீர்கெட்ட நிர்வாகம், போர்கள், பஞ்சங்கள் நாட்டைக் கெடுத்து விட்டன. கொடிய வரி விதிப்பு முறையும், கொடிய வரி வாங்கு முறையும் இணைந்து ஆர்க்காட்டுப் பகுதியை பாழடையச் செய்தன தஞ்சையின் பொருளாதார நிலை பரிதாபத்திற்குள்ளாகாமல் இருந்தும், அந்நாட்டில் சீர்கெட்ட ஆட்சியின் தாக்கல்கள் இருந்தன. கோவை ஆளுநரின் கருத்துப்படி, அப்பகுதி மக்கள் பாதியளவு குறைக்கப்பட்டனர்; பயன்தரு விலங்குகள் ஐந்திலொரு பகுதியாகக் குறைந்தன. 1800- ஆம் ஆண்டு கம்பெனியால் நியமிக்கப்பட்ட புக்கனன் (Buchanan) என்ற அதிகாரி சமர்ப்பித்த அறிக்கை, நாடு சீரழிந்த நிலையைத்தெள்ளத்தெளிய விளக்குகின்றது.

இப்பாதிப்புகளுடன் பஞ்சத்தின் பாதிப்புகளும் இணைந்து விட்டன. நாட்டுப் பகுதிகளில் செழிப்பு இருந்தது என்பதை முன்னிட்டு சென்னை மாகாணத்தில் செல்வச் செழிப்பு மிகுந்து இருந்தது என்று பொருள் படாது. பஞ்சங்கள் நம் நாட்டுக்குப் புதியனவல்ல. பற்றாக்குறைகள் பஞ்சத்தில் முடிகின்றன; அதிகப்படியான வரிதிரட்டல் இச் சூழலைப் பரிதாபகரமாக்குகின்றது; நன்மை வேண்டி தீட்டப்பட்ட ஆனால் கொடிய நிர்வாக முறைச் சீர்கேட்டால் அவை பன்மடங்காக்கப்படுகின்றன என்று மன்ரோ குறிப்பிட்டார்.

நாட்டிலேற்பட்ட பஞ்சங்கள் மக்களைப் பாதித்தவகையினையும், அவற்றிலிருந்து அரசு அளித்த நிவாரணங்களையும் இனி காண்போம். பழங்காலம் தொட்டே தமிழகம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட நாடு. பாண்டியர் ஆட்சியின் போது பன்னீராண்டுக் கால வற்கடகம் பற்றிக் கூறப்படுகிறது. முகலாயர் ஆட்சியின் போது, குறிப்பாக ஷாஜகானின் காலத்தில் தென்னகத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. 1781- இல் கொடிய பஞ்ச மொன்று எற்பட்டுள்ளது. அதனால் சென்னைப் பகுதியும், அண்டை ஜாகீர்ப்பகுதியும், தென்பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. ஹைதர் அலியின் தமிழகப் படையெடுப்புக்குப் பின் இது ஏற்பட்டமையின் அதன் கொடுமை அதிகமாயிருந்தது. மாவட்டங்கள் 'மொத்தமாக அழியும் நிலையில்' தோற்றமளித்தன. ஷாகீர்ப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பலர் மாண்டு போயினர்; பலர் மரணத்துக்கு அஞ்சி வெறியேறினர். மக்கள் சென்னைக்கு வந்து குவியத் தொடங்கினர். அங்கு மணியக்காரர் சத்திரத்திலிருந்து (Monigar choultry) உணவு வினியோகம் செய்யப்பட்டது. அச்சத்திரத்தில் ஒரே வேளையில் ஏறத்தாழ 4000 பேர் உண்டி கொடுக்கப்பட்டனர். மேலும் பலர் கூட்டங்கூட்டமாக வடசர்க்கார்ப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இப்பஞ்சம் கி.பி. 1784- இல் முடிவடைந்தது.

அடுத்த கொடிய பஞ்சம் கி.பி.1790-92- ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது. இப் பஞ்சம் வடசர்க்கார்ப் பகுதிகளை அதிகம் பாதித்தது. கம்பெனி நிர்வாகத்தின் போது இதுகாறும் இதுபோன்ற பஞ்சம் அப்பகுதியில் ஏற்பட்டதில்லை. கொலை, களவு, கொள்கைகளால் நிலைமை மிகவும் மோசமாயிற்று. அத்துடன் நிர்வாகச் சீர்கேடுகளும் மக்களைக் கொடுமைப்படுத்தின. வேளாளர் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். மக்கள் பலரும் தத்தம் நிலங்களை விட்டு வெளியேறியதால், செழிப்பான நிலங்கள் கூட பாழடைந்தன.

அந்நூற்றாண்டில் பிறிதொரு பஞ்சம் ஏற்பட்டது. அப்பஞ்சத்தால் வடசர்க்கார்கள், மதுரையின் தென்பகுதிகள், இராமநாதபுரம், திண்டுக்கல் பகுதிகள், அண்டைப்பகுதிகள் பாதிக்கப்பட்டன. கஞ்சம் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறினர். மதுரை, திண்டுக்கல் பகுதிகளில் அரசு உதவிக்கு வந்ததால், கருவூலத்தில் பெருஞ்சிதைவு ஏற்பட்டது.

1805- ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தில் பிறிதொரு பஞ்சம் ஏற்பட்டது. அப்பஞ்சத்தால் அழிக்கப்பட்ட மாவட்டங்கள், நெல்லூர், வடதென் ஆர்க்காட்டுப் பகுதிகள்; மதுரை, திண்டுக்கல், செங்கல்பட்டு, தஞ்சை, திருச்சி ஆகிய பகுதிகள் அவதியுற்றன. மற்ற பகுதிகளில் இதன் தாக்குதல்கள் பற்றியறியப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. சென்னையில் மட்டும் 17,000 க்கும் மேல் உயிர் இழப்பு ஏற்பட்டது. சென்னையில் மட்டும் இத்தொகையெனின் மற்றப் பகுதிகளில் இறந்தோரின் எண்ணிக் கையை என்னென்பது.

கி.பி. 1811-12- ஆம் ஆண்டுகளில் மதுரையும் தென்மாநிலங்களும் பிறிதொரு பஞ்சத்தையும் வறட்சியையும் அனுபவித்தன. இப்பஞ்சத்தால் அதிகமாக மக்கள் அவதியுறவில்லை. 1823-24 ஆம் ஆண்டு வரை பெரும் பஞ்சங்களேதும் ஏற்படவில்லை என்று கூறலாம். கருநாடகப் பகுதிகளும், தென்மாநிலங்களும் பொருள் பற்றாக் குறையால் அவதிப்பட்டன. அக் குறைவுக்குக் காரணம் மழை பொய்த்தமை. இதனால் உணவுப் பொருட்களின் விலை ஏறத் தொடங்கிற்று. தொடக்கத்தில் பெருஞ்சேதங்கள் ஏதும் ஏற்படுத்தாத இவ்வறட்சி, காலப்போக்கில் உணவுப் பற்றாக் குறையால் மக்களை வருத்தியது. நாட்டில் பலவிடங்களிலும் மக்கள் மாண்டனர்; பலர் அடிமைகளாக விற்கப்பட்டனர்.

1830-31 ஆம் ஆண்டுகளில், பிற்காலத்து கோதாவரி மாநிலம் என்று அழைக்கப்பட்ட ராஜமுந்திரிப் பகுதி கொடிய பஞ்சங்களுக்குள்ளாக்கியது. 1835,36,37- ஆம் ஆண்டுகளில் கால நிலையும் சாதகமாயில்லை. 1838, 39, 40- ஆம் ஆண்டுகளில் கொடூரமான கால நிலை மக்களை வாட்டியது. 1830- இல் 695,016- ஆக இருந்த மொத்த மக்கள் தொகை 1840- இல் 533, 836 ஆகக் குறைந்தது.

1833- இல் கொடுமையான குண்டூர்ப் பஞ்சம் ஏற்பட்டது. மசூலிப் பட்டணத்தில் மக்களும், வீட்டு விலங்குகளும் உணவின்றி மாண்டன. வாழும் வழியின்றி வேளாளர் அவதியுற்றனர். பெரும்பான்மை மக்கள் வாழ வழியின்றி இடம் பெயர்ந்தனர்; கலகங்களும், கொள்ளைகளும், நோய்களும் நாட்டைப் பாதித்தன. நெல்லூரில் சடலங்கள் காணப்பட்டன. நகரத்தில் 10,000 பேர்களுக்கு உணவு வினியோகம் செய்யப்பட்டது.

மக்கள் திரள்திரளாகச் சென்னைக்கு வரத்தொடங்கினர். இப்பஞ்சத்தின் பாதிப்புகள் குண்டூருக்கும் பரவின. 'போதிய அளவு வல்லமையுடைய ஒருவர் கூட நாட்டின் எப்பகுதியிலும் இருக்கவில்லை' என்று வருவாய்க் குழு அறிவிக்கிறது.

1966- இல் ஓரிசாவில் பஞ்சமொன்று ஏற்பட்டது. போதிய அளவு நிவாரணங் களேதும் தரப்படவில்லை. வறுமையால் மாண்டவரின் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று. ஓரிசாவில் ஏற்பட்ட பஞ்சத்தின் பாதிப்புகள் சென்னை மாநிலத்திலுமிருந்தன.

அந்நூற்றாண்டில் இதுகாறும் ஏற்படாத அளவு கொடிய பஞ்சம் சென்னை மாநிலத்தில் 1876-78 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது. வாழும் மனிதரின் நினைவாற்றலில் இதுபோன்ற கொடிய பஞ்சம் ஏதும் ஏற்படவில்லை எனும் அளவுக்கு பாதிப்பு ஏற்படுத்தியது இப்பஞ்சம். 1837, 1860, 1866, 1869- ஆம் ஆண்டுகளில் பஞ்சங்களும், வறட்சிகளும் ஏற்பட்டன. ஆனால் அவையெல்லாம் இப்பஞ்சத்தளவு பாதிப்பைத் தந்ததில்லை. மேலும் இப்பஞ்சத்தளவு பகுதிகள் பாதிப்புகளுள் வந்ததுமில்லை. வரலாறு கண்டிராத அளவு பெருந்துன்பத்தைச் சென்னை மாநில உழவர் அனுபவித்தனர். நிவாரணத் திட்டங்கள் முறைப்படி மேற்கொள்ளப்படவில்லை. கிராமங்கள் பல பாழடைந்து கிடந்தன. மக்கள் வேற்றிடங்களுக்குப் பெயர்ந்து சென்றனர். செழிப்பற்றுக் கிடந்த நிலங்களும் புறக்கணிக்கப் பட்டிருந்தன. ஒரே ஆண்டில் ஏறத்தாழ ஐம்பது இலட்சம் மக்கள் இறந்து விட்டனர். இப்பஞ்சம் நடை முறையிலிருந்த நில அமைப்பு முறைகளும் தவறானவை என்று சுட்டிக் காட்டுவதாய் அமைந்தது. இம் முறைகளால் உழவருக்கு எவ்வித பெரு நன்மையும் இல்லை என்பதையும் உணர்த்திற்று. 1877- இல் புது நிதியமைச்சராக வந்த சர்ஜான் ஸ்ட்ரேசி (Strachey) பொது மக்கள் சபையில் "இப்பஞ்சத்தால் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை கொஞ்ச நஞ்சமல்ல; ஆகவே நாம் எந்தவித வருவாயையும் இழக்கத் தயாராயில்லை" என்று கூறினார்.

1876-78 ஆம் ஆண்டுப் பஞ்சங்களுக்குப்பின் அந்த அளவு பாதிப்பு ஏற்படுத்திய பஞ்சம் ஏதும் இம் மாநிலத்தில் ஏற்படவில்லை. அவ்வப்போது வறட்சிகள் ஏற்பட்டன. பெரியாறு திட்டத்தால் மதுரை மாநகர் முன்னேறவில்லை; இரண்டாம் உலகப் போரின் போது புகுத்தப்பட்ட அதிக உணவு உற்பத்தி செய்வோம் என்ற இயக்கமும் நினைத்த அளவு பயன் தரவில்லை. பஞ்சங்களுக்கும், வறட்சிகளுக்கும் மாறாகப் பல வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டன; சேதங்கள் ஏற்பட்டன.

அடுத்த பஞ்சம் 1897- இல் ஏற்பட்டது. அவ்வாண்டு சென்னை மாநிலத்தில் பலர் இறந்த செய்தி கிடைத்துள்ளது. 1900- ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் பஞ்சமேற்பட்டது. 1918- இல் சென்னை மாநிலத்தை மட்டும் பாதித்த பஞ்சம் ஏறப்பட்டது. இப்பஞ்சத்திற்குரிய அறிகுறிகள் முன் கூட்டியே தோன்றின. அதற்கு ஏற்ப, பஞ்சம் ஏற்படுவதற்குரிய அனைத்து அறிகுறிகளும் தோன்றி விட்டன என்று நான் சென்னைப் பத்திரிக்கைகளில் எழுதினேன். அது மூலம் ஏற்றுமதியை நிறுத்தக் கோரினேன். இத்தேவை எங்கும் ஒலித்தன; நாளடைவில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. என்று கில்பர்ட் ஸ்லேட்டர் கூறுகின்றார். சென்னை மாநிலத்தின் நெல், தினை விளையும் பகுதிகள்

அறுவடைத் தன்மையை இழந்துவிட்டன. 1920- ஆம் ஆண்டு பருவமழை தவறிவிட்டது. மதுரையில் உழவர் கலகம் செய்தனர்; ஆனால் அது அடக்கப்பட்டது. 1936- மதுரை இராமநாதபுர அண்டைப் பகுதிகள் மற்றுமொரு பஞ்சத்தால் பாதிக்கப்பட்டன.

மேற்கு மலைத் தொடர்ப் பகுதிகளில் பொழிந்த கனமழைகளால் வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டன. அவற்றைத் தொடர்ந்து சூறாவளிக் காற்றுகளும், மந்த நிலை களும் ஏற்பட்டன. வெள்ளப் பெருக்கால் பயிர் நாசம், அணை உடைப்பு, குடில்கள் நாசம், குளங்குட்டைகள் உடைப்பும் ஏற்பட்டன. தோப்புக்களும், அழிந்தன; மண்சரிவு களும் ஏற்பட்டன.

நிவாரணப் பணிகள்

1880- ஆம் ஆண்டு வில்லியம் ஹண்டர், "40 மில்லியன் மக்கள் பற்றாக்குறையுடன் வாழ்கின்றனர்" என்று அறிக்கை வெளியிட்டார். வறட்சி, பஞ்சத்தின் கொடுமையை அதிகமாக்கியது. ஆகவே குறைந்த அளவு நிலங்களே பயிர் செய்யப்பட்டன. பின்தங்கிய உழவு முறைகள் பின்பற்றப்பட்டன; விளைவு, மிகக் குறைந்த அளவு வேளாண்மை உற்பத்தி; ஜமீன்தாரிப் பகுதிகளில் கடும் நிலவரங்கள் ஏற்பட்டன. ரயத்துவாரித்திட்டம் நடைமுறையிலிருந்த பகுதிகளில் உயர் வருவாய் வசூல் முறைகள் விதிப்பு; வேலையில்லாத் திண்டாட்டம்; வேளாளர் கடன்காரராகிய நிலைமை இவை அனைத்தும் பஞ்சத்தால் ஏற்பட்ட சீர்கேடுகளே. பஞ்சங்களின் தன்மைகளையும், நிவாரணப் பணிகளின் தன்மையையும் நாம் பஞ்ச அறிக்கைகளிலிருந்து பெறலாம். இந்தியாவின் தொழில் திறமை பிரிட்டிஷ் குடியேற்றங்களுக்கு இடம் பெயர்ந்தமை பற்றியும் அவர்களின் இன்னல்கள் பற்றியும், இடப்பெயர்ச்சி அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

1860- ஆம் ஆண்டு முதல்1914- ஆம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்த வர்த்தகப் புரட்சியால் பொருட்களின் விலை ஏறிற்று. இதனால் கிராமப்புற பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. தானிய விலையும் ஏறிற்று; இதர உணவுப் பண்டங்களின் விலையும் ஏறியது. தொடர்ந்து பஞ்சங்களும் வறட்சிகளும் வந்தமையால் உழவர் அவதிப்பட்டனர். 1860- ஆம் ஆண்டு வரையிலான ஐம்பது ஆண்டுகளில் ஏறத்தாழ இருபது பஞ்சங்கள் இப்பகுதிகளில் ஏற்பட்டன. இந்நிலைமை அரசின் கவனத்தைக் கவர்ந்தது.

அக்பரின் காலத்தில் ஒருவித நிவாரணத் திட்டம் நடைமுறையிலிருந்தது. அவர் தானியக்களஞ்சியங்களையும், கிடங்குகளையும் தொடங்கினார். பஞ்ச நிவாரணத்திற்காக ஆங்காங்கு சமையலறைகளையும், காப்பகங்களையும் ஏற்படுத்தினார். நிவாரணப் பணிகளுடன் காப்புறுதித் திட்டங்களையும் மேற்கொண்டார். ஷாஜகானின் காலத்தில் பல பஞ்சங்கள் ஏற்பட்டன. அவ்வேளைகளில் முடிந்த அளவு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவை நினைத்த அளவு நன்மை தரவில்லை. தென்னகம் பஞ்சத்தால் அவதிப்படும் காலத்தில், அவர் தம் இல்லாளுக்கு நினைவகம் கட்டி எழுப்பிக் கொண்டிருந்தார். நாயக்கர் காலத்தில் திட்டமிட்டு பஞ்சநிவாரணப் பணிகள்

மேற்கொள்ளப் பட்டதாகச் சான்றுகளில்லை. ஆனால் அவர்கள் பல காப்பகங்களையும் அனாதை விடுதிகளையும் அமைத்தனர் என்றும், சத்திரங்களையும், இளைப்பாறுமி டங்களையும் எழுப்பியதாகச் செவிவழிச் செய்திகள் மூலம் அறிகிறோம்.

பஞ்சப் பிரச்சினை கம்பெனியரசை உலுக்கியது. எனவே அரசு சில நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. அத்திட்டங்களைச் சோதனை செய்த பின் பஞ்ச நிவாரணக் கொள்கையைத் தோற்றுவித்தது. 1883- இல் வெளியிடப்பட்ட பஞ்ச ஒழுங்கு முறையில் இது காணப்படுகிறது. பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணங்கள் தரவும், வேலை வாய்ப்பகளை ஏற்படுத்தவும் வேண்டி தனியான நிதியொன்று திரட்டுமாறும் அது வேண்டியது. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவுப் பொருட்கள் உள்ள இட்ங்களிலிருந்து கொண்டு இறக்கப் போதிய இருப்புப் பாதை வசதிகளைப் பெருக்குமாறும் கோரியது.

நிவாரணப் பணிகளில் சோதனை

1799- இல் பஞ்சமேற்பட்டபோது, அரசாங்கக் கணக்கில் தானியங்கள் வாங்கி, வினியோகம் செய்யுமாறு மதுரை ஆளுநர் அனுமதிக்கப்பட்டார். 1812-14-ஆம் ஆண்டு களில் 42,000 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று அரசுக்கு அறிவிக்கப்பட்டது. உணவுப் பொருட்களை எங்கிருந்தாவது பெற்றுக் கொண்டு வரவேண்டி, தானிய வியாபாரிகளுக்கு 2,000 பகோடா முன்பணம் தரப்பட்டது. அந்த ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் முடிய அரசு ஏறக்குறைய 3,25,000 ரூபாய் செலவிட்டது. 1836- ஆம் ஆண்டு பஞ்சத்தின் போது பெருமளவு கடன் குறைப்புக்கள் அரசு நல்கியது. பொதுப்பணிகளில் பொதுமக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். மதுரை ஆளுநரின் கண்காணிப்பிலிருந்த மதுரைக் கோயில் நிதியிலிருந்து பணம் பெற்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அவர் பணிக்கப்பட்டார். 1857- இல் பலர் நிவாரணம் பெற்றனர்; ஏறக்குறைய 40,000 பேர் இலங்கைக்கு இடம் பெயர்ந்து சென்றனர். 1866- இல் நன்கொடை மூலம் ரூ.14,000 பெறுமானமான நிதி திரட்டப்பட்டது. பொதுப் பணிகள் மூலம் ரூ.19,000 திரட்டினர்.

1876-78- ஆம் ஆண்டுகளில் பஞ்சமேற்றபட்டபோது உழவர் தம் கன்று காளைகளையும், நிலங்களையும் விற்கத்தொடங்கினர். தம் மனைவி, மக்களை நாட்டில் விட்டுவிட்டு, மக்கள் ஆயிரக்கணக்கில் இலங்கைக்குச் சென்றனர். பாம்பனில் பெருத்த கூட்டம் கூடிவிட்டது. வினியோகம் செய்ய அங்கு வந்த உணவுப் பொருட்களும் தீர்ந்தன. போதுமான அளவு உணவுப் பொருட்கள் வாங்கி, அதே விலைக்கு விற்குமாறு அரசு மதுரை ஆளுநரைப் பணித்தது. வாந்திபேதி, அம்மை, மற்றும் தொத்து நோய்களும் பரவத் தொடங்கின. நிவாரணப் பணிகளுக்கு அரசு முதல் தவணையாக ரூ.5000 மதுரை ஆளுநரிடம் ஒப்படைத்தது. திண்டுக்கல் பகுதியில் மூன்று இடங்களில் பெருந்தன்மை நிவாரணப் பணிகளை மதுரைத் துணை ஆளுநர் (தம்பொறுப்பில்) தொடங்கினார். 1877 இல் நிவாரணப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டன. பொதுப் பணி களுக்காக ஒவ்வொரு மாவட்டப் பொறியாளர் அலுவலகப் பணியாளரின் (ஊழியரின்) எண்ணிக்கை கூட்டப்பட்டது. இவர்கள் பெரும்பாலும் துணைப் பொறியாளர்களே.

நில அளவீட்டுத்துறையின் கீழ்மட்ட ஊழியர் பலர் பஞ்ச நிவாரணப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். 1877- இல் பொதுப்பணியிலும், பெருந்தன்மை நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டோரின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. ஜூன் மாதத்திற்கும் ஆகஸ்ட் மாதத்திற்கும் இடையில் நிவாரணப் பணி ஊழியரின் எண்ணிக்கை நான்கு மடங்கு கூடியது. இரயில் வண்டி மூலம் பாதிக்கப்பட்ட இடங்களுக்குத் தானியங்கள் குவிக்கப்பட்டன. வெளிப்பகுதிகளுக்கு பல தொல்லைகளுக்கிடையே உணவுப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. கச்சாப் பருத்தி வாங்க முன் பணம் கொடுத்து, நூற்கப்பட்ட நூலுக்கு சந்தை மதிப்புத் தொகையைக் கொடுத்து, அரசு பழனி, திண்டுக்கல் பகுதி நூற்பாளரைக் காத்தது.

பட்டினியால் வாடி இறந்தோர் பலர்; பல குழந்தைகள் தம் பெற்றோர்களால் கைவிடப்பட்டன; சாலையோரங்களில் புதைப்பவரின்றிக் கிடந்தன பல சடலங்கள். பல வீடுகள் துறக்கப்பட்ட நிலையில் பாழடைந்து கிடந்தன. நாட்டில் குற்றங்களும் பெருகின. பஞ்ச நிவாரண நிதியைப் பயன்படுத்தி பலர் பட்டினியிலிருந்து காக்கப்பட்டனர். 1877- ஆம் ஆண்டு செப்டம்பர்—அக்டோபர் திங்களிலிருந்து நாட்டில் மழை பொழியத் தொடங்கிற்று. எனவே பொதுப்பணியில் ஈடுபட்டோரின் எண்ணிக்கையும், பெருந்தன்மை நிவாரணப் பணிகளில் ஈடுபட்டோரின் எண்ணிக்கையும் குறைந்தன. நிலைமை சமாளிக்கப்பட்டது. வரவு செலவுத் தொழிலும் பஞ்ச நிவாரணமும் வேறுபடுத்தப்பட்டன. 1878- ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதி நாள் முதல் கிராமப்புற நிவாரணப் பணிகள் ரத்து செய்யப்பட்டன. 1876- ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் முதல் நிவாரணப் பணிகள் முடிக்கப்பட்ட நாள் வரை ஆன மொத்த செலவு ரூ.15 லட்சம் ஆகும். இத்தொகை மதுரைப் பகுதிக்கு மட்டும் ஆனது ஆகும். ரு.4.50 லட்சம் பொதுப்பணிகளுக்காக செலவிடப்பட்டது. பஞ்ச நிவாரண நிதியிலிருந்து பெருந்தொகை செலவிடப்பட்டது. வரிவிலக்குப் பெற்ற ரூ.6 1/4 லட்சம் இச்செலவுடன் சேர்ந்தது ஆகும். அரசுக்கு ஏற்பட்ட நேர், மறைமுக மொத்தச் செலவு மதுரைப் பகுதியில் மட்டும் ரூ.17 லட்சம் என்று குறிக்கப்படுகிறது.

சென்னையம்பதி பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட காலத்தில், பிரிட்டிஷ் மக்கள் சபையில் எடுத்துக் கொள்ளப்பட்ட முடிவு "இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பருத்திப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரி, தன்மையில் காப்பு வரியாய் அமைந்ததும், சிறப்பு வர்த்தகக் கொள்கைகளுக்கு மாறானது ஆகும்; ஆகவே காலதாமதமின்றி மாற்றியமைக்கப்பட வேண்டும்; இந்தியப் பொருளாதார நிலை எப்போது அனுமதிக்குமோ, அப்போது உடனே மாற்றியமைக்கப்பட வேண்டும்" என்பதாம். இப்பகுதி பஞ்சத்திலிருந்து விடுதலை பெறுமுன்னரே சுங்கவரி மாற்றியமைக்கப்பட்டது; நிலவருவாயுடன் புதிதாக தீர்வைகள் சேர்க்கப்பட்டன;சிறப்பு வரிகள் மூலம் சேர்க்கப்பட்ட பஞ்சக் காப்பு நிதி கரைந்தோடியது; திட்டமிடப்பட்ட வரவு செலவுக் கணக்கு குறையில் முடிந்தது; மேன்மேலும் புதுப்புது பிரச்சனைகளும் செலவுகளும் ஏற்பட்டன.

இவ்விதம் பெற்ற நீண்ட அனுபவம், நடத்திய சோதனைகள் அடிப்படையில் பஞ்சக்குழு (Famine Commission) 1900- இல் நிறுவப்பட்டது. இக்குழு பஞ்சசட்டத் தொகுப்பையும், நிவாரணத் திட்டங்களையும் தீட்டியது.

1918- ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தினடிப்படையில் தஞ்சையம்பதியின் ஆளுநரான ஆர்.பி.உட் (R.B. Wood) உணவுப் பொருள் வினியோகக் கண்காணிப் பாளராக நியமிக்கப்பட்டார். பஞ்சம், வெள்ளப்பெருக்கால் மக்கள் அவதிப்படுவாராயின், உடனே அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1919-இல் இந்திய வேளாண்மைக் குழு (Indian Board of Agriculture) தோற்றுவிக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களை இக்குழு பரிந்துரைத்தது.

பஞ்சத்திலிருந்து நிவாரணம் தரவும், பஞ்சமேற்படாமல் தடுக்கவும், நீர்ப்பாசன, செய்தித் தொடர்பு முறைகளை விரைவு படுத்தவும் சுதந்திர இந்திய அரசுக்கு பணம் தேவைப்பட்டது. மத்திய அரசின் மேற்பார்வையில் பஞ்ச நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நீர்ப்பாசனத் திட்டத்தின் முலம் நிலங்கள் செழிப்படைந்தன. தமிழகத்தின் தரிசு நிலங்களுக்கு நீர், கால்வாய்ப்பாசன முறையிலும், நீரேற்றுப்பாசன முறையிலும் கொண்டு செல்லப்பட்டது. முக்கிய இடங்கள் இருப்புப் பாதைகளால் இணைக்கப்பட்டன. இடமாற்று முறைகளும் முன்னேற்றமடைந்தன. புது உழுதொழில் முறைகள் மூலம் உற்பத்தி பெருகிற்று. நவீன மருந்துகள் மானிட, விலங்குகளின் மரணத்தைத் தடுத்தன. டிராக்டர்கள் வாங்கப் பணம் கடன் தரப்பட்டது. உரங்கள், வேண்டிய விதைகள் வாங்கவும் விவசாயக் கடன் தொகைகள் தரப்பட்டன. தொழில் வளமும், உழுதொழில் வளமும் சேர்வதால் செழிப்பு நாட்டில் நிலவ வாய்ப்புள்ளது. இவற்றுடன் ஐந்தாண்டுத் திட்டங்களும் தீட்டப்பட்டு, செழிப்புக்கான வழி முறைகள் கையாளப்பட்டுவருகின்றன.

பயிற்சி வினாக்கள்

1) சென்னை மாநிலத்தில் ரயத்வாரி முறை கொண்டு வருவதற்குக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் பற்றி எழுதுக.

2) தமிழகவரலாற்றில் ஏற்பட்ட பஞ்சங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 27 கிழக்கிந்தியக் கம்பெனி அரசு ஆட்சியின் போது கல்வி நிலை – கல்விக்குக் கிறித்தவர்களின் தொண்டு – 19, 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சி

தமிழகத்தில் மிகப் பழங்காலந் தொட்டே கல்வி வளர்ச்சி சிறப்பாக இருந்து வந்திருக் கின்றது. புலவர்கள், அறிஞர்கள், கல்வியறிவாளர்கள், போன்றோர் அரசர்களாலும், பெருமக்களாலும் ஆதரிக்கவும், ஊக்குவிக்கவும் பட்டனர். புறநானூற்றுப் பாடல் ஒன்றில், ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன், ஒரு மாணவர் தமது ஆசிரியரிடம் எவ்வகைகளில் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது பற்றிக் குறிப்பிடுகின்றார். பண்டைய பாண்டிய நாட்டில் இருந்த மூன்று சங்கங்களும் தமிழ் அறிஞர்கள், புலவர்கள், இலக்கிய வேந்தர்கள் இவர்களைப் பற்றியும் பலதொகுப்புகளில் விளக்குகின்றன. இன்றைய மதுரையில் வீற்றிருந்த மூன்றாவது தமிழ்ச் சங்கம் தமிழ் வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் அரும்பாடு பட்டது என்பது மறுக்க முடியாததாகும். பண்டைய காஞ்சி நகரம் கல்வி வளர்ச்சியின் மையமாகத் திகழ்ந்தது என்பது வெள்ளிடைமலை. காஞ்சிபுரத்தில் இருந்த காதிகங்கள் (Ghatikas) அல்லது கல்வி நிலையங்கள் இந்துக்களுக்கு மட்டுமல்லாது, சமண புத்த சமயத்வருக்கும் கல்வி புகட்டின.

இடைக்காலத்திலும் தமிழகத்தில், ஒரே மாதிரியான கல்வி வளர்ச்சி முறை இருந்து வந்தது. இக்காலத்தில் ஏராளமான கல்வி மையங்கள் இருந்தன. செங்கல்பட்டு மாவட்டத்தில் திருமுக்கூடல், தென் ஆற்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம், திருபுராமி (பாண்டிச்சேரிக்கு அருகில்), திருவொற்றியூர் (சென்னைக்கு அருகில்) போன்றவை குறிப்பிடத்தக்க கல்வி மையங்களாகும். வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள், இலக்கணம், கணிதம், சோதிடம், மருத்துவம் போன்ற பாடத் துறைகள் கற்பிக்கப்பட்டன. அக்காலத்தில் குருகுல முறையும் பின்பற்றப்பட்டது. இம்முறைப்படி, மாணவர்கள் தங்களது ஆசிரியருடனேயே தங்கி இருந்து பாடங்களைக் கற்று வந்தனர். செய்முறைக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பண்டைய தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறியும் சாலை என்ற சொல் தனிச் சிறப்பு வாய்ந்ததா யிருந்தது. இச் சாலைகளில் மாணவர்களுக்குக் கல்வியோடு உணவும் வழங்கப்பட்டது. காந்தளூர்ச்சாலை, இராஜ ராஜ பெரும் சாலை போன்றவை மேற்கூறப்பட்ட சாலைகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

மாறி வரும் சமுதாய முன்னேற்றத்திற்கும், மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் பண்டைய கல்வி நிலையங்களால் அளிக்கப்படும் கல்வி போதுமானதாக இல்லை. அவைகளால் அனைத்து வகை மக்களுக்கும் வேண்டிய கல்வி வசதி தரமுடியவில்லை. குருகுல முறை காலத்திற்கு ஒவ்வாததாக இருந்தது. சமுதாயத்தில் எந்த இனத்தைச் சேர்ந்தவருக்கும் கல்வி இன்றியமையாததாக, பாகுபாடற்றதாக இருந்தது. இவ்வாறு, தமிழகத்தில் கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆட்சி துவங்கியதிலிருந்து, சாதாரண ஏழை

மக்களும் கல்வி பயிலும் வாய்ப்புப் பெற்றனர். சமுதாய மாற்றங்களுக்காக உழைத்த ஆங்கிலேயர்கள் 19-ஆம் நூற்றாண்டில் கல்வித்துறையிலும் பல முன்னேற்றங்களைக் கொண்டுவர முயன்றனர்.

ஆங்கிலேயர்கள், தாம் வணிகம் செய்ய வந்த காலத்திலிருந்தே கிறித்துவ சமயக் கருத்துக்களைப் பரப்புவதிலும், இயேசு நாதரின் போதனைகளைப் புகட்டுவதிலும் ஆர்வம் காட்டி வந்தனர். இந்த ஆர்வத்தில் அவர்கள் வெற்றியடைவதற்குக் கல்வி முறையை ஒரு கருவியாகக் கொண்டனர். கம்பெனியிடமிருந்த பொருளுதவி பெற்ற கிறித்துவ பாதிரியார்கள் தமிழகத்தின் பகுதிகளில் ஏராளமான கல்வி நிலையங்களைத் துவக்கினர். அதனால் ஆரம்பத்தில் சில சிக்கல்கள் வந்தன. சில காலம் கம்பெனி இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. 1717 இல் முதன் முதலில் நவீன கல்வி முறைப் பள்ளி ஒன்று, கம்பெனியால் சென்னை மாநிலத்தில் கடலூரில் (Cuddalore) துவக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. தஞ்சையில் ஆங்கிலக் கல்வி புகட்டும் பள்ளிகள் துவக்கப்பட்டன; சிவகங்கை, இராமநாதபுரம் பகுதிகளிலும் இம்மாதிரியான பள்ளிகள் பதினெட்டாம் நூற்றாண்டு முடிவதற்குள் துவக்கப்பட்டன. அடுத்த நூற்றாண்டுத் தொடக்கம் கம்பெனியின் ஆதிக்கப் பெருக்கத்திற்கு இட்டுச் சென்றது. கம்பெனி தனது மக்களின் கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்டது. பொதுப்பணிகள் துவக்கவும், சமுதாயத்தில் அறியாமையைப் போக்கவும் கம்பெனி திட்டமிட்டது. தனது முயற்சியில் உடனடி வெற்றியைப் பெறவில்லையெனினும், கம்பெனி, ஆங்கிலக் கல்வி புகட்ட வேண்டும் என்பதில் மனம் தளர்ந்துவிடவில்லை.

1811- ஆம் ஆண்டு இந்தியக் கல்வி முறை பற்றிய அறிக்கை ஒன்றை மிண்டோபிரபு சமர்ப்பித்தார். அதில், இலக்கிய, அறிவியல் அறிவு குறைந்து கொண்டே வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். எனவே பல பள்ளிகள், கல்லூரிகள் துவக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் உணர்த்தினார்.

1813 – ஆண்டு சாசனச் சட்டமும் கல்வி வளர்ச்சியும்

இந்தியக் கல்வி முறையின் வளர்ச்சியில் 1813- ஆம் ஆண்டு சாசனச் சட்டம் ஒரு மைல் கல்லாக அமைந்தது. இதன்படி பிரிட்டிஷ் அரசின் கீழான இந்திய மக்களின் கல்விக்காக சுமார் ஒரு இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. சமயப் போதகர்கள், சமயம் பரப்பவும், பள்ளிகள் நடத்தவும் அனுமதிக்கப்பட்டனர். இந்தியமக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பினை கம்பெனி ஏற்க வேண்டியதாயிற்று. ஆனால் கல்விக்காக அப்போது ஒதுக்கப்பட்ட பணம் முழுமையாக செலவிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் கல்லூரிகள், பள்ளிகளுக்கான பாடப்புத்தகங்களைச் சமயப் போதகர்கள் வெளியிட்டனர். ஆனால் அந்தப் புத்தகங்கள் சிறப்பானவை அல்ல என சென்னை அரசு உணர்ந்தது; எனவே, அரசாங்கம், 1819- ஆம் ஆண்டு, சமயச்சார்பற்ற நூல்களை வெளியிடவேண்டி, பள்ளி புத்தகக் கழகம் (School Book Society) ஒன்றை ஏற்படுத்தியது. சென்னை ஆளுநர் சர்.தாமஸ் மன்ரோ (1820-27) இந்தப் பள்ளி புத்தகக் கழகத்திற்காக

சுமார் 700 ரூபாய் ஒதுக்கினார். இவர் கல்வி வளர்ச்சியில் அதிகநாட்டம் கொண்டவர். எனவே, அவர் கல்வி பற்றிய அறிக்கை ஒன்றை நெறியாளர் குழுவிடம் சமர்ப்பித்தார். அறிக்கையில், எல்லோருக்கும் உயர்கல்வி கற்பிக்க முடியாவிட்டாலும் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்காவது உயர் கல்வி அளிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.1830- ஆம் ஆண்டு கல்வி முறையின் அமைப்பு, பயிற்றுமொழி ஆகியவை பற்றி முடிவெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இக்காலத்தில்தான் இந்தியாவில் எந்தமாதிரியான கல்விமுறை கொண்டுவரப்படவேண்டும் என்பதில் இந்தியாவிலிருந்த ஆங்கில அதிகாரிகளிடையே கருத்துவேறுபாடு பெருகியது. H.D. பிரின்ஸப், H.H. வில்சன் ஆகியோர் இந்தியக்கல்வி வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். அவர்களது கருத்து, கம்பெனி அரசு ஆங்கிலமாதிரியான கல்வியைப் புகுத்தாமல் இந்திய முறையில் புகுத்துவதே நலம் என்பதாகும். ஆனால் இது அன்றைய இந்தியத் தலைமை ஆளுநராயிருந்த பெண்டிங் பிரபுவுக்கும், சார்லஸ் டிரவல்யனுக்கும் பிடிக்கவில்லை. அவர்கள் ஆங்கிலநாட்டுக் கல்வி முறையையே ஏற்படுத்த விரும்பினர். மெக்காலே பிரபுவும் இந்தியர்களுக்கு ஆங்கிலக்கல்வி கொடுக்க வேண்டும் என்றே விரும்பினார்.

1835- இல் ஐரோப்பிய இலக்கியத்தையும், அறிவியலையும் கற்பதன் மூலமே இந்தியர்களை முன்னுக்குக் கொண்டுவரமுடியும் என்று அரசு தீர்மானித்தது. இதன்படி, சென்னை அரசாங்கம் உயர்கல்வியைப் புகட்ட, ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும், வட்டார மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மாநில அரசின் இந்த நடவடிக்கையின் காரணமாக மத்திய அரசுக்கும், இம்மாநில அரசுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. உயர்கல்வியை இயக்கவேண்டி கல்லூரிகளை ஏற்படுத்துமாறு மத்திய அரசு ஆலோசனை கொடுத்தபோது மாநில அரசு அதனை நிராகரித்தது. இவ்வாறான நிலை 1838 வரை தொடர்ந்திருந்தது.

1838 இல், எல்பின்ஸ்டன் பிரபு சென்னை ஆளுநராகப் பதவியேற்றார். அவர் இந்தியர்களின் உயர்கல்வியில் நாட்டம் கொண்டிருந்தார். சென்னையில் முக்கியஸ்தர்கள் பலரும் உயர்கல்வியின் அவசியத்தை உணர்ந்து தமது முழு ஒத்துழைப்பையும் அரசுக்குக் கொடுத்தனர். அவர்கள் அனைவரும் நார்டன் பிரபுவின் தலைமையின் கீழ் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். அப்போது நார்டன் பிரபு அரசாங்க தலைமை வழக்கறிஞராகப் பணியாற்றினார். இவர்கள் சுமார், 70,000 பேர் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை அரசிடம் சமர்ப்பித்தனர். விண்ணப்பத்தில், ஆங்கிலக்கல்வி புகட்டும் வகையில் சென்னையில் ஒரு கல்லூரியைத் துவக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டனர். இதனை ஏற்றுக்கொள்ளும் வகையில், கல்லூரிக் கல்வித்துறை (Institute of Collegiate Education) ஒன்றை நிறுவ, ஆளுநர் திட்டமிட்டார்; மேலும் இது ஒரு பல்கலைக்கழக அமைப்பிக்கு ஒப்ப இருக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. பல்கலைக்கழகக் குழு ஒன்றும் இத்துறையினைக் கவனிக்க நிறுவப்பட்டது. அக்குழுவில் ஒரு தலைவரும் 14 நெறியாளர்களும் இருப்பர். நெறியாளர்களில் 7 பேர் சென்னை மாநிலத்தில் இருக்கும் இந்தியர்களிலிருந்து நியமிக்கப்பட்டனர். இவ்வாறு ஒரு பல்கலைக்கழகம் போன்று செயல்படத் தொடங்கிய இக்கல்வித்துறை இருபிரிவுகளாக இயங்கியது. முதலாவது, ஆங்கில இலக்கியம், பிராந்திய மொழிகள், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கும் உயர்நிலைப்பள்ளி. இரண்டாவது இலக்கியம், தத்துவம், அறிவியலில் உயர்கல்வியை வழங்கும் கல்லூரி.

இத்திட்டத்தினைத் தொடர்ந்து 1841 இல் ஜார்ஜ்நார்டனைத் தலைவராகக் கொண்டு பல்கலைக் கழகக் குழு இயங்கத் தொடங்கியது. பல்கலைக் கழகக்குழுவின் முற்பகுதியான உயர்நிலைப்பள்ளி 1841 இல் எழும்பூரில் துவங்கப்பட்டது. அதன் முதல்தலைமையாசிரியர் பர்டன் போவல் ஆவார். முதலில் வாடகைக் கட்டிடத்தில் துவக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சென்னை மாநிலத்தில் நான்கு மாவட்டத் தலைநகர்களில் நான்கு உயர் நிலைப்பள்ளிகள் துவக்கப்பட்டன. இப்பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருந்தது. இப்பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட அடிப்படை ஆங்கில அறிவு பெற்றிருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது. ஏராளமான அடிப்படை நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டு மாணவர்களுக்கு ஆங்கில மொழி அறிவு புகட்டப்பட்டது.

எல்பின்ஸ்டன் பிரபுவைத் தொடர்ந்து டுவிடேலின் மார்குஷ் என்பவர் ஆளுநரானார். ஆனால் முன்னவரைப் போன்று இவர் உயர் கல்வியில் நாட்டம் செலுத்தவில்லை. ஆனால் 1848- இல் சென்னை ஆளுநராகப் பதவியேற்ற சர் ஹென்றி பொட்டிங்கர் உயர்கல்வி வளர்ச்சியைப் பெரிதும் விரும்பினார். 1852- இல் இவர் பல்கலைக்கழகக் குழுவை மாற்றியமைத்தார். 1853- இலிருந்து கல்லூரிப் பாடங்களும் துவக்கப்பட்டன. இவ்வாறு பயிற்று முறை உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரிக்கு உயர்த்தப்பட்டது.

உட்டின் அறிக்கை (Wood's Report) 1854

1853- இல் கிழக்கிந்திய வாணிகக் கம்பெனியின் சாசனம் புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தது. மேற்பார்வையாளர் குழுவின் தலைவராக சர்சார்லஸ் உட் இருந்தார். இந்தியாவின் கல்வி வளர்ச்சியைப் பற்றி முறைப்படி தெரிந்து கொண்ட உட் 1854இல் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். இவ்வறிக்கை அவர்தம் பெயரால் உட்டின் கல்விபற்றிய அறிக்கை என அழைக்கப்பட்டது. இவ்வறிக்கை, இந்தியக் கல்வி வளர்ச்சியில் மற்றொரு மைல் கல்லாக அமைந்தது.

உட்டின் அறிக்கைப்படியான பரிந்துரைகள்

தனது அறிக்கையில் உட், இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் கல்வித்துறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டும், தனியார் துறைகள் கல்வி நிறுவனங்களை நடத்தும்படி ஊக்கு விக்கப்பட வேண்டும், அதனால் வரும் இழப்பீடு அரசினால் சரிக்கட்டப்படவேண்டும் இலண்டன் பல்கலைக் கழகத்தைப் போன்று சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும், பல்கலை வேந்தர்கள் துணை வேந்தர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டும், மாநிலங்களில், இந்திய முறை பள்ளிகளும் துவக்கப்பட வேண்டும், கல்வித்துறையில், அடுத்த நிலையில், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், இருக்க வேண்டும். நடுநிலை, உயல்நிலைப்பள்ளிகளுக்குச் சற்று உயர்ந்த நிலையில் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் செயல்படவேண்டும் என்றெல்லாம் பரிந்துரை செய்தார்.

இங்கிலாந்தில் உள்ளது போன்றே அரசு உதவிக் கொடை (grant in aid) முறையே சென்னை மாநிலத்திலும் பயன்படுத்த வேண்டும் என கம்பெனி விரும்பியது. உட்டின் அறிக்கை இம்மாதிரியான அரசு உதவித்தொகை மொத்தமாக பெறப்படுகின்றதா என்பதனையும், அவ்வாறு பெற்றதொகை செவ்வனே பயன்படுத்தப்படுகின்றதா என்பதனையும் கண்காணிக்க கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படவேண்டும் என கேட்டுக் கொண்டது. இவ்வாறான முறைகள் வகுக்கப்பட்டிருப்பினும் சமயப் பாதிரிமார்கள் ஏராளமான நன்கொடையை அரசிடமிருந்து பெற்றனர். தனியார் துறையிலான பெரும்பான்மைக் கல்வி நிலையங்களும் அவர்களாலேயே நடத்தப்பட்டன.

இவ்வறிக்கை, பயிற்று மொழி விவகாரத்திலும் சரியான கருத்தினை வகுத்தது. ஆங்கிலம் மட்டுமே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என இவ்வறிக்கை ஒருபோதும் கூறிடவில்லை. எங்கெங்கு எவ்வெவ்விடங்களில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படுகிறதோ அங்கு மட்டும் ஆங்கிலம் பயிற்று மொழியாக்கப்பட வேண்டும்; பெரும்பாலும் உயர்கல்வியில் மட்டுமே ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என இவ்வறிக்கை வலியுறுத்தியது. ஆனால், நடைமுறையில், ஆரம்பப்பள்ளிகளில் கூட ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்தது. ஏனெனில் அரசுப்பணியில் சேர்க்கப்படுபவர்கள் ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என அரசு கருதியது. துவக்கத்தில் இக்கல்விமுறை பொது அறிவினை வளர்ப்பதாக இல்லை. மாறாக ஆங்கிலம் தெரிந்த எழுத்தர்கள் உருவாக்கப்பட்டு, கம்பெனியின் நிர்வாகம் எளிதில் நடைபெற வழி செய்யப்பட்டது. மெக்காலே பிரபுவும் இந்த முறையைத்தான் விரும்பினார்.

சார்லஸ் உட்டின் அறிக்கையின் விளைவு சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் பல்கலைக் கழகங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. பழைய உயர்நிலைப்பள்ளி பல்கலைக்கழகக் குழு 1857- இல் சென்னைப்பல்கலைக் கழகமாக மாறியது. இதற்கான சட்டத்தை இந்திய அரசியலமைப்புக்குழு இயற்றியது. பல்கலைக்கழகக் குழுவின் கீழிருந்த உயர் நிலைப்பள்ளி பொது கல்வித்துறைக்கு மாற்றப்பட்டு மாநிலக் கல்லூரி என்று பெயரிடப்பட்டது. புதிய பல்கலைக்கழகம் தேர்வுகள் நடத்தும் அதிகாரத்தினையும், இதனுடன் சேர்ந்த கல்லூரிகளை நிர்வகிக்கும் பொறுப்பினையும் பெற்றிருந்தது. துவக்க காலத்தில் பாடங்கள் கற்பிப்பதற்காக பேராசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லை.

1857 - ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்திற்குப்பின், பள்ளிகள் நடத்தும் கிறித்தவ பாதிரியார்களிடம், அரசாங்கம், கண்டிப்புடன் செயல்பட்டது. அரசு உதவித் தொகை வழங்குவதிலும் கண்டிப்புடன் இருந்தது. இதனால் தனியார் கல்வி நிறுவனங்கள் சிறந்து வளர முற்பட்டன. பாதிரிமார்களின் நிறுவனங்களில் நிதிநிலைப் பற்றாக்குறை ஏற்பட்டபோது அவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

1873- ஆம் ஆண்டு வரை, சென்னைப் பல்கலைக்கழகம், மாநிலக் கல்லூரியின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. 1857- இல் முதல் மெட்ரிகுலேசன் தேர்வு நடத்தப்பட்டது. 1858 இல் முதன் முதலில் இளங்கலை படிப்பிற்கான (பி.ஏ) தேர்வுகள் நடைபெற்றன.

இந்த பட்டப் படிப்பிற்கான தேர்வு எழுதிய இரு மாணவர்கள் யாழ்ப்பாணத்தை (Jaffna)ச் சேர்ந்தவராவர். இக்காலத்தில்தான் சென்னை மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, சட்டக் கல்லூரி ஆகியவையும் துவக்கப்பட்டன. இந்தத் தொழிற்கல்விக்கும் தேர்வுகள் நடத்தும் பொறுப்பு சென்னைப் பல்கலைக்கழகத்திற்கே இருந்தது.

1857 க்கும் 1875- க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை பெருகியது. கும்பகோணத்தில் இருந்த உயர்நிலைப்பள்ளி கல்லூரியாக மாற்றப்பட்டது. தனியார் துறையால் சென்னை கிறித்துவக் கல்லூரி துவக்கப்பட்டது. சென்னை, நாகப்பட்டினம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் கிறித்தவ சமயத் தவர்களால் கல்லூரிகள் துவக்கப்பட்டன. 1871- இல் மொத்தத்தில் சென்னை மாநிலத்தில் 12 கல்லூரிகள் இயங்கின. அடுத்த பத்து ஆண்டுகளில் எண்ணிக்கை இருமடங்காகியது. மாநிலக் கல்லூரியில் முதல் முதல்வராக E.P. போவல் பணியாற்றினார்.

உட்டின் அறிக்கை வெளியிடப்பட்ட பின் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள், சென்னை மாநிலம் கல்வித்துறையில் பெரும் முன்னேற்றம் கண்டது. ஆனால் குறிப்பிடத்தக்க குறையும் இம்முறையிலிருந்தது. சென்னை அரசு, உயர் கல்விக்குச் செலவிடுவது போன்று சம நிதி நிலையையும், சம ஆர்வத்தையும் ஆரம்பக்கல்வியில் கொண்டிருக்கவில்லை. கிறித்துவ பாதிரியார்களும் தங்களுக்கு தாராள சலுகைகள் கொடுக்கப்படவில்லை என வருந்தினர். மற்றொரு கல்வி ஆணைக்குழு W.W. ஹண்டரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது. இக்கல்வி ஆணைக்குழு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பணியைப் பாராட்டியதோடு, இப்பல்கலைக்கழகம் ஆங்கில மொழியில் காட்டிய ஆர்வத்தைப்போல் பிராந்திய மொழிகளில் காட்டவில்லை என்று குறையும் கூறியது. தனியார் கல்விப்பணி தொடர்ந்து சிறக்க வேண்டும் எனக் கருதியது. அரசாங்கக் கல்வி நிறுவனங்களால் உயர்கல்வி கொடுக்கப்பட வேண்டும். இதன் நிர்வாகப் பொறுப்பு உள்ளாட்சி குழுக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டது. பிராந்திய மொழிப் பள்ளிகள், பொதுக் கல்வியின் ஒரு பகுதியாக வைக்கப்பட்டு ஊக்குவிக்கப்படவேண்டும்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கல்வி மேலும் வளர்ச்சியுற்றது. 1881- இல் கல்லூரிகளின் எண்ணிக்கை 24- ஆக இருந்தது. 1904- இல் அதன் எண்ணிக்கை 62 ஆனது. தொழிற்கல்விக் கூடங்கள் மூன்றிலிருந்து ஆறாக உயர்ந்தன. மாணவர்களின் எண்ணிக்கையும் பெருகிற்று. 1885- இல் சட்டக்கல்வி போன்று ஆசிரியர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டது. பாடத்திட்டம், ஆராய்ச்சி, தேர்வுகள் ஆகியவற்றைக் கவனிக்க, பல்கலைக் கழகத்தில் கல்விக் கழகங்கள் துவக்கப்பட்டன. 1882- ஆம் ஆண்டு கல்வி ஆணைக் குழுவின் பரிந்துரையின்படி ஏராளமான கல்லூரிகளின் நிர்வாகம் உள்ளாட்சிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

பெண்கள் கல்வி

பண்டைய தமிழர்கள் பெண் கல்வியை ஆதரித்தனர். ஆனால் மத்திய காலத்திலும், நவீனகாலத் தொடக்கத்திலும் பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வில்லை. 1854, 1859- ஆம் ஆண்டு கல்வி அறிக்கைகளும் அதனைச் செவிமடுக்காது விட்டுவிட்டன. 1868- இல் தான் மத்திய அரசு பெண் கல்விக்கென ஒவ்வொரு மாநிலத்திற்கும் 12,000 ரூபாய்கள் ஒதுக்கி, இதற்கான முயற்சியை மேற்கொண்டது. சென்னை மாநிலத்தில் துவக்கபட்டபெண்கள் பள்ளிகளின் முதல் கண்காணிப்பாளராக திருமதி பிராண்டு நியமிக்கப்பட்டார். பெண்கள் கல்விக்கான வளர்ச்சிக்கு அவர் செய்த தொண்டு மதிக்கத்தக்கது ஆகும். 19- ஆம் நூற்றாண்டின் முடிவில், மாநிலத்தில், 34 பெண் உயர்நிலைப் பள்ளிகளும், மூன்று பெண் கல்லூரிகளும் செயல்பட்டன. 20- ஆம் நூற்றாண்டில் பெண்கள் ஏராளமாக கல்வி கற்க முற்பட்டனர்; இன்றும் இதன் வளர்ச்சி பெருகி வருகின்றது.

உடற்பயிற்சிக் கல்வி

உடற்பயிற்சிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்வதில் காட்டிய தயக்கத்திற்கு, கற்றறிந்தவர்கள், அரசாங்கம், மக்கள் ஆகிய அனைவருமே பொறுப்பாவார்கள். 1877- இல் உடற்பயிற்சிக் கல்விக்கு என தனி நிதி ஒதுக்கப்பட்ட பின்பு மாநிலத்தில் அக்கல்வி சிறப்பிடம் பெறத் துவங்கியது. விளையாட்டு அரங்கங்களும், மைதானங்களும் 1878- இல் அரசாங்க பள்ளிகளில் உண்டாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளில் விளையாட்டுக்கு என்று ஆசிரியர்கள் பள்ளிகளில் நியமிக்கப்பட்டனர். 1885- ஆம் ஆண்டில் உடற்பயிற்சிக் கல்வியில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டது. அதுவும் சென்னை நகரில் உறையும் மாணவர்களுக்கு மட்டுமே பயனளிக்கும் வகையிலிருந்தது. மற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டனர்.

20ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் இந்தியர்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த அரசியல் மறுமலர்ச்சி கல்வித் துறையிலும் இருந்தது. கல்வியின் தரத்தை உயர்த்த கற்றறிந்த அறிஞர்கள் விரும்பினர். 1902- இல் அனுபவமிக்கவர்களின் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, கல்லூரிக் கல்வி முறையை உயர்த்த முயற்சி செய்யப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசாங்கத்தால் பல்கலைக்கழக சட்டவரைவில் கொண்டு வரப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளுக்கான அரசு உதவித்தொகை சட்டங்கள் 1906 இல் திருத்தியமைக்கப்பட்டன. இதன்படி, பள்ளிகளுக்கு இதுவரை, தேர்வு விகித அடிப்படையில் உதவித்தொகை வழங்கும் முறை கைவிடப்பட்டது.

1910-இல் G.K. கோகலே தனது முழுச் சக்தியையும் ஆரம்பக் கல்விக்காகப் பயன்படுத்தினார். அவரது தீர்மானம், 1911- இல் மத்திய சட்டமன்றத்தில் நிராகரிக்கப் பட்டிருப்பினும் அரசு ஆரம்பக்கல்விக்கான நிதி உதவியைச் செய்ய முன் வந்தது. இந்நிதி உதவி 500- க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பகுதிகளில் மட்டுமே ஆரம்பப் பள்ளிகளைத் துவக்க உதவியது. சுமார் 50 இலட்சம் ரூபாய்கள் இதற்கென உள்ளாட்சிக்

குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அதே ஆண்டு கல்லூரிக் கல்வி முறையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. முதலில் புகுமுக பட்டப் படிப்புக் (Fellow of Arts) கல்வி கற்பிக்கப்பட்டது. இப்போது இப்பட்டப் படிப்புக்கு பதில் இண்டர்மீடியட் வகுப்புக்கள் துவக்கப்பட்டன; மூன்று ஆண்டு பி.ஏ. ஹானர்ஸ் பட்டப்படிப்பும் துவங்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் தேர்வுகள் நடத்தும் பணியுடன் ஆராய்ச்சிப் பணியையும் துவக்கியது.

1921- இல் சென்னைக் கல்விச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம், கல்வித் துறையில் புதிய முறையை ஏற்படுத்தவும், கல்விக்காக திரட்டப்பட்ட பணத்தை அதற்காகவே செலவிடவும் அரசுக்கு ஆணையிட்டது. 1921- ஆம் ஆண்டு கல்வித்துறை இந்திய அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் மாநிலத்தில் கல்வி இந்திய மக்களின் நிலையைப் பொறுத்து வளர வழி செய்யப்பட்டது. இந்த மாற்றம் மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டேயிருந்தது. வரவேற்கவும் பட்டது.

கல்கத்தா பல்கலைக் கழகக் குழுவின் தலைவராக சர் ஸெல்டர் 1917- இல் நியமனம் செய்யப்பட்டார். பள்ளிக் கல்லூரி கல்வி முறை பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து இக்குழு தன் அறிக்கையை 1919 இல் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை கல்கத்தா மாநிலத்திற்கு மட்டுமல்லாது இந்தியா முழுமைக்கும் பொருந்துவதாயிருந்தது. 1924ஆம் ஆண்டு பல்கலைக் கழக அமைப்பில் பல்கலைக்கழக உட்குழு ஒன்றை அமைக்கவும் வழி செய்யப்பட்டது.

இரட்டையாட்சிக் காலத்தில் கல்வி நிலை

1919- ஆம் ஆண்டு மாண்ட் — போர்டு சீர்திருத்தச் சட்டப்படி மாநிலங்களில் இரட்டையாட்சி ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டப்படி, கல்வி மாநில அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் ஒருவரிடம் கல்வித்துறை ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்பு, இந்திய அமைச்சர்கள் கல்வி வளர்ச்சியிலோ, சீர்திருத்தத்திலோ ஆர்வம் காட்டவில்லை. மாநில அரசு, கல்வி நிறுவனங்களுக்கு உதவித்தொகை வழங்கி, கல்வி வளர்ச்சியைத் தூண்டியது. ஆரம்பக் கல்வி உள்ளாட்சித் துறைகளின் பொறுப்பில் விடப்பட்டது. இதனால் அத்துறைகளின் பொறுப்பு அதிகமானது.

பல வகையான வருமானங்களைக் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிடுவதில் ஏராளமான சிக்கல்கள் இருந்தன. முக்கியமானதும், தேவையானதுமான நிதித்துறை ஒதுக்கப்பட்ட பிரிவில் சேர்க்கப்பட்டது. ஆங்கில அமைச்சர்கள் கல்விக்காக பணம் ஒதுக்கத் தவறினர். மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட்டது. பெரும்பான்மையான அதிகாரங்கள் மாநில ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததால் அவர்கள் கல்வித்துறையை ஒதுக்கிவிட்டனர். இந்தியர்கள் 1919 ஆம் ஆண்டுச் சட்டம் தங்களை ஏமாற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டது எனக் கருதினர். பிரதிநிதி அமைச்சர் களும் திருப்தியடையவில்லை. மத்திய மாநில உறவுகள் வலுவிழந்தன.

ஹர்டாக் குழுவின் அறிக்கை

1929 - ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஹர்டாக் குழுவின் அறிக்கை இந்தியச் கல்வி வளர்ச்சியின் வரலாற்றில் ஒரு மைல் கல்லே ஆகும். அவ்வறிக்கையில் ஹர்டாக் குழு, இந்தியர்கள் கல்வி பெறுவதில் நாட்டம் கொள்ள வேண்டும், கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுவதன் அவசியம், தேசவளர்ச்சிக்காகக் கல்வியின் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்தியது. ஆரம்பக் கல்வி நிலையில் "வீணாக்குதல்" "தடைநிலை" போன்றவற்றைக் குறைக்க வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்தது.

1935ஆம் ஆண்டுச் சட்டப்படி கல்வி நிலை

மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கியதின் மூலமாக இச்சட்டம், கல்வி நிர்வாக முறையை மாநில அரசுக்குக் கொடுத்தது. கல்வித்துறையில் பல புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. கல்விக்காக தாராள நிதிஉதவி செய்வதாக அரசு அறிவித்தது. ஆனால் 1930- ல் ஏற்பட்ட பன்னாட்டுப் பொருளாதாரச் சிக்கல் இந்தியாவிலும் பற்றாக் குறையை உண்டு பண்ணியது. ஒவ்வொரு ஆண்டும், மத்திய அரசினால், மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு வந்த கல்வி உதவித்தொகை நிறுத்தப்பட்டது. எனவே கல்வியில் ஏற்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆனால் 1937- இல் மாற்றம் ஏற்பட்டது. பல மாநிலங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டு பிரதிநிதித்துவ அரசுகள் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்கம், கல்விக்கென பெருந்தொகையை ஒதுக்கியது. கட்டாய ஆரம்பக் கல்வி முறையைக் கொண்டு வர திட்டங்களும், முறைகளும் வகுக்கப்பட்டன. மகாத்மா காந்தியடிகளால் வகுக்கப்பட்ட அடிப்படைக் கல்விமுறை, உடற்பயிற்சிக் கல்வி போன்றவை ஊக்குவிக்கப்பட்டன.

தொழிற் கல்வி வளர்ச்சி

தொழிற்கல்வியில் அனுபவம் மிக்க பலர் அப்பாட், உட் என்பவர்களின் தலைமையில் இந்தியத் தொழிற்கல்வி முறை பற்றி ஆராய்ந்தனர். இந்தியாவில் கற்பிக்கப்படும் தொழிற்கல்வி வேலைவாய்ப்பு வழங்குவதாக அமைய வேண்டும். பயிற்சி பெற்ற தொழிற் கல்வியாளர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தரும் பொறுப்பினைத் தொழிலதிபர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அரசாங்கமும், அரசுத் தொழில் துறையில் பணிபுரிய தொழிற் கல்வி பயின்றவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்; அவர்களது தேவையான தகுதி என்ன என்பது பற்றியும் அறிவிக்க வேண்டும் என்று அவர்கள் பரிந்துரை செய்தனர். இப்பரிந்துரைகளனைத்தும் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எனினும், இரண்டாவது உலகப்போர் தோன்றியதனாலும், நிதி நிலை சிக்கலிலிருந்ததனாலும் அவை செயல் படுத்தப்படாமல் போயின.

1938- இல் ஆங்கிலத்திற்கு அடுத்த நிலையில் வட்டார மொழிகள் உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழிகளாக ஆக்கப்பட்டன. இம்முறை மாணவர்களின் சுமையைக் குறைத்தது. 1939- இல் சுதந்திரம் அடைய வேண்டும் என்ற பிரச்சினை மேலும்

வலுப்பெற்றது. அமைச்சரவையிலிருந்து காங்கிரஸ் அமைச்சர்கள் விலகிக் கொண்டனர். அரசியலில் பயங்கர நிலையே இருந்து வந்தது. எனவே கல்வி வளர்ச்சிக்குப் போதுமான அக்கரை காட்டப்படவில்லை.

அரசாங்கம் கல்வித்துறைக்கு, ஆலோசனைக்குழு ஒன்றை நியமித்தது. அக்குழுவின் தலைவராக ஜான் சர்ஜன்ட் நியமனம் செய்யப்பட்டார். இக்குழு தனது அறிக்கையை 1944 இல் சமர்ப்பித்தது. அக்குழுவின் அறிக்கையில், (1) ஒரு இலக்கியவாதிக்கு குறைந்தபட்ச தகுதி உயர்நிலைப்பள்ளி படிப்பு முடித்திருக்க வேண்டும். (2) உயர்நிலைப் பள்ளிகள் தொழிற்கல்வி உயர்நிலைப்பள்ளிகள், பாடப்பிரிவு உயர்நிலைப்பள்ளிகள் எனப் பிரிக்கப்பட வேண்டும். (3) உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடியும் வரை வட்டார மொழிகளைப் பயிற்று மொழியாக ஆக்கப்படல், (4) ஆங்கிலம் கட்டாய இரண்டாவது மொழியாகவும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். (5) பல்கலைக்கழகப் படிப்பு, வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். (6) கல்லூரிகளிலிருந்து இண்டர்மீடியட் வகுப்புகள் நீக்கப்பட்டு அவை உயர்நிலைப்பள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். (7) ஆசிரியர்களின் வாழ்க்கைநிலை உயர்த்தப்பட வேண்டும் போன்ற பரிந்துரைகள் செய்யப்பட்டன.

சென்னைப் பல்கலைக்கழக வளர்ச்சி

1904ஆம் ஆண்டுச் சட்டம்

இந்தியத் தலைமை ஆளுநர் பதவியை ஏற்றுக் கொண்டவுடன் உரையாற்றிய கர்சன்பிரபு இந்தியக்கல்வித் துறையில் ஏற்படுத்த வேண்டிய முன்னேற்றக் கருத்துக்களை வெளியிட்டார்; கல்விக்குழு ஒன்று சர்தாமஸ் ராலேயின் கீழ் நியமிக்கப்பட்டது. அக்குழு கல்வி வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை வகுத்துத் தருமாறு அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டது. 1904- ஆம் ஆண்டு இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, அரசாங்கம் ஒரு சட்ட வரைவு கொண்டு வந்தது. அதன்படி அரசிய லமைப்பில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு செனட்டின் உரிமைகள், அதிகாரங்கள் ஆகியவையும், பல்கலைக் கழக செயல்முறைகள் பற்றியும் நிர்ணயிக்கப்பட்டன. செனட் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. செனட்டில் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகமாகவும், நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கும்படி அமைக்கப்பட்டது. இது பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்டாலும், அரசாங்க நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதற்குப் பல வழிகளிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பின.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக் கூடங்கள் துவக்கப்படல்

பல்கலைக்கழகத் துறைகளில் புதிய பாடங்கள் துவக்கப்பட்டன. ஆராய்ச்சித்துறைகள் துவக்கப்பட்டன. ஏற்கனவே நடைபெற்று வந்த துறைகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவையனைத்தும் சென்னைப் பல்கலைகழக வரலாற்றில் குறிப்பிட்ட முன்னேற்றமாகும். கீழ்த்திசை மொழிகள், குறிப்பாக தென்னிந்திய மொழிகள் ஆதரிக்கவும், ஊக்குவிக்கவும் பட்டன. மிகப்பழைமை வாய்ந்த தமிழகத்தின் தொன்மொழி வளர்ச்சி

பெறவேண்டிய கட்டாயமும் உணரப்பட்டது. பழமையான கீழ்த்திசை மொழிகளையும் தமிழ் மொழியையும் வளர்ப்பதற்கான கருத்துக்களை வழங்குவதற்காக குழு ஒன்றினை சென்னைப் பல்கலைக் கழகம் 1924 இல் நியமனம் செய்தது.

அக்குழு கீழ்த்திசை மொழிகளிலும் உயர்கல்வி, ஆராய்ச்சிகள் துவக்கப்படல் வேண்டும் என ஆலோசனை கூறியது. அரசாங்கம், இக்குழுவின் ஆலோசனையை சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டது. அரசு ரூ.21,000 ஒதுக்கிக் கொடுத்தது. பல புதிய துறைகள் துவக்கப்பட்டன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், அராபி, பெர்சியன், உருது ஆகிய மொழிகளுக்குத் துறைகள் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு துறையிலும் ஒரு முதுநிலை விரிவுரையாளரும், ஒரு ஆராய்ச்சி உதவியாளரும் நியமிக்கப்பட வழி செய்யப்பட்டது.

தென்னிந்திய மொழிகளின் நெறியாளர்—பேராசிரியரின் பொறுப்பில் சமஸ்கிருதத் துறை இருந்தது. 1930- இல் பலமொழிகளின் துறைகள் மறுபரிசீலனை செய்யப்பட்டன. தென்னிந்திய மொழிகளின் நெறியாளர் பதவி, நீக்கப்பட்டது. இத்துறையின் பொறுப்பு, திராவிட மொழிகளின் முதுநிலை விரிவுரையாளரிடம் கொடுக்கப்பட்டது. மறுபரிசீலனைக்குப்பின் திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய துறைகளுக்குத் தனித்தனியாக ஒரு இள நிலை விரிவுரையாளரையும், ஒரு முதுநிலை விரிவுரையாளரையும் நியமிக்க முடிவு செய்யப்பட்டது. சமஸ்கிருதத் துறைக்கு ஒரு இணைப்பேராசிரியரை நியமிக்கவும் முடிவெடுக்கப்பட்டது. தமிழ்த்துறை ஒரு இணைப்பேராசிரியர், ஒரு முதுநிலை விரிவுரையாளர்; ஒரு இளநிலை விரிவுரையாளர் ஆகியோரைக் கொண்டு இயங்கியது. இஸ்லாமியக் கல்வித்துறைக்கு ஒரு முதுநிலை, இரண்டு இளநிலை விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிய துறைகளைத் துவக்குவதோடு மட்டுமன்றி நடைமுறையிலிருக்கும் ஆராய்ச்சித் துறைகளை முன்னேற்றும் வழிகள் செய்யப்பட்டன. 1925 இல் இந்தியப் பொருளாதாரத்துறை நிரந்தரமாக்கப்பட்டது. டாக்டர் குல்பர்ட் (Dr. Gulbert) பொருளாதாரத் துறைப் பேராசிரியர் பதவியிலிருந்து 1921 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அவர் ஓய்வு பெற்றதால் காலியாக இருந்த பேராசிரியர் பதவி 1925 வரை நிரப்பப்படவில்லை. அரசாங்கம் அப்பேராசிரியர் பதவிக்குப் பகுதிநேர நியமனத்திற்கு ஆலோசனை கூறியது. அதன்படி மாநிலக் கல்லூரியின் பொருளாதாரத்துறை பேராசிரியரே சென்னைப் பல்கலைக்கழக இந்தியப் பொருளாதாரத் துறையின் பகுதி நேரப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார். அத்துறையில் ஒரு இணைப்பேராசிரியர், ஒரு முதுநிலை விரிவுரையாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். 1926- இல் வணிகவியல் துறை ஒன்றும் துவக்கப்பட்டது. கல்விக்கழகம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. இந்திய வரலாறு, தொல் பொருளியல் துறைகளில் முறையே ஒரு இணைப் பேராசிரியர், ஒரு விரிவுரையாளர் நியமிக்கப்பட்டனர்.

மெக்கன்ஸியின் கையெழுத்துப் பிரதிகள்

வரலாறு, தொல்பொருளியல் துறைகள், மெக்கன்ஸியின் கையெழுத்துப்பிரதிகளின் வரலாற்று முக்கியத்துவத்தை நினைவில் கொண்டு, அவற்றை அச்சிட்டு வெளியிடும்

பொறுப்பினை ஏற்றுக் கொண்டன. இதற்கான பணியில் மூன்று ஆராய்ச்சி மாணவர்கள் ஈடுபட்டனர். மெக்கன்ஸியின் 244 கையெழுத்துப் பிரதிகள் வெளியிடப்பட்டன. அவை தென்னிந்தியாவின் சமுதாய (16ஆம் நூற்றாண்டுக்கும் 18ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட), அரசியல் வரலாற்றினை ஓரளவு தெரிவிப்பனவாக இருந்தன.

கல்வி கற்கும் முறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்

புகுமுக பட்டப்படிப்பு முறை 1911-12 இல் இண்டர்மீடியட் முறையால் மாற்றப் பட்டது. இளங்கலையில் ஹானர்ஸ் படிப்பு இணைக்கப்பட்ட பள்ளி இறுதித்தேர்வு முறை (S.S.L.C) மெட்ரிகுலேசனுக்கு பதிலாக புகுத்தப்பட்டது. இம்முறையானது மெட்ரிகுலேசனை விட இலகுவாக இருந்ததால் பலரால் வரவேற்கப்பட்டது.

1923ஆம் ஆண்டின் ஏழாவது (VII) சட்டம்

மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட 1919- ஆம் ஆண்டுச் சட்டப்படி கல்வித்துறை மாநில அதிகார வரம்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1923- இல் சென்னை மாநில சட்டமன்றங்களில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இரட்டை யாட்சியின் காலத்தில் கல்வித்துறை மாற்றப்பட்ட துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது. அமைச்சரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் ஒருவரின் பொறுப்பில் வைக்கப்பட்டது. 1923 ஆம் ஆண்டுச் சட்டம் பல்கலைக் கழகத்திற்குத் தன்னாட்சி வழங்கியது. இச்சட்டம் இயற்றப்பட்ட நாளிலிருந்து பல்கலைக் கழகத்திற்கும், அரசுக்கு மான உறவு மிக நெருக்கமாக இருந்தது. ஆனால் மற்ற துறைகளில் அவ்வாறு இல்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தோற்றம்

20- ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் சென்னை மாநிலத்தில் பலரிடையே இருந்து வந்தது. 1916- இல் மைசூர் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டதும் இவ்வெண்ணம் மேலும் வலுவடைந்தது. இதன் விளைவாக, சென்னை மாநிலத்தில் பெரும்பான்மை யோரின் தாய்மொழியான தமிழ் மொழியை முன்னேற்ற வேண்டி மதுரையில் தமிழ்ப்பல்கலைக்கழகம் துவக்கப்பட வேண்டும் என பலர் கருத்து தெரிவித்தனர். வேறுபலர், மதுரை அல்லது திருச்சியில் துவக்கப்பட வேண்டும் என்றனர்.

இம்மாதிரியான மொழியை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழகம் துவக்கப்படவேண்டும் என்பதற்கு ஆதரவான, எதிர்ப்பான கருத்துக்கள் பரவின. 1925இல் ஆந்திர பல்கலைக்கழகம் துவக்கப்பட்டதும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மேலும் ஆவல் பெருகியது. எனவே, பல்கலைக்கழகம் ஒன்று துவக்கப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்ய சென்னைப் பல்கலைக்கழகம் ஒரு குழுவினை நியமித்தது.

இதற்கிடையில், செட்டிநாட்டு அரசர் சர். அண்ணாமலை செட்டியார், 1921இல் சிதம்பரத்தில் மீனாட்சி கல்லூரியைத் துவக்கினார். இக்கல்லூரி, செட்டி நாட்டு அரசரின் சகோதரர் ராமசாமி செட்டியாரால் நடத்தப்பட்ட உயர்நிலைப் பள்ளியின்

தொடர்ச்சியாகச் செயல்பட்டது. மீனாட்சி கல்லூரியில் 1922- இல் இளங்கலை வகுப்பு தொடங்கப்பட்டது. தொடர்ச்சியாக, மீனாட்சி கல்லூரியுடன் சேர்ந்த சமஸ்கிருதக் கல்லூரி, ஓரியண்டல் கல்லூரியும் துவக்கப்பட்டன. மீனாட்சி கல்லூரியின் தரத்தை உயர்த்தி, கீழை நாட்டுப் பண்பாடுகளைப் பற்றிய கல்வியின் மையமாக ஆக்க வேண்டும் என K. ஸ்ரீனிவாச அய்யங்கார் போன்ற அறிஞர்கள் ஆலோசனை கூறினர். 1925 ஆம் ஆண்டின் இந்து அறக்கட்டளைச் சட்டம், சமய நிறுவனங்கள் தம்மிடமிருக்கும் அதிகப்படியான பணத்தைக் கல்விக்காக செலவிட வேண்டும் எனக் கூறியது. திருச்சி மக்கள், தங்களுக்குள்ளேயே தமிழ்ப் பல்கலைக் கழகம் துவக்குவதற்கான குழு ஒன்றினை உருவாக்கினர். அக்குழு பொது மக்களிடமிருந்து நிதி உதவி கோரியது. தமிழ் மக்களின் இந்த எண்ணத்தை அறிந்து கொண்ட, சென்னை மாநிலத்தில் Dr. P. சுப்பராயனின் தலைமையிலான அமைச்சரவை, பல்கலைக் கழகம் துவக்குவதற்கு ஊக்கம் கொடுத்தது. இந்நிலையில் 1927- இல் மீனாட்சி கல்லூரியில் அறிவியலில் பட்டப் படிப்புகளும், இளங்கலை ஹானர்ஸ் படிப்பும் துவக்கப்பட்டன. 1928 இல் அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட ஆய்வுக் குழுவும் புதிய பல்கலைக் கழகம் துவக்கப்பட வேண்டியதின் அவசியத்தை உயர்த்தியது. இதே நேரத்தில் சர். அண்ணாமலைசெட்டியார், மீனாட்சி கல்லூரியின் தரத்தை உயர்த்தி, அதனுடன் சேர்ந்த மற்ற இரு கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் தனிப்பல்கலைக் கழகமாக மாற்றுவதற்காக 20 இலட்சம் ரூபாய்க்கு அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தினார். எனவே அறக்கட்டளையாளரின் பெயரால் புதிய பல்கலைக் கழகம் 1929 இல் துவக்கப்பட்டது. இதுவே அவர்தம் பெயரால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என அழைக்கப்படுகிறது. இதனைத் துவக்கியவர்கள், இதனை ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமாக்க வேண்டும் என்று கருதினாலும், இங்கு தமிழ் மட்டுமல்லாது சமஸ்கிருதம், இந்திய வரலாறு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1966- இல் தமிழகத்தில் மூன்றாவது பல்கலைக் கழகம் மதுரை மூதூரில் துவக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப்பின்

சுதந்திரத்திற்கு முன்பு கல்விக்கென தேவையான அளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆங்கில ஆட்சியாளர்கள் நாடு முழுவதுமான முன்னேற்றத்தைப் பற்றித் திட்டங்கள் வகுக்கவில்லை. 1947- ஆகஸ்டு 15- இல் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு கல்வித்துறையில் புதிய கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டின் இன்றைய, நாளைய நலன் கருதி, இந்தியக்கல்விமுறையில் என்னென்ன புரட்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று ஆராயவும், பல்கலைக் கழகக் கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என ஆராயவும் 1948- இல் Dr. S. இராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. உயர் கல்வி பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின் அக்குழு 1949- இல் அறிக்கை சமர்ப்பித்தது. பள்ளிகளில் முதல் மூன்று பாரங்களுக்கு புத்தகக் கல்வியுடன் தொழிற் கல்வியும், விவசாயக் கல்வியும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். வரலாறு, புவியியல் ஆகிய துறைகளோடு சமூகப் பாடங்கள், குடிமைப் பயிற்சி (Citizenship training) ஆகியவை உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்படவேண்டும். வட்டார மொழிகளே பயிற்று மொழிகளாக ஆக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள்

எடுக்கப்படவேண்டும். பல்கலைக் கழகம், அரசியல் நிர்வாகம், தொழில், வாணிகம் ஆகிய துறைகளில் சிறந்தவர்களை அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும். பல்கலைக் கழகங்கள் நாகரிகத்தின் மையங்களிலிருந்து திறமைசாலிகளை உருவாக்க வேண்டும். ஆராய்ச்சி மாணவர்கள் ஏராளமானோரைச் சேர்த்து ஆக்கப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். இளைஞர்களின் மனதில் பண்பாட்டு நுணுக்கம், நீதி, நேர்மை போன்றவை ஆழப்பதிக்கப்படவேண்டும். இளைஞர்களின் மனத் தெளிவுக்கும் உடற்கூற்று அமைப்புக்கும் ஏற்றவாறு கல்வித் துறையில் அவ்வப்போது மாற்றங்கள் கொண்டுவர வேண்டும். இவ்வாறு இராதாகிருஷ்ணன் குழு பரிந்துரை செய்தது.

ஆனால் அக்குழு தம் அறிக்கையில் பெண்கல்வி, சமயக் கல்வி, மற்ற கலைகள், பயிற்சி மொழி உறுதியாக இதுதான் இருக்க வேண்டும் என்பது பற்றி சரியான கருத்து எதனையும் கூறவில்லை. குழுவின் பரிந்துரையின் பேரில் 1959 ஆம் ஆண்டு பல்கலைக்கழகமானியக் குழு உண்டாக்கப்பட்டது. இம்மானியக்குழு, பல்கலைக்கழகங் களுடன் கலந்து ஆலோசித்து கல்வி வளர்ச்சிக்கும், கல்வி கற்பிக்கும் முறை தேர்வுகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும் தனது முழுச் சக்தியையும் பயன்படுத்துகின்றது. தமிழகத்தில் கல்லூரிக் கல்விமுறையில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. 1956 - 57 இல் இண்டர்மீடியட் முறை நீக்கப்பட்டுப் புகுமுகவகுப்பு கொண்டு வரப்பட்டது.

டாக்டர் முதலியாரின் கல்விக்குழு

உயர்நிலைப் பள்ளி கல்வி முறையில் இருக்கும் பிரச்சினைகளை ஆராயவும், அப்பிரச்சினைக்கான வழிகளைக் காணவும் இந்திய அரசாங்கம் Dr. A. L. முதலியாரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. இக்குழு 1952 - செப்டம்பர் 23 இல் செயல்படத் தொடங்கியது. இக்குழுவின் பரிந்துரைப்படி உயர்நிலைப் பள்ளிகளில் பல்வேறு வகையான பாடங்கள் புகுத்தப்பட்டன. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு என்று தனிப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. பெண்களும் சிறந்த கல்வி பயில வேண்டும் என்ற எண்ணத்தில் மனை அறிவியல் (Home Science) ஒரு பாடமாக சேர்க்கப்பட்டது. இக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட, கல்வி தாய்மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினால் மாணவர்களுக்குச் சுமை அதிகமாகும் என யூகிக்கப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் கல்வி வளர்ச்சி

ஐந்தாண்டுத் திட்டங்கள் கல்வியின் தரத்தைப் பற்றிச் சிந்திக்காது கல்வியின் அளவை மட்டுமே கருத்தில் கொண்டன. ஆனால் இன்று, கல்வி முறையின் தரம் உயர்ந்து கொண்டே வருகின்றது. ஆசிரியர்களின் திறன், கற்பிக்கும் முறைகளின் தன்மை, நேர்மையான அணுகுமுறை, நெகிழ்ந்து கொடுக்கும் கல்வி முறை, பாட நூல்களின் தரம், பள்ளிகளின் நிர்வாகத்திறன் ஆகியவை கல்வி வளர்ச்சியின் தரத்தை உயர்த்தின. கல்வி வளர்ச்சியைக் காணுவதற்கான வழிகளைப் பற்றி ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் ஆராயப்பட்டது.

ஆரம்பப்பள்ளிகளில் கூட அறிவியல் பாடம் நடத்துவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பகுதி நேர தொழிற்கல்வியும் நமது கல்வி முறையில் சேர்க்கப்பட்டது. புதிய பாட முறைகளைக் கற்பிக்கும் முறை ஆசிரியர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டது.

கல்வி கற்பிப்பதற்கு வேண்டிய பொருட்கள், உதவி ஆகியவை பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. பள்ளிகளின் நிர்வாகங்களைக் கவனிக்க மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டனர். கல்வியும் இக்காலத்தில் வளர்ந்தது. பல்கலைக் கழக மானியக்குழு உயர்கல்விக்குப் பேருதவி செய்து வந்தது. உயர்மட்டக் கல்வி மையங்கள், கோடைக்கால கல்வி நிறுவனங்கள் போட்டிப் பேச்சு வட்டங்கள் போன்றவை நடத்தப்பட்டு உயர் கல்வியின் தரத்தை உயர்த்த வழிகோலப்பட்டது.

அடிப்படைக் கல்வி

இந்தியா போன்ற ஏழை நாடுகளுக்குப் புத்தகக் கல்வி முழுப் பயனுடையதாக இருக்க முடியாது. மக்களின் உடல், ஆவி, மனம் ஆகிய அனைத்தும் ஒருங்கே முன்னேற்றம் காண்பதாகக் கல்வி முறை அமைய வேண்டும். எனவே கல்வி முறை தொழில் அடிப்படையில் அமைந்திருத்தல் நல்லது என்பது மகாத்மா காந்தியடிகளால் கூறப்பட்ட வார்தா கல்வி (அடிப்படைக்கல்வி) முறையாகும். சுதந்திரம் அடைந்த பின்பு அடிப்படைக் கல்வி முறை புகுத்தப்பட்டது. தமிழகத்தில் பெரும்பாலான முதல்நிலை உயர் முதல்நிலைப் பள்ளிகள் ஆகியவை முறையே இளநிலை, முதுநிலை ஆரம்பப் பள்ளிகள் என மாற்றப்பட்டன. இந்த அடிப்படைக் கல்வியை மையமாகக் கொண்டு ஆசிரியர் பயிற்சியில் திருத்தி அமைக்கப் பட்டது. இப்பள்ளிகளில் நூல் நூற்றல், நெசவு நெய்தல், விவசாயம் போன்ற கல்வியும் கற்பிக்கப்பட்டது. ஆனால், பின்னாளில் இந்த மாதிரியான அடிப்படைக்கல்வி, நடைமுறையில் சாத்தியமற்றது என்பதனை உணர்ந்த தமிழக அரசு மீண்டும் பழைய கல்விமுறையையே பின்பற்ற முன்வந்தது.

முதியோர் கல்வித் திட்டம்

சுதந்திரத்திற்குப் பின் இந்திய மண்ணிலிருந்து அறியாமையை அகற்ற வேண்டும் என்பதில் அரசு அக்கறையுடன் இருந்தது. எனவே பள்ளிகளையும், பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையும் கூட்டுவதோடு மட்டுமன்றி, எண்ணிறந்த முதியோர்களுக்கு கல்விபுகட்டுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி உடனடி அவசியம் உணரப்பட்டது. பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இரவு நேரங்களில் நடத்தப்படும் முதியோர்கல்விக்கும் பகுதி நேர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். முதியவர்களுக்கு எழுத்து, வாசிப்பு, கணிதம் ஆகிய மூன்று அடிப்படைத் திறன்களும் கற்பிக்கப்பட்டன. துவக்கத்தில் இக்கல்வி முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எனினும் காலவெள்ளத்தில் கைவிடப்பட்டது. ஆனால் தமிழக அரசு இம்முறையை மீண்டும் கொண்டு வந்து "முறைசாராக் கல்வி முறை" நடைமுறையில் புகுத்தப்பட்டது.

மதிய உணவுத் திட்டம்

தமிழக அரசு, பள்ளிகளில் பதினோராம் வகுப்பு வரையான கல்விக்குக் கட்டணம் இல்லை என அறிவித்தது. அதுவே பின்னால் புகுமுக வகுப்புக்கும் விரிவு படுத்தப் பட்டது. எனவே ஏராளமான ஏழை பெற்றோர் தங்களது குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடிந்தது. ஆனால் இன்றளவும் பள்ளிகளுக்குச் சென்று பாடம் கேட்பது சாதாரண ஏழை மக்களுக்கு முடியாத பிரச்சனையாகவே உள்ளது. எனவே அப்போது, பொதுக் கல்வித்துறையின் நெறியாளராயிருந்த நெ.து. சுந்தரவடிவேலு இலவச மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அரசு உதவித்தொகை, பொது மக்களின் நன்கொடைகள், அமெரிக்க 'கேர்' (CARE) அமைப்பின் உதவி ஆகியவற்றின் மொத்த பயன்கள் அனைத்தும் அவசியமான மாணவர்களுக்கு இலவச மதிய உணவுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. இதன் மூலமாக வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள மாணவர்கள் தங்களது பாடங்களில் கவனம் செலுத்த வகை செய்யப்பட்டது.

பள்ளி முன்னேற்ற மாநாடுகள்

1970- இல் பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் நிதி உதவியாலும் பள்ளிகளின் முன்னேற்றத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலமாக வளர்ச்சி அரசு உதவித்தொகையை மட்டுமே நம்பி அமையக்கூடாது என்ற நிலை உருவானது. பொது மக்களே தங்களது பொறுப்புக்களை உணரும்படி செய்யப்பட்டது. துவக்கத்தில் இருந்தது போன்ற ஆர்வம் இம்முறையில் பின்னாளில் இருக்கவில்லை. எது எதிர்பார்க்கப்பட்டதோ அச்செயல் நடைபெறவில்லை.

கோத்தாரி கல்விக்குழு

கல்வியை முன்னேற்றுவதன் மூலம், தேசத்தை முன்னேற்ற விரும்பிய அரசாங்கம், 1964, அக்டோபர் 2-இல் கல்விக்குழு ஒன்றினை நியமித்தது.

Dr. D.S. கோத்தாரி அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்படடார். இக்குழுவின் உறுப்பினர்களாக, இந்தியாவின் சிறந்த கல்வியாளர்களும் வெளிநாட்டுக்கல்வி நிபுணர்கள் சிலரும் இருந்தனர். இக்குழு, கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் பற்றிய தனது அறிக்கையை 1966- ஜூன் திங்களில் சமர்ப்பித்தது.

சில பொதுப் பிரச்சினைகள்

பெண் கல்வித்திட்டம்

பெண்கல்விமுறை, கர்சன் பிரவு தலைமை ஆளுநராக இருந்தபோது முதன்முதலில் முக்கிய இடம் பெறத் துவங்கியது. பெண்களுக்கு என தனிப்பள்ளிகளும் கல்லூரிகளும் துவக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின் மேலும் முன்னேற்றம் காணும் வகையில், 1963 இல், பெண்கல்விபற்றி ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. பக்தவத்சலத்தைத் தலைவராகக் கொண்ட அக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு முன் வைத்தது.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமாகக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என அவ்வறிக்கை கூறியது. இது தவிர இதற்கு முன்பு இருந்த குழுக்களும் பெண்கள் கல்வி பயில வேண்டியதன் அவசியத்தை உணர்த்தின.

கண்பார்வையற்ற, காதுகேளாதோருக்குப் பள்ளிகள்

நடைமுறையிலிருந்த கல்விமுறை கண்பார்வையற்றோருக்கும், காதுகேளாதோருக்கும் பொருந்தாது என்ற காரணத்தால், அவர்களுக்குப் புதிய முறையில் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தில், அம்மாதிரியான ஊனமுற்றவர்களும் பெருகினர். 1951- இல் முறையே அவர்களுக்கு மூன்று பள்ளிகள் தமிழகத்தில் செயல்பட்டன. இது தவிர, அரசாங்கம், காதுகேளாதாருக்கு ஒரு பள்ளியையும், பார்வையற்றோர் பள்ளிகள் நான்கினையும் தோற்றுவித்தது. பின்னாளில் அதிகப்பள்ளிகள் துவக்கப்பட்டன. பூவிருந்தமல்லியில் நடத்தப்படும் பார்வையற்றோர் பள்ளியில், உயல்நிலைப் பள்ளிப்பாடங்கள், ஆசிரியர் பயிற்சிப்பாடங்கள் கற்பிக்கப்படு கின்றன. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் தனிப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

மாணவர் பிரச்சினைகள்

இப்போது மாணவர்களது பிரச்சினைகள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. எங்கு பார்த்தாலும், வேலை நிறுத்தங்கள், அரசாங்க, கல்வி ஸ்தாபனங்களுக்கு இழப்பு உண்டாக்குதல் போன்ற பணிகளில் மாணவர்களின் பொன் போன்ற காலம் வீணாக்கப் படுவது ஆகியவை அடிக்கடி நடக்கின்றன. இம்மாதிரியான வேலை நிறுத்தங்களுக்கு அரசியல், பொருளாதார, சமுதாய காரணங்கள் தூண்டுகோலாய் அமைந்துள்ளன. அவர்கள் கல்வி கற்று வெளியேறும் போது அடையப் போகும், வேலையில்லாத் திண்டாட்டத்தை முதலிலேயே தெரிந்து கொண்டு கல்வியில் நாட்டம் செலுத்தத் தயங்குகின்றனர். பல பிரச்சினைகளுக்கு, ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தீர்வு காணலாம். கல்வி முறையும் வேலை வாய்ப்பு நல்குவதாக மாற்றப்படவேண்டும். அரசியல் பிரச்சினைகள் மாணவர் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுமேயானால் மாணவர்கள் தங்களது கல்வியில் நாட்டம் செலுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.

19, 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சி

தமிழ் மொழி 18,19,20 ஆம் நூற்றாண்டுகளில் பெருமளவு வளர்ச்சியடைந்தது. ஐரோப்பியரின் வருகை அதற்குரிய காரணங்களில் ஒன்று. ஐரோப்பியரின் வருகை வரை தமிழ்மொழி பெரும்பாலும் இலக்கிய மொழியாகவே காணப்பட்டது. உரைநடைத் தமிழ், கவிதைத் தமிழ் அடைந்த இடத்தை அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கியத் தமிழ் மட்டுமே அக்காலத்துப் போற்றி வளர்க்கப்பட்டமை அதற்குக் காரணம்; பேசுவோர்களும் இலக்கியத் தமிழிலேயே பேசிவந்தனர். மக்கள் அனைவரும் பின்பற்றத்தக்க உரைநடை அதுகாறும் தோன்றவில்லை. மேலும் வடமொழியின் ஊடுருவல் இம்மொழியில் அதிகம் இருந்து வந்தது. மொழி என்றால் வடமொழி என்றும், அதில் மட்டுமே எல்லாக் கலைகளும் தோன்றின என்றும் கருதப்பட்டு வந்தது.

இந்நூற்றாண்டுகளில் தமிழ் மொழியில் பண்பட்ட மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஏறக்குறைய ஐம்பது மேநாட்டு அறிஞரின் இடைவிடா முயற்சியால் தமிழ் மொழி வளம் பெற்றது; இன்றைய அறிவியல், ஆராய்ச்சி நோக்கைப் பெற்றது. பழங்காலத்து மொழிக் கண்ணோட்டம் முற்றிலும் மாற்றப்பட்டது. புதுவிதமான உரைநடை இலக்கியம் இக்காலத்து உதயமாயிற்று. இவ்வளத்தைத் தமிழுக்கு அளித்த மேனாட்டார் பெரும்பாலும் சமயப்போதகர்களோ, மருத்துவரோ, நிர்வாகிகளோ, பயணிகளோ ஆவர். இவ்வறிஞர் பெரும்பாலும் இத்தாலி, போர்ச்சுக்கல், டென்மார்க், ஸ்காட்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தோராவார். 1498 - இல் வாஸ்கோடகாமா இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்தமையால் தமிழ்மொழி பெரிதும் ஏற்றம் பெற்றது எனலாம்.

தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சியில் மேனாட்டாரின் பங்கு குறிப்பிடத்தக்கது; குறிப்பாக, உரைநடைப் பகுதியில் சிறப்புற்று விளங்கியது மேலும் மொழி ஆராய்ச்சியிலும், இலக்கியப்படைப்பிலும் போற்றுதற்குரியதாகும். "பிற்காலத்தார் பின்பற்றுதற்கு அவர்கள் வகுத்த வழியும், அவ்வழிகளை விளக்குதற்கு அவர்கள் மேற்கொண்ட முயற்சியும், பயன் பெறும் முறையில் மேனாட்டு முறைகளை மொழியாராய்ச்சியில் புகுத்தியமையும் வருங்கால ஆராய்ச்சிக்கு அவர்கள் காட்டிய புதுக் கோணங்களும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்கவை." மேலும் தமிழ்மொழி அகராதிகளையும், அகர முதலிகளையும், சொற்களஞ்சியங்களையும், இலக்கண நூற்களையும் பெற்றுத் திகழ்ந்தது. இவை பெரும்பாலும் உரைநடையில் இயற்றப்பட்டன. தமிழ் எழுத்து வடிவமும், லிபியும் மாற்றப்பட்டன; நவீனமாக்கப்பட்டன. அத்துடன் புதுக்குறிகளும் (கால், அரை, முழுப் புள்ளிகள்) தமிழ் மொழி பெற்றுத் திகழ்ந்தது.

புனித ராபர்ட்—டி—நொபிலி தமிழ் மொழி வளர்ச்சிக்கான புது முயற்சிகளை மேற்கொண்டார். இவர் இத்தாலிய நாட்டவர்; கத்தோலிக்கச் சமயத்தவர், செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தார். தம் பத்தொன்பதாம் வயதில் சேசு சங்கத்தில் சேர்ந்தார். தமக்குச் சாதகமான சூழ்நிலை வந்து விட்டதும், அவர் இந்தியாவுக்கு வந்தார். போர்த்துக்கீசிய மன்னரின் உத்தரவுடன் அவர் 1605 ஆம் ஆண்டு கோவா வந்தடைந்தார். அங்கிருந்து கொச்சிக்கும் பின் கீழக் கடற்கரைப் பகுதிக்கும் சென்றார். இங்கு தமிழ் கற்றார். மதுரையடைந்தபோது அங்குள்ள சேசு சபையார், சமய மாற்றத்தைப் பொறுத்தளவில் பெரு வெற்றியேதும் பெறாதது கண்டார். பின்பற்றிய முறைகளிலுள்ள குறையினால், தம்முன்னோர் எவ்வித வெற்றியையும் பெறவில்லை. அவற்றை மனத்திற்கொண்டு தமக்குரிய சில வழிமுறைகளை வகுத்துக் கொண்டார். தமிழர்களை சமயமாற்றம் செய்தற்குச் சிறந்த வழி அவர்களின் முறைகளையும் நம்பிக்கையையும், நடைமுறைகளையும், பின்பற்றுவதே என்று கொண்டார். தம்முயற்சியைப் பலரும் பின்பற்றத் தக்க ஒரு முறையில் தொடங்கினார். இந்துக்களின் பழக்க வழக்கங்களில் அவர் மேற்கொண்டவை:சப்பணமிட்டிருத்தல், புலாலுண்ணாமை, மது அருந்தாமை, இந்தியச் சன்னியாசி போல் தாமும் உடையணிந்து மரக்கட்டை பாத அணிகளை அணிந்து, தம்மை உரோமானிய அந்தணர் என்று அழைத்துக் கொண்டமை ஆகியவை. மக்களிடம் அவர்களின் மொழியில் பேசினார்.

தென்னகத்தில் கிரந்தம் இறையியல், தத்துவ, அறிவியல் மொழியாய்ப் போற்றப்பட்டு வந்தது. இம்மொழியை காலம் கிடைத்த போதெல்லாம் கற்றுத் தேறினார். வடமொழி எழுதுவதற்குத் தமிழர் பயன்படுத்தியது கோண வடிவ (angular script) முறையென்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

"தத்துவ போதகர்" (Teacher of Reality) என்று நாட்டுப்புறங்களில் அழைக்கப்பட்ட நொபிலி, ஒரு பட்டயத்தைத் தமிழில் எழுதி தம் இல்லத்திற்கு முன் ஒரு மரத்தில் பதித்து வைத்திருந்தார். அதில் தம்மை "இராஜ சன்னியாசி" என்றும், தாம் போதிப்பது "சத்திய வேதம்" என்றும் குறித்திருந்தார். இச்சமயம் அவரையும், அவருடைய கொள்கை பரப்பு முறையையும் கண்டித்து பெர்னான்டஸ் (Fernandez) என்ற பாதிரியார் குறை கூறி வந்தார். இவரைப் பற்றி சமகாலப்பாதிரியார் பெர்னான்டஸ் தொடுத்த வழக்கு ரோமின் போப் பதினைந்தாம் கிரிகாரியை (Pope Gregary XV) எட்டியது. நொபிலியின் நடத்தைகளைப் பற்றி ஆய்ந்து அறிக்கை வழங்க போப்பால் ஒரு குழுவும் நிறுவப்பட்டது. நொபிலியின் உண்மை உழைப்பைக் குழு பாராட்டி அவருடைய இந்திய மயமாக்கப்பட்ட முறைகளை ஆதரித்து அறிக்கை சமர்ப்பித்தது. அதே வேளையில் நாயக்கர் நாட்டுக் கெடுபிடிகளுக்குத் தம்மை தயாராக்கிக் கொண்டார். இத்தருணத்தில் திருமலை நாயக்கர் அவருக்கு உதவினார். தமிழ்ப்பாடல்களின் இசைக்கு ஏற்ப ஏசு, அவர் தாய் முன் பெண்களை ஆடவும் பாடவும் ஏற்பாடுகள் செய்தார். அவர் 1656 - ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16- ஆம் நாள் மைலாப்பூரில் இறந்து விட்டார். அவர் கையாண்ட முறைகளும், பணிகளும் சமகாலப் பாதிரியார்களைத் தமிழ் கற்கத் தூண்டின. தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பணிகள் புரியவும் வாய்ப்பை ஏற்படுத்தின.

மேனாட்டு அறிஞர்களில் மிகவும் போற்றத்தக்கவர் வீரமாமுனிவர் ஆவார். அவருடைய முழுப்பெயர் கான்ஸ்டன்டியஸ் ஜோசப் பெஸ்கி (Fr. Constantius Joseph Beschi : 1680 - 1747) என்பதாம்; அவர் வெனீஷியாவில் காஸ்டிகிளியோனில் பிறந்தார். ஏசு சங்கத்தின் சார்பில் அவர் 1707 - ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசிய இந்தியாவில் வந்திறங்கினார். அவர் அப்போதே இத்தாலி எபிரேயி (Hebrew), லத்தீன், கிரேக்க, போர்த்துகீசிய, ஸ்பானிய, பிரெஞ்சு, பாரசீக மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்; இந்தியா வந்தடைந்த பின் அவர் உருது, தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளிலும் வல்லவரானார். தமிழும், அவரும் ஒருவரையொருவர் பிரித்தெடுக்க இயலாவண்ணம் இரண்டறக் கலந்து விட்ட காரணத்தால் அவர் வீரமாமுனிவர் என்று அன்புடன் அழைக்கப்பட்டார். 1728-29 ஆம் ஆண்டுகளில் அவர் தமிழில் இனிமையான திருக்காவலூர்க் கலம்பகத்தை இயற்றினார். பின்னர் ஒரு கல்விக் கூடத்தில் சேர்ந்து தமிழ் இலக்கணம், உரைநடை, சொல்லிலக்கணம் போன்றவற்றை மாணவர்க்குக் கற்றுத் தந்தார். தமிழ் மொழியில் தமக்கிருந்த ஆழ்ந்த அறிவாலும், தமிழ் மக்களிடையே தமக்கிருந்த பிடிப்பாலும் அவர் தமிழ் மருத்துவத்தை நன்கு அறிந்து கொண்டார். அவர் வரைந்த கொடுந்தமிழ் இலக்கணம் அதுகாறும் உள்ள அவ்வித நூற்களில் பெயர் பெற்றது. அவர் 1747- இல் திருவிதாங்கூரில் இறந்தார்.

தமிழ் மொழிக்கு அவருடைய சேவை கொஞ்சநஞ்சமல்ல. உரைநடையில் எழுந்த முதல் தமிழ்ப் புதினம் அவர் வரைந்த **பரமார்த்த குருவின் கதை** என்பதாம். புனித ஜோசப்பைப் பற்றி அவர் கவிதை உருவில் வரைந்த நீண்ட காவியமே **தேம்பாவணி**.

இந்நூல் அவருக்கு அழியாப் புகழைத் தந்தது. இந்நூல் 1729 - ஆம் ஆண்டுக்கு முன் இயற்றப்பட்டது. இந்நூல் அவருடைய அரிய முயற்சிக்கு நல்ல எடுத்துக்காட்டு. போர்ச்சுக்கல்லின் புனித குட்டேரியா (St.Guiteria) பற்றி அவர் வரைந்த நீண்ட கவிதை மக்களால் அதிகம் அறியப்படவில்லை. **வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம்** என்ற நூற்கள் கிறித்தவ சமயப் போதகருக்காக இயற்றப்பட்டவை. குறளின் இரு பகுதிகளை லத்தீன் மொழியில் பெயர்த்தார். மேனாட்டு அகரமுதலி கலைக்களஞ்சிய முறையில் அவர் வரைந்த பொதுத் தமிழ் இலக்கணம் அதுகாறும் இயற்றப்பட்ட நூற்களுள் சிறப்பானது. அவர் போர்ச்சுக்கீசிய—தமிழ்—லத்தீன் அகரமுதலி ஒன்றையும் தமிழ், இலத்தீன் அகரமுதலி ஒன்றையும் இயற்றினார். " தமிழ் இலக்கிய உலகில் அவரைப் போன்று முதன்மையான, அறிவுள்ள, விதவிதமான, ஏராளமான நூற்களை இயற்றிய மற்றொருவரைக் காணலரிது."

வீரமாமுனிவருக்கடுத்தபடி தமிழ் வானில் ஒளிவீசியவர் **பார்த்தொலோமியோ சீகன்பால்க்** ஆவார். இவர் ஜெர்மனியில் புல்ஸ்னிட்ஸ் என்ற இடத்தில் பிறந்தார். இந்தியாவிற்கு ஜெர்மானிய டானிய—புரோட்டஸ்தானிய லூதரைன் சமயப் போதகராக வந்தார். அவர் 1706இல் தரங்கம்பாடியை வந்தடைந்தார். தம் சமயக் கொள்கைகளை இம்மக்களிடையே பரப்பத் தமிழ் கற்றார். தமிழில் இலக்கணத்தைக் கற்றுத் தேறினார். போதிய அறிவு கிடைத்தபின் அவர் ஜெர்மன் மொழி நூற்களைத் தமிழிலும், தமிழ் மொழி நூற்களை ஜெர்மானிய மொழியிலும் மொழி பெயர்த்தார். அவர் தம் (மலபார்) தமிழ் அகராதியை இந்நாட்டார் சொற்களையும், விளக்கத்தையும் குறிப்பது போல் தொடங்கினார். ஏறக்குறைய ஈராண்டுகளுக்குள் 20,000 சொற்களையும், விளக்கங் களையும் சேகரித்தார். அதில் முதல் பகுதி தமிழிலும், இரண்டாம் பகுதி உச்சரிப்புகளுடன் கூடிய ரோமானிய முறையிலும், மூன்றாம் பகுதி ஜெர்மன் மொழியில் அதன் பொருளைத் தருவதாயும் அமைந்திருந்தன. நான்காண்டுகளுக்குள் தம் அகராதி ஏறக்குறைய 40,000 சொற்களையும், விளக்கங்களையும் பெற்றிருந்தது. அது தமிழ் அகர முதலி முறையில் அமைந்திருந்தது. பின்னர் ஏறக்குறைய 17,000 தமிழ்ச் சொற்களைக் கொண்ட கவிதை அகராதியைத் தொடங்கினார். அதன் அகர வரிசைத் தொகுக்கப்பட்ட அட்டவணையை ஜெர்மன் மொழியில் ஆக்கினார். பழைய ஏற்பாட்டை மொழி பெயர்க்கவும் தொடங்கினார். அவர் 1719- இல் இறந்தபடியால் அது முற்றுப் பெற இயலாத நிலையில் நின்று விட்டது.

ஜெர்மன் பாதிரியார் **ஜான் பிலிப் பெபிரிஷியஸ்** (John Philiph Fabricius) டானிய திருச்சபை மையமான தரங்கம்பாடிக்கு வந்தார்; பின் ஆங்கிலேய திருச்சபைப் பணியில் அமர்ந்தார். பின் அவர் மலபார்— ஆங்கில அகராதியைத் தொகுத்தார்; **சத்திய வேத விளக்கம்** என்ற நூலை வரைந்தார்; கிரேக்க மொழியிலிருந்து பழைய ஏற்பாட்டைத் தமி ழில் மொழி பெயர்த்தார். கிரேக்க மொழியிலிருந்து புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

சுவாட்ஸ் (Fr. Shwartz) பாதிரியாரும் ஜெர்மானியர். அவர் 1750- இல் தரங்கம்பாடிக்கு வந்தார். அவர் தரங்கம்பாடி, சென்னை, திருச்சி, தஞ்சை சங்கங்களில் பணியாற்றினார். தமிழில் வல்லமை வாய்ந்த அவர் இசைப் பாடல்கள் இயற்றினார்.

அவர் தஞ்சை மன்னன் சரபோஜியின் ஆசான் ஆவார். சரபோஜி சேக்ஸ்பியரின் நாடகங்களை மனப்பாடம் செய்ய **சுவாட்ஸ்** பெரிதும் உதவினார். அவருடைய ஆலோசனையின் பேரில் தஞ்சையில் சிறந்ததோர் நூல்நிலையத்தை சரபோஜி நிறுவினார்.

பிரான்ஸிஸ் வைட் எல்லிஸ் (Francis Whyte Ellis) ஒரு ஆங்கிலேயர். இவர் சென்னையின் நிர்வாகத் துறை ஊழியராக 1796- இல் வந்தார். அவர் வடமொழியை ஆய்ந்தறிந்தார்; திராவிட மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். அவர் தமிழில் உரைநடை நூல் ஒன்று எழுதியதாக அறிகிறோம். அவருடைய சிறந்த படைப்பு, தமிழுக்கு அவர் ஆற்றிய பணி திருக்குறள் பற்றிய உரை ஆகும்.

18- ஆம் நூற்றாண்டு இறுதியில் இந்தியா வந்த பிறிதொரு பாதிரியார் J.P. ராட்லர்(Rottler) ஆவார். அவர் சென்னைச் சங்கத்தில் பணியாற்றினார். பெபிரீஷியஸ் தொடங்கிய தமிழ் — ஆங்கில அகராதியைத் தொடர்ந்து எழுதலானார். மேலும் அவர் தமிழ் — ஆங்கில வழிப்பாட்டு நூலைப் (English Prayer Book) மொழி பெயர்த்தார்.

18- ஆம் நூற்றாண்டைய மேனாட்டாரின் தமிழ்ப்பணி 19- ஆம் நூற்றாண்டிலும் தொடரப்பட்டது. இப்பணியும் முந்திய நூற்றாண்டுப் பணியினை ஒத்திருந்தது. இலக்கண, இலக்கிய, உரைநடை, அகராதித் தமிழ் வளம் பெற்றது. இந்நூற்றாண்டில் **வின்ஸ்லோ** (Winslow) தமிழில் அகராதி வரைந்தார். **இராபர்ட்கால்ட்வெல்** திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை வரைந்தார். இந்நூல் தமிழ் மொழியின் ஏற்றத்தை உலகறியச் செய்தது. தமிழில் மொழியியல் ஆராய்ச்சிக்கு வழி வகுத்தது. ஒப்பிலக்கண ஆராய்ச்சி இன்று பல்கலைக் கழகங்களில் பின்பற்றப்பட்டு வருகிறதென்றால் கால்ட்வெல்லின் மேற்கூறிய நூலே காரணம் என்றால் அது மிகையாகாது. அவர் மேலும் திருநெல்வேலி வரலாற்றையும் வரைந்தார். தமிழ் நூற்களைப் பிறநூற்களில் மொழி பெயர்த்து அழியாப் புகழ் பெற்றார் **ஜி.யு. போப்.** அவர் **குறள், நாலடியார், திருவாசகம்** போன்ற நூற்களை மொழிபெயர்த்தார். மொழியியல், ஒலியியல், மொழி நூல் ஆராய்ச்சி மேனாட்டாரால் பன்மடங்கு பெருகியது.

அச்சுப் பொறி: 16- ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய சமயப் பாதிரியார்கள் முதன் முதலில் அச்சுப் பொறியை தூத்துக்குடிக்கடுத்துள்ள புன்னக்காயலில் நிறுவியதாக அறிகிறோம். டானிய ஜெர்மன் புரோட்டஸ்தானிய பாதிரியார்கள் பொறையாற்றில் அச்சுப் பொறியை அமைத்ததாகவும் அறிகிறோம். தரங்கம்பாடிச் சங்கத்தைச் சேர்ந்த சீகன்பால்க் தமிழில் நூற்களை அச்சிட்டதாகவும் அறிகிறோம். தூத்துக்குடியில் இப்பொறியைப் பயன்படுத்தி முதல் நூலை ஹென்ரி ஹென்ரிக்கஸ் (Henrique Henriques) வெளியிட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது. இந்தியாவில், தமிழகத்தில் முதன் முதலில் தமிழ் நூற்களை அச்சிட்டு வெளியிட்டோர் டானியச் சங்கத்தார் என்று கொள்ளலாம். பிற மொழிகளில் பெயர்க்கப்பட்ட பல தமிழ் நூற்கள் குறைந்த விலையில் அச்சிடப்பட்டன. தமிழகத்தில் குறிப்பிட்ட இனத்தாருடைய பிறப்புரிமையாக இருந்த அறிவு, கல்வி மற்ற இனத்தாருக்கும் கிட்டும் வாய்ப்பு இதனால் ஏற்பட்டது.

நூற்கள் வெளியீடு: 19- ஆம் நூற்றாண்டில் தமிழறிஞர் பலர் பல பழங்கால நூற்களை சீரிய கவனத்துடன் பதிப்பிக்கத் தொடங்கினர். **பெரிய புராணம், திருக்குறள், சேதுபுராணம்,** மற்றும் பல நூல்களை இலங்கையின் ஆறுமுக நாவலர் பதிப்பித்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரிகளில் ஒருவரான C.W. தாமோதரம் பிள்ளை **கலித்தொகை, சூளாமணி, தொல்காப்பியம்** போன்ற நூல்களைப் பதிப்பித்தார். **நற்றிணை** குறிப்புக்களுடன், பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் (1862 -1914) அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. நச்சினார்க்கினியரின் உரையுடன் **கலித் தொகையை** மூன்று பகுதிகளில் E.V. அனந்தராம அய்யர் பதிப்பித்தார். பரஞ்சோதியின் **திருவிளையாடல் புராணத்துக்கு** N.M. வேங்கடசாமி நாட்டார் உரை வரைந்தார். கரந்தை வெங்கடாசலம் பிள்ளை துணையுடன் **அகநானூற்றைத்** தொகுத்து உரை எழுதினார். **நாடகவியல்** என்ற நூலை யாத்த சூரிய நாராயண சாஸ்திரிகள் **கலிங்கத்துப் பரணியைத்** தொகுத்தார். காவல் துறையில் பணியாற்றி வந்த S. பவணந்தம் பிள்ளைகள் **தொல்காப்பியம், யாப்பருங்கலம்** என்ற நூற்களைப் பதிப்பித்தார். 'கப்பலோட்டிய தமிழன்' என்று போற்றப்பட்ட வ.உ. சிதம்பரம் பிள்ளை பல நூற்களைத் தமிழில் எழுதினார். இளம்பூரணர் உரையுடன் **தொல்காப்பியத்தைப்** பதிப்பித்தார். இருபதாம் நூற்றாண்டின் சிறந்த அறிஞர்களுள் ஒருவராகிய நாவலர் சோமசுந்தர பாரதியார் இயற்றிய நூற்களில் **சேரனின் தாய வழக்கு, பட்டினப் பாலைத் தலைவன் திருமாவளவனே** என்ற நூற்கள் குறிப்பிடத்தக்கவை. அவர் **தொல்காப்பியத்தைத்** தொகுத்துப் பதிப்பித்தார்

19- ஆம் நூற்றாண்டின் சிறந்த தமிழ் அறிஞராகப் போற்றப்படுபவர் திருசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. இலக்கியத்தில் தலபுராணப் பரம்பரையைச் சேர்ந்தவர். பழங்கால நூற்கள் பல சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டன. இவ்வரிய பணியினைச் செய்தவர் "தமிழ்த் தாத்தா" என்று பலராலும் போற்றப்படும் பண்டாரகர் **உ.வே. சாமிநாதய்யர்** அவர்கள். பழங்காலத்து பல தமிழ் இலக்கியங்களை பதிப்பித்தது மட்டுமல்லாது அவர் தம் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் பற்றி ஒரு வாழ்க்கைச் சரிதமும் வரைந்துள்ளார்.

புதினங்கள்: 19- ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்ததே தமிழில் புதின (novel) எழுத்து. சீர்காழி, மாயவரம் என்ற ஊர்களில் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய கிறிஸ்தவராகிய வேதநாயகம்பிள்ளை இம்முறையை முதலில் தமிழில் கொண்டு வந்தார்கள். அவர் அவ்வப்போது பல இசைப்பாக்களையும், கவிதைகளையும் படைத்தார். அவருடைய சிறப்புக்கு எடுத்துக்காட்டாய் அமைந்தது **பிரதாப முதலியார் சரித்திரம்.** இது தமிழ் மொழியின் முதல் புதினம் என்று கருதப்படுகிறது. இந்நூலில் பல இடங்களில் சாங்கோ பான்ஸாவின் நிழலைக் காணலாம். அந் நூற்றாண்டைச் சேர்ந்த பிறிதொரு சிறந்த புதினப்படைப்பாளரே **B.R. ராஜம்** அய்யரவர்கள். அவர் மதுரை மாவட்ட வத்தலக் குண்டைச் சேர்ந்தவர். அவர் **கமலாம்பாள் சரித்திரம்** என்ற நூலை வரைந்தார். சுவாமி விவேகானந்தருக்காக அவர் பதிப்பித்த நூல் **பிரபுத்த பாரதியாகும்**. அவருடைய புதினம் அக்காலத் தமிழ் சமுதாயத்தைப் படம் பிடிக்கிறது. பண்டிதர் நடேச சாஸ்திரிகள் பல புதினங்களை வரைந்துள்ளார். **திக்கற்ற இரு குழந்தைகள், தீனதயாளு, துப்பறியும் தவணம்** என்பன அவருடைய படைப்புக்கள். மூன்றாவது நூல் ஒரு தனி நபர் துப்பறியும் விவரங்களைக் கொண்டது. தம் கதையம்சங்களையும், இலக்கிய நடையையும் கோணன் டாயில் என்பவரின் படைப்புகளிலிருந்து பெற்றுக் கொண்டார்.

நாடகம்: 19- ஆம் நூற்றாண்டின் இறுதியை ஒட்டித் தமிழில் நாடக இலக்கியவளர்ச்சி ஏற்பட்டது. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இத்திருப்பத்தைத் தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்தினார். அவர் தத்துவ ஆசிரியராய் திருவனந்தபுரத்தில் பணியாற்றி வந்ததால், வரலாற்றறிவும், தமிழ் இலக்கியப்பற்றும் மிக்கவர். இங்கிலாந்தின் எலிசபெத் கால எழுத்தாளர் வழி நின்று ஆசிரியப்பாவில் **மனோன்மணியம்** என்ற நாடகத்தை வரைந்தார், அவர் லிட்டனின் The Secret Path என்ற நூலைப் பின்பற்றினார். தமிழில் எழுதப்பட்ட முதல் நாடக இலக்கியம் இதுவே. அவரை 'தமிழ் நாடகத்தின் தந்தை' என்று கருதுகிறார்கள். இந்நாடகத்தின் இடையில் அமைந்துற்ற சிவகாமி சரிதை, ஆலிவர் கோல்ட் ஸ்மித் வரைந்த Vicar of Wakefield என்ற நூலில் வரும் The Hermit என்ற பகுதியினைத் தமிழில் ஆக்கியது போல் தோன்றியது.

தமிழில் முஸ்லீம் எழுத்தாளர்கள்: தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முஸ்லீம்களின் பங்கு பாராட்டுக்குரியது. **சீறாப்புராணம்** என்ற தமிழ்க்கவிதையை உமறுப்புலவர் படைத்தார். வள்ளல் சீதக்காதி அறிஞரை ஆதரித்தார். கவிமணி **உமர்காயத்தைத்** தமிழில் பெயர்த்தார். இன்றளவும் சற்றும் புகழ் குன்றாத நூற்களில் இதுவும் ஒன்று.

வரலாற்று நூற்கள்: மேனாட்டறிஞரின் வரலாற்றாராய்ச்சி நூற்களைப் பின்பற்றி தமிழிலும் வரலாற்று நூற்கள் இயற்றப்பட்டன. வி கனகசபை, மா. இராசமாணிக்கம், டி.வி. சதாசிவ பண்டாரத்தார், கே. பத்மனாபன், கா. அப்பாத்துரை, எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, சிவராஜபிள்ளை, சுவாமிக்கண்ணுப்பிள்ளை, எம். இராகவ அய்யங்கார், பி.டி. சீனிவாச அய்யங்கார், ஏ.கே. பரந்தாமன், நா. சஞ்சீவி, கே. ஏ..என். சாஸ்திரி, ஆகியோர் கடந்த, இந்நூற்றாண்டுகால சிறந்தவரலாற்றறிஞர்கள். இவ்வரலாற்றாளரின் அரிய படைப்புக்களால் வரலாற்றாராய்ச்சியும், வரலாற்றிலக்கியமும் சிறப்படையத் தொடங்கிற்று. சங்ககாலம் சீரிய முறையில் ஆராயப்பட்டது. பழங்காலக் கால அளவையும், சிறப்பினையும் அறுதியிட அவர்கள் புதுப்புது கோட்பாடுகளை வரலாற்றாராய்ச்சியில் புகுத்தினர்.

கிறித்தவ இலக்கியம்: முந்திய கிறித்தவப் பாதிரியாரின் தமிழ்ப் படைப்புகளை முன்னமே நாம் கண்டோம். இசையுடன் அமைந்த பாடல்களை (kirtis) திருநெல்வேலி யைச் சேர்ந்த வேதநாயக சாஸ்திரியார் வரைந்தார். **இரட்சண்யயாத்திரிகம்** என்ற சிறப்புக் கவிதையை கிருட்டிண பிள்ளை யாத்தார். இந்நூல் ஜான் பனியனின் Pilgrims Progress என்ற நூலைத் தழுவி இயற்றப்பட்டதாகும். வி சுப்பிரமணிய முதலியார் மில்டனில் Paradise Lost என்ற நூலை **சொர்க்க நீக்கம்** என்ற பெயரில் மொழிபெயர்த்தார்.

நூல் வடிவிலும், பேச்சு வடிவிலும் தமிழ் மொழி வளர்ந்தது. பொது மேடைகளில் தமிழ் மொழி விரித்துரைக்கப்பட்டது. **கலாச்சேபம்** (Kala shepams) என்ற இன்னிசை சொற்பொழிவுகள் தமிழில் நிகழ்ந்து வந்தன. சிதம்பர பாகவதர், முத்தையா பாகவதர், சரஸ்வதி பாய் போன்றோர் இக்கலையை வளர்த்தனர். மேடைச் சொற்பொழிவுகளும், சொற் போர்களும் நிகழ்ந்தன. பாஸ்கர சேதுபதி, பாண்டித்துரைத் தேவர், ஞானியார் அடிகள் போன்றோர் பெயர் பெற்ற சொற்பொழிவாளர்கள். கத்தோலிக்கத் திருச்சபை களிலும், புரோட்டஸ்தானிய திருச்சபைகளிலும் தமிழில் இசைப்பாக்கள் பாடப்பட்டன.

எனவே 18, 19- ஆம் நூற்றாண்டுகளில் மேனாட்டாரின் தமிழ்ப் பணி மேலோங்கி நின்றது. அவர்களுடைய படைப்புக்கள் சமுதாய அடிப்படையில் உடனே பலன்களைத் தந்தன. உரை நடையின் உற்பத்திக்காலமாக இக்காலங்கள் இருந்தன. உரை நடை மேனாட்டுப் பண்பாட்டின் விளைவால் ஏற்பட்டது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியம்

இந்நூற்றாண்டில் தமிழ் இலக்கிய சீரமைப்பு ஏற்பட்டது. சீரமைப்பை விட புனரமைப்பு பொருத்தமான சொல். 'தனித் தமிழ் இயக்கம்' (Pure Tamil Movement), 'செய்தித் தமிழ் இயக்கம்' (Journalist Tamil Movement), 'தமிழ் இசை இயக்கம்' (Tamil Music Movement) என்பன இந்நூற்றாண்டு எழுந்த புனரமைப்பு இயக்கங்களே. வடமொழிக் கலப்பு நல்லதா, கலப்பற்ற தமிழ் நல்லதா என்பன போன்ற வினாக்கள் இக்காலத்து எழுப்பப்பட்டு, தமிழ் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. தமிழில் அனைத்துத் துறைகளும் மறு பரிசீலனை செய்யப்பட்டன. அண்மையில் தமிழ் மொழிச் சீர்திருத்தம், பெரியாரின் கோட்பாட்டடிப்படையில் கொண்டு வரப்பட்டது. நீதித்துறையில் தமிழ் ஏற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எத் திசையிலும் தமிழ் மணம் கமழ வேண்டுமென்ற, முன்னோரின் விருப்பு சிறிதளவாயினும் நனவாகிவருகிறது.

கவிஞர்கள்: இந்நூற்றாண்டின் சிறப்பு என்னவெனில் உரைநடை வளர்ச்சியாகும். கவிதையுலகம் சற்று பின்னுக்குத் தள்ளப்பட்டது. 'சுவாமிகள்' 'வள்ளலார்' என்றெல்லாம் அழைக்கப்பட்ட இராமலிங்கர் **'திரு அருட்பா'** படைத்தார். கடந்த இந்நூற்றாண்டுகளில் வாழ்ந்த சுப்ரமணிய பாரதி 'தேசியக் கவி' என்று போற்றப்படுகிறார். அவர் இயற்றிய பாக்களில் சுயமரியாதை, தேசியம் போன்ற கருத்துக்கள் தலை தூக்கி நிற்கின்றன. அவர் வடமொழிக் கலப்புடன் பாக்கள் இயற்றினாலும், அவற்றில் பொருளும் உயிரும் இருந்தன. அவர் இயற்றிய **குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, தேசீய கீதங்கள்** போன்ற கவிதைகளும், **பாரதி வசனம், பாரதி கட்டுரைகள், பாரதி தமிழ்** போன்ற உரைநடைகளும் நாட்டுப் பற்றுடன் இயற்றப்பட்டவை.

பாரதியாரால் பெரிதும் கவரப்பட்டவர் பாரதிதாசன். அவரது **அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு** என்ற கவிதைகள் அழகும் பொலிவும் உடையவை.

'கவிமணி' என்று பலராலும் போற்றப்பட்ட தேசிய விநாயகம்பிள்ளையவர்கள் உட்கருத்துச் செறிவுடன் பாலகர்க்குப் பாட்டியற்றுவதில் சிறந்தவர். எட்வின் ஆர்னால்டு இயற்றிய Light of Asia என்ற நூலை **ஆசிய ஜோதி** என்று தமிழில் மொழி பெயர்த்தார். **உமர்காயத்தை** தமிழில் தந்தார். மேலும் சேரரின் மக்கள் தாயம் பற்றியும், கல்வெட்டுக்கள் பற்றியும் ஆராய்ச்சி நூற்கள் வரைந்துள்ளார். தேசிய நோக்குடன் கவிதைகள் படைத்த மற்றொரு கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. அவருடைய "கத்தியின்றி இரத்த மின்றி யுத்தமொன்று வருகுது' என்ற தேசியக் கவிதைகள் பெயர் பெற்றவை. இவர் அரசுச் கவியாயிருந்தார். இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பெரும் புகழ் பெற்ற கவிஞர்கள் சுத்தானந்த பாரதி, எஸ்.டி. சுந்தரம், கவிஞர் 'சுரதா',கண்ணதாசன் (தமிழ் அரசுக் கவி),

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆவர். திரையுலகக் கவிதைகள் மூலம் கண்ணதாசனும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் தமிழர் உள்ளங்களில் ஆழப் பதிந்துள்ளனர். பட்டுக்கோட்டையின் பாடல்களில் கருத்துச் செறிவும், பொதுவுடைமைக் கோட்பாடும் தலை தூக்கி நிற்கின்றன. கண்ணதாசன் கைபட்டால் எல்லாம் கவிதை என்பது போல், தத்துவ, காதல் நோக்கில் இவர் கவிதை புனைய வல்லவர்.

இந்நூற்றாண்டில் தமிழ் மொழி வளர்ச்சிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சங்கங்கள் பல. 1888- இல் தோன்றிய தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, 1901- இல் உருவாகிய நான்காம் மதுரைத் தமிழ்ச் சங்கம், 1911 இல் தோன்றிய கரந்தைத் தமிழ்ச் சங்கம் இவற்றில் சிறப்பானவை. பாண்டித்துரைத்தேவரின் மதுரைச் சங்கமும், உமா மகேஸ்வரன் பிள்ளையின் கரந்தைச் சங்கமும் தமிழ்ப் பணியாற்றுவதே கடமையாகக் கொண்டவை. திருவாவடுதுறை, தருமபுரம் ஆதீனங்களும், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் தமிழ்ப்பணியாற்றுவதில் ஈடிணையற்று விளங்குகின்றன.

நாடகம்: இக்காலத்தில் பல பள்ளுப் பாடல்களும், தூதுக்களும் எழுந்தன. குற்றாலக் குறவஞ்சி, பள்ளுக்கள், நொண்டி நாடகங்கள் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன.

மறைமலையடிகள் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய பணி ஈடிணையற்றது. வட மொழியிலிருந்து அவர் **சாகுந்தலத்தைத்** தமிழில் பெயர்த்தார். இவருடைய தமிழ்ப் படைப்புகள் பல. அவற்றில் தூய தமிழ் வாடை வீசும்; சம்பந்த முதவியார் ஏறக்குறைய எண்பது நாடக நூற்கள் இயற்றியுள்ளார். **மதன் அகசூளாமணி** என்ற நூலை சுவாமி விபுலானந்தரும், **நாடகவியலை** சூரிய நாராயண சாஸ்திரிகளும் இயற்றினர். தமிழ் நாடக உலகில் பெரும் புகழ் தேடியவர் சங்கரதாச சுவாமிகள். அவருடைய சிலை தமுக்கம் மைதானத்திலுள்ளது. பிறிதொரு சிறந்த நாடகாசிரியர் விஸ்வநாததாஸ் ஆவார். இவருடைய நாடகங்கள் குழு நாடகங்கள். இவற்றில் நாட்டியமும் விரவி வந்தன.

'நவாப்' இராஜமாணிக்கம், T.K.S. சகோதரர்கள், S.V. சகஸ்ரநாமம், இலங்கேஸ்வரன், R. மனோகரன் ஆகியோர் தற்காலத் தமிழ் நாடக உலகில் ஒளி வீசியவராவர். T.K. சண்முகம் இயற்றிய **எனது நாடக வாழ்க்கை** இக்கால நாடக இயல் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. பாகவதர் என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட எம்.கே. தியாகராசர் பாடி நடிப்பதில் வல்லவர். பரத நாட்டிய சீரமைப்புக்கு எல். கிருஷ்ண அய்யரின் பங்கு போற்றுதற்குரியது. பரதநாட்டியக் கலையை ருக்மணி தேவி, கல்யாணி சகோதரிகள், ராஜலட்சுமி ஜீவரத்தினம், பால சரஸ்வதி, வரலட்சுமி, பானுமதி, சுப்புலட்சமி உலகறியச் செய்தனர். எஸ்.ஜி. கிட்டப்பா, பி.யு. சின்னப்பா, என்.எஸ். கிருஷ்ணன், கே.பி. சுந்தராம்பாள், எஸ்.பி. ரங்காராவ், பாலையா, டி.ஆர். மகாலிங்கம், சாண்டோ சின்னப்பா தேவர் ஆகியோரின் திரைப்படப் பணி போற்றுதற்குரியது.

இசைப்பாக்கள்

இக்காலத்தில் பல கீர்த்தனைகள் இயற்றப்பட்டன. இசைப்பாக்கள் இயற்றுவதில் கோபால கிருஷ்ண பாரதி கைதேர்ந்தவர். அவரது நந்தனார் கவிதைகள் மிகச் சிறந்தவை.

வேதநாயகம் பிள்ளை இயற்றிய **சைவசமய சன்மார்க்கக் கீர்த்தனைகள்** சைவ சமய வளர்ச்சிக்கு அறநெறி நோக்கில் இயற்றப்பட்ட இலக்கியம். பழங்கால தமிழிசைபற்றி ஆபிரகாம் பண்டிதரும், சுவாமி விபுலானந்தரும் ஆராய்ச்சி நூற்கள் வெளியிட்டனர். இவை தற்கால இலக்கிய முறைகளை மாற்றியமைக்கவோ, பழங்கால இசைமுறைகளை புதுப்பிக்கவோ அவ்வளவு பயன்படவில்லை. டி.கே. பட்டம்மாள், சுப்புலட்சுமி ஆகியோர் கருநாடக இசையில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தினர். டி.ஆர். மகாலிங்கம், கோவிந்தராஜன், சௌந்தரராஜன், பாலமுரளி கிருஷ்ணா, தியாகராஜன், சுந்தராம்பாள், வீணை சிட்டிபாபு ஆகியோரின் கருநாடக சங்கீதங்கள் கேட்போர் உள்ளங்களை நெகிழவைக்கும் தன்மையன.

உரைநடை இலக்கியம்:– வீராசாமிச் செட்டியார் பழங்கால பரம்பரையை அடிப்படையாகக் கொண்டு **வினோதரசமஞ்சரி** என்ற நூலை இயற்றினார். தம் பெயரை பரிதிமார் கலைஞர் என்று மாற்றிக் கொண்ட சூரிய நாராயண சாஸ்திரி சுத்த தமிழியக்கத்திற்கு வழி செய்தார். மறைமலையடிகள் தனித் தமிழியக்கத்தை முன்னிறுத்தி பல நூற்கள் வரைந்தார். **முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை** என்ற நூற்களுக்கு ஆங்கில முறைப்படி ஆராய்ச்சி மதிப்பீடு வரைந்தார். மேனாட்டாரின் இலக்கிய ஆராய்ச்சி, தொகுப்பு, பதிப்பு முறைகளைப் பின்பற்றி தமிழ் மொழிக்குப் பெரும் தொண்டாற்றியவர் சாமிநாதய்யர். திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் காந்திய கோட்பாடுகளில் சமுதாய குறைபாடுகளைக் கண்டித்து பெண்ணின் சம உரிமைக்காக பல நூற்களையும், சொற்பொழிவுகளையும் இயற்றினார். **பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம், சுயவாழ்க்கைச் சரிதம்** போன்றவை அவற்றில் சில. ஏறக்குறைய 175- க்கு மேல் நூற்கள் இயற்றி தமிழ் மொழிக்கு அணிசெய்தவர் பேரறிஞர் தண்டபாணி தேசிகர் ஆவார். அவருடைய திருக்குறள் ஆராய்ச்சியும், திருமூலர் ஆராய்ச்சியும், நக்கீரர் ஆராய்ச்சியும், **ஆடல்வல்லான்** என்ற நூலும் பலராலும் போற்றப்படுவவை. டி.கே.சி. என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட சிதம்பரநாத முதலியார் கம்பனை விரித்துரைப்பதில் வல்லவர். பலரும் போற்றும் புராண நிலையிலிருந்து கம்பனின் இலக்கியப் படைப்பை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் இவரே. இந்நுற்றாண்டைய தமிழ் இலக்கண ஆராய்ச்சியில் வெள்ளை வாரணரும், தமிழ் நாட்டு வரலாற்றுத் தொடர்பான தொல்பொருள் ஆய்வில் கரந்தை கோவிந்தராஜனும், சைவ சித்தாந்த விளக்கத்தில் வஜ்ரவேல் முதலியாரும் சிறப்பானோர். தமிழ் இலக்கிய நடைக்கும், செறிவுக்கும் ரா.பி. சேதுப்பிள்ளையின் படைப்புக்கள் ஒப்பற்றவை. உயிரோட்டமுள்ள தமிழின்பம், ஊரும் பேரும் என்பன அவர் படைப்புக்கள். சென்னைப் பல்கலைக் கழக தமிழ் பேராசிரியராக இருந்து செய்த ஆராய்ச்சிப் பணிகள் போற்றுதற்குரியவை, தமிழில் **கலைக்களஞ்சியம்** இயற்றிப் பெயர் பெற்றவர் எஸ். வையாபுரிப்பிள்ளை. அவரது சங்ககால ஆராய்ச்சிகள், சங்க இலக்கிய பதிப்புக்கள் ஆராய்ச்சி மாணவருக்குப் பெரிதும் பயன்படுவன. பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வேங்கடசாமி நாட்டார், மயிலை சீனி வெங்கடசாமி, பி.எல். சாமி. பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, பேராசிரியர் மா. இராசமாணிக்கம், பேராசிரியர் இலக்குமணன்

ஆகியோரின் படைப்புக்கள் தமிழ் மொழிக்குச் சூட்டிய உரைநடை மாலைகள். சீனி வேங்கடசாமி, பி.எல். சாமி, இராஜமாணிக்கம் ஆகியோர் வரலாற்று நயத்துடன் பல ஆராய்ச்சி நூற்களை வெளியிட்டனர். சீனி வேங்கடசாமியின் **தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், பழங்காலத் தமிழர் வணிகம், மறைந்துபோன தமிழர் நூல்கள்** அனைத்தும் ஆராய்ச்சி அடிப்படையிலானவை. இராசமாணிக்கனாரின் **பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சைவசமய வளர்ச்சி** போன்ற நூற்கள் ஆராய்ச்சி நூற்களே. கா. அப்பாத்துரையின் **தமிழகப் போர்க்களங்கள், குமரிக் கண்டம்** என்பன தமிழுல கறிந்தவை. எம். இராகவையங்கார் இயற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆர். இராகவையங்கார் எழுதிய இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழ்மொழி வரலாற்று ஆராய்ச்சி முன்னோடிகள். **பகவத்கீதை, இராமாயணம்** போன்ற நூற்களை இராஜாஜி தமிழில் ஆக்கினார். பல அரிய சமய நூற்களை விரித்துரைத்து, உரைகளை இயற்றியவர் சுவாமி சித்பவானந்தர். உளவுக் கதைகள் வரைவதில் தமிழ்வாணன் பெயர் பெற்றவர். செட்டியாரின் பயண நூற்களும் சிறுகதைகளும் அத்துறையில் ஒப்பற்றவை. சோமலே, சுந்தரவடிவேலு, மணியன் ஆகியோரும் இத்துறையில் பெயர் பெற்றவர்கள்.

புதினப் படைப்பாளர்கள்: இந்நூற்றாண்டின் தொடக்க காலங்களில் புதின எழுத்தாளராகப் பெயர் பெற்றவர் 'கல்கி' என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட கிருட்ணமூர்த்தி ஆவார். **அலையோசை, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம்** என்பன அவரியற்றிய புதினங்களில் சிறப்பானவை. புதினப் படைப்புகளிலும், இலக்கண உரைகளிலும், இலக்கியப் படைப்புகளிலும், உரைநடைப் படைப்புகளிலும் மு. வரதராசனுக்கு நிகர் அவரே. **கள்ளோ காவியமோ, கரித் துண்டு, அகல் விளக்கு** போன்ற நாவல்களும் கடிதத் தொகுப்புகளும் அவருக்கு தமிழ் உலகில் அழியாப் புகழைத் தேடித் தந்தன. பன்மொழிப் புலவராகிய பண்டாரகர் தெ.பொ.மீ. மொழியாராய்ச்சியில் வல்லவர். தத்துவ தர்க்க முறையில் பல நூற்கள் இயற்றியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையை உருவாக்கிய பெருமைக்குரியவர். இவ்வறிஞர் சமகாலத்தவரால் தமிழக சாக்ரட்டீஸ் என்று போற்றப்பட்டார். ஞானபீடப் பரிசுபெற்ற அகிலன் **சித்திரப்பாவை** மூலம் தமிழுலகப் புதினங்களில் புரட்சி ஏற்படுத்தினார். சாண்டில்யன், கி.வா. ஜகந்நாதன், சி.என். அண்ணாத்துரை, மு. கருணாநிதி, பி.டி. சாமி, நா. பார்த்தசாரதி, ஜெகசிற்பியன், குறும்பூர் குப்புசாமி, கோ.வி.மணிசேகரன், கவிஞர் சுரதா, லட்சுமி, சிவசங்கரி, அமுதா கணேசன், ஜெயகாந்தன் ஆகியோரின் படைப்புகள் நாவலுலகில் பெரும் சாதனைகள்.

சிறுகதைகள்: தமிழில் சிறுகதை எழுதும் செயலைக் கொண்டு வந்தவர் வி.வி. எஸ். அய்யர் ஆவார். அவர் எழுதிய சிறுகதைகளில் சில அவருடைய உள்ளத்துத் தோன்றியவை; சில பிறரிடமிருந்து எடுத்துக் கையாளப்பட்டவை. இக்கதைகளின் தொகுப்பே மங்கையர்க்கரசியின் காதல். வ.ரா. என்று சிறுகதையுலகுக்கு அறிமுகமான வ. ராமசுவாமியின் தலைமையில் **மணிக்கொடி** என்ற இதழ் தொடங்கப்பட்டது. இது நீண்ட நாள் நீடிக்காவிடினும் அதன் எழுத்தாளர்கள் அதன் மூலம் தத்தமக்குத் தனியிடங்களைத் தட்டிக் கொண்டனர். வ.ரா.வின் கதை நயம் பாராட்டுதற்குரியது. அவ்விதழுக்குக் கதையெழுதி வந்தவர்களுள் ஒருவர் புதுமைப் பித்தன். தமிழ் மொழியில்

அவருடைய படைப்புக்கள் ஈடிணையற்றவை. அவர் விருப்பும் வெறுப்பும் இன்றி அன்றையக் குறைகளைப் படம் பிடித்தார். இராஜாஜியின் சிறுகதைகளும் பொருள் நயம் மிக்கவை. கிருபானந்தவாரியாரின் உயர்வு நவிர்ச்சி, வஞ்சப் புகழ்ச்சிக் கதைகள், சொற்பொழிவுகள், திரவியத்தின் இலக்கியப் படைப்புக்கள், பெரியார், அண்ணாத்துரை, கருணாநிதி ஆகியோரின் சிறுகதைச் சொற்பொழிவுகளும், கதைகளும் தமிழ் மக்கள் உள்ளங்களில் எழுச்சியை ஏற்படுத்தின.

தமிழ் இலக்கிய உலகில் பொதுவுடைமைக் கோட்பாடுகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் கதைகள் மூலம் மக்களிடையே பரப்பித் தமக்கென அழியாத இடத்தைத் தட்டிக் கொண்டவர் ஜெயகாந்தன். அவருடைய கதைகளில் உயிர் ஓட்டமும், வெளிப்படையான தாக்குதல்களும் இருந்தன. தொடக்கத்தில் சமுதாயக் குறைகளைத் தட்டிக் கேட்டு, குறைகளை அப்படியே சித்தரித்து வந்த ஜெயகாந்தன், இன்று தாம் கொண்ட குறிக்கோள்களைக் காற்றில் பறக்கவிட்டு கதையெழுதுவதுபோல் தோன்றுகிறது. காலம் செல்லச் செல்லவே அவருடைய இலக்கிய நடையும், சுவையும் ஏற்றம் பெற்றன. நேரு விருது பெற்ற இவர் (1980) ருஷ்யாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளார் எல்.எஸ்.ராமாமிர்தம். டி. ஜானகிராமன் இந்திய வானொலியின் மூலம் பல அரிய கருத்துக்களைப் பரப்பி வருகிறார். அவருடைய **நாலு வேலி நிலம்** மிகச் சிறப்பான படைப்பு.

புதுக்கவிதை: புதுக்கவிதை என்பது ஒரு புது இயக்கம். தமிழ்க் கவிதைத் துறையில் புதுவிதமான முறைகளைப் புகுத்தி, சில கவிஞர் கவிதைகள் வரைந்துள்ளனர். இப்புதுக்கவிதைகளின் கவிதைகள் 1962- இல் தொகுக்கப்பட்டு புதுக்குரல்கள் என்ற பெயரில் வெளிவந்துள்ளது. தம் கவிதைகளில் அரசியல் கருத்துக்களைச் சொரிந்து, புரட்சியுகப் படைப்புகளுக்கப்பாற்பட்ட கவிதைகளைப் படைத்தனர். இக்கவிதைகள் பழங்காலப் பாரம்பரிய இலக்கியத்தை எதிர்த்து எழுந்த உரைநடைக் கவிதைகளே. இந்நோக்கில் கவிதைகள் புனைய பல கருத்து வட்டங்கள் காரணமாயிருந்தன.

இன்றைய உரைநடை: உரைநடை இலக்கிய ஆராய்ச்சி ஓரியலாக இன்றும் சிறப்பெய்தவில்லை. உரைநடை இலக்கிய மதிப்பீட்டுக் கோட்பாடுகள் தோன்றாமையே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது. முதல்முதலில் இலக்கிய மதிப்பீட்டை உரை நடைத் துறையில் கண்டவர் டி.எம்.சி. ரகுநாதன் ஆவார். அவர் புதுமைப்பித்தனை மதிப்பிட்டார். இத்துறையில் சி.சு. செல்லப்பாவின் பங்கு மறுக்க முடியாதது. இவர் **எழுத்து** என்ற மதிப்பீட்டிதழையும், மற்றொரு சாரர் **குருச்சேத்திரம்** என்ற மதிப்பீட் டிதழையும் தொடங்கி இப்பணியை மும்முரப்படுத்தினர்.

செய்தித்தாள்களும் இதழ்களும்: அறிஞர் பெருமக்களின் அரசியல், சமய, சமுதாயச் சித்தாந்தங்கள், செய்தித் தாள்கள், இதழ்கள் மூலம் மக்களை எட்டின. பெரியார், இராஜாஜி, கிருபானந்த வாரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் கருத்துக்கள் தமிழ்ச் சமுதாயத்தில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தின. விடுதலை இயக்கத்தின் போது பாரதியார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை போன்றோர் இச்செய்தித் தாள்களையும்

இதழ்களையும் கருவிகளாகக் கொண்டு கருத்துக்களைப் பரப்பினர். **குடியரசு, சுதேச மித்திரன், தினமணி, தினமலர், தினத்தந்தி, மாலைமுரசு, முரசொலி, நவசக்தி** போன்ற நாள் இதழ்களும், மற்றும் பல கிழமை இதழ்களும், திங்கள் இதழ்களும், தமிழில் வெளிவருகின்றன. இவற்றால் நாட்டு நடப்புகளையும், இன்ன பிற செய்திகளையும் மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வகை இலக்கிய ஆராய்ச்சியாலும், மொழி வளர்ச்சியாலும், இதழ்கள் வெளியீட்டாலும், புதுக்கவிதைகளாலும் மக்களுக்கு என்ன பயன்? இக்கருத்துக்கள் மக்களை எட்டும் வாய்ப்பு எந்த அளவு இருக்கிறது? இவற்றைப் படிப்பதனால் மக்கள் வாழ்க்கை வளம் பெறுமா? என்ற பல வினாக்கள் பலருள்ளத்தில் எழுகின்றன. ஒரு நாட்டுப் பண்பாட்டுச் சின்னங்களே இவை. இவற்றைப் படிப்பதனால், எழுதுவதனால் சமுதாயம் மேலோங்கவும், சீர்கெடவும் வாய்ப்புண்டு. இவை மக்களை எட்டும் முறையில் புது முறைகளைக் கையாண்டால் இன்னும் அதிகம் பயன்தரக்கூடியனவாய் அமையும்.

பயிற்சி வினாக்கள்

1) தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்கான தூண்டுகோல்கள் யாவை?

2) 19-20 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதுக.

பாடம் – 28 கம்பெனி ஆட்சியின் போது நீதிபரிபாலனம் – தலசுயநிர்வாகம் – சமுதாயம் – வர்த்தகம் – செய்தித் தொடர்பு – போக்குவரத்து

சென்னை மாநிலத்தில் (தமிழகம் சென்னை மாநிலத்தின் அன்றைய பகுதிகளில் ஒன்றாயிருந்தது) நீதித்துறையின் வளர்ச்சி நான்கு குறிப்பிடத்தக்க கால கட்டங்களைக் கொண்டிருந்தது. முதல் நீதித்துறை வளர்ச்சிக் காலம் கி.பி. 1600 முதல் 1800 வரையும், இரண்டாவது 1801 முதல் 1862 வரையும், மூன்றாவது காலம் 1862 முதல் 1947 வரையிலும் கடைசியாக சுதந்திரத்திற்குப் பின்னும் என வகைப்படுத்தப்படுகின்றது. முதல் காலமான1600 முதல் 1800 வரையான காலம் உண்மையில் நீதித் துறையின் நேரடியான, ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக் காலமாகும். எனினும் இக்கால நீதித்துறை பரிபாலன முறையில் குறைகளில்லாமலில்லை. வாணிக வளர்ச்சி ஒன்றையே துவக்கத்தில் எண்ணியிருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, நீதித்துறையை நிர்வகிப்பதிலும் சென்னைக் குடியேற்றப் பிரச்சினையைப் போக்குவதிலும் பொறுப்பேற்றது. ஆனால், 1801- ஆம் ஆண்டு அடுத்த கால கட்டத்தின் துவக்கத்தில், கிழக்கிந்தியக் கம்பெனி, இந்தியாவில் அரசியல் ஆதிக்கம் பெற்றது. எனவே, கம்பெனி தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பினைப் பெற்றது. மூன்றாவது கால கட்டமானது சென்னை உயர்நீதிமன்றம் 1862 இல் துவக்கப்பட்டதைத் தொடர்ந்து செயல்படத்துவங்கியது. இந்தக் காலநிலையில் தான் ஆங்கில அரசே தனது பிரிட்டிஷ் இந்திய அரசை நிர்வகிக்கத் தொடங்கியிருந்தது. ஆங்கில நாடு உலகிலேயே கடற்படையில் சிறந்த, பொலிவுற்று விளங்கிய காலமும் இதுவேயாகும். அதன் ஆதிக்கமும், செல்வாக்கும் மிக உச்ச நிலையிலிருந்தபோதுதான் சென்னையில் உயர்நீதிமன்றம் (1862) ஏற்படுத்தப் பட்டது. எனவே இந்த மூன்றாவது காலக்கட்டத்தில் நெகிழ்ச்சியற்ற, ஒருங்கமைப்பற்ற ஒரு பேரரசு ஆதிக்க வெறியே செயல்பட்டது. 1947 - க்குப் பின் சுதந்திர இந்தியாவின் வளர்ச்சிக் காலம் துவங்கியது.

தொடக்க காலம் 1600–1800

1600-இல் முதலாம் எலிசபெத் அரசியாரால் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சாசனம் அக்கம்பெனிக்குக் குறிப்பிடத்தக்க சில அதிகாரங்களையும், சலுகைகளையும் கொடுத்திருந்தது. அவற்றில் ஒன்று தவறு செய்வோருக்குத் தண்டனை வழங்கும் உரிமையாகும். இவ்வுரிமையானது, அடுத்து கொடுக்கப்பட்ட, முதலாம் ஜேம்ஸின் 1609- ஆம் ஆண்டு சாசனத்தின் மூலமாகவும் உறுதிப்படுத்தப்பட்டது. 1640ஆம் ஆண்டு சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டை எழுப்பப்பட்ட பின்பு, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் ஆங்கில முகவருக்கும் (Agent) சென்னை குழுவுக்கும் கொடுக்கப்பட்டது. 1622- இல் முதலாம் ஜேம்ஸ் தனது மற்றொரு சாசனத்தை வெளியிட்டார். அதன்படி, கிழக்கிந்தியப் பகுதிகளில் சட்டத்திற்கு விரோத மான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆங்கிலேயரைத் திருத்துவதற்கும், நல்வழிப்

படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டது. சென்னையில் குடியேற்றம் ஏற்பட்ட உடனேயே நீதிமன்றம் ஒன்று செயல்படத் துவங்கியது. இந்நீதிமன்றம் சத்திரநீதிமற்ம் (Choultry Court) என்று அழைக்கப்பட்டது. இந்நீதிமன்றம் சிவில், கிரிமினல் விவகாரங்களில் சிறு வழக்குகளை விசாரணை செய்தது. ஆனால், சென்னையிலிருந்த குழுவும், ஏஜண்டும் முடிந்தவரை, நீதித்துறையை நிர்வகிப்பதைத் தவிர்க்க விரும்பினர். ஆனால் கம்பெனியின் அதிகாரிகள் தொடர்ந்து நீதித்துறைப் பணியையும், பொறுப்பையும் தவிர்க்கவில்லை. அவர்கள் சட்டத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படவேண்டிய கட்டாயத்திற் குள்ளானார்கள்.

1661- இல் இரண்டாம் சார்லஸால் கொடுக்கப்பட்ட சாசனப்படி ஆங்கில ஏஜண்ட் அல்லது ஆளுநர், அவர்தம் குழு ஆகியோருக்கு, ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் வாழும் (வெள்ளையர்கள், இந்தியர்கள் அனைவரும்) அனைவருக்கும் நீதி செலுத்தும் உரிமை கொடுக்கப்பட்டது. அவர்கள் ஆங்கில சட்டத்தின் அடிப்படையிலேயே தண்டனைகள் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதனைத் தொடர்ந்து சென்னையிலிருந்த சத்திர நீதிமன்றம் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அன்றைய சென்னை ஆளுநராயிருந்த ஸ்ட்ரென்ஸம்மாஸ்டர்(Streynsham master) இந்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையைக் கூட்டினார். நீதிபதிகள் அமர்ந்து வழக்குகளை விசாரணை செய்யுமாறு பணித்தார். ஆனால், விரைவிலேயே, சத்திரநீதிமன்றம் வளர்ந்து வரும் சென்னை நகரின் தேவைக்குப் போதவில்லை. எனவே ஸ்ட்ரென்ஸம் மாஸ்டர் சாதுரியமாக முதலாவது உயர் நீதிமன்றம் (Court of Judicature) ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்தார். இந்நீதி மன்றம் 1678- ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் துவங்கியது.

நீதித்துறையின் செயல் முறைகள், பெரும்பாலும் அதிகாரிகளின் அறிவாற்றலையும், சட்டநுணுக்கங்களையுமே பொறுத்திருந்தது. அதிகாரிகளோ திறமையற்றவராயும், சட்ட அறிவு குறைந்தவராகவுமிருந்த காரணத்தால் நீதித்துறை நிர்வாகத்தில் சீர்கேடுகள் அதிகமாயின. எனவே 1683- ஆம் ஆண்டு, இரண்டாம் சார்லஸ் மற்றொரு சாசனத்தை வெளியிட்டு நீதிமன்றங்களில் பணிபுரிவோருக்கான தகுதியை நிர்ணயித்தார். அதன்படி நியமிக்கப்படும் புதிய தலைமை அதிகாரி நீதிபதி— வழக்குறைஞர் (Judge-Advocate) என அழைக்கப்படலானார். சட்டப்படியான தகுதியுடன் இப்பதவியை வகித்த முதல் ஆங்கிலேய வழக்கறிஞர் சர் ஜான் பிக்ஸ் (Sir John Biggs) என்பவராவார். இதற்குமுன் இவர் இங்கிலாந்தில் பிளைமவுத்தின் பதிவாளராகப் (Recorder of Plymouth) பதவி வகித்திருந்தார்.

1687- இல் கம்பெனி மற்றொரு புதிய மன்றமான மேயர் நீதிமன்றம் (Mayor's Court) என்ற ஒன்றை ஏற்படுத்திற்று. இதில் மேயர், ஆல்டர்மென்போன்ற அதிகாரிகளிருந்தனர். இந்நீதிமன்றத்திற்கு, சிவில் குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. எந்த சிவில் வழக்கில், கொடுக்கப்படுகின்ற அபராதத்தின் அளவு மூன்று பகோடாக்களுக்கும் (ஒரு பகோடா என்பது மூன்று ரூபாய்க்குச் சமம்) குறைவாக உள்ளதோ, அங்கு மேயர் நீதிமன்றத்தின் தீர்ப்பே

முதன்மையானதாகும். ஆனால் அபராதத் தொகை மூன்று பகோடாக்களுக்கும் கூடினால் இதனால் பாதிக்கப்பட்டவர் உயர்நீதிமன்றத்தில் (தலைமை) மேல் முறையிடுவதற்கு உரிமை கொடுக்கப்பட்டது. குற்றவியல் வழக்குகளில், மேயர் நீதிமன்றம், ஒருவருக்கு மரண தண்டனை வழங்கினால் அவருக்கு அதற்கு எதிராக மேல் முறையிடு செய்ய உரிமை கொடுக்கப்பட்டது. மேயர் நீதிமன்றம் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையே செயல்பட்டது.

நீதித்துறையின் பணிகள் அதிகமாகக் குவிந்து கிடந்ததால் உயர் (தலைமை) நீதிமன்றம் சீரமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. நீதிபதி வழக்குறைஞர் என்ற ஒருவரையே கொண்டிருந்த அந்நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் பதவி வகித்தனர். நீதிபதிகளின் முதல் பட்டியலிலேயே இந்தியர் ஒருவரின் பெயர் காணப்பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றே. அவ்விந்தியர் அல்லிங்கால் பிள்ளை (Allingail Pillai) என்பவராவார். அக்காலத்தில் நீதித்துறை நிர்வாகமானது சிக்கலான ஒன்றாக வளர்ந்து கொண்டே வருவதாகக் கருதப்பட்டது. நீதிபதிகளும் திறமைமிக்க சட்ட ஆலோசகர்களின் ஒத்துழைப்பு தேவை என உணர்ந்தனர். இச் சட்ட ஆலோசகர்கள் தங்களது காலம் முழுவதையும் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஒதுக்கி, ஆலோசனை கூறுபவர்களாக இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. எனவே முதன்முதலில் சென்னை அட்டர்னி—ஜெனரல் (Attorney-General) என்ற பதவி உருவாக்கப்பட்டது. இந்த அட்டர்னி—ஜென்ரலின் பணி, கொலை மற்றும் கடுமையான குற்றங்களை செசன்ஸ் நீதிமன்றங்களில் விசாரணை செய்வதாகும். டேனியல் பு போய்ஸ் (Daniel Bu Bois) என்பவர் சென்னையின் முதல் அட்டர்னி ஜெனரலாக நியமனம் செய்யப்பட்டார்.

18- ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், சென்னையில், நான்கு வேறு விதமான நீதிமன்றங்கள் இயங்கிவந்தன. முதலாவதாக, 1688- இல் மாநகராட்சி முறை ஏற்படுத்தப்பட்ட பின்பு வந்த மேயர் நீதிமன்றம், இரண்டாவது, அட்மிரல்டி (Court of Admiralty) நீதிமன்றம். இந்நீதிமன்றத்தின் தலைவராக நீதிபதி—வழக்குறைஞர் (Judge-Advocate) இருந்தார். மூன்றாவது பழைய சத்திர நீதிமன்றமாகும். நான்காவது, தலைவர் (President) அல்லது ஆளுநர் (Governor in council) ஆகும். இதுவே, மற்ற மூன்று நீதிமன்றங்களுக்கும் எதிராக மேல்முறையீடு செய்யப்படும் வழக்குகளை விசாரணை செய்வதாகும்.

1726- ஆம் ஆண்டு ஆங்கில அரசால் கொடுக்கப்பட்ட சாசனத்தின்படி மாநகராட்சி முறையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் பயனால் புதிய மேயர் நீதிமன்றம் ஒன்றும் (New Mayor's Court) ஏற்படுத்தப்பட்டது. செரிஃப் (Sheriff) என்ற பதவியும் உண்டாக்கப்பட்டது. மேயர் நீதிமன்றத்தின் மறுசீரமைப்பு, 1727- இல், பிரம்மாண்டமான விழாவாகக் கொண்டாடப்பட்டது. இதே நேரத்தில் சிறு காரணங்களுக்கான புதிய நீதிமன்றம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. இந்நீதிமன்றம் செரிஃப் நீதிமன்றம் (Sheriff's Court) என அழைக்கப்பட்டது. அந்நீதிமன்றத்தின் தலைவராக (நீதிபதியாக) செரிஃபே அமர்ந்து செயல்பட்டார். இவரால் வழங்கப்படும் தண்டனைத் தொகை ஐந்து

பகோடாக்களுக்கும் மிகாமலிருந்தால், இவரது தீர்ப்புக்கு மேல், எந்த வழக்கானாலும், மேல்முறையீடு செய்ய உரிமை கொடுக்கப்படவில்லை. இவரது மொத்த அதிகாரம் 20 பகோடாக்கள் வரையே தண்டனை விதிக்கலாம் என்றிருந்தது. இவ்வாறு 20 பகோடாக்கள் வரை தண்டனை விதிக்கப்படும் போது அதற்கு எதிராக மேல்முறையீடு செய்யலாம். இந்த மேல்முறையீடு மேயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த செரிஃப் நீதிமன்றம் மிகக் குறைந்த காலமே செயல்பட்டது. 1729- இல் இந்நீதிமன்றம் ஒழிக்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் சென்னை பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டது, இக்காலகட்டத்தில் சென்னை நீதிமன்றங்களில் பல இடையூறுகளும், தலையீடுகளும் ஏற்பட்டன. பின்பு சென்னை ஆங்கிலேயர் கையில் கொடுக்கப்பட்ட போது, 1753- இல் மேயர் நீதிமன்றம் சீர்திருத்தி அமைக்க வழிவகை செய்யப்பட்டது. சீர்திருத்தி, புதிதாக அமைக்கப்பட்ட மேயர் நீதிமன்றத்திற்கு சிவில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இந்தியர்கள் விரும்பினால் அன்றி அவர்தம் வழக்குகளை விசாரிக்கும் உரிமை இந்நீதிமன்றத்திற்கில்லை. 1753- இல் உருவாக்கப்பட்ட இந்த மேயர் நீதிமன்றம் 1798 வரை செயல்பட்டது. 1798- இல் சென்னைப் பதிவு நீதிமன்றம் (Court of the Recorder of Madras) துவக்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிந்திய காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பு முறையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. கம்பெனியின் ஆட்சியில் இந்தியப் பொருளாதாரமும், ஆட்சிப் பகுதிகளும் விரயமாவதை இங்கிலாந்தில் அரசியல்வாதிகளும் பொதுமக்களும் உணரத் தொடங்கினர். எனவே, அவர்கள் கம்பெனியின் விவகாரங்களில் தலையிட முற்பட்டனர். இங்கிலாந்து அரசாங்கம் கம்பெனியின் நிரவாகத்தின் மீது சோதனையும், கட்டுப்பாடும் செலுத்த முற்பட்டது.1784- இல் கிழக்கு பிரிட்டிஷ் குடியேற்றப்பகுதிகளில் மேற்பார்வையிட மேற்பார்வையாளர் குழு (Board of control) ஒன்று நியமிக்கப்பட்டது. அதாவது வாணிக லாபம் கருதி வந்த கம்பெனி அரசியல் ஆதிக்கம் பெற்றதற்கு ஆங்கில அரசு அங்கீகாரம் அளித்தது.

இரண்டு நூற்றாண்டு காலமாக, சென்னையில் நீதித்துறை ஆட்சிமுறை அதிகப் பயனற்ற முறையிலேயே இயங்கி வந்தது. நீதித்துறை அமைப்பு முறைகள் அதிக நெகிழ்வுடையதாக இருந்ததால், அடிப்படையில் சில குறைபாடுகள் இருந்தன. தமிழக மாவட்டங்கள் முழுவதிலும் (தென்னிந்திய பகுதிகள் அனைத்திலும் கூட) அரசியல் ஆதிக்கம் பெற்றுவிட்ட கம்பெனி இந்திய மக்களிடம் தனக்கிருந்த பொறுப்பினைத் தவிர்க்க முடியவில்லை. பொதுவாக ஒரு நாட்டை ஆள்வது என்பது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதேயாகும். எனவே நீதித்துறை நிர்வாகம் என்பது அடிப்படையிலேயே ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

1798- இல் சென்னையில் பதிவு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது நீதித் துறை வரலாற்றில் அடுத்த கட்டவளர்ச்சியைக் குறிப்பதாகும். சென்னை நகரில் குடியிருந்த இந்தியர்கள் அனைவரும் இந்நீதிமன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்டனர். அதிகாரம்

அனைத்தும் பதிவாளரிடமே (Recorder) இருந்தது. இந்தப் பதிவாளர் என்பவர் இங்கிலாந்திலோ அல்லது அயர்லாந்திலோ பாரிஸ்டர் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும்; குறைந்தது ஐந்து ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இந்நீதிமன்றம், அங்கீகரிக்கப்பட்ட வழக்குரைஞர்களையும், அட்டர்னிகளையும் தனது நீதிமன்றத்தில் பதிவு செய்து கொள்ளும் அதிகாரம் பெற்றது. முறையீடு செய்தவர்க்குப் பதிலாக வேறு எவரும் இந்நீதிமன்றத்தில் வழக்காட உரிமை வழங்கப்படவில்லை. இந்நீதிமன்றம் 1798-நவம்பரில் துவக்கப்பட்டபோது சுமார் பன்னிரண்டு நபர்கள் வழக்குறைஞர்களாகவும், அட்டர்னிகளாகவும் அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்டனர். இந்த நபர்கள் சென்னையில் தங்களுக்கென ஒரு கூட்டமைப்பை (Bar of Madras) ஏற்படுத்திக் கொண்டனர். இந்த பதிவாளர் நீதிமன்றமும் குறைந்த காலமே செயல்படுத்தப்பட்டு, கி.பி. 1800- இல் ஒழிக்கப்பட்டது. நீதித்துறையில் ஏராளமான மாற்றங்களும் கொண்டு வரப்பட்டன.

இரண்டாவது காலகட்ட வளர்ச்சி (1801–1861)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டான 1801- இல் புனித ஜார்ஜ் கோட்டையில் தலைமை நீதி மன்றம் (Supreme Court of Judicature) துவக்கப்பட்டது. இந்த புதிய தலைமை நீதிமன்றம் பதிவு நீதிமன்றமாக செயல்பட்டது. இதில் ஒரு தலைமை நீதிபதியும் இரு நீதிபதிகளும் பதவி வகித்தனர். இந்நீதிமன்றம் ஆங்கில அரசரின் சின்னத்தைப் பயன்படுத்த (His Majesty's Arms) உரிமை கொடுக்கப்பட்டது. இச்சின்னம் தலைமை நீதிபதியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. தலைமை நீதிபதியின் ஆண்டு ஊதியம் ஆறாயிரம் பவுன்கள் எனவும், மற்ற நீதிபதிகளின் ஆண்டு ஊதியம் ஐயாயிரம் பவுன்கள் எனவும், நிர்ணயம் செய்யப்பட்டது. முதலாவது தலைமை நீதிபதியாக பதவி வகித்தவர் சர்தாமஸ் ஸ்ட்ரேஞ்சு என்பவராவார். இவரது உருவச்சிற்பத்தை இன்றும் தலைமை நீதிபதியின் அறையில் காணலாம்.

நாளுக்கு நாள், இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் பெருகிக் கொண்டே சென்றது. இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறுபட்ட இனத்தவர்கள் — ஆங்கிலேயர், மற்ற ஐரோப்பியர், இந்துக்கள், முகமதியர்கள், கிறித்துவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள்— வாழ்ந்து வரலாயினர். இம்மாதிரியான மக்களுக்கு நீதிவழங்க, சென்னை மாகாணத்தில் இருவகையான சட்ட நீதிமன்றங்கள் துவக்கப்பட்டன. கிழக்கிந்தியக் கம்பெனியால் வழங்கப்பட்ட சாசனப்படி அரசு ஆணை நீதிமன்றம் (The Courts of Royal authority) சென்னை நகரில் மட்டும் நீதித்துறையை நிர்வகித்தது. கம்பெனி ஆட்சியின் மற்ற நீதிமன்றங்கள் சென்னைநகர் தவிர்த்த மற்ற பகுதிகளின் நீதி நிர்வாகத்தைக் கவனித்தன. எட்வர்ட்கிளைவ் (ஆற்காட்டை முற்றுகையிட்டு புகழ் பெற்ற ராபர்ட்கிளைவின் மகன்) ஆளுநராகப் பதவி (1798-1803) வகித்த காலத்தில் சென்னை மாநில நீதித்துறை நிர்வாகத்தை வங்காளத்திலிருந்தது போன்று மாற்றியமைத்தார்.

1802- இல் ஒழுங்கு முறைகள் (Regulations) என்ற பெயரில் புதிய முறைகள் புகுத்தப்பட்டன. சிவில் நீதிமுறையை நிர்வகிக்க கீழே குறிப்பிடப்படுகின்ற நீதிமன்ற நெறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன.

1. இந்திய குழுக்கள் (80 ரூபாய் மதிப்புக்கு மிகாத வழக்குகளை விசாரணை செய்ய)
2. ஜில்லா நீதிமன்றங்கள் (ரூபாய் 200)- இந்நீதிமன்றங்கள் பதிவாளரால் (Registrar) தலைமை தாங்கி நடத்தப்படும்.
3. ஜில்லா நீதிபதி (ரூபாய் 1000)
4. மாநில முறையீட்டு மன்றங்களில் கடைசி முறையீடு (எண்ணிக்கையில் நான்கு).
5. ஆளுநர் அவர்தம் குழுவிடம் முறையீடு (சாதர் அதலத், வழக்கின் அளவு 5000 ரூபாய்க்கும் மிகாதபோது)
6. தலைமை ஆளுநர், அவர்தம் குழுவிடம் மேல் முறையீடு (சிவில் வழக்குகளில் 40000 ரூபாய் மதிப்புள்ளவை)

குற்றவியல் நீதித்துறை நிர்வாகத்திற்காக கீழே குறிப்பிடப்படும் நீதி நெறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன.

1. மாஜிஸ்டிரேட்டுகள், துணை மாஜிஸ்டிரேட்டுகள்.
2. நான்கு சர்க்யூட் நீதிமன்றங்கள்.
3. தலைமை குற்றவியல் நீதிமன்றத்தின் பவுஜ்தாரி அதலத் (ஆளுநர் அவர்தம் குழு உறுப்பினர்கள் சேர்ந்து)

நாளுக்கு நாள் மேற்கூறப்பட்ட நிர்வாக முறையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. சென்னையில் அமைக்கப்பட்ட தலைமை நீதிமன்றமும், மாவட்டங்களில் அமைக்கப்பட்ட அதலத் துறை நிர்வாகமும் பிற்கால நீதித்துறை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. தலைமை நீதிமன்றம் திறமையான தலைமை நீதிபதிகளைப் பெற்றிருந்ததால் தனது செயல் முறையில் வெற்றி பெற்றது.

1857- ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்க வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தது. அவ்வாண்டு நடைபெற்ற சிப்பாய்க்கலகம் கம்பெனியின் ஆட்சிக்கே முடிவு கட்டியது. அதன்பின் ஆங்கில அரசே தனது இநதிய அரசை நேரடியாக ஆள முன்வந்தது.

மூன்றாவது காலகட்டம் (1862–1947)

1861- ஆம் ஆண்டு இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டப்படி இந்தியாவில் உயர்நீதிமன்றங்கள் ஏற்படுத்துவதற்கு அரச முன் வந்தது. அதன்படி முதலிலிருந்த சென்னைத் தலைமை நீதிமன்றம், சாதர் அதலத் நீதிமன்றம் , பவுஜ்தாரி அதலத் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டன. 1862- ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15- ஆம் நாள் சென்னை உயர்நீதிமன்றம் (High Court) துவக்கப்பட்டது.

உயர் நிதிமன்றத்தின் நூற்றாண்டு நிறைவுவிழா 1962- ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. உயர் நிதிமன்றத்தின் அமைப்பு முறையும், நீதிபதிகளின் பணிகளும் விவரமாக விளக்கப்பட்டன. அமைதி, ஒற்றுமை, அதிகாரம் ஆகியவற்றின் நினைவுச் சின்னமாக உயர்நீதிமன்றம் விளங்குகிறது.

சென்னை உயர்நீதிமன்றம் துவக்கப்பட்ட காலத்தில்தான் சிறப்புமிக்க சட்டத் தொகுப்பும் ஏற்படுத்தப்பட்டது. முன்பிருந்த தலைமை நீதிமன்றம், சாதர் அதலத் ஆகியவற்றின் காலத்தில் சட்டத் தொகுப்பு இல்லை; நீதிபதிகளும் சில வழக்குகளுக்கு சரியான தீர்வு காணமுடியாது தவித்தனர்;சட்ட விளக்கங்களும், நூல்களும் மிகச் சிலவே இருந்தன. ஆனால் உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கு இவ்வாறான இன்னல்கள் கிடையாது. அவர்தம் முக்கிய பணி அவர்கள் முன் வைக்கப்படும் சட்டத்தொகுப்பின் நன்மை தீமைகளைக் கண்டு அறிவிப்பதாகும். அதிகாரப்பூர்வமான சட்ட அறிவிப்புகளும், அதிகாரப்பூர்வமற்ற அறிவிப்புக்களும் பெரிதும் உதவின. ஆனால் ஆண்டுகள் பல கடந்தபின் ஏராளமான சட்ட அறிவிப்புகள், அடிப்படைக் கருத்துக்களிலேயே பயனற்றவையாகவும் போயின.

1865- ஆம் ஆண்டுக்குப்பின் நீதித்துறையில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அவைகளில் முக்கியமானது 1911- ஆம் ஆண்டு இயற்றப்பட்ட உயர்நீதிமன்றச் சட்டமாகும். இச்சட்டம், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் உயர்ந்தபட்ச எண்ணிக்கையை இருபதாக்கியது. 1915, 1935- ஆம் ஆண்டுகளின் சட்டங்களின் படி ஆங்காங்கே சிறுசிறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. திறமை சான்ற தலைமை நீதிபதிகள் தொடர்ந்து பதவிவகித்தது, சென்னை உயர் நீதிமன்றத்திற்குக் கிடைத்த பெரும் செல்வமேயாகும். உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகளில் முதன்மையானவர் கால்லி ஸ்காட்லாந்து ஆவார். இந்தியா சுதந்திரம் அடையும் காலத்தில் தலைமை நீதிபதியாக இருந்த பிரடெரிக் ஜென்டில் 1948- ஆம் ஆண்டுதான் பதவி விலகினார்.

1947க்குப்பின் நீதித்துறை வளர்ச்சி


1950- இல் செயற்படுத்தப்பட்ட இந்திய அரசியலமைப்பின் 214 முதல் 237 வரையான உட்பிரிவு, மாநில நீதித்துறையின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் ஆகியவை பற்றி விளக்குகின்றன. மாநில நீதித்துறை ஒரு உயர் நீதிமன்றத்தையும், துணை நீதிமன்றங்களையும் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 124 ஆவது உட்பிரிவுப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர்நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஆனால், 231 ஆவது உட்பிரிவுப்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரு பொதுவான உயர்நீதிமன்றத்தை ஏற்படுத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநில தலைநகரங்களிலேயே உயர்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. தமிழகத்தில், சென்னை பாரிமுனையில், முன்பு செயல்பட்ட நீதிமன்றங்களின் இடமே இன்று சென்னை உயர்நீதிமன்றமாகத் திகழ்ந்து வருகின்றது. சென்னை உயர்நீதிமன்றம், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஒரு தலைமை நீதிபதியையும், மற்ற இணை, தற்காலிக

நீதிபதிகளையும் கொண்டுள்ளது. உயர் நிதிமன்றத்தில் உயர்ந்த பட்ச நீதிபதிகளின் எண்ணிக்கையை அறுதியிட்டு நமது அரசியலமைப்பு கூறிவிடவில்லை. உயர் நீதிபதிகளின் எண்ணிக்கையைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ இந்திய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தின் மூலமாக அரசிலமைப்பின் எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்தலாம். தலைமை நீதிபதியின் பதவி காலியாக இருக்கும்போது, குடியரசுத்தலைவர், தான் விரும்பும் ஒருவரைத் தற்காலிக தலைமை நீதிபதியாக நியமிக்கலாம். அவர் தகுதிவாய்ந்த எத்தனை நபர்களையும் துணை நீதிபதிகளாக நியமிக்கலாம். இந்நியமனம் தற்காலிகமானதே; இரண்டாண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும், அதுவும், உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கியிருக்கும்போது தான், நம் அரசிலமைப்பு, நீதிபதிகளுக்கு வேண்டிய தகுதி, பதவிக்காலம், ஊதியம், மற்றபடிகள் ஆகியவைபற்றி விளக்குகிறது.

சென்னை உயர்நீதிமன்றம் ஒரு ஆவண (பதிவு) நீதிமன்றம்போல் செயல்படுகிறது. இம்முறையில் டெல்லியில் இயங்கும் தலைமை நீதிமன்றம் போன்று அதிகாரம் பெற்று விளங்குகின்றது. மாநிலத்தின் சட்ட ஒழுங்குமுறையைக் காப்பதாகும். தனது துணை நீதிமன்றங்களின் தலைமையகமாகவும் இது செயல்படுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஒரே கூட்டத்தொடரில் அமர்ந்தோ, பிரிவுக்கூட்டத்தொடரில் அமர்ந்தோ, அல்லது முழுக்கூட்டத்தொடரில் அமர்ந்தோ தீர்க்கப்படாது முடங்கிக் கிடக்கும் வழக்குகளை விசாரிக்கலாம். நீதிபதிகள் சிவில் வழக்குகளைத்தான் விசாரிக்க வேண்டும் என்று பகுக்கப்படவில்லை. இருவிதமான வழக்குகளையும் அவர்கள் விசாரணை செய்ய வேண்டும். 1948-இல் பிரடோரிக் ஜென்டில் பதவி விலகியபோது டாக்டர் P.V. இராஜ மன்னார் தலைமை நீதிபதியாகப் பதவியேற்றார். இவரே முதல் இந்தியத் தலைமை நீதிபதியாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பதவி வகித்தார். இதுவரை இந்தியர்கள் தலைமை நீதிபதி என்ற பெயரளவிலேயே இருந்தனர். உரிமை பெற்றபின் நீதித்துறை நிர்வாகத்துறையிடமிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டது. மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. ஆந்திரா, கேரளா, மைசூர் மாநிலங்களிலும் உயர்நீதிமன்றங்கள் துவக்கப்பட்டன.


முந்திய ஜில்லா நீதிமன்றம், மாவட்ட, செசன்ஸ் நீதிமன்றம் என அழைக்கப்பட லாயிற்று. இங்கு, முன்சீப்கள் சிவில் வழக்குகளையும், மாஜிஸ்டிரேட்டுகள் குற்றவியல் வழக்குகளையும் விசாரணை செய்வர். இவ்வாறு சிவில், குற்றவியல் எனப்பிரிக்கப் படுவதற்கு, விரைவில் வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கமே காரணமாகும். மாஜிஸ்டிரேட்டுகளுக்கிடையேயும், முன்சீப்களுக்கிடையேயும் தரம் பிரிக்கப்பட்டது. சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஜில்லா நீதிமன்றத்தில் (மாவட்ட நீதிமன்றம்) வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்யலாம்.

மாநிலத் தலைநகரமான சென்னைக்கு என்று தனிநீதிமுறை செயல்படுகிறது. தலைமை மாநில மாஜிஸ்டிரேட் (தலைமை மெட்ராபொலிடன் மாஜிஸ்டிரேட்), மாநில மாஜிஸ்டிரேட்டுகள், கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரும் அமர்ந்து மெட்ரோ பாலிடன் நகர குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவர்.



1974- க்குப் பின் மூன்றாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் (கௌரவ மாஜிஸ்டிரேட்கள்) பதவி நீக்கப்பட்டுவிட்டது.

சென்னை உயர்நீதி மன்றத்தில், தலைமை நீதிபதி உட்பட 14 நீதிபதிகள் பணி புரிகின்றனர். எனினும், இந்தியக் குடியரசுத் தலைவர் எத்தனை கூடுதல் நீதிபதிகளையும் நியமிக்கும் உரிமை பெற்றுள்ளார். தற்போது சென்னை உயர்நீதிமன்றம் 14 நிரந்தர நீதிபதிகளையும், 4 கூடுதல் நீதிபதிகளையும் கொண்டு இயங்குகின்றது.



1861 ம் ஆண்டிலிருந்து 1948 வரை சென்னை

உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதிகள்:

1. சர்.சி.எச். ஸ்காட்லாந்து
2. சர்.வால்டர் மார்கன்
3. சார்லஸ் டர்னர்
4. ஆர்தர் கால்லின்ஸ்
5. ஆர்னால்டு ஓயிட்
6. ஜான் வாலிஸ்
7. பிரடெரிக் ஜென்டில்
8. பி.வி. ராஜமன்னார்

இன்றைய சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடம் 1892- இல் கட்டிமுடிக்கப்பட்டது. அதனது திறப்புவிழாவின் போது அன்றைய தலைமை நீதிபதியாக இருந்தவர் சர் ஆர்தர் காலின்ஸ் ஆவார். அவர் கட்டிடத்தின் சாவியை ஆளுநரிடமிருந்து பெறும்போது, "எனக்குப்பின்னும், ஆளுநருக்குப் பின்னும் இந்தப் பதவியில் அமர்பவர்கள் திறமை யானவர்களாகவும், துணிவானவர்களாகவும், சாதி, சமயம், இனம் ஆகிய வேறுபாடு காட்டாதவர்களாகவும் அமைய வேண்டும், அமைவார்கள் என நான் நம்புகிறேன்" எனக் கூறினார். சர் ஆர்தர் காலின்ஸின் விருப்பப்படி இதுவரை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகளும், வழக்கறிஞர்களும், செயல்பட்டு வருகின்றனர். இனிமேல் தொடர்ந்து வர இருக்கின்ற வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் அவர் தம் சொல்லைக் காப்பார்களாக.

தலசுய நிர்வாகம்

ஒரு குறிப்பிட்ட பகுதி வாழ் மக்களால் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரைக் கொண்ட சபையால் அப்பகுதி மக்கள் ஆளப்படுவதே தலசுய நிர்வாகம் ஆகும். தலசுய நிர்வாகம் அதிகாரப் பங்கீட்டினை அல்லது மத்தியிலிருந்து அதிகாரம் பிற பகுதிகளுக்கு வழங்கப்படுவதைக் காட்டுகிறது. தலசுய நிர்வாகம் மிகவும் குறுகிய எல்லைகளைக் கொண்ட கிராமங்களில், நகரங்களில், மாநகரங்களில் மட்டுமே செவ்வனே செயல்பட வாய்ப்புண்டு. இப்பகுதிகள் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தின ராலும், மற்ற சமயங்களில் நியமனம் பெற்ற அதிகாரிகளாலும் ஆளப்படுவதுண்டு.

இந்தியாவில் தலசுய நிர்வாகத்தைப் புகுத்தியவர் ஆங்கிலேயரே என்ற கருத்து நாடெங்கிலும் பரவலாயுள்ளது. மக்களின் நன்மை கருதி கொண்டுவரப்பட்ட திட்டங்களைக் காலதாமதமோ, தடையோ இன்றி செயல்முறைப்படுத்தவே இம்முறை கொண்டுவரப்பட்டது. நாட்டின் நடப்பு பிரச்சினைகளை அவ்வப்போது கிராமத்தாரும், நகரத்தாரும் தெரிந்து கொள்ளவும் இது வழி வகுத்தது. இந்தியத் துணைக் கண்டத்தின் பழங்கால வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பின், இந்நிர்வாக முறை மௌரியர் காலத்திலிருந்தே இந்தியாவில் செயல்பட்டு வந்ததாகத் தெரிய வரும். பாண்டியர், சோழர் காலங்களில் சீரிய முறையில் தலசுய நிர்வாகம் நடைபெற்று வந்தமைக்குப் போதுமான சான்றுகள் தமிழகத்தில் உள்ளன. பெருங்கலகத்திற்கு முன் (1857) கம்பெனியாரின் நாடுகளில் இருவகை தல நிர்வாக முறைகள் இருந்ததாக அறிகிறோம். மாகாணத்தின் தலைநகரங்களில் ஒருவித நிர்வாகமும், இதர நகரங்களில் மற்றொருவகை நிர்வாக முறையும் இருந்திருக்கினறன. இவை இருவித நிர்வாகக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை (i) தன்னிச்சையாக மக்களின் நலன் கருதி செயலாற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்ட தல சபைகள், (ii) கட்டுப்பாடுகளுக்குக் கீழ் கொண்டு வரப்பட்ட தல சபைகள் அல்லது சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட சபைகள்.

சென்னை மாநகராட்சி: இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் வழங்கிய சாசனத்தின்படி சென்னையில் 1683- இல் மாநகராட்சியும், மேயர் மன்றமும் அமைக்கப்பட்டன. நகரத்தந்தை (மேயர்-mayor) மூப்பர் (elderman) நகரினர் (burgesses) ஆகியோரைக் கொண்டே நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது. மாநகர் மண்டபம், சிறைச்சாலை, நகரத்தார் தங்கும் விடுதி போன்ற கட்டடங்களைக் கட்ட வேண்டிய பணத்தை வரிகள் மூலம் பெற்றுக் கொள்ள வரிவிதிக்கும் உரிமை அவர்களுக்கு தரப்பட்டது. "மக்களுக்கும் மாநகருக்கும் பாதுகாப்பும், மதிப்பும், வனப்பும் ஊட்டும் பிற எந்த கட்டடங்களோ, தோரணங்களோ நல்லது என்று அவர்களுக்குத் தோன்றினால் அவற்றைப் பணியும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது." செயல் முறையில் நகரினர் இல்லாத ஆனால் மூப்பர்களைக் கொண்ட மேயர் மன்றம் மட்டுமே இருந்தது. ஆகவே இம்மன்றங்கள் நிர்வாகத்தைத் தவிர நீதி பரிபாலனங்களையே கவனித்து வந்தன. தெருப் பெருக்கு துப்புரவுத் தொழில்களைக் கவனிக்க, நிதி சேர்க்க, ஒரு மறைமுகவரியை (தீர்வை) (octroi duty) விதிக்க மேயர் மேலதிகாரிகளிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றார். மாநகரத்தைக் கட்டுப்படுத்த மேயர் மன்றம் ஏற்படுத்துமாறும் 1726- ஆம் ஆண்டின் சாசனம் அதிகாரம் வழங்கியது.

நகரச் சட்டங்களை நடைமுறைப்படுத்த 1793- ஆம் ஆண்டுச்சாசனம் உரிமை வழங்கியது. கம்பெனி, இதர பிரிட்டிஷ் குடிகளிலிருந்து அமைதிக்கால நீதிபதிகளை நியமிக்க தலைமை ஆளுநருக்கு (Governor-General) இச் சாசனம் அதிகாரம் வழங்கியது. இந்நீதிபதிகள் மாகாண மாநகரங்களில் மட்டுமே செயல்பட்டு வந்தனர். நீதியைக் காப்பதுடன் இவர்கள் தெருப்பெருக்கு, தெருச்சுத்திகரிப்பு போன்றவற்றைச் செய்யப் போதிய பணத்தை வரிகள் மூலம் பெறவும் அதிகாரம் வழங்கப்பட்டனர். மாகாண மாநகர்களிலுள்ள வீடுகள் மீது வீட்டுவரியாக 5% வரி விதிக்கப்பட்டது. இம்மாநகர்களில் 1840க்கும் 1853க்கும் இடைப்பட்ட காலங்களில் குறைந்த அளவாயினும் தேர்ந்தெடுப்பு முறை அமுல் செய்யப்பட்டது. மாகாண மாநகர்களின் பாதுகாப்புத் தன்மையை வளர்க்க

1856- இல் சட்டங்கள் இயற்றப்பட்டன. நியமனம் பெற்ற மூன்று அங்கத்தினர்களைக் கொண்டு சட்டப்படி அமைக்கப்பட்ட ஒரு குழு நகராண்மைக் கடமைகளைக் கவனித்து வந்தது. இம்மூவரும் ஊதியம் வழங்கப்பட்ட அங்கத்தினரே. நிதி திரட்டும் எவ்வதிகாரத்தையும் இச்சட்டங்கள் வழங்கவில்லை. மேலும் இவை ஸ்தலம் வாழும் மக்களின் ஒத்துழைப்பு இவர்களுக்கு வேண்டுமென்றும் கோரவில்லை. எனவே அதிகாரம் குறிப்பிட்ட சிலரிடமே குவிந்து கிடந்தது. இச்சட்டங்கள் மாநகர்களில் தீர்ப்பதற்குப் பதில் அதிக பிரச்சினைகளை உருவாக்கின. ஆகவே மாநிலங்கள் அவற்றைத் தாமே தீர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவை கொண்டுவந்த பலதரப்பட்ட மாற்றங்கள் இறுதியில் மாநகராண்மையின் தன்மையையே மாற்றிவிட்டன.

நகராட்சிகள்: மாநில மாநகராண்மையைத் தவிர நகராண்மையும் சென்னை ராஜதானியில் காணப்பட்டது. இதன் தொடக்கம் 1842- ஆம் ஆண்டு வங்கச் சட்டத்தில் உள்ளது. " பொதுமக்கள் கூடுமிடங்களிலோ அல்லது மக்கள் வாழுமிடங்களிலோ பொதுச் சுகாதாரம், வசதிகளுக்கான நற்செயல்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளை" அவர்கள் செய்துகொள்ள இச்சட்டம் வழிவகை செய்தது. நகர்களில் வாழும் மக்களில் வீட்டுவசதி உள்ளோரில் 2/3 பகுதியினர் அந்நகரத்துக்கான நகராண்மையைக் கோரினால், அது வழங்கப்படுவதற்கான வாய்ப்பையும் இச்சட்டம் தந்தது. 1850- ஆண்டுச் சட்டம் நகராண்மைச் கழகங்களுக்கு மறைமுக வரி விதிக்கும் உரிமையை வழங்கியது. இந்நகர்களில் நகராண்மை நிர்வாகம் திறம்பட நடப்பதற்குச் சில குறைபாடுகளும், தடைகளுமிருந்தன. 1860- இல் சார்லஸ் உட் இங்கிலாந்தின் இந்தியச் செயலராக இருந்த போது இவ்வமைப்புகளின் இயக்கத்தைப் பற்றி விசாரித்தார். மத்திய அரசு மாநில அரசுகளைக் கோர, ஆளுநர்கள் தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். நகராண்மை நிர்வாகத்திற்காக, நகர்களில் வாழும் மக்களை வரிகட்டும் வண்ணம் செய்வதில் ஏற்படும் இடற்பாடுகளை அவை எடுத்துக் கூறின. 1864- இல் ஜான் லாரன்ஸ் இந்திய மக்கள் தங்களைத் தாமே ஆளுவதில் (தலங்களை ஆளுவதில்) வல்லவர் என்று அறிவித்தார். ஆகவே மக்களிடம் அதிக கடமைகளை ஒப்படைக்குமாறு அரசை அவர் வேண்டினார். எனவே அவர்களாகவே வரி விதித்து, சேர்த்து, நிதி திரட்டி நிர்வாகத்தைச் செவ்வனே நடத்த முடியும் என்றும், அவ்வகையில் செய்யின் அரசின் தலையீட்டைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் அவர் எச்சரித்தார். பிற்காலங்களில் தலவளர்ச்சியிலோ, புதுத்திட்டங்களைக் கொண்டு வருவதிலோ மக்கள் எதிர்பார்த்த அளவு இசைவுடையோராய் இல்லாமல் மாறுபட்டிருப்பதைக் கண்டனர். ஆகவே புதுமைகளைச் செய்வது ஸ்தல அதிகாரி என்றும், அவர் அவற்றை குறிப்பிட்ட ஸ்தலப் பிரமுகர்களைக் கலந்தாலோசித்துச் செய்வார் என்றும் முடிவாயிற்று. வளர்ச்சித் திட்டங்கள் படிப்படியாக மிக மெதுவாகவே அமுல் செய்யப்பட்டன. சுகாதாரம், கல்வி, இன்னபிற துறைகளில் பெருவளர்ச்சி காணப்பட்டது.

தல அமைப்புகள்: "இத்துணைக் கண்டத்தில், மாநிலங்களுக்கு மாநிலம் தல அமைப்புகளின் வளர்ச்சி பெரிதும் மாறுபட்டது. தல அமைப்புகளைப் பொறுத்து மாநிலச்சட்டங்கள், தல அமைப்புகளை ஏற்படுத்தவும், அமைப்புகளின் அமைப்புத் தன்மையை அவ்வப்போது மாற்றிக் கொள்வதற்கு முடிவுகள் எடுப்பதற்கும், அதிகாரிகள், அதிகாரிகளல்லாதாரின் எண்ணிக்கையை மாற்றிக் கொள்ளவும், வாக்குரிமைத்

தன்மையை முடிவு செய்யவும் மாநில அரசுகளுக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவற்றைக் கொண்டு மேற் கூறப்பட்டவைகளுக்கான போதிய கோட்பாடுகளை உருவாக்க அதிகாரங்கள் வழங்கியுள்ளன." என்று நஜ்முல் அபடின் கூறுகிறார். அவற்றின் அமைப்பையும் எண்ணிக்கையையும் பொறுத்து தல அமைப்புகள் அவ்வப்போது மாற்றத்திற்குள்ளாகவும் செய்தன.

தல நிர்வாக அமைப்புகளைப் பொறுத்தளவில் இம்மாநிலத்தில் 1860- ஆம், 1870- ஆம் ஆண்டுகளில் சில முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதன் முதலாக தல நிர்வாக அமைப்புகள் நகரங்களிலும், அதன் பின் கிராமங்களிலும் நிறுவப்பட்டன. இவ்வாண்டுகளில் கிராமங்களில் தல நிர்வாக அமைப்புகள் அமைப்பதுபற்றி ஆராயப்பட்டு, செயல்முறைக்கு ஒத்த பல செயல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. நிலத்தின் வருடாந்திர குத்தகைத் தொகையில் 3 1/4% விகிதத்தில் சாலை வரி விதிப்பதற்கான அதிகாரத்தை சென்னை அரசு 1866- இல் வழங்கியது. அதிகாரம் வழங்கப்பட்ட இக்கமிட்டிகள் பொதுச் சுகாதாரத்தையும், கல்வியையும், மக்களின் இதர தேவைகளையும் பரிபாலனம் செய்து வந்தன.

வளர்ச்சி நிலைகள்: தலசுய நிர்வாகத்தைப் பொறுத்தளவில் மிகவும் அடிப்படை யான நடவடிக்கைகளை அரசு 1870- இல் தான் எடுத்தது. நிர்வாக வசதிக்காகவும் பொருளாதார செலவு குறைப்புக்காகவும் அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டன. கல்வி, சுகாதாரம், மருத்துவம், அறநெறி, தலப் பொதுப் பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதி பயன்பாட்டில் வெற்றியைப் பெற தலப்பொறுப்பும், மேலாண்மையும் (கண்காணிப்பும்) கவனமும் மிக அவசியம் என்று மேயோபிரபு குறிப்பிட்டார். தலநிர்வாக அமைப்பில் ஏற்படும் செலவில் ஒரு பகுதியை மாநிலங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அறிவித்தார்.

தல நிர்வாக அமைப்புகளின் நற்பணிகளைப் பயன்தருமுறையில் அமைக்க 1871ஆம் ஆண்டு சென்னையில் சட்டங்கள் இயற்றப்பட்டன. சில குறிப்பிட்ட காரியங்களில் தேர்தல் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தியது. தல சுய நிர்வாகத்திற்கு சலுகைகளை வழங்குவதைக் காட்டிலும் நிர்வாகச் சீரமைப்பையும், திறமையையும் மேயோவின் தீர்மானம் விரும்பியது. கிராமங்களுக்கு தலசுய நிர்வாக அமைப்புக்கள் வழங்கப்படுவதை நார்த் புரூக் பிரபு விரும்பவில்லை. இரண்டு காரணங்களுக்காக வளர்ந்து வரும் வரி விதிப்புக்களை நிறுத்த அவர் முடிவு கொண்டார். அவை: (i) கட்டாயத் தீர்வைகளை வழங்குமளவு மக்கள் இன்னும் தகுதி பெறவில்லை (ii) அப்படி வரிவிதிப்பின் அது மக்களிடையே அதிருப்தியை வளர்க்கும். 1870- இல் இருந்து கிராமப்புற தலசுய நிர்வாகத்தில் பெருத்த முன்னேற்றம் இருந்தது. கிராமப்புற தலசுய நிர்வாக அமைப்பு களைக் காட்டிலும் நகராண்மைக் கழகங்கள் பெருத்த முன்னேற்றத்தை அடைந்தன என்பது உண்மை.

1882 ஆம் ஆண்டு ரிப்பன் பிரபுவின் தீர்மானம்: மாநிலங்களின் தல நிர்வாக அமைப்பு பற்றிய மிக முக்கியமான நடவடிக்கையை ரிப்பன் பிரபு கொண்டு வந்தார். " இந்தியாவில் தற்கால தல நிர்வாக அமைப்புகளின் சிறந்த அடித்தளத்தை உண்மையில்

அவர் அமைத்தார்" என்று நஜ்முல் அபடின் கூறுகிறார். பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு அதிக நிவாரணம் கொடுக்கும் வழியாக தலசுய நிர்வாக அமைப்புகளை விரிவாக்க வேண்டிய கட்டாயத்தை இந்திய பஞ்சக்குழுவும் வலியுறுத்தியது. நகராண்மைக் கழக, கிராமப்புற தலசுய நிர்வாக அமைப்புகள் அமைந்தும் 2/3 பங்கு பெரும்பாண்மை அதிகாரிகளல்லாத உறுப்பினர்களைக் கட்டாயம் கொண்டு இருக்க வேண்டுமென்று அவருடைய தீர்மானம் அறிவித்தது. மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அதிகாரிகளின் எண்ணிக்கை ஒரு போதும் பாதிக்குமேல் இருக்கக் கூடாது என்று அறுதியிட்டது. முடிந்த அளவு இச்சபைகளோ, அமைப்புகளோ அதிகாரியில்லாத தலைவரால் தலைமை தாங்கப்பட்டதாய் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியது. அதிகார, அதிகாரியல்லாத உறுப்பினர்களிடையே காணப்பட்ட வேறுபாடுகளால் பெரும்பாலும் அதிகாரிகளில்லாத பிரிவினர் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்யவில்லை. தேர்ந்தெடுப்புக் கோட்பாட்டை ரிப்பனின் தீர்மானம் வலியுறுத்தி விஞ்சச் செய்தது. நகராண்மை நிர்வாகத்தில் அதிகாரவர்க்கத்தின் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டியது.

நகராண்மை, கிராமப்புற தல சுய நிர்வாகங்களுக்காகப் பல தல சுய அரசுச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை படிப்படியாக மாநிலத்தில் பல தல நிர்வாக அமைப்புக்களைப் புகுத்தின. பிரிட்டிஷ் இந்தியா பூராவும் ஒரே வகை தல சுய நிர்வாக அமைப்புகளுக்கான ஒழுங்கு முறைகளை ரிப்பனின் தீர்மானம் வலியுறுத்திய போதும், செயல் முறையில் மாநிலச் சட்டங்கள் பெரும்பாலும் மாறுபட்டே காணப்பட்டன. அது ஏனெனில், அத்தீர்மானம் "மாறுபட்ட சூழல்களுக்கு ஏற்ற பல தரங்களின் இயக்கத்தை கோடிட்டுக் காட்டியது" என்பதாம்.

மாநிலத்தின் பெரும்பான்மை மாவட்டங்களில் மாவட்ட மன்றங்களை மாவட்ட மன்றச் சட்டங்கள் கொண்டுவந்தன. மாவட்ட மன்றங்களைத் தவிர துணை மாவட்ட மன்றங்களையும் மாநில அரசு கொண்டு வந்தது. மாநிலத்தில் கிராமப்புற தல சுய நிர்வாக அமைப்புக்களின் தலைவர்கள் அதிகாரிகளே. மாவட்ட மன்றங்கள் மாவட்டத் தலைவரால் நடத்தப்பட்டன. "கிராமப்புறப் பிரச்சினைகளில் எதிர்ப்பற்ற தலைவர்" என்ற முறையில் அவருக்கு தலசுய நிர்வாக அமைப்புக்களில் "எதிர்ப்பற்ற மேலாண்மை இருந்தது". மாநிலத்து நகராண்மை மன்ற அதிகாரிகளல்லாத தலைவர்களின் விகிதம், கிராமப்புற தலசுய நிர்வாக அமைப்புகளின் அதிகாரிகளல்லாத் தலைவர்களின் விகிதத்திற்குக் கூடுதலாகும். சென்னையில் அதிகாரிகளல்லாதவர்கள் 'செறிவான, வளர்ந்துவரும் சிறுபான்மையே' தேர்ந்தெடுப்பு முறை தோற்றுவிட்டது என்று சென்னை அரசு கருதியதாக உள்துறைப் பொது நிகழ்ச்சி அறிக்கைகள் அறிவிக்கின்றன. ஏனெனில், மக்களுக்கு இம்முறையில் பழக்கமும் அனுபவமும் ஏற்படவில்லை; தேர்தலிவ் தோல்வியைத் தழுவக்கூடும் என்ற பயத்தால் பல மதிப்புக்குரிய வகுப்பினர் தங்களை போட்டியில் கலந்து கொள்ளும் வேட்பாளராக மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. பலர் ஒதுங்கி இருந்தமையால் தலசுய நிர்வாக அமைப்புகள் பெறவேண்டிய இடத்தைப் பெறத்தவறி விட்டன.

ரிப்பன் பிரபுவின் தீர்மானப்பரிந்துரைகளுக்கு ஏற்ப நகராண்மை கிராம நிர்வாக அமைப்புகளில் 2/3 பகுதி பெரும்பான்மை கொண்ட அதிகாரிகளல்லாத அங்கத்தினர் நியமிக்கப்பட்டனர். இவர்களைப் பெரும்பாலும் தெரிந்தெடுத்து நியமிப்பவர் மாவட்ட மாஜிஸ்டிரேட் (நீதிபதி) ஆகையால், இவர்களில் பெரும்பாலோர் அவரைச் சார்ந்திருந்தனர் என்பது குறிப்படத்தக்கது. மாநிலங்களின் தலைமையைப் பொறுத்து தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது; அல்லது தேர்தல் முறையின் செயல்திறன் தெரிந்தெடுக்கப்பட்டோர் பயப்படவும், கடமையுணர்வுக்கு மாறாகவும் இருந்தனர்.

மாவட்ட மன்றங்களின் குறிப்பிட்ட விகித அதிகாரிகளல்லாத அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் கல்லூரியாக துணை மாவட்ட மன்றங்கள் சென்னையில் இயங்க வேண்டியிருந்தது. துணை மாவட்ட மன்ற அங்கத்தினரில் சிலர் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர்; சிலர் மிகக் குறுகியதும் பெரும்பாலும் நீதியற்றதுமாகிய வாக்கெடுப்பு முலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமைப்படி நகராண்மைத் தேர்தல்களும் நடத்தப்பட்டன. நகராண்மை நிர்வாகத் தேர்ந்தெடுப்பு சபையில் 2%க்கும் குறைவான அளவு கிராம மக்களே காணப்பட்டனர்.

சென்னையில் இச்சட்டம்: 1884- ஆம் ஆண்டு சென்னை நகராண்மைச் சட்டத்தின் முன்னுரை தலசுய நிர்வாகத்தையோ, அரசையோ பற்றி ஏதும் கூறவில்லை. மாவட்ட நகராண்மை மன்றங்கள் பொதுப் பயன்பாட்டுத் திட்டங்கள் பல செயல் முறைப்படுத்துவதற்கான வழிவகைகளை வலியுறுத்தியது. நகராண்மை மன்றங்களின் எண்ணிக்கை 12- இல் இருந்து 24 என்று வரையறுக்கப்பட்டது. மொத்த எண்ணிக்கையில் அதிகாரிகளின் எண்ணிக்கை ஒருபோதும் 1/4 க்குக் கூடுதல் இருக்கலாகாது. தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளல்லாத உறுப்பினர்கள் 25 வயதுக்கு மேற்பட்ட ஆண் களாயிருக்க வேண்டும். அவர்கள் குற்றவாளிகளாகவோ, நகராட்சிக் குத்தகை யாளராகவோ வேண்டும். கடமைகளைப் புறக்கணிக்கவோ, செயல்களில் தவறி ழைக்கவோ செய்யின் மன்றங்களின் ஆணைகளை மாற்றியமைக்கவோ, கலைக்கவோ, நீக்கவோ மாநில ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. தலைவரை மாற்றவும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மாவட்ட ஆளுநர்களுக்கு அதிகப்படியாக மேற்பார்வை அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆளுநரைத் தலைவராகக் கொண்ட 24 அங்கத்தினருக்குக் குறைவில்லாத ஒரு மன்றம் அமைக்க 1884- ஆம் ஆண்டு சென்னை மாவட்ட மன்றங்களின் சட்டம் வழிவகைகளைச் செய்தது. மாநில ஆளுநர் அடங்கிய ஆலோசனைச் சபையின் தனியதிகாரத்தின் பேரில், இந்த அங்கத்தினர்கள் தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படலாம். மாநில ஆளுநரின் விருப்புக்கு இணங்க அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது நியமிக்கப்படலாம். எப்படியும் மொத்த அங்கத்தினரில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் 3/4 பகுதியாயிருக்க வேண்டும். தாலுகா மன்றங்கள், பஞ்சாயத்துக்கள், வரிகொடுப்போர் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களே ஆட்சிசெய்வர். பொதுவாக தாலுகா மன்றங்கள் நிதி அதிகாரியால் தலைமை தாங்கப்பட்டன. அரசு தனியாக அனுமதிக்கப்பட்ட சில சூழல்களில் மட்டும் தலைவர்

தேர்ந்தெடுக்கப்பட்டார். நீதிவழுவின், கடமை தவறின், புறக்கணிப்பின் இவற்றின் (மன்றங்களின்) இயக்கத்தில் தலையீடு, மேலாண்மை செலுத்து அதிகாரம் அரசுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. பம்பாய் மாநிலத்தில் செய்தது போன்று, இம் மாநிலத்தும் இம்மசோதாக்களுக்கு ரிப்பன் அனுமதி வழங்கினார். ஏனெனில் இவை மேற்கொண்டு முன்னேற்றத்தைத் தடை செய்யவில்லை. செயல்முறைக்கு உகந்த வேளையில் தலைவர்களுக்கான தேர்தலை நடத்தவும், குறைந்த அளவு மேற்பார்வை அதிகாரத்தைப் பயன்படுத்தவும் சென்னை அரசு அவரால் வேண்டப்பட்டது.

"தலசுய நிர்வாகம் என்ற இச்சிறு மரத்தை நட்டதில், நாம் பெரும்பாலான வேளைகளில் அதனை மேலே பிடுங்கி அது எந்த அளவு ஆழமான வேர்களை விட்டிருக்கிறது என்று பார்க்கிறோம். இதற்கு முன்னால் இருந்தவற்றைக் காட்டிலும் இச்சோதனை வெற்றிகரமாய் அமையும் என்று நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன்". ரிப்பன் பிரபு ஒரு வேளை கூறினார். அவர் நட்ட அம்மரத்து வேர்கள் நிலத்தினடியில் ஊடுருவிச் செல்லாக் காரணத்தால் அவருடைய எண்ணங்கள் ஈடேறவில்லை என்று வரலாற்றாளர் எஸ். கோபால் கூறுகிறார். தலசுய நிர்வாக அமைப்புகள் மூலம் அவர் விரிவாக்க நினைத்த கல்வித்திட்டமும் அதன் நோக்கத்தில் தோல்வியடைந்து விட்டது என்றும் கூறுகிறார். அதிகாரிகளின் பெருமளவு சோம்பலினூடே அவர் தலசுய நிர்வாகத்தில் பெருவெற்றியைச் சாதித்து விட்டார் என்று அவ்வரலாற்றாளர் திறனாய்வு செய்துள்ளார்.

தொடர்ந்த வளர்ச்சிகள்: 1907 இல், அதிகாரங்கள் பன்முகமாக்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்த பேரரசுக் குழு நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை (1909) ரிப்பனின் தீர்மானப் பரிந்துரைகளை எதிர்ப்பதாய் அமைந்தது. அதன் கருத்துப்படி மாவட்ட மன்றங்களின் தலைவர் பொறுப்பிலிருந்து மாவட்டத் தலைவர் விடுபட்டு நிற்பது தவறானது; மாறாக மாவட்டத் தலைவரே மாவட்ட மன்றங்களின் தலைவராய் தொடர்ந்தியங்க வேண்டும். நகராண்மை மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரியல்லாதவராய் இருக்க வேண்டும். மேலும் நகராண்மை அவையில் பொதுவாகப் போதுமான அளவு தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை இருக்கவேண்டும். நியமிப்பு முறை நீடிக்க வேண்டும். அதன் நோக்கம் "சிறுபான்மையினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் தருவதும், அதிகார அனுபவம் தருவதும்" ஆம். பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் பஞ்சாயத்துக்கள் (கிராம மன்றங்கள்) ஏற்படுத்தவும் இக்குழுவின் அறிக்கை பரிந்துரைத்தது.

நடைமுறையில் தலசுய நிர்வாகத்தில் பெருத்த மாற்றங்களேதும் கொண்டு வரப்படவில்லை. அதிகாரப் பன்முகப் படுத்துக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப் போதிய திட்டங்களைத் தீட்டும் பொறுப்பு மாநில அரசுகளிடம் விடப்பட்டது. அவை அவ்வறிக்கையின் பொதுக் கோட்பாடுகளை ஒப்புக் கொண்டன. இருந்து வந்த சூழலில் மாற்றங்களேதும் கொண்டு வர இயலவில்லை. ஆகவே, (ரிப்பனின் தீர்மானம்) முதல் மாண்ட் — போர்ட் சட்டம் (1884-1918) ரிப்பனின் பரிந்துரைகளைச் செயல்முறைப் படுத்துவதில் தலசுய நிர்வாகத்தில் ஏதும் பெரிய சாதனைகள்

சாதித்திடவில்லை. சிற்சில மாற்றங்களும், மாறுதல்களும் மட்டுமே கொண்டு வரப்பட்டுள்ளன. பெரும்பாலும் அவை 1908 முதல் 1917- ஆம் ஆண்டு வரையிலான தேர்தல் முறைகளில் மட்டுமே ஏற்பட்டன.

1880- ஆம் ஆண்டுகளுக்குப்பின் தலசுய நிர்வாகத்தில் பெருத்த சீர்திருத்த இயக்கங்கள் 1920 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டன. 1919- ஆம் ஆண்டு சீர்திருத்தத்திற்கான அறிக்கை தலசுய நிர்வாகத்தின் வளர்ச்சியை வேண்டியது. லண்டனின் இந்தியச் செயலரும் அரசப்பிரதிநிதியும் இம்முன்னேற்றங்களை நடைமுறைப் படுத்தவும் விழைந்தனர். மேலும் இந்தியாவில் தன்னாட்சி அமைப்புக்களை விரிவாக்கவும் முன்னியக்கவும் அவர்கள் விழைந்தனர். அதிகார அங்கத்தினரின் செயல்களுக்கு அது வரம்பு வைத்தது; நியமிக்கப்பட்ட அங்கத்தினரின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தியது. பஞ்சாயத்து முறை நிர்வாகத்தின் வளர்ச்சியில் அது அதிக அக்கறை எடுத்துக் கொண்டது. அப்போது நடைமுறையில் இருந்த வாக்குரிமையின் கண்டிப்புகளையும் அது தாக்கியது.

இவ்வறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் திட்டங்களைத் தீட்ட சென்னை அரசு அனுமதிக்கப்பட்டது. மொத்த அங்கத்தினரின் எண்ணிக்கையில் 3/4 இலிருந்து 2/3 பகுதிவரையிலும் மாறுபாட்டுடன் காணப்பட்ட இம்முறையில் அது சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதாவது அனைத்து தலசுய நிர்வாக அமைப்புகளின் பெரும்பான்மை அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்பதாம். 1925-26- ஆம் ஆண்டுகளில் பின் தங்கிய சில பகுதிகளில் உள்ள சில நகராண்மை மன்றங்களின் தலைவர்கள் மட்டும் நியமிக்கப்பட்டோராய் அல்லது அலுவல் சார்புடையோராய் இருந்து வந்தனர். மற்றும் சில நகராண்மை மன்றங்கள் தங்கள் தலைவர்களைத் தேர்ந்ததெடுத்தன. சில குறிப்பிட்ட மாவட்ட மன்றங்களைத் தவிர, இம்மாநிலத்து மாவட்ட மன்றங்களின் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளல்லாதாராகவே இருந்தனர். பொதுவாக துணை மாவட்ட மன்றங்களின் அங்கத்தினர்களும் பெரும் பான்மை தேந்தெடுக்கப்பட்டவர்களே; அதன் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவரே. மாநிலத்தில் நகர்புற, கிராமப்புற, வாக்குரிமைகள் விஸ்தரிக்கப்பட்டன. சில இடங்களில் பஞ்சாயத்துகள் அல்லது ஊரக ஒன்றிய மன்றங்கள் கொண்டு வரப்பட்டன. தலைவரும் பெரும்பான்மை அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கோட்ட ஆணையர், மாவட்ட அதிகாரி ஆகியோருக்கு தல நிர்வாகங்கள் மீதான மேற்பார்வை, கண்காணிப்பு ரத்து அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

தொடர்ந்த காலங்களில் துணை மாவட்ட மன்றங்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காய் செய்யவில்லை. மாவட்ட மன்றங்களின் இயக்கம் துணை மாவட்ட மன்றங்களின் சிறப்பினைப் பாதித்தன. ஆகவே துணை மாவட்ட மன்றங்கள் 1930-ஆம் ஆண்டுகளில் அழிக்கப்பட்டன. புது வரிவிதிப்பு முறைகள் மக்களால் விரும்பப்பட வில்லை. ஆகவே இவ்வமைப்புகளால் இருந்து வரும் வரிகளையும் வசூலிக்க இயலவில்லை. நிதிப் பற்றாக்குறையினால் கடமைகள் ஒழுங்காய் நடத்தப்படவில்லை; ஆகவே, வளர்ச்சி தடைப்பட்டது. மேலும் 1929-31- ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் தலசுய நிர்வாக அமைப்புகளின் நிதித்துறை சார்ந்த இயக்கத்தைப் பாதித்தது. இந்திய

விடுதலைப் போரின் வீரியத்தாலும் இவ்வமைப்புகள் புறக்கணிக்கப்பட்டன. எனவே " இந்த தலசுய நிர்வாக அமைப்புகளின் பெயர் கெட்டு விட்டது" , என்று பேராசிரியர் மோரிஸ் ஜோன்ஸ் கூறுகிறார்.

பஞ்சாயத்து முறை: தமிழகத்தில் ஊரக ஆட்சி முறையின் கால்கள் பன்னெடுங்காலங்களுக்கு முன்பிருந்தே இருந்து வந்த போதிலும், தற்கால ஊரக நிர்வாக முறையின் தோற்றத்தை நாம் 1802- ஆம் ஆண்டின் 25- ஆம் ஒழுங்குச் சட்டத்(Regulation) தில் காணலாம். இச்சட்டம் கிராமப் புறங்களில் கர்ணம் (Karnam) என்ற பதவியை ஏற்றுக் கொண்டது; அத்துடன் அப்பதவியின் நீடிப்பையும் வேண்டியது. 1816- இல் கிராமத்தலைவர் (ஊர்த்தலைவர்) ஊரகமுன்சிப் என்று அறிவிக்கப்பட்டது. ஊராட்சி களைப் பொறுத்த அளவில் ஒரு புது அதிகாரி இவ்விதம் உதயமானார். ரூ.10- க்குக் கூடுதலாக மதிப்பில்லாத குற்றங்களை அவர் விசாரணை செய்யும் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டது. பஞ்சாயத்து (ஊரக அவை) கூட்டும் அதிகாரமும் அவருக்க வழங்கப் பட்டது. பிற்காலத்தில் பஞ்சாயத்து என்ற பெயரால் அறியப்பட்ட இந்த ஊரவை தலங்களில் ஏற்படும் வழக்குகளை விசாரணை செய்தது. நீதித்துறையில் ஏற்பட்ட வேண்டாச் செலவுகளை இம்முறை குறைத்தது. சிறுதர குற்றவழக்குகளையும் முன்சிப் விசாரித்து, தண்டனை வழங்கினார்.

1881- ஆம் ஆண்டு இந்திய அரசு, மாநில அரசுகளிடம் குவிந்து கிடந்த பெருமளவு வரவையும் செலவையும் தல நிர்வாகங்களுக்கு மாற்றிட ஆணையிட்டது. தலசுய நிர்வாகங்களின் செயற்பாட்டு எல்லை மிகவும் சிறிதாக வரையறுக்கப்பட்டது. இப்படி எல்லை வரையறை செய்வதினால் அவை மக்களிடையே நல்லெண்ணத்தையும், திறமையாட்சியையும், தல அறிவையும் பெருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இத்தகையதோர் நோக்கத்தை நடைமுறைப்படுத்த சேலம் மாவட்ட ஆளுநர் X. ஸ்டோக்ஸ் ஊரக ஒன்றியங்களை ஏற்படுத்த பரிந்துரைத்தார். தலசுய நிர்வாக அமைப்புக்குழு இதனை எடுத்தாய்ந்தது; அதன் கருத்துப்படி ஊரக ஒன்றியங்களை ஏற்படுத்துவதாயின் பழங்கால கிராம சபைகளின் அதிகாரங்களைப் புதுப்பிக்கலாம் என்பதாம். அரசு இப்பரிந்துரையை ஏற்றுக் கொண்டது. 1884- ஆம் ஆண்டு தலமன்றங்களின் சட்டம் ஒவ்வொரு வருவாய் ஊரக கோட்டங்களிலும் ஊரக ஒன்றியங்களை நிறுவ முயற்சி மேற்கொள்ள அனுமதி வழங்கியது.

ஊரக ஒன்றியங்கள் ஏற்படுத்தும் முயற்சிக்குப் பெரும் எதிர்ப்புக்களும் நாலாப்பக்கங் களிலும் எழுந்தன. ஆனால் சட்டச்சரத்துக்கள் அமுல் செய்யப்பட்டன. இப்படி அமைக்கப்பட்ட ஊரக ஒன்றியங்கள் ஊரக அமைப்புகளைக் காட்டிலும் சிறு நகர அமைப்புகளாகவே காணப்பட்டன. இம்முறை சில குறிப்பிட்ட ஊரகங்களில் மட்டுமே செயல்பட்டு வந்தது. ஒன்றிய மன்றங்கள். தனித்தனி ஊர்களுக்கோ அல்லது ஒன்றிய ஊர்களுக்கோ அமைக்கப்பட்டன. இவற்றின் எண்ணிக்கை ஐந்துக்குக் குறையாமலிருக்க வேண்டும். ஊரக ஒன்றியங்களை ஏற்படுத்தும் ஊர்த்தலைவர்கள் மன்றத்தின் அலுவல் சார்பான அங்கத்தினராக மாற்றப்பட்டனர். அவர்களில் ஒருவர் மட்டும் மன்றத் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் அங்கத்தினர் மொத்தமாக அரசால் நிய மிக்கப்படலாம், அல்லது வரிகொடுப்போரால் பகுதியாகத் தேர்ந்தெடுக்கப்படலாம் நகராண்மைக் கழகங்களைப் போன்று இவர்களும் இயங்கி வந்தனர்.

அதிகாரப் பன்முனைப்படுத்துக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப 1920- இல் இந்திய அரசு, பஞ்சாயத்து (ஊராட்சி)க்களின் கடமைகளையும் செயல் முறைகளையும் விரிவாக்க மாநில அரசுகளை வேண்டியது. அதுபடி 1920- ,இல் சென்னை ஊரகங்களின் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பணிகளைச் செய்யப் போதிய அதிகாரமும், நிதியும் இல்லாக் காரணத்தால், இச்சட்டப்படி தோற்றுவிக்கப்பட்ட ஊராண்மை கழகங்கள் தோற்று விட்டன. ஊரகங்களின் மாநில அமைப்புகள் கட்டாயம் ஊரகக் கழகங்களை அமைக்க வேண்டுமென்று அறிவித்தன. 1930- இல் சென்னை தல மன்றங்களின் சட்டம் திருத்தி யமைக்கப்பட்டது. அதுபடி ஊரகசட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊராண்மைக் கழகங்களையும் அதன்பால் கொண்டு வந்தது. ஊரக ஒன்றியங்களுக்கு ஒப்பான முக்கியத்துவம் ஊராண்மைக்கும் வழங்கப்பட்டது எனலாம். தாலுகா மன்றங்களே இவற்றைக் கண்காணித்தும், மேற்பார்வையிட்டும் வந்தன. ஆனால் தாலுகா மன்றங்கள் அழிக்கப்பட்டபின், இவ்வுரிமைகள் மாவட்ட மன்றங்களுக்குத் தரப்பட்டன.

1935- இல் ஊராண்மைகளின் இயக்கங்களையும், நடைமுறைகளையும் கண்காணிக்க மாவட்ட ஊரக அதிகாரியும் துணை ஊரக அதிகாரியும் நியமிக்கப் பட்டனர். "எப்படியும் கட்சி வேறுபாடுகளும் சண்டைகளும் ஊழல்களும் ஊராண்மைகளின் வளர்ச்சியைத் தடுத்தன. பொதுப் பயன்பாட்டுப் பணிகள் புறக்கணிக்கப்பட்டன" என்று இராமசாமி கூறுகிறார். இக்குறைகளை அகற்ற 1946- இல் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. வெறும் தலத்தன்மையுடைய காரியங்களைப் பொறுத்த மட்டில் இவ்வூராண்மைகளை இச்சட்டம் மாவட்ட ஆளுநரின் கண்காணிப்பில் விட்டு வைத்தது; பொது மேற்பார்வையை வருவாய்க் குழுவிடமும் ஒப்படைத்தது. ஊராண்மைகளில் நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மன்றத்தின் எந்நபரையும் தலைவராக நியமிக்கும் அதிகாரம் மாவட்ட ஆளுநருக்கு இருந்தது.

எடுத்துக்காட்டாக 1920- வரை இராமநாதபுர மாவட்டத்தில் மொத்தம் 19 ஊராண்மையகங்களே இருந்தன. இன்றிருப்பன பல 1917- ஆம் ஆண்டையொட்டி நிறுவப்பட்டவையே. 1939-40 ஆம் ஆண்டுகளில் 26 பஞ்சாயத்துகளுமிருந்தன. மக்கள் இதன் நிர்வாகத்திலும் செயலிலும் அதிக நாட்டமும் அக்கரையும் காட்டிய காரணத்தால் அதன் செல்வாக்கும், கடமைகளும் ஆண்டுக்கு ஆண்டு விரிவடைந்தன. அவை கிராமச் சாலைகள், கால்வாய் மதகுகள், பாலங்கள், கிராமத்துக்கு ஒளி, தெருவிளக்குகள், சாக்கடைகள் அமைத்தல், தெரு துப்புரவு செய்தல், குப்பைக் குவியல்களை அப்புறப்படுத்துதல், நீரடி, பொதுக்கழிப்பிடங்களை அமைத்தல், இடு, சுடுகாடுகளைப் பராமரித்தல், குளம், குட்டைகள், கிணறுகள் மூலம் குடி தண்ணீர் வசதி செய்தல், பொது இடங்களையும், புறம்போக்குகளையும் கண்காணித்தல் அம்மைக் குத்துதலை நடைமுறைப் படுத்துதல், பிறப்பு இறப்புகளைக் குறித்தல் போன்ற கடமைகளைச் செய்து வந்தன. இக்கடமைகளையும் பொதுப்பணிகளையும் செவ்வனே ஆற்றிய பஞ்சாயத்துக்களும் இருக்கவே செய்தன. பஞ்சாயத்துப் பகுதியில் வாழ் மக்களுக்கு பஞ்சாயத்துக்கள் நடத்தி வந்த மருந்தகங்களும், முதலுதவியகங்களும் பயன் பட்டன. சில பஞ்சாயத்துக்கள் கல்விக் கூடங்களை நடத்தின; பல நூலகங்களையும் நடத்தி வந்தன. நிதிப் பற்றாக்குறையினாலும், பல்வேறுபட்ட பிரச்சினைகளினாலும் இவை முற்போக்குச் செயல்களைச் செய்திட இயலவில்லை. இப்பணக் பற்றாக்குறை மக்களின் தாழ்ந்த பொருளாதார நிலையைச் சுட்டிற்று.

விடுதலைக்குப்பின் தலசுய நிர்வாகம்: 1950- இல் பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தலசுய அமைப்புகளைப் பொறுத்தமட்டில் இச்சட்டம் பெருத்த மாற்றங்களைக் கொண்டு வந்தது. 500- க்கும் குறைவாக மக்கட்தொகையுள்ள ஊர்கள் பலவற்றை இணைத்தும் பஞ்சாயத்துக்கள் அமைக்க வழி வகுத்தது. 5000- க்கும் அதற்குக் கூடுதல் மக்கள் தொகையும், வருடாந்திரம் ரூ.10,000 வருமானமும் உள்ள பஞ்சாயத்துக்கள் முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் என்றும் மற்றவை இரண்டாம் வகுப்பு பஞ்சாயத்துக்கள் என்றும் பகுக்கப்பட்டன. ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஐந்துக்குக் குறையாமலும், பதினொன்றுக்குக் கூடாமலும் அங்கத்தினரைக் கொண்டிருக்க வேண்டும்;அங்கத்தினர் அனைவரும் தேத்ந்தெடுக்கப்பட்டோராயிருக்க வேண்டும்; 10- ஆண்டுகளுக்குச் சில இடங்கள் தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கப்பட வேண்டும். அங்கத்தினரின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் ; சட்டசபைகளுக்குள்ளது போன்ற வாக்குரிமை வயதுவந்தோர் அனைவருக்கும் வழங்கப்பட்டது. எந்த கிராம அதிகாரியும், அரசு அதிகாரியும், தல மன்றத்தாரும் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படலாகாது. வாக்குரிமையாளர் அனைவராலும் நேரடி வாக்குப்பதிவில் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கத்தினர் தங்களில் ஒருவரை துணைத்தலைவராய்த் தேர்ந்தெடுக்கலாம். தேவைப்படுமிடத்து விளம்பரங்கள் மூலம் அரசு நிர்வாக அதிகாரி களை நியமிக்கும். பஞ்சாயத்து நிறைவேற்றிய தீர்மானங்களை அவர் நடைமுறைப்படுத்த வேண்டும். தீர்மானங்களில் ஏதேனும் ஒன்று மக்களுடைய வாழ்வுக்கும், உயிருக்கும், உடம்புக்கும், சொத்துக்கும் தீங்கிழைக்குமென்று தலைவர் கருதினால், அதனை நிர்வாக அதிகாரி அரசிடம் எடுத்துக்கூறி, அரசின் முடிவுக்கேற்ப செயல்படலாம். கடமைகளில் தவறின் பஞ்சாயத்துக்களை அரசு நீக்கவோ, மேலாண்மை கொள்ளவோ செய்யலாம்.. அதே வேளை நகராண்மைக்கழக கண்காணிப்பாளரும், தல மன்றக் கண்காணிப்பாளரும் தீர்மானத்தை தடை செய்யவோ, நீக்கி வைக்கவோ, தலைவரையோ, துணைத் தலைவரையோ மாற்றவோ, நடத்தைக் குறையின் காரணத்தால் அங்கத்தினரை மாற்றவோ அதிகாரமுண்டு. விடுதலைக்குப்பின் பஞ்சாயத்தாட்சியில் இந்திய அரசு பெருத்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது. காந்திஜி நினைத்தது போன்ற ஊராட்சி இன்னும் நடைமுறையில் வரவில்லை என்றாலும், ஓரளவேனும் வெற்றி பெற்றோம் என்று கூறலாம். காங்கிரஸ் ஆட்சியின் போது தமிழகத்தில் பஞ்சாயத்தாட்சி அரசின் பெரும் கவனத்தை ஈர்த்தது என்றால் மிகையாகாது. ஆனால் அவ்வாட்சி தொடர்ந்த கட்சிகளின் ஆட்சியின்போது ஊழல்களின் இருப்பிடமாய்த் திகழ்ந்தது.

சமுதாயம், வர்த்தகம், வாணிபம், செய்தித்தொடர்பு, போக்குவரத்து

சமுதாயம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழகச் சமுதாயம் பரம்பரை யாக வந்த சமுதாயப் பண்புகளின் தொடர்ச்சியாகவே இருந்தது. வெறுக்கத்தக்க சாதி முறை தொடர்ந்து நிலவிற்று. பிராமணர்கள், தொடர்ந்து சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்று வந்தனர். அரசப் பணியிலும், சமய குருக்களாகவும், இராணுவப் பணியிலும், நிலக்கிழார்களாகவும் வாழ்ந்தனர். அவர்கள் சமுதாயத்தில் அதிகமாக மதிக்கப்பட்டனர். அவர்களுக்கு அடுத்து சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றவர்கள், முதலியார், செட்டியார், பிள்ளை போன்றோராவர். அவர்கள் வணிகர்களாகவும், கணக்கர்களாகவுமிருந்தனர். சமுதாயத்தின் கீழ் நிலையிலிருந்தவர்கள் தாழ்த்தப்பட்ட

தீண்டத் தகாதவர்களேயாவர். இவர்கள் தனியாக, ஒதுக்குப்புறத்தில் வசித்தனர்; வயல்களில் பணி புரிந்தனர். தமிழகச் சமுதாயத்தில் பெண்களுக்குரிய மரியாதை வழங்கப்படவில்லை. இவ்வாறான பரம்பரையாக வந்த, மூடப்பழக்கங்கள் நிறைந்த, சமயநோக்குடைய தமிழக சமுதாயத்தில் சிறிது சிறிதாக,16, 17, 18- ஆம் நூற்றாண்டுகளில் மாற்றங்கள் புகுத்தப்பட்டன. ஆனால் இந்த மாற்றங்கள் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் உணரப்பட்டன.

கல்வி வளர்ச்சி பெரும்பாலும் பிராமணரிடமே இருந்தது; அவர்தம் சமஸ்கிருத மொழி போற்றிப் பாதுகாக்கப்பட்டது. பொது மக்களின் மொழியான தமிழ் மொழி தான் வளர்வதற்காக பல இன்னல்களை அக்காலத்தில் அனுபவிக்க வேண்டியதாயிற்று. அடிமைமுறை என்பது தமிழகத்திற்கப் புதிதல்ல. கிழக்கிந்தியக் கம்பெனியே அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டது. ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகள் சென்னை மாநிலத் தொழிலகங்களில் பணி புரிந்தனர். அடிமைகள் நடத்தப்பட்ட முறை மனிதத் தன்னையற்றதாகவும், பொறுத்துக் கொள்ள முடியாததாகவுமிருந்தது. 1833-ஆம் ஆண்டு சாசனச் சட்டம் அடிமை ஒழிப்புச் சட்டம் பற்றி சிந்திக்குமாறு தலைமை ஆளுநரைத் தூண்டிற்று. கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட தொழிலாளர் (bonded labour) மற்ற அடிமை முறை 1877- ஆம் ஆண்டு ஒழிக்கப்பட்டது. உடன்கட்டை ஏறும் (sati) முறை இந்தியா முழுவதிலும் இயங்கி வந்த சமுதாயச் சீர்கேடு ஆகும். தமிழகத்தில் பெரும்பாலும் செல்வந்தர்களிடத்தில் இப்பழக்கம் அதிகமாகக் குடிகொண்டிருந்தது. பிராமணர்களும், மற்ற பொதுமக்களும் இப்பழக்கத்தினை அதிகமாகப் பின்பற்றவில்லை. சென்னை அரசாங்கம், உடன்கட்டை ஏறும் பழக்கத்திற்கு எதிரான சட்டங்களை இயற்றி அப்பழக்கத்தை ஒழித்தது.

பொருளாதாரம், பஞ்சம்

19- ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் மொத்தப் பரப்பளவு சுமார் 140,000 சதுர மைல்களாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகத்தின் மக்கட் தொகை 15 மில்லியன்களாகும்; பத்தொன்பதாம் நூற்றாண்டில் மக்கட் தொகை பெருகியது. பொதுவாக, பெருகிவரும் தேவைக்கேற்ப தமிழகத்தின் பொருளாதாரம் அமைந்திருந்தது. தமிழகத்தில் வருவாய் திரட்டும் முறையும் குழப்பமான நிலையிலிருந்தது. இதற்குக் காரணம், இடத்திற்கு இடம், நேரத்துக்கு நேரம், வருவாய் முறையிலிருந்த வேறுபாடு களேயாகும். வருவாய் ஆட்சி முறையிலிருந்த சீர்கேடுகளை அகற்றுவதற்கு இருந்த ஒரேவழி நிரந்தர வருவாய் அமைப்பு முறையை ஏற்படுத்துவதேயாகும். எனவே நெறியாளர்கள் மன்றம், நிரந்தர வருவாய் முறையைப் பயன்படுத்துமாறு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆலோசனை கூறியது. 1801- இல் சென்னை ஆளுநர் வருவாய்க் குழுவிற்கு ஆணை ஒன்று பிறப்பித்தார். இதன்படி, வருவாய் திரட்டும் முறையைச் சரியாக ஆராய்ந்து, தேவையான பரிந்துரைகள் செய்யும்படி வருவாய்க்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. பலவகையான நில உரிமையாளர்கள், வருவாய் வரிவசூல் செய்யப்பட வேண்டியது. குத்தகைதாரர்களின் உரிமைகள், நிலக்கிழாருக்கும் குத்தகைதாரருக்குமிடையேயான தொடர்புகள், வணிகவரி வசூல் செய்தல், போன்றவை பற்றி பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தப் பரிந்துரைகள் படிப்படியாக தென் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டன. பாளையக்காரர்கள் ஜமீன்தார்களாக்கப் பட்டனர்.

பாளையங்கள் ஜமீன்களாயின. செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏலம் போடும் முறை பின்பற்றப்பட்டது. ஏலமுறையின் மூலமாக பண்ணைகள் பெற்றவர்கள் முட்டாதார்கள் (Muttadars) என அழைக்கப்பட்டனர். தமிழகத்தில், ஜமீன்தாரி முறை முழுமையாக வெற்றி பெறவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று அன்று வசூல் செய்யப்பட்ட வரியில் மூன்றில் இரண்டு பங்கு வரி அரசுக்கு செலுத்த வேண்டிய நிலையேயாகும்.

ரயத்துவாரி முறைதான் செல்வாக்குப் பெற்ற, வெற்றிகரமான நில வருவாய் கொள்கையாகும். நில உடைமையாளர்கள் அல்லது நில பட்டா வைத்திருப்பவர்கள் தங்களது நிலங்களை விற்கவோ, பிரித்து எழுதி வைக்கவோ உரிமை பெற்றிருந்தனர். அரசுக்கு வரி செலுத்திக் கொண்டிருக்கும் வரை அவர்கள் தமது நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதில்லை. இருப்பினும், கடன்களை செலுத்துவதற்காக மட்டுமே குறிப்பிட்ட நிலங்களை, நடைமுறையில் விற்க உரிமை வழங்கப்பட்டது. கர்னல் ரெட் என்பவரால் புகுத்தப்பட்ட இம்முறையினை, மன்ரோ, சென்னை மாநிலத்தில் மிக விரிவான முறையில் செயல்படுத்தினார். வரி வசூலில் மூன்றில் இரண்டு பங்கு செலுத்த வேண்டும் என்ற முறை மாற்றப்பட்டு மூன்றில் ஒரு பங்கு வரியை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது.

19- ஆம் நூற்றாண்டில் நிலவரியே அரசாங்கத்தின் முதன்மையான வருவாயாயிருந்தது. இரண்டு முறையான வரிமுறைகள் இருந்தன. 1. மொகதார்பா (Mohatarfa) அல்லது வணிக வரி, உடமை வரி. இந்த வரி முறை 1857- இல் ஒழிக்கப்பட்டது. 2. அப்காரி அல்லது மது வகைகளில் மீதான வரி. கம்பெனியும், ஆங்கில அரசும் உப்பு தனியுரிமை மீது வரி விதித்தன; சுங்கவரி, மாற்றியமைக்கப்பட்ட சுங்க முறை வரிகளும் வசூல் செய்யப்பட்டன. 19- ஆம் நூற்றாண்டின் முதற் பாதியில்இந்தியத் திறமையும், தொழிலும், உற்பத்தியும் வெளிநாட்டவருக்கு ஒரு சவாலாக அமைந்தன. அந்நூற்றாண்டின் பின் பாதியில் இப்பிரச்சினை சிக்கலானதாக மாறியது. மேற்கு நாடுகளில் ஏற்பட்ட தொழிற் புரட்சியும், புதிய போக்குவரத்து வசதியும், செய்தித் தொடர்பு வசதியும் மேலும் பங்கீடு முறையைப் பிரச்சினைக் குரியதாக்கியது.

நீர்ப்பாசன வசதியும் பெருகியது. காவிரியிலும், கொள்ளிடத்திலும் அமைக்கப்பட்ட மேல், கீழ் அணைக்கட்டுக்கள் முக்கிய நீர்ப்பாசன அமைப்புக்களாகும். இவற்றின் மூலமாக ஒரு மில்லியன் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைத்தது. இதற்கு அடுத்து பெரியார் அணை முக்கியமானதாகும். அணை, கால்வாய் நீர்ப்பாசன முறை தவிர, பண்டைய பழக்கங்கள், தவிர கிணறு, குளங்களிலிருந்து நீர் ஏற்றி தேக்குதல், மழைக் காலங்களில் நீர்ப்பாசன வசதி போன்றவை செய்யப்பட்டன.

இந்தியாவில் பஞ்சம் என்பது தொடர்ந்து இருந்து வந்த ஒரு பிரச்சினையாகும். தமிழகம் இதில் விதி விலக்கல்ல. சங்க காலத்திலிருந்தே அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டதுண்டு. 1866-67 ஆம் ஆண்டு பஞ்சம் ஏற்பட்டபோது ஒரிசாவும், சென்னை வரையான கிழக்குக் கடற்கரைப் பகுதியும் தாக்குண்டன. சுமார் இரண்டு மில்லியன் மக்கள் இப்பஞ்சக் காலத்தில் உயிரிழந்தனர். 1867- இல் அமைக்கப்பட்ட பஞ்ச ஆணைக்குழு (Famine

Commission) மனிதாபிமானக் கொள்கைக்கு அடிக்கோடிட்டது. பஞ்சகாப்பு நிதிமுறையை ஏற்படுத்த வேண்டியதன் தேவையை 1894- இல் சர்ஜான்ஸ்ட்ரேட்சி உணர்த்தினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அனைத்துப் பஞ்சங்களிலும் 1876-78 ஆம் ஆண்டின் சென்னைப் பஞ்சமே மிகக் கொடுமையானதாகும். "இப்பஞ்சம் இதற்கு முன் ஏற்பட்ட எல்லாக் கொடுமைகளுக்கும் மிஞ்சிய ஒன்றாகும்" . இந்த பஞ்ச காலத்தில்தான் முதன் முதலாக பங்கீடு (ration) முறை கொண்டு வரப்பட்டது. 1898- ஆம் ஆண்டு மற்றொரு பஞ்ச ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டு பஞ்ச நிவாரணவழி காணப்பட்டது. நிலையான போர்க்கால நிவாரண நடவடிக்கைகள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

இருப்புப்பாதை, தபால் முறை

இந்தியாவில், முதன் முதலில், டல்ஹௌசிபிரபு தலைமை ஆளுநராயிருந்தபோது (1848-56), இருப்புப்பாதை (1853-56) அமைக்கப்பட்டது. பம்பாயும், தானாவும் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டன. கல்கத்தாவும், ராணிகஞ்சும் இணைக்கப்பட்டன. தமிழகத்தில் சென்னையும், அரக்கோணமும் இருப்புப்பாதையால் இணைக்கப்பட்டன. துவக்கத்தில் இருப்புப்பாதை முறை தனியார் நிறுவனங்களிடம் "உறுதிப்பாடு முறை" (Guarantee System) யின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன்படி, அரசாங்கம் ஒரு உறுதிப்பாடு செய்து கொடுத்தது. இரயில்வேயில் வரும் இலாபத்தின் அளவு 5%- க்கும் குறைந்தால் அந்த குறைந்த விகித அளவுப்பணத்தை அரசு கருவூலத்திலிருந்து கொடுக்கப்படும், கிடைக்கின்ற இலாபத்தின் அளவு 5%—க்கும் கூடினால், அதிகமாக உள்ள பணத்தில் பாதியை அரசு பெற்றுக் கொள்ளும். இரயில்வே தவிர, தந்தி முறை சுலபமான தபால் போக்குவரத்து போன்றவையும் செயல்படுத்தப்பட்டன. தபால், தந்தி முறைகள் செய்திப்போக்குவரத்துத்துறையில் முக்கிய அங்கமாக இருந்தன. இதனால் அரசாங்க வருமானம் கிடைத்தது என்பது உண்மை எனினும், பொது மக்களுக்கும் நன்மை பயத்தது. வாணிகம் தூண்டப்பட்டது; தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையானது; செய்தித் தொடர்பு இருந்ததால் வெகு தொலைவிலிருந்து தொடர்பு கொண்டு ஒற்றுமையையும், கூட்டமைப்பையும் ஏற்படுத்த முடிந்தது.

சமயம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னை மாநில அரசு கிறித்தவ சமயப் போதகர்களின் சமயக் கொள்கையை ஆதரித்தது. கிழக்கத்திய நாடுகளில் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதில், கிழக்கிந்தியக் கம்பெனியின் நெறியாளர்கள் தீவிரம் காட்டினர். ஆனால், 1857ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க்கலகத்திற்கு பின்பு அவர்கள் தம்கருத்துக்களை மாற்றிக் கொண்டனர். எனவே மூன்று மாநிலங்களின் ஆளுநர்களும் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதில் தங்களுக்கிருந்த ஆர்வத்தைக் குறைத்துக் கொண்டனர். இதன் காரணத்தால், தாய் நாட்டின் பரிவினைப் பெற்றிருந்த சமயப் போதகர்கள் தாங்களே சுயமாக இருந்து கிறித்தவ சமயத்தைப் பரப்பத் தொடங்கினர். கிறித்தவ சமயத்தைப் பரப்புவதோடு மட்டுமன்றி சமுதாய மாற்றங்களையும் செய்ய முனைந்தனர். தமிழக இந்துக்கள் அவர்களின் செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் இவ்வெதிர்ப்புக் கள், தமி ழகத்தில் ஐரோப்பியர் புகுந்ததிலிருந்தே இருந்து வந்த காரணத்தால் இதனை அவர்கள் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தரங்கம்பாடியில் கிறித்தவ போதகராயிருந்த சுவாட்ஸ்

என்பவர், இளம் தேவரடியாள் ஒருத்தியைப் பார்த்து, புனிதமற்ற தொழில் புரிபவர்கள் சொர்க்கத்தை அடையமாட்டார்கள் எனக் கூறினார். அதற்கு பதில் கூறிய அப்பெண், "ஐயா, அப்படியானால் ஒரு ஐரோப்பியர் கூட சொர்க்கத்திற்குச் செல்ல மாட்டார்கள்" எனக் கூறினாள். இவ்வாறு ஐரோப்பியர்கள் இந்துக்களை மூடப்பழக்கங் களை உடையவர்கள் என்றும், முகமதியர்களை கெட்டவர்கள் என்றும் கருதினர்.

1833- ஆம் ஆண்டு சாசனச் சட்டத்திற்குப் பின், மேற்பார்வையாளர் குழு, தலைமை ஆளுநருக்கு கீழ்க்கண்டவைகளில் சீர்திருத்தம் கொண்டு வருமாறு ஆணையிட்டது. (அ) புனிதப் பயணவரியை நீக்குதல் (ஆ) சமயக் காரணங்களுக்காக நிதி வசூல் செய்வதற்கு அரசுப் பணியாளர்கள் நியமிக்கப்படுவதைத் தவிர்த்தல் (இ) விழாக்காலங்களில் காவல்துறையினர் பணியில் அமர்த்தப் படுவதைத் தடுத்தல் போன்றவை. ஆனால் சமய மானியங்களின் நிர்வாக முறை வருவாய் ஆட்சி முறையுடன் இணைத்துக் கொள்ளப் பட்டது.

சமுதாயச் சீர்திருத்தங்கள்

சமய, சமுதாயச் சீர்திருத்த விவகாரங்களில், 19- ஆம் நூற்றாண்டில், சமுதாயதத்துவம் பற்றிப் பேசுவோர் தமிழகத்தில் யாருமில்லை. மொத்தத்தில் இந்தியத்துணைக் கண்டத்தில் ராஜாராம் மோகன்ராய் போன்றவர்களே இருந்தனர். எனினும், பொதுமக்களின் தேவைக்கேற்பவும், நிர்வாகத்தினரின் தூண்டுதலாலும் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன.

அடிமை முறை இருந்தது. 1843- ஆம் ஆண்டுச்சட்டம் V- இன் படி அடிமை முறை கடுமையாக விமரிசிக்கப்பட்டது. அடிமை உரிமை, நீதிமன்றத்தில், சட்டத்தின் அடிப்படையில் கோர முடியாது. இந்த ஆண்டுக்கும் முன்பே, 1811- இல் அடிமைகள் இறக்குமதி செய்யப்படுதல் தடுக்கப்பட்டது. 1832- இல் அடிமைகளை விற்பதும், வாங்குவதும் குற்றமாகக் கருதப்பட்டது.

குழந்தை மணம் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. "சாரதா சட்டம்" என அழைக்கப்படும் இச்சட்டம் ஆண்களுக்கு 18- வயதையும், பெண்களுக்கு 14- வயதையும் திருமண வயதாக நிர்ணயித்தது. 1850- இல் இயற்றப்பட்ட இந்து உயில்கள் சட்டம், 1850- ,இல் இயற்றப்பட்ட இந்து விதவை மறுமணச்சட்டம் போன்றவை ஆங்கில அரசால் புகுத்தப்பட்ட முக்கிய சீர்திருத்தங்களாகும். 1891- ஆம் ஆண்டின் வயது உடன்பாட்டுச் சட்டம் ஒருவரின் மனைவியின் வயது 12- க்கும் குறைவானால் அவர்களது திருமணம் ஏற்றுக் கொள்ளப்படாது என அறுதியிட்டுச் கூறுகிறது. மேலும், பிரிட்டிஷ் இந்திய அரசு ஆலைச் சட்டங்களை (Factory Acts) இயற்றி தொழிற்சாலை களிலும், மில்களிலும், ஆலைகளிலும் தொழிலாளர் நலன் காக்க முயன்றது. 1881, 1891 ஆம் ஆண்டுச் சட்டங்கள், பெண்கள், குழந்தைகளின் வேலை நேரத்தைக் குறைத்தது. மாநில அரசுகளை, தொழிலாளர்களுக்கு நல்ல குடிநீர் வழங்குதல், காற்றோட்டம் ஏற்படுத்துதல், சுகாதார வசதி செய்தல் போன்றவை பற்றி சட்டதிட்டங்கள் வகுக்குமாறு ஆணை பிறப்பித்தது. தமிழகத்தில், சமுதாய மாற்றங்கள் என்பது பழைய முறைக்கும், புதிய சமுதாயக் கருத்துக்களுக்குமிடையேயான குழப்பமான போராட்டமேயாகும்.

ஆங்கில அரசால் தூண்டப்பட்ட அல்லது ஆதரிக்கப்பட்ட எந்த சமதாயச் சீர்திருத்தவாதியும் இந்து சமுதாய, சமயச் கோட்பாடுகளை நேரடியாகத் தாக்குவதைத் தம் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

கலை, கட்டடக்கலை

19-ஆம் நூற்றாண்டில் எந்தக்கலை நுணுக்கமுள்ள, பிரம்மாண்டமான கோயில்களும் எழுப்பப்படவில்லை. பெரும்பாலும் பயன்படத்தக்க பெரிய மாளிகைகள் மட்டுமே கட்டப்பட்டன. ஆங்கிலேயர்கள் காற்றோட்டமுள்ள முற்றத்துடன் கூடிய மாளிகைகளைத் தங்களுக்கெனக் கட்டினர். மொத்தத்தில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் கட்டடக் கலையில் எந்த புதிய மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் இராணுவப் பொறியியல் முறை ஓரளவு புகுத்தப்பட்டது. சென்னைத் துறைமுகம், சென்னை மத்திய ரயில் நிலையம், சென்னை எழும்பூர் ரயில் நிலையம், பாம்பன் பாலம் போன்றவை கட்டடக்கலையில் புதிய அமைப்பு முறைக்கு எடுத்துக்காட்டுகளாகும். பழமையான நடனம், இசை போன்றவை 19-ஆம் நூற்றாண்டில் சில முன்னேற்றங்களைக் கண்டன. பரதநாட்டியம், கர்நாடக இசை போன்றவையும், நடனமும் இன்னும் தமிழகத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. நாடகக்கலை பிந்திய பத்தொன்பதாம் நூற்றாண்டில் அழியத் தொடங்கியது. கான்வாஸ் (Canvas Painting) வர்ணம் தீட்டும் முறை ஆங்கிலேயர்களால் உண்டாக்கப்பட்டது. ஆனால் இந்த வர்ணம் தீட்டும் முறையானது பண்டைய தமிழர்தம் வர்ணம் தீட்டும் முறையை விட எவ்வகையிலும் சிறந்ததல்ல.

விடுதலை இயக்கத்தில் தமிழகம்
முதல் கட்டம் 1885–1905

சில வரலாற்றாளர், இந்தியாவின் விடுதலை இயக்கம் முதன் முதல் தமிழகத்தில் தொடங்கியது என்று கருதுகின்றனர். ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய மாவீரன், வீரபாண்டிய கட்ட பொம்மு என்று இன்றைய தமிழர் பலரும் கருதுகின்றனர். பாஞ்சாலங்குறிச்சி கம்பெனியாரால் தாக்கப்படவே துணிந்து போராடி வீரமரணம் எய்தினான் கட்டபொம்மு. கட்டபெரம்முவால் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் திட்டமிட்டு செய்யப்பட்ட கலகம் என்று கொள்வாரும் உண்டு. இந்திய விடுதலைக்காக கட்டபொம்முவுக்குப் பின் திட்டமிட்டு செயலாற்றியவன் சிவகங்கைச் சீமையின் ஷெரேகார் மருது பாண்டியன். இவன் வெளியிட்ட அறிக்கையும், இவனுடைய தீபகர்ப்பக் கூட்டணியும் இதனை நன்கு விளக்கவல்லன. மருது பாண்டியன் திட்டமிட்டப்படி ஏதும் நடக்கவில்லை. மாறாக கம்பெனியார் அவனையும் கொன்று, அவன் நாட்டையும் கவர்ந்தனர். ஏறக்குறைய கி.பி. 1801 ஆம் ஆண்டளவில் தமிழகத்தில் கம்பெனியாரின் ஆக்கிரமிப்புக்களும், அடக்குமுறைகளும் ஓரளவு ஓய்ந்தன. கம்பெனி அதிகாரிகளின் அடக்குமுறைகளுக்கு அடிபணியாத வேலூர்க் கோட்டை சிப்பாய்கள் 1806- ஆம் ஆண்டு கலகம் செய்தனர். திட்டமிட்டபடி அக்கலகம் நிகழாத காரணத்தால், அதுவும் அடக்கப்பட்டது. தொடர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. அவற்றில் 1857- ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் புரட்சியும், நினைத்தவை எதையும் சாதிக்க இயலவில்லை.

1857 ஆம் ஆண்டிலிருந்து 1885- ஆம் ஆண்டு வரை விடுதலைக்கான திட்டமிட்ட செயல்கள் ஏதும் நிகழவில்லை. 1885- இல் இந்திய தேசிய காங்சிரஸ் உருவாயிற்று. தொடக்கத்தில் இவ்வியக்கம் தன்னாட்சி பெறுவதற்கான அரசியலமைப்பு சார்ந்த திட்டங்களைக் கையாண்டு வந்தது. மிதவாத நோக்கில் கம்பெனிக்கும் அரசியின் ஆட்சிக்கும் பணிந்து, மண்டியிட்டுக் கிடந்ததாகக் கருதப்படுகிறது.

இக்காலகட்டத்தில் தமிழகத்தில் அரசியல்—சமுதாய விழிப்பு ஏற்பட்டது. இவ்விழிப்பு பல காரணங்களால் உந்தப்பட்டது. தமிழ்நாட்டு அறிஞர் இவ்விழிப்பால் தூண்டப்பட்டனர். எட்டயபுரத்தின் தேசியக்கவி பாரதி, இந்திய விடுதலை இயக்கத் தினைத் தமிழகத்தில் மும்முரப்படுத்தினார். ஒற்றுமையற்றுக்கிடந்த தமிழகத்தைத்தட்டி எழுப்பி, மக்களை விழிப்படையச் செய்தார். அவர்தம் கவிதைகள், கட்டுரைகள், துண்டுப்பிரசுரங்கள் தமிழகமெங்கம் பரவி, ஏற்பட்ட விழிப்பினை பலமடங்காக்கின. இந்தியா, சுதேசமித்திரன் போன்ற செய்தித்தாட்கள் மூலம் அவர் வெளியிட்ட கருத்துக்கள் யாவும் தீப்பொறி போன்று நாடெங்கும் பரவின. அவருடைய விடுதலை இயக்கக் கருத்துக்கள் அனைத்தும் தீவிரத் தன்மையன; புரட்சிகரமானவை; உள்ளெழுச்சியைத் தூண்ட வல்லவை. சிந்து நதிமுதல் குமரி வரையுள்ள மக்களே ஒன்றுபடுங்கள் என்று உறங்கிக் கிடந்த தேசியத்தைத் தட்டிக் கிளப்பினார். மாறுபட்ட, வேறுபட்ட, கருத்துடையோரை நிந்தித்தார். இந்தியாவின், குறிப்பாகத் தமிழகத்தின் விடுதலை உணர்வைத் தட்டியெழுப்பியதில் அவருக்கு இணை வேறு அன்று எவரும் இருக்கவில்லை. பாரதியாரின் கோட்பாடுகளால் பெரிதும் கவரப்பட்டவர் பாரதிதாசன். இவர் நாட்டில் சமுதாயச் சீர்திருத்தத்தைக் கோரினார். தாழ்த்தப்பட்டோரின் உயர்வுக்காகப் பாடுபட்டார். சாதித் தளையைக் கட்டறுக்கப் போராடினார். ஜன்ம பூமியின் சிறப்பு, கதர் ராட்டினப் பாட்டு போன்ற கவிதைகளை, காங்கிரஸ் இயக்கத்தின் பிரச்சார வழிகளாக எழுதி வெளியிட்டார். வெளிநாட்டுப் பொருட்களை வாங்க மறுத்த அவர், உள்நாட்டுப் பொருட்களை வாங்குமாறு மக்களை வேண்டினார்.

காந்திஜி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தின் சிறப்பம்சங்களை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறியவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. இவர் சுதந்திரத்திற்குப் பின் தமிழக அரசுக் கவியாக இருந்தார். "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்ற அவருடைய பாடல் நாட்டார் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இயக்கப் பாடல். அரவிந்த கோஷ், திலக், கோகலே, காந்திஜி ஆகியோரைப் புகழ்ந்து பல கவிதைகள் இயற்றினார். அடிமைத் தளையில் வாழ்தல் சாதலுக்கு ஒப்பு என்று இகழ்ந்து பாடினார். தமிழகம் ஈன்றெடுத்த பிறதொரு புரட்சி வீரர் வ.உ. சிதம்பரம் பிள்ளை. அவர் வ.உ.சி. என்று தமிழரால் பெருமையுடன் அழைக்கப்பட்டார். நாட்டுப்பற்று மிகுதியால் அவர் ஆற்றிய செயல்கள் இந்திய விடுதலை இயக்கத்தில் தனியிடம் பெற்றவை. உறங்கிக் கிடந்த தமிழரைத் தட்டியெழுப்ப அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், இயற்றிய கவிதைகள், எழுதிய கட்டுரைகள், அமைத்த அமைப்புக்கள் ஒன்றிரண்டல்ல. கம்பெனியார் மட்டுமே கப்பலோட்டலாம் என்ற ஆங்கில அரசு கொண்டிருந்த சர்வாதின உரிமைகளை நொறுக்கவும், தமிழரும் திரைகடலோடியும் திரவியம் தேட முடியும் என்று காட்டவும், அவர் தேசிய கப்பல் கழகத்தைத் தொடங்கினார். வ.உ.சி.யும், சுப்ரமணிய சிவாவும் அரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதைத் தடுக்கவேண்டி, அரசு அவர்களைச் சிறை செய்து, அவர்கள் மீது கடும் நடவடிக்கைகளை எடுத்தது.

அந்நியப் பொருட்களின் செலாவணியைத் தமிழகத்தில் தடுக்க பரலி நெல்லையப்பர் பெரும் பாடுபட்டார். சுதேசிப் பொருட்களை அனைவரும் வாங்குவதால் அந்நியப் பொருட்கள் செலவாகாத நிலையில் அழிந்து விடும் என்று போதித்தார். பாரதியாரின் அடிகளைப் பின்பற்றி, தேசிய இயக்கத்தை ப. ஜீவானந்தம் (ஜீவா) விரைவு படுத்தினார். 'பூரண சுயராஜ்யம்' பற்றி மக்களுக்கு அவர் எடுத்துக் கூறினார். தேசிய விடுதலையைப் பாதித்த சமுதாயக் குறைகளை திரு. வி. கல்யாண சுந்தரனார் சாடினார். சாதி வேறு பாடுகள், தீண்டாமை, பெண்களின் அடிமைநிலை, இன்ன பிற சமூகக் குறைபாடுகளை அகற்றப் பாடுபட்டார். அவர் சுதேசி இயக்கத்தின் தன்மைகளை நாடறியச் செய்தார்; பூரண சுயராஜ்யத்தை வேண்டி நின்றார். ஆர். சொக்கலிங்கம், கு.ராஜவேலு, எஸ்.டி. சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு போன்றோர் கவிதைகள் பல வரைந்து விடுதலை இயக்கத்தை வளர்த்தனர். பாண்டிச்சேரியில் தங்கியிருந்த புரட்சி வீரர் அரவிந்த கோஷ் தமிழ் மக்களைப் பெரிதும் தூண்டி, தேசிய இயக்கத்திற்குப் போதிய உத்வேகத்தை அளித்தார்.

தேசிய விடுதலை இயக்கத்திற்குச் செய்தித் தாள்களின் பங்கு போற்றுதற்குரியது. பத்திரிக்கைகள் தீவிர, பயங்கரச் செயல்கள் செய்வோரைப் பெரும்பாலும் ஆதரித்தமை யால், நாட்டில் தேசியமும், விடுதலை உணர்வும் நாளுக்குநாள் வளர்ந்தன. 1878- இல் ஜி. சுப்ரமணிய ஐயரவர்களால் இந்துதாள் வார இதழாகத் தொடங்கப் பட்டது. சில ஆண்டகளிலெல்லாம் அது நாளிதழாக மாற்றப்பட்டது. தேசியவாதிகளின் சொற்பொழிவுகள், அவர்களால் இயற்றப்பட்ட கட்டுரைகள் இவ்விதழில் அச்சிடப் பட்டன. சமுதாயக் குறைகள், அரசின் தன்னிச்சையான செயல்கள் யாவும் கண்டிக்கப் பட்டன. இச் செய்தித்தாள் நாட்டு மக்களிடையே அரசியல் விழிப்பை ஏற்படுத்திற்று.

1882- இல் வார இதழாகத் தொடங்கப்பட்ட சுதேசமித்திரன் 1889- இல் நாளேடாக மாற்றப்பட்டது. 1905- ஆம் ஆண்டு முதல்1921-ஆம் ஆண்டு வரை பாரதியார் அதன் பதிப்பாசிரியராய்ப் பணியாற்றினார். காளிதாசன், சக்திதாசன், சீமான் C. சுப்ரமணிய பாரதி என்ற புனை பெயர்களில் தீவிரக் கதிர்களை வீசி வந்தார். இந்தியா என்ற பிறிதொரு நாளேட்டைத் தொடங்கி அதனை 1906- முதல் 1910- வரை நடத்தி வந்தார். விஜயா என்ற பத்திரிக்கையின் பதிப்பாசிரியராயும், அரவிந்தரால் நடத்தப்பட்டு வந்த கர்மயோகின் என்ற பத்திரிக்கையில் வந்த கருத்துக்களை தமிழில் மொழி பெயர்த்தும் எழுதி வந்தார். 1917- இல் திரு.வி.க, தேசபக்தன் என்ற இதழைத் தொடங்கினார். "தேசபக்தன் விடுதலைக்காக, அவன் சுயராஜ்யத்தைத் தேடுகிறான்; அவன் இந்தியா வுக்கும் இங்கிலாந்துக்கும் நட்பை பெருக்குகிறான்" என்று எழுதினார். துப்பாக்கி நாயுடு என்று பலராலும் அழைக்கப்பட்ட வரதராஜு நாயுடு தமிழ்நாடு என்ற இதழைத் தொடங்கினார். பிரபஞ்சமித்திரன் என்ற இதழை நடத்தி வந்தார். இவற்றின் மூலம் அவர் நாட்டு நடப்புகளையும் சமுதாயச் சீர்கேடுகளையும் சுட்டிக் காட்டி வந்தார். ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டித்த சீனிவாச சாஸ்திரிகளை நாயுடு அவர்கள் கடுமையாக விமரிசனம் செய்தார். சுதந்திரன் என்ற இதழுக்கும், சுவராஜ்யா என்ற இதழுக்கும் கட்டுரைகளையும், விமரிசனங்களையும் தொடர்ந்து எழுதியவர் சி. இராம சாமி ஐயங்கார். திரு. வி.க. வின் நவசக்தியில் அனுபவம் பெற்ற கல்கி. கிருஷ்ணமூர்த்தி விடுதலை இயக்கத்திற்கான கதைகளையும், கட்டுரைகளையும், படங்களையும் எழுதியும்

அச்சிட்டும் வந்தார். டி.எஸ். சொக்கலிங்கம், இரங்கசாமி ஐயங்கார், டி.எஸ்.எஸ். ராஜன், மற்றும் பலர் தமிழகத்தில் விடுதலை இயக்கத்தை வீறு கொள்ளச் செய்தனர். சே, கோபாலாச்சாரியின் ஆரியசபா (1874), டி.பி. கிருஷ்ண சாமியின் கதரின் வெற்றி (1922), எஸ்.டி. சுந்தரத்தின் கவியின் கனவு, சாமிநாத சர்மாவின் பாணபுறத்து வீரன் (1921) போன்ற நாடகங்கள், கே.எஸ். வெங்கடசாமியின் தேச பக்தன் கந்தன் (1932), கல்கியின் தியாக பூமியும், அகிலனின் பெண்ணும், கு. ராஜவேலுவின் 1942 போன்ற நாவல்களும் தமிழகத்தில் விடுதலை இயக்கத்தைப் பரப்பின.

அரசியலோடு தேசியம் ஒன்றிப்பிணைவது இயற்கை. ஆனால் சமயத்துடன் அரசியலும் தேசியமும் இணைவது அரிது. அப்படி தேசியத்தை சமய நோக்கில் பரப்பிய மாமேதை சுவாமி விவேகானந்தர். சுவாமி பரமஹம்சரால் உருவாக்கப்பட்ட விவேகானந்தர் இந்தியத் தேசியத்தின் பெரும்படைப்பு என்றால் மிகையாகாது. தூங்கிக் கிடந்த இந்தியர்களே எழுந்திருங்கள்; எழுந்திருந்தவர்களே நடந்து முன் செல்லுங்கள்; உங்கள் நோக்கம் ஈடேறும் வரை ஓயாதீர்கள் என்று முழக்கமிட்டவர் விவேகானந்தர். இந்தியாவின் பெரும் பழமையை உலகறியச் செய்த அறிஞர். அமெரிக்காவில் நடந்த சிக்காகோ உலக சமய மாநாட்டில் இந்தியப் பண்பாட்டின் சிறப்பம்சங்களைப் பலரறியுமாறு செய்தார். இச்சிறப்பு மாநாட்டில் அவர் ஆற்றிய உரையால் கவரப் பட்டவர்கள் பலர். அவர்களில் உலகப் புகழ் பெற்றவர் சகோதரி நிவேதிதா ஆவார். விவேகானந்தர் வங்கத்தில் பிறந்தும், சிக்காகோ மாநாட்டில் பங்கு கொள்ள அவருக்குப் பண உதவி செய்தவர் இராமநாதபுரத்து அரசர். தம் வாழ்வின் இறுதியில் விவேகானந்தர் தவம் புரியும் நோக்குடன் குமரிக்கு வந்து, குமரித்தாயின் மடியில் அமர்ந்தார். இன்று குமரியம்பெருந்துறையில் அவர் அமர்ந்த இடத்தில் விவேகானந்தரின் பெரிய உருவச் சிலை எடுக்கப்பட்டுள்ளது. வங்கத்தில் பிறந்து, குமரியில் தவம் புரிந்த அவர் இந்தியா ஒரு நாடு என்று தம்செயல் மூலம் காட்டினார்.

நாட்டுப்பற்று மிகுந்த எழுத்தாளர், கவிகள், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர்கள், புதின, சிறுகதை எழுத்தாளர்களைத் தவிர தேசிய உணர்ச்சியை மக்களிடையே பரப்பிய தேசிய வாதிகள் பலர். இவர்கள் தத்தம் கோட்பாடுகளை சங்கங்கள், இயக்கங்கள் மூலம் பரப்பினர். 1852- ஆம் ஆண்டு சென்னை தேசிய சங்கம் (Madras Native Association) தொடங்கப்பட்டது. இச்சங்கம் வேண்டுகோள்கள், மனுக்கள், விண்ணப்பங்கள், சொற்பொழிவுகள் மற்றும் பொதுப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தி நாட்டுப்பற்றை மக்களிடையே பரப்பி வந்தது. பொருளாதார, அரசியல், சமுதாயக் குறைபாடுகளை இச்சங்கத்தார் கோடிட்டுக் காட்டினர். அவற்றின் அடிப்படையில் விண்ணப்ப மனுக்களை அரசிடம் சமர்ப்பித்தனர். இவற்றிற்கு அடிப்படைக் காரணம் "கொடியவரி முறையும், அதனைப் பெற கையாளப்பட்ட கடினமான செயல்களும், மேலும் கம்பெனியின் நீதிமன்றங்களில் ஏற்பட்ட பற்றாக்குறையும், பணச்செலவும் காலதாமதமும் ஆகும்". பொதுப்பணிகளையும், நலம்புரிச் செயல்களையும், சாலை அமைப்புகளையும், பாலங்கள் கட்டுதலையும், நீர்ப்பாசனத் திட்டங்களையும், மக்களின் கல்விக்கான திட்டங்களையும், நாட்டு மக்களிடையே வசதியையும், செல்வ வளர்ச்சியையும், அடிப்படையாகக் கொண்ட தலசுய நிர்வாகங்களையும் செவ்வனே, சீர்திருத்த, செயல்முறைப் படுத்த இச்சங்கம் வேண்டிற்று. மக்களுக்கு எவ்வகையிலும் நன்மை பயக்கா

ஜமீன்தாரி, ரயத்துவாரி நிலவருவாய் முறைகளின் குறைகளை கோடிட்டுக் காட்டின. நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு அதிகமான இடங்கள் ஒதுக்குமாறு இச்சங்கத்தார் கோரினர். அரசு பயன்படுத்திய வழிமுறைகளைக் கண்டித்து, புது நிர்வாக முறைகளைப் புகுத்துமாறு வேண்டினர். இந்திய நிர்வாகத்தைச் சார்பின்றி, சாய்வின்றி பரிசோதனையிடுமாறு விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்று கோரினர். மக்கள் வரி வாங்குமிடத்து அதிகாரிகளின் அடக்குமுறைகளுக்குப் பலியாயினர் என்ற குற்றச் சாட்டைக் கருதி, இச்சங்கத்தின் இதர குற்றச்சாட்டுகளையும் மனதிற்கொண்டு, விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் கூறப்பட்ட குற்றங்களை சித்திரவதைக் குழு (Torture Commission) சமர்ப்பித்த அறிக்கை உண்மையானவை என்ற அறிவித்தது. இச்சங்கத்தின் செயல்கள் மும்முரமாக இருந்தமையால், மக்களிடையே அதிக செல்வாக்கைப்பெற்று, இந்தியாவிலும், இங்கிலாந்திலும் கடும் போராட்டங்களை நடத்தி வந்தது. 1868 இல் லக்ஷ்மிநரசு செட்டி (Lakshminarasu Chetty) இறந்தபின், இச்சங்கத்தின் செயல்கள், நினைத்த அளவு துரிதமாக நடந்தேற வில்லை. சில ஆண்டு கால மந்த நிலைக்குப்பின், பாஷ்யம் அய்யங்கார் அதன் செயல்களை மீண்டும் துவக்கினார். மீண்டும் தம் கடமைகளில் தவறாது செயல்படத் தொடங்கிற்று.

1884- இல் ரங்கையா நாயுடுவால் (Rangiah Naidu) சென்னையில் தொடங்கப் பட்டதே சென்னை மகாசனசபை (the Madras Mahajana Sabha). தமிழர்களை ஒன்று திரட்டி, தட்டியெழுப்பி, தேசிய விடுதலைக்காகப் பாடுபட இச்சங்கம் முயன்றது. வீரராகவாச்சாரியும், அனந்த சார்லுவும் இச்சபையின் காரியதரிசிகளாக தொடர்ந்து பணியாற்றினர். "மக்களின் விருப்பங்களைப்பயமின்றி எடுத்துக் கூற, பதவியற்ற மக்களையே இதில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்வதாக" அதன் தலைவர் அறிவித்தார். மற்ற மாகாணங்களின் பிற சங்கங்கள், சபைகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளுமாறு அவர் வேண்டினார். நாட்டுமக்களின் நன்மையைக் கருதி தோற்றுவிக்கப்பட்ட இச்சபை, இருபத்தொரு வயதிற்கு மேற்பட்ட எவ்விந்தியனும் இதில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று அறிவித்தது. அங்கத்தினர்கள் வருட சந்தாத் தொகையாக ஒரு ரூபாய்க்குக் குறையாமல் செலுத்த வேண்டும். இச்சபையின் செயல்களை வருடா வருடம் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபத்தைந்து அங்கத்தினர்கள் கவனித்துக் கொள்வர் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அங்கத்தினரிடையே காணப்பட்ட கருத்து வேறுபாட்டால் சென்னை தேசிய சங்கம் சிதைந்து கொண்டிருந்த கால கட்டத்தில், இச்சபை முழு மூச்சுடன் செயலாற்றியது. ஒரே ஆண்டிற்குள் இச்சபையின் அங்கத்தினரின் எண்ணிக்கை இருநூற்றைந்தாக உயர்ந்தது. இச்சபையில் திறமையும், அறிவும் படைத்தோர் இருந்தமையின், மற்ற சுற்று இயக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. சென்னை மாகாணத்தின் வேறுபட்ட இடங்களில் நடத்தப்பட்ட கூட்டங்களில் ரிப்பன் பிரவுவின் சாதனைகள் புகழ்ந்து பாராட்டப்பட்டன. பம்பாய் மாகாண சங்கத்தாருடன் இச்சபை தொடர்பு வைத்திருந்தது; கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டது; இணைந்த செயல்களில் ஈடுபட்டன. சென்னையில் முதல் தேசிய மாநாடு தெலாங் (Telang) கருத்து தெரிவித்த போது, இச்சபையின் அங்கத்தினர், அதன் குறைபாடுகளை உணர்ந்து, அக்கருத்துக்கு இசைய மறுத்தனர்.

1884- இல், டிசம்பர்த் திங்கள் 29- ஆம் நாள் நடைபெற்ற இச்சபையின் மாநாட்டில், ஏறக்குறைய எழுபது அங்கத்தினர் பங்கு கொண்டனர். சட்ட மேல்சபைச் சீர்திருத்தம், நிர்வாகத்திலிருந்து நீதித்துறை பிரிப்பு, இந்திய நிர்வாகத் துறையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் வேளாளர் வகுப்பினர் நிலை பற்றி விவாதிக்கப்பட்டது. 1885- ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள் 22- ஆம் நாள் நடைபெற்ற இரண்டாம் மாநாட்டில் ஏறக்குறைய 45 அங்கத்தினர் பங்குபெற்றனர். இந்தியாவில் ஆங்கில அரசு பற்றி விவாதிக்கப்பட்டது.

இந்திய மக்களின் உள்ளுணர்ச்சிகளைத் தட்டியெழுப்பி, விடுதலை இயக்கத்தில் ஒருங்கிணையச் செய்த பிறிதொரு இயக்கம் பிரம்மஞான சங்கம் ஆகும். இச்சங்கம் அமெரிக்கராகிய தளபதி ஆல்காட்டாலும் ருஷ்யராகிய ப்ளாவஸ்கி (Blavatsky) அம்மையாராலும் தொடங்கப்பட்டது. இதன் தலைமைப் பீடம் சென்னையில் உள்ள அடையாறில் உள்ளது. இச்சபை தம் கிளைகளை இந்தியாவின் இதர பகுதிகளிலும், ஐரோப்பாவிலும் பெற்றுள்ளது. விடுதலை இயக்கத்தின் போது இச்சபையின் தலைவராய் இருந்தவர் அன்னி பெசன்ட் அம்மையார். இவர் அயர்லாந்தில் பிறந்து அந்நாட்டின் தன்னாட்சி இயக்கத்தில் பங்கு பெற்று, அனுபவம் பெற்றபின் இந்தியா வந்தவர். 1893- இல் இவர் தூத்துக்குடியில் வந்திறங்கி, அடையாறு அடைந்து, பிரம்மஞான சபையின் அங்கத்தினராகி, ஆல்காட்டின் சீடராய் சுயமுயற்சிகள் மூலம் நாட்டுப்பற்றைப் பெருக்கி வந்தார். இந்தியாவின் சமய இலக்கியங்களையும், பழக்க வழக்கங்களையும் நாடறியச் செய்தார். இவர் தடையும், பயமும் இல்லாமல் வெளிப்படையாக கருத்துக்களை வெளியிடுவதில் வல்லவர். வேண்டுதலும் வேண்டாமையும் அவரிடம் குடிகொண்டக் காரணத்தால் தங்குதடையின்றித் தாம் கொண்ட கருத்துக்களைப் பரப்பி வந்தார். இந்தியாவில் நாட்டுப்பற்றை முதலில் தூண்டியவர் யாரென்றால் இவ்வம்மையாரே என்கிறார் காஞ்சி துவாரகதாஸ். அவர் சமய, கல்வி, சமூக, அரசியல் கோட்பாடுகளால் இணைக்கப்பட்ட ஒரு புதுவித இயக்கத்தை முன் நின்று நடத்தினார். ஐரோப்பாவில் பிறந்தும், இந்தியா அவருடைய தாயகமாயிற்று; இந்தியர் சகோதரர், சகோதரிகளாயினர். இந்தியர்களை அறிவுள்ளோராக்க அவர்களுக்குக் 'கல்வி புகட்டுங்கள்' என்று கூறி வந்தார். இந்தியாவின் நாட்டுப்பற்று, உள்ளுணர்வு, தாயக அன்பு அனைத்தும் அவர்களுடைய பேச்சிலும், எழுத்திலும் பீறிட்டு ஓடின. "உன் நாட்டின் பழங்காலத்தை அறிந்து கொள்; அப்படியாயின் நீ அதனை மதிப்பாய்; அப்படிச் செய்யின் நீ உன்னையே மதிக்கிறாய்" என்று முழங்கினார்.

தமிழ், வடமொழி அறிவோ இல்லாத இவ்வம்மையார் இந்தியத் துணைக்கண்டத்தில் பெருத்த அரசியல், சமூக மாற்றங்களைக் கண்டார்கள். குழந்தைமணம், தீண்டாமை, தாழ்த்தப்பட்ட இனம் போன்ற குறைபாடுகளைக் கண்டித்தார். தீண்டத்தகாதவரிடம் அன்பு பூண்டு, ஏற்றத்தாழ்வுகளைக் களைய முயன்றார். ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைப் பெரிதும் மதித்து அவர்களின் இணைவில் இந்தியாவின் விடுதலையைக் கண்டவர். தாழ்த்தப்பட்டோருக்கு முதன் முதலில் கல்விக் கூடங்களை அமைத்துத்தந்தது பிரம்மஞானசபையே. இதற்காகும் பணச்செலவுகளை ஆல்காட்டும், பெசன்ட் அம்மையாரும் தந்துதவினர். தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்து பெண்களின் நிலையை உயர்த்தப்பாடுபட்டார். இந்தியரின் உணர்ச்சிகள், இந்தியப் பாரம்பரியம், இந்திய எண்ணம், இந்திய நோக்கங்களின் அடிப்படையில் இந்தியா ஆளப்பட வேண்டுமென்று கூறினார்.

1901- ஆம் ஆண்டு மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை பாண்டித் துரைத்தேவர் தொடங்கினார். 1911இல் கரந்தைத் தமிழ்ச் சங்கம் துவக்கப்பட்டது. இவை இலக்கிய மொழி அமைப்புகளாயும், குறிப்பிட்ட பகுதி இயக்கங்களாயும் இருந்த போதிலும், இவை இலக்கிய, மொழி வளர்ச்சி மூலம் நாட்டுப்பற்றை பரப்பிவந்தன. இரகசியச் சங்கங்களும், சபைகளும் நாட்டின் நாலாப்பகுதிகளிலும் எழுந்தன. 1806- ஆம் ஆண்டைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பல தீவிரச் செயல்கள் நடைபெற்றன. தமிழ்நாட்டில் ஆங்கில அரசை எதிர்த்து விழிப்பு ஏற்பட்டது.

நாட்டு விடுதலைக்கான போராட்ட உணர்ச்சிகள் தமிழ்நாட்டில் ஏற்பட்ட போதிலும், தீவிர, இதர செயல்களில் வங்கம் முன் நின்றது. தமிழகத்தில் தீவிர வாதப்பிரச்சாரங்களின் குறைபாட்டால் இது ஏற்பட்டதல்ல; மாறாக தொடக்க காலங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாதிகளின் புகலிடமாய் இருந்தமையே. 1905- ஆம் ஆண்டிற்குப் பின் இவ்வியக்கம் தீவிர இயக்கமாயிற்று. லால், பால், வி.வி.எஸ். ஐயர், வ.உ.சி., பாரதியார் போன்றோர் இவ்வியக்கத்தில் தீவிரத் தன்மையை ஊட்டினர். தீவிரச் செயல்கள் பயங்கரச் செயல்களுக்கு வழிவகுத்தன. இந்தியாவின் விடுதலையைப் பெற ஒரே வழி படுகொலை, பயமுறுத்தல், பழிக்குப்பழி தீர்த்தல் என்று கருதப்பட்டது. இந்திய உற்பத்திப் பொருட்களை வாங்கி, அந்நிய பொருட்களைப் புறக்கணிக்கவும் திட்டமிடப்பட்டது.

இந்திய தேசிய காங்கிரஸ் 1885-1904: 1884- ஆம் ஆண்டு பதினேழு தேசிய வாதிகள் சென்னையில் திவான் பகதூர் ரகுநாத ராவ் அவர்களின் இல்லத்தில் கூடினர். திவான் பகதூர் ராவ் அவர்கள் புகழ் பெற்ற ஒரு சமய வாதியும், சமுதாயச் சீர்திருத்த வாதியுமாவார். பெரும்பாலும் இவர்கள் அனைவரும் அவ்வாண்டு முடிவடைந்த பிரம்மஞான சபையின் ஆண்டு மாநாட்டில் பங்கு கொண்டிருந்தனர். மேலும் பல நண்பர்களும், தாராள வாதிகளும், பிறரும் அங்கு கூடியிருந்தனர். அவர்கள் புனர் இந்தியா பற்றி எண்ணிக் கொண்டிருந்தனர். "இக்கனவுகள் கனாக் கண்டவர்கள் அனைவரையும் ஒருங்கிருந்து சிந்திக்கச் செய்தது. அவர்கள் அனைவரும் இணைந்து ஒரு பெரும் தற்காலிகக் கமிட்டிகள் உருவாக்குவதாயும் முடிவு செய்தனர்; வேறுபட்ட நகரத்தார் பிறரை தம் பக்கம் சேர்ப்பதாயும் முடிவு செய்தனர்; தத்தம் இடங்களில் செய்ய வேண்டுவனவற்றைச் செய்வதாயும், வேண்டிய போது கூடி முடிவெடுப்பதாயும் முடிவு செய்தனர்" என்று பெசன்ட் அம்மையார் இவர்களைப் பற்றிக் கூறுகிறார். சென்னையிலிருந்து வந்த அங்கத்தினரை நரேந்திரநாத் சென் நடத்தி வந்த இந்தியக் கண்ணாடி (The Indian Mirror) என்ற இதழ் விளம்புகின்றது. மதிப்புக்குரிய S. சுப்பிரமணிய ஐயர், பி. ரங்கையா நாயுடு, இ பி. அனந்தா சார்லு ஆகியோர் அவர்களில் முக்கியமானோர். "தங்களின் தேசியப் பற்றாலும், நம்பிக்கையாலும் உந்தப்பட்ட உண்மையான, நல்லெண்ணமுள்ள பதினேழு பேர்கள் தாய்நாட்டைக்காக்க வேண்டி தேசிய அரசியல் இயக்கம் ஒன்று துவங்குவதற்குத் திட்டமிட்டனர்" என்று பெசன்ட் அம்மையார் அறிவிக்கின்றார். இவ்வியக்கத் தோற்ற விவாதங்களின் போது ஏ.ஓ. ஹியூம் பற்றிய பேச்சு ஏதும் வராதது கருதற்குரியது. சுரேந்தரநாத் பானர்ஜியால் துவக்கப்பட்ட இந்திய இணைவு (Indian Union) என்ற அமைப்பு கூட தமிழகத்தின் வழித்தோன்றலென்று கருதப்படுகிறது.

1885- ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இந்தியாவின் அனைத்துப் பகுதி பிரதிநிதிகளைக் கொண்ட மாநாடு வரும் கிறிஸ்துமஸ் நாட்களில் நடத்தப்பட முடிவு செய்யப்பட்டது. அம்மாநாட்டுக்குப் பொருத்தமான இடம் பூனா என்று கருதப்பட்டது. இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் அங்கத்தினர் சென்னை, பம்பாய், கல்கத்தா மாகாணங்களைச் சேர்ந்தவராயிருக்க வேண்டும்; இதன் நோக்கங்கள்: (1) தேசிய முன்னேற்றத்திற்காக பாடுபடும் தொழிலாளரிடையே நல்லுறவு ஏற்படுத்துதல் (2) வருங்காலத்தில் எவ்வித அரசியல் செயல் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முடிவு செய்தல்.

பூனாவில் மாநாடு நடத்தப்பட இயலாத நிலை. அங்கு தொத்து நோய்களும், வாந்தி—பேதி நோயும் பரவியிருந்தது. ஆகவே தேசிய காங்கிரசின் முதல் மாநாடு பம்பாயில் நடைபெற்றது. W.C. பானர்ஜி அம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். ஏ. ஓ. ஹியூம், பானர்ஜியின் பெயரை முன்மொழிந்தார். S. சுப்பிரமணிய அய்யர் வழி மொழிந்தார்; கே.டி. தெலாங் (Telang) அதனை ஆதரித்தார். இம்மாநாட்டில் சென்னை மகாஜன சபையின் தலைவரும், செயலாளரும் பங்கு கொண்டனர்; இந்துப் பத்திரிக்கையின் பதிப்பாசிரியர், தஞ்சை மக்கள் சபையின் தலைவரும் பங்கு கொண்டனர். அவர்கள் முறையே ரகுநாத ராவ், எஸ். சுப்பிரமணிஐயர், ரங்கையாநாயுடு, அனந்தாச் சார்லு, ஜி. சுப்பிரமணிய ஐயர், வீரராகவாச்சாரியர், கேசவப்பிள்ளை, பேராசிரியர் சுந்தரராமன் ஆவார்கள். "இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட முன்னோடிகள்" இவர்கள் என்று பெசன்ட் அம்மையார் கூறினார்.

இந்துப் பத்திரிக்கையின் பதிப்பாசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் தாம் நிதழ்த்திய முன்னுரைச் சொற்பொழிவில் முதல் முடிவினை முன் மொழிந்தார். சென்னை மாநிலத்தவராயினும், அவர் துணிச்சல்காரர், அறிவாளி. முதலில் ஆங்கில ஆட்சியின் நற்செயல்களைக் கோடிட்டுக் காட்டினார். கம்பெனியாட்சியின் நற்காரியங்களைக் கூறிய அவர், அரசியின் ஆட்சியின் போது ஏற்பட்ட சீர்கேடுகளைச் சித்தரிக்காமலு மில்லை. அரசின் வருடாந்திர செலவு வளர்ச்சியைக் கண்டித்தார். நாட்டுமக்களின் துன்பங்களையும், பாராளுமன்றத்தின் வேலையற்ற போக்கையும் சுட்டிக் காட்டினார். தலைவர்கள் கூறும், நீதியற்ற செயல்களைத் தீர ஆராயவும், அவற்றின் உண்மையைக் கண்டுபிடிக்கவும் விசாரணைக் குழு ஒன்று நியமிக்குமாறு வேண்டினார். இந்தியப் பொருளாதாரத்தை வகைப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார். இம் முதல் மாநாட்டில் ஒன்பது முடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவை: (1) இந்திய நிர்வாகச் செயல் முறைபற்றி அறிக்கை தாக்கல் செய்ய விசாரணைக் குழு நியமித்தல் (2) இந்திய கவுன்சில் சபையைக் கலைத்தல், (3) சட்ட சபையின் குறைபாடுகளை அகற்றுதல், (4) இந்திய சிவில் துறைத் தேர்வுகள் ஒரே காலத்தில் இங்கும் இலண்டனிலும் நடத்துதல்; அத்துடன் தேர்வு எழுதுவோரின் வயது வரம்பை உயர்த்துதல், (5) & (6) படைச் செலவு பற்றியவை, (7) மேல் பர்மாவை ஆக்கிரமித்து கைப்பற்றியமைக்கு எதிர்ப்பு, இந்தியாவுடன் இணைப்பு முடிவுக்கு மறுப்பு, (8) இம் முடிவுகளை அரசியல் சங்கங்களுக்கு அனுப்புதல், (9) 1886-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள் 28 ஆம் நாள் கல்கத்தாவில் அடுத்த மாநாடு என்ற முடிவு.

மூன்றாம் மாநாடு 1887- ஆம் ஆண்டு பக்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் சென்னையில் நடந்தது. இவ்வாண்டு மே மாதத்திலேயே ராஜா சர்.டி. மாதவ் ராவ் தலைமையிலான நூற்றுஇருபது அங்கத்தினரைக் கொண்ட வரவேற்புக்குழு நியமிக்கப் பட்டது. இக்குழுவில் இந்துக்கள், முகமதியர், இந்தியக் கிறித்தவர், ஐரோப்பியர் ஆகியோர் பங்கு கொண்டனர். இம்மாநாட்டின் சிறப்பம்சங்கள் முன்கூட்டியே மக்களுக்கு அறிவிக்கப்பட்டன. வீரராகவாச்சாரியார் தமிழில் இயற்றிய காங்கிரஸ் கதேகிஸ்மு. 30,000 பிரதிகளுக்கு மேல் வினியோகம் செய்யப்பட்டது. ஏறக்குறைய 8,000 கொடையாளர் ரூ.5,500/- பெறுமானமுள்ள நிதியைத் திரட்டினர். இக் கொடையில் ஓர் அணா முதல் ஒன்று; எட்டு ரூபாய் வரையும் இருந்தன. ரூ.8,000 பெறுமதிப்புள்ள பிறிதொரு நிதியும் திரட்டப்பட்டது இதில் ரூ.1 முதல் 8-30 வரை வழங்கப்பட்டிருந்தன. மண்டலே, ரங்கூன், சிங்கப்பூர், மற்றும் இதர கிழக்குத் தீவுகளில் வாழும் மக்கள் தங்களால் இயன்ற அளவு நன்கொடைகளை அனுப்பியிருந்தனர். கொச்சி, திருவிதாங்கூர், மைசூர் மன்னர்களும் நன்கொடை அளித்ததாக அறிகிறோம்.

நிலையான காங்கிரஸ் குழு ஒரு பெரும் பந்தலைப் பணிந்திருந்தது. இப்பந்தலின் கொள்ளளவு ஏறக்குறைய 3,000 பேர்கள். ஈண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்; அவர்களில் பங்கு பெற்றிருந்தோர் 670 பேர் மட்டுமே. சென்னை 362 பேர்களைக் கொண்டிருந்தது. பச்சையப்பன் கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர் ஜான் ஆடம் இம்மாநாட்டில் பங்கு பெற்றிருந்தார். மாதவ் ராவ் வந்தோரை வரவேற்றார். அவருடைய சிறு சொற்பொழிவை சி.வி. சுந்தரம் சாஸ்திரி படித்தார். தலைவர் காங்கிரசின் பிரதிநிதித்துவத் தன்மையை வலியுறுத்தினார்; அதற்குத் தலைசாய்த்தலைச் சிறப்புடன் குறித்தார். அனுப்பப்பட்ட வேண்டுகோள்களின் பரிசீலனைக்காக ஒரு குழுவை நியமிக்குமாறு வேண்டினார்; காங்கிரசின் செயல் முறைப் பட்டியலைத் தயாரித்தார். இரண்டாவது முடிவுப்படி எஸ்.என். பானர்ஜி "காங்கிரசின் சின்னத்தை நாம் பறக்க விடுவோம், இம்முடிவை யாரும் அழிக்க இயலாதபடி பொன்னெழுத்துக்களில் பொறித்திடுவோம்" என்று கூறினார். இது இந்தியரின் பிரதிநிதித்துவ அமைப்பு என்றும் கூறினார்.

இவ்வமைப்பின் 10- ஆம் மாநாடு 1894- இல் சென்னையில் நடைபெற்றது. இப்போது அல்பிரட்வெப் தலைமை தாங்கினார். மாநாட்டுக்கு முன் வரவேற்புக்குழு ஏறக்குறைய ரூ.40,000 திரட்டியது. அமைக்கப்பட்ட பெரிய பந்தலில் 1,163 அங்கத்தினர் கூடினர். இப்பந்தல் ஏறக்குறைய 5,000 பேருக்கு அமருமிடந்தருவதாக அமைக்கப் பட்டிருந்தது. சென்னையிலிருந்து 947 அங்கத்தினர் பங்கு கொண்டனர். சென்னை மிகத் தள்ளியிருப்பதால் பலரும் பங்கு கொள்ள இயலவில்லை. வரவேற்புக் குழுத் தலைவர் டி. ரங்கையா நாயுடு வந்தோரை வரவேற்றார். அவர்களின் "செல்வாக்குக்குத் தகுந்தார்ப் போல் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது" என்று அவர் சுட்டினார். ராஜா சர் சவலை ராமசாமி முதலியார் வெப்பின் பெயரை முன் மொழிந்தார். ராஜா ராம்பால் சிங் வழி மொழிந்தார். சுங்கவரி விதிப்பு பற்றி இங்கு விவாதிக்கப்பட்டது. இந்திய நிதி நிலை பற்றி தீர ஆராய மக்கள் சபை ஒரு தனிக்குழுவை நியமிக்குமாறு வேண்டப்பட்டது. இக் குழு கட்டாயம் நியமிக்கப்பட வேண்டிய காரணங்களை பழுதற C. சம்புலிங்க

முதலியார் அறிவித்தார். இந்திய நிர்வாகத்தின் பொறுப்பற்ற நிலையை ஜி. சுப்பிரமண்ய ஐயர் சாடினார். அதன் குறைகளை உடனே நீக்குமாறும் வேண்டினார். சட்டத்தில் அனுபவமற்ற நீதிபதிகளின் நியமனத்தை என். சுப்பாராவ் சுட்டிக் காட்டினார்.

1903- ஆம் ஆண்டு காங்கிரஸின் 19- ஆம் மாநாடு மீண்டும் சென்னையில் கூடியது; லால் மோகன் கோஷ் தலைமை வகித்தார். தேனாம் பேட்டையிலுள்ள ஸிபிரிங் தோப்பில் பெரும் பந்தல் தயாராயிற்று. 6,000 பேர்களுக்கு இடமளிக்கும் வகையில் இது எழுப்பப்பட்டது. சென்னையில் மூன்றாம் தொழில் காட்சியை மைசூரின் இளைய மகாராஜா திறந்து வைத்தார். அங்கு 538 அங்கத்தினர் வருகை தந்தனர்; அவர்களின் 383 பேர் சென்னை மாநிலத்தார். எஸ்.எம்.எஸ். பகதூர் வந்தோரை வரவேற்றார். இராமநாதபுரத்து மன்னரின் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்தார். இந்துக்களையும், முகம்தியரையும், இணைந்து போராட வேண்டினார். தொடக்கவுரையில் கோஷ் "நாம் சுய ஆட்சி நாடல்ல" என்றார். பூட்டப்பட்டுள்ள கை விலங்குகளை உடைப்போம் என்றும் கூறினார். தடையிலா வாணிபமும் ஒழுங்கு வாணிபமும் இந்தியாவைப் பாதிக்கும் வகைபற்றி விளக்கினார். இந்தியர்கள் படிப்படியாக நிர்வாகத்துறையிலிருந்து வெளியேற்றப்படும் விந்தையைச் சுட்டினார். தங்கள் அனுபவத்தை வளர்க்க இயலாத அவல நிலையையும் எடுத்துரைத்தார். நில வரி உயர்வு பற்றி ஆய்ந்தறிய எல்.ஏ. கோவிந்தராகவ ஐயர் நியமிக்கப்பட்டார். அவருடைய அறிக்கை மக்களின் துன்பமயமான நிலையை குறிப்பிட்டது; வரிக்கொடுமையை கோடிட்டுக் காட்டியது. இவற்றைப் பலர் வழி மொழிந்தனர். இந்தியர் வாழும் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா பற்றி விவாதிக்கப்பட்டது.

காங்கிரஸ் அமைப்பின் முன்னையக் கோட்பாடுகள் மிதமானவை. மந்தமானவை. அவர்கள் அரசுக்கு அடங்கி நடக்கவே விழைந்தனர். இந்தியர் "ஆங்கில நாட்டின் மீது பற்றுக்கொள்ளுமாறு" வேண்டியது, மண்டியிட்டு, கீழடங்கி, பரிந்துரைத்து, வேண்டுகோள் விட்டு, மனு கொடுத்து காலத்தைக் கடத்தியது காங்கிரஸ் என்று குறைபட்டனர் பலர்.

பயிற்சி வினாக்கள்

1) 19- ஆம் நூற்றாண்டில், தமிழக சமுதாயத்தில் குடிகொண்டிருந்த சீர்கேடுகளை விளக்கி, அவைகளைக்களைய எடுக்கப்பட்ட முயற்சிகளை விவரிக்க.

2) ஆங்கில ஆட்சியில், தமிழகத்தில் புதிய போக்குவரத்து முறை, செய்தித் தொடர்பு முறை புகுத்தப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

3) சென்னை மாநிலத்தில் நீதித்துறையில் ஏற்பட்ட பல்வேறு சட்ட மாறுதல்களை விளக்குக.

4) ஆங்கில ஆட்சியின் கீழ் தமிழகத்தில் நிலவிய தலசுய ஆட்சி பற்றி விவரிக்க.

5) தமிழகத்தில் ஏற்பட்ட செய்தித்தொடர்பு வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 29 இந்திய சுதந்திரப் போரில் தமிழகத்தின் பங்கு

1906 முதல்1919 வரையான காலத்தில், பொதுவாக இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும், மிதவாத — தீவிரவாத நடவடிக்கைகளின் எழுச்சியும், வளர்ச்சியும், வீழ்ச்சியும் ஒரே சமயத்தில் ஏற்பட்டது. இக்காலம் மூன்று முக்கிய தலைவர்களின் காலமாக இருந்தது. லாலா லஜபதிராய், பெபின் சந்திரபால், பாலகங்காதர திலகர் போன்றவர்கள் வட இந்தியாவில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களாயிருந்தனர். பாரதியார், வ.உ. சிரம்பரம், சுப்பிரமணிய சிவா, வி.வி.எஸ். ஐயர், அன்னிபெசன்ட் அம்மையார், வாஞ்சி ஐயர் போன்றவர்கள் தமிழகத்தில் சமகால தியாகிகளாக இருந்தனர். பரலி எஸ். நெல்லையப்பர், சுரேந்திரநாத் ஆர்யா, பாஷ்யம் (ஆர்யா), துரைசாமி ஐயர், சக்கரைச் செட்டியார், கிருஷ்ணசாமி சர்மா, பகவந்தன் குப்தா போன்றவர்கள் தீவிரவாதிகளாகவும் பெபின் சந்திரபாலின் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்து வந்தனர். பெபின் சந்திரபால் சோர்வற்ற, தேச உணர்ச்சிமிக்க, வீராவேசமிக்க, முழக்கமிடும் சொல்திறன் மிக்க சுதந்திரச் சுடராவார். சென்னை மெரீனாவில் அவர்தம் சொற்பொழிவினைக் கேட்ட தமிழ்மக்கள் அவர்தம் விடுதலைவேட்கை வழியைப் பின்பற்றி வீறு கொண்டு எழுந்தனர். "தமிழகத்தில் புரட்சிகரமான நடவடிக்கைகளுக்கு முழுமுதற் காரணம், பெபின் சந்திரபாலின் சென்னை சொற்பொழிவுகளே" யாகும் என ரௌலட் என்பாரின் தலைமையிலான ஆய்வுக்குழுவின் அறிக்கை விளக்குகின்றது. "வந்தே மாதரம்" (Vande Madaram) என்ற சொல் பங்கின் சந்திர சாட்டர்ஜி என்வரால் உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. இச்சொல் சுப்பிரமணிய பாரதியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு தமிழ்மக்களின் நெஞ்சங்களிலெல்லாம் நிலைத்திடச் செய்யப்பட்டது. தாதாபாய் நௌரோஜி யால் தேர்ந்தெடுக்கப்பட்ட "சுயராஜ்யம்" (Swaraj) என்ற வார்த்தை பல இடங்களிலும் பரவியது. இத்தேசியச் சொல்லின் பெருமையை உணர்ந்த தமிழ் நெஞ்சங்கள் சுதந்திர இயக்கத்தில் தங்களை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டன. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை நான் அதனை அடைந்தே தீருவேன்" என்ற பால கங்காதர திலகரின் முழக்கத்திற்கு தமிழகத்தில் ஏராளமான ஆதரவு இருந்தது. இவ்வாறான தலைவர்களின் கருத்துக்கள், நடவடிக்கைகள், ஆசைகள் ஆகியவை சுப்பிரமணிய பாரதியார் போன்ற கவிஞர்களால் தமிழ் மக்களுக்கு உணர்த்தப்பட்டது. வட இந்தியப் பகுதிகளில் ஏற்பட்ட கலவரங்கள், புரட்சித் திட்டங்கள் ஆகியவற்றின் எதிரொலி தமி ழகத்திலும் காணப்பட்டது. இந்த மூன்று தலைவர்களின் செயல்கள் தமிழக மக்களிடையே புதிய சுதந்திரக் கருத்துக்களைப் பரப்பியதோடு மட்டுமின்றி, சகோதரத்துவ உணர்வையும் வளர்த்தன.

தீவிரவாத இயக்கம் தோன்றியதற்குக் காரணம் அன்று செயல்பட்டு வந்த இந்திய அரசின் அடக்கு முறைகளேயாகும். காங்கிரஸ் இயக்கம் விரும்பிய மக்களது தேவை களைப் பூர்த்தி செய்ய அரசு தவறியது. அரசு தங்களுக்கு நன்மைகள் செய்யும் என்று மனதளவில் எண்ணிக் கொண்டிருந்த இந்திய மக்களுக்கு, 1892 ஆம் ஆண்டின் இந்திய கவுன்சில் சட்டம், மனநிறைவைத் தரவில்லை. ஏராளமான உரிமைகள், சலுகைகள், அரசு நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் போன்றவற்றைத் தங்களுக்கு அளிக்கவேண்டுமென இந்திய மக்கள் விரும்பினர். 1897- இல் இந்தியாவில் பெரும்பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அதற்கான நிவாரணப்பணிகளைச் செய்ய அரசு தவறியது. இதற்கு மாறாக, அரசாங்கம், விக்டோரியா அரசியாரின் விழாவுக்கான ஆடம்பரமான

ஏற்பாடுகளை, லிட்டன் பிரவுவின் தலைமையில் செய்து கொண்டிருந்தது. லிட்டன் பிரபுவின் இந்தச் செயல் ரோம் நாட்டு ஆட்சியாளரான நீரோவின் செயல்களுடன் ஒப்பிட்டு விமரிசனம் செய்யப்பட்டது. இந்திய விமரிசகர்கள், "ரோம் நகரம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த பொழுது, நீரோ மன்னன் பிடில் வாசித்தான் " , அது போன்று பஞ்சத்தால் வாடிய மக்களைப் பற்றிச் சிந்திக்காது விழா எடுக்கின்றனர் என குற்றம் சாட்டினர். அதே ஆண்டு, குழப்பங்கள் ஏற்படுத்தியதற்காகவும், சில முக்கிய பிரச்சினை பற்றிய குறிப்புகளை அச்சிட்டு வெளியிட்டதற்காகவும் திலகர் கைது செய்யப்பட்டார். கர்சன் பிரபுவின் அடக்கு முறை நடவடிக்கைகளான கல்கத்தா மாநகராட்சிச் சட்டம் (1899), இந்தியப் பல்கலைக் கழக சட்டம் (1904), அரசாங்க ரகசியச் (1899) சட்டம், 1904 ஆம் ஆண்டு பத்திரிகைச் சட்டம் போன்றவற்றால், இந்திய மக்களின் சுதந்திர வேட்கையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்திய மக்களால் வெறுக்கப்பட்ட, வங்காளப் பிரிவினைச் (1905) சட்டம்தான் தீவிரவாத இயக்கத்திற்கு உடனடிக் காரணமாக அமைந்தது. இருமனைவியரையுடைய ஒரு கணவன் (ஒன்று இந்துக்கள் மற்றொன்று முதமதியர்) போன்று, இந்துக்களைவிட முகமதியரையே தான் அதிகம் விரும்பி அன்பு பாராட்டியதாக, முகமதியர்கள் அதிகம் வசிக்கும் சிட்டகாங் பகுதியில், கர்சன் பிரபு பேசினார். மற்றொரு சந்தர்ப்பத்தில் இந்தியாவில் காங்கிரஸ் இயக்கத்தை ஒழித்துக் கட்டுவதே தனது முதலும், முக்கியமுமான கடமை என எடுத்துரைத்தார். கர்சன் பிரபுவின் அடக்கு முறைகளை எதிர்த்து வங்கப் பிரிவினை எதிர்ப்பு இயக்கம் ஒன்று நடத்தப்பட்டது. தொடர்ந்து ஏற்பட்ட சுதேசி இயக்கம், ஆங்கிலப் பொருட்களுக்குத் தடை போன்ற இயக்கங்கள் வட இந்தியாவில் தொடங்கி தென்னகத்திலும் பரவின. நாராயணகஞ்சின் வங்காள ஆளுநரான ஃபிரேசரை (Frazer)- க் கொல்ல முயற்சி செய்யப்பட்டது. முஸாபர்பூர் என்ற இடத்தில் கல்கத்தாவின் தலைமை மாஜிஸ்டிரேட் கிங்ஸ்போர்டு என்பவரைக் கொலை செய்ய முயற்சி நடந்தது. இதனால், குடிராம் போஸ் என்ற கல்லூரி மாணவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. புரோபுல்லா சாக்கி என்ற தீவிரவாதக் கருத்துடைய மாணவர் தற்கொலை செய்து கொண்டார்.

வ.உ.சி. என்று சிறப்பாக அழைக்கப்பட்ட வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் வடஇந்திய தீவிரவாத நடவடிக்கைகளில் அதிக செல்வாக்குப் பெற்றார். 'திலகர் வாழ்த்து' என்ற தமது கவிதையால் திலகரின் சிறப்பை சுப்பிரமணிய பாரதியார் எடுத்துரைத்தார். பாரதியாரின் இருப்பிடம் அடிக்கடி கண்காணிப்பிற்குள்ளானது. மற்றபலரும் பின் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என எச்சரிக்கப்பட்டனர். பின்னால், பாரதி தமது நடவடிக்கைகளின் மையமாகப் பாண்டிச்சேரியை வைத்துக் கொண்டார். அங்கு ஏராளமான தீவிரவாத இளைஞர்களுடன் அவருக்குத் தொடர்பு இருந்தது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர் வங்காளத்தைச் சேர்ந்த அரவிந்தகோஷ் ஆவார். தமது உயிரைத் துச்சமெனக் கருதிய புரட்சியாளர்கள் பலரது நடவடிக்கைகளின் மையமாக அப்போது பாண்டிச்சேரி திகழ்ந்தது.

1906 முதல் 1912 வரை, தமிழகத்தில் திருநெல்வேலி சுதந்திர இயக்கத்தின் முக்கிய மையமாக விளங்கியது. இங்கு, புரட்சி இயக்கத் தலைவர்களின் இரகசியக் கூட்டங்கள் நடந்தன. பெரும் மாநாடுகள் நடத்தப்பட்டு ஆங்கிலப் பொருட்களை நுகராதிருக்கும்படி தமிழக மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். தடை ஆணையையும் பொருட்படுத்தாது,

ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசிக்கப்பலைச் செலுத்த வ.உ.சி. விரும்பினார். 1906- ஆம் ஆண்டு சுதேசிக் கப்பல் கழகத்தைத் துவக்கினார். இது ஆங்கிலேயருக்கு எதிராக துவக்கப்பட்டதாகும். மற்றொரு தருணத்தில், "நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்தால் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டியடிக்கலாம்" எனக் கூறினார். இது, பின்னாளில் காந்திஜியால் நடத்தப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் முன்னோடியாக விளங்கிற்று. தூத்துக்குடியில் சுதேச தர்மசங்க நெசவாளர் கூட்டமைப்பை ஏற்படுத்தினார்; சுதேச கூட்டுறவு அங்காடிகளும் ஏற்படுத்தப்பட்டன. தொழிலாளர் கூட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும், வாணிகக்கழகங்கள் ஏற்படுத்தவும் ஆதரவு காட்டினார். சுதேசி கப்பல் கழகம் ஒரு வாணிகக் கழகம் மட்டுமன்று, ஆங்கிலேயரைத் தமது பெட்டிபடுக்கைகளுடன் இந்தியாவைவிட்டு வெளியேற்றுவதற்குப் பயன்படும் ஆயுதம் எனக் குறிப்பிட்டார். உடனடியாக, சுப்பிரமணியசிவா குறுக்கிட்டு, "ஏன் அவர்கள் தங்களது பெட்டிபடுக்கைகளுடன் வெளியேற வேண்டும். அவற்றை இந்தியாவிலேயே விட்டுச் செல்லட்டும், அவை அனைத்தும் இந்திய மக்களைக் கசக்கிப் பிழிந்ததன் விளைவே" எனக் கூறினார். வ.உ.சி.யும் அவரது நண்பரான சுப்பிரமணிய சிவாவும் சுயராஜ்யமே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். எனவே எந்தவிதமான நடவடிக்கை களிலும் ஈடுபட்டு அதனை அடைய விரும்பினர்.. இந்தியர்கள் சட்டப்படியான உரிமைகளிலிருந்து விலக்கடிக்கப்பட்டுள்ளனர்; இந்தியர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்படவில்லை; ஆனால், ஆங்கிலேயர்கள் அந்த உரிமையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என வ.உ.சி. தாக்கிப் பேசினார்.

அரசாங்க ஒழுங்குமுறைகளுக்கு எதிராக சுதேசிக்கப்பல்களை நடத்துவதற்குத் தங்களது ஒத்துழைப்பைத் தரவேண்டுமென வ.உ.சி. பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார். கப்பல்கள் வாங்குவதற்காக ஏராளமான பங்குகள் விலைக்கு வாங்கப் பட்டன. சுதேசி கப்பல் கழகப் பங்குகள் ஏராளமாக விற்கப்படுவதற்கு விஜயராக வாச்சாரியார், ராஜாஜி போன்றவர்கள் காரணமாயிருந்தார்கள். "வந்தே மாதரம் பிள்ளை" என்று சிறப்பாக அழைக்கப்பட்ட பரலி சண்முகம்பிள்ளை (பரலி நெல்லையப்பரின் சகோதரர்) மற்ற பங்குகளை விற்கவும் உதவினார். மதுரையில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத்தேவர் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பங்குகளை வாங்கினார். பொருளாதார, மற்றும் பலவகையிலான உதவிகளைப் பெற்று, தமது நண்பர்கள், பங்குதாரர்கள் ஆகியோரின் ஆசியுடன், வ.உ.சி. ஒரு கப்பலைக் குத்தகைக்குப் பெற்றார்: மற்றொன்றைப் பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கினார். இக்கப்பல்கள் 1909- ஆம் ஆண்டு தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே வாணிபம் செய்யத்துவங்கின.

ஆஷ் (Ashe) எனும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் தன்னை வந்து சந்திக்க வேண்டும் என வ.உ.சி.க்கு ஆணையிட்டார். ஆட்சித் தலைவரின் திட்டத்தை அறிந்தும், நண்பர்கள் பலர் தடுத்தும் வ.உ.சி. அவரை சந்திக்கச் சென்றார். அவரை வரவேற்ற அவ்வதிகாரி இராணுவத் தளவாடங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்த அறையைக் காண்பித்தார். ஆனால் ஆயுதங்களைப் பார்த்துவிட்டு வ.உ.சி. பயந்த விடவில்லை. அதே சமயத்தில் அலுவலகத்தில் வெளியே மகாலிங்கம் என்பவ துப்பாக்கியுடன் இருப்பதை வ.உ.சி. பார்த்தார். பின் மகாலிங்கத்தை விசாரித்தபோது

வ.உசி.யோ, இந்தியாவிலிருக்கும் ஆங்கிலேயர் மீது கசப்பு உணர்வு கொள்ளவில்லை; அவர்களுடைய அடக்குமுறைச் செயல்களையே வெறுத்தார். வ.உ.சி.யின் முயற்சிகள் முடிவில் தோற்றன. எனினும், ஒரு இந்தியர் கூட கப்பல் கழகம் ஒன்றை நடத்த முடியும் என்பதனை நிரூபித்துக் காட்டினார் என்பது மறுக்க முடியாதது.

1906 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 9- ஆம் நாள் பெபின் சந்திரபால் சிறையிலிருந்து விடுதலையாகிறார் என்று செய்தி கிட்டியது. தமிழக மக்கள் சிறையிலிருந்து வருபவரைச் சென்னைக்கு அழைக்க முடிவு செய்தனர். அவர் தம் விடுதலையைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என திருநெல்வேலி மக்கள் முடிவு செய்தனர். அரசாங்கமோ, ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தக் கூடாது என தடைவிதித்திருந்தது. இதனை மீறி திருநெல்வேலிப் பகுதியின் தலைவர்கள் போராட்டத்திற்கும், மறியலுக்கும், அலுவலகங் களிலிருந்து வெளியேற்றம் செய்தல், கடையடைப்புகள் செய்தல் ஆகியவற்றிற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். திருநெல்வேலி மாணவர்களும் தங்களது கல்விக் கூடங்களிலிருந்து வெளியேறி, ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்; இந்திய மண்ணிலிருந்து ஆங்கிலேயர்களை வெளியேறுமாறு கூவினர். வ.உ.சி., சுப்ரமணியசிவா போன்றோரின் பேச்சுச்சுளின் சக்தியால் எண்ணற்ற பொதுமக்களும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலம் நகரசபை மாளிகையில் நுழைந்து கட்டிடத்திற்குத் தீவைத்து கொளுத்தியது.

செய்தியை அறிந்த ஆட்சியாளர் ஆஷ் தலத்திற்கு விரைந்தார்; கூடியிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து சுட்டார்.; நான்கு பேர் உயிரிழந்தனர்; பலர் காயமுற்றனர். இது தவிர பலர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மார்ச் திங்கள் 12- ஆம் நாள் வ.உ.சி., சிவா, மற்றும் பத்தாயிரம் தேசியத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களது வழக்கினை விசாரணை செய்த நீதிபதி வ.உ.சி. க்கு நாற்பது ஆண்டுகள் (double time life imprisonment) சிறைத்தண்டனையும், சிவாவுக்குப் பத்து ஆண்டு கடுங்காவலும் விதித்தார். பின்பு உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்த போது சிறைத்தண்டனை ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது; ஆறு ஆண்டுகள் முடிந்ததும் அந்தமான் தீவுக்கு அனுப்பப்படுவார் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. கோவையிலும், கண்ணனூரிலும் சிறைச்சாலையிலிருந்த வ.உ.சி. க்கு ஏராளமான தண்டனைகள் உள்ளேயே வழங்கப்பட்டன. கேழ்வரகு சாதம் கொடுக்கப்பட்டது, காளைமாடு போன்று செக்கிழுத்தார். சுதேசிக் கப்பல்கள் விற்கப்பட்டன. புரட்சியாளர்கள் பாண்டிச்சேரியிலும், தமிழ் நாட்டின் மற்ற பகுதிகளிலும் தங்கி இருந்து மாவட்ட ஆட்சியாளர் ஆஷைக் கொலை செய்வதற்கான திட்டத்தினை உருவாக்கினர். அரசாங்கத்தின் நடவடிக்கையும் அவர்களைக் கண்காணிப்பதிலேயே இருந்தது. தமிழர்களின் தீவிர செயல்களைக் கண்ணுற்ற ஆங்கிலேயர் பலர் தூத்துக்குடியிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். சுதந்திர இயக்கத் தலைவர்களின் திட்டம் மணியாச்சியில் தான் செயல்பட வேண்டியதாயிற்று.

சுப்பிரமணிய சிவா திருவாங்கூரில் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருந்தார். அதே நேரத்தில் பத்மநாப அய்யங்கார் (பின்னால் 'சுதேச அய்யங்கார்' என அழைக்கப்பட்டார்) ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் சுதேசிப்

பொருட்களை வாங்குதல் பற்றிய தத்துவக் கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருந்தார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டு கடுமையான தண்டனையளிக்கப்பட்டது.

தீவிரவாதிகளான வி.வி.எஸ். ஐயர், நீலகண்ட பிரம்மச்சாரி (மார்ச் 1978 இல் இறந்தார்), சங்கரகிருஷ்ண ஐயர், எம்.பி. திருமலாச்சாரி, வாஞ்சிநாதன் போன்றவர்கள், ஆஷின் அடக்குமுறைச் செயல்களைக் கடுமையாகக் கண்டித்தனர். குற்றாலத்தில் இந்தியருக்கும் வெள்ளையருக்குமிடையே நடந்த தகராறும் ஆஷ் கொலை செய்யப்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்தது. 1907- இல் சூரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தேசிய இயக்கம் தீவிரவாதிகள், மிதவாதிகள் என்று இருகூறாகப் பிரிக்கப்பட்டது. சுப்பிரமணியபாரதி, வ.உ.சி. போன்றவர்கள் தமிழகத்தின் சார்பில் மாநாட்டில் கலந்து கொண்டனர். தீவிரவாதிகளின் பக்கம் சேர்ந்த பாரதியார், சூரத் மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு தீவிர கருத்துக்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களையும், காகிதங்களையும் விநியோகம் செய்தார். அவர்தம் தீவிர கொள்கைகளும், கருத்துக்களும் ஏராளமான இளம் தமிழ் உள்ளங்களைக் கவர்ந்திழுத்ததில் ஆச்சரியமில்லை. பல இன்னல்களுக்கு உட்பட்ட காரணத்தால் குற்றாலத்தில் ("நஜன்") கொலைத்திட்டம் துவங்கியது. வி.வி.எஸ். ஐயரின் மனதில் உதித்து விட்ட இத்திட்டம் பாபநாசம், புனலூர் ஆகிய பகுதிகளில் பரப்பப்பட்டு, ஆலோசனையும் செய்யப்பட்டது. புனலூரில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனையின்படி திருவாங்கூர் வனத்துறைப் பணியாளரான வாஞ்சிநாதன் தான் இக்கொலைக்குத் தகுதி வாய்ந்தவர் எனத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் இரகசியமாகக் காக்கப்பட்டது. 1911- ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷ் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு புகைவண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, மணியாச்சியில், வாஞ்சிநாதன் துப்பாக்கியால் ஆஷைச் சுட்டார். தன்னை ஆங்கிலேயர்கள் தண்டிப்பதை விரும்பாத வாஞ்சிநாதன் தானே தற்கொலை செய்து கொண்டார்.

தீவிரவாதிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இச்சதித்திட்டடத்தில் தொடர்பு கொண்டதாகச் சந்தேகப்படக் கூடிய அனைவரையும் கைது செய்யவும் காவல் துறைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. காவல் துறையினரால் குற்றம் சாட்டடப்பட்ட 14 பேர்களில் ஒருவர் மட்டுமே நாற்பத்தைந்து வயதினையடைந்திருந்தார். 1911 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள், வழக்கு, சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டது. விசாரணையில், ஆர்னால்டு வைட், சங்கரன் நாயர், இலிங் ஆகிய நிதிபதிகள் அமர்ந்திருந்தனர். முதலாவதாக நீலகண்ட பிரம்மச்சாரி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து, சங்கரகிருஷ்ண ஐயர், மடத்துக்கடை சிதம்பரம் பிள்ளை, முத்துக்குமாரசாமி பிள்ளை, சுப்பையாபிள்ளை, ஜகன்னாத ஐயங்கார், பிச்சமணி, வேம்பு, ஹரிஹரன், தேசிகாச்சாரி, அழகப்பா பிள்ளை, சவடி அருணாசலம், பதிபிள்ளை, வந்தே மாதரம் சுப்பிரமணிய ஐயர் ஆகியோரும் விசாரிக்கப்பட்டனர்.

விசாரணை 1913 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது; சுமார் எழுபத்து ஒன்பது நாட்கள் நடத்தப்பட்டது. நீதிபதிகள் மூவரும் தனித்தனியாகத் தங்களது தீர்ப்புக்களை வெளியிட்டனர். சங்கரன் நாயர், இந்த கொலை நடந்ததற்கான காரணங்களை விவரித்தார். சுதேசிச் கப்பல் கழகத்தை ஒழித்தும், திருநெல்வேலி நகரவைக்கட்டிடத்தில்

சிலரை ஆஷ்கொன்றதும் இக்கொலைத் திட்டத்திற்கான முன்னணிக் காரணங்கள் என அவர் தீர்மானித்தார். நீலகண்ட பிரம்மச்சாரிக்கு ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது. சங்கர கிருஷ்ண ஐயருக்கு நான்கு ஆண்டுகளும், ஹரிஹர ஐயருக்கு மூன்று ஆண்டுகளும், மடத்துக்கடை சிதம்பரம் பிள்ளைக்கு இரண்டு ஆண்டுகளும், மற்ற அனைவருக்கும் ஒவ்வொரு ஆண்டும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது தலைமைக் காவலர் குருநாத ஐயர் என்பவருக்கு ஆறு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது. இந்த குருநாத ஐயர் புரட்சியாளருக்கு உதவினார், அரசு ரகசியங்களை எடுத்துக் கொடுத்தார், ஆயுதச் சாலையினுள் நுழைய அனுமதி கொடுத்தார் என்பன போன்ற குற்றங்கள் சாட்டப்பட்டன. இந்த கொலைச் சதித்திட்டத்திற்கு முழு ஊன்று கோலாக இருந்த வி.வி.எஸ். ஐயர் மீது எந்தக் குற்றமும் சாட்டப்படாது தப்பினார்.

தற்கொலை செய்து கொண்ட வாஞ்சிநாதனின் சட்டைப் பையிலிருந்து கடிதம் ஒன்று எடுக்கப்பட்டது. அக்கடிதத்தில், "ஆஷைக் கொலை செய்தது, இந்தியாவுக்கு வர இருக்கும் இங்கிலாந்து அரசரைக் கொலை செய்வதற்கான ஒரு ஒத்திகையே" என குறிப்பிட்டிருந்தது. சுமார் மூவாயிரம் இளைஞர்கள், இச்செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். தீவிரவாதிகளுக்கு தமது முழு ஆதரவையும், உழைப்பையும் நல்கியவர் மடத்துக்கடை சிதம்பரம் பிள்ளையாவார். தீவிரவாதிகள் கூட்டங்கள் அனைத்தும் இவரது இல்லத்திலேயே நடைபெற்றது. தமிழகத்தின் முதன் முதலில் வரி செலுத்தா இயக்கத்தைத் துவக்கியவரும் இவரே. இவர்கள் எல்லாம் சிறைப் படுத்தப்பட்டவுடன், தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியா முழுமையிலும் தீவிரவாத இயக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. 1912 இல் சிறையிலிருந்து மீண்ட வ.உ.சி. தீவிரவாதிகளையும், பயங்கரவாதிகளையும் கடுமையாகத் தாக்கிப் பேசினார். அன்னியர்களை வெளியேற்றுவதில் அமைதியான கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமேயன்றி கொலைச் செயல்கள் ஆகாது என்பதே அவரது கருத்து. ஆள்பவர் களால் கொடுக்கப்பட்ட தண்டனைகளும் அடக்கு முறைச் செயல்களும் ஆளப்படு வோரைக் கொதித்தெழச் செய்தது. எனினும் தீவிரவாதிகளும், பயங்கரவாதிகளும் தங்களது செயல்களுக்குப் பெரும்பான்மையான மக்களது ஆதரவைப் பெற இயலவில்லை. இந்த தீவிரச் செயல்கள் எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டு பின்னால் இந்திய தேசிய இயக்கம் அமைதியாகவே நடைபெற வேண்டியதாயிற்று.

தன்னாட்சி இயக்கம் (Home Rule Movement)

1914-ஆம் ஆண்டு முதல் உலகப்போர் ஏற்பட்டபோது, இந்திய தேசிய காங்கிரஸை கலந்து ஆலோசிக்காது இந்தியாவைப் போரில் அரசு ஈடுபடுத்தியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பூதப்பாண்டி என்ற கிராமத்தில் பிறந்த செண்பகராமன் பிள்ளை முதன் முதலாக "வந்தே மாதரம்" என்ற சொல்லை உச்சரித்தார். அவர் அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். ஆங்கில அரசு அவரைத் தண்டிக்க நினைத்தபோது, அவர் தப்பிச் சென்று ஜெர்மனியில் தங்கினார். இந்திய தேசியப் பற்று மிக்க இத்தீரர், இந்தியர்களைப் பற்றித் தவறாகக் கூறியதற்காக ஹிட்லரையே மன்னிப்புக் கேட்க வைத்தவராவார். இந்தியாவுக்குத் தன்னாட்சி வேண்டும் என்று முதன் முதலில் கருத்து

வெளியிட்டவர் சியாம்ஜி கிருஷ்ணவர்மா என்பவராவார். உலகமே போரில் மூழ்கியிருந்த தருணத்தில், அன்னிபெசண்ட அம்மையார் தன்னாட்சிக் கழகத் (Home Rule Movement) தைத் துவக்கினார். இதன்படி அயர்லாந்து தன்னாட்சி இயக்கத்தைத் தழுவி போராட்டம் நடத்தப்படவேண்டும் எனக் கருதப்பட்டது. திருமதி பெசன்டின் இந்தியத் தன்னாட்சிக் கழகத்தை இலண்டனில் முதன் முதலாகத் துவக்கியவர்(1916) லாண்ஸ்பரியாவார். பெசன்ட் அம்மையார், தேஜ்பகதூர் சாப்ரூ, சி.பி. இராமசாமி ஐயர் ஆகியோரால் தயார் செய்யப்பட்ட 'இந்திய காமன்வெல்த் மசோதா" வை1927 இல் லாண்ஸ்பரி, ஆங்கிலப் பொது மக்கள் சபையில் தாக்கல் செய்தார்.

1915 இல், பெசன்ட் அம்மையார், தன்னாட்சிமுறைக்கு வேண்டிய வழிகளை ஆராய்ந்தார். அவர் தம் கருத்துக்கள் 1916 இல் சென்னை மாநிலம் முழுவதும் பரவியது. அவரது திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு "India: A Nation" என்ற நூலை1915 இல் வெளியிட்டார். அந்த நூலின் கருத்துக்களைச் சுருக்கி "New India" என்ற நாளிதழில் வெளியிட்டார். இந்த நாளிதழும் சுய ஆட்சி இயக்கம் பற்றி இங்கிலாந்துக்கு வேண்டுதல்களைத் தீவிரமாக வெளியிட்டு வந்தது. "இந்தியா பொறுமையாக இருக்கிறது. ஆனால் நீங்கள் அப்படியில்லை. இந்தியா உங்களுடன் உள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்ள விரும்பவில்லை; அது விரும்புவதெல்லாம் பேரரசின் ஒரு பகுதியாக இருக்கத்தான்; ஆனால் சுய ஆட்சி செய்யும் மற்ற மக்களைப் போன்ற சம அந்தஸ்தில், மற்ற சுய ஆட்சி நடத்தும் ஆங்கிலக் குடியேற்றங்களைப் போன்று இருக்க விரும்புகின்றது. இவ்வாறு விரும்புவது போராட்டம் செய்வதற்கு ஒப்பா? இது அரசு மீது அவநம்பிக்கை வைத்து எதிர்ப்பதாகுமா?"— என்று பெசன்ட் அம்மையார் எழுதினார்.

1915- ஆம் ஆண்டு தனது ``How India Wrought for Freedom" என்ற நூலில் பெசன்ட் அம்மையார், "இது சுதந்திரத்திற்கான அரசியலமைப்புப் போராட்டத்தை விளக்கும் கதையாகும். இது பொறுமையின் சோகக் கதையாகும்; தாங்கிக் கொள்வதில் பலம் வாய்ந்ததாகும்; பகுத்தறிவில் முற்போக்கானது. இந்தியாவின் வேண்டுகோளான தன்னாட்சி இயக்கத்திற்கு ஏதேனும் ஒரு நியாயம் கற்பிக்கப்பட வேண்டுமானால் இந்நூல் இந்தியாவின் நியாயத்தை விளக்குவதாகும்" என்று குறிப்பிட்டிருந்தார். தன்னாட்சி உரிமை வாங்கப்படும் வரை அதற்காகப் போராடக்கூடிய காலமும் வந்து விட்டது. பெசன்ட் அம்மையாரின் இந்நூல் இந்தியர் விரும்பும் தன்னாட்சி முறைக்கு ஒரு அத்தாட்சியாகும். மற்றவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதை விட தன்னாட்சி முறையில் இந்திய நாடு வளம் பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. பெரும்புரட்சியோ, குழப்பமோ, போரோ நடக்காது தடுக்க வேண்டுமெனில் இந்தியருக்குத் தன்னாட்சி வழங்குவதே முறையானது என அதிகாரிகள் பலரும், காங்கிரஸ் இயக்கமும் கருதினர். 1916- ஆம் ஆண்டு துவக்கத்தில், தன்னோடு சேர்ந்து தன்னாட்சிக் குழுவில் பணிபுரியுமாறு காந்திஜியைத் திருமதி பெசன்ட் வேண்டினார். ஆனால் காந்திஜியோ, ஆங்கில அரசைத் துன்பத்திற்குள்ளாக்கவோ அல்லது சிரமப்படுத்தவோ விரும்பவில்லை என்று கூறி மறுத்து விட்டார். அதே நேரத்தில், சென்னை மாநிலத்தில் தன்னாட்சி இயக்கத்திற்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது. தமிழக மக்களின் ஆதரவையும், அன்றைய தேசியத்தலைவர்களின் ஆதரவையும் அன்னிபெசன்ட் நம்பியிருந்தார்.

"அன்னிபெசன்டின் சென்னை மாநில அரசியல் நடவடிக்கைகளும், "New India" —வில் வெளி வந்த அவரது கட்டுரையும் ஆங்கில அரசைப் பயமுறுத்தியது. பத்திரிக்கைச்சட்டத்தின்படி 1916 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் நாள், சென்னை ஆளுநர் பெண்ட்லாந்து அன்னிபெசன்ட் ஈட்டுத்தொகையாக ரூபாய் 2000 கட்டும்படி ஆணையிட்டார். அன்னிபெசன்ட் மீது எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை தேவையற்றது என நாடு முழுவதும் உள்ள மக்கள் கருதினர். சென்னை, பம்பாய், மத்திய மாநிலம் ஆகிய அரசுகள் அன்னிபெசன்டுக்கு எதிராக ஆணைகள் பிறப்பித்தன. மத்திய மாநிலம், பம்பாய் மாநிலம் ஆகியவற்றில் அவர் நுழையக்கூடாது எனவும் ஆணையிடப்பட்டது.

இந்த அரசுகளின் நியாயமற்ற சட்டங்கள் மேலும் தன்னாட்சிக் குழுவுக்கு ஊக்கம் கொடுத்தன. காங்கிரஸ் இயக்கத்தின் மந்தமான தன்மையால் எந்தவித நன்மையும் தென்படவில்லை. ஆயினும் 1916- செப்டம்பரில் திருமதி பெசன்ட் மிகத்தீவிரமாகத் தன்னாட்சி இயக்கத்தைத் துவக்கினார். துவக்க காலத்தில் அதிக ஆதரவு திரட்ட முடியாத நிலையில் அவரால் இந்தியா முழுவதிலும் இவ்வியக்கத்தை ஆரம்பிக்க இயலவில்லை. எனவே, சென்னை, பம்பாய் மாநிலங்களில் மட்டும் துவக்கப்பட்டது. இவ்வியக்கத்தின் துவக்ககால உறுப்பினர்கள் பலர் பிரம்ம ஞான சபை (theosophical society)யின் உறுப்பினர்களேயாவர். பம்பாயில் அதன் உறுப்பினர்கள் 70 பேர் இருந்தனர். அவர்களில் 68 பேர் பிரம்மஞான சபையைச் சேர்ந்தவர்களேயாவர்.

1916- ஏப்ரலில் திலக் பூனாவில் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கினார். இந்த இரு இயக்கங்களுக்கிடையே எந்தவிதக் கருத்து வேறுபாடோ, சச்சரவோ இருக்கவில்லை. அதே ஆண்டு மே மாதம் பெசன்ட் பூனாவுக்குச் சென்று தன்னாட்சி இயக்கம் பற்றி ஒரு விரிவுரை நடத்தினார். திலக் தனது மையமாக மத்திய, மேற்கத்திய இந்தியப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். சென்னை முதல் காஷ்மீர் வரை தனது போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பெசன்ட் அம்மையாருக்கு உரிமை கொடுக்கப்பட்டது.

தன்னாட்சி இயக்கம் ஜவஹர்லால் நேரு உட்பட பலரிடம் நல்லெண்ணத்தைப் பெற்றது. நல்ல வரவேற்பு இருந்தது. "சூழ்நிலை மிக விறுவிறுப்பாகி வருகிறது. நம் போன்ற பெரும்பான்மை இளைஞர்கள் வெகு விரைவில் பெரும் மாற்றங்களை எதிர்பார்த்தோம்" என நேரு குறிப்பிட்டார்.

இதுவரை இந்தியரை ஏளனமாகக் கருதி வந்த இந்திய ஆங்கில அரசு, தன்னாட்சி இயக்கம் தொடங்கியதும் செய்வதறியாது தடுமாற்றமடைந்தது. உள்ளாட்சித்துறை உறுப்பினராயிருந்த சர் ரெஜினால்டு கிரட்டாக், 'இப்போதைய நிலை ஒரு முக்கியமான சிக்கலாகும். திலக், அன்னிபெசன்ட் போன்றோரின் ஆதரவாளர்களாகப் பெரும்பான்மையான மக்கள் இருந்ததால், மிதவாதிகள் தங்களுக்கு என்று பெரும் ஆதரவைத் திரட்ட முடியவில்லை. தன்னாட்சி இயக்கம் தீவிர அரசிலமைப்புச் சீர்திருத்தத்தைக் கட்டாயப்படுத்தவில்லை; ஆனால் இந்தியர்கள் அனுபவித்துவரும் துன்பங்களை, இன்னல்களைக் களைவதற்கான செயல்களை விரும்பியது. அரசியலமைப்புப் போராட்டம் என்ற போர்வையில், பத்திரிக்கைகள் இந்திய மக்களின் உள்ளத்தில் ஆங்கில அரசுக்கு எதிரான கசப்புணர்வையே ஊட்டியது" என்று எழுதினார்.

பெசன்ட் அம்மையாரின் அரசியல் நடவடிக்கைகளால் தடுமாற்றமடைந்த மாநில அரசுகள், தன்னாட்சி இயக்கத்தை எவ்வாறு சமாளிப்பது என்பதுபற்றி சரியான வழிகளை ஆராய்ந்து கூறுமாறு மத்திய அரசைத் தூண்டின. ஆனால், செம்ஸ்போர்டு பிரபு சரியான நடவடிக்கைகளை எடுக்கமறுத்தார்; மாநிலங்கள் அதனதன் விருப்பப்படி செயல்பட வேண்டும் எனவும் கூறப்பட்டது. சென்னை மாநில அரசு, 1917 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16- ஆம் நாள் பெசன்ட், அருண்டேல், வாடியா ஆகியோரை உதகமண்டலத்தில் கைது செய்தது. பெண்ட்லாண்டு பிரபு 'நியூ இந்தியா' பத்திரிக்கைக்கு ஈட்டுத்தொகையை 40,000 ரூபாயாக்கினார். சென்னை ஆளுநர் 1917, ஜூன் 16 ஆம் நாள் தன்னைச் சந்திக்கும்படி பெசன்ட் அம்மையாருக்கு ஆணை விடுத்தார். இவ்வாணைக்குப் பதிலாக அன்று தாம் கைது செய்யப்படுவதால் ஆளுநரைச் சந்திக்க இயலாது என சுருக்கமாக எடுத்துரைத்தார். இவ்வியக்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமெனக் கருதிய ஆளுநர், அச்ச மின்றி, அன்னிபெசன்ட் அம்மையாரின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்தார். தன்னாட்சி இயக்கக்குழுவை எவ்வகையிலேனும் ஒழித்துக்கட்டுவதே தனது நோக்கமாகக் கொண்டிருந்தார்.

சர்.எஸ். சுப்பிரமணியஐயரின் தீவிர செயல்பாடுகளைத் தொடர்ந்து, அவரைப் பின்பற்றி, கெ.வி. ரெங்கசாமி ஐயங்கார், வி. கெ. இராமானுஜாச்சாரியார், பி.பி. நரசிம்ம ஐயர், எல்.ஏ. கோவிந்தராகவஐயர் போன்றவர்களும் அரசுக்கு எதிராகச் செயல்பட்டனர். இதனைத் தொடர்ந்து என். ராமசந்திரராவின் கடிதமும், காங்கிரஸ், முஸ்லீம்லீக் இயக்கங்களும் செயல்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகள் ஆளுநர் மனத்தில் அச்சத்தை உருவாக்கியது.பொதுமக்களின் எண்ணங்களும், எதிர்ப்புப்போராட்டங்களும் சேர்ந்து அவ்வாண்டே அன்னிபெசன்ட் அம்மையாரை விடுதலை செய்விக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளுநரை உள்ளாக்கின.

அரசு தலைமை வழக்கறிஞராகப் பணியாற்றிய எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார், அன்னிபெசன்டுக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் அரசு சார்பாக ஆஜரானார். வழக்கு விசாரிக்கப்பட்ட பின்பு, முடிவில், அன்னிபெசன்ட் மீது அநியாயமாகப் போடப்பட்ட வழக்குகள் சட்டத்திற்குப் புறம்பானவை என அரசாங்கத்திற்கு அறிவுறுத்தினார். அன்னிபெசன்டின் தீவிர ஆதரவாளரான எஸ். மணிஐயர் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த 'சர்' பட்டத்தை தூக்கி எறிந்தார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோவில்சனுக்குக் கடிதம் ஒன்று எழுதிய மணி ஐயர், அதில் இந்தியாவுக்கு உதவி செய்யுமாறு வில்சனை வேண்டியிருந்தார். கடிதத்தைப் படித்த உட்ரோவில்சன் அதனைப் பிரிட்டனின் பிரதம அமைச்சருக்கு அனுப்பி வைத்தார். அதனைத் தொடர்ந்து சென்னைக்கு வந்த மாண்டேகு, மணி ஐயரைப் பயமுறுத்தி, கடுமையான விளைவினைச் சந்திக்க வேண்டியிருக்கும் என எச்சரித்தார். இங்கிலாந்து பொதுமக்கள் சபையில் அக்கடிதம் பற்றி ஏராளமான கேள்விகள் எழுப்பப்பட்டன.

தன்னாட்சி இயக்கத்தில் சேர்ந்த டாக்டர் வரதராஜூலு பிரபஞ்சமித்திரன் என்ற வாரப்பத்திரிக்கையைத் தொடங்கினார். இவர் துப்பாக்கி நாயுடு என்று பலரால் அழைக்கப்பட்டார். அவரிடமிருந்து கட்டாய ஈட்டுத் தொகையாக ரூபாய் 1000 வசூலிக்கப்பட்டது. அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவர் மீது

வழக்கும் பதிவு செய்யப்பட்டது. இராஜகோபாலாச்சாரியார், நாயுடுவின் உதவிக்கு வந்தார். அதே நேரத்தில் சுப்பிரமணிய சிவா ஆளுநர் ஹார்வியைக் கொன்று விட விரும்பினார். அவரது பேச்சுக்களையும் செயல்களையும் கண்ட வ.உ.சி. அவரை 'தமிழகத்தின் திலக்' என அழைத்தார்.

பெண்ட்லாண்டு பிரபு, ஹார்வி ஆகியோரின் அடக்குமுறைச் செயல்கள் தன்னாட்சி இயக்கத்தவரைப் பெரிதும் பாதித்தது. சிறையிலிருந்து வெளிவந்த பின்பு, அன்னிபெசன்ட் அம்மையார் ஆங்கில அரசுக்கு இந்தியர்களின் ஒத்துழைப்பை ஏற்படுத்த பெரிதும் உழைக்கலானார். 1918- இல் காங்கிரஸ் கட்சியின் தமிழகப்பிரிவின் மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு வருகை தந்திருந்த அவ்வம்மையார் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அம்மையாரின் இச்செயல் சதித் திட்டச் செயல் என சத்தியமூர்த்தி, ராஜாஜி ஆகியோர் அம் மாநாட்டில் கண்டனம் செய்தனர், அம்மையாரின் தீர்மானம் வாக்கெடுப்பில் தோல்விக்குள்ளானது. தியாகராஜ செட்டியார் துவக்கிய தென்னிந்திய சுதந்திரக் கூட்டமைப்பிற்கெதிராக அன்னிபெசன்ட் செயல்பட்டதால், அவ்வம்மையாருக்கு தமிழகத்தில் எதிர்ப்புக்கள் கிளம்பின. தன்னாட்சி இயக்கத்திற்குக் கொடுத்துவந்த ஆதரவு பின் வலித்துக் கொள்ளப்பட்டது. அக்கழகம் இருட்டறை போன்றானது. காந்தியடிகளின் எழுச்சியினாலும், இந்திய சுதந்திர இயக்கத்தில் அமைதி நடவடிக்கைகள் கைக்கொள்ளப் பட்டதனாலும் தன்னாட்சிப் போராட்டத்தினர் தங்களது ஆவலை இழந்தனர். எனவே, தன்னாட்சி இயக்கத்தவர்கள் தாங்கள் துவக்கத்தில் எண்ணிய எண்ணங்களைச் செயல்படுத்த இயலாமல் போயிற்று.

இரட்டையாட்சி

1915- ஆம் ஆண்டு தன்னாட்சி இயக்கம் சென்னையில் தொடங்கப்பட்டது.1917-,இல் மாண்டேகு தம் சீர்த்திருத்த மசோதா அறிக்கையை பாராளுமன்றத்தில் அறிவித்தார். இவ்விரு ஆண்டுகட்கும் இடைப்பட்ட காலத்தில் தட்னாட்சி இயக்கச் செயல்களால் வருந்திய பலர் அன்னிபெசன்ட் அம்மையாரை எதிர்க்கத் துணிந்தனர். எதிரிகளைப் போன்று வல்லமை படைத்த ஆதரவாளரும் இவ்வியக்கத்துக்கு இருந்தனர் என்பதையும் கருத வேண்டும். அம்மையாரின் அரசுக்கு எதிரான செயல்களைப் பலரும் கண்டிக்கவும், ஆதரிக்கவும் செய்தனர். அவ்வம்மையார் தென்னக அரசியலில் தலை தூக்கி நின்றால், ஆந்திரநாட்டுப் பிரச்சினைகளில் தமிழரின் செல்வாக்கு அதிகரிக்கும் என்று கருதிய உயர்மட்ட ஆந்திரநாட்டுத் தெலுங்கு பிராமணர்களில் ஒரு பிரிவினர் அவ்வம்மையாரின் செயல்களைக் கடுமையாகக் கண்டித்தனர். எதிரிகளைச் சமாளிக்கும் சாதுரியமும், ஆற்றலும் பெற்று விளங்கியமையின், அம்மையார் உடனடி அரசியலிலிருந்து விழுந்து விடவில்லை. மொழிவாரி மாநில அமைப்புகளை தன்னாட்சி இயக்கத்தார் ஆதரிக்கவில்லை போலும். இந்தக் காரணத்துக்காக ஆந்திராவில் பலர் அம்மையாருக்கு உடன்பாடாய் இருந்தனர். அரசு தன்னாட்சி இயக்கத்தாரைச் சிறை செய்து, தன்னாட்சி இயக்கத்தின் மீது அபராதங்கள் விதித்து, தன்னாட்சி இயக்கச் செயல்களைக் கட்டுப்படுத்தியமையால், அம்மையார் தம்மால் நினைத்துக்கூட பார்க்க இயலாத அளவு மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றார். பொதுமக்கள், அறிவாளிகள், அறிவிலிகள்

அம்மையாரைப் பற்றி அறியத் தொடங்கினர். "இந்த நீண்ட போராட்டம் கொள்கைப் பரப்புதலுக்குதவியது; தன்னாட்சிக்குப் பெரிதும் உதவி புரிந்தது" என்று அம்மையார் கூறினார்.

தன்னாட்சி இயக்கம் அம்மையாருக்கும் சமகால அரசியல் தலைவர்களுக்குமிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியது; கருத்து வேறுபாட்டையும் ஏற்படுத்திற்று. வரப்போகும் பொதுத் தேர்தலில் அந்தணருக்கும் அல்லாதாருக்கும்மிடையே பிரதிநிதித்துவப் பங்கீடு குறித்தும், காங்கிரஸ் கோட்பாடுகள், கொள்கைப்பரப்பு முறைகளைப் பற்றியும், காந்திஜியின் அரசியல் கருத்து குறித்தும் வேற்றுமை பகுப்புத் தன்மைகள் பற்றியும் எழுந்தவையே. கருத்து வேறுபாடுகள் தேர்தல் மூலமும் நியமனம் மூலமும் வருங்கால அரசியலமைப்பில் இருக்க வேண்டிய பிரதிநிதித்துவம் குறித்த கருத்துக்களிலும் அம்மையாருக்கும், P. கேசவ பிள்ளைக்கும், C. கருணாகர மேனனுக்கும் முரண்பாடுகள் இருந்தன. கருணாகர மேனன் இந்திய தேசியவாதி (Inidan Patriot) என்ற செய்தித்தாளின் பதிப்பாசிரியர். "அம்மையாரின் இந்தியா பற்றிய முழு முட்டாள்தனத்தைக்" கண்டித்தார். எதிர்ப்போர் யாராயினும், எதிர்ப்புக் கருத்து எத்தன்மையது ஆயினும் தன்னாட்சி இயக்கத்தார், குறிப்பாக அம்மையார், 1917- இல் மாண்டேகுவின் சீர்திருத்த (மசோதாவின்) அறிக்கை வெளியீட்டுக்குப் பெரிதும் காரணமாவார்கள்.

1919- இல் சீர்திருத்த மசோதா சட்டம் ஆனதும், மாண்டேகு நினைத்துப் பாடுபட்டு வந்த அரசியலமைப்பு உருவாகி செயல்முறைக்கு வரவும் தொடங்கிற்று. ரௌலட் மசோதா அறிக்கை, அதைத் தொடர்ந்து உருவாகிய சட்டம், அதனை எதிர்த்து காந்திஜி நடத்திய போராட்டங்கள், கிலாபத் கிளர்ச்சி, ஜாலியன் வாலாபாக் படுகொலை அனைத்தும் உறங்கிக் கிடந்த இந்தியரைத் தட்டியெழுப்பி, காங்கிரசுக்கு ஆதரவு அளிக்கத் தூண்டின. காங்கிரஸின் செயல்வீரர்கள் பலர் மாண்ட்போர்ட் சீர்திருத்தங்களை வன்மையாகக் கண்டித்தனர். மாண்ட்போர்ட் சீர்திருத்தச் சட்டம் மாண்டேகுவின் இந்திய வருகையின் விளைவு ஆகும். இந்தியா வந்த அவர் சென்னை மாகாணத்துக்கு வருகை தந்தார். சென்னையில் கந்தசாமிச் செட்டி, கேசவப்பிள்ளை, Dr.T.M. நாயர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நாயரின் உரையில் மயங்கிய மாண்டேகு அவரைப் புகழ்ந்தார். நாயரின் கருத்து வைப்பையும், எதிர்ப்புக் கருத்து வைப்பையும் கண்டு மெச்சினார். அவரைப் புகழுமிடத்து மாண்டேகு, ''நாயர் சிறந்த சொற்பொழிவாளர், கவரும் தன்மையுடைத்து அவருடைய பேச்சு, சுறுசுறுப்பான மனிதர். அவருடைய கூட்டில் ஒரு தேனீ கட்டாயம் இருக்கும். ஏனெனில் அவர் கூறினார் தன்னாட்சி இயக்கத்துக்கு ஜெர்மனி பண உதவி தருகிறது என்று" என்றார். 1918- இல் மருத்துவ உதவி பெறுவதற்காக லண்டனுக்குச் செல்ல இரகசிய பயண அனுமதிச்சீட்டு அவருக்கு வழங்கப்பட்டது. இந்த அனுமதிச்சீட்டு திலகருக்கு மறுக்கப்பட்டது. நாயர் ஆங்கிலேயராக்கப்பட்ட இந்தியரென்றே பலருக்கும் அறிமுகமானவர். மக்கள் அவரை மருத்துவராயும், பத்திரிக்கையாளராயும் சமுதாய சீர்திருத்தவாதியாயும், அரசியல் வாதியாயும் கண்டனர். சென்னை மாநகர அங்கத்தினர் என்ற முறையில் மாநகர ஆட்சி பற்றி அவர் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்; அவருக்குரிய தனி வாழ்க்கை நெறியும், முறையுமுடையவர்; அரசியலில் தனித்த கோட்பாடுடையவர்; செயற்றிறனில்

வரையறை கொண்டவர். நீதிக்கட்சியின் தலைவராய் இருந்தமையே அரசியலில் அவருடைய சிறப்புக்குக் காரணம். லண்டன் சென்றவர் சென்னை மாநில அரசியல் சூழலை எடுத்துக் கூறினார். சீத்திருத்த மசோதா அறிக்கை வெளியான போது அவர் பாராளுமன்றத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார். "அனைத்து இந்திய அரசியலில் நீதிக்கட்சியின் பங்கைப் பொறுத்து மாநில அளவுடையதாய் அமைந்தது. நாயரின் செயல் திறனும் கொள்கை பரப்பு முயற்சியும்" என்று கூறினார் இர்ஷிக். மாண்டேகுவின் அறிக்கை மக்கள் உள்ளங்களில் அவருக்கும் அறிக்கைக்கும் எதிர்ப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் அவரே நல்ல, அழிவற்ற திறனாய்வுகளை எதிர்பார்த்தார். செய்தித்தாள்கள் அவ்வறிக்கை பற்றிய விவாதங்களைச் சுடச்சுடத் தந்தன. அரசியல் மேடைகளில் அவை அலசப்பட்டன. அறிக்கை வகுப்புவாத பிரதிநிதித்துவத்தைக் கண்டித்தது. ஒரு சிறந்த அரசியலமைப்பை கட்டியெழுப்புவதற்கான மிகவும் மோசமான அடித்தளம் என்று கூறிற்று. சட்டசபைகளுக்கு "தனி நபர் வாக்கெடுப்பை"ப் புகுத்திய காரணத்தால் நாயர் இவ்வறிக்கையைத் தாக்கினார். ஏனெனில் அவருடைய கருத்துப்படி இம்முறை "அந்தணர் பிரதிநிதித்துவத்தைப் பன்மடங்காக்கும்" என்பதே.

இவ்வறிக்கையின் மிக முக்கியமான பகுதி இரட்டையாட்சி அம்சமாகும். இது இந்தியாவுக்கான பொறுப்பாட்சிக்கு அறிகுறி எனக் கருதப்பட்டது. இந்த இரட்டை யாட்சிக் கோட்பாட்டை முன் மொழிந்தவர் லயனல்கர்டிஸ் (Lionel Curtis) ஆவார். அவரோ 1838- இல் வெளியிடப்பட்ட டர்காம் அறிக்கையால் தூண்டப்பட்டவர். மாநில அதிகாரங்களைப் பங்கீடு செய்து, நிர்வகிக்கும் முறையை இது கொண்டு வந்தது. இவ்வதிகாரங்கள் அதிகாரப் பகுதி, அதிகாரமற்ற பகுதி என்று இரு கூறுகளாக பகுக்கப்பட்டன. அதிகாரப்பகுதி, ஒதுக்கப்பட்ட பகுதி (reserved half) என்றும், அதிகாரமற்ற பகுதி மாற்றப்பட்ட பகுதி (transferred half) என்றும் அறியப்பட்டது. ஒதுக்கப்பட்ட பகுதி, மாற்றப்பட இயலாத ஆங்கிலேயரிடமும், மாற்றப்பட்ட பகுதி மாற்றத்திற்குள்ளாகிய இந்திய பிரதிநிதிகளிடமும் ஒப்படைக்கப் பட்டன. ஒதுக்கப்பட்ட பகுதி அதிகாரத்தை வைத்திருந்தோர் டில்லியரசுக்கும், இறுதியில் இலண்டன் பாராளுமன்றத்திற்கும் பொறுப்புடையோர்; ஆனால் மாற்றப்பட்ட அதிகாரத்தை வைத் திருந்த இந்தியரைக் கொண்ட அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையது; மேலும் மாநில ஆளுநருக்கும் பொறுப்புடையது.

ஒதுக்கப்பட்ட பகுதி மாநில ஆளுநர், நிர்வாகக் குழுவின் விருப்பத்திற்கு விடப்பட்டது. நிர்வாகத்தின் மாற்றப்பட்ட பகுதி மாநிலச் சட்ட சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மையைக் கொண்ட இந்தியரிடம் விடப்பட்டது. பொறுப்புள்ள இந்திய அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த மாற்றப்பட்ட பகுதி மொத்தமாக மாற்றப்படவில்லை; பொறுப்புள்ள அமைச்சர்களின் முழு விருப்பத்துக்கும் விடப்படவில்லை. அதிகாரப் பூர்வமான ஒதுக்கப்பட்ட பகுதியில் படைப்பாதுகாப்பு, காவல், நிலவருவாய், வர்த்தகம், நீர்ப்பாசனம் போன்ற துறைகளும், பொறுப்புள்ள அமைச்சர்களுக்கு விடப்பட்ட மாற்றப்பட்ட பகுதியில் தல நிர்வாகம், கல்வி, சுகாதாரம், பொதுப்பணிகள், பொதுநலம், வேளாண்மை போன்ற துறைகளும் இருந்தன. மாற்றப்பட்ட பகுதியில் பணச்செலவு அதிகமான துறைகளே இருந்தன. அதுசமயம் ஒதுக்கப்பட்ட பகுதியில் அதிகாரக் குவிப்பும், வருவாயும், செல்வாக்குத் துறைகளுமிருந்தன. பணச்

செலவு இருந்தமையின் அமைச்சர்களால் எந்த முடிவையும் எடுத்துக் கொள்ள இயலவில்லை. அவர்கள் தங்கள் துறையின் செயல்பாட்டுக்கான பணத்தையும், அனுமதியையும் மேலதிகாரிகளாகிய ஆங்கில அதிகாரிகளிடம் எதிர்பார்த்திருக்க வேண்டியிருந்தது. இந்த நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் (சட்டசபையிலிருந்து ஆளுநரால்) மக்களுக்கு நேரடிப் பொறுப்புள்ளோர். மக்களும், ஆங்கில அதிகாரிகளும் அவர்களைத் தான் குறை கூறினர். இப்பதவிகளுக்கு அவர்கள் ஆளுநரால் உயர்த்தப்பட்டமையின், அவர்கள் ஆளுநருக்கு அடங்கியே கிடந்தனர். ஆளுநருக்கு அடங்கிக் கிடந்தோர், தலைமை ஆளுநருக்கும், அவ்வழி பாராளுமன்றத்திற்கும் பொறுப்புள்ளோர் ஆக்கப்பட்டனர். ஆளுநரின் விருப்புக்கு ஏற்றாற்போல் அவர்கள் நடந்து கொண்டால் பதவி நீடிப்பு நடந்து கொண்டமையின் பதவியில் நீடித்தனர். ஆகவே, அவர்கள் ஆளுநருக்கு அடங்கிக் கிடந்தனரே தவிர, மக்களுக்குப் பொறுப்புள்ளோராய் இயங்கவில்லை. பெரும்பாலும் இவர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பிய மக்களைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை என்று தான் கூறவேண்டும். இப்படி இருந்தமையின் தங்கள் கடமைகளை ஒழுங்காய்ச் செய்யவில்லை. இந்த இயலாமையால் இந்தியருக்கு ஆளத்தெரியாது என்ற பழிக்கும் உள்ளாயினர்.

சட்ட மேல்சபையில் வாக்கெடுப்புக்காக கொண்டுவரப்பட்ட ஒரு வரவு செலவுக் கணக்கு (budget), ஒப்புக்கொள்ளப்பட்டபின் ஆளுநரின் கையெழுத்துக்காக அனுப்பப்படும். ஆளுநர் தம் கையெழுத்தை அதில் பதித்து தம் ஆதரவைக் காட்டவோ ரத்ததிகாரத்தைப் பயன்படுத்தி நிறுத்தி வைக்கவோ, மறுபரிசீலனைக்காக அனுப்பி வைக்கவோ, தலைமை ஆளுநரின் கருத்தைப் பெற ஒதுக்கி வைக்கவோ செய்யலாம். நிர்வாகக் குழுவோ, ஆளுநரோ ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து அனுப்பிய மசோதாவை சட்டமேல் சபை நிராகரித்தாலும், அல்லது, நிறைவேற்றத் தயங்கினாலும், ஆளுநர் விரும்பினால், அவர் நற்சான்றிதழ் வழங்கினால் அது சட்டமாகலாம். அவ்வித சட்டங்கள் தலைமை ஆளுநருக்கு அனுப்பப்பட்டு, அரசரின் ஒப்புதலுக்காக பத்திரப்படுத்தி வைக்கப்படும். இச்சட்டம் சட்ட மேலவையை விஸ்தரித்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மைக்கு வழிகாட்டினாலும் வகுப்புவாத பிரதிநிதித்துவத்தைப் புகுத்தினாலும், அதில் குறைகள் இருக்கத்தான் செய்தன. ஆகவே அக்குறைகள் கொண்ட இச்சீத்திருத்தச் சட்டம் பழிப்புக்குள்ளாயிற்று. இந்த இரட்டையாட்சி—அதிகாரங்களை இரு சமமற்ற கூறுகளாகப் பிரித்தல்—தமிழக—இந்திய அரசியலில் பெருவிழிப்பை ஏற்படுத்தியது. ஆபத்தான நேரங்களில் இவ்விரு கூறுகளையும் ஒருங்கிணைக்க ஆளுநர்கள் முயன்று வந்தனர்.

நீதிக்கட்சியின் தோற்றம்

20- ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழக—அதாவது சென்னை மாநிலத்தைப் பொறுத்தளவில்—சமூக, அரசியல், சமய, பொருளாதார நிலைகளில் அந்தணர்கள் உயரிடத்தை அனுபவித்து வந்தனர். 1911- ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, மொத்த மக்கள் தொகையில் அந்தணர் 3.5% பகுதியினராய் இருந்தனர். 1918- ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக அறிக்கையும் கல்வி, உயர்கல்வித் துறையில் அந்தணரே பெருவாரி இடத்தில் இருந்ததாக அறிவித்துள்ளது.

சென்னை மாநிலத்தில் அந்தணர்கள் ஆங்கிலேயருக்கு அடிபணிந்து அலுவலராகவும், ஆலோசகராகவும், ஒற்றராகவும், ஆசிரியராயும், வழக்குரைஞராயும், பொறியியலராயும், ஆட்சியாளருக்கு வேண்டியோராயும், அரசியல் வாதிகளாயும், செய்தித்தாள் நடத்துவோராயுமிருந்தனர். 1914- ஆம் ஆண்டு தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சி காரியக்கமிட்டி தேர்தலில் பதினான்கு இடங்களில் பதினொரு இடங்களை வைத்திருந்தனர். 1916- ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில் அவர்கள் பத்து இடங்களையும், அந்தணரல்லாதார் ஐந்து இடங்களையும் பெற்றிருந்தனர். ஆட்சிப்பொறுப்பேற்க மற்றவர்களுக்கு வாய்ப்பில்லை; தங்களை நிர்வாகத்தில் ஈடுபடுத்திக் கொண்டு, பயிற்சி பெறத்தகுந்த சூழலில்லை. ஆகவே, ஆங்கிலேயர்முன் அந்தணரல்லாதார் திறமையற்றோராய்க் கிடந்தனர்.

அந்தணருக்கும், மற்றவருக்கும், மேல்மட்ட அந்தணரல்லாத ஜாதியினருக்கும் கீழ்மட்ட அந்தணரல்லாத சாதியினருக்குமிடையே காணப்பட்ட இந்த வேறுபாடுகள், போட்டி—பொறாமைகள் சென்னை மாநிலத்தில் பல சங்கங்கள், சபைகள் தோன்றுவதற்கும், ஒரு புது சமூக அமைப்பு ஏற்படுவதற்கும் காரணங்களாயின. தென், வடஆர்க்காடு மாவட்டங்கள், சேலம், செங்கல்பட்டு, திருச்சி மாவட்டங்களில் பெரும்பகுதியினராய் இருந்த பள்ளி, படையாச்சி, நாயக்கர், கவுண்டர்கள் இணைந்து வன்னியகுல இயக்கத்தைத் தோற்றுவித்தனர். சென்னை மாநிலத்தைப் பொறுத்தளவில் இவ்வியக்கம் வல்லமை வாய்ந்த ஒரு பெரும் சக்தியாகும். இந்தியாவின் தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட குடிகளின் புனர்வாழ்வுக்காக பி.ஆர். அம்பேத்காரும், அயோத்தியதாச பண்டிதரும், புனிதஜான் ரத்னமும், ரட்டைமலை சீனிவாசனும், என்.சி. ராஜாவும், என். ராஜுவும், பி.எம்.மதுரைப் பிள்ளையும் பாடுபட்டு வந்தனர். சமுதாய, அரசியல், பொருளாதார சமத்துவத்தை சென்னை மாகாணத்தில் கொண்டுவர ஆதிதிராவிடர் மகாஜன சபை அயராது பாடுபட்டு வந்தது. 1916- ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் சென்னை மாநிலத்தில் அந்தணரல்லாத சில வல்லமை வாய்ந்த வகுப்பினர் திராவிடர் சங்க விடுதியைத் தொடங்கினர். அதனைச் சமூக அடிப்படையிலான பெரும் விழிப்பு எனலாம். 1916- இல் அனைத்து ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட இனத்தாரும், இணைந்து சென்னையில் கூடி, சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியவற்றைக் கோரினர்.

வேறுபட்டுக் கிடந்த அனைத்து அந்தணரல்லாத இனக்கூறுகளை இணைத்த பெருமை நடேச முதலியாரைச் சேரும். இவர் சென்னை திராவிடச் சங்கத்தின் செயலராய் இருந்தார். சென்னையில் இருபெரும் தலைவர்களாய் அன்று விளங்கிய T.M. நாயரையும், தியாகராஜ செட்டியையும் கூட்டி, மனக்காழ்ப்புகளை மறக்கச் செய்து, சென்னை மாநகரத் தேர்தல்களில் ஏற்பட்ட வேறுபாடுகளை அகற்றி, சென்னையில் ஓர் அந்தணரல்லாதார் கட்சியைத் தோற்றுவிக்கக் கோரினார். 1916- ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் 20- ஆம் நாள், ஏறக்குறைய முப்பது அந்தணரல்லாதார் (இரு தலைவர்களையும் சேர்த்து) சென்னை நகரின் விக்டோரியா பொதுமன்றத்தில் கூடினர். இவர்கள் கூடியதின் பயனாக சென்னையில் ஒரு கூட்டு வர்த்தகக் குழுவை நியமிப்பதாக முடிவு செய்தனர். இது தென்னிந்திய மக்களின் சங்கம் (South Indian People's Association Ltd.) என்று அறியப் பட்டது. அந்தணரல்லாதாரின் குறைகளை எடுத்துச் கூறும் வகையில் ஆங்கில, தமிழ், தெலுங்கு மொழிச் செய்தித்தாள்களைத் தொடங்கி நடத்துவதே இதன் நோக்கமாகும்.

இதிலிருந்து உருவாக்கியதே தென்னிந்திய தாராளக் கூட்டமைப்பு (South Indian Liberal Federation). நாட்டு நிர்வாகத்தில் 'உரிய இடத்தைப்பெற' அந்தணரல்லாதார் காழ்ப்புணர்ச்சியையும், வேறுபாடுகளையும் துறந்து ஒன்றுபட Dr. நாயர் வேண்டினார். 1916- இல் நவம்பர்த்திங்கள் 26 ஆம் நாள் உருவாகியதே இக் கூட்டமைப்பு. இதற்கு தியாகராஜ செட்டி தலைமை தாங்கினார். பிராமணரல்லாத உயர் இந்து இனத்தாரிடையே அரசியல் விழிப்பை ஏற்படுத்த இவர் விரும்பினார். பெசன்ட் அம்மையாரை உருத் தெரியாமல் கண்டனம் செய்துவந்த நாயரும், கே. எத்திராஜும் இதன் அங்கத்தினர்கள். அவர்கள் திராவிடன் என்ற இதழைத் தமிழிலும், ஆந்திர பிரகாசிகா என்ற இதழை தெலுங்கிலும், நீதி (Jusitice) என்ற இதழை ஆங்கிலத்திலும் நடத்திவந்தனர்.

Dr. நாயர் பதிப்பித்த முதல் ஆங்கில இதழ் 1917 ஆம் ஆண்டு பிப்ரவிரித் திங்கள் 26- ஆம் நாள் வெளிவந்தது. தமிழ் நாளிதழாகிய திராவிடன் 1917- ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வெளிவந்தது. தெலுங்கு நாளிதழ் ஏற்கனவே 1885- ஆம் ஆண்டிலிருந்தே வெளிவந்து கொண்டிருந்தது. நூற்கள், மனுக்கள் செய்தி இதழ்கள், சொற்பொழிவுகள் மூலம் நீதிக் கட்சியின் தன்மையை உயர்த்தினர். வேலை வாய்ப்புச் சமத்துவம், நீதிச்சமத்துவம் போன்றவற்றைக் கோரினர். உடனடி விடுதலை வழங்குவதை அவர்கள் எதிர்த்தனர்; அனைத்து அவைகளிலும் சமமான பிரதிநிதித்துவம் கோரினர்; தலசுய நிர்வாகத்திலும், கல்விக் கூடங்களிலும், அமைப்புகளிலும் மக்கள் இடம்பெற வேண்டுமென்று வேண்டினர். 1917 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தென்னிந்திய தாராளக் கூட்டு நீதிக்கட்சியாக உருவெடுத்தது. இக்கட்சியினர் சரிசமமான உரிமைகளையும், வாய்ப்புக்களையும் வேண்டியதாலும், அவற்றை நீதி என்ற இதழ் மூலம் வெளியிட்டமையாலும் பெற்றதே அப்பெயர். இக்கட்சி கட்டாயக் கல்வியைக் கோரியது; சமய அறநிலயங்களில் சீர்திருத்தமும், வகுப்பு அடிப்படையில் வாக்குரிமையும் வேண்டியது. கல்வி, சொத்து அடிப்படையிலான வாக்குரிமையைக் கண்டித்தது. ஓராண்டுக் காலத்திற்குள் அக் கட்சி ஏறக்குறைய ரூ.10,00,000 சேர்த்துக் கொண்டது. இக்கட்சி பல மாநாடுகளைக் கூட்டியது. சென்னை ராஜதானி தழுவிய கிளைகள் எழுந்தன. காங்கிரஸ் கட்சியின் தாக்குதல்களினூடே இக் கட்சியின் மிக முக்கியமான முதல் மாநாடு கோவையில் நடத்தப்பட்டது. டி.ஏ. ராமலிங்கம் செட்டி, எஸ்.ஏ. சோமசுந்தரம் பிள்ளை ஆகியோரின் பெருமுயற்சியால் நடத்தப்பட்டதே இம் மாநாடு.

நீதிக்கட்சியின் சாதனைகள், இரட்டையாட்சிச் செயல்முறை

சாதி, வகுப்பு அடிப்படையிலான வாக்குரிமைப் பட்டியல் தயாரிக்குமாறு நீதிக்கட்சியின் 1918 ஆம் ஆண்டு கோரிக்கை வேண்டியது. இக் கோரிக்கையை சவுத் பரோ வாக்குக்குழு (South Borough Voting Franchise Committee) நிராகரித்தது. ஆகவே அக்குழுவின் அறிக்கையை நீதிக்கட்சி முழுமையாக எதிர்த்தது. ஏனெனில் இக்குழுவின் அறிக்கை வி.எஸ்..எஸ். சீனிவாச சாஸ்திரி, எஸ். என். பானர்ஜி ஆகிய இரு அந்தண அங்கத்தினரின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்டது ஆகும். நாயரைத் தலைவராகக் கொண்ட இக்கட்சியின் குழு ஒன்று இலண்டனுக்கு 1919- இல் விரைந்தது. இலண்டனில் நாயர் மரணமடைந்து போகவே, இக்கட்சிக் குழுவை கே.வி. ரெட்டி

நடத்தினார். அவர்களின் கோரிக்கை கொண்ட ஒரு விண்ணப்பத்தை அக்குழு தீட்டியது. சமுதாயச் சமத்துவம் ஏற்பட வேண்டுமாயின் சாதி வகுப்பு அடிப்படையிலான வாக்குரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமென்று அறிவுரை கூறியது. அந்த ணருக்கும், அல்லதாருக்குமிடையே உறவை ஏற்படுத்த 50% அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்படும் என்று வெல்லிங்டன் அறிவித்தார். ஆனால் அந்தணரல்லாதார் 75% வாக்குரிமை அவர்களுக்கு வேண்டுமென்றனர். இதனை ஆலோசிப்பதற்காக நியமிக்கப் பட்ட மெஸ்டன் குழு (Meston Committee) மெஸ்டன் தீர்ப்பினை (Meston Award) அறிவித்தது. அதன் அம்சங்களை நீதிக்கட்சி ஏற்று, வரப்போகும் தேர்தலுக்கு ஆயத்தமாகியது.

1919- ஆம் ஆண்டுச் சட்டத்தின் இரட்டையாட்சிக் கோட்பாடு 1920 ஆம் ஆண்டு செயல்முறைக்கு வந்தது. 1920- ஆம் ஆண்டுத் தேர்தலில் நீதிக்கட்சி பெருவாரியான இடங்களைப் பெற்று வெற்றி பெற்றது. அமைச்சரவையை ஏற்படுத்தி, நிர்வாகத்தைத் தொடங்கியது. இக்கட்சியினர் அந்தணர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சியையும், சுயராஜ்யக் கட்சியையும் எதிர்த்தமையால், மக்களில் பெரும்பான்மையினரைத் தம் தேர்தல் அறிக்கை நோக்கி இழுக்க முடிந்தது. நான்காண்டுக்கால வகுப்புவாத வாக்குரிமை கோரிக்கை இக்கட்சியின் பிரச்சாரங்களை விரிவடையச் செய்தது. அரசியல் கோட் பாடுகள், செயற்றிறனைப் பொறுத்தளவில் இக்கட்சியினுள் 1920- இல் வேறுபாடுகள் தலைதூக்கவில்லை. தீவிர அரசியல் செயல்களில் இறங்கவும் தயங்கினர். இதற்குக் காரணம் இக்கட்சியில் இளந் தலைமுறையினரைக் காட்டிலும் பழம் தலைமுறையினர் அதிகமிருந்தனர். "நீதிக் கட்சியின் வெற்றிக்கு காங்கிரஸ் கட்சியின் மறுப்பு ஒருவகையில் காரணம்; அத்துடன் அது சிறந்த பிரச்சாரமும் செய்தது" என்று இர்ஷிக் கூறுகிறார்.

1920- ஆம் ஆண்டு தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 98 இடங்களில் 63 இடங்களை இக்கட்சி பெற்றது. அரசால் நியமிக்கப்பட்ட மேலவையின் சில அங்கத்தினரின் ஆதரவையும் இது எதிர்பார்த்தது. 127 அங்கத்தினரைக் கொண்ட அவையில் 81 இடத்தை இக்கட்சி பெற்றிருந்தது. இக்கட்சியின், பிரமுகர்களிடம் ஆலோசனை நடத்தியபின் வெல்லிங்டன் பிரபு, 1920- ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் சுப்பராயலு ரெட்டியாரைத் தலைமையமைச்சராய் நியமித்தார். தலைமையமைச்சர் இதன் பின்னர் மாநில முதலமைச்சர் என்று அறிவிக்கப்பட்டார். முதலமைச்சர் கல்வித்துறையைத் தம் கையில் வைத்திருந்தார். 1921இல் அவர் அத்துறையிலிருந்து விலகியதும் ஓரிய கலிங்க வழக்கறிஞராகிய ஏ.பி. பாத்ரோ (Patro) கல்வியமைச்சரானார். "நீதிக்கட்சியின் வெற்றியும், அக்கட்சியின் அமைச்சு அமைப்பும் 1919- ஆம் ஆண்டின் இரட்டையாட்சி சென்னை மாநிலத்தில் செயல்படத் தொடங்கியமையும் பொருத்தமானவையே. அதன் தலைமையும், திட்டங்களும் பெருமளவு அச்சீத்திருத்தத்துக்கு ஆதரவானவை. தலைமை பழமைவாதியற்றது ஆயினும் மிதவாதமானது; அனைத்து இந்திய நோக்கு அற்றது; சீர்திருத்தச் சட்டங்கள் சுட்டிய வழிமுறைகளால் திட்டங்கள் நடைமுறைப்படுத்தக் கூடியன; அனைத்து இந்திய நோக்கற்றிருந்ததால் அது மாநிலத் தன்மைக்கு ஏற்றது". மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து நியமிக்கப்பட்ட அமைச்சர் களிடம் அரசு நிர்வாகத் துறைகள் ஒப்படைக்கப்பட்ட முறையைப் பார்க்குமிடத்து, 1883 ஆம் ஆண்டு ரிப்பன் பிரபு கொண்டுவந்த சட்டப்படி, இது அரசின்

தலசுயநிர்வாகத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்று கருதப்படலாம். இவ்வித நிர்வாகத்தில் அதிகக் கவனம் செலுத்திய கட்சிகள் மாநில அளவில் நின்றனவே தவிர தேசிய நோக்கில் வளர்ந்தவையல்ல. இப்படி நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் தலசுயநிர்வாகத்தில் பெயர்பெற்றோராயும், பட்டறிவுடையோராயுமிருந்தனர்.

1923- ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் நீதிக்கட்சி பெருவாரி இடங்களைப் பெற்று வெற்றி பெற்றது. தம் அமைச்சரவையை இப்போது டி.என். சிவஞானம் தலைமையில் அமைத்தது. அவர் பதவி ஓய்வு பெற்ற துணை ஆளுநர். அவர் நெல்லை மாவட்டக் குழுவின் தலைவராய் இருந்தார். 1926- ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி பெருவாரி இடங்களைப் பெற்றிருந்தும், அமைச்சரவை அமைக்க விரும்பவில்லை. சுயராஜ்யக் கட்சியின் ஆதரவில் தனிப்பட்ட நிலையில் நின்ற ஏ. சுப்பராயன் சென்னையில் அமைச்சு அமைத்தார். 1927 இல் கோவையில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் அது காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து உள்ளிருந்தவாறு மாற்றியமைப்பது என்ற கருத்து வெளியிடப்பட்டது. அது மாநில சுய ஆட்சிக் கோட்பாட்டை வலியுறுத்தியது; இரட்டையாட்சி முறையை ஒழிக்கக் கோரியது. அமைச்சரவைக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதாயும் உறுதி கூறிற்று. ஆனால் இம்முயற்சியில் அவர்கள் ஈடேறவில்லை. 1930- ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியும், சுயராஜ்யக் கட்சியும் போட்டியிடவில்லை. ஆகவே நீதிக்கட்சி முழு வேகத்துடன் உழைத்து பெருவாரி இடத்தைப் பெற முடிந்தது. இம்முறை பி. முனிசாமி நாயுடு நீதிக்கட்சியின் தலைவராயிருந்து அமைச்சு அமைத்தார். 1932- இல் போப்பிலி ராஜா தலைமை அமைச்சரானார். (அவர் 1978- ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 11- ஆம் நாள் இறந்து போனார்). இவ்வமைச்சரவையில் ஏறக்குறைய 14 அமைச்சர்கள் இருந்தனர். இவர்கள் அனைவரும் பட்டறிவும் திறமையும் வாய்க்கப் பெற்றிருந்தனர். இக்கால கட்டங்களில் இக்கட்சியில் பிராமணர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; அமைச்சரவையிலும் பங்கு பெற்றனர். 1934- இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி தோல்விடைந்தது. காங்கிரஸ் கட்சி அமைச்சரவை அமைக்க மறுத்ததின் பேரில் நீதிக் கட்சி அமைச்சரவை அமைத்தது. 1935- ஆம் ஆண்டுச் சட்டப்படி, 1937- இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ராஜாஜி தலைமையிலான அமைச்சரவை பதவி ஏற்றது. அதற்குப் பின் நீதிக் கட்சி தலைதூக்கவேயில்லை; பலரும் அதன் செயற்றிறனில் ஏற்பட்ட குறைபாடுகளை குறைகூறினர்; மக்களும் நீதிக் கட்சிபால் வெறுப்புறத் தொடங்கினர்; திடீரென்று வளர்ந்து, திடீரென்று வீழ்ந்த நீதிக்கட்சி 'நீர்க்குமிழிக்கு' ஒப்பானது என்று பேராசிரியர் கு. இராசய்யன் கருதுகிறார்.

நீதிக்கட்சியின் சாதனைகள்

பிராமணர் அல்லாதாரின் நிர்வாகமாகிய நீதிக்கட்சி ஆட்சி சமூக, பொருளாதார, அரசியல், சமய சமத்துவத்திற்காக உழைத்தது. பதின்மூன்றாண்டுகால நிர்வாகத்தின் போது அக்கட்சி அடைந்த சாதனைகள் செய்த சீர்திருத்தங்கள் பல. பொதுப்பணியில் காணப்பட்ட வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தில் சமநிலை கொண்டுவரப் பாடுபட்டது; தாழ்த்தப்பட்டோரின் சமுதாய நிலையை உயர்த்த உழைத்தது; கல்விச் சீத்திருத்தங்

களைச் செய்தது. சமய அறநிலையத் துறையைச் சீர் செய்தது. உயர்நீதிமன்றத்தின் மாவட்ட நீதிபதிகளை (district munsifs) நியமிக்கும் உரிமையைப் பெற்று, அக்கட்சியே அந்நீதிபதிகளைநியமித்தது. 1921,1922- ஆம் ஆண்டுகளில் வகுப்புவாத அரச ஆணைகளைப் பிறப்பித்தது. இவை கல்வி, தலசுய நிர்வாகத் துறைகளில் பிராமணரல்லாதாரை நியமிக்க இட ஒதுக்கீடு செய்தது. 1924 இல் பனகல் ராஜா அமைச்சு, பணியாளர் தேர்வுக்குழுவை ஏற்படுத்தியது. 1929- இல் இது சீர்திருத்தப்பட்டு பொதுப் பணிக்குழுவாய் வளர்ந்தது. இந்தியாவின் அவ்விதமான பொதுப்பணிக் குழு சென்னை மாநிலத்தில் உருவாகியது. முதலாவதாக நீதிக்கட்சியின் நிர்வாகத்தின் போது சென்னை மாநகராட்சி விரிவடைந்தது. புதுப் புதுக் கட்டிடங்கள் எழுந்தன. ஆண்களைப் போன்று பெண்களும் வாக்குரிமை பெற்றனர். 1921- இல் பனகல் ராஜா அமைச்சு கொண்டு வந்த இந்து சமய அறநிலையச் சட்டம் கோயில்களில் காணப்பட்ட பல குறைகளை நீக்கியது. அறநிலையங்களில் காணப்பட்ட இழிநிலையை மாற்ற முயன்றது; கோயில் சொத்துக்களை தவறான வழியில் கண்காணிப்பதை தடுக்க கமிட்டிகளை நியமித்தது. 1922- இல் சென்னை மாநில ஆலைகளுக்குப் பொருளுதவிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் (Madras State Aid to Industries Act, 1922) ஆலைகளுக்குப் பணவுதவி செய்யவும் இடம், தண்ணீர் வசதிகள் செய்யவும், ஆராய்ச்சியை ஆதரிக்கவும், முதலீட்டுத் தொகைக்குக் குறைந்த அளவு வருவாயாவது கொடுக்க வழி செய்யவும் முயன்றது. கோயில்களில் பெண்களைப் பணிப்பெண்களாக அர்ப்பணிக்கும் தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்டது. 1930- ஆம் ஆண்டு அதனை ஒழிப்பதற்கான மசோதாவை முத்துலஷ்மி அம்மையார் கொண்டு வந்தார். மசோதா கீழ், மேல் சபைகளின் அங்கத்தினரின் பரிசீலனைக்குள்ளாக்கி, வெற்றி பெற்றும் ஆளுநர் கையெழுத்திட மறுத்த காரணத்தால் அது சட்டம் ஆகாது, மசோதா நிலையிலேயே பிரசுரிக்க அனுமதி வழங்கப்பட்டது. இம்முறை ஒழிப்பால் ஆலயங்கள் அறநெறி குன்றிய நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டன. விலைமகளிர் தொழில் (Immoral Traffic of Women) ஒழிப்பு நீதிக் கட்சியின் கவனத்தை ஈர்த்தது. அதனைத் தடை செய்வதற்கான முயற்சியும் எடுத்துக் கொள்ளப்பட்டது. சமுதாயத்தில் காணப்பட்ட மற்ற பல இழிநிலைச் செயல்களை அகற்றவும் முயற்சிகளை மேற்கொண்டது. இந்திய மருத்துவ முறையை நீதிக்கட்சி ஆதரித்தது. குறிப்பாக நாட்டு மருத்துவம், ஆயூர்வேத, தன்வந்திரி மருத்துவமுறைகள், சித்த மருத்துவ முறைகள் அரசின் ஆதரவின் கீழ் வந்தன. கட்டணச் சலுகைகள் சான்றிதழ்ச் சலுகைகள், மதிய உணவு போன்ற செயல்கள் மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஆதாரக்கல்வி புகட்டியது. அவர்களுக்கும் ஏனையோருக்கும் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்டது. வீட்டுமனைகள் அமைக்க ஏழைகளுக்கு புறம் போக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. சென்னைப் பல்கலைக் கழகச் செயல்முறையை மாற்றியமைத்தது; 1926- இல் ஆந்திரப் பல்கலைக்கழகத்திற்கும், 1929- இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கும் அடிக்கற்கள் நாட்டப்பட்டன.

நீதிக்கட்சியின் வீழ்ச்சி

நிர்வாக ஆணைகளைப் பிறப்பித்து பிராமணர் அல்லாதார் நிர்வாகத் துறைகளில் அதிக இடம் பெறும்படி இக்கட்சி ஆட்சியிலிருந்தோரைத் தூண்டியது. பிராமணர்

அல்லாதாருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் அரசியல் வேலை வாய்ப்பு அதிகம் தரும்படி ஆளுநருக்கும், இதர அதிகாரிகளுக்கும் 1922- ஆம் ஆண்டு அரசு ஆணை வழிகாட்டிகளை அனுப்பி வேண்டியது. "எத்துணை அதிகமாக நீதிக்கட்சி தம் கோரிக்கைகளை வலியுறுத்தியதோ, எத்துணை அதிக அளவு அது வெற்றி பெறுவதுபோல தோன்றியதோ, அத்துணை அளவைவிட அதிகமாக அது தனி நபரின் நல்லெண்ணத்தையும், சில பிரிவினரின் ஆதரவையும் இழக்க நேரிட்டது. பிராமணர் அல்லாதார் பின் தங்கிய வகுப்பினர் என்ற முத்திரையைப் பெறுவதற்காக நடத்தப்பட்ட தொடக்க காலப் போராட்டங்களில் அதிக அளவு பங்கு கொண்டோர்கள் இன்று இக்கட்சியை ஆதரிக்கவில்லை. மாண்டேகு செம்ஸ்போர்ட் சீத்திருத்தங்களின் செயல் முறையின்போது நடத்தப்பட்ட அரசியல் போராட்டத்தின் வாயிலாக அதிகார ஆதரவைப் பெற்ற பின்தங்கிய வகுப்பு உருவாவதற்கு இம் முயற்சிகள் தேவைப்பட்டன".

இன்று அம்முயற்சியில் ஈடுபட்டோர் தளர்ந்து விட்டனர்; தம் ஆதரவையும் மறுத்து விட்டனர்; சமய நம்பிக்கைகளில் பழமையும் பிடிப்பும், சாதிப் பாகுபாட்டில் அசைக்கவியலா நம்பிக்கையுமுள்ள இந்துக்களே இக்கட்சியில் மேலிடங்களையும், அதிகாரத்தையும் அனுபவித்து வந்தனர். தாழ்த்தப்பட்டோரும், தீண்டத்தகாதாரும், முஸ்லீம்களும் இக்கட்சியிலிருந்து அகற்றப்பட்டனர். கட்சிப் பதவிக்கு வந்தவுடனே இக் கட்சியினராகிய தெலுங்கருக்கும் தமிழருக்குமிடையே போட்டி எழும்பியது. இவ் வேறுபாடுகள் மொத்தமாக தீர்க்கப்படவில்லை. அதன் கொள்ளை ஏற்பாடுகளில் தீண்டத்தகாதாருக்கு எச் செல்வாக்கும் இருந்ததில்லை. அது பிராமணர் கையிலிருந்து ஆட்சிப் பொறுப்பைப் பிடுங்குவதும், தீண்டத்தகாதாருக்குப் பொருளாதார, கல்வி, அரசியல் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதும் நோக்கமாகக் கொண்டெழுந்தது. ஆனால் உண்மையில் தீண்டத்தகாதாரை இவற்றிற்கு மிகவும் அப்பாற்பட்ட இடத்திலேயே வைத்திருந்தது. இதன் கொள்கைக்கும் செயல் முறைக்குமிடையேயுள்ள வேறுபாட்டை புலையன் தோப்பு (Puliyantope) சண்டைகள் மூலம் உணரலாம். புலையர் என்ற தீண்டத்தகாதோர் வாழ்ந்த இடமே புலையன் தோப்பு என்று அறியப்படுகிறது. சென்னையம்பதியில் இயங்கிய கர்நாட்டிக், பக்கிங்காம் பஞ்சாலைகளில் ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் இவ்வேறுபாடுகளைப் பெரிதும் விளக்க வல்லன. பதவிக்காலத்தில் அமைச்சர்கள் வெறும் 'தரகர்களாய்' இயங்கினர்; நிர்வாக அதிகாரங்களைச் சுய நலன்களுக்காகப் பயன்படுத்தினர். அதன் வீழ்ச்சிக்கான காரணங்களில் இது மிகவும் முக்கியமானது. கோட்பாட்டளவினதான சீத்திருத்தச் சங்கமான இக்கட்சியை அமைச்சரவை அரசியல் அமைப்பாக மாற்றினர். மேல்மட்ட சாதிப் பிடிப்பினராகிய ஒருசில பிராமணரல்லாதாருக்கு ஆட்சியில் வேலை தேடித்தரும் ஒரு தரகர் சங்கமாகவே இது இயங்கியது. பதவிக்கு வந்ததும் அதன் அடிப்படைக் கருத்தான சமூக சீர்திருத்த நோக்கைக் காற்றிலே பறக்கவிட்டது; அத்துடன் சாதிப்பிடிப்பில் நம்பிக்கையுள்ள சில மேல்மட்ட இந்துக்களின் குடும்பச் சொத்தாயும் அது காணப்பட்டது. தன்னாட்சிக்காரர், சுயராஜ்யவாதிகள், காங்கிரசார், பிராமணர் ஆகியோரின் கடுமையான எதிர்ப்புகளை இதனால் சமாளிக்க இயலாது அவதிப்பட்டது. இக்கட்சி உள்ளுரமும், விவேகமும், புதுமையை உருவாக்கும் தலைமையும், அமைப்புத் திறமையும் அற்று காணப்பட்டது. இதனை ஓர் அரசியல் அமைப்பாக, இயக்கமாக மாற்றப்போதிய வலிமையற்றுக் காணப்பட்டது. ஆகவே அதனால் சுயராஜ்யக் கட்சியின் மேம்பட்ட அரசியல்

தந்திரங்களை எதிர்க்க இயலாது பின்தங்கிவிட்டது; மக்களின் ஆதரவையும் பெறத் தவறியது. இருப்பினும் இதன் விளைவால் பிராமணரல்லாதார் புத்துணர்வு பெற்றனர்; நாட்டில் ஏற்பட்டுள்ள விடுதலைப் போர் பற்றிய அறிவு அவர்களிடையேயும் பெருகியது.

இரட்டையாட்சி முறை, நிதிக்குறைகளைப் பொறுத்த புதுக்கருத்துக்களை நிறைவேற்றும் பொறுப்பை சட்ட மேலவைக்கு வழங்கியது. ஆனால் அவற்றைச் சட்டமாக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. மாற்றப்பட்ட பகுதிகளைச் செயல்படுத்த, போதிய அதிகாரம் வழங்கப்படாமையாலும், போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை யாலும் இரட்டையாட்சி வெற்றிகரமாய் இயங்க இயலாமல் போயிற்று என்று ரெட்டி நாயுடு கூறினார். 'நிதி அமைச்சருக்கு மேலான மேலதிகாரத்தையும் நிதியைப் போதிய அளவு பயன்படுத்தும் மேலதிகாரத்தையும் சட்ட சபைகளுக்கு வழங்கப்படாமலிருக்கும் வரை பொறுப்பாட்சி புராணக் கதையும் பொய்க்காட்சியுமாம் என்றார். நிர்வாக அதிகாரங்களைத் தொடர்பில்லா வகையில் இரண்டாகப் பிரிப்பது தர்க்க, பகுத்தறிவு களுக்குப் புறம்பானது. வேளாண்மை மாற்றப்பட்ட பகுதியின் பிரிவாயிருந்த போது நீர்ப்பாசனம் ஒதுக்கப்பட்ட பகுதியின் பிரிவாயிருந்தது. தொழிற்சாலை மாற்றப்பட்ட பகுதியாய் கருதப்பட்டவேளை நீர்சக்தி, ஆக்கத்தொழிலகங்களும் சுரங்கங்களும் ஒதுக்கப்பட்ட பகுதியாய் கருதப்பட்டன. மாற்றப்பட்ட பகுதி அமைச்சர்கள் இரு மேலாளருக்கு ஊழியம் செய்யும் நிலையிலிருந்தனர். ஆளுநரும் மேலவையினரும் அவர்களைச் கட்டுப்படுத்தி வந்தனர். "நான் புதுவன அமைச்சர்; ஆனால் காடுகள் சேர்க்கப்படவில்லை; நீர்ப்பாசனமற்ற வேளாண்மைத்துறை அமைச்சர்; மேலும் நான் ஒதுக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த ஆக்கத்தொழிலகங்களும், கொதிகலன்களும், மின்சக்தியும், நீர்ச் சக்தியும், சுரங்கங்களும், தொழிலும் ஒப்படைக்கப் படாத வெறும் தொழிற்சாலை அமைச்சர்' என்று கே.வி. ரெட்டி குறைபட்டுக் கொண்டார்.

ஒத்துழையாமை இயக்கம்

ரௌலத் சட்டமும், அதைத் தொடர்ந்து 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் நாள் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையும், துருக்கி இங்கிலாந்தால் அவதிப்பட்டமையும் இந்திய விடுதலை இயக்கத்தில் காந்திஜி பங்கு கொள்ளுதற்கான முக்கியமான காரணங்களாம். தென் ஆப்பிரிக்க பிரிட்டிஷ் அரசின் கெடுபிடிகளுக்குச் சற்றும் தலைசாய்க்காத தமிழ்ப் பெண்மணி வள்ளியம்மையின் துணிகரமான செயல்கள் காந்திஜியைப் பெரிதும் தூண்டின. படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்து ஆளுநரின் நிர்வாகக் குழுவில் அங்கத்தினராயிருந்த சங்கரன் நாயர் தம் பதவியை ராஜினாமா செய்தார். படுகொலைகளுக்கு எதிராக அவர் செய்திகள் எழுதி வெளியிட்டமையால் அவர் மீது பெருமளவு அபராதத் தொகைகள் விதிக்கப்பட்டன. தாகூர் இச்செயலையும், ஆளுநர் தளபதியையும் எதிர்த்து தம் சர் பட்டத்தை உதறி எறிந்தார். காந்திஜி இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்துக்களையும் முஸ்லீம்களையும் இணைத்து கிலாபத் கலகத்தை நடத்தத் திட்டமிட்டார். ஒத்துழையாமையும், கிலாபத் இயக்கமும் நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டன. காந்திஜி அகிம்சை அடிப்படையிலான ஒத்துழையாமை இயக்கத்தையே விரும்பினார். அந்நியப் பொருட்களை வாங்காது, அரசுக்கு மக்களின் எதிர்ப்பைக் காட்டவே விரும்பினார்.

காங்கிரஸ் கட்சியில் காந்திஜியின் திட்டத்திற்கு ஆதரவாகத் தமிழர் பலர் சேர்ந்தனர். தமிழராகிய விஜயராகவாச்சாரியார் சத்தியாக்கிரக (உண்ணாநோன்பு)க் கருத்தை வெளியிட்டார். கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் எடுத்துக் கொண்ட சட்டசபை விலக்குக் கருத்தை பல தமிழர் எதிர்த்தனர். இவ்வேளையில் தமிழகம் பல கட்சிகளாலும், அவற்றிற்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டாலும், போட்டிகளாலும், குறுகிய பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டிருந்தது.

1917 ஆம் ஆண்டு ஆந்திராவின் தெலுங்கு மொழி பேசுவோர்க்கு தனியான காங்கிரஸ் அமைப்பு ஒருமம் (Congress Organisational Unit) வழங்கப்பட்டது. பிராமணரல்லாதார் நோக்கங்களைச் செயல்முறைப்படுத்த அவ்வாண்டு நீதிக்கட்சி தமிழகத்தில் தோன்றியது. 1920- இல் நாக்பூர் காங்கிரஸ் மாநாடு தமிழ், மலையாளம், கன்னடம் பேசும் பகுதிவாழ் மக்களுக்குத் தனியான காங்கிரஸ் வட்டத்தை எற்படுத்தித் தந்தது. இதன் விளைவால் தமிழ்நாட்டு காங்கிரஸ் பகுதிக்கட்சிக்குத் தலைவராய் ராஜாஜி ஆனார்.

1919-20- ஆம் ஆண்டுகளில் ராஜாஜி தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பகுதிக் கட்சியை காந்திஜிக்கு ஆதரவான அமைப்பாக மாற்றப் பாடுபட்டார். அதே வேளை தன்னாட்சி இயக்கத்தாரும் நீதிக்கட்சியினரும் அவரையும் காங்கிரஸ் அமைப்பையும் கடுமையாகத் தாக்கினர். நீதிக்கட்சியின் பார்வையில் காங்கிரஸ் கட்சி பிராமணர் அமைப்பாகத் தோற்றமளித்தது. எனவே தாம் நினைத்தது போல் தமிழ்நாட்டில் வெற்றிபெற இயலவில்லை.

இயக்கத் தொடக்க காலத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பிரிவு ஒத்துழையாமை இயக்கத்துக்கு பெரிய ஆதரவேதும் தரவில்லை. தமிழக அரசியல் நிலை பெரும் குழப்பத்தில் கடந்து வந்தது. தமிழருக்கும் ஆந்திரருக்குமிடையே வேறுபாடு, சீர்திருத்தவாதிகளுக்கும் வேண்டாதாருக்குமிடையே போட்டி, மாநிலப் பிரச்சினையில் ஈடுபட்டோருக்கும் தேசியப் பிரச்சினையில் இயங்கியோருக்குமிடையே பலத்த வேறுபாடு. 1920- ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடுமாறு சத்திய மூர்த்தியும், கஸ்தூரிரங்க ஐயங்காரும் முடிவு செய்தனர். 1920- ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ராஜாஜி ஒத்துழையாமை இயக்கத்துக்கு ஆதரவு தருவதாக முடிவு செய்தார். இம்முடிவு திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டியால் எடுக்கப்பட்டது. இருதரப்புக் காரங்கிரஸாரும் ஒருவருக்கொருவர் எதிர்ப் பிரச்சாரம் செய்ததுடன், கொள்கைகளைத் தாக்கியும் வந்தனர். கல்கத்தா காங்கிரஸில் எடுத்துக் கொள்ளப்பட்ட சட்டசபை விலக்குக் கருத்தை வன்மையாகக் கண்டித்தனர். ஆகவே அவர்கள் அனுபவித்து வந்த தலைவர், செயலர் பதவிகளை விட்டு சத்தியமூர்த்தியும், கஸ்தூரியும் விலகினர். எஸ். சீனிவாச ஐயங்காரும் இராமசாமி ஐயங்காரும் சட்டசபை விலக்கக் கருத்தை உதறித் தள்ளினர். முன்னவர் இருவரும் சமாதானப்படுத்தப்பட்டு, காங்கிரஸ் கட்சியில் இருக்குமாறு வேண்டப்பட்டனர்.

ஒத்துழையாமை இயக்கம் பெருநோக்கில் திட்டமிடப்பட்டது. அது உண்ணா நோன்பையும், அந்நியப் பொருள் விலக்கையும், நீதிமன்றங்கள், கல்விக் கூடங்கள், சட்டசபைகள், தொழில் அமைப்புச் சங்கங்கள் விலக்கையும், தன்னடக்கம்

பின்பற்றப்படுதலையும்வேண்டியது. சாராயக்கடைகள் மறியல்களுடன் ராஜாஜி இவ்வியக்கத்தைத் தொடங்கினார். மாணவர் கல்வி நிலையங்களுக்கும், கல்லூரிகளுக்கும் போகவில்லை. கம்பெனி, பஞ்சாலைகள் முன் தொழிலாளர் வெளிநடப்புகளையும் வேலை நிறுத்தங்களையும் நடத்தினர். மக்கள் வரி கொடுக்க மறுத்தனர்; கொடிய சட்டங்களை எதிர்த்தனர். ஒத்துழையாதோர் கடையடைப்புகளைக் கட்டாயப்படுத்தினர்; நாட்டு வருவாய்க்குச் சேதங்கள் பல புரிந்தனர். ஆங்காங்கு கொடிய கிளர்ச்சிகளும், செயல்களும் ஏற்பட்டன. தமிழகத்தில் இவ்வியக்கத்தை வெற்றிப் பாதையில் ராஜாஜி பெரியார், வ.உ.சி., சத்தியமூர்த்தி நடத்திச் சென்றனர். ஒத்துழையாமை இயக்கத்துக்கு மக்களின் ஒத்துழைப்பு, ஆதரவு மொத்தத்தில் மிகக் குறைவு. ஆகவே இயக்கம் தோல்வியடைந்தது எனலாம். இயக்கத்துக்கு மக்களின் முழு ஆதரவைக் கோரி உழைத்த போதும், தமிழகத்தில் அதனால் சாதனைகளேதும் புரிய இயலவில்லை. "மற்ற மாநிலங்கள் காட்டிய அளவு ஆதரவைக்கூட தமிழ் மாநிலம் தரவில்லை" என்று பாரதியார் குறைபட்டுக் கொண்டார். காந்திஜி இந்தியா முழுவதும் குறிப்பாக தமிழகமெங்கும் சுற்றிவந்தார். காந்திஜியின் நண்பராகிய எம். ஏ. ஆச்சாரியா இவ்வியக்கத்துக்கு ஒத்துழைப்பு தருமாறு தமிழரை வேண்டினார். தமிழகத்தார் பிராமணர், பிராமணர் அல்லாதார் என்று பிரிக்கப்பட்டிருப்பதனால் அவ்வளவு ஆதரவு தரவில்லை என்று அவர் கருதினார். இவ்விதமான போட்டிகள் ஒத்துழையாதோரின் நோக்கங்களைப் பாதித்தன.

ஒத்துழையாமையின் பேரில் எவ்வித தீச்செயலும் ஏற்படலாகாது என்று காந்திஜி அறிக்கை விட்டார். மொத்த சட்ட மறுப்பு இயக்கங்கள் குற்றங்களில் முடிவதனால், ஒழுங்கான முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இயலாது என்றார். கள்ளுக்கடைகளின்முன் ஆந்திராவில் அகிம்சைச் செயல்கள் நடந்தன. அத்துடன் வரி கொடாமை இயக்கமும் தொடங்கப்பட்டது. தமிழகத் தலைவர்களான பெரியாரும் ராஜாஜியும் கைது செய்யப்பட்டனர். ஆகவே தமிழகத்தில் மக்களின் ஆதரவு சற்று பெருகியது.

1922- இல் காந்திஜி சிறை செய்யப்பட்டார்; துருக்கியில் கமால் பாஷா அதிகாரத்தைக் கைப்பற்றினார். காந்திஜி இயக்கத்தை ரத்து செய்தார். காங்கிரஸ் கட்சி ஆக்கபூர்வ அமைப்பாக மாறி ஹர்த்தால்களை ஆதரித்ததுடன் காதி (கைத்தொழில்)த் தொழில்களை விரிவுபடுத்தியது.

சுயராஜ்யக்கட்சி

1922- ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 12- ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட பர்தோலி தீர்மானம் சட்டமறுப்பு இயக்கத்தை ஒத்திவைத்தது. இது ஒத்துழையாமை இயக்கத்தின் முடிவின் தொடக்கமாகும். கட்சியில் ஏற்பட்ட அழிவினைத் தடுக்கும் நோக்குடன் மக்களின் ஆதரவைப் பெறுதற்கு வேண்டி காங்கிரஸ் தலைவர்கள் சட்டமறுப்பு விசாரணைக் கமிட்டியை நியமித்தனர். நாடுபூராவும் சுற்றிவந்த குழு, பாதி விருப்புடன் ஈடுபடும் மக்களிடையே சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் நடத்த இயலாது என்று அறிவித்தது. சட்டசபை நுழைவைப் பொறுத்து வேறுபாடுகள் இருந்தமையால் குழுவால் எதையும் சாதித்துவிட இயலவில்லை. ஹைச்.எ.கான், விதல்பாய்படேல், மோதிலால்

நேரு போன்றோர் சட்டசபை நுழைவை ஆதரித்தனர்; அவையில் இருந்து கொண்டு அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டனர். ஆனால் சீனிவாச ஐயங்கார், ராஜாஜி, Dr. அன்சாரி போன்றோர் சட்டசபை நுழைவை எதிர்த்தனர். 1922- இல் கயை காங்கிரஸில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் C.R. தாஸ் கட்சியிலிருந்து வெளியேறித் தொடங்கியதே சுயராஜ்யக் கட்சி. அவர்கள் சட்டசபை நுழைவை ஆதரித்து உள்ளிருந்தவாறு அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டனர். இக்கட்சியின் இக்கோட்பாட்டை விஜயராகவாச்சாரியரும் ராஜாஜியும் கண்டித்தவேளை, சத்தியமூர்த்தி சட்டசபை நுழைவை ஆதரித்தார்.

1923- இல் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தல்களில் பிரதிநிதிகளை காங்கிரஸ் நியமிக்கும் என்று சத்தியமூர்த்தியும் ரங்கசாமி ஐயங்காரும் நினைத்தனர். ஆகவே சத்தியமூர்த்திக்கும், ராஜாஜிக்கும் இருவரின் ஆதரவாளருக்குமிடையே பலத்த போட்டி ஏற்பட்டது. சென்னை மாநில அரசியலில் இருவரும் தமக்கென்று இடத்தை ஏற்படுத்த விழைந்தனர். ஏற்கெனவே பர்தோலி தீர்மானத்தை ஏற்றுக் கொண்ட ஒரு பிரிவினரிடையே ஒத்துழையாமை இயக்கத்தைப் புகுத்த சத்தியமூர்த்தியும் ரங்கசாமி ஐயங்காரும் விரும்பவில்லை. அந்நியப் பொருட்களை மறுப்பதை, அமைப்புகளை, சட்டசபையை மறுப்பதைக் காட்டிலும் சட்டசபையில் நுழைவதை சத்தியமூர்த்தி ஆதரித்தார். இப்படிச் செய்யின் நாம் சுயராஜ்யத்தைப் பெறலாம் என்று அவர் அறிவித்தார். சட்டசபை நுழைவைத் தம் அடிப்படைக் கோட்பாடாகக் கொண்ட ஒரு கட்சியை ஆதரிக்க அவர் முன்வந்தார். சட்டசபைகளில் நுழைந்து அவற்றின் இயக்கத்தைத் தடை செய்வதனால், அரசு கவிழ்தற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சுயராஜ்ய வாதிகள் கருதினர். இப்படிச் செய்யின் நாம் வெகுவிரைவில் விடுதலை அடையலாம் என்றும் கருதினார். சுதேசமித்திரன் என்ற செய்தித்தாள் மூலம் ராமசாமி ஐயங்கார் சட்டசபை நுழைவை ஆதரித்தார். சட்டசபையின் உள்ளிருந்தவாறு அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தைப் புதுப்பிக்க விழைந்தனர். ஈ.வெ.ரா., ராஜாஜி, வரதராஜுலுநாயுடு, திரு.வி.க. அனைவரும் சுயராஜ்யக் கட்சியின் இக்கோட்பாட்டை எதிர்த்தனர். சட்டசபை நுழைவு "நம் தோல்வியை ஒப்புக் கொள்வதற்கு ஒப்பு; நாம் எதிரியின் கையில் வீழ்வதுபோல் ஆகும்" என்று திரு.வி.க. கூறினார். சட்டசபை நுழைவை ஆதரித்தோர் மாறியோர் என்றும் மற்றவர்கள் மாறாதோர் என்றும் அழைக்கப்பட்டனர்.

இப்புதுக் கட்சிக்கு ஆதரவு தேடி சி.ஆர். தாஸ் இந்தியா முழுவதும் சுற்றி வந்தார். சென்னையில் ஜூன் திங்களில் மூன்றுவார தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார். "சட்டசபை நுழைவுத் திட்டத்துக்குத் தமிழர் பேராதரவு தந்திருப்பது அவருக்கு வியப்பைத் தந்தது" . இந்துக்களையும், முஸ்லீம்களையும் இணையுமாற வேண்டினார். பிராமணர், பிராமணரல்லாதோர் வேறுபாட்டை வளர்த்தார். சத்தியமூர்த்தி, ரங்கசாமி ஐயங்காருடன் அவர் நண்பராயிருப்பதால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். சுயராஜ்ய வட்டங்களில் தேசபந்து (நாட்டுத் தோழன்) என்று அறியப்பட்ட தாஸ் நீதிக்கட்சியால் பிராமண பந்து (பிராமண நண்பன்) என்று எள்ளி நகையாடப்பட்டார். தாஸ், சத்திய, ரங்க ஆகிய மூவரின் கட்சிப் பிரச்சாரங்கள் அவர்களின் கட்சிக்கு 1926-ஆம் ஆண்டுத் தேர்தலில் பெருவெற்றியைத் தேடித் தந்தன. அனைத்து இந்திய காங்கிரஸ் கட்சி சுயராஜ்ய வாதிகளைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ள பலமுறை முயன்றும், வெற்றி பெறவில்லை. சென்னை மாநகராட்சித் தேர்தலில் போட்டியிட்ட நான்கிடங்களில் மூன்றிடங்களை சுயராஜ்யக்கட்சி பெற்றது.

உப்புச் சத்தியாக்கிரகம், வேதாரண்ய யாத்திரை

சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிட சுயராஜ்யக் கட்சி முடிவு செய்தது. அதுபடி அது தேர்தல் பிரச்சாரங்களில் இறங்கியது. 1920- இல் சென்னையில் நடைபெற்ற தேர்தலில் பதினொரு இடங்களை வென்றது. இவ்வெற்றி ஒரு பெருவெற்றியல்ல. ஆனால் நீதிக்கட்சியின் பேராண்மையை எதிர்க்கத் துணிந்த கட்சியின் சிறப்பான தொடக்கத்தை இது காட்டியது. 1923- ஆம் ஆண்டுத் தேர்தல்களில் இக்கட்சி 11 இடங்களில் போட்டியிட்டது. 1924- இல் வங்க நாடு மேலாணைகளைப் பிறப்பித்து பல சுயராஜ்ய அங்கத்தினரைக் கைது செய்து சிறையிட்டது. கதர் நூற்பு, சட்டசபை நுழைவு முக்கியத்துவத்தைக் குறித்து காந்திஜியும், தாஸும், மோதிலாலும் இணைந்து முடிவுக்கு வந்தனர். சுயராஜ்யம் பெற சட்டசபைகளின் சிறப்பிடத்தையும், பங்கையும் உணர்ந்த காந்திஜி சுயராஜ்யவாதிகளுடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். சட்டசபை மறுப்பு பற்றிய காந்திஜியின் கருத்திலேற்பட்ட மாறுபாட்டையுணர்ந்த தமிழ் நாட்டு காங்கிரஸ் பிரிவின் மாறாதோர் விழிப்புடன் பார்த்தனர். காந்திஜியின் இந்நிலையை பி.வி.ஆர், ராஜாஜி, திரு.வி.க.,. வி. வரதராஜுலுநாயுடு ஆகியோர் கடுமையாகக் கண்டித்தனர். 1925 - இல் தலைநகரில் பிடிப்புடன் இருந்த சுயராஜ்யவாதிகள் மாவட்டங்களிலும், கிராமங்களிலும் மாநகர்களிலும் தம் செல்வாக்கைப் பரப்பி வந்தனர். அக்கட்சியின் தலைமையும், ஆதரவாளரைச் சேர்க்கும் விதமும், பிரச்சாரமும் பலரை அதன்பால் இழுத்தது. சாதுரியமான, சிந்தனாபூர்வமான பிரச்சார நுணுக்கங்களை அவர்கள் பயன்படுத்தினர். பஜனைகள், ஊர்வலங்கள், சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களுள்ளத்தில் ஆழப்பதிந்தனர்.

1926- இல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சி பெருவெற்றி பெற்றது. தேர்தல் காலங்களில் சுயராஜ்யவாதிகளுக்கும், நீதிக்கட்சியினருக்கும் ஏற்படாத போட்டி, மோதல் இனி ஏற்படுவதற்கில்லை. சுயராஜ்யக் கட்சி 41 இடங்களையும், நீதிக்கட்சியினர் 22 இடங்களையும், தனித்து போட்டியிட்டோர் 36 இடங்களையும் வென்றனர். அமைச்சரவை ஏற்படுத்தாது, அரசின் செயல்களைத் தடை செய்து தங்கள் நோக்கத்தை ஈடேறச் செய்ய, அவர்கள் அமைச்சு ஏற்படுத்தவில்லை. சட்டசபையில் சுயராஜ்யத் தலைவராய் இருந்த C.V.S. நரசிம்மராஜு ஆளுநரின் வேண்டுகோளை மறுத்தார். தனியாய்ப் போட்டியிட்டு வென்ற சுப்பராயன் இக் கட்சியின் உதவியுடன் அமைச்சரவை அமைத்தார். சுயராஜ்யவாதிகள் நாடு தழுவிய போராட்டத்தில் இறங்கியதால், தங்கள் கட்சிச்கொள்கைகளை நாடறியச் செய்யவும், வெகு விரைவில் சுயராஜ்யம் பெறவும் முடிவு செய்தனர். "1925-26 ஆம் ஆண்டுகளில் காங்கிரஸின் அரசியல் நாடு பூராவும் சுயராஜ்யக்கட்சி அரசியலுடன் வைத்தெண்ணப் பட்டது" என்று இர்ஷிக் கூறுகிறார். மேலும் அவர், ஒத்துழையாமை இயக்கமும் பிற காந்தீய கோட்பாடுகளும் அழிவை நோக்கியிருந்தன; சட்டசபை நுழைவு பெரும்பாலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாய்த் தோன்றியது" என்றார். இதே காலத்தில் சுயராஜ்யக்கட்சி இரண்டாகப் பிரிந்தது; சுயராஜ்யவாதிகள் என்றும், மோதிலால் தலைமையிலான ஒத்துணர்வு மிக்கோர் (Co-operative Responsivists) என்றும் பிரிந்தது. சட்டசபை நுழைந்து அரசை ஸ்தம்பிக்க வைக்க இப்பிரிவு விழையவில்லை. S.B. தாம்பே (Tambe) யும் மற்றும் சிலர் அதிகாரிகளாயும், சட்டசபை அங்கத்தினராயும் பதவி பெற்றனர்.

1926- இல் அமைச்சரவை பெரும்பாலும் தனிப்பட்டோரால் அமைக்கப்பட்டதால் சுயராஜ்யக் கட்சியின் கோட்பாடு ஈடேறவில்லை. இவர்களைத் தடுப்பதற்காக சுயராஜ்யவாதிகள் இவ்வமைப்பின்பால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். இச் செயலை வடநாட்டு சுயராஜ்யவாதிகள் தாக்கினர். இரட்டையாட்சியை அப்படியே ஒழித்து விடுவதாய் முடிவு செய்த கட்சியால் ஏதும் செய்ய இயலவில்லை. "கோழி கூவுவதற்குள் சென்னை சுயராஜ்யவாதிகள் மும்முறை தங்களின் மேலாளருக்கு மறுத்தனர்" என்று நீதிக்கட்சி கிண்டலாய்ப் பேசியது. இக்கட்சி சென்னையில் வெற்றி பெறுதற்கு அடிப்படைக் காரணம் சத்தியமூர்த்தி, ரங்கசாமி ஐயங்காரின் அயராத உழைப்பு ஆகும். 1930- இல் காங்கிரஸ் பேராதரவு பெற்று தலைதூக்கிய போது, சுயராஜ்யவாதிகளுக்குத் தனி வழியின்றித் தவித்தனர். 1935- க்குப் பின்னர் அவர்கள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயினர்.

1927- இல் சைமன் குழு இந்தியா முழுதும் எதிர்ப்புக்குள்ளாயிற்று. அதிக எதிர்ப்பு தமிழகத்தில் ஏற்பட்டது. இங்கு குழப்பங்கள், கலகங்கள், கொடுஞ்செயல்கள் மிகுந்து காணப்பட்டன. 1929- இல் லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் காந்திஜி கொண்டுவந்த சுதந்திரத் தீர்மானம் வெற்றி பெற்றது. நேரு தலைமை தாங்கிய இம்மாநாட்டில், வட்ட மேசை மாநாட்டில் காங்கிரஸ் பங்கு கொள்வதில்லை என்றும் தீர்மானிக்கப் பட்டது. மத்திய, மாநில அமைச்சர்களும், சட்டசபை உறுப்பினர்களும் தங்கள் பதவியையும், இடங்களையும் ராஜினாமா செய்யுமாறும் வேண்டியது; மேற்கொண்டு நடக்கும் தேர்தல்களில் போட்டியிட வேண்டாமென்றும் முடிவு செய்தது. இங்குதான் சட்டமறுப்பு இயக்கம் தொடங்குவதற்கான முடிவும் எடுத்துக் கொள்ளப்பட்டது. செயற்குழு முடிவுப்படி 1930 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26- ஆம் நாள் பூரண சுயராஜ்ய நாள் அதாவது நாடு தழுவிய விடுதலை நாள் என்று கொண்டாடவும் அறிவிக்கப்பட்டது. அங்கு காந்திஜி தம் பதினொரு அம்சங்களை வெளியிட்டார். அவை நிலவருவாய்க் குறைப்பு, உப்பு வரி நீக்கம், படை, சிவில் செலவுக்குறைப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, அந்நிய ஆடைகள் மீது வரி விதிப்பு. காந்திஜிக்கும் அரசப் பிரதிநிதிக்குமிடையே எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. கொடிய உப்பு வரியை எதிர்த்து காந்திஜி சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். 1930- இல் மார்ச்சுத் திங்கள் 12- ஆம் நாள் தம் தண்டி யாத்திரையை சபர்மதி ஆஸ்ரமத்திலிருந்து தொடங்கினார். மார்ச்சு 7- ஆம் நாள் வல்லபாய் படேல் கைது செய்யப்பட்டதால் இவ்வியக்கம் பலராலும் ஆதரிக்கப்பட்டது. முன்னறிவிப்பு இன்றி தல நிர்வாகி ஒருவரின் ஆணையின் பேரில் படேல் கைது செய்யப்பட்டார். ஏப்ரல் திங்கள் தொடக்கத்தில் நேரு கைது செய்யப்பட்டார். உப்பு வரி எதிர்ப்பில் ஏறத்தாழ 60,000 பேர் (ஆண்களும், பெண்களும்) கைதாயினர்.

தமிழ் நாட்டு காங்கிரஸ் பிரிவு தலைவர் ராஜாஜியும், காமராசும் பிறரும் சட்ட மறுப்பு இயக்கத்தில் தீவிரப்பங்கு கொண்டனர். எதிர்ப்புக் கூட்டங்கள், எதிர்ச்செயல்கள், கடையடைப்புகள், சாராயக்கடை மறியல்கள், வரி கொடாமை, சிறைவாசம் புகுதல் நாடெங்கும் நடந்தன. சட்டத்தை மறுத்து, ராஜாஜியும் ஆதரவாளரும் 1930 ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 13- ஆம் நாள் திருச்சியிலிருந்த வேதாரண்யத்துக்கு (தஞ்சை) கால்நடை யாகச் சென்று உப்புக் காய்ச்சினர். தடையுத்தரவை மீறியதால் அவர்கள் கைது

செய்யப்பட்டனர். அரசு தடையுத்தரவுகளையும், இதர உத்தரவுகளையும், பிறப்பித்து விடுதலை வீரரைத் துன்புறுத்தியது. மக்களின் கைகளைக் கட்ட நினைத்தது; தலைவர்களை ஒடுக்கத் திட்டமிட்டது. வேலூர், குடியாத்தம், திருப்பூர்ப் பகுதிகளில் கொடுங் செயல்கள் நடைபெற்றன. திருப்பூரில் (கோவை மாவட்டம்) குமரன் நாயர், சுந்தரம் கைத்தடியால் அடித்து நொறுக்கப்பட்டனர். 1932- இல் குமரன் தலை நொறுக்கப்பட்டடு, 1932-ல் மற்றவரும் இறந்தனர். குமரன் தலையில் அடிபட்டுச் சாகும் தருவாயிலும் இந்தியக் கொடியைப் பறக்க விட்டு, வந்தே மாதரம் என்று கூறி, கண்டவர் உள்ளம் உருகச் செய்தார்.

1931 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 4- ஆம் நாள் காந்தி—இர்வின் ஒப்பந்தப்படி இந்த சட்ட மறுப்பு இயக்கமும் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது இதனால் பேராணைகள் ரத்து செய்யப்பட்டு, கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். உப்புக் காய்ச்சும் உரிமையை கடலோரப்பகுதி மக்களுக்கு அரசு வழங்கியது. அந்நியத் துணிகளை மறியல் செய்து தடுக்கும் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1932- இல் நடக்கவிருந்த வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் பங்கு கொள்வதாக ஒப்புக் கொண்டது.1932- இல் மீண்டும் மறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டு, காந்திஜி தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற் கொண்டார். மக்களின் ஆதரவையும் தேடிக் கொண்டார். பின்னர் அவர் தனி நபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். தமிழ் நாட்டில் இது வரவேற்கப்பட்டது. 1934- இல் காந்திஜி அதனையும் ரத்து செய்தார்; அரசு கொடிய சட்டங்களையும், தடையுத்தரவுகளையும் திருப்பிப்பெற்றது. 1935- இல் இரட்டையாட்சி நீக்கப்பட்டது; மாநில சுயாட்சி புகுத்தப்பட்டது. 1937- இல் தேர்தல்கள் நடைபெற்றன. ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் கட்சி பெருவாரி இடங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

மாநில சுயாட்சி – காங்கிரஸ் அரசாங்கம் – 1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1927 ஆம் ஆண்டு சைமன் குழுவுக்கு எதிர்ப்புக்குரல் கொடுக்கப்பட்டது. 1930- ஆம் ஆண்டு உப்புச்சத்தியாகிரகம் அல்லது தண்டிப்பயணம் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றது. இலண்டனில் 1930, 1931,1932 ஆகிய ஆண்டுகளில் மூன்று வட்டமேசை மாநாடுகள் நடைபெற்றன. மேற்கூறிய நிகழ்ச்சிகளின் விளைவாக 1935- ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம் இரட்டை ஆட்சி முறையை ஒழித்தது: (1) இந்திய அரசுச் செயலரின் (Secretary of State) தலைமையிலான உள்துறை அரசாங்கம் (இங்கிலாந்தில்) (2) இந்திய நிர்வாகத்தில் மத்தியில் கூட்டாட்சி அரசு கூட்டாட்சி நிர்வாகத்துறை, கூட்டாட்சி சட்டமியற்றும் துறை, கூட்டாட்சி நீதித்துறை (3) மாநில சுயாட்சி முறை —மாநில நிர்வாகத்துறை, மாநில சட்டமன்றங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தியது.

இந்த சட்டத்தின்படி சென்னை மாநிலத்திலிருந்து மத்திய அரசின் மேல்மன்றத்திற்கு 20 உறுப்பினர்களையும், மத்திய கூட்டாட்சி சட்டமன்றத்திற்கு (கீழ் மன்றம்) 37 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும். மாநிலத்துக்கு ஒரு ஆளுநர், ஒரு கூட்டாட்சி மேல் மன்றம், ஒரு கூட்டாட்சி சட்டமன்றம் ஆகியவையும் இச்சட்டத்தால்

வழங்கப்பட்டன. ஆளுநருக்கு உதவியாக அமைச்சர்குழு ஒன்று இருக்கும். அந்த அமைச்சர்குழுவின் தலைவர் முதலமைச்சர் என அழைக்கப்படவேண்டும். மாநிலத்திற்கு சுய சட்டம் , ஒழுங்கு, நீதி, காவல், சிறை, தல ஆட்சி, பொது சுகாதாரம், கல்வி, வேளாண்மை, வனத்துறை வருவாய்த்துறை அதிகாரங்கள் பற்றியும் 1935- ஆம் ஆண்டுச் சட்டம் கூறுகிறது.

சென்னை மாநில சட்டமன்றத்திற்கான தேர்தல்கள் 1937 ஆம் ஆண்டு நடைபெற்றன. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும், நீதிக் கட்சியும் தேர்தலில் போட்டியிட்டன. சுயராஜ்யக்கட்சி காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து கொண்டது. நீதிக்கட்சியை அதன் முக்கியத்தலைவரான கே.வி. ரெட்டியும், இந்திய தேசிய காங்கிரஸை இராஜகோபாலாச்சாரியாரும் தலைமை ஏற்று நடத்திச் சென்றனர். சுயராஜ்யக் க்ட்சியின் ஆலோசர்களில் ஒருவரான சத்திய மூர்த்தி காங்கிஸுடனும், இராஜாஜியுடனும் தோளோடு தோள் நின்று உழைக்கலானார். முஸ்லீம்லீக், மக்கள் கட்சி ஆகிய இரு கட்சிகளும் தேர்தலில் போட்டியிட்டதால் போட்டி எண்ணிக்கை அதிகரித்தது. அதனால் நீதிக்கட்சி வெற்றிவாய்ப்பை முழுமையாகப் பெறும்நிலையிலில்லை. பண்டித ஜவஹர்லால் நேரு, ராஜாஜி, சத்தியமூர்த்தி, மற்றும் பல காங்கிரஸ் தலைவர்கள் வாக்குகள் சேகரிப்பதில் தீவிரம் காட்டினர். பிராமணர் அல்லாத மற்ற இனத்தவர்கள், தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் ஒடுக்கப்பட்ட இனத்தவர் அனைவரும் தனக்கே வாக்களிப்பர் என்று நம்பியிருந்த நீதிக்கட்சி சென்னை மாநிலத்தில் வெற்றிவாய்ப்பை இழந்தது. சட்டமன்றத்திற்கான மொத்தம் 215 இடங்களில் 152 இடங்கள் காங்சிரஸுக்கு கிடைத்தன. மேல்மன்றத்தில் மொத்தம் 46 இடங்களில் காங்கிரஸுக்கு 26 இடங்கள் கிடைத்தன. இவ்வாறு 1937- ஆம் ஆண்டு நடந்த சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அறுதிப்பெரும்பான்மை பெற்றது.

அறிவிப்பு ஆணையின்படி (Instrument of Instructions) சென்னை ஆளுநரான எர்ஸ்கின் பிரபு (1934 முதல் 1940 வரை), பெரும்பான்மை பலம் பெற்ற கட்சியை அமைச்சரவை அமைக்கும்படி அழைத்தார். 1937, மார்ச் திங்கள் 18- ஆம் நாள் அகில இந்திய காங்கிரஸ் கட்சி ஒரு தீர்மானம் வெளியிட்டு இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தது. அதற்காக ஒரு நிபந்தனையையும் வெளியிட்டது. அதன்படி "சட்டமன்ற காங்கிரஸ் கட்சித்தலைவர் திருப்தியடைந்தால்; ஆளுநர், தான் தனது சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவதில்லை என உறுதியளித்தால் அல்லது அரசியலமைப்பு விவகாரங்களில் அமைச்சரவையின் ஆலோசனையை மறுக்காதிருந்தால்" காங்கிரஸ் கட்சி ஆட்சியமைப்பதில் ஆட்சேபனையில்லை எனக் கூறப்பட்டது. சென்னையின் காங்கிரஸ் தலைவர் இது பற்றி திருப்தியடைந்தாலும், அவருக்கு உறுதிமொழிகள் வழங்கப்படாததாலும் ஆளுநரின் அழைப்பை நிராகரிக்க வேண்டியதாயிற்று. இதனால் அரசியலமைப்புப் பிரச்சினைகள் எழுந்தன. எனினும், ஆளுநர், கே.வி. ரெட்டியின் தலைமையில் இடைக்கால அமைச்சரவை ஒன்றை அமைத்தார். பின்னால், தலைமை ஆளுநர், இந்திய அரசுச் செயலாளர் ஆகியோரின் இசைவுக்கு ஏற்ப, சென்னை ஆளுநரும், தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவதாக உறுதியளித்தார். இவ்வுறுதிப்பாட்டின் அடிப்படையில் 1937- ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில் சென்னை மாநிலத்தில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்பட்டது.

காங்கிரஸ் அமைச்சரவையின் சாதனைகளும் தோல்விகளும் (1937–39)

1937-39 ஆகிய ஆண்டுகளில் சென்னை மாநிலத்தில் செயல்பட்டு வந்த காங்கிரஸ் அமைச்சரவை பலவழிகளில் வெற்றிபெற்றது. ஏராளமான அதிகாரங்களை அனுபவித்து வந்த ஆளுநரின் தலையீடு இனிமேல் கூடாது என்ற கொள்கையில் அக் கட்சிக்கு வெற்றி கிட்டியது. ஆட்சித்துறை அதிகாரிகள் தங்களது பொறுப்பிலிருந்து நழுவாது பார்த்துக்கொள்ளப்பட்டனர். இராஜாஜி மது அருந்தும் பழக்கத்திற்கு முடிவு கட்ட விரும்பினார். எனவே சென்னை மாநிலத்தில் முதன் முறையாக மதுவிலக்கு செயற்படுத்தப்பட்டது. மதுவுக்கு பலர் அதிகமாக அடிமையானதாலும்; மற்றும் கள் போன்ற தரமில்லாத பொருட்களாலும் ஏராளமான குடும்பங்கள் சீரழிந்தன. சமுதாயத்தில் அதன் அழிவுச் சின்னங்கள் காணப்பட்டன. மது அருந்துவோரிடையே சச்சரவுகள் நடைபெறுவதும், இறப்பதும் மிகுந்திருந்தது. தொழிற்சாலைகளிலும் மற்றும் பல இடங்களிலும் பணிபுரிவோருக்கு கள் அல்லது குறைந்த அளவு சாராயம் அவசியமான நஞ்சாகும் என்று நம்பப்பட்டது. எனவே இராஜாஜி, சோதனை செய்யவேண்டி, முதலில் தமிழ்நாட்டில் சேலத்தில் மதுவிலக்கை செயற்படுத்தினார். அடுத்து 1938 இல், ஆந்திரப்பிரதேசத்தில் சித்தூர், கடப்பா மாவட்டங்களில் செயலாக்கினார். இதனால் சட்டத்திற்குப் புறம்பாக, மறைமுகமாக மதுபானங்கள் விற்கப்பட்டன; மறைமுகமாக பலர் பயன்படுத்தவும் செய்தனர். வருவாய்த்துறைக்கு வரும் வருமானம் குறைந்தது. தவறான வழியில் மது விற்கப்படல், பயன்படுத்தப்படல் ஆகியவற்றினால் காவல்துறை தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. காவல்துறை ஊழல் பெருகிய துறையாக மாறவும் வழி ஏற்பட்டது. இவ்வாறானதால் தண்டனைகளும் அபராதமும் செலுத்த வேண்டிய நிலையும் உருவாகியது.

கொள்கை மாற்றங்கள், சமய மாற்றங்கள் போன்ற செயல்கள் தமிழகத்தில் மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலும் சாதாரணமாக நடைபெற்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும், கட்டுப்படுத்தப்பட்ட இனத்தவர் மீதும் கடுமையான கட்டுப்பாடுகள் திணிக்கப்பட்டன. இதனால் அம்மக்கள், சமயச்சுதந்திரமும் சந்தர்ப்பமும் எதிர்நோக்கி யிருந்தனர். இவ்வாறான சமயச் சுதந்திரம், ஒரு வேறுபாட்டுணர்வு, சந்தர்ப்பங்கள் போன்றவை கிறித்தவ சமயத்தில் இருப்பதாக அவர்களுக்கு கிறித்தவ சமயத்தவரால் எடுத்துக் கூறப்பட்டது. இதனால் பலர் அச்சமயத்தை நம்பி தங்களை அதில் ஈடுபடுத்திக் கொண்டனர். இவ்வாறான சமயமாற்றங்கள் தமிழகத்தின் ஒற்றுமைக்கும், மக்களிடையேயான நட்புக்கும் இடையூறுகளை ஏற்படுத்தின. இந்து உயர்இனத்தைச் சேர்ந்தவரும், தீவிர வைணவக் கொள்கையைப் பின்பற்றுபவருமாயிருந்த இராஜாஜி இந்துசமயத்தையும், மற்ற இந்திய சமயங்களையும் அழிவிலிருந்து காக்கப் பெரிதும் பாடுபட்டார். கொச்சி தேசிய அரசில் கோயில் நுழைவுப் பிரகடனத்தை சண்முகம் செட்டியார் என்பவர் வெளியிட்டார். திருவாங்கூர் அரசில், சி.பி. இராமசாமி ஐயர், கோயில் வழிபாட்டு முறையைத் தீவிரப்படுத்தியதோடல்லாமல் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் கோயிலுக்குள் நுழையவும் வழிவகைகளை மேற் கொண்டார்.

மதுவிலக்குக் கொள்கை வருவாய்த் துறையைப் பாதித்தது; பொருளாதார வளர்ச்சிக்கு இக்கட்டானது. எனவே இவ்விழப்பை ஈடுகட்ட, இராஜாஜி தனது 1939-40 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுப் பட்டியலில் வரியைப் புகுத்தினார். விற்பனையில்

விற்பனைவரி புகுத்தப்பட்டதால் மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்பு ஈடு செய்யப்பட்டது. ஆனால் வணிகப் பெருமக்கள் இதனால் இன்னலுற்றனர்; கண்டனமும் செய்தனர். இந்த அடக்குமுறைச் சட்டமானது பொதுநிர்வாக ஊழியர்களிடமும் வணிகப் பெருமக்களிடமும் பெரும்ஊழலைப் பெருக்கியது. இந்த ஊழலின் ஒட்டு மொத்தமான இன்னல்கள் அனைத்தும் நுகர்வோர் மீதுதான் சுமத்தப்பட்டது. வணிக வரி அதிகாரிகளின் ஆதிக்கம் பெருகியது; செல்வாக்கு உயர்ந்தது; அப்பகுதியின் ஏழை மக்களைக் கசக்கிப் பிழிந்து பெற்ற பணத்தினால் அதிகாரிகளின் பொருளாதாரம் பெருகியது.

நாட்டு முன்னேற்றங் கருதி மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளில் ஒன்று ஜமீன்தார் ஆட்சிப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் நிலை பற்றி அறிந்து கொள்ள குழு ஒன்று அமைக்கப் பட்டதாகும். இதற்கான முயற்சிகள் வருவாய்த்துறை அமைச்சராயிருந்த தி. பிரகாசத் தாலும், ஆந்திரகேசரியாலும் எடுத்துக் கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது எனினும், இதற்கான சட்டம் எதுவும் இயற்றப்படவில்லை. அதற்குக் காரணம், இராஜாஜி போன்ற தலைவர்கள் விலகியதும் இரண்டாவது உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதால் அமைச்சரவை விலகியதுமேயாகும். கிராமக் கடன் நிவாரணத் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. ஆனால் அத்திட்டத்தால் சாதாரண மக்களை விட அதிக இலாபம் அடைந்தவர்கள் நில உடைமையாளர்களேயாவர்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இந்திமொழி பாடமாகப் புகுத்தப்பட்ட போது, தமிழக மக்களிடையே கலக்கமான சூழ்நிலை உருவானது. வேலை நிறுத்தங்கள், எதிர்ப்பு மாநாடுகள், எதிர்ப்பு ஊர்வலங்கள், கல்லெறிதல் அரசு கட்டிடங்களுக்கு தீ வைத்தல் போன்ற செயல்களால் மக்கள் தமது கசப்பு உணர்வைத் தெரியப்படுத்தினர். இதனால் அங்காடிகளும், மற்ற அத்தியாவசிய நிலையங்களும் கட்டாயமாக மூடப்பட வேண்டிய நிலை உருவானது. இந்தி எதிர்ப்பு முழக்கங்களும் விண்ணதிர எழுப்பப்பட்டன. 1939-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 2- ஆம் நாள் சேலத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை பெரியார் E.V. இராமசாமி நாயக்கர் மேற்கொண்டார். போராட்டத்தில் கலந்து கொண்ட ஏராளமானோர் கைது செய்யப் பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். அதன் பின்பு, தமிழ் மக்கள், போராட்டத்தைத் தங்களுக்குப் பயன்படும் அரசியல் ஆயுதமாகக் கருதினர். அதன் துணையாக மொழியின் பெயரால் தங்களது இன்னல்களைக் களைய முற்பட்டனர். காங்கிரஸ் அமைச்சரவை இராஜினாமா செய்துகொண்ட பின்பு ஆளுநரின் ஆட்சி ஏற்பட்டது. ஆளுநரின் ஆட்சிக் காலத்தில் இந்தியை கட்டாயப்பாடமாக்குவது ஒழிக்கப்பட்டது. மொழியின் பெயரால் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ராஜகோபாலாச் சாரியாருக்கும், சத்தியமூர்த்திக்குமிடையே இருந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமை பலமிழந்தது. 1937- ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டுப்பிரிவின் தலைவர் சத்திய மூர்த்தி சென்னை சட்டமன்றத்திற்கு போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அவர் கூட்டாட்சி சட்டமன்றத்திற்கு போட்டியிட அனுமதிக்கப்பட்டார். 1937-39 ஆம் ஆண்டுகளின் அமைச்சரவையில் இடம் கொடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

ஆனால், பின் அவர் ஏமாற்றப்பட்டார். காங்கிரஸ் கட்சிக்குள் மாநில அளவில் நடைபெற்ற தேர்தலில் இராஜாஜி சத்தியமூர்த்திக்கு எதிராக ஆதரவு திரட்டி அவரைத் தோற்கடித்தார். மேற்கூறிய அனைத்தும் அவர்களது கசப்புணர்ச்சியையும் பகையுணர் வினையும் காட்டிற்று. காமராஜ் அவர்கள் சத்தியமூர்த்திக்கு ஆதரவாக அவரதணியில் இருந்ததால் இராஜாஜி, காமராஜையும் வெறுத்தார். இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் தலைவர்களுக்குள்ளேயே உட்பூசல்கள் இருந்ததால், தமிழகத்தில் அவ்வியக்கத்தின் ஒற்றுமை சீர்குலைந்தது. நடவடிக்கைகளும் செயலற்றிருந்தன.

கூட்டுப் பொறுப்புக் கொள்கையின் மூலமாக சென்னையில் காங்கிரஸ் அமைச்சரவை மிகச் சிறப்பாக செயல்பட்டது. கொப்லாண்டு (Coupland) என்பவர், "காங்கிரஸ் அமைச்சரவைகள் தங்களைத் திறமையானவைகள் எனவும், பொறுப்புடைய, பொதுத்தொண்டு நோக்குடைய கடின உழைப்பாளிகள் எனவும் நிரூபித்தன. சட்டமன்ற நடவடிக்கைகள் சிறப்பாக நடத்தப்பட்டன; கடினமாக உழைத்தன. ஆங்காங்கு தேவையற்ற பல கேள்விகள் கேட்கப் படுவதும், வாணிபநோக்கும் தென்பட்டது" . என்று குறிப்பிட்டுள்ளார். அமைச்சரவையின் சட்டமன்ற நடவடிக்கைகள் மிக முன்னேற்றமடைந்ததாகவும் சிறப்பானதாகவுமிருந்தன. கிராமப்பகுதிகளில் தங்களது சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தினர்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1939, செப்டம்பர் 3- ஆம் நாள், ஜெர்மனி மீதும் மற்ற மத்திய நாடுகள்மீதும் போர்ப் பிரகடனம் செய்தது. சட்டமன்றத்தைக் கலந்து ஆலோசனை செய்யாமலேயே, இந்தியத் தலைமை ஆளுநர் லின்லித்கோ (Linlithgow) ஜெர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தார். 'கூட்டாட்சி அமைப்புமுறை' ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்டே இருந்தது. எனினும்1939, அக்டோபர் 22- ஆம் நாள் காங்கிரஸ் அமைச்சரவைகள் அனைத்தும் பதவி விலகிட வேண்டும் என்றது. அவர்கள், இந்தியமக்களின் உணர்வுகளை எடுத்து எறிந்து விட்டதாக, அரசுக்கு எதிரான தீர்மானம் கொண்டுவந்தனர்.

காங்கிரஸ் தலைவர்கள், போர் நடவடிக்கைகளை விவரிக்கும்படியும், இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பதாக உறுதி கூறும்படியும் அரசினைக் கேட்டுக் கொண்டனர். இராஜாஜி அமைச்சரவை அதே ஆண்டில் பதவி விலகிக் கொண்டது.1935 ஆம் ஆண்டுச் சட்டப்பிரிவு 93- இன்படி சென்னை அரசுப் பொறுப்பை ஆளுநரே ஏற்றுக் கொண்டார். முகம்மது அலி ஜின்னாவின் திட்டப்படி, சென்னை மாநில இஸ்லாமியர்கள் 1939 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் நாளை விடுபடும் நாள் (Day of Deleverance) ஆகக் கொண்டாடினர். அவர்கள் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தை அடக்குமுறை ஆட்சி எனவும், பாரபட்சமான ஆட்சி எனவும் கருதினர்.

1941- ஆம் ஆண்டு டிசம்பர் 7- ஆம் நாள் பேர்ல் துறைமுகத்தை (pearl Harbour) ஜப்பான் தாக்கியது. இந்திய தேசிய இராணுவம், இந்தியாவின் கிழக்குப் பகுதிகளை வளைத்துக் கொண்டது. இதனால் ஆங்கில அரசின் நிலை கவலைக்கிடமாயிற்று; மனநிறைவற்றதாயிற்று; அமெரிக்கர்களும் கலக்கமுற்றனர். 1942 மார்ச் திங்கள் 22- ஆம் நாள் இந்தியாவுக்கு வந்த சர்ஸ்டிராபோர்டு கிரிப்ஸ் இந்தியாவுக்கு டொமினியன்

(Dominion Status) அந்தஸ்து வழங்குவதற்கு இங்கிலாந்து அரசு விரும்புவதாக அறிவித்தார். அவரது வருகை, இக்கட்டான பிரச்சினைக்கு முடிவுகட்டுவதாகவும், இந்தியர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதாகவும் இருந்தது. ஆனால் அவர் அதிர்ச்சியடையும்படியாக, அவரது வேண்டுதல்கள் முழுவதுமாக வெறுக்கப்பட்டன. அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்கும் முஸ்லீம் லீக்குக்கும் இடைப்பட்ட கருத்துவேற்று மைகளைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கில அரசு பிரிவினையுடைய ஒரு வீட்டிற்கு உடனடிச் சுதந்திரம் என்பது சாத்தியமல்ல எனக் கூறியது. கிரிப்ஸ் தூதுக்குழு பெரும் அவமானத்தைத் தாங்கிச் செல்ல வேண்டியதாயிற்று. 1942-ஆம் ஆண்டு கோடை காலத்தில், மக்கள் அனைவரும் சேர்ந்து வெள்ளையரை வெளியேற்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாண்டுகளில் இராஜாஜி, பாகிஸ்தான் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். ஆனால் இவர்தம் இக்கொள்கையானது, காந்திஜியின் அரசியல் தத்துவத்தின் அடிப்படைக்கு முற்றிலும் புறம்பானது ஆகும். இதனால் இராஜாஜி கண்டனத்திற்குள்ளானார். எனவே, அவர் 1942 ஏப்ரல் மாதம் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார். 1942, ஜூலை14- ஆம் நாள் காங்கிரஸ் பணிக்குழு சில தீர்மானங்களைக் கொண்டுவந்து தலைமையின் ஒப்புதலுக்கு வைத்தது.

இதன்படி, குழு ஒற்றுமையான, அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அரசாங்கம் உடனடியாக இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்க முன் வரக்கூடும் என்று கேட்டுக் கொண்டது. அப்படியில்லையேல் காங்கிரஸ் கட்சி ஒரு பெரும் மக்கள் இயக்கத்தைத் துவக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படும். இந்தத் தீர்மானம்அரசாங்கத்தாலும், பத்திரிகைகளாலும், மக்களாலும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத் தீர்மானம் எனக் கருதப்பட்டது. ஆனால் 'வெள்ளையனே வெளியேறு' என்ற சொல் காந்தியடிகளாலோ அல்லது காங்கிரஸ் கட்சியின் வேறு எந்தத் தலைவராலோ உருவாக்கப்பட்டதல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தீர்மானம், பெரும் போராட்டத்தை நடத்தும் எண்ணத்தில், காங்கிரஸ் கட்சியினால், பம்பாயில் 1942 ஆகஸ்டு 8- ஆம் நாள் வெளியிடப்பட்டது. 1942- ஆகஸ்டு 9- ஆம் நாள் காந்தியடிகள், அபுல்கலாம் ஆசாத், பண்டிதஜவஹர்லால்நேரு, கிருபளானி, படேல் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதன்மூலம் சுதந்திர இயக்கத்தின் புதிய அத்தியாயம் ஒன்று துவக்கப்பட்டது.

தமிழகத்தில், டி. பிரகாசம், காமராஜ் போன்றவர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட்டனர். அரசாங்கம், காங்கிரஸ் இயக்கத்தை அடக்கியது; கட்சியின் நிதி கைப்பற்றப்பட்டது, கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டன. தமிழகத்தில், பணியாளர்கள், மாணவர்கள், வணிகர்கள், அரசியல்வாதிகள், நடுத்தர மக்கள் ஆகியோர் காங்கிரஸ் கட்சியின் இவ்வியக்கத்தில் குதித்தனர். இதனால் தமிழகத்தில் அரசியல் போராட்டம் மிகத் தீவிரமடைந்தது. கொடுமைகளும், கலவரங்களும், கொலைச் செயல்களும் தமிழகத்தில் பெருகின. தமிழ்மக்கள், ஏராளமான எதிர்ப்புக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தினர்; வெள்ளையனே வெளியேறு என்று வீரமுழக்கமிட்டனர்; கதவடைபபுகள் நடத்தினர்; கள்ளுக்கடைகளுக்கு முன்பு மறியல் செய்தனர். அரசாங்க அலுவலகங்களுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர். பக்கிங்ஹாம் கர்நாட்டிக் மில் (Buckingham & Carnatic Mills), சென்னை

துறைமுகத்துறை (Madras Port Trust), சென்னை மாநகராட்சி, மின்சார நிலையம் போன்றவை இயங்கவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தில் போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்; தந்தி, டெலிபோன் கம்பிகளை அறுத்தெரிந்தனர். வேலூர், பணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் அரசு பொதுக்கட்டிடங்களுக்கு தீவைக்கப்பட்டன. ஆதிச்சனூரில்சரக்கு ரயில் பெட்டி ஒன்றும் எரிக்கப்பட்டது. கோவையில் ஏறக்குறைய எல்லா தொழிலகங்களும் மூடப்பட்டன. போதனூருக்கும், சிங்கநல்லூருக்கும் இடையில் கொச்சியிலிருந்து டைனமைட் ஏற்றிவந்த இரயில் வண்டி தாக்கப்பட்டது. கோவையில் பல கள்ளுக்கடைகள் மூடப்பட்டன. பல கடைகள் சூலூரில் தீக்கிரையாக்கப்பட்டன. இவ்வியக்கத்திற்கு ஆதரவு தீர்மானம் ஒன்று தெரிவிக்கப்பட்ட பின்பு கோவை நகராட்சிக்குழு கலைக்கப்பட்டது. பொது அலுவலகங்கள் தாக்கப்பட்டன. காவல் நிலையம் அணுகுண்டு தாக்கதலுக்கு உள்ளாக்கப்பட்டது. சூலூர் விமான நிலையமும் தாக்கப்பட்டு அழிவுக்குள்ளானது. கிராம அலுவலகங்களுக்கும், கள்ளுக்கடைகளுக்கும் தீ வைக்கப்பட்டன. மாணவர்களின் ஈடுபாட்டின் காரணமாக செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களில் போராட்டம் வன்முறையாக நடத்தப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டக்கழகம் கலைக்கப்பட்டது. மதுரையில் கதவடைப்புக்களும், ஊர்வலங்களும் எதிர்ப்புக் கூட்டங்களும் நடைபெற்றன. வெள்ளையரை வெளியேற்றும் போராட்டத்தில் மதுரையிலும் கள்ளுக்கடைகளின் முன்பு மறியல் செய்யப்பட்டது; தீ வைக்கப்பட்டது சாலைகளில் கல் எறியப்பட்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சாலைப் போக்கு வரத்துக்கள் தடை செய்யப்பட்டன. ஏராளமான பேருந்துகளும், தீயணைக்கும் கருவிகளும், அஞ்சலகங்களும் தீயிடப்பட்டன. செய்திப்போக்குவரத்துக்கள் தடை செய்யப்பட்டு அரசு அதிகாரிகள் தாக்கப் பட்டனர். நகராட்சி அலுவலகங்கள், பள்ளிக்கட்டிடங்கள், இரயில்வே நிலையங்கள், நீதிமன்றங்கள், வனத்துறை அலுவலகங்கள் ஆகியவை தீ வைத்துக்கொளுத்தப்பட்டன. மதுரை நகராட்சிக்குழு, திண்டுக்கல், பழனி நகராட்சிக்குழுக்கள், மதுரை மாவட்டக்கழகம் ஆகியவையும் கலைக்கப்பட்டன. அடிக்கடி மதுரையில் காவல் துறையினரும், இராணுவத்தினரும் சுற்றிக்கொண்டிருந்ததால் நிலைமை மிகக் கவலைக்கிடமாக இருந்தது; கட்டுப்படுத்த முடியாததாகவுமிருந்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இவ்வியக்கம் குமாரசாமி ராஜா, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஆகியோரால் தலைமை தாங்கி நடத்தப்பட்டது. காரைக்குடி, தேவகோட்டை, திருவாடானை, பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் பலர் வன்முறையில் ஈடுபட்டனர். பல தேசியவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சிவில் நீதிமன்றம், துணை நிதியகம் (sub-treasury), துணைப் பதிவாளரின் அலுவலகம் (தேவகோட்டை), திருவாடானையில் சில அரசு கட்டிடங்கள் ஆகியவை கொளுத்தப்பட்டன. காரைக்குடி நகராட்சிப் பள்ளி, நடராசபுரம் இரயில்வே நிலையம் போன்றவையும் தீ வைக்கப்பட்டன. பூலாங்குறிச்சி தபால் நிலையம் தாக்கப்பட்டு, தபால் அட்டைகள், வில்லைகள் தீக்கிரையாக்கப்பட்டன. கிராமத்திலிருப்போர் ரூ.2,93,432- ஐ நிலவரியாக செலுத்தும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இவ்வியக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இராமநாதபுரம் மாவட்டக் கழகம், விருதுநகர் நகராட்சிக்குழு ஆகியவை ஆறுமாதங்களுக்குக் கலைக்கப்பட்டன. சேலத்தில் போராட்டம் மிதமாக நடைபெற்றது. எனினும் செய்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. சாவடிகள்

தீக்கிரையாக்கப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் வன்முறைகளும், வேறு சில இடங்களில் அமைதி முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டன. தடைச் சட்டத்தை மீறி தஞ்சையில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. காவல் துறையினரின் தாக்குதலும் நடைபெற்றது. மன்னார்குடியில் ரூ.38,715- ம், திருவையாற்றில் ரூ.1903- ம் நிலவரியாக கட்டாயப்படுத்தித் திரட்டப்பட்டது. சீர்காழியில் நடத்தப்பட்ட சதித்திட்டத்தில் பங்கு பெற்றவர் எனக் கருதப்பட்ட N. இராமநாதன் மரணதண்டனையிலிருந்து தப்பினார். திருநெல்வேலி மாவட்டத்தில் குலசேகர பட்டினத்தில் உப்பளம் தாக்கப்பட்டது. துணை உப்பள ஆய்வாளர் கொல்லப்பட்டார். கடலாடியில் காவல்துறையினர் தாக்கப்பட்டனர். திருநெல்வேலி மாவட்டக் கழகம், நகராட்சி குழு ஆகியவை கலைக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் கொரில்லாப் போர்முறையைப் பின்பற்றியது கண்டிக்கப்பட்டது. குலசேகரப்பட்டினத்தில் காசிராஜன், இராஜகோபால் ஆகியோர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டது; ஆனால் அவர்கள் மரண தண்டனையிலிருந்து தப்பினர். காமராஜர், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டு பின் கைது செய்யப்பட்டார். அவர், பல இரகசியக் கூட்டங்கள் நடத்தி, மக்கள் பலரை இவ்வியக்கத்தில் ஈடுபடுத்தினார்.

அரசு தன்னாலியன்ற எல்லாவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. தடுப்புக் காவல் சட்டம் கொண்டு வரப்பட்டது. கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. ஊர்வலங்கள் நடத்துவோர், கூட்டங்கள் நடத்துவோரிடமிருந்து தண்டனைப் பணம் திரட்டப்பட்டது. ஏராளமான போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்; சுட்டுக் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரின் செயல்களால் அப்பாவி மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். நகரங்களும், கிராமங்களும் சூறையாடப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன. இந்தியா முழுவதிலும், 1942 ஆகஸ்டு 9 முதல் 30 நவம்பர் வரை 1208 பேர் கொல்லப்பட்டனர்; 3275 பேர் காயமுற்றனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறைவைக்கப்பட்டனர். ஆனால் அரசு தனது ஆவணக்குறிப்பில்— இறந்தவரின் எண்ணிக்கை 940, காயமுற்றவர்கள் 1630, கைது செய்யப்பட்டவர் 60,229, அடைக்கப்பட்டவர் 18,000 எனக் குறிப்பிட்டுள்ளது. நீதிக்கட்சி, காங்கிரஸ் இயக்கத்திற்கு மாறாக தனது ஆதரவைத் தெரிவித்தது. முஸ்லீம் லீக் கட்சியினர் தனி பாகிஸ்தான் உருவாக்குவதையே கருத்தில் கொண்டிருந்தனர். இக்கட்டத்தில் E.V. இராமசாமி தனி திராவிட நாடு கோரிக்கை எழுப்பினார். இரஷ்யாவை ஜெர்மனி தாக்கியவுடன், இந்திய கம்யூனிஷ்டுகளான மோகன் குமாரமங்கலம், இராமமூர்த்தி, அனந்தன் நம்பியார் ஆகியோர் அரசாங்கத்திற்குத் துணையாக நின்றனர். 1942- ஆம் ஆண்டு இயக்கத்தைப் புறக்கணித்தனர். தொழிலாளர்களையும், பொது மக்களையும் ஆங்கிலேயருக்கு ஆதரவாகத் திருப்ப முயன்றனர். நிலக்கிழார்களையும், தொழிலதிபர்களையும் தாக்கினர். இதனால் காங்கிரஸ் கட்சியிலிருந்து எல்லா கம்யூனிஸ்டுகளும் வெளியேற்றப்பட்டனர். இந்து மகாசபை இப்போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தது. எனினும், கைது செய்யப்பட விரும்பவில்லை. தேசிய சுதந்திர கூட்டமைப்பு இவ்வியக்கத்தைக் கடுமையாக விமரிசித்தது. இக்கூட்டமைப்பின் தலைவரான தேஜ் பகதூர் சாப்ரு இப்போராட்டத்தைச் சரியாக அமைக்கப்படாத, சரியான சந்தர்ப்பமற்ற ஒரு போராட்டம் என்று விமரிசித்தார். Dr. அந்தோணியின் தலைமையிலான ஆங்கிலோ—இந்தியர்கள், கூட்டு நாடுகளின் போர்க் கொள்கைகளை ஆதரித்தனர். அகாலிதளம், அரிஜனத்தலைவர்கள், இந்திய கிறித்தவர்கள்

இந்த வன்முறை போராட்டத்தைக் கண்டித்தனர். இவ்வாறான வன்முறைச் செயல்கள் 1942-இல் சுதந்திரம் வழங்கப்படுவதைத் காலம் தாழ்த்தியது. காவல் துறையினரின் தடியடிகள், துப்பாக்கிப் பிரயோகம், விமானங்களிலிருந்து குண்டு வீசுதல், மக்கள் கொடுமைப்படுத்தப்படல், பெண்கள் நேரடியாக இழிவுபடுத்தப்படல் ஆகிய அனைத்தும் போராட்டக்காரர்களை உதவியற்றவர்களாக்கி அமைதிப்படுத்தியது. 1942- இல் காந்திஜியின் 'செய் அல்லது செத்துமடி' என்ற போராட்டக்குரல் அதனது பலனை அடையாது தோல்வியுற்றது.

இந்திய அரசாங்கம் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளாத வரை (அதாவது கைவிடப்படாதவரை) காந்திஜி, சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட மாட்டார் என்று அறிவித்தது. காந்திஜி வரலாற்றுச் சிறப்புமிக்க தனது 21 நாள் உண்ணாவிரதத்தை, 1943 பிப்ரவரி 10 ஆம் நாள் தொடங்கினார். இந்தியத் தலைமை ஆளுநர் வேல்ஸ் பிரபு, காந்திஜியை, 1944 மே திங்கள் 6 ஆம் நாள் விடுதலை செய்தார். மற்றவர்கள் 1945 இல் விடுதலை செய்யப்பட்டனர். 1944- இல் சி. இராஜகோபாலாச்சாரியார், ஒரு முடிவுக்கு வரவேண்டி முகமதுஅலி ஜின்னாவிடம் ஒரு திட்டத்தைக் கொடுத்தார். இத்திட்டம் அவரது பெயரால் 'சி.ஆர். திட்டம்' என அழைக்கப்பட்டது. 1945 ஜூன் திங்கள் 29- இல் சிம்லாவில் ஒரு மாநாடு கூட்டப் பட்டது. இம்மாட்டில் இத்திட்டத்தின் செயல்பாட்டுமுறைபற்றி விவாதிக்கப்பட்டது. ஆனால் சமரச முயற்சிகள் தோற்றன. இதற்குக் காரணம் இந்திய முஸ்லீம்கள் பொறுப்பினை முஸ்லீம்களிடம் ஒப்படைக்க வேண்டும் என முஸ்லீம் லீக் கேட்டது ஆகும்.

1945- இல் ஜப்பான் சரணடைந்ததும் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் தேர்தல்கள் நடைபெற்றன. சென்னை மாநிலத்தில், T. பிரகாசம், K. காமராஜ் போன்றவர்களின் கடுமையான உழைப்பாலும் அவர்களது சேவைகளாலும் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்று 1946- இல் அமைச்சரவை அமைத்தது. T. பிரகாசம் அமைச்சரவையின் தலைவராயிருந்தார். உட்கட்சிப்பூசல்களாலும், உள்நாட்டுப் பிரச்சனைகளாலும், கட்டுப்படுத்தமுடியாத அரசியல் குழப்பங்களாலும் T. பிரகாசம் அமைச்சரவையால் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியவில்லை. எனவே அவ்வமைச்சரவை 1947 இல் விலகிக்கொண்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் O.P. இராமசாமி ரெட்டியாரின் அமைச்சரவை பதவியேற்றது.

பயிற்சி வினாக்கள்

1) சென்னை மாநிலத்தில் தன்னாட்சி இயக்கப் போராட்டத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி பற்றி ஆய்க.

2) நீதிக்கட்சியின் சாதனைகளை மதிப்பிடுக.

3) 1937-39 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் அமைச்சரவையின் சாதனைகளையும், தோல்விகளையும் விளக்குக.

4) 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தமிழகம் ஏற்றுக் கொண்ட பங்கினை விவரிக்க.

பாடம் – 30 விடுதலைக்குப்பின் தமிழக அரசியல்

நிபந்தனை இன்றி ஜப்பான் சரணடைந்ததும், 1946- இல் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. 1945- இல் இங்கிலாந்தில் பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்தன. 1946 இல் இந்தியாவிலும் பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது. தேர்தலின் முடிவில் அட்லீ பிரபுவின் தலைமையிலான தொழிற்கட்சியும், நேருவின் தலைமையிலான காங்கிரஸும் முறையே இங்கிலாந்திலும் இந்தியாவிலும் வெற்றி பெற்றன. அட்லீ பிரபு தொழிற்கட்சி அமைச்சரவையை அமைத்தார். நேரு தலைமையிலான காங்கிரஸ் இடைக்கால அமைச்சரவையை அமைத்தது. இடைக்கால அரசின் நிபந்தனைப்படி, தமிழ்நாட்டு காங்கிரஸ் பிரிவு தேர்தலில் வெற்றி பெற்றது. தமிழ்நாட்டு தலைமை யமைச்சராக பிரகாசம் பதவி ஏற்றார். அவர் 1947 வரை அப்பதவியிலிருந்தார். அவருக்குப் பின் வட ஆற்காட்டைச் சேர்ந்த ஓ.பி. இராமசுவாமி ரெட்டியார் தலைமையமைச்சரானார். அவர் 1949 வரை தமிழகத்தின் முதலமைச்சராயிருந்தார்.

1946- இல் அமைச்சரவை தூதுக்குழு வெளியிட்ட அறிக்கைப்படி, இந்தியாவுக்கு விடுதலை வழங்க பிரிட்டிஷ் பேரரசர் விழைவதாக அட்லீ பிரபு அறிவித்தார். இதனைச் சட்டபூர்வமாக்க அவர் பாராளுமன்றத்தில் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றினார். இந்தியாவுக்கு ஆகஸ்டு 14-15 நள்ளிரவு, 1947- ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கப்பட்டது. இந்தியா விடுதலை அடைந்த வேளையில் தமிழகத்தில் ஓ.பி. இராமசுவாமி ரெட்டியார் தலைமையிலான அமைச்சு இயங்கிவந்தது. 1950- இல் சுதந்திர இந்தியா தனது முதல் பொதுத்தேர்தலை நடத்திய வேளை, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பிரிவு தனது பெரும்பான்மையை இழந்தது. எனவே 1952- இல் இராஜாஜி தம் அமைச்சரவையை அமைக்குமாறு வேண்டப்பட்டார். இராஜாஜி அப்போது சட்ட கீழ் சபையிலோ, சட்ட மேல் சபையிலோ அங்கத்தினராக இருக்கவில்லை. 1954- இல் காமராஜ் பதவி ஏற்பது வரை இவரே அப்பதவியில் இருந்தார்.

இராஜாஜியின் இரண்டாவது அமைச்சரவையின் பதவிக்காலத்தில் தமிழகத்தில் பல பிரச்சினைகளும் குழப்பங்களும் ஏற்பட்டன. அவை : (1) புது ஆந்திரதேசப் போராட்டம், (2) பொதுவுடைமை—தொழிலாளர் போராட்டம், (3) இந்தி எதிர்ப்பு போராட்டம், (4) திராவிடப்போராட்டம். நவ ஆந்திரதேசத்தைக் கோரிய புரட்சி வீரர்கள், 1953 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதலாம் நாள் புது ஆந்திர தேசத்தை உருவாக்கினர். அந்நாட்டிற்கு தலைநகராக கர்னூல் விளங்கியது; பிரகாசம் தலைமை யமைச்சராய் இருந்தார்.

இவ்வேளையில் தஞ்சையில் பொதுவுடைமைத் தொழிலாளர் கலகம் செய்தனர். இதரப் பகுதி தொழிலாளரும், உழைப்பாளரும் இதனை ஆதரித்துக் கலகம் செய்தனர். விளைச்சலில் 30% கோரிய தொழிலாளரின் வேண்டுகோளை தஞ்சை நிலப்பிரபுக்கள் ஏற்க மறுத்தனர். 1951- இல் பொதுவுடைமைக்காரர் தொழிலாளரைத் தூண்டி, அறுவடை செய்து எவ்வித பண ஈட்டும் தராமல், விளைச்சலைக் கொண்டு சென்றனர்.

1951- ஆம் ஆண்டுத் தேர்தல் நடைபெறும்போது இச்செயல் நடைபெற்றதால், பலர் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். நாட்டுப்புறங்களில் இம்மாதிரியான வன்முறைச் செயல்கள் ஏற்பட்டதால், இராஜாஜி அமைச்சு தஞ்சை உரிமை மேலாணை (Tanjore Ordinance) யைப் பிறப்பித்தது. இவ்வாணை மூலம் அவர் குடியுரிமையைக் காக்கவும், இளக்கார சலுகை ஊதியமுறை அளவுகளை வரையறை செய்யவும் முனைந்தார். அவர் முதன் முறை தலைமை அமைச்சராய் இருந்தபோது அரசியலமைப்பில் கூறப்பட்ட இந்தி மொழியைத் தேசிய மொழியாக ஏற்றுக் கொண்டு தமிழகத்தில் கட்டாய பாடமாக்கினார். இதற்கு நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் இத்தடவை மிகவும் கவனத்துடனே தேசிய மொழிப் பிரச்சினையை அணுகினார். இம்முறையும் இந்தியைக் கட்டாயப் பாடமாயும் தேசிய மொழி என்ற போர்வையில் திணிக்கவும் செய்திருந்தால் நடப்பது வேறாயிருந்திருக்கும். நல்ல வேளை தலை தப்பித்துக் கொண்டார். ஆனால் அவருடைய வீழ்ச்சியை பிறிதொரு கல்வித்திட்டம் ஏற்படுத்தியது. அத்திட்டத்தை பலரும் குடும்பக் கல்விமுறை என்பர். மக்கள் வழிவழி வந்த தொழிலைச் செய்யவேண்டும் என்பதுதான் அதன் பொருள். இது பெரும்பாலும் சாதியடிப்படையிலானது. இதனை எதிர்த்தோர் அந்தணர் மட்டும்தான் அறிவாளிகளா? அவர்கள் மட்டும்தான் மேலிடத்தில் இருக்க வேண்டுமா? என்று பல வினாக்களை எழுப்பினர். இத்திட்டத்தினால் ஏற்பட்ட எதிர்ப்பினைச் சமாளிக்க இயலாத ராஜாஜி 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் தம் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

இராஜாஜி பதவியிலிருந்து விலகிக்கொண்டதும் காமராசர், அப்பதவியைப் பெற்றார். இராஜாஜிக்கடுத்து தமிழகத்தில் விடுதலைப் போரில் அதிகப் பங்கு கொண்டவர் இவர். காங்கிரஸ் கட்சியின் அசைக்க இயலாத தலைவராயும் இருந்தார். மேலும் நாட்டுப்புற மக்களிடம் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். அவர் சிறந்த அறிவாளி; அமைப்புக்களை நடத்திச் செல்லும் திறமை வாய்க்கப்பெற்றவர்; எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்; நாட்டுப்புற மக்களை மதித்து வாழ்ந்தவர்; எதிரிகளை சாதுரியமாய் வெல்லும் ஆற்றல் பெற்றவர்; வாழ்நாட்களை நாட்டு முன்னேற்றப்பணிகள் செய்வதில் அர்ப்பணித்தவர்; தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராய் உயர்ந்தவர்; தலைமையமைச்சர் என்ற நிலையில் தமிழகத்தில் நிலையான நிர்வாகத்தைக் கொண்டுவரப் பாடுபட்டார்; உழவுத் தொழிலை முன்னேற்றத் திட்டமிட்டார்; தொழில் நிறுவனங்களில் அமைதியைக் காத்திடவிழைந்தார். மக்களிடையே வாய்ப்பு இல்லாக் காரணத்தால் குடி கொண்டிருந்த அறியாமையைப் போக்கவும் வாய்ப்பு ஏற்படாக் காரணத்தால் ஏழ்மையில் தவழ்ந்தோரைக் காக்கவும் விழைந்தார். அறியாமையையும், ஏழ்மையையும் அகற்றினால் நாடு முன்னேறும் என்று கருதி, அவற்றைப் போக்க போதிய திட்டங்களைத் தீட்டினார். தம் அவையில் பணியாற்றிய அமைச்சர்களுக்கு போதிய துணிவையும், சுதந்திரத்தையும் வழங்கினார். துறைகளில் அதிகப்படியான தலையீடு இல்லாத காரணத்தால் அனைத்துத்துறை அமைச்சர்களும் மும்முரமாய் இயங்கினர். முன்னேற்றச் செயல்களையும், நன்மைதரும் திட்டங்களையும் தீட்ட அவர்களுக்குப் போதிய ஆதரவு அளித்தார். பொதுப் பணிகளும், பொதுநலச் செயல்களும், பயன்தரும் முன்னேற்றத் திட்டங்களும் இணைந்து தமிழக வரலாற்றில் புது அத்தியாயத்தை ஏற்படுத்தின.

மக்களிடம் நெருங்கிய தொடர்பு இருந்த காரணத்தால் அவர்களின் குறையை உணர வழியிருந்தது. ஆகவே, அவற்றைத் தீர்க்கும் வழியும் பிறந்தது. படிப்பறிவு அதிகம் இல்லை என்றாலும், அவர் ஓர் அறிவாளியாகவே தோன்றினார்.

ஆந்திரதேசம் தோன்றிய வரலாறு

ஆங்கிலேயரின் ஆட்சியின்போது சென்னை மாநிலம் பெரும் பரப்பளவுடையதாய்க் காணப்பட்டது. அதில் தென் கர்நாடகப் பகுதிகளும், கேரளத்தின் மலப்பார்ப் பகுதியும், ஆந்திர் தேசமும்; இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருவிதாங்கூர் சுதேச நாடுகளைத் தவிர்த்த இதர தமிழகப் பகுதிகளுமிருந்தன. சுதந்திரமடைந்தவுடன் இராமநாதபுர நாடு தமிழகத்துடன் இணைந்தது. மொழியடிப்படையில் இம்மாநிலத்தில் தமிழர், தெலுங்கர், கன்னடிகர், மலையாளிகள் இருந்தனர். பண்பாட்டு அடிப்படையிலும், அவர்கள் வேறுபட்ட கூறுகளைக் கொண்ட ஒரு கூட்டாகவே தோன்றினர். வேறுபட்ட வாழ்க்கை முறைகளும் அரசியல் கோட்பாடுகளும் கொண்டு விளங்கினர். பெரும்பான்னையினர் தமிழர்; ஆனால் தலைநகராகிய சென்னை ஆந்திரர்களைப் பெரும்பான்மையாய்க் கொண்டு விளங்கியது. விடுதலைப் போரில் பெருமளவில் பங்கு கொண்டு போராடிய ஆந்திரர்கள் விடுதலைக்குப் பின் தங்களின் நிலையை எண்ணி வருந்தினர். தமிழர்களுக்கு அடிபணிந்து வாழ வேண்டுமே என்று நினைத்தனர். தமிழர்களுக்குத்தானே எல்லா சலுகைகளையும் பெறும் வாய்ப்பு இருக்கிறது என்று காழ்ப்புணர்வு கொண்டனர். தமக்குக் கிடைக்க வேண்டியனவும், கிடைக்கக்கூடாத நிலை ஏற்படலாம் என்று எண்ணினர். சம உரிமையும், சமவேலை வாய்ப்பும், சம அந்தஸ்தும் கிட்டாது என்று பயந்த அவர்கள், சென்னை மாநில தலைமையமைச்சர்களாய் வருவோர் அனைவரும் தமிழர்களே என்றும் கருதினர். தமிழ் மொழியின் மேலாண்மையையும் அவர்கள் விரும்பவில்லை. தங்களின் புது நாட்டுக்குத் தலைநகராய்ச் சென்னை விளங்க வேண்டுமென்று கோரினர். இக்கோரிக்கையை 1938-39 ஆம் ஆண்டுகளில் ஆளுநராய் இருந்த எர்ஸ்கின் பிரபு ஓரளவு தீர்த்து வைத்தார். முற்றும் வெற்றி பெறாத நிலையில் "மதராஸ் மனதே" என்ற இயக்கத்தைத் தொடங்கினர்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தபடி ஆந்திரதேசம் உருவாக்கப்படாத காரணத்தால், கோபமுற்ற தலைவர்கள் அதனை அடைய தீவிரச் செயல்களைப் புரிந்தனர். பழங்காலப் பாரம்பரியத்தைத் தங்கள் அரசர்கள் அடிமைப் படுத்திய வகையினை வெளிப்படுத்தவும் திட்டங்கள் தீட்டினர். ஆந்திரதேசக் கோரிக்கையின் வலுவை உணர்ந்த சட்ட அமைப்புச் சபையின் பத்து தமிழ் அங்கத்தினர் கள் பிரதம அமைச்சரைக் கண்டு, தனித்தமிழ்நாடு கோரினர். 1920 ஆம் ஆண்டு முதற்கொண்டு, காங்கிரஸ் கட்சி அதன் மாநில அமைப்புகளில் மொழிவாரி பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தது. இவையும் தனி ஆந்திரதேசம் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்தின.

1947- ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் சென்னை சட்டசபை மொழிவாரி மாநிலங்கள் படைப்பதை ஆதரித்து அறிக்கை வெளியிட்டது. தென்னகத்தில் தமிழ்நாடு, கேரளம், தெலுங்குநாடு (ஆந்திரா) கருநாடகம் என்று பிரித்துச் சுட்டிக் காட்டவும் செய்தது.

வரப்போகும் அரசியலமைப்பில் இதனைப் புகுத்தவும் விழைந்தது. டி.பிரகாசம், கே.ஜி. ரங்கா போன்ற தீவிரவாதிகள் ஆந்திராவின் எல்லைகளை வரையறை செய்ய சட்டம் இடுமாறு படேலை வேண்டினர். படேல் இதனை இராஜதந்திர முறையில் சமாளித்தார்; அவர் இதனை மேற்கொண்டு கவனிப்பதாயும் கூறினார். இக்கூற்றை வரப்பிரசாதம் என்று பல ஆந்திர வீரர் கருதினர்; அதுபடி அதன் செயல்முறையை நோக்கியிருந்தனர். காலம் ஒத்துவராத காரணத்தால், இது செயல்முறைப்படுத்தப்படாது, பிற்காலத்து கருதப்படும் என்று ஒத்திப் போடப்பட்டது. 1947 இல், நவம்பர்த் திங்கள் 27-ஆம் நாள், அரசியலமைப்புச் சபையில் ஆந்திரர்களின் ஆந்திர தேசக் கோரிக்கை பகுத்தறிவானது, நீதிக்குள்ளானது என்று அறிவித்தார். மாராட்டியம், கருநாடகம் போன்ற மொழிவாரி நாடுகள் எப்படி ஏற்படுத்துவது என்ற கவலையும் அவரிடம் இருந்தது. ஆந்திரர்க்ளுக்கு ஆந்திர தேசமே குறிக்கோள் என்றால் தமிழர்க்கு தமிழ்நாடே குறிக்கோளாக மாறிற்று. தமிழரின் தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கை அந்த அளவு வலுப்பெறவில்லை. தனி ஆந்திரநாடு தனித் தமிழ் நாட்டைத் தரும் என்றிருந்தனர். மொழி வாரி மாநில அமைப்பு தலை தூக்கியபோது, நேரு அதனைத் தடுக்கத் திட்டமிட்டார். நேருவின் திட்டமிட்ட மறுப்பு, இக்கோரிக்கையை மீண்டும் வலுவடையச் செய்தது.

1948- ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் ஆந்திரதேசக் கோரிக்கையைக் கவனிப்பதாய்க் கூறினார். எல்லைக்குழுவை (Boundary Commission) நியமித்து அதன் செயல் முறையை பரிசீலனை செய்வதாயும் கூறினார். அலகாபாத் உயர்நீதிமன்றத்து ஓய்வு பெற்ற எஸ்.கே. தர் (Dhar) தலைமையில் 1948- இல் ஜூன் 17- ஆம் நாள் மொழி மாநிலக் குழு (Linguistic Provinces Commission) நியமிக்கப்பட்டது. இதில் அங்கத்தினராய் Dr. பன்னலாலும், ஐ.என். லாலும் இருந்தனர். இக்குழு 1948 டிசம்பர்த் திங்களில் தர் குழு அறிக்கையை வெளியிட்டது. அதன்படி மொழிவாரி மாநில அமைப்பு, அந்த அளவு முக்கியமான திடீர் பிரச்சினை அல்ல என்றும், அப்படிச் செய்யின் அது நிர்வாக வசதிக்காக இருக்க வேண்டுமே தவிர மொழியடிப்படையில் இருத்தலாகாது என்றும் அறிக்கை வெளியிட்டது. அப்படி மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுமாயின், பம்பாய், சென்னை போன்ற நகரங்கள் தனியாய் நடத்தப்பட வேண்டும் என்றும், அவை C பிரிவு போன்ற மாநிலங்களாய் கருதப்பட வேண்டும் என்றும் அறிவித்தது.

கோபாவேசம் கொண்ட தீவிரவாதிகள் இக்குழுவுக்கு முன்னரே இந்தியக் காங்கிரஸ் கட்சி இதனை பரிசீலனை செய்யுமாறு வேண்டினர். இதனை நோக்குதற்காக நேரு, படேல் சீதாராமைய்யாவைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அவர்கள் 1948 இல் ஏப்ரல் திங்களில் அளித்த அறிக்கை இக்கோரிக்கையை ஒத்திவைத்தது என்று கண்டோம். அப்படி மொழிவாரி ஆந்திர நாடு ஏற்படுமாயின், சென்னை அத்துடன் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என்றும் அறிவித்திருந்தது. ஆந்திரர்கள் சென்னையை இழக்க வேண்டுமென்றல்ல; ஆனால் அதனை C பிரிவு மாநிலமாக்கி தமிழர்கள் அதனை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த அறிக்கையை டி. பிரகாசம் தகர்த்தார்; புது ஆந்திரத் தலைநகர் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அறிவித்தார். அப்படி இயலாத நிலையில் சென்னை இரு மாநிலங்களுக்கும் தலைநகராயிருக்க வேண்டும் என்றும் கோரினார். சென்னை அரசு P.S. குமாரசாமி ராஜாவைத் தலைவராய்க் கொண்டு பகுப்புக் குழு (Partition Committee) நியமித்தது. அதன்

அறிக்கையில் பிரகாசத்தின் எதிர்ப்புக்கருத்தும் இடம் பெற்றிருந்தது. அதாவது ஆந்திராவின் தற்காலிகத் தலைநகராய் சென்னை இருக்கும் என்பதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இரு தரப்பினரிடையே காணப்பட்ட வேறுபாட்டால், இந்திய அரசு இதனை ஒத்திப்போட்டது. நேருவின் நழுவுதல் கொள்கையை செய்தித் தாள்கள் கண்டித்தன. மொழிவாரி மாநிலங்களை அமைக்க அவர் விழைய வில்லை என்பதுதான் அதற்குக் காரணம்; ஆந்திரர்களுக்கு இது எரிச்சலையூட்டியது; நேரு அரசைத் தாக்கவும் துணிந்தனர்.

வேண்டிக் கேட்டும் கிடைக்காத காரணத்தால் ஆந்திரர் தீவிரச் செயல்களில் ஈடுபட்டனர். அரசுக்கு நேரடி எதிர்ப்பையும், சாத்வீக எதிர்ப்பினையும் தரத்தொடங்கினர். 1951- இல் ஆகஸ்ட் 16-ஆம் நாள் சாவது வரை உண்ணாவிரதத்தை சுவாமி சீதாராம் (காங்கிரஸ் ஊழியர்), ஆந்திரப்பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் செயலாளர், அறிவித்தார். அவர் ஆந்திரதேசம் உடனே தோன்றவேண்டுமென்று அறிவித்தார். "மக்களின் மொழியில் நடத்தப்பட்ட செலவற்ற ஆனால் திறமையான அரசு அமைக்கப்படவேண்டுமேன்று" அவர் கோரினார். விஜயவாடாவில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சி அமைப்பு இதனை ஏற்றுக் கொண்டது. ஆனால், நேரு இவ்வுண்ணா நோன்பு அவசியமற்றது என்று கண்டித்தார். 1951- இல் செப்டம்பர்த் திங்கள் 14- ஆம் நாள் நேரு பாராளுமன்றத்தில் இதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், ஆந்திர நாடும் தீர்த்துக் கொள்வதாயின் இதனைப் பரிசீலிப்பதாய்க் கூறினார். வேறுபாடற்ற ஒருங்கிணைந்த முடிவினை அவர் எதிர்பார்த்தார். இவர்களிடையே ஒன்றுபட்ட கருத்து எழவில்லை. ஆகவே, அவர் "உண்மைக்கன்றி, நோன்புக்குத் தலைவணங்க மாட்டேன்" என்ற பாராளுமன்றத்தில் அறிவித்தார். 35 நாட்கள் நோன்பை நடத்திய சீதாராம், விநோபாபாவேயின் தலையீட்டால் அதனை நிறுத்திக் கொண்டார்.நடுவர் தீர்ப்பில் பிரச்சனைக்கு முடிவு காணும் அவர், சென்னை நகரைப் பொறுத்தளவில் ஏனோ நடுவர் குழுவைக் கூட்டவில்லை. நேருவின் இத்தாராளச் செயலுக்குப் பின் யாரோ இருப்பதாய்க் கருதப்பட்டது. சீதாராமின் வேண்டுகோள்கள் பலிக்காத காரணத்தால், அவர் பிப்ரவரி 27- ஆம் நாள் சத்தியாக்கிரக யாத்திரையை நெல்லூரிலிருந்து தொடங்கினார்; 1952 ஆம் ஆண்டு, மே திங்கள் 25- ஆம் நாள் சுத்தீகரிப்பு நோன்பு மேற்கொண்டார்.

1952- இல் சென்னை சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. ஆந்திர மாநிலக் கோரிக்கையை காங்கிரஸ் கட்சி ஏற்காத காரணத்தால், அக்கட்சி தேர்தலில் நினைத்த அளவு வெற்றி பெற இயலவில்லை. தமிழகத்தின் தலைநகராய் சென்னை இருக்க வேண்டுமென்று ராஜாஜியும் போராடி வந்தார். 1952- ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19- ஆம் நாள், சென்னை தெலுங்கராகிய பொட்டி சீராமுலு (Potti Sriramulu) சென்னையில் சாவது வரை உண்ணா நோன்பு மேற்கொண்டார். 1952 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாள் வெற்றிப் பாதையில் அவர் மரணமடைந்தார். தீர்க்கப்பட இயலாத அளவு தீராப்பிரச்சனையும் கொடுஞ்செயல்களும் ஏற்பட்டன. பொதுமக்கள் சொத்துக்கு அழிவு ஏற்பட்டது. சென்னை நகரைத் தவிர சென்னை மாநிலத்தில் தெலுங்கர்களைக் கொண்ட தனி ஆந்திரதேசம் உருவாக்கப்படும் என்று நேரு 1952- ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19- ஆம் நாள் அறிவித்தார். உடனே வாஞ்சுக் குழுவை

(Wancheo Commission) நியமித்தார். அது தன் அறிக்கையில், புதுத்தலைநகர் ஏற்படும் வரை சென்னை அதன் தலைநகராய் இருக்கும் என்று அறிவித்தது. தமிழர் இம்முடிவினை எதிர்த்தனர்; ஆந்திரர்களுக்கு தற்காலிகமாகக்கூட சென்னை தலைநகராய் இருக்கக்கூடாது என்று அறிவித்தனர். ஆகவே கர்நூலைத் தலைமையகமாய்க் கொண்ட ஆந்திரநாடு 1953- இல் உதயமாயிற்று.

காமராசரின் அமைச்சரவை: 1954- ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாள் காமராசர் தம் முதல் அமைச்சரவையை அமைத்தார். ராஜாஜி கால அமைச்சரவை எண்ணிக்கையை பன்னிரண்டிலிருந்து எட்டாக்கிக்கொண்டு விளங்கியது அவருடைய அமைச்சு. ஆனால் ராஜாஜியால் கடுமையாக தாக்கப்பட்ட ஒரு பிரிவினரை மட்டும் தம் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளவில்லை. அவருடைய அமைச்சரவையில் சி. சுப்ரமண்யம், எம். பக்தவச்சலம், பரமேஸ்வரன், எ.பி. ஷெட்டி (Shetti) ,எம்.பி. மாணிக்கவேலு நாயக்கர், ராமநாதபுர ராஜா, ராமசாமி படையாட்சி போன்றோர் இடம் பெற்றனர். அரிஜன பரமேஸ்வரன் இந்துசமய அறநிலையக் காவலராகவும், மது அருந்து தடைத்துறைத் தலைவராயும் பணியேற்றார். தமிழக வரலாற்றில் ஓர் அரிஜன் அமைச்சரவையில் இடம் பெற்றது இதுவே முதல் முறையாகும். இச்செயலால் அவர் அம்மக்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்தார். இதுகாறும் சமயத்துறையை மேல்மட்ட தீவிரவாத இந்துக்களே தம் கையில் வைத்திருந்தனர். அந்த அதிகாரக் குவிப்பிடத்தை உடைத்தெறிந்தார். காமராசருக்குக் கீழ் எல்.ஆர். எஸ். சத்தியநாதன் தலைமைச் செயலராகப் பணிபுரிந்தார். தம் செயல்களை விமரிசிக்க அனுமதித்த முதலமைச்சர், ஒரு போதும் தனிப்பட்ட நபர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளவோ, அப்படிச் செய்வோரை அனுமதிக்வோ இல்லை. பிடிவாதக் குணம் கொண்டவர்; முக்கியஸ்தரின் வேண்டுகோளுக்கு அதிகம் செவி கொடுக்காதவர்: ஆனால் மக்களின் விருப்பத்துக்கு மதிப்பு தந்து கருத்துக்களைக் கேட்டு முடிவை அவரே எடுத்துக்கொண்டார். செய்தித்துறையினரை நன்கு நடத்தினார்; தம்மைத்தாமே உயர்த்திக் கொள்வோரைச் சற்றும் மதித்ததில்லை. அவர் கொள்கையளவில் இயங்காது எதையும் செயல்முறைப்படுத்திக் காட்டுவதில் வல்லவர்..திட்டங்களை நன்கு தீட்டிய பின்னரே செயல்படுத்தினார். நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதில் சற்றும் தயங்கியதில்லை. புனர்வாழ்வு, பொதுப்பணி, பயன்தரு இதரச் செயல்கள் செய்வதில் அதிக கவனம் செலுத்தினார்.

தென் திருவிதாங்கூரைத் தமிழ்நாட்டுடன் இணைத்தல்: இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதற்கும், திருவிதாங்கூரில் பொறுப்பாட்சி புகுத்துவதற்கும், முன்னரே தென் திருவாங்கூர் தமிழர் கொடுமையாக நடத்தப்பட்டனர். நாயர்களின் மேலாண்மையில் தம்முடைய உரிமைகளையும் இழந்து வாழ்ந்தனர். 1945 ஆம் ஆண்டு வாக்கில் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் எஸ். நதானியேல் காமராசரைக் கண்டு, ''திருவிதாங்கூர்த் தமிழர்களாகிய நாங்கள் தாயிடமிருந்து கட்டாயப்படுத்திப் பிரித்தெடுக்கப்பட்ட குழந்தைகள் போல் அவதிப்படுகிறோம்' என்று உண்மை நிலையை எடுத்துக் கூறினார். தமிழ்நாட்டுடன் சேரவேண்டுமென்ற முயற்சியில், அவர்கள் தமிழக அரசின் உதவியை நாடினர். தமிழகம் அவர்களுக்குக் காப்பளிக்க வராவிட்டால், அவர்கள் ஒட்டு மொத்தமாக அழிய வேண்டியதுதான். தலையை அசைத்த காமராசர் அவர்கள்

திருவிதாங்கூர் சுதேச நாட்டுக் குடிகள். ஆகவே அவர்கள் கேரள காங்கிரஸ் கமிட்டியில் சேர வேண்டுமென்று கூறினார். மொழிவாரி மாநில அமைப்பு ஏற்படுமாயின், தமிழ்நாடு இப்பிரச்சினையில் தலையிட வாய்ப்புள்ளது என்று கூறினார்.

1947- ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 4- ஆம் நாள் பொறுப்பாட்சி திருவிதாங்கூரில் வெளியிடப்பட்டது. புது அரசியல் அமைப்பு அமைக்க தேர்தல் நடத்தப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது. எஸ். நதானியேல், மார்ஷல் நேசமணி, குஞ்சன் நாடார், சிதம்பரநாதன் நாடார் "சாவு அல்லது வாழ்வு"ப் போராட்டத்தில் இறங்கினர். தமிழ்நாட்டுடன் இணைப்பு அல்லது சாவு என்று தங்கள் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டனர். சுசீந்திரத்தில் பெருத்த கலவரம் ஏற்பட்டது. கேரள அரசு மக்களை நோக்கிச் சுட்டது. தந்திமூலம் காமராசருக்குச் செய்தி தரப்பட்டது. அவர் அவ்விடத்துக்கு விரைந்து சென்று உடனே இப்பிரச்சினை அரசிலமைப்புப்படி தீர்த்து வைக்கப்படும் என்றும் கூறினார். பட்டம் தாணுப்பிள்ளையையும், நதானியேலையும் சென்னைக்கழைத்துப் பேசுவதாயும் காமராசர் வாக்களித்தார். குறிப்பிட்ட நாளன்று பட்டம் தாணுப்பிள்ளை வரவில்லை. அமைதி உடன்பாட்டுக்குரிய அறிகுறிகள் ஏதும் புலப்படவில்லை. கொடிய செயல்கள், கொலைகள், அரசின் அடக்குமுறைகள் தென் திருவிதாங்கூரில் தாண்டவமாடின. சாதுரியமான செயல்கள் மூலம் அப்பகுதியைக் கேரளாவுடன் இணைக்க வேண்டிய நடவடிக்கைகளை பட்டம் தாணுப்பிள்ளை மேற்கொண்டார். நதானியேலுக்குப் பின் தென்தமிழரின் விதியை மார்ஷல் நேசமணி நிர்ணயிக்கத் தொடங்கினார். குஞ்சன் நாடார் மேடைகளில் முழங்கினார். பரபரப்படைந்த மக்களைத் தம் வயப்படுத்தி ஒழுங்கான போராட்டத்திற்கு வழி தேடினர். கெடுபிடிச் செயல்களைத் தடுக்க காமராசர் எம் முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. 1953- இல் இந்திய அரசு அமைத்த மாநில சீரமைப்புக்குழுவின் அறிக்கையில் இப்பிரச்சினை சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இது காமராசரின் தோல்வி என்றே கருதப்படுகிறது.

இக்குழுவில் கே.எம். பணிக்கர் ஓர் அங்கத்தினர். அவர் பட்டம் தாணுப்பிள்ளைக்கு நடைமுறைச் செய்திகளையும், எடுத்துச் சொல்ல வேண்டிய முயற்சிகளையும், வழிமுறைகளையும் அவ்வப்போது அளித்து வந்தார். தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவன்கோடு, தென்நெய்யாற்றின் கரை, செங்கோட்டை, தேவிகுளம், பீரிமேடுப் பகுதிகளில் (தாலுகாக்களில்) வாழ்ந்த பெரும்பான்மை மக்கள் தமிழரே. அவர்கள் கேரள சட்டசபைக்கு திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அங்கத்தினரை அனுப்பியிருந்தனர். 1955-56- இல் தென் திருவிதாங்கூரில் பெரும் கலகம் ஏற்பட்டது. காவல் துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். விளவங்கோடு தாலுகாவில் மங்காட்டிலும், புதுக்கடையிலும் நடந்த துப்பாக்கிச் சூட்டில் சிலர் மரணடைந்தனர். 1956 இல் தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டைத் தாலுகாக்கள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட சட்டம் இயற்றப்பட்டது, ஆனால் தேவிகுளம், பீரிமேட்டுத் தமிழர்க்கு இவ்வாய்ப்பு தரப்படவில்லை. அவர்கள் பல முறை வேண்டியும் காமராசர் தலையிடவில்லை. இதனை அவர் ஒரு பிரச்சினையாகக் கருதாமையே இதற்குக் காரணம். இதற்குக் காரணம் அவருக்கும், கேரள முதலமைச்சருக்கு மிடையே நிலவி வந்த இரகசிய உறவு என்றும் சிலர் கருதுவாராயினர். திருவிதாங்கூர் தமிழ்நாடு

காங்கிரஸும், தமிழ் அரசுக் கழகமும் இப்பிரச்சினையை நாடுதழுவிய பிரச்சினையாக்கின. ஆகவே காமராசர் தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இருப்பினும் அவர் பனம்பள்ளி கோவிந்தமேனனின் ஆலோசனையில் அடங்கிக் கிடந்தார். காமராசரின் செயலற்ற நிலையில், கோவிந்தமேனன் செங்கோட்டைத் தாலுகாவின் செழிப்பான பகுதிகளைக் கேரளாவுடன் சேர்த்துக் கொண்டார்.

தேவிகுளம், பீரிமேட்டுத் தமிழர் பட்டம் தாணுப்பிள்ளையின் கொடிய செயலுக்கு இரையாயினர். தமிழரின் எதிரியாகிய காரணத்தால், தமிழரின் எண்ணிக்கையைக் குறைத்து, அப்பகுதிகளில் பட்டம் குடியிருப்புகளை அமைத்தார். மலையாளிகளின் வளர்ச்சி இங்குவாழ் தமிழரை தலை தட்டிவிட்டது. இதன் விளைவால் தமிழர் தேவிகுளம், பீரிமேட்டுப் பகுதிகளிலிருந்து கட்டாயத்தின் பேரில் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் தங்களின் ஏலக்காய் தோட்டங்களையும், இதர தோட்டங்களையும் விட்டு வெளியேறினர். இன்றும் அவர்கள் நிலை வருத்தத்திற்குரியது.

காமராசர் கல்விப்பெருக்கத்திற்கான திட்டங்களைத் தீட்டினார். கல்வித் துறையில் சீர்திருத்தங்கள் பல புகுத்தினார். தொழில் நுட்பக்கல்வி அடிப்படையிலான பொருளாதார முன்னேற்றத்தை அவர் விரும்பினார். பதினொரு வயது வரை கட்டாயக் கல்வியைத் தமிழகத்தில் புகுத்தினார். கல்விக் கட்டணக் குறைப்பும், மதிய உணவுத் திட்டங்களும் மக்கள் பலருக்குப் படிப்பதற்கான வாய்ப்பைத் தந்தன. அதிக மாணவர் படிக்க முன்வந்தமையின் அதிக கல்விக்கூடங்கள் திறக்கப்பட்டன. புதுவித வேலைவாய்ப்புப் பாடங்கள் கற்றுத்தரப்பட்டன. ஆதாரக்கல்வி ஆசிரியரின் ஊதியத்தை உயர்த்தினார். அவர்களின் குழந்தைகளுக்கு எவ்விதச் செலவுமற்ற வகையில் கல்வி புகட்டப்பட்ட வழிவகை செய்யப்பட்டது. மாணவர்க்கு கல்வி உதவித்தொகை வழங்கும்முறை கொண்டு வரப்பட்டது. சாதி, சமய, இன, வகுப்பு, கட்சி மொழி, வேறுபாடு அற்ற கல்வி மாணவர்க்குப் புகட்டப்பட்டது. இவற்றைக்கருதாத கல்விச்சூழல்களில் மாணவர்கள் வளர்ந்து வர வழி வகைகளும் செய்யப்பட்டன. சென்னை மாநில நிலச் சீர்திருத்தச்சட்டம் சொத்துக்கு வரம்பு விதித்தது. ஐந்து அல்லது அதற்குக் குறைவான அங்கத்தினரைக் கொண்ட குடும்பம் 30 உயர் ஏக்கர்களைக் கொண்ட சொத்துக்கு உரியோராகலாம் என்றும், மேற்கொண்டு ஒவ்வொரு அங்கத்தினரும் 5 உயர் ஏக்கர் நிலங்களைப் பெறலாம் என்றும் 60 உயர் ஏக்கருக்குக் கூடுதலாக எக்குடும்பமும் சொத்து வைத்துக் கொள்ளலாகாது என்றும் வரம்பு கட்டியது. சென்னை மாநில உழவர் உரிமைக்காப்புச் சட்டம் 1955 -ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. உழவர்கள் கட்டாயத்தின் பேரில் உரிமையை விட்டு வெளியேற்றப்படுதலை இச்சட்டம் தடுத்தது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கீழ்க்கடற்கரைப் பகுதிகளில் 1955- ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் புனரமைப்புத் திட்டங்களையும், புதுக் குடியிருப்பு வசதிகளையும் மேற்பார்வையிட்டார். மேலும் நிவாரணப் பணிகளையும் மேற் கொள்ளுமாறு பணித்தார். நாட்டுப் புறங்கள் ஒளி மயமாக, மின்வசதிகள் செய்துதரப்பட்டன; பெருமளவு தானிய உணவு உற்பத்தித் திட்டங்கள் கையாளப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள்— கால்வாய்ப்பாசனம் நீரேற்றப்பாசனம் மேற்கொள்ளப்பட்டன. தொழில்கள் தேசிய மயமாக்கப்படுவது பெரும்பாலும் தவிர்க்கப்பட்டது. தனியார் நிறுவனங்கள், தொழிற் கூடங்கள் ஆதரிக்கப்பட்டன. கனரக, சிறுதரத் தொழில்கள் தொடங்கப்பட்டன.

சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலமும், நியாயமான ஊதியத்தின் மூலமும் தொழிற்சாலைகளில் அமைதி ஏற்படுத்தப்பட்டது. திருச்சி கொதிகலன் ஆலை, ஆவடி பீரங்கித் தொழிற்சாலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், அணுசக்தி நிலையம், அனல் மின் நிலையங்கள், குந்தா திட்டம் அனைத்தும் இவர் காலத்து எழுந்தவையே. மக்களின் மனதில் தம் தொழிற்பணிகளால் அழியா இடம் பெற்றார் ஆர். வெங்கட்ராமன். காமராசரின் திட்டங்களைச் செயலாக்கும் செயல் வீரராய் காணப்பட்டார்.

நாட்டு மொழியாக தமிழ்மொழி ஏற்கப்பட்டது. நுட்பக் கலைகள், வினைஞரின் கலைகள், இசை, நாட்டிய, ஓவிய, சித்திரக் கலைகள் வளர்ந்தன. தமிழ் கவிஞர்களும், திரைப்பட நடிகர்களும் ஆதரிக்கப்பட்டனர். பொறியியலாரிடம் ஒழுங்கு எதிர்பார்க்கப் பட்டது; செயற்திறனும் தேவைப்பட்டது. தொழிலாளர் சங்கங்கள் ஆதரிக்கப்பட்டன. தொழிலாளர் நலன்களை அமைச்சர்கள் மேற்பார்வையிட்டனர். இடமாற்று, செய்தித்துறை வசதிகள் பெருகின. சென்னைத் துறைமுக விரிவாக்கம் பற்றி அவரிடம் 'நீங்கள் உணவா அல்லது அழகா விரும்புகிறீர்கள்' என்று கேட்டபோது, அவர் "நான் அழகைவிட உணவு வேண்டுகிறேன்" என்று பதிலிறுத்தார். மக்கள் திருப்தியாய் வாழ்ந்தால் அழகு தானாக ஏற்படும். அதற்கான நடவடிக்கைகளை அவர் மேற் கொண்டார். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி, பாசனப் பெருக்கம், மின்னொலி விரிவாக்கம், சிறுரகத் தொழில் வளர்ச்சி, நுண் தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, உணவு உற்பத்திப் பெருக்கம், நாட்டில் அமைதி, செழிப்புப் பெருக்கம் அனைத்தும் காமராசர் காலத்தில் ஏற்பட்டதாக அறிகிறோம்.

பயிற்சி வினா

விடுதலைக்குப்பிந்திய தமிழக அரசியல் வரலாற்றைக் தொகுத்தெழுதுக.

Model Question Paper

M.A. Degree Examination

Second Year

History of Tamilnadu upto AD 1956

Time : Three hours Maximum : 100 Marks

Answer any **FIVE** questions

All Questions carry equal marks

1. தமிழக வரலாற்றிற்கு உதவும் இலக்கியச் சான்றுகளை எழுதுக.
   Write an account of literary sources of the History of Tamilnadu.

2. சங்ககாலச் சேரர்களின் வரலாற்றை விவரிக்க
   Describe the history of the Cheras of the Sangam age.

3. களப்பிரர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றி விளக்குக.
   Explain the rise and fall of the Kalabhras.

4. கலை மற்றும் கட்டடக் கலைக்குப் பல்லவர்கள் ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக.
   Estimate the contribution of the Pallavas to art and architecture.

5. பாண்டியர்கள் கலை மற்றும் கட்டடக் கலைக்கு ஆற்றிய தொண்டினை எழுதுக.
   Write an essay on the contribution of the Pandyas to art and architecture.

6. தமிழக வரலாற்றில் மதுரை சுல்தான்களின் ஆட்சியினால் ஏற்பட்ட தாக்கத்தினை ஆராய்க.
   Assess the impact of the role of Madurai Sultanate in the Tamil country.

7. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சமுதாயச் சீர்திருத்த இயக்கங்கள் வகித்த பங்கினை ஆய்க.
   Assess the role of Social Reform Movements in Tamil Country in the 19th Century.

8. இராணி மங்கம்மாள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
   Write an essay on Rani Mangammal.

9. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு கிறித்தவ சமயப்போதகர்கள் ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக.
   Estimate the contribution of the Christian Missionaries to the development of Tamil literature.

10. தமிழ்ச் சமுதாயம் நவீன மயமாவதற்கு சுயமாரியாதை இயக்கம் ஆற்றிய தொண்டுகள் யாவை?
    Examine the services of Self-Respect Movement to the modernisation of Tamil Society.